திருக்குறள் ஆய்வக வெளியீடு 5


# குறள் கூறும் சமுதாயம்

ஆசிரியர் :
செல்வி காமாட்சி ஸ்ரீனிவாசன்
விரிவுரையாளர்
திருக்குறள் ஆய்வகம்
மதுரைப் பல்கலைக் கழகம்


T 5994
T05994
R002D06

மதுரைப் பல்கலைக் கழகம்
மதுரை - 625021
1975

# குறள் கூறும் சமுதாயம்



# உள்ளிருள் நீக்கும் விளக்கு



அறம் தகளி ; ஆன்ற பொருள் திரி ; இன்பு
சிறந்த நெய் ; செஞ்சொல் தீ ; தண்டு — குறும்பாவா
வள்ளுவர் ஏற்றினர் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு.

— நப்பாலத்தனார்

திருக்குறள் ஆய்வக வெளியீடு 5

# குறள் கூறும் சமுதாயம்

ஆசிரியர் :
செல்வி **காமாட்சி ஸ்ரீனிவாசன்**
*விரிவுரையாளர்*
திருக்குறள் ஆய்வகம்
மதுரைப் பல்கலைக் கழகம்

**மதுரைப் பல்கலைக் கழகம்**
மதுரை - 625021
1975

உரிமை மதுரைப் பல்கலைக் கழகத்துக்கு
திருக்குறள் ஆய்வகத்தின் வெளியீடு
முதற் பதிப்பு 1975

TIRUKKURAL CHAIR PUBLICATION 5

# Society in Kural

Selvi KAMATCHY SRINIVASAN, M. A., M. Litt.
Lecturer in Tirukkural Chair

Madurai University
Madurai (S. India)

விலை ரூ. 12.00

வெளியீடு: மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை-625021
அச்சீடு: ஆர். கே. பிரிண்டர்ஸ், மதுரை - 625001

# துணைவேந்தர் அணிந்துரை

□ □ □ □

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' எனத் தமிழகம் வான்புகழ் கொண்டமைக்குக் காரணமானவர் திருக்குறள் தந்த ஆசிரியர் என்று போற்றப்படுகிறது. 1968-இல் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றபோது இத்தகைய பெருமைமிக்க வள்ளுவர் தந்த திருக்குறளை ஆராய்வதற்கென மற்ற பல்கலைக் கழகங்களில் நிறுவியது போலவே மதுரைப் பல்கலைக் கழகத்திலும் ஓர் அறக்கட்டளை நிறுவப்பட்டது. மதுரைப் பல்கலைக் கழகம் **திருக்குறளின் வாழ்வியல்** கருத்துக்களை ஆராய வேண்டும் என்றும் அப்போது முடிவு செய்யப்பட்டது. அதன்படி மதுரைப் பல்கலைக் கழகத்தில் வள்ளுவருடைய பொருளாதாரக் கருத்துக்கள், அரசியற் கருத்துக்கள், சமூகக்கருத்துக்கள், சமயக் கருத்துக்கள் ஆகியவை ஆராயப்பட்டு நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்த வரிசையில் ஒன்றே **குறள் கூறும் சமுதாயம்** என்னும் இந்த நூல் ஆகும்.

திருக்குறள் ஆராய்ச்சித் துறையின் விரிவுரையாளர் செல்வி காமாட்சி ஸ்ரீனிவாசன் அவர்கள் இதனை எழுதியுள்ளார். சமூகத்தின் கூறுகளான இல்லம், தொழில்கள், அறங்கள், உணவு உடை உறையுள் முதலிய அன்றாட வாழ்க்கை முறைகள் ஆகியவை பற்றி இந்நூல் எடுத்துப் பேசுகிறது. மேலும் சமூகத்தின் இயல்பு பற்றிப் பேசுவதோடு மேலைநாட்டுக் கற்பனைச் சிந்தனையாளருடனும் இந்நூல் வள்ளுவரை ஒப்பிட்டும் பேசுகிறது. இந்நூலில் வள்ளுவர், தன்னைச் சுற்றிக் கண்ட சமூகம் எத்தகையது என்பதை மட்டும் அல்லாது வள்ளுவர் காண விரும்பிய சமூகம் எத்தகையது எனவும் நாம் ஓரளவு அறியலாம். இத்தகைய நூல் திருக்குறள் ஆராய்ச்சியின் வளர்ச்சியில் ஒரு கட்டம் எனக் கருதுகிறேன்.

தமிழராய்ச்சி — குறிப்பாக திருக்குறள் ஆராய்ச்சி - ஓரளவு நிறைய நடந்திருப்பதாகத் தெரிகிறது. கூறியதையே கூறிக் கொண்டு – அரைத்த மாவையே அரைத்துக் கொண்டு– பழம் போக்கில் பழைய முறையில் ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடாது. புதிய முறையில் புதிய போக்கில் ஆராய்ச்சி நிகழ வேண்டும். இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கும் அறிவின் தெளிவிற்கும் ஏற்ற வகையில் அவ்வாராய்ச்சி நிகழ வேண்டும். திருக்குறள் ஆராய்ச்சியிலும் அதனையே காண விரும்புகின்றேன்.

பல்கலைக் கழகம் தன்பணியினைச் செய்திருக்கிறது. இனித் தமிழகம் இதனை ஆதரிக்கும் என நம்புகிறேன்.

சை. வே. சிட்டிபாபு

தஞ்சை மகாராசா ... வதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

## திருக்குறள் அறக்கட்டளை

மூன்று பல்கலைக் கழகங் களிலும்
முப்பால் ஆய்வு முறையுடன் நிகழ்க.
மூந்நூ ரூயிரம் இருப்பில் இருக்க
முகிழ்க்கும் வட்டியால் வாழ்வு சிறக்க.
வாயுறை வாழ்த்தொடு ஆய்வுரை செய்யத்
தண்டமிழ் முழுதும் தழுவிக் கொள்க:
அப்பால் முப்பால் இலக்கியப் பகுதி;
பழந்தமிழ்ப் பனுவல் பின்னர்ச் செய்க.
இப்பால் வள்ளுவர் வாழ்வியல் இயம்பி
இன்றைத் தமிழின் இலக்கியம் ஆய்க.
இடைப்பால் குறளின் ஒப்புமை உரைக்க
இடைநாள் இலங்கிய இலக்கியத் துடனே.
பேராசிரியப் பெருங்குழு நின்றே
ஆறு திங்களில் அனைத்தும் இணைத்துக்
கூறி யதையே கூறல் தவிர்க்க.
இடைப்படு பேராசிரியர் எழுத்தர்
ஆய்வுத் துணையோடு அத்துறை நடத்துக.
பொய்யா மொழியில் புத்தா ராய்ச்சி
மதிப்பருங் கட்டுரை மாண்புறுஞ் சிற்றுரை
ஆக்க வல்லுநர் அமர்த்துக.
இதுவே திருக்குறட் கட்டளை ஆகுமே.

# மதுரைப் பல்கலைக் கழகம்

## திருக்குறள் ஆய்வகம்

டாக்டர் தி. முருகரத்தனம் — மதுரை—21, 20 12—'75

திருக்குறள் ஆய்வகத்து விரிவுரையாளர் செல்வி காமாட்சி ஸ்ரீனிவாசன் அவர்கள் எழுதி வெளிவரும் முதல் நூல் இக்குறள்கூறும் சமுதாயம் ஆகும். முதலில் வெளிவரும் நூலானாலும் திருக்குறள் ஆய்வகத்தில் அவர்கள் எழுதிய மூன்றாவது நூல் இது. மற்றவை அடுத்தடுத்து வருமென நம்புகிறேன். மதுரைப் பல்கலைக் கழகத்துத் திருக்குறள் ஆய்வகத்துக்கு ஒதுக்கப்பட்ட வள்ளுவர் கண்ட வாழ்வியல் என்னும் பொருளுக்கு இசைய இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் தமிழ்வளர்த்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டம்பெற்றுப் பல்வேறு கல்லூரிகளில் பணியாற்றிய அவர்களுடைய ஆழ்ந்த புலமையினையும் அரிய உழைப்பினையும் இந்நூலிலே காணலாம். திருக்குறளால் அறியலாகும் சமுதாயத்தை விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைக்கும் நூல் இது போன்று முன்னர் வந்ததில்லை. திருக்குறளால் அறியவரும் வள்ளுவர் காலத்துச் சமுதாயம் வேறு; வள்ளுவர் காண விரும்பிய சமுதாயம் வேறு இவை இரண்டிற்கும் இடையே அமைந்த வேறுபாடு மிகப்பெரிது. வள்ளுவர், தம் காலத்துச் சமுதாயத்தை ஆராய்ந்து அதனைத் திருத்தி உயர்த்த விரும்பியிருக்கிறார். வள்ளுவர் காலத்துச் சமுதாயம் வரலாற்றிற்கு உரியது. அவர் காணவிரும்பிய சமுதாயம் எதிர்காலத்திற்கு உரியது. ஒருகால் கனவுக்குரியதும் ஆகலாம். இவ்விருவேறு உலகத்து இயற்கையையும் இந்நூலில் காணுகிறோம்.

இந்நூலை வெளிக்கொணர்தலில் திருக்குறள் ஆய்வகத்தில் பணியாற்றும் அனைவர்க்கும் பங்கு உண்டு. அதன் பொறுப்பாளன் என்ற முறையில் அவர்களுக்கு நான் நன்றி கூறிக் கொள்கின்றேன். திருக்குறள் ஆய்வகத்தைக் கட்டிக் காக்கும் மதுரைப் பல்கலைக் கழகத்தார்க்கும் அழகுற அச்சிட்டுத் தந்த ஆர். கே. பிரிண்டர்ஸுக்கும் நன்றி உரியது.

தி. முருகரத்தனம்

## ஆசிரியர் முன்னுரை

'**குறள் கூறும் சமுதாயம்**' என்னும் இந்நூல் மதுரைப் பல்கலைக் கழகத் திருக்குறள் ஆய்வகத்தின் பணிகளுள் ஒன்றாக உருவாகியுள்ளது. திருக்குறள் மூலமாக அறியப் படும் சமுதாய நிலையும் நற்சமுதாயத்தைக் குறித்த வள்ளுவர் கருத்துக்களும் இதில் ஆயப்பட்டுள்ளன.

(திருக்குறள் சமுதாய நூலன்று; நீதி நூலே. நீதி அல்லது அறத்தை, அதிலும் தனிப்பட்டோர்க்குரிய அறத்தைக் கூறுவதையே வள்ளுவர் முக்கிய நோக்க மாகக் கொண்டாராயினும் சமுதாயத்தைக் குறித்த கருத்துக்களும் அவர் நூலினின்றும் பெறப்படுவனவே) குறள் கூறும் சமுதாயத்தை இருமுறைகளில் ஆய்தல் கூடும். அக்காலத்தில் தமிழ்நாட்டில் நிலவிய சமுதாய அமைப்பைக் குறித்துக் குறள் மூலம் அறியப்படுவது யாது எனவும் ஆயலாம். குறளின் ஆசிரியர் விரும்பிய சமுதாயம் எத்தகையது எனவும் ஆயலாம். இவ்விரு நோக்குகளுமே இந்நூலில் கைக்கொள்ளப்படுகின்றன. வள்ளுவர் காலத்தில் இருந்த நிலை இது, வள்ளுவர் விரும்பிய நிலை இது எனக் குறள் மூலம் அறியப்படும் இயல் சமுதாயத்திற்கும் குறள் உருவாக்க விரும்பிய உயர் சமுதாயத்திற்கும் இடையே உள்ள வேறுபாடும் ஆங்காங்கே காட்டப்படுகிறது.

குறள் மூலம் அறியப்படும் தமிழ்நாடு மிக நாகரீக முன்னேற்றம் அடைந்த ஒரு நாடேயாகும். நாகரீகம் என்ற சொல்லும் குறளில் ஆளப்படுவதே (குறள் 580). நீண்ட காலம் நிலையாக நாட்டில் தங்கி, அரசு, படை, அரண் முதலிய அமைப்புக்களை ஏற்படுத்தி, உழவு தொழில் வாணிபம் ஆகியவற்றில் ஈடுபட்டு வாழும் மக்களின் நிலையே இங்குக்காணப்படுவது. தமிழ் நாட்டில் குறவர், ஆயர், உழவர், பரதவர், எயினர் என்னும் ஐந்நில மக்களும் ஐவேறு இனங்களாக (tribes) வாழ்ந்த ஒரு காலம் இருந்ததென அறிஞர்சிலர் கருதுவர் (சமுதாயத்தின் பிற இயல்புகள் பார்க்க). அவ்வாறாயின்

அது தொல்காப்பியர் காலமோ அதற்கு முற்பட்ட காலமோ ஆதல் கூடும் குறளின் காலத்தில் இனமினமாக வாழும் நிலை (tribal stage) நீங்கிப் பலரும் ஓர் அரசுக்கு உட்பட்டு வாழும் நிலையே காணப்படுகிறது அந்நிலையில் மக்களின் முக்கியத் தொழில் உழவே. இது வள்ளுவர் உழவுக்கெனத் தனியே ஒரு அதிகாரமமைத்துப் பிற தொழில்களை ஆங்காங்கே குறிப்பிட்டமையாலுணரப் புலப்படும் ஆயினும் உழவுத் தொழில் நன்கு செழித்து அதன் மூலம் அதிக விளைபொருள் பெறப்படும் ஒரு நிலையையே குறளில் காண்கிறோம். உழவுத் தொழிலின் நுட்பங்கள் பல அக்காலத்து அறியப்பட்டிருந்தன (தொழில்கள் பார்க்க). மேலும் உழவுத்தொழில் சிறப்புற நிகழ நாட்டில் செல்வவளம் பெருகியிருக்கும் ஒருநிலையிலேயே கள், சூது, வரைவின் மகளிரோடு உறவு ஆகிய தீமைகள் நாட்டில் தோன்றுதல் கூடும். சமுதாயம் இந்நிலையை யடைந்த பின்பே சிலர் துறவு வாழ்க்கையை மேற்கொள்ளுதலும் இயல்பு. செல்வத்தால் நிறைவடையாதவர்களாய் நாட்டில் நிகழும் தீமைகளைக் கண்டு உளம் வெறுத்தவர்களாய் ஆழ்ந்த சிந்தனையுடையோர் சிலர் துறவை நாடுவர். மற்றும் நாட்டில் சிலர் தொழில் முயற்சியை விட்டுத் துறவிகளாகச் சமய ஈடுபாட்டிலோ தத்துவ ஆய்விலோ காலத்தைச் செலவிடும் வாய்ப்பு அவர்கட்கு உணவளித்துப் பேணத்தக்க ஏர் வளத்தினுல் பெற்ற செல்வநிலை நிலவும் ஒரு சமுதாயத்திலேயே கைகூடும்.

குறளின் காலம் இரும்பு முதலிய உலோகப் பொருள்களின் பயன் நன்கு அறியப்பட்டகாலமே. கொல்லர் தொழிலைப் பற்றிய பல குறிப்புக்களைக் குறளில் காணலாம் (தொழில்கள் பார்க்க). வயல் உழும் சகாடு இழுக்கும் எருது, பால் தரும் பசு ஆகியவற்றுடன் போரிலும் பிற இடத்தும் பயன்பட்ட குதிரை, யானையாகியவற்றையும் வளர்த்துப் பழக்கப்படுத்த மக்கள் அறிந்திருந்தனர். கால்வல் நெடுந்தேரையும் கடலோடும் நாவாயையும் மக்கள் இயக்கினர்.

நாட்டில் ஒருபால் செல்வ வளமிருப்பினும் செல்வத்துக்கும் வறுமைக்கும் இடையே அதிக ஏற்றத் தாழ்வும் இருந்ததெனத் தெரிகிறது.

இத்தகையதொரு சூழ்நிலையிலேயே வள்ளுவர் வாழ்ந்து அல்லவை நீக்கி அறங் கூறினர். சமுதாய அமைப்பை அவர் மாற்றியமைக்க விரும்பவில்லை. அவர் புரட்சியை வேண்டவில்லை. ஆனல் சில சீர்திருத்தங்களை விரும்பினர். நாட்டில் மலியக் கண்ட சில தீமைகளை அகற்றி, அற்கா இயல்பிற்ருகிய செல்வத்தின் நாட்டத்திலேயே அழுந்தாது அதைத் துய்த்தும் வழங்கியும் அறம் பூண்டு வாழும்படி மக்கட்குக் கற்பித்துக் கூடாவொழுக்கம் கடிந்து துறவையும் தூய்மைப்படுத்திச் சமுதாயத்தில் நடுவு நிலைமையும் நட்பும் ஈதலும் இன்சொலும் விரவும் ஓர்உயர் நிலையைக் கொணரவே அவர் அவாவுற்ருர்.

இந்நூலில் குறள் கூறும் சமுதாயம், இல்லம், தொழில்கள், அறங்கள் முதலிய பல தலைப்புக்களின் கீழ் ஆயப்படுகிறது. இவற்றில் 'தொழில்கள்', 'மக்களின் அன்ருட வாழ்க்கை' முதலிய சில பெரும்பாலும் இயல் சமுதாயத்தையே காட்டும். 'இல்லம்', 'அறங்கள்', 'துறவு' என்பன ஆசிரியரின் உயர் கருத்துக்களையும் இலக்கியல் நோக்கையும் காட்டுதற்கு ஏற்றன. முதல் அதிகாரமும் இறுதி அதிகாரமும் வள்ளுவர் தம் நூலை எந்நோக்கத்துடன் எழுதினர் என்பதையும் அவர்கருத்துக்கட்கும் பிற அறிஞர் சிலரின் கருத்துக்கட்கும் உள்ள ஒற்றுமை வேறுபாட்டையும் ஆய்வன.

இம்முறையில் எழுதப்பட்ட இந்நூல் திருக்குறளை ஆய்ந்து கற்க விரும்புவோர்க்கு உகந்ததாகும் என நம்புகிறேன். இந்நூலை எழுதும் வாய்ப்பை எனக்கு அளித்து அதை வெளியிடவும் முன் வந்த மதுரைப் பல்கலைக் கழகத்தார்க்கு என் நன்றி உரியதாகும்.

காமாட்சி ஸ்ரீனிவாசன்

20. 12. 75
மதுரை

# பொருளடக்கம்


ஆசிரியர் முன்னுரை

பொருளடக்கம்

பக்கம்

1. திருக்குறள் கூறும் சமுதாயம் ஓர் இலக்கியல் சமுதாயமா ? 1

1. 1. நன்மையையும் தீமையையும் கூறும் இயல்பு
1. 2. உலக இயல்பை உணர்ந்து கூறல்
1. 3. எச்சரிக்கை
1. 4. அவரவர்க்குரிய அறத்தைக் கூறல்
1. 5. திருக்குறள் எம்முறையில் ஓர் இலக்கியல் சமுதாயத்தைக் காட்டுகிறது ?

2. இல்லம் 44

2. 1. திருமணம்
2. 2. வளமான வாழ்க்கை
2. 3. இல்லறம்
2. 4. இல்வாழ்வார்கடன் - அக்காலமும் இக்காலமும்
2. 5. இல்லத்தலைவி
2. 6. மக்கள்
2. 7. பிறஇயல்புகள்
2. 7. 1. இல்லத்தில் தலைமை
2. 7. 2. குடும்பத்திற்காக உழைப்பும் தன்மறுப்பும்
2. 7. 3. குடும்ப அன்பும் வெளியுலகக் கடமைகளும்
2. 8. உலக இல்லங்களிடை வள்ளுவர் காட்டும் இல்லத்தின் இடம்
2. 9. இல்லங்களின் அடிப்படை

3. தொழில்கள் 96

3. 1. அரசியற்பணிகள்
3. 2. படைத்தொழில்
3. 3. வாணிபம்
3. 4. மருத்துவம்
3. 5. ஆசிரியத் தொழில்
3. 6. அவையத்தோர்பணி
3. 7. உழவு

3. 8. தோட்டக்கலை
3. 9. உணவுதரும் பிற தொழில்கள்
3. 10. கடற்றொழில்
3. 11. கட்டடக் கலையும் தச்சுத்தொழிலும்
3. 12. கொல்லர் தொழில்
3. 13. குயவர் தொழில்
3. 14. பளிங்குமணி செய்தல்
3. 15. கிணறு வெட்டுதல்
3. 16. யானைகளைப் பிடித்துப் பழக்கும் தொழில்
3. 17. வள்ளுவர் விரும்பாத சில தொழில்களும் பொழுதுபோக்குகளும்
3. 17. 1. வரைவின் மகளிர் தொழில்
3. 17. 2. கள் பதம்செய்தலும் விற்றலும்
3. 17. 3. சூது
3. 17. 4. வழிப்பறி
3. 18. ஏவலாளர், பிறர் பொருட்டுத் தொழில் செய்வோர்
3. 19. கலைகள்
3. 20. பொழுதுபோக்குகள்

4. அறங்கள் 149

4. 1. இல்லறம் துறவறம் என அறம் இரண்டா ?
4. 2. சமுதாய அறங்கள்
4. 2. 1. பொருளைப் பிறர் பொருட்டுப் பயன்படுத்தல்
4. 2. 2. பிறர் பொருட்டுத் துன்பமேற்றல் - தன்மறுப்பு
4. 2. 3. பிறர் திறத்துப் பொறுப்பு
4. 3. உள்ளப்பண்புகள்
4. 3. 1. அன்பும் அருளும்
4. 3. 2. உண்மையும் நேர்மையும்
4. 3. 3. ஊக்கமும் உறுதியும்
4. 3. 3. அடக்கம் முதலியன
4. 4. ஒருவரோடொருவர் பழகும் முறை
4. 4. 1. இனியவை கூறல் முதலியன
4. 4. 2. பணிவும் பிறர்க்கு மதிப்பளித்தலும்
4. 4. 3. நகுதல் அல்லது மகிழ்ந்து உரையாடல்
4. 5. வள்ளுவர் காட்டும் அறத்தின் தன்மைகள் சில
4. 5. 1. அறம் மாறுவதா மாற்றம் அற்றதா ?

4. 5. 2. அறத்திற்குத் தூண்டுகோல்
4. 5. 3. அறத்தின் அடிப்படை
4. 5. 4. அறம் யாருக்காக ?

5. மக்களின் அன்றாட வாழ்க்கை 193

5. 1 உணவு
5. 2. உடை
5. 3. உறையுள்
5. 4. ஊர்தி
5. 5. பிற
5. 5. 1. வீட்டில் பயன்பட்டவை
5. 5. 2. மக்கள் விரும்பியவை
5. 5. 3. ஊர் அமைப்பு
5. 6. சில பழக்க வழக்கங்கள்
5. 7. பொதுமக்களிடையே வழங்கிய சில கருத்துக்கள்

6. சமுதாயத்தின் பிற இயல்புகள் 221

6. 1. கல்வி
6. 1. 1. கல்வியைப் பற்றிய கருத்துக்கள்
6. 1. 2. கல்வியின் வகைகள்
6. 2. பிறப்பினுல் வேறுபாடு (சாதி, வர்ண வேறுபாடுகள்)
6. 3. சமுதாயத்தில் தலைமை
6. 4. சமுதாயத்தின் தன்மை
6. 4. 1. சமுதாயம் நல்லியல்பையுடையதா ?
6. 4. 2. சமுதாயம் முன்னேறிக் கொண்டிருக்கிறதா ?
6. 4. 3. சமுதாயம் அமைதி நிறைந்ததா, போரும் மாறுபாடும் இயல்பா ?
6. 4. 4. திருக்குறள் கூறும் சமுதாயம் திறந்தஇயல்பையுடையதா (a society of open relationships) மூடியஇயல்பையுடையதா (a society of close relationships) ?

7. துறவு 269

7. 1. வள்ளுவரால் கூறப்பட்டதுறவியர் யார் ?
7. 2. துறவியர் வாழ்க்கை
7. 3. அவரியல்பும் கடனும்

7. 4. துறவியரால் சமுதாயம் பெற்ற பயன்
7. 5. துறவு-அக்காலமும் இக்காலமும்

**8. வள்ளுவர் விரும்பும் சமுதாயத்திற்கும் பிறஅறிஞர் விரும்பும் சமுதாயத்திற்கும் ஒப்பு** 304

8. 1. பிளேட்டோ தந்த 'அரசு'
8. 1. 1. அரசியல்
8. 1. 2. கல்வி
8. 1. 3. பிற செய்திகள்
8. 2. மூர் கண்ட உட்டோப்பியா
8. 2. 1. அக்கால ஆங்கில பிரெஞ்சு நாடுகளில் காணப்பட்ட சில இயல்புகள்
8. 2. 2. உட்டோப்பிய நாட்டின் இயல்பு
8. 2. 2. 1. அரசியலும் போர்முறைகளும்
8. 2. 2. 2. தொழிலும் பொருளும்
8. 2. 2. 3. இல்லம்
8. 2. 2. 4. பிற செய்திகள்
8. 3. புது அத்லாந்தியநாடு
8, 3. 1. புது அத்லாந்திய நாட்டின் இயல்புகள்
நூல் விளக்கம் 353
சிறப்புச் சொற்கோவை 359

# 1

## திருக்குறள் கூறும் சமுதாயம் ஓர் இலக்கியல் சமுதாயமா ?

உலகில் நன்மையும் தீமையும் இன்பமும் துன்பமும் வறுமையும் செல்வமும் கலந்தேயுள்ளன. எந்நாட்டிலும் வறுமையோ துன்பமோ இல்லாமலிருப்பதில்லை. செல்வம் மிகுந்த நாடுகளிலும் வறுமையும் துன்பமும் உண்டு. முற்போக்கான நாடுகளிலும் பல குறைகள் உண்டு. எச்சமுதாயத்திலும் பல நன்மை தீமைகள் விரவியே காணப் படுகின்றன.

ஆயினும் மக்களின் உள்ளம் ஓர் இலக்கியல் வாழ்வை, சமுதாயத்தை, நாட்டை அல்லது நகரை நாடாமலில்லை. பலநாடு களிலும் பல காலங்களிலும் அறிஞர்களும் கவிஞர்களும் எழுத்தாளர் களும் இவற்றைக் குறித்துக்கனவுகள் கண்டுள்ளனர். பண்டைக் கிரேக்க அறிஞர் பிளேட்டோ (Plato) தாம் எழுதிய 'அரசு' (Republic) என்ற நூலில் தன்னுட்சியுரிமையுடைய ஒரு சிறந்த நகர் எவ்வாறு அமைய வேண்டும், எவ்வியல்புகளைக் கொண்டிலங்க வேண்டும் என்பதைக் குறித்து எழுதினர். ஏசாயா போன்ற யூத தீர்க்கதரிசி களும் வருங்காலத்தில் உருவாகப் போகும் ஓர் இலட்சிய சமுதாயத்தைக் குறித்துக்கனவு கண்டனர். நாட்டில் போரும் பகையும் ஒழிய, ஓநாயும் புலியும் ஆட்டுக் குட்டிகளுடன் இசைந்து வாழவும் சிங்கம் பசுக் கன்றுடன் விளையாடவும் தக்க ஒரு காலம் வருமென ஏசாயா கருதினர்.[1]

---

1. The Holy Bible, Isaiah, Chap 11.

பிற்காலத்திலும் மேல்நாடுகளில் பல எழுத்தாளர்கள் தத்தம் கருத்திற்கேற்ப ஓர் இலக்கியல் நாட்டை அல்லது சமுதாயத்தைத் தம் நூல்களில் சித்திரித்துக் காட்டினர். கி. பி. 16 ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியிலும் 17 ஆம் நூற்ருண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த இத்தாலி (Italy) நாட்டைச் சேர்ந்த காம்பனெல்லா (Campenella) என்னும் அறிஞர் தாம் எழுதிய கதிர்நகர் (Civitatis Solis) என்னும் நூலில் அன்பும் அறிவும் ஆற்றலும் நிறைந்தோர் வாழும் ஓர் இலக்கியல் நகரைப் புனைந்துரைத்தார். அங்குச் சமயகுருமாரே அதிக செல்வாக்குடையவராக இருப்பர் எனக் காட்டினர். 16 ஆம் நூற்ருண்டிலேயே தாமஸ் மூர் (Thomas More) என்ற ஆங்கில அறிஞரும் உட்டோப்பியா (Utopia) என்னும் நூலை எழுதினர். அதுவும் ஓர் இலக்கியல் நாட்டைக் காட்டும் நூலே. மூரின் காலத்திலிருந்து இந் நூற்ருண்டில் 'புதுவிர உலகு' (The Brave New World) என்னும் நூலை எழுதிய அல்டஸ் ஹக்ஸ்லி (Aldous Huxley) வரையிலும் பல மேல்நாட்டு எழுத்தாளர்கள் வேறு பல நூல்களை எழுதியுள்ளனர்.

தமிழ் இலக்கியத்தில் கம்பரே தம் இராமாயணத்தின் தொடக்கத்தில் நாட்டுப்படலத்திலும் நகரப்படலத்திலும் கோசலை நாட்டையும் அயோத்தி நகரையும் ஓர் இலக்கியல் நாடாகவும் நகராகவும் காட்டினர். எவ்விதக் குறையும் இல்லாது செல்வ வளத்துடனும் கல்வி வீரம் அறம் முதலிய நல்லியல்புகளுடனும் மகிழ்ச்சி குன்ருது வாழும் அந்நாட்டு மக்களின் வாழ்க்கையைப் புனைந்துரைத்தார்.

பழந்தமிழ் அகப்பொருள் நூல்களில் குணத்தில் சிறந்தோரையே தலைவன் தலைவியராகக் கொள்ள வேண்டுமென்னும் வழக்கு இருந்தது. இறையனர் அகப்பொருள் போன்ற இடைக்கால அகப்பொருள் நூல்களில் இவ்வழக்கு இன்னும் வலுப்பெற்றது. இறையனர் அகப்பொருள் போன்ற நூல்கள் ஓர் இலக்கியல் சமுதாயத்தைச் சித்திரித்துக் காட்டாவிடினும் இலக்கியல் தலைவன் தலைவியரின் அன்பு வாழ்க்கையைக் காட்டின. இவற்றில் வரும் தோழி, பாங்கன், தாய் முதலிய கதை மாந்தர் அனைவரும் இலக்கியல் பண்புகளைக் கொண்டவராகவேயிருப்பர். திருக்கோவையார் போன்ற கோவை நூல்களிலும் இத்தன்மையையே காணலாம்.

இவையனைத்தையும் நோக்கத் திருக்குறள் கூறும் சமுதாயம் ஓர் இலக்கியல் சமுதாயமா? ஓர் இலக்கியல் நாட்டையோ சமுதாயத்தையோ சித்திரித்துக் காட்டுவதைத் தம் அடிப்படை நோக்கமாக

வள்ளுவர் கொண்டாரா? இல்லையெனவே தோன்றும். நூல் முழுவதையும் சேர்த்து நோக்குங்கால் ஓர் இலக்கியல் சமுதாயத்தைச் சித்திரித்துக் காட்டுவதன்றித் தனிப்பட்டோர்க்குரிய அறங்களை (individual ethics) கூறுவதே அவர் அடிப்படை நோக்கம் எனத் தோன்றும்.

திருக்குறளுந்தான் அரசியல் அங்கவியல் ஆகியவற்றைக் கூறுகிறது. 'நாடு' என ஓரதிகாரமும் குறளில் உண்டு. ஆயினும் பொதுவாக வள்ளுவரின் அடிப்படை நோக்கம் தனிப்பட்டோர்க்குரிய அறங்களைக் கூறுவதே. மேலும் வள்ளுவர் ஒரு கற்பனை நாட்டை உளத்தில் கொண்டு எழுதுவதன்றி உலகியல்பையே உளத்தில் கொண்டு எழுதினர் எனவும் கூறலாம்.

## 1. 1. நன்மையையும் தீமையையும் கூறும் இயல்பு

வள்ளுவர் பல நல்லறங்களையும் கூறினர். ஆயினும் உலகில் பல தீமைகளும் உள என்பதையும் நன்கு காட்டினர். அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கம் உடைமை, ஒழுக்கம் உடைமை, ஒப்புரவறிதல், ஈகை, புகழ் ஆகிய மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நல்லறங்களைக் கூறும் இல்லறவியல் பிறனில் விழையாமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினையச்சம் என விலக்கப்பட வேண்டிய தீமைகளையும் உடன் கூறுகிறது. இவற்றை விலக்க வேண்டும் என்றுதான் வள்ளுவர் கூறினர். ஆயினும் இத்தீமைகளைப்புரிவோர் பலர் உலகில் உளர் என்பதை இவ்வதிகாரங்களில் வரும் குறள்கள் பல காட்டும்.

பிறனில் விழைதலாகிய தவறு சமுதாயத்தில் ஓரளவு நிகழக் கண்டே வள்ளுவர் 'பிறனில்விழையாமை' என்னும் அதிகாரத்தை எழுதியிருப்பார். அது போலவே பிறர் செல்வத்தையோ செல்வாக்கையோ வளமுள்ள வாழ்க்கையையோ கண்டு அழுக்காறு கொள்பவர் சமூகத்தில் இருந்தமையை நோக்கியே அழுக்காறாமை என்னும் அதிகாரத்தை அவர் எழுதியிருத்தல் வேண்டும். அழுக்காறுடையவனைச் செல்வம் விட்டு நீங்கும், அவன் வறுமையடைவான், அவன் சுற்றத்தவரும் உணவும் உடையும் இன்றிக் கெடுவர் என்றெல்லாம் கூறி அவர்களைத் திருத்த முயன்றார். ஆயினும் சமூகத்தில் அழுக்காறுடையவர்களும் சில அமையங்களில் வளமாக வாழ்வதைக் கண்டே,

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். (169)

என்றார்.

பிறர் பொருளை அடைய அவாக்கொண்டு அது பொருட்டாக அறமல்லாதவற்றைச் செய்வோரும் உலகில் உளர் என்பதனையே 'வெஃகாமை' காட்டும். கல்வியறிவில்லாத பாமர மக்கள் மட்டுமன்றிச் சிறந்த கல்வியறிவுள்ள மக்களும்கூடப் பிறர் பொருளை வெஃகுதலைக் குறித்தே,

அஃகி அகன்ற அறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின் (175)

என்ற குறள் எழுந்திருத்தல் வேண்டும். பொதுவாக நன்னெறிக்கண் செல்ல விழைபவரும் பிற அறங்களைச் செய்பவருங் கூட ஓரமையம் பிறர் பொருள் மேல் ஆசை கொண்டு அதையடையும் பொருட்டுத் தவறானவற்றைச் செய்யக் கருதுதலும் கூடும் என்பதையே,

அருள்வெஃகி யாற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும் (176)

என்ற குறள் விளக்குகிறது.

புறங்கூறும் பலர் உலகில் இருப்பதையெண்ணியே 'உலகம் ஏன் இவர்களைப் பொறுத்துக் கொண்டிருக்கிறது? இத்தகையோரைத் தாங்குதல் அறம் எனக் கருதியா இவர்களைத் தாங்குகிறது?' என வள்ளுவர் வினவினார்.

பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும் (186)

என்ற குறள் எதைக் காட்டுகிறது? சமூகத்தில் தீமையைச் செய்பவர்கள் அதற்கேற்ற பயனையே அடைகின்றனர். கடுஞ்சொல் கூறுபவன் பிறரிடமிருந்து கடுஞ்சொல் கேட்கிறான். பகைபாராட்டுபவனிடத்துப் பலரும் பகை பாராட்டுகின்றனர். புறங்கூறுபவனும் பிறரால் புறங்கூறப்படுகிறான். இக்குறள் இலக்கியல் சமுதாயத்தைக் காட்டவில்லை. ஆனால் உலக இயலை நன்குணர்ந்து எடுத்துரைக்கிறது.

சிலரே புறங்கூறுவர், ஏனையோர் கூறார். பிறர் குறைகளைக் குறித்து மனதில் எண்ணியும் பலர் கூறாது அடக்குவர். ஆயினும் ஏறக்குறைய யாவரும் தம் குற்றங்களை உணராதிருத்தலும் பிறர் குற்றங்களை எளிதில் உணர்தலும் இயல்பு. இம் மனித இயல்பை நன்குணர்ந்தே வள்ளுவர்,

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு (190)

என யாவரையும் உட்படுத்தி வினவினர்.

நல்லியல்புகளையும் கடைப்பிடித்தற்குரிய அறங்களையும் கூறும் போதும் யாவரும் அந்நல்லியல்புகளையுடையரல்லர் யாவரும் அவ்வறங்களைக் கடைப்பிடிப்பவரல்லர் என்பதை யுட்கொண்டு அவ்வறமுடையார், இல்லார் இருதிறத்தாரின் தன்மையையும் கூறுதல் குறளின் இயல்பு.

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை (53)

நல்ல இல்லத்தலைவியையுடைய குடும்பங்களும் உள. நல்ல இல்லத்-தலைவியைப் பெற்றிராத இல்லங்களும் உள. முன்னவற்றில் செல்வம் ஏவலாளர் முதலிய இல்லாவிடினும் எல்லாம் உள்ளபோல் அவ்வில்லம் சிறப்புடன் துலங்கும். பின்னவற்றில் வேண்டிய பிறயாவும் இருப்பினும் ஒன்றும் இல்லாதது போலவே பொலிவற்றிருக்கும்.

அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையர்
என்பும் உரியர் பிறர்க்கு (72)

உலகில் அன்புள்ளாரும் இருப்பார், அன்பில்லாதோரும் இருப்பர். அன்பிலார் தன்னலமே பேணுவோராய் யாவற்றாலும் தமக்குரியராகவேயிருப்பர். அவர் பொருளோ செல்வாக்கோ அறிவோ திறமையோ யாவும் தன்னலத்திற்கே பயன்படும். அன்புடையாரோ தம் என்பாலும் பிறர்க்குரியவராயிருப்பர். அவர் தம் உடைமை, நேரம், பணியாகிய யாவற்றாலும் பிறர்க்குப் பயனளித்தல் மட்டுமன்றிப் பிறர் பொருட்டுத் தம்முடம்பையும் கொடுக்க முன் வருவர்.

**விருந்தோம்பலின்** சிறப்பைக் கூறும் போதும் அவ்வறத்தைச் செய்யாதோரும் சமூகத்தில் இருப்பதைக் குறித்தே அத்தகையோர் தம் பொருளை வருந்திப் பாதுகாத்துப் பின் இழந்தோராய் 'இப்போது யாதொரு பற்றுக்கோடும் இலமாயினேமே' என வருந்துவர் என்பது கூறப்படுகிறது. செல்வமுள்ள காலத்தில் விருந்தோம்பிப் பிறர்க்குப் பயன்பட வாழாமையினால் நண்பரிலராவர். பின் வறுமையுற்ற காலத்துத் தமக்கு உதவ யாரும் இல்லா நிலையில் வருந்துவர் என உலக இயல்பே எடுத்துரைக்கப்படுகிறது. விருந்தோம்பும் பண்புடையார் வறுமையுற்ற காலத்தும் விருந்தோம்புவர். ஆனால் சிலர்

செல்வம் நிறைந்திருக்கும் போதும் விருந்தோம்பாத அறிவின்மையைக் கடைப்பிடிப்பர். அத்தகையோருக்குச் செல்வம் மிக்கிருப்பினும் அது வறுமையாகும். அதைச் செல்வத்துள் வறுமை எனலாம். இவ்வாறு விருந்தோம்பாதாரின் இயல்பையும் வள்ளுவர் கூறினர்.

அவ்வாறே ஈகையின் சிறப்பையும் அதனால் விளையும் நற்பயனையும் விளக்குங்கால் ஆசிரியர் ஈத்துவக்கும் இன்பம் அறியாது தாம் உடைமை வைத்திழக்கும் வன்கணணவரின் இயல்பையும் உடன் கூறினர். கோசலநாட்டின் செல்வவளத்தைக் கூறப்புகுந்த கம்பர், அந் நாட்டில்ஆடவர் மட்டுமன்றி மகளிருங் கூடக் கல்வியும் செல்வமும் நிரம்பியவராக இருப்பதால் வருந்தி வந்தவர்க்கீதலையும் நாடொறும் விருந்தோம்பலையுமே விரும்பினர் என்றார்.

பெருந் தடங்கண் பிறை நுதலார்க்கு எலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே (1.2.36)

எனக் கம்பர் கூறியதற்கு மாறாகச் செல்வம் மிகுந்துள்ள இல்லங்களிலும் விருந்தினரை வரவேற்றுப் பேணாத மடமையுண்டு, பொருளைத் தேடித் தொகுத்து வைத்தோரும் அதை ஈயாது வறிதே வைத்திழப்பதுண்டு என உலக இயல்பை வள்ளுவர் உள்ளவாறு எடுத்துரைத்தார். கம்பரின் நோக்கம் தசரதன் ஆண்ட கோசல நாடு ஓர் இலக்கியல் நாடு எனக் காட்டுவதே. வள்ளுவரின் நோக்கம் பல குறைகள் உள்ள இவ்வுலகின் நிலையை உள்ளவாறுணர்ந்து பின் அறத்தைக் கடைப் பிடிக்க விரும்புவோர்க்கு அறத்தைக் கூறுவதேயாகும்.

புகழ்பட வாழ்தல் மக்கள் கடன் என வள்ளுவர் எண்ணினர். ஈதலும் இசைபடவாழ்தலுமே வாழ்க்கையில் ஒருவர் பெறத்தக்க ஊதியம் என்றார். ஆனல் உலகில் புகழ் பொருந்த வாழ்பவரும் உளர், புகழ் பொருந்த வாழாதோரும் உளர். ஆகவேதான்,

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர் (240)

என்றும் கூறினர்.

இல்லறத்தில் ஈடுபட்டோரிடை மட்டுமன்றித் துறவியராகக் காணப்படுவோரிடையேயும் நன்மையும் தீமையும் உண்டு. உண்மைத்

துறவியரும் இருப்பர் போலித் துறவியரும் இருப்பர். இதையுணர்ந்தே வள்ளுவர் 'கூடாவொழுக்கம்' என ஓர் அதிகாரத்தைத் துறவறவியலில் சேர்த்தார். ஓர் இலக்கியல் சமுதாயத்தைக் கூறும் நூலாக இருப்பின் இத்தகைய தலைப்புக்களே இடம் பெறு. பலர் உள்ளத்தில் துறவு இன்றிப் பொருள் வருவாய் கருதியோ பிறர் மதிப்பைப் பெறவிரும் பியோ சமூகத்திலோ அரசர்களிடமோ செல்வாக்குப் பெறும் பொருட் டாகவோ துறவியர் வேடம் தாங்கித் துறந்தார் போல் வாழ்ந்து வருவதை வள்ளுவர் கண்டார். ஆகவே

மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர் (278)

என்றார். குன்றிமணியானது புறத்தே செந்நிறம் கொண்டதாக இருப்பினும் அடிப்புறத்துக் கருநிறமுடையதாயிருப்பது போலப் புறத்தே நல்ல தவ வேடத்தைத் தாங்குபவராக இருப்பினும் உள்ளத்தே பொய்மையைக் கொண்டொழுகுபவர் பலர் இவ்வுலகத் துளர் எனவும் கூறினர். தோற்றத்தைப் பார்த்து மக்கள் ஏமாந்து போய்விடலாகாது. கணை தோற்றத்தில் செவ்விதாக நேர்வடிவுள்ள தாகவுள்ளது. ஆனல் அதன்செயலோ கொடிதாக இருக்கிறது. யாழின் கோடு வளைந்திருக்கிறது, ஆனல் அதன் செயலோ செவ்விய இனிய இசையைத் தோற்றுவிப்பதே. அவ்வாறே துறவியரையும் அவர் தவவேடத்தைக் கண்டவுடன் நல்லவர் என எண்ணி நம்பிவிடாது அவரவர் செயல்களையாராய்ந்து செயல்கள் நல்லனவாயின் நல்லார் எனவும் அல்லனவாயின் அல்லார் எனவும் துணிதல் வேண்டும் என்றார். எங்கும் நன்மையும் தீமையும் இருத்தல் கூடும் என்பதை வள்ளுவர் நூலின் பல பகுதிகளிலும் நன்கு காட்டினர்.

போலித்துறவியரன்றித் துறவை விருப்பியேற்றுக் கொண்டோ ரிடையேயும் பலகுறைகள் இருத்தல் கூடும். துறவியரில் அருள் நிறைந்தோரும் இருப்பர். அருளில்லாதாரும் இருப்பர். அதை யெண்ணியே வள்ளுவர் இருதிறத்தாரின் இயல்பையும் அருள் என்னும் அதிகாரத்தில் கூறினர். அருளற்றார் புரியும் அறத்தினல் பயனில்லையெனவும் அவர் மறுமையில் நற்பயனடையார் எனவும் அருளின்றி நடந்து பழகி வருபவர் பின் அருள் பெறலரிது எனவும் அருளின்மையால் வரும் கேட்டை எடுத்துரைத்தார். துறவியரும் ஒருகால் வாய்மையினின்றும் தவறுதல்கூடும், ஓரமையம் அவருள்ளமும் களவின்கட் செல்லுதல் கூடும் என்பதையுணர்ந்தே அவ்வவற்றைக் கண்டித்து விலக்கமுயன்றார். துறவியருள் இணரெரி தோய்வன்ன

இன்னா செயினும் வெகுளாத சாந்த குணத்தோரும் இருப்பர். சினத்துக்கு இடம் கொடுப்பவரும் இருப்பர். இன்னா செய்தோர்க்கும் நன்னயம் செய்யும் உயர் குணத்தோரும் இருப்பர். சினத்தினலோ தமக்கு ஒரு பயன் கருதியோ கவனமின்மையினலோ பிறருக்கு அல்லது பிறவுயிர்களுக்குத் துன்பம் செய்வோரும் இருப்பர். இதையே இன்னா செய்யாமை என்னும் அதிகாரம் விளக்குகிறது. முற்பகல் பிறர்க்குத் துன்பம் செய்யின் பிற்பகல் தமக்குத் துன்பம் தானே வரும் என எச்சரிக்கிறது. சிறந்த கல்வியறிவுடையோராய்ச் சமய நூல்களையும் மெய்யுணர்வு நூல்களையுங் கற்றோருங் கூடப் பிறர்க்குத் துன்பந்தரும் செயல்களைச் செய்தல் கூடும் என்பதைக் கண்டே,

அறிவினுன் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்ருக் கடை (315)

என ஆசிரியர் வினவினர்.

அறத்தைச் செய்வோரும் இருப்பர் ; அறத்தைச் செய்யா தோரும் இருப்பர். அதுபோலவே நாட்டில் கற்றோரும் இருப்பர் ; கல்லாதோரும் இருப்பர். செல்வமுடையோரும் இருப்பர் ; வறுமையில் வாடுவோரும் இருப்பர். முயற்சியும் ஊக்கமும் உள்ளோரும் இருப்பர். இவையில்லாது மடி, மறவி, சோர்வு ஆகியவற்றுக்கு இடங்கொடுப் போரும் இருப்பர். இத்தகைய இரு திறத்த நிலையையே பொருட்பாலும் காட்டுகிறது. கல்வியின் சிறப்பை ஓரதிகாரத்தில் கூறிய வள்ளுவர் கல்லாமையைக் குறித்தும் எழுதினர். சமுதாயத்தில் கல்வியில்லாதோர் செல்வமுடையவராயுமிருப்பர். கல்வியுள்ளோர் நற்பண்புகளை யுடையோர் வறியவராயுமிருப்பர். இந்நிலையையே,

இருவேறு உலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு (374)

என்ற குறள் மூலம் ஆசிரியர் குறிப்பிட்டார். ஓர் இலக்கியல் சமுதாயத்தில் இந்நிலைமை இருக்குமாறில்லை. இலக்கியல் சமுதாயமாக இருப்பின் பொருந்து கல்வியும் செல்வமும் யாவர்க்கும் பூத்திருக்க வேண்டுமல்லவா? ஏட்டுக் கல்வி பெறும் வாய்ப்பைப் பெருதோரும் கேள்வியினல் பயனடைதல் கூடும். அத்தகைய கேள்வியறிவையும் விழையாதோர் பலர் நாட்டில் இருப்பக் கண்டே "அவியினும் வாழினும் என்?" (420) என அலுத்துக் கொண்டார் வள்ளுவர். இன்னும் கற்கின்ற கல்வியில் மட்டுமன்றி இயல்பான அறிவிலும் மக்கட் கிடையே ஏற்றத் தாழ்வுகள் உண்டு என்பதை அறிவுடைமை என்னும் அதிகாரம் விளக்கும்.

**இறைமாட்சி, செங்கோன்மை** என்னும் அதிகாரங்கள் ஓர் இலக்கியல் அரசனின் இயல்பையே காட்டும். ஆயினும் அடுத்துக் **கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை** என்னும் அதிகாரங்கள் வருகின்றமை உலகில் அரசர்கள் யாவருமே செங்கோலினுல் ஆட்சி செலுத்துவதில்லை, தம் ஆற்றலைத் தக்க வழியில் பயன்படுத்திக் குடிகளுக்கு நன்மைசெய்யாது கொடுங்கோலரசர்கள் ஆவதும் குடிகள் அஞ்சத் தக்கன செய்வதும் உண்டு என்பதை வள்ளுவர் நன்குணர்ந்தமையையே காட்டும்.

அரசரின் கடமைகளைக் கூறுமிடத்தும் **'பெரியோரைத் துணைக் கோடலை'** அடுத்துச் **'சிற்றினஞ்சேராமை'** கூறப்படுகிறது. இலக்கியல் சமுதாயத்தைக் கூறும் நூலாக இருப்பின் இவ்வதிகாரமும் அதில் இடம் பெருது. இலக்கியல் சமுதாயத்தில் சிற்றினமே இராதே. குணத்தில் பெரியோரும் சிறியோருமுள்ள இவ்வுலகின் நிலைமையை யெண்ணியே வள்ளுவர் ஒரு நல்லரசன் பெரியோரைத்துணைக் கோடல் வேண்டுமெனக் கூறிச் சிற்றினம் சேரலாகாதென விலக்கினர்.

இலக்கியல் சமுதாயத்தில் மறதியால் கடமையைச் செய்யாது விடுபவர் இரார். அத்தகையோர் பலர் இருக்கும் ஒரு நிலைமையை எண்ணியே **பொச்சாவாமை** என்னும் அதிகாரங் கூறப்படுகிறது. அவ்வாறு கடமையை மறப்பவர் புகழையடையார், நன்மையை யடையார், முன்னுறக்காவாதிழுக்கியோர் பின்னூறிரங்குவர் என அவர் நிலைமை கூறப்படுகிறது.

இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அதுவொப்ப தில் (536)

என்னும் குறளிலும் 'வாயின்' என்னும் சொல் அவ்வாறு யாவரிடத்தும் கடமையை மறவாது எண்ணிச் செய்தல் அரிது, அவ்வாறு செய்வோர் சிலரே என்பதனையே உணர்த்தி நிற்கிறது.

**ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை** என்னும் அதிகாரங்களும் இத்தன்மைகளைப் போற்றும். ஆயினும் இத்தன்மைகளையுடையவரும் இல்லாதவரும் இருதிறத்தோரும் சமுதாயத்தில் உள்ளனர் என்பதையே காட்டும்.

உரமொருவற் குள்ள வெறுக்கைஅஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு. (600)

மடியுளாள் மாமுகடி யென்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னுள் (617)

ஊக்கமும் உரனும் உடையோர் உளர். அத்தன்மையே அவர் கட்குச் செல்வமாகும். உரனில்லாதோரும் உளர். அவர்கள் மரங்களை யொப்பர். மக்கள் வடிவுடைமையே வேறுபாடாவது. மடியுள்ளோர் உளர், அவர்களிடத்து முகடி (வறுமை, துன்பம்) தங்குகிறாள். மடியில்லாது முயற்சியுடையோராய் வாழ்பவர்களும் உளர். அவர் களிடத்துத் தாமரையினாள் (செல்வம், சிறப்பு, வெற்றி) தங்குகிறாள்.

இவ்வாறு இருதிறத்தோரின் இயல்பையும் குறள் கூறுகிறது.

வள்ளுவர் போரை விரும்பவில்லை. பகையென்னும் பண்பிலதனை நகையேயும் விரும்புதலாகாது என்றார். ஆனால் அவர் காலத்தில் அரசர்கட்கிடையே போர்கள் அடிக்கடி நிகழ்ந்தன. அதனாலேயே அவர் அரசர்கட்குச் சிறந்த படையும் அரணமைப்பும் பிறபாதுகாப்பும் வேண்டப்படுவனவே என எண்ணி அவற்றைக் குறித்துக் கூற நேர்ந்தது. மேலும் வலியறிதல், காலமறிதல், இடனறிதல் என்னும் தலைப்புக்களின் கீழும் போருக்குரிய அறிவுரைகளைக் கூறினார். இவை போரையன்றிப் பிற செயல்களைக் குறித்தன எனக் கொள்ளுதலும் கூடும். பிற செயல்களைச் செய்யும் போதும் அரசரும் பிறரும் தம் வலி, காலம், இடம் அறிந்து செய்தல் பொருந்தும். ஆயினும் இங்கு 'இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது' (481) 'ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து, போற்றார் கட்போற்றிச் செயின்' (493) முதலிய பல குறள்கள் போரைத் தெளிவாகக் குறிக்கின்றன. இலக்கியல் சமுதாயத்தில் போர் நிகழுமா? நிகழினும்

> செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
> காணின் கிழக்காம் தலை (488)

என்பன போன்ற அரசியல் சூழ்ச்சிகள் இடம் பெறுமா? போரை விரும்பாத வள்ளுவர், வாய்மையை விரும்பிய வள்ளுவர், நாட்டைக் காக்கும் பொறுப்புள்ள அரசன் தன் நாட்டிற்குத் தீங்கிழைக்கத்தக்க பகை வேந்தனை உடனடியாக எதிர்க்க முடியாத ஒரு நிலைமை இருத் தலும் கூடும், அந்நிலையில் பணிவாக நடந்து பின் தான் வெற்றி கொள்ளற்கேற்ற ஒரு நிலையில் அப்பகை யரசனை வென்று தன் குடிகளைக் காக்க வேண்டிய நிலைமையும் ஏற்படல் கூடும் என எண்ணியே இவ்வாறு எழுதினார்.

கிரேக்க அறிஞர் பிளேட்டோவும் போரை ஏற்றுக் கொண்டார். போர் நிகழுதல் கூடும் என எதிர்பார்த்துப் பயிற்சி பெற்ற திறமை யுடைய படைகளால் காக்கப்படுவதே நன்னகராகும் என்றார். ஆயினும்

பிற்காலத்து மேல் நாடுகளில் இலக்கியல் சமுதாயத்தைக் காட்டும் நூல்களை எழுதிய அறிஞர்கள் பலர் என்றும் போர் நிகழாத போரை விரும்பாத நாடு அல்லது சமுதாயமே சிறந்ததாகும் எனக் காட்ட முயன்றனர். 17-ஆம் நூற்றுண்டில் பிரான்சிஸ் பேக்கன் (Francis Bacon) என்ற ஆங்கில அறிஞர் எழுதிய இலக்கியல் நாட்டைக் காட்டும் 'புது அத்லாந்திய நாடு' (New Atlantis) என்னும் நூலில் அந்நாட்டு மக்கள் போரை விரும்பாதவர்களாய்த் தம்நாட்டைக் குறித்துப் பிறர் அறியின் பிற நாடுகளால் படையெடுப்பும் போரும் ஏற்படக் கூடும் என்று எண்ணிப் பிறர் தம் நாட்டைக் குறித்து அறியாதவாறு காக்க முயல்கின்றனர். அதே நூற்றுண்டின் பிற்பகுதியில் ஜேம்ஸ் ஹாரிங்டன் (James Harrington) என்ற மற்றொரு ஆங்கில எழுத்தாளர் எழுதிய 'ஓசியாளு' அதாவது 'பெருங்கடல் சூழ் நாடு' (Oceana) என்ற நூலிலும் போரை விரும்பாத ஓர் இலக்கியல் சமுதாயமே சித்திரிக்கப்படுகிறதென்பர்.[2]

வள்ளுவர் போரை விரும்பவில்லை. ஆனால், நாட்டில் போர் நிகழ்ந்தது. தம் உயர் கொள்கையையும் எடுத்துரைத்தார்; நாட்டில் இருக்கின்ற நிலைமைக் கேற்ற அறிவுரைகளையும் கூறினர்.

போர்முறைகளைக் குறித்து எழுதியதோடு ஒற்றர்களைக் குறித்தும் வள்ளுவர் எழுதினர். பொருட்பாலில் ஒற்றுடல் எனவும் ஓர் அதிகாரம் உண்டு. ஒற்றர்படை ஓர் இலக்கியல் நாட்டில் வேண்டப்படுவதா? நன்மையைச் செய்வதற்கே அரசன் ஒற்றுள்கிறன் எனக் கருதுதலும் கூடும். புது அத்லாந்திய நாட்டிலும் அரசால் ஒரு வகை ஒற்றர்கள் ஆளப்படுகின்றனர். தம் நாட்டைக் குறித்துப் பிறர் அறிவதை விரும்பாத புது அத்லாந்திய நாட்டு மக்கள் தாம் பிறநாடுகளைக் குறித்து அறியவும் அந்நாட்டுக் கலைகளை அறிவியல் முறைகளைக் கற்கவும் விழைகின்றனர். இதன் பொருட்டு ஒற்றர்கள் வர்த்தகர் போலவோ பிறவகையாகவோ தம்மைக் காண்பித்துப் பிறநாடுகட்கு ஒற்றறியச் செல்கின்றனர். தாம் புது அத்லாந்திய நாட்டவர் எனத் தம் நாட்டின் பெயரையும் கூறிக் கொள்ளாது வேறு நாட்டவர் போல் நடிக்கின்றனர். இவ்வாறு மாறு பெயருடனும் மாறுவடிவத் துடனும் இவர்கள் சென்று ஒற்றறிவது வெறும் அறிவுக்காக மட்டுமே. பிற நாட்டு நடையுடை பழக்க வழக்கங்களையறிந்து தம் நாட்டவரின் பொது அறிவைப் பெருக்கவும் பிறநாட்டில் வளரும் கலைகளைக் கற்றுத்

2. Encyclopaedia Brittanica, Vol II, Harrington James

தம் நாட்டில் பரப்பவும் பிறர் அறிந்த அறிவியலுண்மைகளைத் தாம் ஆய்ந்தறிந்து தம்நாட்டுக் களிக்கவுமே. எந்நாட்டுடனும் போர் தொடுப்பதையோ எவரின் பொருளையேனும் கவர்வதையோ பிற நாடுகளை எவ்வகையினும் தம் நாட்டுக்குக் கீழ்ப்படுத்துவதையோ பிறரைத் தம் நன்மைக்காகப் பயன்படுத்திக் கொள்வதையோ அவர்கள் நோக்கமாகக் கொள்ளவில்லை. இந்நூலில் பிற நாடுகட்கே ஒற்றர்கள் செல்லுகின்றனர். வள்ளுவரோ வினைசெய்வார், தம் சுற்றம், வேண்டாதார் என அனைவரையும் ஒற்றர் ஆராய்தல் வேண்டுமென்றார், வினை செய்வோரும் சுற்றத்தாரும் கூடத் தவறு செய்தல் கூடும் என எண்ணியதனாலேயே. ஒற்றரும் தவறு செய்தல் கூடும் அல்லது தவறுபடச் சொல்லுதல் கூடும் என எண்ணி ஒற்றரையும் ஒற்றரால் ஆய்தல் வேண்டும் என்றார். ஓரளவு ஒருவரில் ஒருவர் நம்பிக்கையற்ற நிலையையே வள்ளுவரின் ஒற்றாடல் காட்டுகிறது. புது அத்லாந்திய நாடோ ஒரு கற்பனை நாடு. வள்ளுவர் ஒரு கற்பனை நாட்டைக் கூறவில்லை. நாட்டில் இருக்கின்ற நிலைமையையே கூறினர்.

அமைச்சு என்னும் அதிகாரத்தில் ஒன்று முதல் எட்டு வரையுள்ள குறள்கள் சிறந்த அமைச்சரின் இலக்கணத்தையே கூறுகின்றன. பின்னிரு குறள்களோ அமைச்சரில் ஆகாதோரைக் குறித்துக் கூறுகின்றன. பக்கலிருந்து தீங்கு நினைக்கும் அமைச்சனை விடப் பகைவரே எழுபது கோடி மேலானவர் என்றும் திறமையில்லாதவர் செயலை நன்கு சூழ்ந்தும் செய்து முடிக்க இயலாதவராயிருப்பர் எனவும் கூறப்படுகிறது. திறமையற்ற அமைச்சரும் உண்மையற்றோராய் அரசனுக்குத் தீங்கிழைக்கக் கூடியவரும் இருப்பர் என்பதை ஆசிரியர் நன்குணர்ந்தார்.

வினைத்தூய்மை என்னும் அதிகாரம் சிறந்த அமைச்சர்க்கு இருக்க வேண்டிய குணநலன்களையே கூறுகிறது. ஆயினும் உயர்ந்த பதவியில் இருப்போரும் தன்னலங்கருதியோ பொருள் வருவாய் கருதியோ தவறு செய்தல் கூடும், அவ்வாறு தவறு செய்வோரும் உளர் என்பது கருதியே வள்ளுவர்,

> பழிமலைந் தெய்திய ஆக்கத்தின் சான்றோர்
> கழிநல் குரவே தலை (657)

எனவும்

> கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்
> முடிந்தாலும் பீழை தரும் (658)

எனவும் கூறினர்.

தூது என்னும் அதிகாரத்தில் சிறந்த தூதரின் இலக்கணமே கூறப்படுகிறது. இறுதி பயப்பினும் அஞ்சாது இறைவர்க்கு உறுதி பயக்கும் தூதுவர் இலக்கியல் தூதுவரே. மன்னரைச் சேர்ந் தொழுகல், குறிப்பறிதல் என்பன உயர்ந்தோரிலக்கணங்களே. ஆனல் அவையறிதல் என்னும் அதிகாரம் கல்வியும் குணச்சிறப்பும் பொருந்திய நல்லோரவையும் புல்லியோரவையும் உண்டு என்பதைக் காட்டுகிறது. இரண்டும் இருப்பதனல்தானே அவையை ஆராய்ந்து அறிய வேண்டுவது அவசியமாகிறது.

புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார் (719)

அங்கணத்துள் உக்க அமிழ்தற்ருல் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல் (720)

என்னும் இரு குறள்களும் புல்லவையும் உண்டு என்பதைத் தெளிவாகக் காட்டும்.

இன்னும் அவையஞ்சாமையின் முதலைந்து குறள்களும் அவையஞ்சாதோரின் சிறப்பைக் கூறினும் பின்னைந்து குறள்கள் அவையஞ்சுவோரின் சிறப்பின்மையைக் கூறின. நன்மையும் தீமையும் திறமையும் திறமையின்மையும் ஆகிய பல இயல்புகளும் உலகில் உள என்பதைக் காட்டிச் செல்வதே வள்ளுவரின் இயல்பு.

படை என்னும் அதிகாரத்துள்ளும் பல குறள்கள் சிறந்த படை வீரரின் இயல்பைக் காட்டுகின்றன. ஆயினும்,

ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும் (763)

என்ற குறள் வீரமில்லாது வெறும் ஆர்ப்பாட்டம் செய்யும் படை வீரரும் இருப்பர் என்பதைக் காட்டுகிறது.

நட்பு என்னும் அதிகாரத்தில் உள்ள குறள்கள் பல இலக்கியல் நட்பையே (an ideal friendship) காட்டுகின்றன. ஆயினும் இங்கும் ஆசிரியர்,

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு (782)

என வளர்பிறைபோல் வளரும் அறிவுடையோர் நட்பின் இயல்பையும் தேய்பிறைபோல்தேயும் பேதையர் நட்பின் இயல்பையும் ஒருங்கு

கூறினர். இரண்டும் உலகில் உண்டு எனவே காட்டினர். ஓர் இலக்கியல் சமுதாயத்தைப் பற்றிக் கூறுங்கால் நீநட்பு, கூடா நட்பு என்னும் தலைப்புக்களே வேண்டியதில்லை. ஏனெனில் அச்சமுதாயத்தில் யாவரும் நல்லவராயும் பொருந்தும் நட்பை மேற்கொள்ள வல்லவராயும் இருப்பரே. ஆனால் இவ்வுலகிலோ இடித்துரைத்து நன்னெறிப் படுத்துவோரும் அகநகநட்போரும் இடுக்கண் களைவோரும் களைதல் இயலாக்காலும் அழிவின்கண் தாமும் அல்லலுழப்போரு மாய நல்ல நண்பரும் இருப்பர். அதே அமையத்தில் பெறுவது சீர் தூக்கும் நண்பரும் கெடுங்காலைக் கைவிடுவோரும் மனைக் கெழீஇ மன்றில் பழிப்போருமாகிய பலவகை ஆகாத நண்பரும் இருப்பர். இரண்டையுமே குறள் கூறுகின்றது.

திருக்குறள் ஓர் இலக்கியல் சமுதாயத்தைக் குறிக்கும் நூலாக இருப்பின் பேதைமை புல்லறிவாண்மை என்னும் அதிகாரங்களும் பொருந்-துவனவல்ல. அச்சமுதாயத்தில் பேதையரும் புல்லறிவாளரும் இரார். ஆனால் உலகில் அத்தகையோரும் உளர் என்பதை யெண்ணியே வள்ளுவர் அவரியல்பையும் கூறினர்.

இகல் என்னும் அதிகாரம் போரை விரும்பாத ஓர் இலக்கியல் நாட்டையும் அரசனையுமே காட்டுகிறது. ஆயினும் 'பகைமாட்சி' 'பகைத்திறந்தெரிதல்' என்னும் அதிகாரங்களோ யாரிடம் போர் தொடுக்-கலாம் யாரிடம் போர் தொடுக்கலாகாது என்பதைக் கூறுகின்றனவே. போர் விரும்பத்தக்கதன்று எனினும் சில சமயங்களில் நல்லரசர்களும் நாட்டின் பாதுகாப்புக்காகப் போரில் ஈடுபடவேண்டிய சூழ்நிலை ஏற்படுதல் கூடும் என எண்ணியே வள்ளுவர் இவற்றை எழுதினராதல் வேண்டும். இது முன்பும் குறிப்பிடப்பட்டது.

ஓர் இலக்கியல் நாட்டில் போர் நிகழுமா என்பதே ஐயத்துக் குரியது. ஆயினும் ஓர் இலக்கியல் நாட்டின்மேல் அவ்வியல் சாராத பிற நாட்டினர் படையெடுத்து வருவாராயின் முன்னவர் தம் நாட்டைக் காக்கப் போரில் ஈடுபட வேண்டியவரே. பிளேட்டோவும் தம் நூலில் இத்தகையதொரு நிலைமையையெண்ணி அப்போது அவர் செய்ய வேண்டியதுயாது என்பதை ஆய்ந்தார்.[3] இலக்கியல் நாட்டில் பிற நாட்டுடன் போர் நிகழினும் நிகழும். உட்பகை இருக்குமா? இருப்பதற்கிடமில்லை. குறளோ உட்பகையைக் குறித்தும் கூறுகிறது. வள்ளுவர் தாமே ஒரு நன்னாட்டின் இயல்பைக் கூறுங்கால் பாழ்

3. Plato, The Republic (trans. John Llewelyn Davies and David James Vaughan), Macmillan and Co., 1970, P 120

செய்யும் உட்பகை சேராதியல்வதே நாடு என்றார். ஆயினும் பகையைக் குறித்துக் கூறுங்கால் உட்பகை என்ற தலைப்பிலும் பத்துக் குறள்களை எழுதினர். உட்பகை இல்லாதிருப்பதே விரும்பத்தக்க நிலைமையாகும். ஆனால் விரும்பத்தக்க நிலைமை நாட்டில் எப்போதும் நிலவுவதில்லை. உட்பகை இருத்தல் கூடும். கேள் போல் பகைவரும் இருப்பர். ஆகவே அரசரும் பிறரும் விழிப்பாக இருந்து எட்பகவு அன்ன சிறிய உட்பகை தோன்றினும் அதை நீக்கித் தம்மைக் காத்துக் கொள்ளல் வேண்டும் என்றார்.

வரைவின் மகளிர், கள்ளுண்ணாமை, சூது என்னும் அதிகாரங்களும் ஓர் இலக்கியல் சமுதாயத்தைக் கூறும் நூலில் இடம் பெறா. ஏனெனில் இவை அச்சமுதாயத்தில் இயல்பாகவே இரா. வள்ளுவர் காலத்துத் தமிழ் நாட்டில் இத்தீமைகள் இருந்தன. ஆகவே அவர் இவற்றைக் குறித்து எழுத வேண்டியதாயிற்று.

> கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
> உள்ளான்கொல் உண்டதன் சோர்வு (930)

என்ற குறளைப் பார்க்கும் போது கள்ளுண்டு களித்துத்திரிபவர்களை வள்ளுவர் தாமே நேரில் கண்டிருக்கிறார், தாம் கண்டதையெண்ணியே இவ்வாறு எழுதியிருக்கிறார் எனத் தோன்றும். போதையில் உளறித் திரிபவனைப் பார்த்தபோது, 'வழக்கமாகக் கள்ளுண்பவன் உண்ணாத நேரத்தில் இத்தகைய பிறனொருவனைக் கண்டால் தானும் கள்ளுண்ட பின் இந்நிலையில் தானே இருப்பான் என்பதை எண்ணிப்பார்க்க-மாட்டானோ? எண்ணினால் அத்தகைய தாழ்நிலைக்குத் தன்னைக் கொண்டு வரும் கள்ளை விட்டு விடுவானே' எனச் சிந்தித்துப் பின் எழுதினர் போலும். சமுதாயத்தில் உள்ள பலகுறைகளையும் கண்டு ஆழ்ந்து சிந்தித்தே வள்ளுவர் தம் நூலை எழுதினர். சூது என்னும் பத்தில் கவறு, ஆயம், கழகம் என்னும் சொற்களை அவர் பயன்படுத்துவதும் சூதாட்டத்தைக் குறித்து அவர் நன்கு அறிந்திருந்தார் என்பதைக் காட்டும். 'உருள் ஆயம் ஓவாது கூறின்' (933) என்ற தொடரும் சூதாட்டத்தில் ஈடுபடுபவர் கவறு விழுந்த இலக்கத்தை எடுத்துச் சொல்லிச் சொல்லி ஆடுதலைப் பார்த்தே ஆசிரியர் எழுதினர், என எண்ணச் செய்யும். இன்னும் 'இழத்தொறும் காதலிக்கும் சூது' (940) என்பதனால் சூதில் ஈடுபட்டோரின் மன நிலையையும் (the psychology of the players) அவர் நன்கு உணர்ந்திருந்தார் என்பதைக் காட்டும். வள்ளுவரின் உள்ளத்தில் உயர் இலட்சியங்கள் இருந்தன. ஆனால் அதே சமயத்தில் உலகில் உள்ள தீமைகளையும் தீமையின் ஆற்றலையும்கூட அவர் தெளிவாக அறிந்தேயிருந்தார்.

மருந்து என்னும் பத்தில் அளவாக உண்ணுதலைப் பல குறள்களில் வள்ளுவர் வற்புறுத்தினர். அளவாக உண்ணுதலேயே அவர் விரும்புவார். ஆயினும் அளவுக்கு மீறி உண்பவர்களும் நாட்டில் உளர் என்பதையுணர்ந்தே,

இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய் (946)

என இரண்டையும் கூறினர்.

குடிமை என்னும் அதிகாரம் இலக்கியல் குடிமக்களின் இயல்பையே கூறுகிறது. ஆனல் சமுதாயத்தில் யாவருமே அத்தகையோராயிருப்பர் என்பது வள்ளுவர் கருத்தன்று. நற்குடிப் பிறந்தோர் எனக் கருதப்படுவோர் சிலரின் இயல்பையே இப்பத்தில் ஆசிரியர் கூறினர். பிறரிடம் இக்குணங்கள் இல்லையென்பதே கருத்து. 'இற்பிறந்தார் கண்ணல்லதில்லை' எனவும் சில நல்லியல்புகள் விதந்தோதப் படுகின்றன. நற்குடிப்பிறந்தார் இயல்பு வேறு, பிறரியல்பு வேறு என இங்குப் பிரித்தே காட்டப்படுகிறது. 'நகையீகை இன்சொல் இகழாமை நான்கும் வகையென்ப வாய்மைக் குடிக்கு' (953) என்ற குறள் நற்குடிப் பிறந்தோர் வறியோர் தம்மிடம் வந்தபோது முகமலர்ந்து இன்சொல் கூறி இகழாது ஈகைசெய்வர் என்பதைக் கூறுகிறது. சமூகத்தில் யாவரும் இத் தன்மையர் ஆயின் வறியாரை யாருமே எள்ளார். ஆனல் வள்ளுவர் தாமே 'இல்லாரை எல்லாரும் எள்ளுவர்' என முன்பு கூறினர் (பொருள் செயல்வகை 752). ஆகவே அது பொதுவியல்பு எனவும் இது நற்குடிப்பிறந்தோரின் சிறப்பியல்பு எனவும் கொள்ளுவதே பொருந்தும். பல இயல்புகளும் உலகில் உள என்பதையே குறள் காட்டுகிறது.

பெருமை, பண்புடைமை என்னும் அதிகாரங்களும் அவ்வியல்புகள் உடையாரின் நலத்தையும் இல்லாரின் தீமையையும் அறிவுறுத்துகின்றன.

ஓர் இலக்கியல் சமுதாயத்தைக் கூறும் நூலில் '**நன்றியில் செல்வம்**' என்னும் அதிகாரம் இடம் பெறுது. அச்சமுதாயத்தில் செல்வமனைத்தும் நல்வழியில் பயன்படும். வள்ளுவர் காலத் தமிழ்நாட்டில் செல்வத்தைத் தாமும் பயன்படுத்தாது பிறர்க்கும் அளிக்காது தொழில் வாணிபம் முதலியவற்றில் ஈடுபடுத்தவும் செய்யாது வீணே சேர்த்து வைத்த சிலர் இருந்தமையினலேயே இவ்வதிகாரம் எழுந்தது.

குடி செயல் வகை தங்குடியைத் தாங்குவோரது சிறப்பைக் கூறுகிறது. யாவரும் அத்தகையோராய் இரார் என்பதையும் வள்ளுவர் நன்குணர்ந்தார். ஒரு குடும்பத்தில் ஒருவர் அல்லது சிலரே அத்தகைய பொறுப்புணர்ச்சி யுடையவராயிருப்பர். பிறர் பொறுப்பற்றவராயிருக்கும் சூழ்நிலையிலேயே ஓரிருவர் முன்வந்து பல துன்பங்களையேற்றுக் குடும்பத்தைக் குற்றம் மறைக்க வேண்டியிருக்கிறது. அத்தகைய சிலரின் சிறப்பையே இப்பத்து கூறுகிறது. அவ்வாறு தாம் துன்பத்தையேற்றும் தம் குடியைத் தாங்க முன்வருவோர் யாருமே இல்லாத நிலைமையும் சில குடும்பங்களில் உண்டு என்பதையெண்ணியே வள்ளுவர்,

இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடித்தூன்றும்
நல்லா ளிலாத குடி (1030)

என்றார். தாங்குவோரின்றித் துன்பம் ஏற்படுங்கால் அழியும் குடிகளும் உள.

வள்ளுவர் காலத்துத் தமிழ் நாட்டில் வறியோர் பலர் இருந்தனர். அதை நோக்கியே அவர் நல்குரவு என ஓரதிகாரத்தை எழுதினர். இலக்கியல் சமுதாயத்தில் நல்குரவேயிராதே. கம்பர் கண்ட கோசலை நாட்டில் எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தியிருந்தனர். வள்ளுவர் கண்ட தமிழ் நாட்டிலோ நல்குரவும் இரவும் இருந்தன.

இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது (1041)

எனவும் பின்பு வறியோனொருவனின் கூற்றாக,

இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு (1048)

எனவும் வறுமையின் கொடுமையை வள்ளுவர் கூறும்போது அவர் நாட்டில் வறுமைத் துன்பத்தைக் கண்டு அத்துன்பத்தை நன்குணர்ந்தே எழுதினராதல் வேண்டும். வறியோர் இரத்தலையும் வள்ளுவர் கண்டார். அருளுள்ளம் கொண்ட செல்வர்கள் சிலர் அவர்கட்கு உதவுதலையும் கண்டார். அவ்வாறு உதவவிரும்பாது பொருளை வைத்துக் கொண்டே தம்மிடம் பொருளில்லை யெனக் கரப்பவர்களையும் கண்டார். வள்ளுவர் இரத்தலையே விரும்பமாட்டார்.

இரப்பார் முன் கரத்தலை ஒரு சிறிதும் விரும்பமாட்டார். ஆனால் நாட்டில் இரப்போரும் கரப்போரும் இருந்தனர். ஆகவே,

இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும் (1069)

என இருக்கின்ற நிலைமையை எண்ணி இரங்கிக் கூறினர்.

வள்ளுவர் வேறு சில கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் போலக் கனவுகள் காண்பவர் அல்லர். இலக்கியல் சார்ந்த ஒரு கற்பனை யுலகில் வாழ்ந்தவரல்லர். இந்நிகழுலகில் நின்றே அறத்தைக் கூறியவ ராவர். நன்மையும் தீமையும் செல்வமும் வறுமையும் கல்வி அறிவு பல்வகைத் திறமைகள் உண்மையும் அவையின்மையும் இன்பமும் துன்பமும் யாவும் விரவிய இவ்வுலகில் அறத்தைக் கடைப்பிடிக்க விரும்புவோர்க்கு அறத்தைக் கற்பிப்பதே அவர் நோக்கமாகும்.

## 1. 2. உலக இயல்பை உணர்ந்து கூறல்

உலகில் நல்லாருமுளர் தீயாருமுளர், நன்மையுமுண்டு தீமையுமுண்டு என்பது ஒரு பக்கமிருக்கப் பொதுவாக மக்கள் யாவரிடமும் காணப்படும் சில இயல்புகளும் உள. சில குறைபாடு களும் உள. இவற்றையும் திருக்குறள் நன்குணர்ந்து கூறுகிறது.

வள்ளுவர் அறத்தை வற்புறுத்தினர். உலகில் யாவரும் அறச் செயல்களைச் செய்வதற்கு எப்பொழுதும் ஆவலாக இருப்பதில்லை. தத்தம்நலத்தைத் தேடுவதிலேயே மக்களின் கவனம் செல்கிறது. மறுபிறப்பு வினைத் தொடர்பு ஆகியவற்றை நம்புபவர்களில் கூட (வள்ளுவர் காலத்தில் பொதுவாக மக்கள் பலரும் இக்கருத்துக்களை ஏற்றுக் கொண்டனர்) நாம் வாழ்க்கையில் பிற்காலத்தில் அறம் செய்யலாமெனவோ, இன்னும் அதிகச் செல்வம் சேர்த்தபின் அறம் செய்யலாமெனவோ அறத்தைத் தள்ளிப் போட்டுவிட்டுப் பொருள் தேடுவதிலோ வாழ்க்கையில் நற்பொருள்களை அனுபவிப்பதிலோ நேரத்தைச் செலவிடுதல் பலரின் இயல்பு. இவ்வியல்பை வள்ளுவர் நன்குணர்ந்தார். உணர்ந்தே,

அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை (36)

என்றார்.

வாழ்க்கைத்துணை நலம் எனும் அதிகாரத்தில் வரும் ஒருகுறள்,

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை (59)

என்பது. ஒருவனின் குடும்ப வாழ்க்கை சிறப்பாக அமையாவிடின் அவன் கல்வி, செல்வம் முதலிய பிற நலங்களைப் பெற்றிருப்பினும் பிறர் அவனை மதிக்காது எள்ளுவது இயல்பு. இவ்வியல்பினை உணர்ந்தே வள்ளுவர் அவனுக்கு இகழ்வார் முன் பீடுநடை இல்லை என்றார். இலக்கியல் சமுதாயமாக இருப்பின் யாவருமே புகழ்புரிந்த இல்லை உடையவராக இருப்பர். அவ்வாறன்றி யாராவது ஒருவனின் அக வாழ்க்கையில் குறை இருப்பினும் அது குறித்து யாரும் அவனை இகழார். இலக்கியல் நிலையையன்றிப் பொதுவான இயல்பையே வள்ளுவர் இங்குக் கூறினார்.

தம்மின் வலியார்க்குத் தாம் அஞ்சுதலும் அத்தகையோர் குறைகளைப் பொருட்படுத்தாதிருத்தலும் அத்தகையோர் தமக்குத் தீங்கு செய்யினும் இகழினும் பொறுத்தலும் தம்மின் மெலியாரிடம் குறைகண்டவிடத்து ஒறுக்க முன்வருதலும் உலகில் மாந்தரியல்பு. இவ்வியல்பினை உளத்துட் கொண்டே,

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து (250)

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கால் என் (301)

என்னும் குறள்களை வள்ளுவர் எழுதினர். தன்னை விட மெலியாரைத் தான் நலியச் செல்லுமிடத்து வலியார் தன்னை நலியவருங்கால் தான் அஞ்சி நிற்கும் நிலையை எண்ணுக என்றார். மேலும், யாரிடத்து ஒருவன் தன் சினத்தைக் காண்பிக்கமுடியுமோ அவரிடத்துச் சினத்தைக் காத்தடக்குவதே சிறப்பாம், வலியாரிடத்துச் சினத்தை யடக்கினும் அடக்காவிடினும் ஒன்றே, எவ்விதத்திலும் அவர்க்குத் தீங்கு செய்ய அவனுலாகாதே என்பதை எடுத்துக் காட்டினர்.

இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர் (270)

இக்குறளுக்குப் பல்வாறு பொருள் கூறப்படுகிறது. பழைய உரையாசிரியர்களே பலவாறு பொருள் கூறியுள்ளனர். இலர்

என்பதற்குப் பொருளிலர் என மணக்குடவரும் பரிதியாரும் பொருள் கொண்டனர். அவ்வாறு பொருள் கொள்ளின் சென்ற பிறவியில் தவம் செய்யாதோர் இப்பிறவியில் வறியராகின்றனர், சென்ற பிறவியில் தவம் செய்தோர் இப்பிறவியில் செல்வராக வாழ்கின்றனர் என உரை காணலாம். பரிமேலழகர், 'நுண்ணுணர் வின்மை வறுமை அஃதுடைமை பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்' என்னும் நாலடியார்ச் செய்யுளை மேற்கோளாகக் காட்டி நுண்ணுணர்விலாரே இலர் என்றார். இவ்வாறு பொருள் கொள்ளின் செய்யுள் இம்மைப் பயனையே குறிக்கும். தவம் செய்வோர் சிலரேயாகலான் நுண்ணுணர்வைச் சிலரே பெறுகின்றனர், பலர் தவம் செய்யாதிருப்பதனுல் நுண்ணுணர்வைப் பெருதோராகின்றனர் என்பது பெறப்படும். காலிங்கர், 'இவ்வுலகத்துப் பேரிடர் நீங்கிப் பெரும் பலனுருதார்' அதாவது ஞானத்தை அல்லது வீட்டு நிலையையடையாதாரே இலர் எனப் பொருள் கொண்டார். இதுவும் இம்மைப்பயன் குறித்ததே. நோற்பார் சிலராதலால் சிலரே ஞானத்தை அல்லது வீட்டு நிலையையடைகின்றனர், நோலாதவர் பலர் ஆகையினுல் பலர் அப்பயனையடையாதிருக்கின்றனர் என ஆகும்.

இலர் என்பதற்கு எவ்வாறு பொருள் கொள்ளினும் இவர்களனைவரும் நோலாதவரே இலராவர் எனவும் நோற்பார் உளராவர் எனவுமே கருதினர்.

தற்காலத்தில் சிலர் இக்குறளுக்கு வேருெரு வகையிலும் பொருள் கொள்வர். சமூகத்தில் சிலர் அதிகப் பொருளைத் திரட்டினுல் பிறருக்குப் போதிய பொருள் இல்லாது போகும். அனைவரும் தேவைக்கு மேல் பொருளைத் தேடாதவராகித் தேவை அளவொடு நிறுத்திக் கொள்ளின் அல்லது அதற்குமேல் தேடப்படும் பொருளைப் பிறருக்கு வழங்கின் சமூகத்தில் யாவருக்கும் போதிய பொருள் இருக்கும். ஆனுல் உலகில் அவ்வாறு தேவையளவுடன் பொருள் சேர்ப்பதை நிறுத்தி எளிமையான வாழ்க்கை வாழ்வோர் (நோற்பார்) சிலரே. அவ்வாறன்றித் தேவைக்கு மேல் பொருள்தேட விழைபவரே (நோலாதவர்) பலராவர். ஆகவே நாட்டில் பலர் வறுமையினுல் வாட நேரிடுகிறது. இக்கருத்துப்படி நோலாதவர் இலராவதில்லை. சமூகத்தில் பலர் நோலாதவராக இருப்பதனுல் வேறுபலர் இலராகின்றனர்.[4]

4. அரங்கசுவாமி, ஆர்., 'A Comparative Study of the Ideas of Tiruvalluvar and Mahatma Gandhi on the Economic Order', பக். 13, வள்ளுவர் வகுத்த பொருளியல்

எவ்வாறு பொருள் கொள்ளினும் இக்குறள் உலகில் உள்ள நிலையை நன்கு எடுத்துக் காட்டுவதே. உலகில் செல்வர் சிலரே, வறியாரே பலர். நுண்ணுணர்வுடையோர் சிலரே, அது இல்லாதாரே பலர். ஞானத்தையும் வீட்டையும் விழைபவர் சிலரே, அதைக் குறித்துக் கவலையுருதவரே பலர். நோற்பார் என்பதற்குத் துறவியாகித் தவம் புரிவோர் எனப் பொருள் கொள்ளினும் சமுதாயத்தில் இணைந்து வாழ்ந்தும் தம் நலம் பேணுது பிறர் நலத்துக்காக உழைப்பவர் எனப் பொருள் கொள்ளினும் தம் தேவைகளைக் குறைத்துக் கொண்டு எளிமையாக வாழ்ந்து பிறர்க்களிப்பவர் எனப் பொருள் கொள்ளினும் அவ்வாறு செய்வோரும் சிலரே யாவர். அவ்வாறு செய்யாதோரே பலர். இக்குறளும் ஓர் இலக்கியல் நிலையையன்றி உலகில் உள்ள நிலையையே கூறுகிறது.

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல் (664)

சொல்லுவது யாவர்க்கும் எளிது. நான் இவ்வாறு செய்வேன் எனச் சொல்வதாயினும் நீ இவ்வாறு செய் எனப் பிறர்க்கு அறிவுரை கூறுவதாயினும் அது எளிதே. சொல்லியவண்ணம் செய்து முடித்தல் அரிது. பலரும் பல சூழ்நிலைகளிலும் வெளிப்படுத்தும் ஓர் இயல்பே இது. மானிட இயல்பை நன்குணர்ந்து கூறும் நீதி மொழி இதை விட எது?

அரசர்கள் தம் வலியையும் தக்க காலத்தையும் இடத்தையும் ஆராய்ந்தே எச்செயலையும் தொடங்க வேண்டுமென வள்ளுவர் வற்புறுத்திக் கூறினர். அவ்வாறு கூறும்போது தம் வலியின் அளவையறியாது தம் வலிக்கு மேற்பட்ட செயல்களைச் செய்ய நினைத்து அழிந்தவர்கள் பலர் எனவும் எடுத்துரைத்தார்.

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தி னூக்கி
இடைக்கண் முறிந்தார் பலர் (473)

இவ்வாறே பிற இடத்தும் இன்ன இன்ன தவறுகள் அரசர்களிடமோ அமைச்சர்களிடமோ காணப்படலாகாது என விளக்குங்கால் இடையிடையே இத்தவறுகளைச் செய்தவர்கள் அல்லது செய்பவர்கள் பலர் உளர் என எடுத்துக் கூறிச் செல்வதும் திருக்குறளின் இயல்பாகும்.

இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து (539)

போரில் வெற்றியடைந்த பின் அல்லது தம்நாட்டில் செல்வமும் வளமும் பெருகியிருக்கும் காலத்து அரசர்கள் (அல்லது நாட்டை யாளும் பிறர்) தம் வலிகுறித்து மகிழ்ந்து பாதுகாப்பில் போதிய கவனமெடுத்துக் கொள்ளாது கவலையற்றிருத்தல் இயல்பாகும். அரசர்கள் அவ்வாறு மகிழ்ச்சியினுல் சோர்வு மீதூரப் பெற்றுத் தம் கடமைகளில் ஒன்ருகிய தற்பாதுகாப்பை அல்லது நாட்டின் பாது காப்பை மறத்தல் ஆகாது எனக் கூறப் புகுந்த வள்ளுவர், "பாது காவாது இகழ்ந்து கெட்டவர்கள் பலர் உளர். தம் வலியைக் குறித்து மகிழ்ந்திருக்கும் அரசர் அவ்வாறு கெட்டவர்களையெண்ணித் தாமும் அத்தவற்றைச் செய்தலினின்றும் தவிர்வார்களாக" என்ருர்.

அமைச்சர் முதலியோரை அரசன் எவ்வெவ் வகையில் ஆராய்ந்து தெளிந்து பின் பணியில் அமர்த்த வேண்டும் என்பதை வள்ளுவர் கூறினர். அவ்வாறு ஆராய்ந்து அறிவும் உண்மையும் நற்பண்புமுடையவர் என அரசரால் தெளியப்பட்டவரும் கூட உயர் நிலையில் அமர்த்தப்பட்ட பின் அப்பண்புகளினின்றும் வேறுபட்டுப் பல தவறுகளைச் செய்தல் கூடும் என்பதையும் வள்ளுவர் எடுத் துரைக்க மறக்கவில்லை.

> எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
> வேருகும் மாந்தர் பலர் (514)

"கட்டியங்காரன் போல அரச இன்பத்தினை எண்ணி விகாரப்படுவ தல்லது, அதனைக் குற்றமென்றறிந்து தம்மியல்பின் நிற்பார் அரிய ராகலின் வேருகும் மாந்தர் பலர் என்ருர்" என்பது பரிமேலழகர் இக்குறளுக்குக் கூறிய விளக்கமாகும். மனித இயல்பை நன்குணர்ந்து எவ்வெந்நிலைமையில் எவ்வெத்தவறுகளைச் செய்தல் இயல்பு என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது குறள்.

செல்வத்தையும் வறுமையையும் குறித்து மக்களின் மனப் பான்மை யாது? செல்வர்க்கு மதிப்பளிப்பதும் வறியோரை இகழ்வதும் உலகில் பெரும்பாலோர் இயல்பு. இதையும் தான் குறள் எடுத்துச் சொல்கிறது.

> இல்லாரை யெல்லாரும் எள்ளுவர் செல்வரை
> யெல்லாரும் செய்வர் சிறப்பு (752)

வறியோர் கல்வியுடையோராயிருந்து நல்ல பொருள்களை ஆழ உணர்ந்து எடுத்துச் சொல்லினும் அவர் சொல் பிறரால் ஏற்றுக் கொள்ளப்படாது வீணுகும்.

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும் (1046)

வறியோர் பிறரால் இகழப்படுவது மட்டுமன்றி அவர் உறவோரும் கூட அவரை விட்டு விலகவே முயல்வர். வறியவ ெனாருவனை அவனைப் பெற்ற தாயும் பிறன் போல நோக்குவாள். மகன் என்னும் பாசத்தையும் மறந்து விடுவாள் என்றார் வள்ளுவர். இக்குறள்களனைத்தும் உலக இயல்பைக் காட்டுகின்றனவேயன்றி ஓர் இலக்கியல் நிலையை (ideal conditions) காட்டவில்லை. இலக்கியல் சமுதாயத்தில் மேற் சொன்ன தவறுகளை யாரும் செய்யார். அச் சமுதாயத்தில் வறியவர் இரார். ஒரு கால் வறியவர் இருப்பினும் அவரை யாரும் இகழார். அங்குச் செல்வர்க்கும் வறியவர்க்கும் ஒரே வித மதிப்பே இருக்கும். வறியவர் அறிவுடையோராய் நற்பொருளை உணர்ந்து கூறின் அவரை யாவரும் நன்கு மதித்து அவர் சொல்லைக் கேட்டுப் பயனடைவர். மற்றும் வறியவர் தம் உறவினரால் நன்கு ஆதரிக்கப்படுவர். வறுமையுற்ற மகனிடத்துத் தாய் மாறாத அன்பு பாராட்டுவாள். இலக்கியல் சமுதாயமாக இருப்பின் அவ்வாறல்லவா அதன் நிலை இருக்கும்?

ஒருவன் செல்வத்தையிழந்து வறுமையுற நேரினும் நீண்ட நாள் நோயினால் துன்புறினும் பிறவகையில் சமுதாயத்தில் தன் செல்வாக்கையிழப்பினும் நண்பரும் உறவினரும் முன்பு போல் நெருங்கியுறவாடாது ஓரளவு விலகிக் கொள்ளுதலே இயல்பு. அவ்வாறு விலகாது துன்பத்திலும் ஒட்டி நிற்பார் வெகு சிலரே. இதையும் எண்ணியே வள்ளுவர்,

கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல் (796)

என்றார். எவ்வளவு நன்றாக மக்கள் இயல்பை எடுத்துரைக்கிறது குறள்?

இவ்வுலக வாழ்வில் புதிராக இருக்கும் சில தன்மைகளையே ஊழ் என்னும் அதிகாரம் கூறுகிறது. ஒருவர் பல நுண்ணிய நூல்களைக் கற்பினும் ஒரமையம் அக்கல்வி ஏற்ற இடத்தில் கைகொடுக்காமல் போகிறது. அறிவுடையோர் தம் அறிவினால் செல்வத்தைத் தேடிக் கொள்வர் அறிவிலாரே வறியவராக இருப்பர் என மக்கள் பொதுவாக எதிர்பார்ப்பதற்குமாறாகத் தெள்ளியோர் பலர் செல்வமற்றவராக

இருக்கின்றனர். தெள்ளிய அறிவில்லாதார் பலர் திருவையடைகின்றனர். ஒருவர்க்குச் செல்வம் தேடுவதற்குரிய வாய்ப்புக்கள் இருந்தும் அவை பயன்படாமல் போகின்றன. மற்றெருவர்க்கு அவ்வாய்ப்புக்கள் இல்லாமலும் செல்வம் திரள்கிறது. ஒருவர் செல்வத்தை வருந்திக் காத்தும் அதை இழக்கிருர். மற்றெருவர் காவாதிருந்தும் அவர் செல்வம் அழியாதிருக்கிறது. கோடி செல்வம் தொகுத்தவரும் நோயினுலோ பிற காரணங்களினுலோ அதைத் துய்க்க இயலாதவராக இருக்கின்றனர்.

இவையனைத்தும் ஊழின் செயலாகும் என்ருர் வள்ளுவர். அது அவர் கருத்து. ஊழினுல் நிகழினும் பிறவற்ருல் நிகழினும் இத்தன்மைகளும் பொதுவாக உலக வாழ்வில் காணப்படுந்தன்மைகளேயன்றி ஓர் இலக்கியல் நிலையை (ideal conditions) காட்டுவனல்ல.

ஓர் இலக்கியல் சமுதாயத்தில் அல்லது நாட்டில் யாவருக்கும் அசைவின்மையே தோன்றும், மடி தோன்ருது. யாவரின் அறிவும் அகன்று வளரும், யாரும் பேதைப் படுத்தப்படார். கற்றது பயனற்றுப் போகாமல் காலத்தில் கைகொடுக்கும். யாவரும் திருவும் தெள்ளிய அறிவும் ஒருங்குடையராயிருப்பர். யாவர்க்கும் யாவையும் செல்வம் செயற்கு நல்லனவாயிருக்கும். பரியினும் செல்வம் அழியும் நிலை யார்க்குமே இராது. இலக்கியல் சமுதாயத்தில் கோடி தொகுத்தும் துய்க்க முடியாத ஒரு நிலையிருக்குமா? அங்குத் துப்புரவில்லார் இரார். அன்ருங்கால் அல்லலுழக்கும் நிலையும் இராது.

பல குறைகள் நிறைந்த எதிர்பார்த்தது நிகழாத பலவகைகளில் ஒரு புதிராக விளங்குகின்ற இவ்வுலக வாழ்க்கையின் இயல்பையே காட்டுகிறது ஊழ். எல்லா வகையிலும் உலக இயல்பை நன்கெடுத்துரைக்கிறது குறள்.

## 1.3. எச்சரிக்கை

குறள் பல உயரறங்களைக் கூறுகிறது. ஆயினும் குறைகள் மலிந்த இவ்வுலகிலுள்ள உண்மை நிலையையும் எடுத்துரைக்கிறது. குறளின் சில பகுதிகள் ஓர் இல்லத்தின் அல்லது தவத்தின் அல்லது அரசின் இலக்கியல் நிலையைக் காட்டுகின்றன. ஆனுல் அவ்வவ்விடங்களிலும் ஒவ்வோர் எச்சரிக்கையை யமைத்துச் செல்கிருர் ஆசிரியர்.

இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணை நலம் என்னும் அதிகாரங்கள் இரண்டும் சிறந்த இல்லங்களின் இயல்பையே பெரிதும் காட்டுகின்றன. இல்லறத்தோர் கடைப்பிடிக்க வேண்டிய பல நல்லறங்கள் இங்குக் குறிப்பிடப் படுகின்றன. ஆனால் இல்வாழ்க்கை எப்போது சிறப்பாக அமையும்? இல்வாழ்க்கையில் இணையும் இருவரும் அறத்தைச் செய்வதற்கு ஏற்ற மன நலமும் அறிவும் திறமையும் உடையவராயிருக்கும் போதே.

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல் (52)

ஒருவனது இல்வாழ்க்கை எத்துணைச் சிறப்புடையதாக இருப்பினும் அவன் மனைவியிடத்து மனைத்தக்க மாண்பு இல்லையாயின் அது பயனில்லாததாகும் என்றார் ஆசிரியர்.

பின் அறங்களைத் தனித்தனியே கூறும் போதும் இடையிடையே எச்சரிக்கை அமைகிறது. ஒருவன் பல நல்லறங்களைச் செய்ய முயலும் போதும் அவன் வாயினின்றும் ஒரு தீய சொல் பிறக்குமாயின் அவையாவும் நன்மையற்றனவாகி விடும்.

ஒன்றானும் தீச்சொற் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும் (128)

இல்லறத்தில் ஈடுபட்டு அறத்தைச் செய்ய முயலும்போதும் அவ்வறம் பழுது படக் கூடும் குடும்பத்தில் உள்ள பிறரின் தடையால், அன்பின்மையால், திறமையின்மையால் அல்லது ஒரொருகால் தானே செய்யுந் தவறுகளால்.

துறவறத்தின் தொடக்கத்தில் வள்ளுவர் அருளின் மேன்மையையும் தவத்தின் சிறப்பையும் எடுத்துரைத்தார். இவ்வாறு உயர் இலட்சியங்களைக் கூறும் பொழுதே தவம் என்னும் பத்தின் இறுதியிலேயே 'நோற்பார் சிலர் பலர் நோலாதவர்' என்றார். வேண்டிய வேண்டியாங்கெய்தச் செய்யும் சிறப்பையுடைய அத்தவத்தையும் செய்பவர் சிலரே. தவத்திற்கு அடுத்தபடியமைவது கூடாவொழுக்கம் என்னும் அதிகாரம். தவவேடம் பூண்டும் தவநெறியில் செல்லாத போலித்துறவிகளின் இயல்பைக் கூறுவது இது. அடுத்து வரும் அதிகாரங்கள் துறவறத்திற்குத் தடையாக இருக்கும் களவு, வெகுளி, இன்னாசெய்தல், அவா முதலியவற்றை விலக்குவன.

துறவறத்தில் ஈடுபட்டு ஆன்மீக உயர்வையடைய முயலும் போதும் அவ்வறமும் பழுதுபடக் கூடும் போலித்துறவிகளின் கூட்டுறவால் அல்லது தானே ஓரமையம் வெகுளி, அவா முதலியவற்றிற்கு இடம் கொடுப்பதால்.

தீமை, குற்றம், குறை உலகில் இல்லாமலில்லை. தன்னிலும் குறைகள் இருத்தல் கூடும். பிறர் மூலமாகவும் குற்றங்கள் நிகழ்தல் கூடும். அறத்தைச் செய்பவன் இவற்றையுணர்ந்து காத்து எச்சரிக்கை யுடனேயே அறத்தில் முயலுதல் வேண்டும். இந்நிலையையே குறள் உணர்த்துகிறது.

பொருட்பாலிலும் இத்தன்மை மறையவில்லை. நாடு என்னும் அதிகாரம் பலவகைகளிலும் இயற்கையமைப்பிலும், மக்களின் இயல்பிலும், இன்ப வளத்திலும், நோய்பகையின்மையிலும் ஓர் இலக்கியல் நாட்டின் இயல்பையே கூறுகிறது. இப்பத்தையும்

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு (740)

என ஓர் எச்சரிக்கையுடனேயே முடித்தார் வள்ளுவர். நாடுபல நல்ல வளங்களையும் செல்வச் செழிப்பையும் தக்க குடிகளையும் உடையதாயினும் வேந்தனொடு அமைவில்லாத நாடு பயனற்றது என்றார். சிறந்த நாட்டையுடையவனாக இருப்பினும் அரசன் தான் நற்பண்புடையவனாக வாழ்கின்றானா குடிமக்கள்பால் அன்புடையவனாகவும் குடிகள் தன்னிடம் அன்பு செலுத்தத்தக்க முறையில் ஆள்பவனாகவும் இருக்கின்றானா என்பதையும் கவனித்து எச்சரிக்கையுடனேயே நடந்து கொள்ளுதல் வேண்டும். நாட்டில் பலவளங்களிருப்பினும் குடிகளுக்கும் அரசனுக்கும் நல்லுறவு இல்லாத ஒரு நிலைமை ஏற்படுதல் கூடும். அந்நிலைமை ஏற்படில் அவ்வளங்களால் பயன் இன்றாம்.

அரண் என்னும் அதிகாரம் ஒரு சிறந்த அரணின் இலக்கணத் தைக் கூறுகிறது. பலவிதப் பாதுகாப்பும் அமைந்ததாய் உணவு முதலிய வேண்டிய பொருள்களனைத்தும் உள்ளே உள்ளதாய்க் கீழறுக்கப்படாத நல்ல வீரர்களால் காக்கப்படும் அரணையே இங்குக் காண்கிறோம். இப்பத்தும் ஒரு எச்சரிக்கையுடனேயே முடிகிறது.

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்ல தரண் (750)

அரண் பல நல்ல இயல்புகளையுடையதேயெனினும் திறமையற்றவர் கையில் பயனற்றதாய் விடும். நல்ல நாடு பண்பற்ற அரசனால் கெடுதல் கூடும். நல்ல அரண் அதைக் காக்கும் திறமையற்ற படைத்தலைவனால் கெடுதல் கூடும்.

படைமாட்சி என்னும் அதிகாரத்துள்ளும் பல குறள்கள் சிறந்த படையின் இயல்பையே காட்டுகின்றன. இங்கும் இறுதியிரண்டு குறள்களும் எச்சரிக்கையாகவே அமைகின்றன. அரசன் படை வீரர்க்குப் போதிய பொருள் கொடாதிருத்தல் கூடும். அதனால் பல படை வீரர் நீங்கப் படை சிறிதாதல் கூடும். படையில் சிறந்தோர்க்குச் சிறப்புச் செய்யாது இழிந்தோர்க்குச் சிறப்பளித்து அரசன் வேற்றுமை காண்பிப்பினும் படை சிறுமையடையும். அரசன் செயல்கள் வீரர்களால் விரும்பத்தகாதனவாய் இருந்தால் அவர்கள் அவனிடம் அன்பில்லாதவர்களாதல் கூடும். இத்தகைய குறைகள் இல்லாதிருப்பினே படை வெல்லும் என்றார். படை பெரும்வீரர் தொகையையுடையதெனினும் படைத் தலைவர்கள் திறமையற்றவர்களாக இருப்பினும் படை வெற்றி பெறுதல் இல்லை. நல்ல படையும் அரசனிடம் அல்லது தலைவர்களிடமுள்ள குறைகளால் கெடுதல் கூடும்.

அரசியலிலும் அனைத்தும் ஓர் இலக்கியல் நிலையில் இயங்கும் என எதிர்பார்க்காது 'தீமை எங்குப் புகுதல் கூடும்? ஒவ்வொரு உறுப்பிலும் எத்தகைய குறைகள் இருத்தல் கூடும்?' என விழிப்புடன் ஆய்ந்து எச்சரிக்கையுடனேயே அரசனும் பிறரும் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

## 1.4. அவரவர்க்குரிய அறத்தைக் கூறல்

வள்ளுவர் ஓர் இலக்கியல் நாட்டைச் சித்திரித்துக் காட்டுவதையன்றித் தனிப்பட்டோர்க்குரிய அறத்தைக் கூறுவதையே தம் நூலின் நோக்கமாகக் கொண்டார் என்பது முன்பே குறிப்பிடப்பட்டது. அவர் அறங் கூறும் முறையின் சில இயல்புகளை ஆயுங்கால் இது இன்னும் தெளிவாகும்.

பொருட்பாலில் **தெரிந்து தெளிதல் தெரிந்து வினையாடல்** என்னும் அதிகாரங்கள் அரசன் அமைச்சர், அரசியல் அலுவலர் ஆகியோரை எவ்விதம் ஆய்ந்து தெரிந்தெடுத்தல் வேண்டும் தெரிந்தெடுத்த பின்னும் அலுவலர்தம் செயல்களை அவன் எவ்விதம் நன்கு கவனித்தல் வேண்டும் என்பவற்றை எடுத்துரைக்கின்றன. நன்கு

ஆய்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்டவரும் உயர்நிலையில் அமர்த்தப் பட்டுப் பல பொறுப்புக்கள் அளிக்கப்பட்ட பின் அந்நிலைமையால் வேறுபடக் கூடும். அரசன் அது குறித்துக் கவனமுள்ளவன் ஆதல் வேண்டும்; தன் கீழ்ப்பணி செய்வோரின் செயல்களை அரசன் நாடோறும் ஆய்தல் வேண்டும். இவ்வாறெல்லாம் வள்ளுவர் அரசனுக்கு அறிவுரை கூறினர்.

அமைச்சர் கடமைகளைக் கூறுங்கால் குடிகள் திறத்தும் அரசனின் திறத்தும் அவர்கட்குரிய கடமைகளை எடுத்துச் சொல்லி அரசனுக்கு நீதியை எடுத்துக் கூறும் பொறுப்பையும் உணர்த்தினர்.

அறிகொன் றறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன் (638)

அரசன் தானும் அறிவற்றவனாக இருந்து பிறர் கூறும் நல்லறிவுரை களையும் கேளாது நீக்குபவனாக இருப்பினும் அது கருதி வாளா இராது அவனுக்கு உறுதி தரத்தக்க நல்நீதிகளை எடுத்துரைப்பது அருகி லிருக்கும் அமைச்சனின் கடனாகும் என்றார்.

'அமைச்சர் முதலியோர் தவறு செய்தல் கூடும் அவர் தவறு செய்யினும் நீ ஆய்ந்து திருத்து' என அரசனுக்குக் கூறிய ஆசிரியர் 'அரசன் அறிவற்றவனாகவும் நீதியைக் கேட்க விரும்பாதவனாகவும் இருப்பினும் நீதியை எடுத்துச் சொல்' என அமைச்சனை நோக்கிக் கூறினர். படையைக் குறித்துக் கூறுங்கால்,

சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை (769)

என்றார். இது அரசனுக்குக் கூறப்பட்ட அறிவுரையே அரசன் படை வீரர் படையை விட்டு நீங்குவதனால் படை சிறிதாகாமலும் தான் பொருள் கொடாமையினால் வறுமையுறாமலும் தன்னிடத்துப் பகை வீரர்க்கு வெறுப்பு ஏற்படாமலும் பாதுகாத்துக் கொள்வானேயாகில் படை வெல்லும் என்பதாம். படைச் செருக்கில் வரும் ஒரு குறள்,

உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினுச்சீர் குன்ற லிலர் (778)

என்பது. போர் நேரின் தம் உயிர்க்கும் அஞ்சாத மறவர் தாம் அரசனால் செறப்பட்டாராயினும் அது பொருட்டு வீரம் குன்றார், கடமையில் தவறார். இக்குறளுக்குப் பரிதியார் கூறும் பொருள் பின்

வருமாறு "அரசர்க்கு ஒரு தறுவாயான இடத்திலே தன்னை உதாரம் பண்ணும் சுத்த வீரனை அரசன் வெறுத்தாலும் தன் சேவகம் குன்றான் என்றவாறு".

'உன்படை வீரர்கட்கு உன்மேல் வெறுப்பு ஏற்படத்தக்கதாக நீ நடந்து கொள்ளாதே, வெறுப்பு இல்லாத படையே வெல்லும்' என அரசனை நோக்கிக் கூறிய வள்ளுவர் 'அரசன் உன்னை வெறுத்தாலும் அது பொருட்டு நீ அவன் திறத்துச் செய்ய வேண்டிய உன் கடமை யினின்றும் தவறாதே, அரசனைக் காக்க உன் உயிரையும் கொடுப்பது உன் கடன், அதை நீ செய்' என வீரனுக்கு அறம் எடுத்துரைத்தார்.

செல்வர்கள் வறியவர்க்குதவ வேண்டும் என்பது வள்ளுவர் பல விடங்களில் எடுத்துச் சொன்ன அறக் கருத்தாகும். அறத்துப் பாலிலும் ஈகை ஒப்புரவு என்னும் அதிகாரங்கள் அதையே கூறின. பொருட்பாலிலும் இக்கடன் பல இடத்துக் குறிப்பிடப்பட்டது. இரவு என்னும் பத்தில் பல குறள்கள் கரப்பிலா நெஞ்சிற் கடனறிந்தீயும் செல்வரின் சிறப்பையுணர்த்துகின்றன. இரவச்சத்தில் சில குறள்கள் பொருளுடையவராயிருந்தும் இரப்போர்க்கு ஈயாது கரப்பவர்தம் இழிவைக் கரவின் கொடுமையை எடுத்துரைக்கின்றன.

வறியோர்க்கு ஈயும் கடனையும் ஈதலின் சிறப்பையும் செல்வர்க் குணர்த்திய வள்ளுவர் இரப்பவனை நோக்கி யாது கூறினர்?

இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயும் சாலும் கரி (1060)

இரப்பவன் தான் வறுமையினல் துன்புறுகின்றானுதலின் பொருளின் அருமையை அறிதல் கூடும். தனக்குப் பொருள் அரிதா யிருப்பது போலவே பிறர்க்கு அவர் முயன்று தேடிய பொருள் அரிதாகும் என எண்ணித் தான் இரந்தபோதும் ஒன்றும் கொடுக்காத வரிடத்து அவன் வெகுளாதிருத்தல் வேண்டும் என்றார். 'உன்னிடம் இரப்பவர்க்குக் கரவாது கொடு' எனச் செல்வனுக்கு அறவுரை கூறிய ஆசிரியர் 'அவன் கொடுக்காவிட்டாலும் நீ வெகுளாதே' என இரப்பவனுக்கு அறத்தைப் போதித்தார்.

பிழைகள் மலிந்த இவ்வுலகில் நல்லோரும் தீயோரும் உள்ள சூழ்நிலையில் 'மற்றவர் தவறு செய்யினும் நீ தவறு செய்யாதே; நீ உன் கடமையைச் செய்; உனக்குரிய அறத்தை நீ கடைப்பிடி' என அவரவர்க்கு அறம் கூறும் முறையிலேயே பல குறள்கள் அமைந் துள்ளன.

## 1. 5. குறையுள்ள சூழ்நிலையிலேயே சிறக்கும் அறங்கள்

(தசரதன் ஆண்ட கோசலைநாட்டில் சில அறங்கள் அல்லது நற்பண்புகள் இல்லாதிருந்தன எனக் கம்பர் கூறினர். ஏனெனில் அவை குறையுள்ள சூழ்நிலையிலேயே சிறக்கத் தக்கன. கோசலை நாட்டிலோ குறையில்லா நிறைவே செறிந்திருந்தது. ஆகவே அவ்வறங்களும் இல்லையாம்.

வண்மையில்லை, ஓர் வறுமையின்மையால்
திண்மையில்லை, நேர் செறுநர் இன்மையால்
உண்மையில்லை, பொய் உரையிலாமையால்
ஒண்மையில்லை, பல்கேள்வி ஓங்கலால் (1. 2. 53)

பின்னும்

கள்வார் இலாமைப் பொருள் காவலும் இல்லையாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களுமில்லைமாதோ
(1. 3. 72)

எனவும் கூறினர்.

கோசலை நாட்டில் யாவரும் செல்வராயிருந்தனர், வறியவரே யில்லை. ஆதலின் அங்கு வள்ளல் தன்மைக்கும் இடம் இல்லையாயிற்று. அந்நாட்டிற்குப் பகைவர் யாரும் இல்லை, அங்குப் போர் நிகழ்வது மில்லை. ஆகவே வீரத்திற்கும் இடம் இல்லையாயிற்று. அங்கு யாவரும் பொய் சொல்வதேயில்லை - ஆகவே இது உண்மை இது பொய் என வேறுபடுத்திக் கூறுவதற்கும் இடம் இல்லையாயிற்று. யாவரும் மிக்க கல்விகேள்விகளையெய்தியிருந்தமையால் இவர் ஒள்ளியர் எனச் சிலரைச் சிறப்பித்துக் கூறுவதற்கும் இடம் இல்லை. யாவரும், வருந்தி வந்தவர்க்கீதலை விழைந்தனர். ஆனால் யாரும் வருந்திவரவில்லையே. எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தியிருந்த அந்நாட்டில் கொள்பவர் யாரும் இல்லை; ஆகவே கொடுப்பார்களும் இலராயினர்.

வள்ளுவர் கண்ட தமிழ் நாட்டிலோ எல்லா அறங்களும் இருந்தன. ஏனெனில் குறைகளும் இருந்தன. கல்லாது நிற்பார் பிறருண்மையின் கல்விமுற்றவல்லாரும் இருந்தனர். இல்லாதா ருண்மையின் உடையாரும் இருந்தனர். போர் நிகழ்ந்தமையின் படை மாட்சியும் படைச் செருக்கும் எடுத்துக் கூறத்தக்க இயல்புகளாயின. பல அறங்களும் திகழ்ந்தன.)

வள்ளுவர் கூறும் அறங்களுள்ளும் பல குறையுள்ள சூழ்நிலையிலேயே சிறக்கத்தக்கனவாயுள்ளன. துன்பச் செய்வோரும் துன்பமும் இல்லாத இடத்தில் பொறையுடைமைக்குப் பொருள் ஏது? தன்னை அகழ்பவரையும் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்பவரையும் பொறுத்தலே சிறப்பாகும் எனவும் பிறர் தன்னிடத்துத் திறனல்லாத தீமைகளைச் செய்யினும் அவர்க்கு இரங்கித் தான் அறனல்லாதவற்றைச் செய்யாது தவிர்த்தல் வேண்டுமெனவும் வரம்பு கடந்து பேசுபவர்தம் இன்னாச்சொற்களைக் கேட்டுப் பொறுத்திருப்பவர் துறந்தோரினும் தூய்மையுடையர் எனவும் வள்ளுவர் கூறினர். இகழ்வோர், திறனல்ல செய்வோர், இன்னாச் சொற் கூறுவோர் இருக்கும் சமுதாயத்தில் தானே இத்தகைய பொறையுடைமை கடைப்பிடிக்கப்படல் வேண்டும்?

வெகுளாமை இன்னா செய்யாமை என்னும் அறங்களும் பிறர் குற்றம் செய்யுமிடத்துக் கடைப்பிடிக்கப்படும் போதே சிறப்படைகின்றன. பல இணர்களையுடைய பேரெரியினால் சுட்டதையொத்த துன்பத்தைப் பிறர் செய்யினும் வெகுளாதிருத்தலே நன்று எனவும் பிறர் சினந்து தம் திறத்து இன்னாதவற்றைச் செயினும் தாம் திருப்ப அவர்க்குத் துன்பம் செய்யாதிருப்பதே குற்றமற்றோரின் கொள்கையெனவும் அத்தலைப்புக்களின் கீழ்க் கூறப்படுகிறது. பிறர் தமக்குத் துன்பம் செய்யத்தக்க சூழ்நிலையில் தானே மேலோர் இத்தகைய அறங்களைக் கடைப்பிடிக்கின்றனர்?

> இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
> என்ன பயத்ததோ சால்பு (987)

என வள்ளுவர் சான்றோரை நோக்கி வினவினர். இன்னா செய்வோர் இருக்குமிடத்தில் தானே சான்றோர் அவர்க்கு இனியனவற்றைச் செய்து தம் உயர்வை நிலைநாட்டுகின்றனர். இன்னும் பண்புடையோர் தம்மிடத்து நட்புப் பாராட்டாதவராகி நலனில செய்வோரிடத்தும் தம் பண்பைக் கைவிடாது ஒழுக வேண்டுமெனவும் பகையுள்ளும் பண்புள்ள பாடறிவார் மாட்டு எனவும் குறள் கூறுகிறது. யாவரும் நண்பராக இருக்கும் சூழ்நிலையில் இவ்வாறு கூறுதற்கிடமில்லை. நயனில செய்வாரும் பகைவரும் உள்ள இடத்திலேயே இத்தகைய பண்புடைமை வேண்டப்படுகிறது. கண்ணோட்டம் என்னும் பத்தும் தன்னை ஒறுப்பவரிடத்தும் கண்ணோடிப் பொறுத்தாற்றல் வேண்டுமெனவும் விரும்பத்தக்க நாகரிகத்தை மேற்கொள்வோர் பயின்றார் நஞ்சிடக் கண்டும்

கண்ணோட்டத்தால் அதை மறுக்க மாட்டாதாராய் ஏற்று உண்பர் எனவும் கூறுகிறது. ஒறுத்தாற்றும் இயல்பினோர் இருக்கும் நாட்டிலேயே அரசரோ பிறரோ அவ்வாறு பொறுத்தாற்றுதல் கூடும். பயின்றார்க்கு நஞ்சையிடத்தக்க கொடியோர் இருப்பர் எனக் கொள்ளும் போதே அதையுண்டமையும் மேலோரின் நயத்தக்க நாகரீகத்தையும் உடன் எண்ணுதல் கூடும்.

இன்னும் ஈகை, ஒப்புரவு ஆகிய அறங்கள் எங்கு வேண்டப்படும்? வறுமையுள்ள இடத்திலேயே. 'வறியார்க் கொன்றீவதே ஈகை' என்றார் வள்ளுவர். வறியோர் இல்லாத இடத்து ஈகை எவ்வாறு நிகழும்? ஈகை என்னும் அதிகாரத்தில் வரும் குறள்களை நோக்குமிடத்து உணவுக்கும் வழியில்லாத மிக வறியவரும் உள்ள ஒரு சூழ்நிலையை எண்ணியே அவை கூறப்பட்டன எனத்தோன்றும். பசியை மாற்றுவாராற்றல் இங்குப் புகழப்படுகிறது. பொருளைப் பெற்றவர் அதைச் சேர்த்து வைக்குமிடம் யாதுமற்றோரின் அழிபசியைத் தீர்த்தலே எனவும் கூறப் படுகிறது. பசியினால் வருந்துவோர் பலர் இருக்கும் நாட்டிலேயே பசி தீர்த்தல் என்னும் ஓர் அறம் கூறப்படுதல் கூடும். உணவிலாதார் இருக்குமிடத்திலேயே பகுத்துண்ணுதல் வேண்டும்.

'அற்றம் மறைக்கும் பெருமை' (980) 'பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு' (984) என்னும் அறங்களும் குறையுள்ள சூழ்நிலையிலேயே கடைப்பிடித்தற்குரியன. யாரிடமும் தீமையோ குறையோ இல்லாத ஒரு நிலைமை சமுதாயத்தில் இருக்குமாயின் பிறர் குறையை மறைக்கும் அல்லது பிறர் தீமை சொல்லாதிருக்கும் நலம் என ஒன்றுமில்லையே.

குடிசெயல் வகையில் சில குறள்கள் குறையுள்ள குடும்பத்தில் ஒருவர் முன் வந்து அக்குறைகளை நீக்க முயலும் நிலையைக் காட்டு கின்றன. போரில் படை நிலைகலைந்து பின் வாங்கும் நிலைமையையடையும் போது வீரனொருவன் முன் வந்து ஊக்கத்துடன் போர் செய்து பிறருக்கும் ஊக்க மளித்துப் படையைக் காக்கிறான். அது போலத் தமரகத்தும் ஆற்றுவார் மேற்றே பொறை எனக் குறள் கூறுகிறது. குடும்பத்தில் யாவரும் ஊக்கம் மிகுந்தவராகவோ சிறந்த உழைப்பாளி களாகவோ குடும்பத்தை முன்னுக்குக் கொண்டுவரப் போதிய முயற்சி எடுத்துக்கொள்பவராகவோ இரார். ஒருவர் அல்லது சிலரே பொறுப்பை உணர்ந்து தம்குடியை உயர்த்த உழைப்பவராவர். அவர் மேலேயே பாரம் சுமத்தப்படுகிறது. தன் குடும்பத்தில் பிறரின் குற்றங்களை

மறைத்துக்காக்க விரும்பும் ஒருவன் அதன் பொருட்டு எவ்வளவு துன்பத்தையும் ஏற்றுக் கொள்ள முன் வருவான். அவன் உடம்பு இடும்பைக்கே கொள்கலமாயினும் அக்கடமையினின்றும் தவருன் எனக் குறள் கூறுகிறது. பிறர் முயற்சியற்றவர்களாகவோ வேறுகுறையுள்ள வர்களாகவோ இருக்கும் சூழ்நிலையிலேயே ஒருவன் அவர்க்காகத் துன்பத்தையேற்றுக் கொள்ளும் நிலைமை ஏற்படல் இயல்பு.

திருக்குறள் கூறும் அறங்கள் பல குறையுள்ள சூழ்நிலையிலேயே சிறக்கத்தக்கனவாயுள்ளன. குறையற்ற ஒரு சமுதாயம் எவ்வாற மைதல் வேண்டும் என்பதையன்றிக் குறையுள்ள இவ்வுலகில் உயர் அறத்தைப் பேண விரும்புவோர் செய்யத்தக்கது யாது என்பதையே குறள் முக்கியமாக உணர்த்துகிறது.

## 1.5. திருக்குறள் எம்முறையில் ஓர்இலக்கியல் சமுதாயத்தைக் காட்டுகிறது?

திருக்குறளில் மிக உயர் அறங்கள் கூறப்படுகின்றன. சிறந்த இலட்சியங்கள் காணப்படுகின்றன. ஆனல் ஓர்உயர்சமுதாயம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் திருக்குறள் காட்டவில்லையா? காட்டுகிறதாஞல் எம்முறையில் காட்டுகிறது என்பது ஆயத்தக்கதே.

முதலாவதாகத் திருக்குறளின் சிலசில பகுதிகள் ஓர் இலக்கியல் இல்லத்தின், அரசின் அல்லது நாட்டின் நிலையைக் காட்டுகின்றன என்பது குறிப்பிடற்குரியது. இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட் பேறு என்னும் அதிகாரங்கள் பெரும்பாலும் ஒரு சிறந்த இல்லத்தின் இயல்பையே காட்டும். இவை பின்பு இல்லம் என்னும் தலைப்பின் கீழ் ஆயப்படும்.

இறைமாட்சி, செங்கோன்மை என்னும் அதிகாரங்களும் ஆற்றலும் அறிவும் அருளும் மிக்கவனய் நாட்டிற்கு வேண்டிய நலங்களை யெல்லாம் செய்தும் பொருளைத் தக்கவகையில் ஈட்டித் தக்கவகையில் செலவு செய்தும் நாட்டில் வளத்தைப் பெருக்கியும் குடிகளின் குறைகளைக் கேட்டு நீக்கியும் மக்களைக் காக்கும் மாண்புடைய அரசனின் இயல்பையே காட்டுகின்றன. ஓர் அரசன் இக்குறள்களின் வழிநடப்பானயின் அவன் இலக்கியல் அரசனுகவே விளங்குவான்.

அவ்வாறே அமைச்சு, தூது என்னும் அதிகாரங்களும் பெரும் பாலும் சிறந்த அமைச்சரின் தூதுவரின் இலக்கணங்களையே விளக்குவன. ஒரு நாட்டின் அமைச்சரும் தூதரும் அவ்விலக்கணங்

களின்படி அமைவராயின் அந்நாட்டின் அரசியல் மிகச் சிறந்த நிலையில் இயங்கும் என்பது திண்ணமே. ஒரு நாட்டின் படையிலுள்ள வீரரனைவரும் படைமாட்சியில் கூறப்பட்ட இயல்புகளை உடையவராக இருப்பின் அவரும் இலக்கியல் வீரரே (ideal warriors) யாவர்.

இவையனைத்திற்கும் மேலாக ஓர்இலக்கியல் நாட்டின் தன்மையை விளக்குவது நாடு என்னும் அதிகாரம். தள்ளாவிளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வதாய்க் கேடரியதாய்க் கெட்ட இடத்தும் வளம் குன்றுததாய் உள்ள நாடு செல்வத்தில் சிறந்ததே. உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும் சேராதியல்வது துன்பமில்லாததே. பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும் கொல்குறும்பும் இல்லாத நாடு சிறந்த அரசியலை மட்டுமன்றிச் சிறந்த சமுதாய அமைப்பையும் உடையதாகவே இருத்தல் வேண்டும். பிற நாட்டைச் சேர்ந்த மக்களும் அவர் பரிபாலிக்கும் ஆன் முதலிய விலங்குகளும் தம் நாட்டில் நிகழ்ந்த துன்பம் காரணமாகத் தன்கண் வந்து சேரினும் அப்பாரத்தைத் தாங்கித் தன் அரசனுக்குரிய இறையையும் செலுத்தத்தக்க நாடு செல்வவளம் மட்டுமன்றிச் சிறந்த சமுதாயத்தையும் மிக நற்பண்புள்ள மக்களையும் கொண்டதாகவே இருத்தல் வேண்டும். ஓர்இலக்கியல் நாடே இப்பத்தில் காட்டப் படுகிறது.

இனி வள்ளுவர் பெரும்பாலும் ஓர் இலக்கியல் சமுதாயத்தையன்றித் தனிப்பட்டோர்க்குரிய அறத்தையே கூறினராயினும் அவ்வறங்களை மக்களனைவரும் கடைப்பிடிப்பின் ஓர்இலக்கியல் சமுதாயம் உருவாகும் என்பது பொருந்துவதே. வள்ளுவர் கண்ட தமிழகம் பல நல்லியல்புகளை யுடையதாயினும் பல குறைகளையும் உடையதே. ஆனல் அவர் விரும்பும் வகையில் ஒரு நாடோ சமுதாயமோ அமையப்பெறுமாயின் அது மிக உயர்ந்த நிலையையுடையதாகவேயிருக்கும்.

கம்பர் கண்ட கோசலை நாட்டிற்கும் வள்ளுவர் கண்ட தமிழ் நாட்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு சுட்டப்பட்டது. ஆனல், கம்பர் உண்மையில் கோசலை நாட்டு மக்களின் நற்பண்புகளை எடுத்துக் கூறும்போது திருக்குறளை யுள்ளத்திற் கொண்டே எழுதியிருத்தல் கூடும். ‘உலகில் நன்மையும் தீமையும் உண்டு, அறச்செயல்களும் அறத்துக்கு மாறான செயல்களும் உள, நீ நன்மையைத் தேடு, அறத்தைக் கடைப் பிடி’ என வள்ளுவர் தனிப்பட்டோர்க்கு அறிவுரை கூறினர். அவ்வறிவுரையை ஒரு நாட்டில் உள்ளவர்கள் யாவருமே ஏற்று நடப்பார்

களாயின் அந்நாடு எத்தகையதாக இருக்கும் என எண்ணிக் கம்பர் எழுதியிருக்கலாம்.

தந்தமி லிருந்து தாமும் விருந்தொடும் தமரி னேடும்
அந்தணர் முதலோர் உண்டி அயில்வுறும் அமலை யெங்கும்
(1. 2. 22)

எனக் கோசலை நாட்டு மக்கள் தத்தம் இல்லிலிருந்து விருந்தினரோடும் உறவினரோடும் சுவையுறும் உணவுண்டு மகிழ்தலைப் புனைந்துரைத்த போது 'தம்மி லிருந்து தமது பாத்துண்டற்றால்' (1107) என்ற குறளடியை யெண்ணியே அவர் எழுதியிருத்தல் வேண்டும். 'மாதரார், அற்பினின்றன அறங்கள் அன்னவர், கற்பினின்றன காலமாரியே' (1. 2. 59) என மாதரால் அந்நாடு பெற்ற நலத்தைக் கூறிய போதும் தெய்வத்தை வணங்காதவளாய்த் தன் கணவனை வணங்கியெழும் கற்புடைய மகள் வேண்டியபோது மழை பொழியும் என்ற வள்ளுவர் கருத்தை யொட்டியே உரைத்தார் எனல் பொருந்தும். 'சொற் கோட்டமில்லது செப்பம்' என்ற குறளடியை எண்ணியே 'பொய் யிலா நிற்பினின்றன நீதி' எனக் கம்பர் பாடியிருக்கலாம். இன்னும் வள்ளுவர் களவை விரும்பவில்லை, கள்ளாமையைக் கூறினர். நாட்டில் யாவரும் அக்கருத்தையேற்று நடப்பாராயின் 'கள்வாரிலாமைப் பொருள் காவலுமில்லை' என்ற நிலையேற்படும். வள்ளுவர் இரத்தலை விரும்பவில்லை, ஈகையைப் போற்றினர். யாவரும் அவ்வாறே நடக்க முயல்வாராயின் என்ன ஆகும்? வருந்திவந்தவர்க்கீதலையே யாவரும் விரும்புவர். ஆனல் கொள்வாரிலாமையால் கொடுப்பாருமில்லை என்ற நிலையே ஏற்படும். கல்வியையும் கேள்வியையும் போற்றிய வள்ளுவர் கருத்தும் நாட்டில் நிலவுவதாயின் அங்கு யாவரும் கற்றவராகவே யிருப்பர், கல்லாது நிற்பார் இரார். பல்கேள்வி ஓங்கும். இவ்வாறு சிந்தித்துக் கம்பர் கோசலை நாட்டின் இயல்பை வரைந்திருத்தல் கூடும்.

அறத்துப்பாலிலும் பொருட்பாலிலும் நன்மையையும் தீமையையும் ஒருங்கெடுத்துக் கூறிய வள்ளுவர் காமத்துப்பாலில் எதைக் காட்டினர்? இங்கு அகப்பொருள் நூல்களின் மரபைப் பின்பற்றித் தலைவன் தலைவியரை ஒப்புயர்வற்றவராகவே காட்ட விரும்பினர் போலும். சிறந்த தலைவன் தலைவியரின் அன்பு நிறைந்த அகவாழ்க்கையே காமத்துப்பாலில் காட்டப்படுகிறது. 'இல்லை தவறு அவர்க்கு' எனத் தலைவி கூறத்தக்க தாகத் தலைவன் உயர்குணச்செம்மலாகவே தோன்றுகிருன். மற்றும் 'உள்ளுவன் மன்யான் உரைப்பதவர் திறமால்' (1184) எனப் பிறிதோரிடத்துத் தலைவி கூறுகிருள். பிரிவின்கண் தலைவனின்

நல்லியல்புகளை எண்ணியும் கூறியும் அவன் பொழுது போக்குகிறான். ஒரு கால் தலைவனே தன்னை 'நலத்தகை நல்லவர்' எனக் குறிப்பிட்டுக் கொள்கிறான். தானும் தன் தகுதியில் நம்பிக்கையுடையவனாகிறான். 'தம்மில் இருந்து தமது பாத்துண்டற்றால்' எனத் தலைவியின் நலத்தைப் புனைந்துரைக்கும் போதும் 'மாலை அயர்கம் விருந்து' என வினை முடித்து வீடு நோக்கும் போதும் கூறும் தலைவன் சிறந்த அறச் சிந்தனையுடையவனாகவும் காணப்படுகிறான். தலைவியும் அவனால் பல வாறு புகழப்படுகிறாள். பகுத்துண்டும் விருந்தோம்பியும் மகிழும் ஒருவனின் மனைக்கிழத்தியும் ஒத்தபண்புடையவளாகவே யிருத்தல் வேண்டும். காமத்துப்பாலில் வள்ளுவர் இலக்கியல் கதை மாந்தரையே (ideal characters) படைத்தார் எனக் கூறலாம்.

காமத்துப்பாலில் காட்டப்படும் தலைவன் தலைவியர் மிக உயர் குணத்தோராயினும் இங்கும் சமுதாயம் குறைவுடையதாகவே காணப் படுகிறது.

தலைவன் நெடுநாள் பிரிந்திருப்பினும் அவனிடத்துத் தலைவிக் குள்ள மாறுதஅன்பைக் காதற்சிறப்புரைத்தல் என்னும் அதிகாரத்தில் சில குறள்கள் (1126-1130) காட்டுகின்றன. ஆனால் பிறர் அதைப் புரிந்து கொள்ளாமல் தலைவனைக் குறை கூறுகின்றனர் என்பதைத் தலைவி எடுத்துச் சொல்கிறாள்.

> இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
> ஏதிலர் என்னும்இவ் வூர் (1129)

> உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
> ஏதிலர் என்னும்இவ் வூர் (1130)

தலைவன் தலைவியர் குறைவிலராகவும் அவர்களைப் புரிந்து கொள்ளாத ஊர் குறையுடையதே. இது கற்பின் கண் நிகழ்வதா களவின் கண் நிகழ்வதா என்பது தெளிவின்று. இவ்வதிகாரம் தற்போது களவியலி லேயே காணப்பெறினும், திருவள்ளுவர் தாமே காமத்துப்பாலைக் களவியல் கற்பியல் என வகுத்துக் கொண்டாரா, உரையாசிரியர்கள் தாம் அவ்வாறு பிரித்துக் கொண்டார்களா என அறிஞர் சிலர் ஐயுறுவர். புணர்ச்சி மகிழ்தல் கற்பிற்குரியதே என்பர்.[5] அவ்வாறாயின் காதற்சிறப்புரைத்தல் எதைச் சேர்ந்தது என்பது ஐயத்திற்குரியதே.

5. அருணாசலம், ப. குறளின் செய்தி, பாரி நிலையம், 1968, பக்கம் 190–191.

எந்நிலையில் நிகழ்வதாக இருப்பினும் தம்மைப் புரிந்து கொள்ளாமல் குறை கூறும் ஊராரின் நிலையைக் குறித்துத் தலைவி வருந்துவதே இங்குக் கூறப்படுகிறது.

காமத்துப்பாலிலும் நாட்டில் போர் நிகழ்வதைப் பற்றிய குறிப்புக்கள் உள. பிரிந்திருக்கும் தலைவன் ஓரிடத்து,

> வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
> மாலை அயர்கம் விருந்து (1268)

எனக் கூறுகின்றான். இவன் வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகனே யாவான். தலைவன் போரை விரும்பவில்லை யென்றுதான் தோன்றுகிறது. 'அரசன் விரைவில் வெற்றி பெறுவானாக. போர் விரைவில் முடிவு பெற வீட்டிற்குச் சென்று மாலைப் பொழுதில் விருந்தினரைப் பேணி மகிழ்வேனாக' என அவன் எண்ணுகிறான். 'உரனசைஇ யுள்ளம் துணையாகச் சென்றார்' (1263) என்ற தலைவி கூற்றும் போர் நோக்கிப் பிரிந்த தலைவனைக் குறித்ததாகவே யிருத்தல் கூடும்.

நாணுத்துறவுரைத்தல் என்னும் அதிகாரத்தில் தலைவன் மடலேறப் போவதாகப் பன்முறை கூறுகின்றான். 'ஏறிய மடல் திறம்'[6] பெருந்திணையின் பாற்படுமாகலின் இது உண்மையில் மடலேறாது மடலேறுவேன் என வாயாற் கூறும் அவ்வளவினதாகவே யிருக்கலாம்.

> தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
> மாலை யுழக்கும் துயர் (1135)

என்னும் குறளை மடலேறிய தலைவன் கூற்றாகக் கொண்டு இதை ஏறிய மடற்றிறமாகவே கொள்வாரும் உளர்.[7] தலைவன் மடலேறுவதாகக் கூறுவதேயாயினும் அதனாலும் தலைவி காப்புச்சிறை மிக்கவழி வருந்திக் கூறுவதாகச் சில குறள்கள் (1138-1139) இவ்வதிகாரத்தில் வருவதனாலும் இவ்விலக்கியல் காதலர்களின் அன்புத் தொடர்புக்குச் சமுதாயத்தில் தடை ஏற்பட்டமை தெளிவாகிறது. இலக்கியல் சமுதாயத்தில் தடை ஏற்படுமா?

---

6. **தொல்காப்பியம்,** பொருளதிகாரம் 51 :
 ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்
 தேறுத லொழிந்த காமத்து மிகுதிறம்
 மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
 செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.

7. அருணாசலம், ப., **குறளின் செய்தி,** ப. 196.

களவியலில் அலரறிவுறுத்தல் என்னும் ஓரதிகாரமும் உண்டு. இலக்கியல் சமுதாயத்தில் அலர் எழுவதற்கும் இடம் இல்லை. வள்ளுவர் கற்பனையான ஓர்இலக்கியல் சூழ்நிலையில் எவ்வித துன்பமுமின்றி வாழ்பவராகத் தலைவன் தலைவியரைக் காட்டாது, குறைகள் உள்ள சூழ்நிலையில் பல துன்பங்கள் தடைகள் ஏற்படுமிடத்தில் கற்பின்கண்ணும் பிரிவு நிகழத்தக்கதாகிய சமுதாய அமைப்பில் இவற்றினிடையே மாருத அன்பின் பெருக்கால் ஒற்றுமைப்பட்ட தலைவன் தலைவியரின் ஏற்றத்தையே எழுத விரும்பினர் போலும்.

இது அகப்பொருள் நூல்களில் காணப்படும் வழக்கே. இவற்றில் அகப்பொருட் கதை மாந்தராகிய தலைவன், தலைவி, தோழி, தாய் முதலியோர் குண நிறைவுடையோராகப் புனையப்படுகின்றனர். ஆனல் சமுதாயம் குறையில்லதாகக் காட்டப்படுவதில்லை. இம்மரபையே வள்ளுவரும் காமத்துப்பாலில் பின்பற்றினர் எனத் தோன்றும்.

இலக்கியல் நாட்டை அல்லது சமுதாயத்தைக் காட்டுவனவாக மேல்நாடுகளில் எழுதப்பட்ட நூல்கள் பல வகையின. பல நோக்கங்களுடன் எழுதப்பட்டன.

பிளேட்டோ ஒரு நகரே தன்னாட்சியுரிமை பெற்ற ஒரு நாடாக (City State) விளங்கிய பண்டைக் கிரேக்க நாட்டில் வாழ்ந்தவர். சிறந்த முறையில் ஒரு தன்னாட்சிநகரை யமைப்பதாக இருந்தால் எவ்வகைச் சட்டதிட்டங்களுடன் அந்நகரை யமைத்து எவ்வகையில் அதன் அரசியலையும் சமுதாய அமைப்பையும் வகுக்கலாம் எனச் சிந்தித்தே தம் நூலை எழுதினர்.

ஆங்கில நாட்டில் 15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்து 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் உட்டோப்பியா (Utopia) என்ற தம் நூலை எழுதிய தாமஸ்மூர் (Thomas More) ஒரு சிறந்த நாடு எவ்வாறு அமைய வேண்டும் என்பதைக் குறித்த தம்கருத்தை அந்நூல் மூலம் விளக்கினர். உட்டோப்பியா என்பது ஒரு கற்பனை நாடே. ஒருவன் செலவு மேற்கொண்டு வெளிநாடுகளுக்குச் செல்லுங்கால் அதுவரை தன்னாட்டவரால் அறியப்படாத ஒரு சிறந்த நாடாகிய உட்டோப்பியாவைக் கண்டு அதன் அரசாட்சி, சமுதாய நிலை, தொழில்கள், மக்களின் வாழ்க்கை யாவும் ஓர்இலக்கியல் நிலையில் இயங்குவதைக் கண்டு அதைக் குறித்து எழுதும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது. ஒரு கற்பனை இலக்கியல் நாட்டைப் புனைந்துரைப்பதன்

மூலம் ஆசிரியர் தம் கருத்துக்களையே எடுத்துரைத்தார். மூர் மேல் நாடுகளில் கிருஸ்தவ சமயச்சீர்திருத்த இயக்கங்கள் (reformation) நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில் வாழ்ந்தவர். அக்காலத்தில் வெவ்வேறு சமயத் தலைவர்களால் பிரசாரம் செய்யப்பட்ட மாறுபட்ட கொள்கைகள் மக்கள் பலரை மானிடவாழ்க்கையைக் குறித்தும் அறத்தைக் குறித்தும் சமுதாய நலத்தைக் குறித்தும் சிந்திக்கும்படி தூண்டியிருத்தல் வேண்டும். அதன் பயனாகவே உட்டோப்பியா போன்ற நூல்கள் தோன்றின.

17-ஆம் நூற்றாண்டில் ஆங்கில நாட்டில் வாழ்ந்த **பிரான்சிஸ் பேக்கன்** (Francis Bacon) என்ற அறிஞரும் **புது அத்லாந்திய நாடு** என்ற நூலின் மூலம் ஒரு சிறந்த நாடு எவ்வியல்புகளைக் கொண்டிருத்தல் வேண்டுமென்ற தம் கருத்தை விளக்குகிறார். புது அத்லாந்திய நாடு (New Atlantis) ஒரு கற்பனை நாடே. கடற் செலவு மேற் கொண்ட சிலர் **அத்லாந்திய** மாகடலுக்கிடையே ஒரு புது நாட்டைக் கண்டதாகவும் அந்நாடு சிறந்த மக்களைக் கொண்டதாய்ச் சிறந்த முறையில் ஆளப்பட்டு எக்குறையுமின்றி விளங்கியதாகவும் அங்கு அம்மாலுமிகள் நன்கு வரவேற்கப்பட்டு விருந்தோம்பப்பட்டதாகவும் அந்நூல் ஒரு கற்பனை நிகழ்ச்சியைக் கூறுகிறது.

ஏறக்குறைய அதே காலத்தில் (17-ஆம் நூற்றாண்டின் முற் பகுதியில்) **கதிர் நகர்** அல்லது **கதிரவனின் நகர்** (Civitatis Solis— The City of the Sun) என்ற நூலை எழுதிய **தாமஸ் காம்பனெல்லா** ஓரளவு பொது வுடைமைக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் ஒரு சமுதாயத்தைத் தம் நூலில் வரைந்தார். அச்சமுதாயத்தில் சமய நிறுவனங்களோ (கிருஸ்தவத் திருக்கூட்டம், Church) அரசைவிட ஆற்றல் வாய்ந்தன வாயிருக்கும். சமய குருமாரே (Priests) அதிகச் செல்வாக்குடையவரா யிருப்பர். அரசு யாவருடைய நலத்தினையும் கவனிக்கும். காம்பனெல் லாவும் மேல்நாடுகளில் பல சமயச்சீர்திருத்த இயக்கங்கள் மட்டுமன்றி அரசியல் குழப்பங்களும் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில் வாழ்ந் தவர். தாம் விரும்பிய சமுதாய அமைப்பை உருவாக்கும் நோக்கத் துடன் அவரே **இத்தாலி நாட்டில்** ஒரு புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டதாக ஐயத்துக்காளாகி அவர் ஒருகால் சிறையிலிடப்பட்டார் எனப் **பிரித்தானிய கலைக் களஞ்சியம்** (Encyclopaedia Brittanica) கூறுகிறது.[8]

**ஜேம்ஸ் ஹாரிங்டன்** (James Harrington) என்ற ஆங்கில அறிஞரும் 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரே. அந்நூற்றாண்டின்

8. **Encyclopaedia Brittanica** Vol. 4, Campanella Tommase

இடைப்பகுதியிலேயே அவர் தம் ஓசியான (Oceana) அல்லது பெருங் கடல் சூழ்நாடு என்ற நூலை எழுதினர். உட்டோப்பியா முதலிய பல நூல்கள் ஒரு கதை அல்லது செலவு நூல் (a book of travel) போன்ற வடிவில் எழுதப்பட்டிருப்ப ஓசியான அவ்வாறன்றிக் கட்டுரை வடிவிலேயே எழுதப்பட்டுள்ளதென்பர். மேலும் ஓசியான உட்டோப்பியா போன்ற கற்பனை நாடன்று. ஆசிரியர் ஓசியான எனக் குறிப்பிட்டது ஆங்கில நாட்டையே. ஆயினும் அவர் தம் நூலில் கூறிய அரசியல் சமுதாய அமைப்பு எக்காலத்திலும் ஆங்கில நாட்டில் நிலவிய ஒன்றன்று. தம்காலத்தில் நிலவவேண்டும் என அவர் விரும்பிய அமைப்பே யாகும். ஹாரிங்டன் முதலாம் சார்ல்ஸ் மன்னருக்கும் கிராம்வெல் (Cromwell) என்ற கலகத் தலைவனுக்குமிடையே நிகழ்ந்த உள்நாட்டுப் போரின் காலத்தில் வாழ்ந்தவர். அப்போருக்குப் பின் ஒரு புதுசமுதாய அமைப்பு ஏற்படும் என அக்காலத்தில் பலர் எதிர் பார்த்தனர். அது எத்தகையதாக இருக்கவேண்டும் எனச் சிந்தித்தே இவ்வறிஞர் தம் நூலை எழுதினர். அது அக்காலத்தில் அரசனை ஆதரித்தோர் எதிர்த்தோர் ஆகிய இருதிறத்தாருக்குமே நிறைவளிக்க வில்லை எனக் கூறப்படுகிறது. ஆயினும் அமெரிக்காவில் அரசியலறிஞர்கள் பலர் இந்நூலின் கருத்துக்களை ஓரளவு ஏற்றுக் கொண்டனராம்.[9]

18-ஆம் நூற்றுண்டின் இறுதியில் பிறந்து 19-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்த பிரெஞ்சு நாட்டு அறிஞர் காபட் எட்டீன் (Cabet Etienne) இக்காரிச் செலவு (The Voyage to Icarie) என்னும் நூலை எழுதினர். இக்காரி என்பதும் கற்பனையாகப் புனையப்பட்ட ஓர் இலக்கியல் நாடே. ஆனால் இவ்வாசிரியர் தம்நூலை வெறும் இலக்கியமாக மட்டும் எழுதவில்லை. ஒரு புரட்சி மூலம் தம் நாட்டின் அரசியலமைப்பை மாற்றியமைக்கவும் எண்ணவில்லை. அவர் அமெரிக்காவில் ஒரு பெரிய நிலப்பகுதியைச் சில ஆங்கில அறிஞர்களின் உதவியுடன் விலைகொடுத்து வாங்கி அங்குத் தம்கருத்துக்களைப் பின் பற்ற விரும்பிய மேல் நாட்டவர் சிலரைக் குடியேற்றி ஒரு புதிய சமுதாயத்தை அங்கு ஏற்படுத்த விரும்பினர். உண்மையில் 1, 500 தொகையுள்ள மக்கள் கப்பலேறி அவரால் கொள்ளப்பட்ட நிலப்பகுதிக்கு அந்நோக்கத்துடன் சென்றனர் எனவும் ஆயினும் அத்தகைய சமுதாயத்தை அமைக்கும் முயற்சி வெற்றி பெறவில்லை எனவும் தெரிகிறது.[10]

9. Ibid. Vol. 11, Harrington, James
10. Ibid. Vol.4, Cabet, Etienne

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த சாமுவேல் பட்லர் (Samuel Butler) என்ற எழுத்தாளர் ஒருவர் ரியூஹான் (Erewhon) என்னும் நூலை எழுதினர். இதுவும் செலவு நூல் வடிவில் எழுதப் பட்டதே. ஆனால் இது ஓர் இலக்கியல் நாட்டைக் குறித்த ஆசிரியரின் கொள்கையை விளக்குவதன்று. உண்மையில் இது ஒரு வகைக் கேலிச்சித்திரமே. மேல் நாடுகளின் சமுதாயத்தில் அக்காலத்து இருந்த அல்லது இருந்ததாக அவர் கருதிய குறைகளை மறைமுகமாக எடுத்துக்காட்டவே இந்நூலை எழுதினர்.

ஏறக்குறைய அதே காலத்தில் (19-ஆம் நூற்றாண்டின் இறுதியில்) எட்வார்ட் பெலாமி (Edward Bellamy) என்ற அமெரிக்க அறிஞர் பின்னோக்கிப் பார்த்தல் (Looking Backwards) என்ற நூலை எழுதினர். அதில் கி. பி. இரண்டாயிரத்தில் (2000 A. D.) அமெரிக்காவில் எத்தகைய சமுதாயம் ஏற்படும் என எண்ணி அந்நிலையை விளக்கினர். யாவரும் தத்தம் ஊதியத்திற்காக அன்றிப் பொதுநலத்திற்காக உழைக்கும் ஒரு பொதுவுடைமைச் சமுதாயத்தையே அந்நூல் காட்டுகிற தென்பர்.[11]

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் எச். ஜி. வெல்ஸ் (H. G. Wells) என்ற ஆங்கில அறிஞர் எதிர்பார்த்தல் (Anticipations) ஒரு புது உட்டோப்பியா (A Mordern Utopia) முதலிய நூல்களில் வருங்காலத்தில் ஏற்படப்போகும் சிறந்த சமுதாய நிலையை விளக்கினர். உயிர்மலர்ச்சிக் கொள்கையில் (The Theory of Evolution) அதிக நம்பிக்கை வைத்த அவர், மக்கள் சமுதாயம் இயல்பாகவே ஓர் இலக்கியல் நிலையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது, வருங்காலத்தில் ஓர் இலக்கியல் சமுதாயம் உருவாகும் என நம்பினராம். ஆயினும் இரு உலகப் போர்களைக் கண்டபின் தம் கொள்கையைத் தாமே ஐயுறத் தொடங்கினராம்.[12]

இவ்வறிஞருக்குக் காலத்தால் சிறிது பிற்பட்டவராகிய அல்டஸ் ஹக்ஸ்லியும் (Aldous Huxley) வருங்காலத்தில் உலக சமுதாயம் அடையப் போகும் நிலையைப் புது வீர உலகம் (A Brave New world) என்ற தம் நூலில் காட்டினர். எட்வார்ட் பெலாமி, எச்.ஜி. வெல்ஸ் என்னும் இருவரும்தத்தம் நூலில் உலகம் ஒரு விரும்பத்தக்க இலக்கை

---

11. Harvey Paul (Compiler), **The Oxford Companion to English Literature,** Bellamy, Edward

12. **Encyclopaedia Brittanica,** Vol. 23, **Wells, H.G.**

நோக்கியே போய்க் கொண்டிருகிறது என்ற கருத்தைக் கூற உலகம் இயல்பாக அடையப் போகும் இலக்கு விரும்பத்தக்கதுதானு என்ற ஐயத்தை இவர் எழுப்புகிருர்.

இந்நூல்கள் அனைத்தையும் நோக்கத் திருக்குறள் எச்சூழ்நிலையில் எம்முறையில் எந்நோக்கத்துடன் எழுதப்பட்டுள்ளது? மேற்சொல்லப்பட்ட நூல்கள் பல சீர்திருத்த இயக்கங்கள் நாட்டில் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில் அல்லது அரசியல் புரட்சி ஏற்பட்ட காலத்தில் எழுந்தன. வள்ளுவர் காலத்தைக் குறித்துக் கருத்துவேறுபாடுகள் உள எனினும் அவர் கி.பி. முதலாம் அல்லது இரண்டாம் நூற்ருண்டில் வாழ்ந்தவரே என்பதை அறிஞர் பெரும்பாலோர் ஒப்புவர். வள்ளுவர் காலம் களப்பிரர் படையெடுப்புக்கு முற்பட்டகாலமாகவே யிருத்தல் வேண்டும். திருக்குறளைப் படிக்கும்போது தமிழ்நாட்டில் அமைதியான அரசாட்சி நிலவிய காலத்தில் பொதுவாக மக்களுக்கு அரசர்களிடத்தில் நன்னம்பிக்கையுள்ள காலத்திலேயே அந்நூல் எழுதப்பட்டிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. ஆனுல் அது, சமயத்தில் புதுக் கருத்துக்கள் தமிழ் நாட்டில் பரவிவந்த காலமே. பழந்தமிழர் பழக்கவழக்கங்களும் வழிபாட்டுமுறைகளும் நாட்டில் ஒருபால் நிலவிவர வைதிக சமயமும் நான்மறைக் கல்வியும் அவைசார்பான கருத்துக்களும் பரவி நிலைகொள்ள, அதே சமயத்தில் பௌத்த சமண சமய குருமாரும் தத்தம் கொள்கைகளைப் போதிப்பப் பலதிறப்பட்ட சமய, தத்துவ அறக்கருத்துக்கள் பரவிய அந்தக் காலத்திலேயே வள்ளுவர் வாழ்ந்தார் எனத் தோன்றும். மாறுபட்ட கருத்துக்கள் பல நாட்டில் பரவும் காலம் மக்களை ஆழ்ந்து சிந்திக்கத்தூண்டும் காலமே. அவ்வாறே வள்ளுவர் சிந்தித்துத் தெளிந்து பின் தம்அறக் கருத்துகளை எழுதியிருத்தல் வேண்டும்.

மேற் சொல்லப்பட்ட ஆங்கில நூல்கள் சில ஒரு கற்பனை நாட்டைப் புனைந்துரைப்பன. சில் ஒரு புரட்சியை உண்டாக்கி அரசியலமைப்பையும் சமுதாயத்தையும் மாற்றியமைக்க விரும்பியவர்களால் எழுதப்பட்டன. சில வருங்கால சமுதாயத்தைக் காட்டுவன. வள்ளுவர் இம்முறைகளில் தம் நூலை எழுதவில்லை. வள்ளுவர் காலத்தில் நிலவியது முடியாட்சி. அது அரசன் தன்னலத்துக்காகவன்றி மக்கள் நலத்தைக் கருதியாளும் நல்லியல் சார்ந்த முடியாட்சியாகும். அதை வள்ளுவர் ஏற்றுக் கொண்டார். அக்காலச் சமுதாயத்தையும் அவர் மாற்றியமைக்க விரும்பியதாகத் தோன்றவில்லை. கள்ளுண்டல், சூது, வரைவின் மகளிரொடு உறவு ஆகிய அக்காலச் சமுதாயத்தில் நிலவிய தீமைகளை நீக்க விரும்பினுரெனக் கூறலாம்.

அக்காலத்து நிலவியிருந்த வருணவேறுபாட்டை (caste differences) வள்ளுவர் ஏற்றுக் கொண்டாரா இல்லையா என்பதைக் குறித்துப் பலர்பலவாறு ஆராய்கின்றனர். ஏற்றுக்கொள்ளாவிடினும் அதை அவர் தீவிரமாக எதிர்க்கவுமில்லை. சமுதாயத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்துவது அவர் நோக்கமன்று.

இன்னும் முன்பே கூறியது போலக் கற்பனையாகவோ அன்றி வருங்காலத்தில் நிலவப்போவதாகவோ வேறு எம்முறையிலோ ஓர் இலக்கியல் சமுதாயத்தை வரைந்து காட்டுவது அவர் நோக்கமன்று. இருக்கும் அரசியல் சமுதாய அமைப்பின் கீழேயே நாட்டில் நிலவும் சூழ்நிலையிலேயே அறத்தைக் கடைப்பிடிக்க விரும்புவோர் தனிப்பட்ட முறையில் கடைப்பிடிக்கத்தக்க அறங்களையே அவர் கூறினர். அவர் கூறும் அறங்கள் யாவும் தனிப்பட்ட மனிதனின் ஆன்மீக நலத்தை மட்டும் குறிப்பனவல்ல, சமூகவியல் நோக்கும் உடையனவே. ஆனால் அவர் எடுத்துக்கொண்ட முறை சிறந்த சமுதாயம் எப்படியமையும் எனக் காட்டுவதன்றி தனிப்பட்ட ஒவ்வொருவரும் எத்தகைய அறங்களைப் பின்பற்றல் வேண்டும் எனக் காட்டுவதே. ஒவ்வொருவரும் அவ்வறங்களைக் கடைப்பிடித்தால் சமுதாயம் எந்நிலையில் அமையும் எனச் சிந்தனை செய்தே வள்ளுவர் விரும்பும் சமுதாயத்தை மேல் நாட்டு அறிஞர் சிலர் காட்டும் சமுதாயத்துடன் ஒப்பிடல் கூடும். இவ்வகை ஆய்வு இந்நூலின் இறுதியில் மேற்கொள்ளப்படும்.

# 2

## இல்லம்

பல இல்லங்கள் இணைந்ததே சமுதாயம். முதலில் இல்லத்தில் அறத்தை வளர்த்தே பின் அதைச் சமுதாயம் முழுதும் பரவச் செய்தல் கூடும் என எண்ணியே வள்ளுவர் அறத்துப்பாலில் முதற்கண் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு என இல்லத்தில் உறுப்பினர்க்கு இருக்க வேண்டிய குணநலன்களையும் அவர்கட்கிடையே நிலவ வேண்டிய நல்லுறவையும் கூறும் அதிகாரங்களை அமைத்தனர் போலும். காமத்துப்பாலும் இல்லத்தின் உறவையும் உணர்வுகளையும் எடுத்தியம்புகிறது.

வள்ளுவர் காலத் தமிழ்நாட்டில் இல்லம் எத்தகையது? இந்திய நாட்டின் வரலாற்றை ஆய்ந்த அறிஞர் பலர் பண்டைக் காலத்தில் இந்நாட்டில் கூட்டுக்குடும்ப வாழ்க்கையே (joint family system) நிலவியதெனவும் பலதாரம் கொள்ளும் வழக்கம் பலவகுப்பினரிடையேயும் இருந்ததெனவும் கூறுகின்றனர்.[1] ஆனால் திருக்குறளை ஆராயும் போது இவ்விரு இயல்புகளும் **வள்ளுவர்** தம்முளத்திற் கொண்ட இல்லத்தில் இருந்ததாகத் தோன்றவில்லை. காமத்துப்பால் மனமொத்த அன்புமிக்க தலைவன் தலைவியரின் வாழ்க்கையைக் காட்டுகிறது. காமத்துப்பாலில் தலைவன், தலைவி, தோழி, நற்றாய் (தலைவியின் தாய்), பாங்கன் ஆகியோர் கதை மாந்தராக வருகின்றனரேயன்றித்

1. Basham, A. L., **The Wonder That was India,** Fontana books, 1971, P. 156 Basham, A. L. **Aspects of Ancient Indian Culture,** Asia Publishing House, 1970, P. 8.

தலைவனின் பெற்றோரோ உடன் பிறந்தோரோ கதை மாந்தராக வரவில்லை. அன்னோரைக் கதைமாந்தராகக் கொள்ளுதல் அகப்பொருள் இலக்கியங்களில் வழக்குமன்று, கற்பின்கண் பிரிவுக்காலத்தும் தோழியே தலைவிக்கு ஆறுதல் கூறுபவளாகவும் தலைவி தன் உள்ளக் கிடக்கையை யெடுத்துச் சொல்லி ஆறுதலடைவதற்கு ஏற்றதுணையாகவும் அமைகிறாள். மணமான பெண் கணவனின் பெற்றோர் முதலியோருடன் வசிக்கும் கூட்டுக்குடும்ப வாழ்க்கைமுறை அக்காலத்திருந்திருக்குமாயின் பிரிவின்போது தலைவனின் தாய், தமக்கை முதலியோர் தலைவியைத் தேற்றுவது இயல்பாக அமையும். ஆனால் திருக்குறளிலோ பிற பண்டை அகப்பொருள் நூல்களிலோ அவ்வாறு கூறப்படவில்லை. இவ்விலக்கியங்களில் பெரும்பாலும் தலைவனும் தலைவியும் தனியில்லத்தில் வாழ்பவர்களாகக் காணப்படுகிறார்கள். கூட்டுக்குடும்பவாழ்க்கை அக்காலத்திருந்ததா என்பது ஆராயாதற்குரியது.

வாழ்க்கைத்துணை நலம் என்னும் அதிகாரமும் மனைவியே குடும்பத் தலைவியாக இருந்து இல்லறத்தை நடத்தும் நிலையையெண்ணி எழுதப்பட்டதாகவே தோன்றுகிறது. 'தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை' என்பதிலிருந்து குடும்பத்தலைவன் தேடிய பொருளைத் தக்கவகையில் செலவு செய்து அப்பொருள் இல்லத்திற்கு நற்பயனளிக்குமாறு செய்பவள் மனைவியே என உணரலாம். கூட்டுக்குடும்ப வாழ்க்கையாக இருப்பின் தலைவனின் தாய் பொருளைச் செலவு செய்து இல்லறத்தை நடத்தல் பொருந்தும். வள்ளுவர் மனைவியை இல்லத்தின் தலைவியாக எண்ணி, கொண்டான் வளத்துக்குத்தக வாழ்பவள் ஆதல் வேண்டும் என்றார்.

சிலப்பதிகாரத்தில் மனையறம்படுத்த காதையென ஒரு காதையுண்டு. கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் நிகழ்ந்து சில நாள் சென்றபின் அவர்கள் சுற்றம் தழுவியும் அறங்களைச் செய்தும் விருந்தோம்பியும் இல்வாழ்க்கையைத் தாமே இனிது நடத்துவதற்காக வேண்டிய செல்வமும் ஏவலும் அளித்துக் கண்ணகியின் தாய் அவர்களைத் தனியில்லத்தில் வாழச் செய்தாள் என இக்காதை கூறுகிறது. கோவலனின் பெற்றோரும் கண்ணகியின் பெற்றோரும் புகார் நகரத்திலேயே வாழ்ந்தனர். மணமான கோவலனும் கண்ணகியும் கூடப் பல ஆண்டுகள் அந்நகரில்தான் தங்கியிருந்தனர். ஆயினும் இல்வாழ்வோர்க்குரிய நல்லறங்களைத் தாமே செய்து மகிழுமாறு தனியில்லத்தில் வசித்தனர் எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

இவ்வாழ்க்கை முறையே வள்ளுவரின் காலத்திலும் இருந்திருத்தல் கூடும்.

வள்ளுவர் காலத்துத் தமிழ்நாட்டில் பலதாரம் கொள்ளும் வழக்கம் அதிகமாகப் பரவியிருந்ததா என்பதும் ஐயத்திற்குரியதே. புறநானூற்றில் புலவர்கள் அரசர்களைக் குறித்துப் பாடுங்கால் சில பாடல்களில் அரசியை ஒருமையில் குறிப்பிடுகின்றனர். அவ்வாறன்றி உரிமை மகளிர் பன்மையில் குறிப்பிடப்படும் பாடல்களும் உள.[2] ஆகவே அரசர்களிடையே அக்காலத்தில் ஒரு தாரம் கொள்ளும் வழக்கமும் பலதாரம் கொள்ளும் வழக்கமும் இருந்தன எனக்கருதலாம். ஆனால் பொதுமக்களிடையே பலதாரம் கொள்ளும் வழக்கம் பரவியிருந்த தாகத் தோன்றவில்லை. அரசர்களுட் சிலர் பலதாரம் உடையவராகக் காணப்படினும் கவிஞர்கள் ஒருமனைவியை யுடையவரே. பெருஞ் சித்திரனார் 'துவ்வாளாகிய என் வெய்யோள்' (159,14) என மனைவியை ஒருமையிலேயே குறிப்பிட்டார். அவர்தம் மனைவியை நோக்கிக் கூறிய செய்யுளும் அவர் மனைவி ஒருத்தியே என்பதைக் காட்டும் (புறம் 163). பெருந்தலைச் சாத்தனார் 'நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கண் என் மனையோள்' (164 6) எனவும், பெருங்குன்றூர்க் கிழார் 'நுவல்வுறு சிறுமையள் பல புலந்துறையும் இடுக்கண் மனையோள் தீரிய' (210. 11-12) எனவும் கூறியபோதும் மனைவியை ஒருத்தியாகவே குறிப் பிட்டனர்.

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காவியங்களில் வரும் கதை மாந்தரும் ஒருதாரம் கொண்டவராகவே காணப்படுகின்றனர். கோவலனின் தந்தை மாசாத்துவானும் கண்ணகியின் தந்தை

---

2. அரசனின் மனைவி ஒருமையிற் குறிப்பிடப்படுதல் :-

ஆயிழை கணவன் — புறம். 138.8

கடவுள் சான்ற கற்பின் சேயிழை
மடவோள் பயந்த மணிமருள் அவ்வாய்க்
கிண்கிணிப் புதல்வர் பொலிகென் றேத்தி — புறம். 198. 3-5

அரசனின் மனைவியர் பன்மையிற் குறிப்பிடப்படுதல் :-

மகளிர் மலைத்த லல்லது மள்ளர்
மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப — புறம். 10. 9-10

நறும்பல ஒலிவரும் கதுப்பின் தேமொழித்
தெரியிழை மகளிர் பாணி பார்க்கும்
பெருவரை யன்ன மார்பின்
செருவெஞ் சேஎய் — புறம். 209. 16-19

மாநாய்கனும் அத்தகையோரே. இக்காவியத்தில் சேர அரசன் செங்குட்டுவனும் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுங் கூட ஒரு மனைவியை யுடையவராகவே காணப்படுகின்றனர். கோவலனுக்கும் மனைவி கண்ணகியே. மாதவியுடன் சிலகாலம் வாழ்ந்து பிரிந்தான். அவ்வாறு செல்வர் குடும்ப ஆடவர் வரைவின் மகளிரை நாடியுறவு கொள்ளும் வழக்கம் வள்ளுவர் காலத்திலும் இருந்திருக்கிறது. அதையே அவர் வரைவின் மகளிர் என்னும் அதிகாரத்தில் கண்டித்தார். கோவலனும் பெரும்செல்வனாக இருந்தும் மற்றொரு வணிககுல மங்கையை முறைப்படி மணம் செய்யவில்லை. மணிமேகலையிலும் வணிக குலத்தவனாகிய சாதுவனுக்கு மனைவி ஆதிரை யொருத்தியே. அவனும் சிலகாலம் கணிகையொருத்தியுடன் வாழ்ந்ததாகக் கூறப் படுகிறது. சங்க காலத்திலும் சங்க மருவிய காலத்திலும் ஆடவர்சிலர் கணிகையரைச் சேர்ந்தனர் எனினும் பெரும்பாலும் ஒருதாரம் கொள்ளும் முறையே தமிழ்நாட்டில் இருந்ததெனத் தோன்றுகிறது.

மனைவியை வாழ்க்கைத் துணை எனக் கூறிய வள்ளுவர் ஒரு தாரமுறையையே விரும்பினர் எனக் கொள்ளல் பொருந்தும். அவர் பலதாரம் கொள்ளுதல் தவறு என எங்கும் வெளிப்படையாகக் கூறவில்லையெனினும் காமத்துப்பால் முழுவதும் ஒருவனும் ஒருத்தியும் இணைந்து வாழும் வாழ்க்கையையே காட்டுகிறது. அங்கு மற்றொருத்திக்கு இடமில்லை. பரத்தையிற்பிரிவையும் வள்ளுவர் கூறவில்லை. சில குறள்கட்கு உரையாசிரியர் சிலர் பரத்தையிற் பிரிவைக் குறித்ததெனப் பொருள் கொண்டாராயினும் அக்கருத்து குறளில் இல்லை. ஊடலைக் குறித்த அதிகாரங்களிலும் பரத்தையிற் பிரிவு காரணமாக ஊடல் நிகழ்வதாக வள்ளுவர் எங்கும் கூறவில்லை. கலித்தொகையில் மருதத்திணைச் செய்யுட்கள் பல பரத்தையர் காரணமாக ஊடல் நிகழ்வ தாகவே காட்டுகின்றன. திருக்குறளிலோ, தலைவி,

இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்
வல்ல தவரளிக்கு மாறு (1321)

எனக் கூறுகிருர். ஊடற்சுவையின் பொருட்டும் தலைவனின் அன்பை மிகுதிப்படுத்தும் பொருட்டும் இல்லாத காரணத்தைக் கற்பித்துக் கொண்டே தலைவி ஊடுகிருள்.

வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரத்தை நோக்கும் போதும் ஒரு தாரமுறையை வள்ளுவர் உளத்திற் கொண்டே அதை எழுதினர் எனத் தோன்றும். மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான் வளத்தக்காளாய் அவனைப் பேணும் கடப்பாடுடையவளாய் வாழும்

ஒரு மனைவியையே வள்ளுவர் எண்ணினர். இல்வாழ்வானுக்குத் துணையாக நின்று இல்லத்தை நடத்துபவள் (தாயோ பிற உறவினரோ அன்றி) மனைவியே, மனைவி ஒருத்தியே என்பதே வள்ளுவர் கருத்தாகத் தோன்றுகிறது.

ஒருவனும் ஒருத்தியும் இணைந்து வாழ்ந்து நன்மக்களைப் பெற்று வளர்த்துச் சுற்றத்தோர்க்கும் உதவியளித்து விருந்தோம்பி மற்றும் பல அறங்களையும் வழிபாடுகளையும் இயற்றிவாழும் இல்லத்தையே வள்ளுவர் நல்லில்லமாகக் கொண்டார்.

## 2. 1 திருமணம்

குடும்ப வாழ்க்கை திருமணத்திலிருந்தே தொடங்குகிறது. தலைவன் தலைவியரின் அன்பு வாழ்க்கை அதற்கு முன்பிருந்தே தொடங்குதல் கூடும்.

வள்ளுவர் காதல் மணத்தை, அதாவது பெற்றோரோ பிறரோ மணம் பேசி ஒருப்பட்டுத் திருமணத்தை ஒழுங்கு செய்தலின்றி, உரிய பருவமுள்ள ஆடவனும் பெண்ணும் தாமே எதிர்ப்பட்டு ஒருவரை யொருவர் விரும்பி மணம்செய்ய நிச்சயித்துப் பின் (பெற்றோர் அவர் விருப்பையுணர்ந்து திருமணத்தை நடத்த இசைவதனுலோ அன்றிப் பிறர் உதவியினுலோ) ஊரறிய மணம் செய்து வாழும் முறைமையையே ஆதரித்தார் என்பதைக் காமத்துப்பால் காட்டும். அவர் விரும்பும் சமுதாயத்தில் இத்தகைய முறையே இருக்கும் எனக் கொள்ளலாம்.

காமத்துப்பாலில் காணப்படும் தலைவன் தலைவியர் தாமே எதிர்ப் பட்டு ஒருவரையொருவர் விரும்பி,

> உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன
> மடந்தையொடு எம்மிடை நட்பு (1122)

எனத் தலைவன் வியந்து கூறத்தக்க அன்புடையராயினர். பின்பும் அவர்களன்புத் தொடர்புக்கு ஊரவராலோ பெற்றோராலோ தடையேற் படத் தலைவன் மடலேற எண்ணியும் தலைவி தன்னில்லத்தில் காப்புச் சிறை மிகுந்ததனுல் (பெற்றோர் இல்லத்தை விட்டு வெளியில் செல்ல லாகாதெனத் தடை செய்ததனுல்) வருந்தியும் பின் ஊரவர் அலருரைப் பவும் தம்மன் பிற்குறைவு படாதவராயிருந்தும் பல இடையூறுகளை மேற்கொண்டே மணம் செய்யப் பெற்றுர் எனத் தோன்றும்.

ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய் (1147)

எனத் தலைவி தோழிக்குச் சொல்லும் முறையில் ஒரு குறள் அமைந் திருப்பதால் தலைவியின் தாயும் முதலில் அவள் தலைவனுடன் கொண்ட தொடர்பை விரும்பாது தடுக்க முயன்றாள் எனக் கொள்ளலாம். ஆயினும் தன்சொற்கள் தலைவியின் உள்ளத்தை மாற்றவில்லை என்பதையுணர்ந்து பின் திருமணத்துக்கு இசைந்தனள் போலும். (யாருடைய முயற்சியினால் இறுதியில் திருமணம் கைகூடிற்று என்பது காமத்துப்பாலில் தெளிவாகக் கூறப்படவில்லை. அலரறிவுறுத்தலுடன் களவியல் முற்றுப் பெறுகிறது.)

தொடிநோக்கி மென்றோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண்டு அவள்செய் தது (1279)

என்னும் குறள் உடன்போக்கைக் குறிப்பதாகவே உரையாசிரியர்களும் இப்பாடலை ஆயும் தற்காலத்து அறிஞர்களும் கொள்கின்றனர். அவ்வாறாயின் உடன்போக்கும் வள்ளுவர் கருத்துக்கு உடன்பாடே யாதல் வேண்டும். இக்குறள் கற்பியலில் காணப்படினும் களவுக் காலத்து நிகழ்ச்சியைக் கூறுவதாகவே கொள்ளல் பொருந்தும். உடன்போக்கு களவிற்குரியதே. கற்பினுள் உடன்போக்கு நிகழ்தல் இல்லை. எச்செய்யுள்கள் கற்புக்குரியன எவை களவுக்குரியன என்பது காமத்துப்பாலில் சற்றுக் குழப்பமாகவே யுள்ளது. இது முன்பும் குறிப்பிடப்பட்டது. களவுக்காலத்தில் வரைவிடைவைத்து (அதாவது பின்பு வந்து திருமணம் செய்து கொள்வதாகக் கூறிப்) பிரிய எண்ணிய தலைவன் கருத்துக்கு உடன்படாது உடன்போக எண்ணிய தலைவியின் செயலே இக்குறளில் கூறப்பட்டது. தலைவன் பிரியின் தன் தொடி கழலும் தோள் மெலியும் என எண்ணி அவற்றை நோக்கி அவ்வாறு நிகழாமல் அவன் செல்லுங்கால் உடன் நடத்தல் வேண்டும் என்னும் குறிப்புடன் தன்னடியையும் நோக்கினளாம். இக்குறள் உடன்போக்கைக் குறிப்பதாயின் தலைவி தன்பெற்றோர் ஒருப் பாடின்றித் தலைவனுடன் சென்று தலைவன் பெற்றோர் உதவியினாலோ பிற சான்றோர் உதவியினாலோ திருமணம்செய்து கொள்ளும் முறையும் வள்ளுவர்க்கு ஏற்புடையதே எனக் கோடல் வேண்டும்.

இத்தகைய நிகழ்ச்சிகள் பொதுவாக அகப்பொருள் இலக்கியங்கள் பலவற்றினுள்ளும் காணப்படுவனவே. அம்மரபைப் பின்பற்றி வள்ளுவர் எழுதியிருத்தல் கூடும். வள்ளுவர் களவில் தோன்றிக்

கற்பாக மலரும் இம்மண முறையை ஆதரித்தார் எனினும் வள்ளுவர் காலத்தில் திருமணங்கள் யாவும் இம்முறையில் நிகழ்ந்தனவா என்பது ஐயத்திற்குரியதே. சங்க காலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் யாவரும் இம்முறையிலேயே மணம் செய்து கொண்டனராயின் அலரெழுவதற்கே இடம் இல்லை. அதுவே யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மண முறையாயின் தலைவன் தலைவியர் தொடர்பை யறியும் ஊரவர் 'இது இயல்பு; யாவரும் இவ்வாறு தானே களவொழுக்கம் பூண்டு பின் மணம் புரிகின்றனர்' என எண்ணி வாளா விருப்பரேயன்றிக் குறை கூறுர். அவர்கள் தொடர்புக்குத் தடையேற்படுதலும் தலைவன் மடலேற எண்ணுதலும் நிகழா. இம்மணமுறை இலக்கியங்களில் பெரிதும் பாராட்டப்படினும் அக்காலத்தும் சிலரே இம்முறையில் மணம் புரிந்தனர். பிறவகை மணங்களும் நிகழ்ந்தன எனக் கொள்ளினே அலரெழுவதைப் புரிந்து கொள்ளல் கூடும்.

தொல்காப்பியரே எட்டுவகை மணங்களை அறிந்திருந்தார். ஆயினும் அவர் அவற்றை ஆரியர் நாட்டனவாகக் கருதி 'மறையோர் தேஎத்து மன்றல் எட்டு' எனக் குறிப்பிட்டார்.[3] இவற்றுட் சிலவோ அன்றி வேறுவகைத் திருமணங்களோ, தொல்காப்பியரால் காமக்கூட்டம் எனக் குறிப்பிடப்படும் மணமன்றிப் பிறவகை மன்றல்களும் தமிழ் நாட்டிலும் நிகழ்ந்திருத்தல் வேண்டும். மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள் அசுரம் எனப்படும் மணத்தையொத்த ஏறு தழுவி மணம் செய்து கொள்ளும் முறை தமிழ்நாட்டில் முல்லை நிலப்பகுதிகளில் வழக்கத்திலிருந்தமையைக் கலித்தொகையில் முல்லைத்திணையில் வரும் பல பாடல்களால் அறியலாம். மேலும் பெற்றோரால் பேசி நிச்சயிக்கப்படும் மணங்களும் அக்காலத்து நிகழ்ந்தன என்பதை அகப்பொருள் நூல்களில் வரும் குறிப்புக்களே காட்டுகின்றன. தொல்காப்பிய உரையிலும் பிற அகப்பொருள் நூல்களிலும் அறத்தொடு நிற்றற்குரிய காலங்களெவையெனக் கூறுங்கால் நொதுமலர் வரைவு நிகழுமென அஞ்சுமிடத்து அறத்தொடு நிற்றல் பொருந்துமெனக் கொள்ளப்படுகிறது.[4] நொதுமலர் வரைவு யாது? தலைவியைப் பிற ஆடவன் ஒருவனுக்கு மணம் பேச அவன் பெற்றோரோ பிறரோ வந்தவிடத்துத் தலைவியும் தோழியும் நொதுமலர் வரைவை யஞ்சுகின்றனர். தலைவி யாரைத் தனக்குத் தலைவனக உள்ளத்தில் வரைந்துள்ளாள் என்பதைத் தாய் முதலியோருக்கு அறிவிக்க முற்படுகின்றனர். ஓர் ஆடவனும் பெண்ணும்

---

3 தொல்காப்பியம், பொருளதிகாரம், 92

4. மேற்படி, 206, நச்சினர்க்கினியருரை

ஒருவர்க்கொருவர் அறிமுகமில்லாதிருக்கும்பொழுதே பிறர் மணம் பேசிப் பின் மணம் செய்விக்கும் முறை நாட்டில் நிலவியிருந்ததனுல் தானே அகப்பொருள் நூல்களில் வரும் தலைவி ஒருவனைக் கண்டு பழகித் தன் தலைவனுக எண்ணி விரும்பியிருப்ப அவள் அறியாத பிறனெருவனுக்கு மணம் பேசப்படும் ஒரு நிலைமை ஏற்படுகிறது?

சிலப்பதிகாரத்தில் கோவலனுக்கும் கண்ணகிக்கும் நிகழ்ந்த திருமணம் பெற்ருேரால் மணம் பேசி ஒழுங்கு செய்யப்பட்டதே - "அவரை, இரு பெருங்குரவரும் ஒரு பெருநாளால் மணவணி காண மகிழ்ந்தனர்" என மங்கல வாழ்த்துப்பாடல் கூறுகின்றது. குரவர் (பெற்ருேர்) விரும்பியபடி அத்திருமணம் நிகழ்ந்தது. ஏறு தழுவி மணம் செய்யும் முறையும் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படுகிறது. கண்ணகி ஆயர் பாடியில் தங்கிய பொழுது அங்குச் சிறுமியர் எழுவரை யழைத்துக் குரவைக் கூத்தாடும்படி பணித்த மாதரி அவ்விளங்கோதையராகிய எழுவரும் தொழுவிடை ஏறு குறித்து வளர்த்தார் எனக் கூறுகின்ருள். அவ்வெழுவரில் ஒவ்வொரு சிறுமியும் சிறுவயதிலிருந்தே ஒருஏற்றை வளர்த்து வந்தனளாம். பின் உரியபருவம் வருங்கால் அப்போது நன்கு வளர்ந்திருக்கும் ஏற்றைக் கயிறவிழ்த்துவிட்டு அடக்க ஆடவர் முன் வருவர். அவ்வவ்வேற்றை அடக்கும் ஆடவனை அவ்வப்பெண் மணம் செய்து கொள்வாளாம். இவ்வாறு ஆய்ச்சியர் குரவையுள் கூறப் படுகிறது. வஞ்சினமாலையில் கண்ணகி கூறும் கற்புடைய மகளிர் எழுவரைக் குறித்த செய்திகளும் மணம் பேசி மணம் செய்விக்கும் முறை அக்காலத்திலிருந்தமையைக் காட்டும். தன்தாய் சிறுவயதில் பிறிதொரு சிறுமியுடன் விளையாடிக் கொண்டிருந்த பொழுது 'என் மகளை யுன்மகனுக்கு மணம் செய்விப்பேன்' எனக் கூறியதை யறிந்து அப்போது பெரியவளாகி ஒருதாயாக இருந்த அப்பெண்ணின் மகனையே ஓர்இளம்பெண் மணம் செய்ய முன்வந்தாள் எனக் கூறப் படுவது பெற்ருேர் மணம்பேசி மணம் செய்விக்கும்முறை நாட்டில் இருந்ததனுலேயாம். இந்நிகழ்ச்சிகளுள்ளும் வன்னிமரமும் மடப் பள்ளியும் சான்ருக முன்னிறுத்திக் காட்டிய மொய்குழலாள் அகப் பொருள் நூல்களிற் கூறப்படுவதன்படி உடன்போக்கின்பின் மணம் செய்தவள் ஆதல் கூடும். சிலப்பதிகார காலத்தில் பலவகை மணங்கள் தமிழ்நாட்டில் நிகழ்ந்தனபோலும்.

வள்ளுவர் காலத்திலும் பலவகை மணங்கள் நாட்டில் நிகழ்ந்து வர இருவர் தம்முள் மனமொத்து மணம் புரியும் முறையை அவர் விரும்பி யிருத்தல் கூடும்.

காமத்துப்பாலில் களவு கற்பு என இருபிரிவுகள் காணப்படுவதனுல் ஊரறியச் செய்யும் திருமண விணைமுறை (marriage ceremony) ஒன்று அக்காலத்திருந்தமை தெளிவு. ஆனுல் அவ்விணைமுறையைக் குறித்த குறிப்பு எதுவும் திருக்குறளில் இல்லை.

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினேர் கொடுப்பக்கொள் வதுவே
(தொல். பொருள்: 142)

எனத் தொல்காப்பியர் கற்பியலின் முதற்கண் கூறுவதனுல் அவர் காலத்திலேயே கரணம் அல்லது திருமண விணைமுறை யொன்று இருந்தது என்பது பெறப்படுகிறது. ஆனுல் அக்கரணம் எத்தகையது எனத் தொல்காப்பியத்துள்ளும் விவரமாகக் கூறப்படவில்லை. கரணத்தின் பின்னிகழ்வதே கற்பு எனக் கொள்ளப்பட்டது.

'மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட'த் தீவலம் செய்து மணம் செய்து கொள்ளும் முறையைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.[5] அகநானூற்றுச் செய்யுளொன்றில் பிறிதொரு மணவிணைமுறை கூறப்படுகிறது. விருந்தினர்க்கு உழுந்தொடுகூடிய பொங்கலை உணவாக அளித்துப் பந்தரின் கீழ் மணற்பரப்பி இல்லத்தில் விளக்கேற்றி மணமானவர்களும் மக்கட்பேற்றை யுடையவருமாகிய மகளிர் கூடிக் குடங்களிலும் புதுமட்கலங்களிலும் நீரெடுத்து வந்து மணமகளை நீராட்டி அவள் கூந்தலின் மேல் நெல்லும் மலரும் தூவிக் 'கற்பினின்றும் வழுவாது பல நற்பேறுகளையும் அளித்து நின் கணவன் விரும்பத்தக்கவாறு அன்புடையவள் ஆவாயாக' என்றும் 'பெரிய இல்லத்தின் தலைவி ஆவாயாக' என்றும் வாழ்த்தி மணமகனுக்களிப்பதே அவ்வதுவை முறையாம்.[6]

வள்ளுவர் காலத்திலிருந்தது எவ்வதுவை முறையென்பது தெளிவாகவில்லை. தலைவனுக்கும் தலைவிக்குமிடையே உள்ள அன்பு திருமணத்துக்கு முன்னேயே உறுதிப்பட்டதாயினும் ஏதோவொரு திருமண விணைமுறையின்படி ஊரறிய மணம் செய்த பின்னரே அவர்கள் இல்லறத்தை யேற்பர் என்பது களவு கற்பு என்னும் பாகுபாட்டால் அறியப்படும்.

---

5. சிலப்பதிகாரம், மங்கலவாழ்த்துப் பாடல்: 52 - 53

6. அகநானூறு 86

## 2. 2. வளமான வாழ்க்கை

வள்ளுவர் துறவறம் எனத்தனியே ஓர் அறத்தைக் கூறினுர் ஆயினும் வாழ்க்கையே தீது எனவோ வாழ்க்கையில் இன்பங்களை நுகர்வது தவறு எனவோ இல்லறத்தோரும் ஓரளவு துறவு மனப்பான் மையை உடையவராக இருத்தல் வேண்டுமெனவோ அவர் கருதிய தாகத் தோன்றவில்லை. இல்லறத்தோர் குழந்தைகளைப் பெற்று வளர்த்துச் சமூகத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதற்கு மட்டும் இல்லறம் பூண்பவர்களல்லர். வாழ்க்கையில் பல நற்பொருள் களைப் பயன்படுத்திக் கொள்ளவும் அறத்தொடு பொருந்திய இன்பத்தை நுகரவும் உரியவர்களே. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையுமே பண்டையோர் வாழ்க்கையின் குறிக்கோள்களாகக் கொண்டனர். வள்ளுவரும் அவ்வாறே கருதினுர். இன்பம் விலக்கப் படுவதன்று.

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன் (629)

என வள்ளுவர் இடுக்கண் அழியாமையிற் கூறினரெனினும் காமத்துப் பாலை நோக்குமிடத்து அங்குத் தலைவன் தலைவியர் இன்பதுன்பங் களுள் நன்கு அழுந்துபவர்களாகவே காணப்படுகின்றனர். முன்னது அரசர் போன்ற பெரும்பொறுப்புடையோர்க்குக் கூறப்பட்ட அறிவுரை யாகவும் பின்னது பொதுமக்களின் இயல்பாகவும் இருத்தல் கூடும்.

இல்லறத்தோரும் சிறந்த ஆடையணிகள், நறுமணப் பொருள்கள் முதலியவற்றை நாடுதலாகாது அல்லது நாடாம லிருப்பதே சிறப்பு எனச்சிலர் கருதுவது போல வள்ளுவர் கருதவில்லை. காமத்துப்பாலில் தலைவன், தலைவி, தோழி முதலியோர் இத்தகைய நற் பொருள்களைப் பயன்படுத்துகின்றனர். வளமான வாழ்க்கையுடைய வராகவே காணப்படுகின்றனர். செல்வமுடையோர் இவ்வளங்களை யெல்லாம் நுகர்தல் தகும், அது தவறன்று என்பதே வள்ளுவர் கருத்தாதல் வேண்டும்.

தலைவி தலைவனுல் முதன் முதலில் காணப்பட்டபொழுதே,

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் னெஞ்சு (1081)

(பொருள்-கனவிய குழைகளை அணிந்த இப்பெண் தெய்வப் பெண்ணே மயிலோ மானிடமகள்தானே என என்னுள்ளம் ஐயுறும்) என்று கூறி

வியக்கத்தக்கதாகச் சிறந்த ஆடையணிகளை அணிந்தவளாகவே தோன்றுகிருள். பின்னும் தலைவன் 'மான் போன்ற மட நோக்கினையும் நாணினையுமே தனக்கு இயல்பாய அணியாகக் கொண்ட இவளுக்கு வேறு அணிகலன்களை ஏன் அணிவித்தனர்?' எனக் கூறுவதிலிருந்தும் தலைவி பல அணிகலன்களை அணிந்திருந்தமை புலப்படும்.

தொடியும் வளையும் காமத்துப்பாலில் பன்முறை குறிப்பிடப்படுகின்றன. 'முன்கை இறைஇறவா நின்ற வளை' (1157), 'பணைநீங்கிப் பைந்தொடி சோரும்.........தோள்' (1234), 'என் தோள் மேற் கலம் கழியும்' (1262) 'தொடிநோக்கி மென்தோளும் நோக்கி' (1279) என வரும் தொடர்கள் அக்கால மகளிர் தோளில் தொடியென்னும் அணிகலமும் முன்கையில் வளையலும் அணிவது வழக்கமென்பதைக் காட்டும். தலைவி 'தோட்டார் கதுப்பினள்' (1105) அதாவது நிறைந்த மலர்கள் பொருந்திய கூந்தலையுடையவள் என அழைக்கப்படுவதனுலும் தலைவியின் மலரணியைக் கண்ட தலைவன் அவள் இடையின் சிறுமையைப் பாராட்டுமுகமாக 'அனிச்ச மலரைக் கால்களையாது அணிந்து கொண்டு வந்திருக்கிருளே, இனி இவள் இடை (முறிந்து விடும் ஆதலால் அதன்) பொருட்டு நல்லபறைகள் ஒலியா' எனக் கூறுவதனுலும் தலைவி மலரணியும் வழக்கமுடையவள் என்பது புலப்படும். கண்ணுக்கு மையெழுதுதலும் பல குறள்களில் குறிப்பிடப்படுகின்றது. தலைவியின் கண்கள் 'உண்கண்' (1091) எனவும் 'கயலுண்கண்' (1212) எனவும் புனைந்துரைக்கப்படுகின்றன. மேலும்,

> கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
> எழுதேம் கரப்பாக்கு அறிந்து (1127)
>
> எழுதுங்கால் கோல்காணுக் கண்ணேபோல் கொண்கன்
> பழிகாணேன் கண்ட விடத்து (1285)

என்ற குறள்களும் சிறுகோலினும் கண்ணுக்கு மையெழுதும் வழக்கத்தைக் காட்டும்.

வள்ளுவர் கருத்துப்படி மகளிர் திருமணத்துக்கு முன்னும் பின்னும் நல்ல ஆடையணிகளை அணியத்தக்கவர்களே. மலர்சூடியும் மையெழுதியும் தம்மை அழகு செய்து கொள்வதற்கும் உரியவர்களே. இவற்றை அவர் தவருகக் கருதவில்லை. மற்றும் சுவையுள்ள உணவை உண்பதற்கும் உரியவர்கள்.

> நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
> அஞ்சுதும் வேபாக்கு அறிந்து (1128)

என்ற குறளும் தலைவி நாடொறும் சூடாக உணவுண்ணக் கூடிய செல்வ வளத்தையுடையவளே என்பதை யுணர்த்தும்.

காமத்துப்பாலில் பின்வரும் தொடர்கள் தலைவியைக்குறித்துப் பயன்படுத்தப்படுகின்றன :- கனங்குழை (1081) - திரட்சியுடைய காதணிகளை யணிந்தவள். மாணிழை (1114)-மாட்சியுடைய அணிகளை யணிந்தவள். ஆயிழை (1124) - ஆயப்பட்ட (தெரிந்தெடுக்கப்பட்ட) அணிகளை அணிந்தவள். தொடலைக் குறுந்தொடி (1135) - தொடுக்கப்பட்ட மலர்மாலையையும் சிறிய தொடிகளையும் அணிந்தவள் அல்லது மாலைபோன்றவள், சிறிய தொடிகளை யணிந்தவள். பைந்தொடிப் பேதை (1238)-பசியகொடிகளை யணிந்த பேதை. செறிதொடி (1275) - செறிந்திருக்கின்ற தொடிகளை யணிந்தவள். ஒளியிழை (1329) - ஒளிபொருந்திய அணிகளை யணிந்தவள்.

இத்தொடர்களும் தலைவியின் செல்வநிலையையும் வளமான வாழ்க்கையையும் காட்டும். 'தம்மி லிருந்து தமது பாத்துண்டற்ருல்' (!107) என உவமை மூலமாகத் தலைவன் கூறும் அறக்கருத்தும் வினைமுடிவுற இருக்கும்தறுவாயில் வீடுசெல்லலைக் குறித்து எண்ணிய தலைவன் 'மாலை அயர்கம் விருந்து' என மகிழ்ந்துரைக்கும் விருப்பும் அவன் அறச்சிந்தனையைக் காட்டுவதுடன் செல்வவளத்தையும் புலப்படுத்துவனவே. தலைவன் தனக்குரிய இல்லத்தையுடைய வனுகவும் நாடோறும் பலரோடு உண்ணவும் விருந்தினர்களை வரவேற்று உணவளித்துப் பேணவும் தக்க வளத்தையுடையவனுகவும் இருந்தான் என இத்தொடர்கள் விளக்குகின்றன.

தலைவன் பயன்படுத்தும் வேறுசில உவமைகளும் அவன் நல்லுணவையும் நற்பொருள்களையும் அனுபவித்துப் பழகியவன் என்பதைக் குறிப்பன.

'பாலொடு தேன்கலந் தற்றே' (1121) எனத் தலைவன் பாலொடு கலந்த தேனை இனியதற்கு உவமையாகக் கொள்வதனுல் அவன் தேனும் பாலும் சுவைத்து மகிழ்ந்தவனுதல் வேண்டும். இன்னும் 'வேட்ட பொழுதின் அவையவை போலுமே' (1105) என்பது அவன் கூறும் மற்ருெரு உவமையாம். விரும்பிய பொருள்கள் விரும்பிய பொழுது கிடைப்பின் அவை எத்தகைய உவகையை நல்கும் என எண்ணி இங்குக் கூறுவதனுல் நுகர்தற்குரிய பல நற்பொருள்களை விரும்பியவாறு உண்டும் உடுத்தும் அணிந்தும் பூசியும் அனுபவித்தற்குரிய நல்வளம் அவன் அறிந்ததேயாகும்.

'கோட்டுப்பூச் சூடினும் காயும்' (1313) எனப் புலவி நுணுக்கத்தில் தலைவன் கூறுவதனால் தலைவனும் கண்ணியாகவோ அன்றி மாலையாகவோ மலர் சூடுவது வழக்கமே யென்பது போதரும்.

காமத்துப்பாலில் தலைவன் தலைவியர் மட்டுமன்றித் தோழியும் நல்லாடையணிகளை அணிவதற்கு ஏற்றவளே. அவளும் தலைவியால் 'இலங்கிழாய்' (1262) என அழைக்கப் படுகிறாள்.

வள்ளுவர் துறவறத்துள் துறவையும் தவத்தையும் புகழ்ந்தார் எனினும் இல்லறத்தோர் நற்செல்வமுடையராய் நுகர்தற்குரிய இன்பொருள்கள் பலவற்றையும் நுகர்ந்து வளமான வாழ்க்கை வாழ்தலையே விரும்பினார் எனக் கொள்ளலாம்.

## 2. 3. இல்லறம்

திருமணம் புரிந்து இல்லத்தை நடத்துவது இன்பத்திற்காக மட்டும் அன்று, அறத்திற்காகவுமே. இன்பம் விலக்கப்படுவதன்றெனினும் அறம் மறக்கத்தக்கதும் அன்று. இரண்டும் இணைந்ததே இல்வாழ்க்கையாகும்.

இல்லறத்தோர் பிறர்பலருக்குத் துணையாக நின்று உதவுதற்குரியவர் என்பதை இல்வாழ்க்கையின் முதலிருகுறள்கள் காட்டும்.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை (41)

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை (42)

இங்கு ஒவ்வொரு குறளிலும் மூவகையினர் குறிப்பிடப்படுகின்றனர். முதற்குறளில் **இயல்புடையமூவர்** என வள்ளுவர் தொகை வகையாக மூவரைக் குறிப்பிட்டார். அடுத்தகுறளில் **துறந்தார் துவ்வாதார் இறந்தாரெனப்** பிறர் மூவகையினரைக் கூறினார். இவ்விரு குறள்களுக்குமே பலவாறு பொருள் கூறப்படுகிறது.

'இயல்புடைய மூவர்' என்றதற்குப் பழைய உரையாசிரியர் அனைவரும் கொண்ட பொருள் அறஇயல்பினையுடைய பிரமச்சரிய அல்லது மாணவ நிலையினுள்ளோர், வனப்பிரத்த நிலையிலுள்ளோர், துறவியர் ஆகிய மூவர் என்பதே. வாழ்க்கையில் நான்கு நிலைகள் உள என்ற கருத்தைத் தழுவியே இவர் பொருள் கூறினர். ஒவ்வொரு

ஆடவனும் இளம் வயதில் தூய ஒழுக்கமுடையனாய் ஓர் ஆசிரியர்பால் கல்வி கற்றுப் பலஆண்டுகள் பிரமச்சரியம் அல்லது மாணவ நிலையைக் காத்தற்குரியவன், பின் கல்வி முற்றுப்பெற்றபிறகு திருமணம் செய்து இல்லறத்தில் ஈடுபடற்குரியவன், தன் மக்கள் வளர்ந்து குடும்பப் பொறுப்பையேற்றுக் கொள்ளத்தக்க வயதடைந்த பின் இல்லத்தை விட்டு மனைவியுடன் காடுறை வாழ்க்கை மேற்கொண்டு வழிபாட்டிலும் சமயநூற்கல்வியிலும் தன்காலத்தைக் கழித்தற்குரியவன், இறுதியில் மனைவியொடும் தொடர்பில்லாதவனாய் நிலையாகத் தங்குமிடமின்றித் துறவு வாழ்க்கை மேற்கொள்ளற்குரியவன் என்பதே நான்கு ஆசிரமங்கள் அல்லது நிலைகள் என்பதன் விளக்கமாம். இக்கருத்து பண்டைக் காலத்து இந்திய நாட்டில் சிறப்பாக வடமொழி நூல்களில் பயிலப்பட்டு வந்ததேயாகும். நூல்களில் இவ்வாறு கூறப்படினும் வாழ்க்கையில் இந்நான்கு நிலைகளையும் பெரும்பாலோர் மேற்கொள்ளவில்லையென இந்திய வரலாற்றை ஆய்ந்தோர் கூறுகின்றனர். சிலர் இல்லறத்தை மேற்கொள்ளாமலே துறவு பூண்டனர். பலர் இல்லறத்தில் ஈடுபட்டுப் பின்னிரு நிலைகளையும் ஏற்காதொழிந்தனர் எனக் கூறப்படுகிறது. [7]

இது எவ்வாறாயினும் வள்ளுவர் இந்நான்கு நிலைகளை ஏற்றுக் கொண்டாரா என்பது ஐயத்திற்குரியதே. இல்லறத்தையும் துறவறத்தையும் அவர் ஏற்றுக்கொண்டார். மாணவநிலை (பிரமச்சரியம்) காடுறை வாழ்க்கைநிலை (வனப்பிரத்தம்)பற்றிய குறிப்பு எதுவும் பிற குறள்களில் இல்லை. காமத்துப்பாலும் தலைவன் தலைவியைக் காணும் நிலையில் தொடங்குகிறதேயன்றி அதற்குமுன் தலைவன் மாணவ நிலையிலிருந்து கல்வியில் ஈடுபட்டிருந்தானா யாது செய்து கொண்டிருந்தனன் என்பதைப் பற்றிய குறிப்பு எதுவும் அங்கும் இல்லை. தலைவன் திருமணத்திற்குரிய பருவம் வரை பிரமச்சரிய நிலையையேற்று ஓர் ஆசிரியர்பால் கல்வி கற்கும் கடப்பாட்டை மேற்கொண்டிருந்தானாகில் அவன் எப்பொழுது களவொழுக்கத்தை மேற்கொண்டான் என்ற

---

7. Basham, A. L. **The Wonder that was Ind** Chap. V. Society, Class. Family and Individual, The four stages of life P. 160.

"This scheme, of course, represents the ideal rather than the real. Most young men never passed through the first stage of life in the form laid down, while only a few went beyond the second. Many of the hermits and ascetics of ancient India were not old men and had either shortened or omitted the stage of the house holder".

கேள்வியெழ இடமுண்டு. பிரமச்சரியம் எனப்படும் மாணவ நிலையில் அவன் களவொழுக்கத்தை மேற்கொள்ளல் பொருந்தாது. அவ்வாறு செய்யின் அது தவறும் ஆகும். ஆகவே கல்வி கற்கும் வரையில் பிரமச்சரிய ஒழுக்கங் காத்துக் கல்வி முற்றுப்பெற்று ஆசிரியர்பால் பயிலும் நிலைமுடிந்த பின்பே களவொழுக்கத்தில் ஈடுபட்டு அதன் பின் மணம் புரிந்தான் என ஒருவாறு அமைத்துக் கொள்ளல் வேண்டும். களவின் பின் கற்பைக் கூறல் தொல்காப்பியர் காலத்தின் முன்னிருந்தே தமிழ் அகப்பொருள் நூல்களில் காணப்படும் மரபு. வாழ்க்கையின் நான்கு நிலைகள் என்பது வடமொழி நூல்களில் பயின்ற ஒரு கருத்தாகும். இரண்டையும் இணைப்பது சற்று இடர்ப்பாடுடையதே.

வாழ்க்கையின் நான்குநிலைகள் என்ற கருத்தை வள்ளுவர் ஏற்றுக் கொண்டாரா என்பதைக் குறித்துப் பரிமேலழகர்க்கும் ஓரளவு ஐயம் இருந்திருத்தல் வேண்டும். ஏனெனில் பிரமச்சரிய ஒழுக்கத்தாரையும் வனப்பிரத்த நிலையினரையும் வள்ளுவர் பிறர்மதமேற்கொண்டு கூறினர் என்றார் பரிமேலழகர்.

இல்வாழ்க்கை ஏற்போன் ஏனைய மூன்று நிலையைச் சேர்ந்தவர்க்கும் துணையெனப் பொருள் கொள்ளின் அவர்கள் தத்தம் ஒழுக்கத்தை மேற்கொள்வதற்குப் பசி குளிர் நோய் முதலியவற்றால் இடையூறு நேராதவாறு உணவு, உடை, மருந்து, உறையுள் முதலியவற்றை அளித்து உதவுவது இல்வாழ்வானின் கடன் ஆகும்.

தற்காலத்தில் திருக்குறளுக்கு உரைகண்ட அல்லது காண முயன்ற அறிஞர் சிலர் இக்குறளுக்கு வேறு வகையாகப் பொருள் கூறுகின்றனர். இயல்புடைய மூவர் என்பதற்குத் தந்தை தாய் மனைவி என்றோ அல்லது பெற்றோர்-மனைவி-மக்கள் என்றோ பொருள் கொள்ளுதலும் கூடும். இல்வாழ்வான் என்பான் என இல்லறத்தையேற்ற ஆடவனே குறிப்பிடப்படுகிறான். ஆதலால் இயல்பாகத் தன்னால் ஆதரிக்கப்பட வேண்டிய அல்லது இயல்பாகத் தனக்கு மிக நெருங்கிய உறவுடைய பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய மூவர்க்கும் அவன் நல்லாற்றின் நின்ற துணை எனக் கூறுவது பொருத்தமே. இவ்வாறு கூறுவதனால் பெற்றோரும் இல்லறத்தையேற்ற மகனும் ஒரு இல்லத்திலேயே வாழ்ந்தனர் எனவும் இது கூட்டுக் குடும்ப வாழ்க்கையைக் குறிக்கிறதெனவும் கொள்ள வேண்டுவதில்லை. வேறு இல்லத்தில் வதியினும் பெற்றோரை யடிக்கடி சென்று கண்டு விசாரித்தும் பொருள்

வேண்டுமாயின் கொடுத்தும் நோயுற்றபோது உடனிருந்து உதவியும் பலவாறு துணையாக இருத்தல் கூடும்.

இனித்துறந்தார், துவ்வாதார், இறந்தார் என்பன யாரைக் குறிப்பன எனவும் வெவ்வேறு பொருள்கள் கூறப்படுகின்றன. பழைய உரையாசிரியர்களே இதில் வேறுபடுகின்றனர்.

துறந்தார் என்பதற்குப் பொதுவாக இருவிதமாகப் பொருள் கொள்ளப்படுகிறது. துறந்தோர் துறவியரே என்பதொன்று; களைகண்ணுனவரால் துறக்கப்பட்டோர் என்பது மற்றது. பிற்கூறிய பொருளின்படி கணவனுல் துறக்கப்பட்ட பெண், பெற்ருேரால் துறக்கப்பட்ட குழந்தைகள் ஆகியோரை இச்சொல் குறிக்கும் போலும். காலிங்கர் 'குடிப்பிறந்தாரால் ஒரோர் காரணத்தினுல் வெகுண்டு துறக்கப்பட்டார்க்கும்' என்ருர். அவ்வாருயின் சாதியினின்றும் நீக்கப்பட்டார் என்பது பொருள் போலும்.

துவ்வாதார் வாழ்க்கையில் இன்பங்களை நுகர இயலாத நிலையிலிருப்பவர் என்பது தெளிவு. அது யாவரும் உடன்பட்ட பொருளே. மிக்க வறுமையினுலோ குருடு செவிடு முடம் முதலிய உடற்குறைகளினுலோ நோயினுலோ அறிவுக்குறையினுலோ (அறிவுக்குறை கல்வியின்மையன்று, இயல்பான அறிவு வளர்ச்சியின்றிக் கல்விபுகட்டினும் கற்கஇயலா அறிவுக்குறையுடையோர் பலர் உளர் எனஉளநூல் கூறும்) பொருள் தேடவும் வாழ்க்கையின் வளங்களை நுகரவும் இயலாநிலையிலுள்ளோரே துவ்வாதார் ஆவர்.

இறந்தார் என்பதற்கு மரித்தோர் எனவும் இல்வாழ்க்கை வாய்ப்புக்களை இழந்தோர் எனவும் பொருள் கூறப்படுகிறது மரித்தோர்க்குரிய கடன்களைச் செய்தலும் இல்வாழ்க்கை வாய்ப்புக்களை இழந்தோர்க்கு உதவுதலும் கூட இல்லறத்தாரின் கடனுகலாம்.

துறவியர்க்கு வேண்டுவனவற்றை யளித்து ஆதரித்தலும் இல்வாழ்வோர் கடமை என்பது வள்ளுவர் கருத்தே. இக்கருத்து பல இடங்களில் கூறப்படுகிறது.

> துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
> மற்றை யவர்கள் தவம் (263)

என வள்ளுவர் துறவறவியலுள்ளும் கூறினுர். உரையாசிரியர்களிலும் சிலர் துறவியரை இயல்புடைய மூவரில் ஒருவர் எனவும் சிலர் இரண்டாம் குறளில் குறிப்பிடப்படும் துறந்தோர் எனவும் கொண்டனரே

யன்றித் துறவியரை ஆதரித்தல் இல்லறத்தோர் கடன் என்பது யாவர்க்கும் உடன்பாடே.

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காவியங்களும் துறவியரை வரவேற்று உணவளித்துப் பேணுதலை ஒருசிறந்த அறமாகப் போற்றுகின்றன. கொலைக்களக்காதையிற் கண்ணகி, கோவலன் தன்னை விட்டுப் பிரிந்ததனால் தான் இழந்த நற்பேறுகளை,

அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை
(சிலம்பு 16. 71 — 73)

என்றே கூறினள். துறவோர்க்கெதிர்தல் இங்குக் குறிப்பிடப்படும் நான்கு அறங்களில் ஒன்றாகும். மணிமேகலையுள்ளும் அக்காவியத் தலைவி சென்றபிறவியில் சாதுசக்கரன் என்னும் துறவியை வரவேற்று உணவளித்துப் பின் இறக்கும் போதும் அச்செயலை நினைந்த நல்வினையின் பயனாகவே அப்பிறவியில் (மணிமேகலையாய பிறவியில்) பலருக்கு உணவளிக்கத் தக்கதாக அமுதசுரபியைப் பெற்றாள் எனக் கூறப்படுகிறது. துறவியரைப் பேணல் அக்காலத்துச் சிறந்த அறமாகப் பலராலும் கருதப்பட்டது.

இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே (புறம் 6. 19-20)

எனப் புறநானூற்றில் துறவோரை வரவேற்று வணங்குமாறு கவிஞர்கள் அரசர்க்கும் அறவுரை கூறுகின்றனர். அக்காலத்தில் தமிழ்நாட்டில் பரவியிருந்த கருத்தையொட்டியே வள்ளுவரும் துறவோரைப் பேணுதல் இல்லறத்தோர்களின் கடமைகளில் ஒன்று என்றார்.

மிகவறியோர்க்கு உடற்குறையுள்ளோர்க்கு அல்லது வேறு காரணத்தினால் பொருள்தேடும் வாய்ப்பு இல்லோர்க்கு உதவ வேண்டுவது இல்வாழ்வோர் கடன் என்பதும் குறளில் பன்முறை கூறப்பட்ட கருத்தே யாகும். ஈகை, ஒப்புரவு என்னும் அதிகாரங்களும் பொருட்பாலில் குடிமை, சான்றாண்மை முதலிய தலைப்புக்களின்கீழ் வரும் சில குறள்களும் கூட இக்கடப்பாட்டை வலியுறுத்தும்.

இல்வாழ்வோன் இவ்வுலகத்துத் தன்னொடு சமகாலத்தில் வாழ்கின்ற மக்கட்குமட்டுமன்றி வேறு சிலர் திறத்திலும் சில கடன்களையுடையவனாகிறான். தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான்

என ஐந்திடத்தும் அவன் தன் அறத்தைக் கடைப்பிடிக்க வேண்டு மெனக் குறள் கூறுகிறது. விருந்தினரைப் பேணுதல் சுற்றம் தழுவுதல் அறன் என்பது தெளிவு. இல்வாழ்வான் தன்னை ஓம்புதல் அறம் என வள்ளுவர் இங்குக் கூறினர். ஒரு குடும்பத்தலைவன் பல கடமைகளை யுடையவன். தன்மனைவி மக்களைக் காப்பாற்ற வேண்டும். சமூகத்தில் பல திறத்தோர்க்கு உதவுதல் வேண்டும். ஒரு குடும்பத் தலைவன் நோயுற்றால் என்ன ஆகும்? அவன் பிற அறங்களைச் செய்ய முடியாத நிலைமை ஏற்படுவதுடன் அவனும் அவன் மனைவி மக்களும்கூடப் பிறரின் உதவியை எதிர்பார்த்து நிற்க வேண்டியதாகும். ஒரு குடும்பத் தலைவன் தன்னைப் பேணுவதும் அறமே. கள் முதலியவற்றை யருந்துவதனாலோ, அளவுக்கு மீறி உண்பதனாலோ, இரவில் கண் விழித்துச் சூதிலோ பிற களியாட்டங்களிலோ ஈடுபடுவதனாலோ ஒருவன் தன் உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்வானேயானால் அது அறத்திற்கு மாறாகும் என்றே நீதி நூலோர் அனைவரும் கூறுவர். அவ்வாறு செய்பவன் தன்னை ஓம்பாதவன் ஆகிறான். தன்னை ஓம்புவ தென்பது தன்னலவாழ்க்கை வாழ்வது அன்று. கட்டுப்பாடான வாழ்க்கை நடத்தித் தன் உடலும் உள்ளமும் கெடாது காப்பதே.

தென்புலத்தார், தெய்வம் என்னும் சொற்களைக் குறித்தே பொருள் வேறுபாடு எழுகிறது. பழைய உரையாசிரியர்கள் அனைவரும் தென் புலத்தார் பிதிரர் என்றனர். ஆனால் பிதிரர் யார்? பிதிரர் படைப்புக் காலத்து அயனால் படைக்கப்பட்ட ஓர்கடவுட் சாதியென்றும் இவ்வுலகத்து முன்பு வாழ்ந்து மரித்தோரே பிதிரராவர் எனவும் பழைய உரையாசிரியரே இருவகையாகப் பொருள் கொண்டனர். 'தென்' என்பதற்கு இனிமை எனப் பொருள் கொண்டு திரு. வி. க. வும் கா. அப்பாத்துரையும் முறையே இனிய அல்லது அழகிய அறிவை யுடையோர் எனவும் இனிய கலைகளில் வல்லவர், கலைஞர்கள் எனவும் பொருள் கொண்டனர். அழகிய அறிவையுடையோர் துறவோராயின் துறந்தோருள் அடங்குவர், அவரும் இல்வாழ்வோராயின் அவர்க்கு இல்வாழ்வோர் துணையெனல் பொருந்தாது. அவ்வாறே கலைஞரும் இல்வாழ்க்கையில் ஈடுபடுதல் கூடும். திருமணம் புரிந்து கொள்ளாது கலைக்காகவே தம்வாழ்க்கையை அர்ப்பணித்த கலைஞர் இருப்பின் இல்வாழ்வோர் அவர்களை ஆதரிக்க வேண்டுமெனக் கூறலாம். வள்ளுவர் நுண்கலைகளைக் குறித்து அறிந்தவரே. இசை கூத்து முதலியவற்றைப் பற்றிய பல குறிப்புக்களைத் திருக்குறளில் வரும் உவமைகளில் காணலாம். ஆயினும் தென்புலத்தார் என்னும் சொல் இவ்விடத்தில் கலைஞர்களைக் குறிக்கிறதா என்பது ஐயத்திற்குரியதே.

தென்புலத்தார், தெய்வம் என அடுத்துத் தெய்வத்தைக் கூறுவதால் இச்சொல்லும் வேறுலகத்தவரைக் குறிப்பதாகவே தோன்றுகிறது. மேலும் தென்புல வாழ்நர் என்னும் சொல் புறநானூற்றில் (இறந்த) முன்னோர்களைக் குறித்தே வழங்கப்படுகிறது. அங்குப் பகை நாட்டின் மேற்செல்லுமுன் அரசன், "தென்புல வாழ்நர்க் கருங்கடனிறுக்கும் பொன்போல் புதல்வரைப் பெறாதோரை" அரண் சேருமாறு எச்சரித்தல் அறம் எனக் கூறப்படுகிறது (புறம் 9). புதல்வர், பெற்றோர் இறந்த பின் அவர் மறுமை நலத்தின் பொருட்டுச் சில கடன்களைச் செய்தற்குரியவர். ஆகவே இன்னும் புதல்வரைப் பெறாத இளம் ஆடவர் தாம் போரில் இறக்காதவாறு தம்மைக் காத்துக் கொள்ளல் வேண்டும். புதல்வர் பிறந்த பின் மரிப்போரே அவர் செய்யும் அக்கடன்களால் மறுமையில் நலத்தையடைவர் என்பதே இங்குக் கொள்ளப்பட்ட கருத்தாகும். இந்தத் 'தென்புல வாழ்நர்' என்னும் சொல் இறந்து வேறு உலகில் இருக்கும் முன்னோரையே குறிக்கிறது. வள்ளுவரும் தம்காலத்தில் அச்சொல் எக்கருத்தில் வழங்கப்பட்டதோ அக்கருத்தை உளத்திற் கொண்டே எழுதியிருப்பார் எனக் கொள்ளல் பொருந்தும். இவ்வுலகில் வாழ்ந்து இறந்த முன்னோர்திறத்து மக்களுக்குச் சில கடமைகள் உள எனக் கொள்வதில் தவறில்லை. சங்க காலத்திலும் சங்கமருவியகாலத்திலும் இறந்தோர் பொருட்டுப் பிறர் சில வினைமுறைகளைச் செய்தனர். தானங்கள் வழங்கினர். இவற்றைப் பற்றிய குறிப்புக்களைப் புறநானூறு சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் காணலாம்.[8] இவற்றால் வேறு பயனில்லாவிடினும் அம்முறையில் மக்கள் இறந்த முன்னோரைக் குறித்துச் சிந்தித்தனர். அவர்க்குத் தம்முளத்தில் நன்மதிப்பளித்தனர். இறந்த முன்னோரின் நற்குண நற்செயல்களைப் பின்னோர் பின்பற்றவும் இவை துணையாக இருந்திருக்கும். தற்காலத்தில் அத்தகைய வினைமுறைகளில் (கிரியை) பலருக்கு நம்பிக்கையில்லாவிடினும் முன்னோரைக் குறித்து எண்ணுதல் அவர்கள் செய்த அல்லது செய்ய முயன்ற அறங்களைத் தொடர்ந்து செய்தல் அவர் நற்கருத்துக்களைப் பின்பற்றல் என்னும் முறையில் அவர் திறத்துப் பின்னோர் தம்கடமையைச் செய்தல் கூடும். வள்ளுவர் மறுமையில் நம்பிக்கையுடையவரே. இறந்தோர் திறத்து இல்வாழ்வோர் செய்யத்தக்க கடன்கள் உள என்பதே அவர் கருத்துப் போலும்.

---

8. புறநானூறு *232, 234.*
சிலப்பதிகாரம் *15. 175 - 177.*

தெய்வம் என்னும் சொல்லை வள்ளுவர் ஒருமையிலா பன்மைப் பொருளிலா பயன்படுத்தினர் என்பதும் ஆய்வுக்குரியதாகிறது. கடவுள் வாழ்த்தில் வள்ளுவர் கடவுளை ஒருவராகவே கொண்டார். தேவர், அமரர், புத்தேள் என்னும் சொற்களும் திருக்குறளில் பல இடங்களில் ஆளப்படுகின்றன. இங்கு வள்ளுவர் குறிப்பிட்டது கடவுளையா தேவர்களையா என்பது ஐயத்திற்கு இடமாகவேயுள்ளது. எவ்வாறாயினும் வழிபாடு இல்லறத்தோர் கடமைகளுள் ஒன்று என்பது தெளிவு.

இல்வாழ்வோர் பல அறங்களையும் செய்தற்கு உரியவர். அதற்குப் பொருள் வேண்டும். பொருளீட்டுதலும் இல்வாழ்வோர் கடனே. பொருளீட்டும் வழியும் அறத்தொடு பொருந்தியதாக இருக்க வேண்டும் என்பதே வள்ளுவர் கருத்து. ஆகவே இல்வாழ்க்கை பழியஞ்சிப் பாத்தூண் உடையதாக இருத்தல் வேண்டும் என்றார் (44). பழியஞ்சி,பிறரை ஏமாற்றியோ வஞ்சித்தோ பிறர்க்குத் துன்பமுண் டாகும்வகையிலோ அன்றி நன்முயற்சியால் ஈட்டிய பொருளைப் பகுத் துண்டல் வேண்டும். குறிக்கோள் நன்றாக இருப்பின் வழி அல்லது உபாயம் எவ்வாறிருப்பினும் ஏற்றதே (The end justifies the means) என்னும் கருத்து வள்ளுவர்க்கு உடன்பாடன்று. குறிக்கோளும் நல்லதாக இருக்க வேண்டும். அதையடைவதற்குரிய வழிகளும் உபாயங்களுங் கூடக் குற்றமற்றனவாக அமைதல் வேண்டும் என்பதே அவர் விருப்பாகும். நல்வழியில் திரட்டிய பொருளைப் பகுத்துண்ணும் இல்வாழ்க்கை அழிதல் இல்லை என்றார் அவர். அவ்வில்வாழ்வானின் வழி அல்லது சந்ததி அழியாது என்றும் கொள்ளலாம். அத்தகைய இல்வாழ்வோர் நிறைந்த சமுதாயம் எஞ்ஞான்றும் அழிதல் இல்லை யெனவும் கொள்ளலாம். பழியஞ்சுதலும் பகுத்துண்டலும் இல்லாத சமுதாயம் அழிகிறது. அத்தகைய சமுதாயத்தில் ஒற்றுமையும் இனப்பற்றும் மக்களிடையே ஊக்கமும் மன உறுதியும் இல்லாமல் போய்விடுவதனால் பிறிதொரு நாட்டாரால் அல்லது இனத்தாரால் தாக்கப்படும் பொழுது எதிர்த்து நிற்க வலியற்றவராய் அழிகின்றனர். அல்லது பகுத்துண்ணாததனால் சமுதாயத்தில் ஒரு பக்கம் செல்வம் மேலிட ஒரு பக்கம் வறுமை வாட்ட மக்கள் புரட்சி செய்து அரசையும் சமுதாய அமைப்பையும் மாற்றும் நிலை ஏற்படுகிறது. இரண்டும் வரலாற்றில் பன்முறை நிகழ்ந்தவையே. இல்லந்தோறும் பழியஞ்சிப் பகுத்துண்ணும் பண்பு நிலவுமாயின் அவ்வில்லங்களும் வாழும். நாடும் வாழும்.

இல்லத்தில் அன்பும் அறமும் நிலவுதல் வேண்டும். கணவனுக்கும் மனைவிக்குமிடையேயும் பெற்றோர்க்கும் புதல்வர்களுக்கு மிடையேயும் ஆழ்ந்த அன்பு நிலவும் இல்லமே சிறந்த இல்லமாகும். ஆனால் அத்துடன் பிறர் மாட்டும் அன்பு கொண்டு அறம் புரியும் இயல்பும் வேண்டும். இவ்விரண்டும் இருப்பின் அவையே இல் வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும். தன்குடுப்பத்தினரை அன்புடன் பேணிப் பிறர்க்கும் அறம் செய்வதனால் என்ன பயன் என இல்வாழ்வான் எண்ணுவானா? அவ்வன்பையும் அறத்தையுமே பயன் எனக் கருதுவான். 'பயன் வேறு வேண்டாம், தனக்கும் பிறர்க்கும் உண்டான முகமலர்ச்சி தானே யமையும்' என மணக்குடவர் தம் முரையில் கூறினர் (குறள் 45 உரை) தாய் தன் குழந்தைக்கு வேண்டுவதெல்லாம் செய்கிறாள். குழந்தை நோயுற்றால் கண் விழித்துக் காக்கிறாள். நடக்க முடியாத நிலையில் தூக்கிச் செல்கிறாள். தன்பசியைத் தாகத்தைப் பொருட்படுத்தாது குழந்தையைப் பேணு கிறாள். தன்உடல்நோவைப் பொருட்படுத்தாது குழந்தையின் நோவகற்ற விரைகிறாள். இவற்றால் என்ன பயன் என அவள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. குழந்தையைப் பேணி வளர்ப்பதையே பெரும் பயனாகக் கருதுகிறாள். அவ்வாறே குடும்பத் தலைவனும் தன் மனைவி மக்களுக்காக மெய்வருந்தி யுழைத்துப் பொருளீட்டியும் ஓர் ஆபத்து நேர்ந்த விடத்துத் தன் துன்பத்தைப் பொருட்படுத்தாது அவர்களைக் காத்தும் உதவுவதனால் என்ன பயன் எனக் கருதுவ தில்லை. அவ்வன்பே பயனாகிறது. பிறர்மாட்டு அறம் செய்யும் பொழுதும் இத்தகைய பிறபயன் கருதாது அவ்வறத்தையே பயனாகக் கருதும் மனப்பான்மை வேண்டும் என்பதே வள்ளுவர் கருத்து. இதுவே 'பண்பும் பயனும் அது' (45) என்பதன் பொருள் ஆகும்.

இல்வாழ்க்கையே பண்பும் பயனுமாக இருப்பதனால் இல் வாழ்வான் இல்லறத்தைவிட்டுப் பிறநெறிகளில் (இல்லறம் பூண்டோன் இடையில் அதைவிட்டுத் துறவு பூண்பதோ அல்லது அறம் அல்லாத பிறவழிகளில் செல்வதோ) செல்வது ஆகாதெனவும் இம்மையில் பொருள் முதலிய பயன்களை அடைவதற்கும் வீட்டையடை தற்கும் முயல்வதற்கு ஏற்ற நிலை இல்லறமே எனவும் வள்ளுவர் கூறினர்.

இல்வாழ்வான் ஒவ்வொருவனும் தான் நன்னெறியில் நிற்ப தோடு நிறைவடைய வேண்டியவன் அல்லன். பிறரையும் அறத் தாற்றில் ஒழுகும்படி தூண்டவும் உதவவும் உரியவன் ஆவான்.

அவ்வாறு செய்பவன் நோற்பாரின் நோன்மையுடையவன் அதாவது தவம் செய்வாரைவிடச் சிறந்தவன் ஆவான் என்றார் வள்ளுவர். இல்வாழ்வான் யாரை அறவழியில் ஒழுகும்படிசெய்தல் வேண்டும்? தவம் செய்யும் துறவியர்க்குப் பசி முதலிய இடையூறுகளை நீக்கி அவர் தம்நெறி ஒழுக உதவி செய்தலே பிறரை ஆற்றின் ஒழுக்குதலாகும் என்றார் பரிமேலழகர். மணக்குடவர் பிறரையும் நன்னெறியில் ஒழுகப் பண்ணி எனப் பொதுவாகக் கூறினர். சிறந்த இல்வாழ்வினன் தான் அறவழியில் இல்வாழ்க்கை நடத்துவது மட்டுமன்றிப் பிறஇல்வாழ்க்கையினரையும் அந்நெறியில் நடத்துதல் வேண்டும். அவ்வாறு செய்பவனின் வாழ்க்கை துறவியரின் வாழ்க்கையை விட வலிமையுடையது எனவே திரு. வி. க. வும் கா. அப்பாத்துரையும் உரை கூறினர்.

மணக்குடவர் பொதுவாகக் கூறியதற்கொப்ப இரண்டுமே வள்ளுவர் கருத்தாக இருக்கலாம். இல்வாழ்வோர் துறவியர்க்குப் பலவகையிலும் உதவி செய்து அவர்தம் நெறியிற் செல்லத் துணை நிற்றல் வேண்டும் என்னும் கருத்து வள்ளுவர்க்கு உடன்பாடே. இல்வாழ்வோரிற் சிறந்தோர் பிறஇல்லறத்தோரையும் அறவழியிற் செல்லுமாறு ஊக்குதல் வேண்டுமென்பதும் அவர் கருத்தாக இருத்தல் கூடும். ஆகவே 'ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை' என்றார்.

பிறரை அறவழியில் நடத்த முயல்வோர், பிறரைத் திருத்த முயல்வோர் தாம் அறத்தினின்றும் வழுவாதவாறு எச்சரிக்கையாக இருத்தல்வேண்டும். பிறரைத் திருத்த முயல்வோர் தாம் தவறிழைத்தல் கூடும். தற்பெருமைக்கும் சினத்திற்கும் இடம் கொடுத்தல் கூடும். அல்லது தவறுசெய்வோரைத் திருத்துவதற்காக அவர்களுடன் நெருங்கி உறவாடுங்கால் அச்சேர்க்கையினல் தாமே அத்தவறுகளைச் செய்யும் நிலையை யடைதலும் கூடும். ஆகவே 'ஆற்றின் ஒழுக்கி' என்னும்போது 'அறனிழுக்கா' என்ற தொடரும் உடன் கூறப்பட்டது, ஒருவன் ஒரு குற்றத்தில் அகப்பட்டால் நல்லுணர்வுடையோர் அவனைத்திருத்த அன்புடன் முயலுதல் வேண்டும், தாமும் அக்குற்றத்தில் விழாதபடி தம்மைக் குறித்தும் எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும் எனப் புதிய ஏற்பாட்டில் தூயர் பவுல் கூறும் அறிவுரை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.[9] இவை மக்களுளவியல்பை நன்கு அறிந்து கூறப்பட்ட கூற்றுக்களே.

---

9. **The Holy Bible** (Revised Standard Version), The Epistle to the Galations by Saint Paul, 6.1.

"Brethren, if a man is overtaken in any tresspass, you who art spiritual should restore him in a spirit of gentleness. Look to yourself, lest you too be tempted."

இல்வாழ்க்கை பிறன் பழிப்பதில்லாயின் அறம் ஆகும் எனக் குறள் கூறுகிறது. 'பிறன் பழிப்பது' என்ற தொடருக்குப் 'பிறனைப் பழித்தல்' எனவும் 'பிறன் தன் வாழ்க்கையைப் பழித்தல்' எனவும் இருவகையாகப் பொருள் கொள்ளல் கூடும்.

இல்வாழ்வோர் தனித்து வாழ்தற்குரியவரல்லர். சமூகத்துடன் இணைந்து வாழ்தற்குரியவரே. ஆகவே அவர் பிறர் கூறுவதை, பிறரது கருத்தை, பிறர் கூறும் புகழைப் பழியைப் பொருட்படுத்தாது வாழ்தற்குரியரல்லர். 'நான் செய்வது எனக்குச் சரியாகத் தோன்றுகிறது. பிறரைப் பற்றி எனக்குக் கவலை இல்லை' எனச் சொல்லும் மனப்பான்மை இல்வாழ்வார்க்கு ஏற்றதன்று. குடும்பமாகச் சமூகமாகக் கூடி வாழ்பவர்கள் பிறரைக் குறித்துக் கவலைப்பட வேண்டியவர்களே. பிறர் குறை கூறற்கு இடம் தராது வாழ்வதே இல்வாழ்வோர்க்குச் சிறப்பாகும்.

அறத்தின் வழியில் நிற்பவன் பிறர்கருத்தைப் பொருட்படுத்திப் பிறர் நல்லெண்ணம் கொள்ளுமாறு வாழவேண்டுமென்னும் கருத்து திருக்குறளில் பல இடங்களில் காணப்படுவதே. **வாழ்க்கைத்துணை நலத்துள்** நல்லில்லத் தலைவியின் பண்புகளைக் கூறும் போதும் வள்ளுவர் 'தகைசான்ற சொற்காத்து' — 'இருவர் மாட்டும் நன்மையமைந்த புகழ் நீங்காமற்காத்து' என்றார். ஒழுக்கத்தின் உயர்வைக் கூறுங்காலும் ஒழுக்கம் சமூகத்துடன் இணைந்து வாழும் ஒழுக்கமாகவே இருக்க வேண்டுமெனக் காட்டி,

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் (140)

என்றார். **இல்லறவியலின்** இறுதியிலும் **புகழ்** என ஓரதிகாரத்தை யமைத்து இசைபட வாழ்தலே ஊதியம் என்றும் உணர்த்தினர்.

அறத்தின் வழியில் நிற்பவன் பிறர்குறை கூறாதிருத்தல் வேண்டும் என்பதும் வள்ளுவரின் கொள்கையே. இக்கருத்தும் குறளில் பன்முறை காணப்படுவதே. **புறங்கூறாமை** என்னும் அதிகாரம் முழுவதும் பிறர் இல்லாதவிடத்தில் அவர் குறையைக் கூறலாகாது என்பதையே வற்புறுத்துகிறது. பிற இடங்களில் வரும்,

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும் (980)

பிறர் தீமை
சொல்லா நலத்தது சால்பு (984)

என்னும் குறளடிகளும் பிறர்குறை கூருமையையே போற்றும். இன்னும் சமுதாயத்தில் மேலோர் பிறர்குறையைத் தம்குறையாகக் கருதிச் சமுதாயப்பொறுப்பை யுணர்தல் வேண்டும் என்பதையே வள்ளுவர்,

பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி யென்னும் உலகு (1015)

என்ற குறள் மூலம் உணர்த்தினர்.

ஆகவே வள்ளுவர் விரும்பும் நல்லில்லத்தில் வாழ்வோர் பிறர் எவ்வகையினும் குறை கூருதபடி எல்லா நல்லறத்தையும் கடைப் பிடித்து வாழ்வர். பிறர்குறை காணில் சமூகத்தில் தம் பொறுப்பை யுணர்ந்து அவர்களையும் நல்லறவழியிற் செலுத்த முயல்வாரேயன்றிக் குறை கூறித்திரியார் எனக் கொள்ளலாம்.

இல்வாழ்வோனுக்குச் சமூகத்தில் பல கடமைகள் உள. சமூகத்துக்கும் அவன் திறத்துப் பொறுப்புண்டு. சிறந்த முறையில் இல்வாழ்க்கையை நடத்துபவன், வாழ்வாங்கு வாழ்பவன் சமூகத்தால் நன்கு மதிக்கப்படுதல் வேண்டும். அவன் தேவரில் ஒருவனுக எண்ணப்படுவன் அல்லது தெய்வத் தன்மையுடையவனுகக் கருதப் படுவன் எனப்பொருள் தரும்படி, 'வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்' (50) என்ருர் வள்ளுவர். 'இவன் எல்லாராலும் நன்கு மதிக்கப் படுவன்' என **மணக்குடவர்** விளக்கவுரை கூறினர். தனக்குரிய அறங் களையெல்லாம் கடைப்பிடித்து நன்முறையில் இல்வாழ்க்கை நடத்து பவன் சமூகத்தில் பிறரால் நன்கு மதித்துப் போற்றப்படல் வேண்டும் என்பதே வள்ளுவர் கருத்தாம்.

## 2.4. இல்வாழ்வார்கடன் – அக்காலமும் இக்காலமும்

இல்வாழ்வோரால் கடைப்பிடிக்கப்படவேண்டியனவாக வள்ளுவரால் கூறப்பட்ட அறங்கள் அக்காலநிலைக்கு ஏற்றவாறு எழுதப்பட்டனவே. இவை எவ்வளவு தூரம் இக்காலத்துக்குப் பொருந்தும் என இங்கு ஆய்வதும் ஏற்றதே.

வாழ்க்கையில் நான்கு நிலைகளுள்ளன என்ற கருத்து தற்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அவற்றைக் கடைப்பிடிக்க யாரும் முயல்வதில்லை. இல்வாழ்வான் தன்மக்களையும் (அதிக முதுமை யுற்ற அல்லது நோயுற்ற) பெற்ருேரையும் காப்பது மட்டுமின்றிப் பிறமுதியோர்க்கும் இளம்பருவத்தினர்க்கும் ஏற்றபோது இயன்ற

உதவிபுரியும் கடப்பாடுடையவன் எனப் பொதுவாகக் கொள்ளலாம். தற்காலத்தும் துறவியர் உளர். ஆயினும் அவர்கள் பெரும்பாலும் உணவு, உடை, உறையுள், மருந்து முதலியவற்றிற்கு இல்வாழ் வோரின் உதவியை நாடி நிற்பதில்லே. பலசமயங்களிலும் துறவியர்க் கேற்ற நிறுவனங்களும் தங்குமடங்களும் அவற்றிற்கு நிலேயான பொருள் வருவாயும் உள. தற்போதும் அந்நிறுவனங்கட்குப் பொரு ளுதவி செய்வதும் துறவியர் தாம் செய்யும் பணிகளின் பொருட்டு மடத்தை விட்டுப் பிற இடங்களில் சென்று தங்கநேருங்கால் அவர்களே விருந்தேற்று உணவு, உறையுள், செல்லும் ஊர்தி முதலியவற்றை ஒழுங்கு செய்து பேணும் கடனும் இல்வாழ்வாருடையதே ஆகின்றன. தற்காலத்தில் கல்வி, மருத்துவம், சமூகப்பணி, தொற்றுநோய் பரவும் காலத்திலும் புயல் வெள்ளம் முதலியவற்ருல் துன்பம் நேரும் போதும் துன்புற்ருேர்க்கு உதவுதல் ஆகிய பலபணிகளில் துறவியரும் இல்வாழ் வோரும் ஒத்துழைப்பதைப் பல இடங்களில் காணலாம்.

தற்காலத்தில் அரசினரால் நடத்தப்படும் மருத்துவ நிலேயங்கள் நோயுற்ற வறியார்க்கு இலவச மருத்துவஉதவி யளிக்கின்றன. சமயச் சார்பான நிறுவனங்களால் நடத்தப்படும் மருத்துவ மனேகளும் உள. குருடு, செவிடு, முடம் முதலிய உடற்குறையுற்ருேர்க்கும் கல்வியும் பயிற்சியும் அளித்து அவர்களேயும் ஒருதொழில் புரியத்தக்கவர்களாக்கி வாய்ப்பளிக்கும் நிலேயங்களும் உள. இவையும் அரசினராலும் சமயச் சார்பான நிறுவனங்களினுலும் பிற சமூகப்பணிபுரியும் நிறுவனங்களி னுலும் நடத்தப்படுகின்றன. சிறு வயதில் பெற்ருேரையிழந்த பிற ஆதரவற்ற குழந்தைகளே வளர்த்துக் கல்வி கற்பிப்பதற்கென அரசின ராலும் பிறராலும் நடத்தப்படும் இல்லங்கள் உள. ஆதரவற்ற முதியோர்க்கும் நகரவைகளினுலும் (corporation or municipality) பிறராலும் நடத்தப்படும் வறியோரில்லங்கள் (poor homes) உள. துவ்வாதார்க்கென அரசினராலும் பிறராலும் எடுக்கப்படும் முயற்சிகள் பல இருப்பினும் இல்வாழ்வாராகிய பொதுமக்களால் செய்யப்பட வேண்டிய பணிபல எஞ்சி நிற்கின்றன.

அரசினரால் அன்றிப் பிறரால் நடத்தப்படும் நிறுவனங்கள் பல பொதுமக்களிடமிருந்து பொருளுதவியை எதிர்பார்க்கின்றன. உடற்குறையுள்ளவர்கள், அநாதைக் குழந்தைகள், பிறஆதரவற்ருேர் சார்பாக நடத்தப்படும் நிறுவனங்கள் பல அவர்களேக் கொண்டு துணிமணிகள் நெய்வித்தும், கூடை, பாய், பெட்டி முதலியவற்றை முடைவித்தும், பொம்மைகள் பைகள் அழகுப்பொருள்கள் செய்வித்தும் மரப் பொருள்கள் செய்வித்தும் இவற்றை வாங்கி ஆதரவளிப்போரை

நாடுகின்றன. இன்னும் இத்தகைய நிறுவனங்களுடன் ஒத்துழைத்து உடற்குறையுள்ள சிறுவர்கட்கும் அநாதைக் குழந்தைகட்கும் உதவ விரும்பும் பொதுமக்கள் அடிக்கடி அந்நிறுவனங்களைச் சென்றுகண்டும் வாரம் ஒருநாள் அல்லது பண்டிகை தினங்கள் முதலிய சிறப்புநாட்களில் அக்குழந்தைகட்கென விளையாட்டுக்களை நடத்தியும் அவர்களை வெளியில் அழைத்துச் சென்றும் அவர்கட்கு மகிழ்வூட்ட முயல்வதுண்டு. சில அநாதைக்குழந்தைகளின் இல்லங்களை நடத்துவோர் அத்தகைய இல்லங்களில் வளர்வதைவிடத் தனிப்பட்டோர் பாதுகாப்பில் வீடுகளில் வளர்வதே அவர்கள் வளர்ச்சிக்கும் மனஆரோக்கியத்துக்கும் ஏற்றதாகும் என எண்ணி ஒரு குழந்தையைத் தத்தெடுத்துத் தம்சொந்தக்குழந்தைபோல் தம்வீட்டில் வைத்து வளர்க்கக் கூடியவர்கள் இருப்பின் அவ்வாறு சில குழந்தைகளையாவது அத்தகையோரிடம் ஒப்படைக்க விரும்புகின்றனர்.

மருத்துவமனைகளிலும் அறச்சிந்தனையுடைய பொதுமக்கள், அங்குத் தங்கி மருத்துவ உதவிபெறும் நோயாளிகளைச் சென்று கண்டும் அவர்கட்கு வேண்டிய சிறு உதவிகளைச் செய்தும் மருத்துவமனையை நடத்துவோரின் அனுமதியுடன் பாட்டு, நாடகம், படக்காட்சி போன்றவற்றை நோயாளிகட்காக மருத்துவமனையிலேயே நிகழ்த்துவித்தும் ஓரளவு கல்வியறிவுள்ள நோயாளிகட்குப் படிக்கத்தக்க பத்திரிகைகளையும் நூல்களையும் இரவலாக அளித்தும் மற்றும் பல வகையிலும் புரியத்தக்க பணிகள் பல உள.

மேலும் நோயுற்றோர் ஆதரவற்றோரின் தேவைகளனைத்தும் நிறுவனங்களால் தீர்க்கப்படுவதுமில்லை. அநாதைக்குழந்தைகள் அனைவரும் அத்தகைய குழந்தைகளில்லங்களில் இடம் பெறுவதில்லை. குருடு, செவிடு, முடம் ஆகியோரும் அனைவரும் நிறுவனங்களின் உதவியைப் பெறுவதில்லை. ஏனெனில் உதவி நாடிவருவோர் அனைவரையுமே ஏற்று ஆதரவளிக்கப் போதியஇடமும் பொருளும் வசதியும் அந்நிறுவனங்களில் இருப்பதில்லை. இந்நாட்டில் வறுமையும் நோயும் அதிகம். துவ்வாதோர் என்று சொல்லத்தக்கோரின் தொகை அதிகம். தேவையோ பெரிது. இருக்கும் நிறுவனங்கள் குறைவு. அவற்றில் உள்ள வசதிகளும் சொற்பமே. ஆகவே துவ்வாதார் பலர் தம் உறவினரின் உதவியையோ பிற பொதுமக்களின் ஆதரவையோ நாடி நிற்க வேண்டியவரே. அவர்திறத்து இல்வாழ்வோரின் பொறுப்பு இன்றும் அதிகமாகவே யுள்ளது.

இறந்தோர் பொருட்டுச் செய்யப்படும் வினைமுறைகளில் தற்காலத்து மக்கட்கு நம்பிக்கை குறைந்து கொண்டு வருகிறது. மறுமையுண்டா என ஐயுறுவோரும் உண்டு வள்ளுவர் காலத்தில் பொதுவாக மக்கள் மறுமையுண்டென நம்பினர். இறந்தோர் பொருட்டுச் சிலசெயல்களைச் செய்தனர். அரசகுலத்தவர் வீரர் பொருட்டு அவர் இறந்தபின் செய்யப்பட்ட சிலவினைமுறைகளே புறநானூற்றில் குறிப்பிடப்படுகின்றன. சிறந்த அரசரின் அல்லது வீரரின் நினைவாகச் செய்யப்பட்ட இவற்றால் மறுஉலகில் அவர்கட்குப் பயனிருப்பினும் இல்லாவிடினும் அவை அவர்பின்னோர் அவர்நினைவை யுளத்தில் கொண்டு போற்றவும் அவர் நல்லியல்புகளைப் பின்பற்றவும் உதவி யிருத்தல் வேண்டும். வீரர்கட்குச் செய்யப்பட்ட சிறப்புக்கள் பிற இளைஞரின் உள்ளத்தில் வீர உணர்ச்சியைத் தோற்றி அவர்களையும் அவ்வீர மரபைப் பின்பற்றத் தூண்டியிருத்தல் வேண்டும். இறந்த கற்புடைய மகளிர்க்கும் சிறப்புக்கள் செய்யப்பட்டன எனச் சிலப்பதிகாரத் தினின்றும் தெரிய வருகிறது. அவையும் பிறமகளிரின் உள்ளத்தில் தாமும் அவ்வாறு வாழ வேண்டும் என்னும் எண்ணத்தைத் தோற்றுவித்திருத்தல் கூடும். வள்ளுவர் இறந்தார் அல்லது தென்புலத்தோர் பொருட்டுச் செய்யப்படத்தக்கவை யாவை எனக்கூறவில்லை. அவர் பொருட்டுச் செய்யத்தக்க கடமைகள் இல்வாழ்வோர்க்கு உள என்றே கூறினர். இறந்தோர் பொருட்டுச் சிலவினைமுறைகள் செய்யப்படாவிடினும் முன்னோர் நினைவு, முன்னோர் செயல்களைக் குறித்தும் வாழ்க்கையைக் குறித்தும் சிந்தித்தல், அவர்கள் கடைப்பிடித்த நல்லறங்களைப் பின்னோரும் கடைப்பிடிக்கமுயல்தல் ஆகியவை சமுதாய நலத்துக்கு ஏற்றவையே. பண்டைக் காலத்தில் தந்தையின் தொழிலையே பெரும்பாலும் மகனும் மேற்கொண்டான். வீரன் மகன் வீரன் என்ற மரபு பின்பற்றப்பட்டு வந்ததைப் பல புறநானூற்றுப் பாடல்களில் காணலாம். தற்காலத்தில் அம்முறை இல்லை. ஆயினும் தந்தை சிறந்த மருத்துவராக விளங்கியிருப்பின் மகன்பிறதொழிலைப் பின்பற்றினும் தன்தந்தை நினைவாக மருத்துவப்பணிக்குப் பொருளுதவி செய்தலோ பிற வகையில் உதவுதலோ உண்டு. தந்தை சிறந்த ஆசிரியராகத் தம்காலத்துத் திகழ்ந்திருப்பின் மகன் பிறதொழிலைப் பின்பற்றினும் தன் தந்தையின் கல்வியார்வத்தை யெண்ணித் தன் பொருளினலோ ஓய்வுநேரப்பணியினலோ நாட்டில் கல்வியைப் பரப்ப உதவுதல் உண்டு. முன்னோர் நினைவு மறுஉலகில் அவர்க்கு நலம் பயப்பினும் பயக்காவிடினும் இவ்வுலகில் நலம்தர ஏற்றதே.

விருந்து என்னும் சொல்லின் பழைய பொருள், புதுமை அல்லது புதியவன் என்பதே. புதிதாக ஊருக்கு வந்தவர்களை அவ்வூரிலுள்ள

இல்வாழ்வோர் விருந்தேற்று மகிழ்ந்தனர். இக்காலத்துள்ளதுபோல் பணம் கொடுத்து உண்பதற்கு அல்லது தங்குதற்குரிய உணவு விடுதிகள் (hotels) அக்காலத்து இல்லை. ஆகவே ஊருக்குப் புதிதாக வந்தோர் அவ்வூராரின் இல்லங்களிலேயே தங்க வேண்டிய நிலையிலிருந்தனர். பிற்காலத்து வழிப்போக்கர், சிறப்பாகக் கோயில்கட்கோ திருவிழாக்காணவோ வந்தோர் தங்குவதற்குரிய மடங்கள் இருந்தன என்பதைப் பெரிய புராணம் முதலிய இலக்கியங்களினின்றும் அறியலாம். ஆனால் வள்ளுவர் காலத்தில் அவையும் இருந்தனவா என்பது ஐயமே. ஆகவே புதிதாக வந்த விருந்தினரை வரவேற்று உணவும் உறையுளும் அளித்தல் சிறந்த அறமாகக் கருதப்பட்டது.

தற்போது பெரும்பாலும் விருந்தினர் எனக் குறிப்பிடப்படுவோர் வீட்டில் தங்கவரும் உறவினர் அல்லது நண்பர்களே. அவர்களைப் பேணுதலும் அறமே. புதிதாக வருவோரும் உணவு விடுதிகளில் இடமின்மையினாலோ அவற்றில் தங்குமளவிற்குப் பொருள் வசதியின்மையினாலோ பொதுமக்களின் உதவியை நாடலும் கூடும்.

வள்ளுவர் கடவுட் கொள்கையுடையவர்; வழிபாட்டை வற்புறுத்தியவர். வழிபாடும் இல்வாழ்வோரின் கடமைகளில் ஒன்று என்றார். இன்றும் சமய நம்பிக்கையுடையோர் தத்தம் இல்லங்களில் வழிபாடியற்றல் இயல்பே. சுற்றம் தழுவுதலும் இக்காலத்துக்கும் ஏற்றதே. இன்னும் பழியஞ்சுதல், பகுத்துண்ணல், பிறர் பழிப்பதற்கு இடங்கொடாமை, பிறரைக் குறைகூறாமை முதலியன எக்காலத்தும் பொருந்துவனவே.

## 2. 5. இல்லத் தலைவி

தகுதிவாய்ந்த இல்லத்தலைவியையுடைய இல்லமே நல்லில்லமாக அமைதல் கூடும் என வள்ளுவர் கருதினர். ஒருவனின் மனைவியிடத்து மனைக்கேற்ற மாட்சி, இல்லறத்தை நன்கு நடத்தும் இயல்பு இல்லாவிடின் அவன் வாழ்க்கை செல்வம் முதலிய பிற பல நலன்களைப் பெற்றிருப்பினும் பயனின்று எனவும் மனைவி சிறந்தவளாக இருந்தால் இல்லத்தில் (செல்வம் முதலியன) ஒன்றும் இல்லாவிடினும் யாதும் உள்ளது போலாகுமென்றும் அவள் சிறந்தவளாக வாய்க்காவிடின் பிற வளங்களனைத்தும் இருப்பினும் யாதுமில்லாதது போலாம் என்றும் கூறினர்.

வள்ளுவர் கருத்துப்படி இல்லத்தலைவியிடம் சிறப்பாக வேண்டப்படும் பண்புநலம் கற்பே. கற்பெனும் திண்மையுண்டாகப் பெறின் பெண்ணிற் சிறந்தது பிறிதில்லை யென்றார். திண்மை மன வுறுதியாகும். கற்பு அவளுக்குக் கணவன் நலத்தையும் குடும்ப நலத்தையும் பேணுவதில் உறுதி நல்குகிறது. கற்புடைய பெண்ணின் சிறப்பைக் கூறுங்கால் வள்ளுவர்,

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை (55)

என்றார். கற்பிற் சிறந்த பெண் பிறதெய்வத்தைத் தொழாளாய்த் தன் கணவனையே வணங்கியெழுவாள் என அவர் கருதினர். அன்பின் மிகுதியினால் எப்பொழுதும் தன் கணவன் நினைவாகவே யிருக்கும் பெண் துயிலெழும் போதும் அவன் நினைவாகவே எழுவாள் என்பது கருத்துப் போலும். இக்குறளின் இரண்டாம்வரிக்குப் பலவாறு பொருள் கூறப்படுகிறது. பழைய உரையாசிரியர்களனைவரும் கூறிய பொருள் அத்தகைய கற்புடைய பெண் 'பொழி' எனக் கூறிய போது மழை பொழியும் என்பதே. கற்புடைய மங்கையர் வாழும் நாட்டில் மழை உரிய காலத்தில் வந்து வளந்தரும், மழை பொய்க்காது எனக் கருதினர். அரசனும் மக்களும் அறத்தின்வழி ஒழுகுவராயின் நாட்டில் இயற்கை வளம் மல்கும், அவர்கள் அறநெறி ஒழுகாராயின் நாட்டில் இயற்கை வளங்குன்றும் என்ற கருத்தைப் பல குறள்களில் காணலாம். அவற்றெடு பொருந்தக் கற்புடைய மகளிர் இருக்கும் நாட்டில் மழை உரிய காலத்தில் பெய்யும் என வள்ளுவர் எழுதியிருத்தல் கூடும். இது பண்டையோர் கருத்து. சிலப்பதிகாரத்தில் கவுந்தியடிகள் கண்ணகியை மாதரியிடம் அடைக்கலப்படுத்தியபோது பத்தினிப் பெண்டிர் இருந்தநாட்டில் 'வானம் பொய்யாது வளம் பிழைப்பறியாது' என்றாள் (சிலப்பு 15.145). குறிஞ்சிக்கலியுள்ளும் 'என் தோழி, அருமழை தரல் வேண்டில் தருகிற்கும் பெருமையளே' என்று தலைவியைக் குறித்த தோழி கூற்றாக வரும் அடி காணப்படுகிறது. (கலித்தொகை 39).

'தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' என்னும் குறட்குத் தற்காலத்தில் சில அறிஞர் கொள்ளும் பொருள் தெய்வத்தைத் தொழாது கணவனை வணங்கியெழும் பெண் தன்கணவனுக்கு, தன்குடும்பத்திற்கு அல்லது சமுதாயத்திற்கு வேண்டியபோது பெற்ற மழையைப் போல் பயனுள்ளவள் ஆவாள் என்பதே. இப்பொருள் கவிஞர் பாரதிதாசனால் சில கவிதை

களில் விளக்கப்பட்டுள்ளது.[10] கா. அப்பாத்துரை தம் மணிவிளக்கவுரையில் கூறும் பொருளும் அதுவே யாகும். அவர் இக்குறட்குக்கூறும் பொழிப்புரை வருமாறு -

"சமுதாயத் தெய்வங்களை அவ்வழியில் தான் வணங்காதவளாகி, தன் கணவனையே அத்தெய்வங்களின் திரண்ட ஒருமைவடிவமாக மனத்துள் உருவகித்து வணங்கி அவனை அத்தகைய தெய்வமாக்கும் முயற்சியில் முனைபவளாகிய கற்புடைய வாழ்க்கைத்துணைவியானவள், பெய்தால் நல்லது என்று விரும்பும் மக்கள் குறிப்புணர்ந்து காலமும் இடமும் அளவும் அறிந்து பெய்யும் மழை என்று கூறத்தக்கவள் ஆவாள்".

திரு.வி. க. பழைய உரையையே கொண்டார்.

கற்புடைய பெண் மழையைத் தருபவளாயினும் மழை போன்றவளாயினும் இங்கு நல்லில்லத்தின் இயல்பை ஆயுங்கால் கருதத்தக்கது, ஒரு மனத்துடன் தன் கணவனிடமே அன்பு செலுத்தித் துயிலெழுங்காலும் அவன் நினைவினளாய் எழும் இல்லத்தலைவியே சிறந்தவள் என வள்ளுவர் எண்ணினர் என்பதே.

கற்பை வள்ளுவர் போற்றினர். ஆனல் இல்லத்தில் கணவன் மனைவியை (அல்லது தந்தை மகளை) இல்லத்தை விட்டு வெளியே செல்லலாகாது எனத் தடுத்து அவளுரிமையைத் தடை செய்யும் முறையை யவர் விரும்பவில்லை. அத்தகைய சிறைகாக்கும் காவலால் பயனில்லை, மகளிர் தம்நிறையால் தம்மைக் காத்துக் கொள்ளுதலே சிறப்பாம் என்றார்.

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை (57)

இக்குறட்குப் பிறரனைவரும் மேற்கூறிய பொருளையே கொள்ளக் கா. அப்பாத்துரை வேறு புதுப்பொருள் கூறினர். இங்குச் சிறை என்பதை நாட்டில் அரசர் குற்றவாளிகளைக் காவலில் வைக்கும் முறையையே குறிப்பதாகக் கொண்டு நாட்டில் குற்றம் நிகழாமல் காப்பதற்கு அரசர்கள் குற்றம் புரிவோரைச் சிறையிலிட்டுக் காவல் செய்வதுமட்டும் பயன்தராது, நாட்டில் அறப்பண்புடைய மாதரே குற்றம் நிகழாமல் தடுக்கக் கூடியவர்கள் என்றார். இவ்வாறு பொருள்

10. **பாரதிதாசன் கவிதைகள்**, *இரண்டாம் தொகுதி, பாரிநிலையம், 1967, செய்யுள் 10. தொழுதெழுவாள்*

கொள்ளின் இல்லந்தோறும் நல்லறமகளிரால் பேணப்படும் நல் வாழ்வே நாட்டில் குற்றங்கள் மலியாமல் காக்கும்; ஒவ்வொரு பெண்ணும் தன் கணவனை, மகனைச் சகோதரனைத் தீயவழியில் செல்லாதவாறு தடுத்து நிறையுள்ளவர்களாக வாழச் செய்வதே சமுதாயத்தில் கொலை, களவு முதலிய குற்றங்கள் நிகழாமல் காப்ப தற்குத் தலையாயவழியாம் எனக் கூறலாம். பெண் பிறரால் காக்கப் படவேண்டியவளல்லள், தன்னைத்தானே காத்துக் கொள்ளத் தக்கவள் என்ற கருத்தும் இவ்வுரையாசிரியர்க்கு உடன்பாடே. மாதர் தத்தம் இல்லங்களில் உரிமையுடன் வாழ்தல் வேண்டும், அவர்கள் தம் அன்பினாலும் நல்லியல்பினாலும் ஆடவரை நல்வழியில் செல்ல ஊக்குவிப்பவர்கள் ஆதலும் வேண்டும் என்பது அவர் கருத்தாம்.

கற்பையே சிறப்பித்துக் கூறிய வள்ளுவர் நல்லில்லத் தலைவி யிடம் இருக்க வேண்டிய பிறஇயல்புகளையும் சில குறள்களில் கூறினர்.

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (51)

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் (56)

வாழ்க்கைத்துணை என அழைக்கப்படும் மனைவி இல்லத்திற்கேற்ற சிறப்பியல்புகளை உடையவளாகித் தன்கணவனின் வளத்துக்குத் தக வாழ்பவளாக இருத்தல் வேண்டும். 'மனைத்தக்க மாண்பு' என்னும் தொடர் விரிந்தபொருளைத் தரக்கூடியது. பரிமேலழகர் 'மனையறத் துக்குத் தக்க நற்குண நற்செய்கைகள்' எனப் பொருள் கூறிப் பின் வரும் விளக்கமே தந்தார்.

"நற்குணங்களாவன: துறந்தார்ப் பேணலும், விருந்தயர் தலும், வறியார்மாட்டருளுடைமையும் முதலாயின. நற்செய்கை களாவன: வாழ்க்கைக்கு வேண்டும் பொருள் அறிந்து கடைப் பிடித்தலும், அட்டிற்றொழில் வன்மையும், ஒப்புரவு செய்தலும் முதலாயின. வருவாய்க்குத் தக்க வாழ்க்கையாவது: முதலை யறிந்து அதற்கியைய அளித்தல்."

வீட்டிற்கு வேண்டிய பொருளை, தன்னில்லத்தார்க்கு வேண்டிய உணவு உடை முதலியவற்றைத் தேடிப் பெறல், பாதுகாத்தல், இல்லத்தையும் இல்லத்தில் உள்ள பொருள்களையும் தூயனவாகவும் அழகுபெறவும் அமைத்துக் கொள்ளுதல், வறியவளாயின் வீட்டில்

பணிகளனைத்தையும் தானே செய்யும் ஆற்றல், செல்வநிலையிலுள்ள வளாயின் பணியாட்களை ஆளும் திறமை, தன் கணவனுக்கேற்ற உணவு முதலியவற்றை யளித்து வேண்டும் உதவியாவும் செய்தல், குழந்தைகளை நன்குவளர்த்தல், கணவனோ குழந்தைகளோ நோயுறின் நோயுற்றோரைப் பேணும் திறன், விருந்தினரை வரவேற்று ஏற்றன செய்து மகிழ்வித்தல், உறவினரனைவருடனும் அன்புடன் பழகிச் சுற்றந் தழுவுதல், வறியோர்க்கு உதவுதல் முதலிய அனைத்துமே மனைத்தக்க மாண்பு என்பதில் அடங்கும்.

'மனைத்தக்க' என்னும் தொடருக்குக் கா. அப்பாத்துரையின் மணி விளக்கவுரையில் பின்வரும் விளக்கம் கூறப்படுகிறது.

"இங்கே தகுதி என்பது அன்பு, அன்பின் படர்வான பாசம், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, சமுதாய அறிவு, குறிப்புணர்தல், பிறர்க்கு உதவும் மனப்பான்மை, பிறர்க்குதவும் செயற்பண்பு, தன்னல மற்ற தொண்டு மனப்பான்மை, கால இடச்சூழலுக்கேற்றபடி நடக்கும் திறமை, தடைகளைத் தாங்கி முயற்சியில் தளராப் பொறுமை, வெற்றி கிட்டும்வரை விடாதுழைக்கும் விடாமுயற்சி, முன்னறிந்து செயலாற்றும் திறம், திட்டமிட்டுப் படிப்படியாகச் செயலாற்றும் பண்பு ஆகிய வற்றை உட்கொண்ட முழுமைத்தொகுதிப் பண்பு ஆகும்."

இன்னும் பல வகையிலும் விரித்துரைத்தல் கூடும். இவ்வாறே திருக்குறள் தொடர்கள்பல மிகவிரிவான பொருள் தந்து நிற்கின்றன. வளத்தக்காள் என்பதற்குக் கணவன் வளத்துக்குத் தக வாழ்பவள் எனவும் வளத்தைப் பெருக்கத் தக்கவள் எனவும் பொருள் கொள்வர். இரண்டும் பொருந்துவனவே. நல்லில்லத் தலைவி வருவாய்க்குமேல் செலவுசெய்யாது வருவாய்க்குத் தக வாழ்பவள் ஆதல் வேண்டும். அவள் தன்கணவனின் பொருளீட்டு முயற்சிக்கு ஊக்கமளித்து அவன் வளத்தைப் பெருக்கல் கூடும். தற்காலத்திலோ மனைவி தானே பொருளீட்டுபவளாக இருத்தலும் கூடும்.

பெண் கற்பினின்றும் அல்லது அறவழியினின்றும் வழுவாமல் தன்னைத்தானே காத்துக்கொள்ள வல்லவளாக இருத்தல் வேண்டும். தன்கணவனையும் காத்தல் வேண்டும். குடும்பத்தின் நற்பெயரையும் காத்தல் வேண்டும். இவற்றில் என்றும் சோர்வு அடையாதவளே பெண் என்றார்.

கணவனை எவ்வாறு பேணுதல் அல்லது காத்தல் வேண்டும்? 'உண்டி முதலியவற்றால் பேணி' என்றார் பரிமேலழகர். காலிங்கர் பேணி

என்பதற்குக் காத்து எனப் பொருள் கொள்ளாது விரும்பி எனப் பொருள் கொண்டார். 'தன்னைக் கொண்டவனையும் கற்பினின்றும் வழுவாமற்காத்து' எனக்கொண்டார் திரு. வி. க. 'கணவனை அறவழியிலிருந்து வழுவாமலும், பொருள் வழியில் சோர்வுறாமலும், இன்பவழியில் திசை தடுமாறாமலும் காத்து ஊக்குவித்து' என்றார் கா. அப்பாத்துரை.

இவையனைத்தும் ஒவ்வொரு விதத்தில் பொருந்துவனவே. கணவன் மனைவியைக் காத்தற்குரியவனா மனைவி கணவனைக் காத்தற் குரியவளா என்ற கேள்வி இங்கு எழ வேண்டுவதில்லை. இல்லத்தில் இருவரும் ஏற்றபொழுது ஒருவரையொருவர் காக்க வேண்டியவர்களே. சென்ற பகுதியில் 'இயல்புடைய மூவர்' என்பதற்குப் பெற்றோர், மனைவி, மக்கள் என்ற பொருள் ஏற்றுக் கொள்ளப்படில் கணவன் மனைவிக்கு நல்லாற்றில் நின்ற துணையாகிக் காக்கும் பொறுப்பு அங்குக் கூறப்பட்டதெனலாம். மனைவி கணவனைப் பலவிதத்திலும் காக்கும் பொறுப்பு இங்குக் கூறப்பட்டதாகக் கொள்ளலாம்.

சொற்காத்து என்பதற்கும் இருவிதமாகப் பொருள் கூறப்படு கிறது. தன் குடும்பத்தையும் தன்னையும் பிறர் புகழுமாறு நடந்து, பிறர் கூறும் புகழுரை நீங்காமல் காத்து எனவும் தன்வாய்ச்சொல் அடக்கமுடையதாகவும் வாய்மை யுடையதாகவும் இருக்குமாறு தன் பேச்சைக் காத்து எனவும் உரை செய்வர். இருபண்புகளும் இல்லத் தலைவிக்கு இருக்க வேண்டியனவே. முன்பே கூறப்பட்டதுபோல் இல்லறத்தையேற்ற ஆடவரும் பெண்டிரும் புகழ்பட வாழ வேண்டு மென்பதே வள்ளுவர் கருத்து. நாவடக்கத்தை அனைவர்க்குமே கூறிய வள்ளுவர் ஒருநல்லில்லத் தலைவியிடம் அதை எதிர்பார்ப்பார் என்பது உறுதி.

குடும்பத் தலைவிக்கு இருக்க வேண்டிய கற்பும் பிறகுண நலங் களும் மேற்கூறப்பட்ட குறள்களில் காட்டப்பட்டன. கணவனும் மனைவியும் ஒருவரால் ஒருவர் அடையத்தக்க சிறப்பை அடுத்த இரு குறள்கள் காட்டும்.

> பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
> புத்தேளிர் வாழும் உலகு (58)
>
> புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
> ஏறுபோற் பீடு நடை (59)

இல்லறத்தையேற்கும் பெண்டிர் தம் கணவர் மூலமாகப் பெருஞ்சிறப்பை (இம்மையிலோ மறுமையிலோ) எய்துகின்றனர்

என்பதே இங்கு முதற்குறளின் பொருளாம். எத்தகைய கணவரைப் பெறின் எத்தகைய சிறப்பை அடைவர் என்பதற்கே சற்று வேறுபட்ட பொருள் கூறப்படுகிறது. 'பெண்டிரானவர் தம்மை மனைவியாகப் பெற்றவரையே தமக்குத் தலைவராகப் பெறின்' என மணக்குடவரும், 'தம்மை மணமகளிராகப்பெற்ற கணவரையே தாமும் கணவனகப் பெறுவாராயின்' எனக் காலிங்கரும் பொருள் கூறினர். தன்னை மணம் புரிந்து கொண்டவனைத்தான் ஒருபெண் கணவனகப் பெறுதல் கூடும். இங்கே 'பெறின்' 'பெறுவாராயின்' என்பது ஏன்? தன்னைத் தனக்கேற்ற மனைவியென உளமார்ந்த அன்புடன் தெரிந்து கொண்ட கணவனைப் பெற்றுத் தானும் அவ்வாறே அவனைத் தனக்கேற்ற கணவனக முழு அன்புடன் ஏற்கும் நிலையை ஒருத்தி அடைவாளாயின், குடும்பத்தில் இருவரிடமும் ஒத்த அன்பு இருக்குமாயின் என்பது பொருள் போலும்.

அத்தகைய குடும்ப நல்லுறவைப் பெற்ற மகளிர் எத்தகைய சிறப்பை யடைவர்? 'பெருஞ்சிறப்புப் புத்தேளிர் வாழும் உலகு' என்பதைப் பழைய உரையாசிரியர்களனைவரும் மறுமைப் பயனைக் குறிப்பதாகவே கொண்டனர். புத்தேளிர் வாழும் வானுலகு சென்று அங்குப் பெரும் சிறப்பைப் பெறுவர் என்றும் புத்தேளிரால் சிறப்புச் செய்யப்படுவர் என்றும் கூறினர். தற்கால உரையாசிரியர் விண்ணுலகின்கண் பெறத்தக்க இன்பத்தை யல்லது சிறப்பை இம்மண்ணுலகிலேயே பெறுவர் எனப் பொருள் கூறினர். வள்ளுவர் மறுமையில் நம்பிக்கையுடையவரே. நல்ல கணவனைப் பெற்று நல்லற வாழ்க்கை நடத்திய மங்கை மறுமையில் புத்தேளுலகிற் சிறப்படைதல் அவர் கொள்கையோடு பொருந்துவதே. அத்தகைய குடும்பப்பெண் இம்மையில் மனமகிழ்வையும் சிறப்பையும் அடையாமற் போவதுமில்லை.

அன்புமிக்க நல்ல கணவனை யடைவதனல் மனைவி இம்மையிலும் மறுமையிலும் சிறப்படைகிருள். நல்ல மனைவியைப் பெறுவதனல் கணவனும் சமுதாயத்தில் மதிப்பை யடைகிருன். புகழ் புரிந்த இல்லாளை யுடையவன் தன்னை இகழ்வார்முன்னும் ஏறுநடை நடக்க வல்லவனகிருன்.

மனைவியின் கற்புத்திறனும் பிறநற்பண்புகளும் கணவனுக்குப் பெருமையளிப்பன என்பது அக்காலத்துப் பொதுவாகப் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தே. புறநானூற்றிலும் அரசர்களை வாழ்த்தும் புலவர்கள்,

செயிர்தீர் கற்பின் சேயிழை கணவ (புறம் 3.6)

எனவும்

கடவுள் சான்ற கற்பின் சேயிழை
மடவோள் பயந்த மணிமருள் அவ்வாய்க்
கிண்கிணிப் புதல்வர் பொலிக என்றேத்தி (புறம் 198. 3-5)

எனவும் அரசியரின் கற்பு மேம்பாட்டைக் கூறி வாழ்த்துவதைக் காணலாம். அவ்வாறே பரிசில் நல்காத (அல்லது நீட்டித்த) அரசனை நோக்கிப் பெருமித உணர்ச்சிதோன்றப் பாடி விடைபெறுங் கவிஞரும் 'கற்பின் வாணுதல் மெல்லியல் குறுமகள் உள்ளிச் செல்வல்' (புறம் 196. 14 - 15) என்பது போலத் தம்இல்லம் வறுமைபால் பொலிவற்றிருப்பினும் இல்லத்தில் அன்பின்திறம் குறையவில்லை, கற்புடைய மனைவியைப் பெற்றிருப்பதால் தம் குடும்ப வாழ்க்கை வறுமையிலும் செம்மையுற்றுத் திகழ்கிறது என இறுமாப்புடன் எடுத்துக் கூறிச் செல்லும் மரபு புறநானூற்றில் காணப்படுகிறது.

இல்லத்தில் கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்து ஒருவரால் ஒருவர் சிறப்படைய வேண்டுமென்பதே வள்ளுவர் கருத்து. ஆனால் அதற்கு மேலாக அவர்கள் செய்ய வேண்டியபணி நல்ல மக்களைப் பெற்று வளர்ப்பதே. ஓர் இல்லத்தலைவியின் நல்ல இல்லத்திற் கேற்ற பண்புகளே அவ்வில்லத்திற்கு மங்கலமாகும். ஆனால் அவ்வில்லறமாண்பிற்கும் அணிகலமாவது நன்மக்கட்பேறே யென்றார்.

மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு (60)

## 2. 6. மக்கள்

பெற்றோர் தம்மக்களையே அரும்பொருளாகக் கருதுதல் வேண்டும், இல்லங்கள்தோறும் குழந்தைகள் பெறலருஞ் செல்வமாகப் பேணப்பட வேண்டும் என்பதே வள்ளுவர் கருத்தாம். இளங்குழந்தைகளால் பெற்றோர் பெறும் இன்பத்தை அவர் சில குறள்களில் எடுத்துரைத்தார்.

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ் (64)

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு (65)

குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர் (66)

சிறுகுழந்தை கையில் தொட்டளைந்த உணவு கூழேயாயினும் பெற்றோர்க்கு அது அமுதத்தைவிட இனியதாக இருக்கும். குழந்தைகளை அணைத்தல் அல்லது குழந்தைகள் வந்து தம்மேலணைதல் அவர் (பெற்றோர்) உடற்கின்பமாம். குழந்தைகளின் சொற்களைக் கேட்டல் செவிக்கின்பமாகும். தம்மக்களின் மழலைச்சொல் கேளாதவரே குழலோசை இனிமையுடையதாயிருக்கிறது யாழோசை இனிமையுடையதாயிருக்கிறது என வியந்துரைப்பர். (கேட்டோர் மழலையே அதிகமாக இனிமையுடையதென்பர்).

இவ்வாறு புனைந்துரைத்த வள்ளுவர் பெற்றோர் குழந்தைகளை எத்தகைய அன்புடன் பேணிவளர்த்தல் வேண்டுமென எதிர்பார்ப்பார் என்பதை ஊகிக்கலாம். மேலும் பெற்றோர் தாமே குழந்தைகளைத் தூக்கியும் உணவூட்டியும் மொழிபயிற்றியும் வளர்ப்பதையே விரும்புவார். குழந்தைகளைப் பெரும்பாலும் தாதியர் அல்லது பணியாட்கள் பொறுப்பில் விடுவதை விரும்பமாட்டார் எனலாம்.

இளங்குழந்தைகளினால் பெற்றோர் அடையும் இன்பத்தைப் பலபடப் புகழ்ந்து பாராட்டுதலும் குழந்தைகளைச் செல்வமாகப் போற்றுதலும் இந்திய நாட்டில் பண்டைக்காலத்தில் எங்கும் பரவியிருந்த இயல்பே யாகும். புறநானூற்றில் பாண்டியன் அறிவுடைய நம்பியும் பலவகை வளத்தையுடையோராய் நாடோறும் பலருடன் உண்ணும் செல்வர்கட்கும், இடையே குறுகுறுவென நடந்துவந்து சிறு கையை நீட்டி நெய்யுடையடிசிலை இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும் மெய்படவிதிர்த்தும் உளத்தை மயக்கும் மக்களில்லாவிடின் அவர் தம் வாழ்நாளாற் பயனில்லையெனப் பாடினன் (புறம் 188). 'குழவிதளர் நடைகாண்டலினிதே, அவர் மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே' என்றெல்லாம் குழந்தைச் செல்வத்தைப் போற்றுகிறது இனியவை நாற்பது என்னும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்.[11] பிற்காலத்துப் புகழேந்தியும் நளன் கூற்றாக இன்னடிசில் புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய் மக்களையில்லாதவர் பொன்னுடையரேனும் புகழுடையரேனும் மற்றென்னுடையரேனும் உடையரல்லரெனவும் கோமக்கள் பால்வாய்ச் சிறுகுதலை கேளாச் செவிகள்

11. இனியவை நாற்பது 14

வேறு கேள்வியறிவையுடையனவேனும் பயனற்றன வென்றும் பாடினர்.[12] வடமொழியிலக்கியங்களிலும் இவ்வாறு இளஞ்சிறுவர் அன்புடன் புனைந்துரைக்கப்படுகின்றனர் என அவற்றை ஆய்ந்தோர் கூறுகின்றனர். 'பொருளற்ற சிரிப்பினல் சிறுபற்கள் தெரிய இனிய தெளிவற்ற மழலைச் சொற்களைக் கூற முயல்பவராகிக் குழந்தைகள் தன் மடியிலமர விழையுங்கால் அவருடம்பின் தூசும் ஒருவற்கு இனிதாக இருக்கிறது' எனக் காளிதாசரும் தம்நூல்களில் ஒன்றில் கூறினராம்.[13]

நாடு முழுவதும் பரவியிருந்த இக்கருத்துக்களோடு பொருந்தவே வள்ளுவரும் எழுதினர்.

பெற்றோர் இளங்குழந்தைகளை மிகவும் பாராட்டி அன்புடன் வளர்த்தல் இயல்பு என வள்ளுவர் எண்ணினர். அத்துடன் அவர்களை நல்லறிவுடையவராகக் கல்வியில் சிறந்தோராக நற்பண்புகள் வாய்ந்தோராக வளர்த்தல் வேண்டுமெனவும் எதிர்பார்த்தார். குறளில் வரும் 'நன்மக்கட்பேறு', 'அறிவறிந்த மக்கட்பேறு' 'பண்புடை மக்கள்' என்ற தொடர்களே அதைக் காட்டும்.

மக்களையே செல்வமாகக் கருதுவர் உலகோர். ஆயினும் மக்கள் செல்வமெனக் கருதப்படத்தக்க நற்குண நற்பண்புகளையுடையராதல் அப்பெற்றோரின் செயலினலேயே யாம். ஆகவே மக்களின் அறிவுத் திறம் குண நலம் ஆகியவற்றை உருவாக்குவதில் பெற்றோருக்கு அதிகப் பொறுப்பு உண்டு. குழந்தைகளின் உடல்நலத்தைப் பேணல், அவர்க்காகப் பொருளீட்டி வைத்தல் முதலிய பெற்றோர் செய்யத்தக்க யாவற்றினும் அவர்களை அறிவும் பண்பும் மிக்கோராக்கி அவையத்தில் முந்தியிருப்பச் செய்தலே சிறந்த உதவியாகும் என்றார் வள்ளுவர். 'அவையத்து முந்தி யிருப்பச் செயல்' (67) என்னுங்கால் அவையம் எனக் குறிப்பிடப்பட்டது எது என்பது தெளிவின்று.

---

12. நளவெண்பா 234, 235

13. Basham A. L., The wonder that was India, P. 162
"The loving descriptions of children in poetry nearly always show them as spoilt darlings of their parents. Thus Kalidasa:

With their teeth half - shown in causeless laughter,
and their efforts at talking so sweetly uncertain,
when children ask to sit on his lap
a man is blessed, even by the dirt of their bodies."

அவையம் கற்றோரவை என்றார் பரிமேலழகர். கற்றோரவையின்கண் அவரினும் மிக்கிருக்கச் செய்தல் எனப் பொருள் கொண்டார். ஆஸ்தானம் அதாவது அரசவை யென்பது பரிதியார் கொண்டபொருள். அறிவுடையோனுறு அரசும் செல்லும் ஆகையினால் அரசன் விரும்பி யழைத்துத் தன் அவையில் இருத்தற்கேற்ற உயர்கல்வியைத் தன் மகன் பெறும்படி செய்வது ஒரு தந்தை செய்யத்தக்க சிறந்த நன்மை எனலாம். அவையம் என்பது அறங்கூர் அவையம் என்றார் திரு.வி.க. முந்தியிருப்பது என்பதற்கு அவர் கொண்ட பொருள் அறம் பொருந்திய நல்லவையில் கூறப்படும் பொருளைக் கேட்டுப் பயனெய்து மாறு அவ்வவையில் முன்னேயிருக்க ஆவல் கொள்ளுதல் என்பதே. மேன்மேலும் கல்வியறிவைப் பெற வேண்டும், மேன் மேலும் நற் பொருளைக் கேட்டுப் பயனடைய வேண்டும் என்னும் ஆவலுடைய வனாக மகனை வளர்ப்பதே தந்தையின் கடன் என்றார் அவர். அவையம் என்னும் சொல் பலவகை அவையங்களையும் குறிக்கும் எனக் கா. அப்பாத்துரை கொண்டார். சமுதாய அவைகளிலும் சமயப் பேரவைகளிலும் ஆட்சிமன்றங்களிலும், அறிஞர், கலைஞர், அறவோர் ஆகியோரின் அவைக்களங்களிலும் தம்மிலும் மேம்பட்டஇடத்தை யடையுமாறு தம் மக்களைக் கல்வியறிவிலும் கலையுணர்விலும் அருளிலும் விஞ்சியவர்களாகச் செய்வதே பெற்றோர் கடன் என்றார். இப்பொருள் இக்காலத்துக்குப் பொருந்துமெனினும் இத்தனைவகையான அவை யங்கள் வள்ளுவர் காலத்து இருந்தனவா என்பது ஐயத்திற்குரியதே. அக்காலத்து ஊரவைகள் இருந்திருத்தல் கூடுமேயன்றித் தற்போதுள்ள பாராளுமன்றமும் மாநில ஆட்சிமன்றமும் இல்லை. அக்காலத்து முடியாட்சியே நிலவியது. கற்றோரவைகள் இருந்தன. ஊரவையை யாவது கற்றோரவையையாவது அரசவையையாவது வள்ளுவர் உளத்தில் கொண்டு எழுதியிருத்தல் கூடும்.

அவையம் என்னும் சொற்கு எப்பொருளைக் கொள்ளினும் தந்தை மகனை அவையத்து முந்தியிருக்கச் செய்தற்குத் தந்தையின் பொறுப்புணர்ச்சியும் ஆர்வமும் மட்டும் போதா. அதற்கேற்ற பல இயல்புகள் சமுதாயத்தில் இருத்தலும் வேண்டும். தந்தை மகனைக் கல்வியிற் சிறந்தவனாக்க வேண்டுமாயின் நாட்டில் கல்வி நிலையங்களும் நன்னிலையில் இருக்க வேண்டும். அவன் அவையில் முந்தியிருப்பதும் நாட்டில் நல்லவைகள் இருப்ப அவற்றில் கல்விக்கும் பண்புக்கும் மதிப்பிருக்கும் நிலைமையிலேயே கைகூடும். இக்குறளுக்கு விரிவுரை கூறுங்கால் திரு.வி.க. 'இந்நாளில் அறங்கூரவைகளுக்குப் பதிலாகக் களியாட்டக் கூட்டங்கள் பெருகி நிற்கின்றன' என்றார். மகனொருவன் கல்விகேள்விகளிற் சிறந்தவனாயினும் அவன் அரசவையிலோ பிற

உயர்அவைகளிலோ இருக்கும் வாய்ப்பைப் பெறுதல் அரசனும் சமூகத்தில் செல்வாக்குள்ளோரும் அவன் அறிவையும் பண்பையும் உணர்ந்து அவற்றிற்கு மதிப்பளித்தலினலே யாகும். இல்லத்தில் பெற்ருேர் தம்கடமையைச் செய்தற்குச் சமுதாயமும் அரசும் ஏற்றதாக அமைதல் வேண்டும். இதை யெண்ணியே **புறநானூற்றில் பொன்முடியார்,**

ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே
சான்ருேன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
.........
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே (புறம் 312. 1 - 4)

எனப் பாடினர் போலும்.

மக்களுக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்பு சிறப்பாகத் தந்தையுடையதெனினும் தாயும் தன்பிள்ளைகள் அறிவுடையவர்களாகவும் சான்ருேராகவும் வளர வேண்டுமென விழைகிருள், அதற்குத் தானும் உதவுகிருள். இவ்வார்வம் சங்ககாலத்திலும் தாய்மார்க்கு இருந்த தென்பதைப் **பொன்முடியார்** போன்ற பெண்புலவர்களின் பாடல்கள் காட்டும். இதையே வள்ளுவரும்,

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்ருேன் எனக்கேட்ட தாய் (69)

என்ற குறள் மூலம் புலப்படுத்தினர். குழந்தை பிறந்தபோது அது குறித்து மகிழ்ந்ததைவிட அவன் பெரியவனகிச் சான்ருேன் என்ற பெயர் பெறும்போது தாய் அதிகமகிழ்ச்சி யடைகிருள்.

ஒருமகன் அறிவுடையவனுதல் அவன் பெற்ருேர்க்கு மட்டும் மகிழ்ச்சி தருவதன்று. அது மன்னுயிர்க்கெல்லாம் இனியதாகும்.

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது (68)

இக்குறளை இருவிதமாகக் கொண்டுகூட்டிப் பொருள் கொள்வர். 'தம்மக்கள் தம்மின் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது' எனவும் 'தம்மக்கள் அறிவுடைமை தம்மின் இனிது மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம்' எனவுமாம். முதலாவது கொண்டுகூட்டின்படி நோக்கின் தம்மக்கள் தம்மைவிட அதிக அறிவுடையராக இருப்பது பெற்ருேர்க்கு இனிதாகும். அவர்க்குமட்டுமின்றி அது மன்னுயிர்க் கெல்லாம் இனிது என்பது பொருளாகும். இது உலக இயல்பொடு

பொருந்துவதே. கல்வியில்லாத பெற்ரோரும் எவ்வாருயினும் தம் மக்கட்குக் கல்வியளித்தலையே விரும்புவர். சிறிதளவு கற்ரோர் தம் மக்களைத் தம்மினும் அதிகக் கல்வித்தகுதி உடையவராக்க விழைவர். இவ்வியல்பைச் சமுதாயத்தில் இன்றும் காணலாம். ஒவ்வொரு தலை முறையிலும் மக்கள் பெற்ரோரைவிட அறிவுடையராதலே சிறப்பு என்னும் கருத்து தற்காலத்திலுள்ள உயிர் மலர்ச்சிக் கொள்கை அல்லது கூர்தல் அறம் எனப்படும் உலக வரலாற்றில் உயிரினங்கள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன என்னும் கருத்துடன் (The Theory of Evolution) ஒக்கும் எனவும் கூறலாம். அவ்வறிவியல் கருத்து வள்ளுவர் காலத்தில் இல்லாததே. ஆயினும் பெற்ரோரின் மன நிலையை, இயல்பை ஆய்ந்து கூறிய கருத்து இம்மலர்ச்சிக் கொள்கை யோடு பொருந்துவதாயிற்று. இரண்டாவது கொண்டுகூட்டின்படி மக்கள் அறிவுடையவராக இருப்பின் அதைக் குறித்துப் பெற்ரோர் மகிழ்வதைவிடச் சமுதாயத்தில் பிறர் மகிழ்வர் என்பது பொருளாம். எவ்வாருயினும் பெற்ரோர் மட்டுமின்றிப் பிறரும் மகிழ்தல் 'மன்னுயிர்க் கெல்லாம் இனிது' என்ற தொடரால் கூறப்பட்டது. ஆகவே கல்வி யளித்தல் சிறப்பாகப் பெற்ரோர் பொறுப்பேயாயினும் சமுதாயம் முழுவதும் அதில் கவனமெடுத்தல் வேண்டும், இளையோரின் கல்வி ஒரு வகையில் சமுதாயத்தின் பொறுப்புமாகும் என்பது வள்ளுவர் கருத்தாக இருத்தல் கூடும். ஒருமகன் சிறந்த அறிவை யுடையவதனல் அவன் குடும்பத்திற்கு மட்டுமன்று, சமுதாய முழுவதற்கும் நன்மையே. இங்கு மன்னுயிர் எனக் குறிக்கப்பட்டவர் யார்? சான்ரோர் என்றும் அறிவுடையோர் என்றும் பொதுவாக மக்கள் அனைவருமே என்றும் கொள்வர். 'கற்ருரைக் கற்ருரே காமுறுவர்' எனப் பிற்கால நீதி நூல்களும் கூறுவது போல அறிவுடையோன் ஒருவனின் தகுதியை யறிந்து உகக்கத்தக்கவர் பிற அறிவுடையோரே. சான்ரோனின் பெருமையை யுணர்பவர் பிறசான்ரோரே. சமுதாயத்தில் பிறமக்களும் அவன் செய்யும் நற்செயல்களினல் பயனடைந்து உகத்தல் கூடும். ஆனல் வள்ளுவர் 'மன்னுயிர்' என்ருர். மக்களன்றிப் பிறவுயிர்கள் உகக்குமா? அறிவுடையோன் பிறஉயிர்களிடத்தும் அருள் உடைய வனுக இருப்பான். அவன் கால்நடைகள் முதலிய பயனுள்ள விலங்குகளைப் பெருக்கவும் பாதுகாக்கவும் உதவுதல் கூடும். விலங்குகளை அருளுடன் ஆளுமாறு மக்களை ஊக்கல் கூடும். ஆகவே மக்களன்றிப் பிறவுயிர்கட்கும் அவன் அறிவுடைமை இனிதாகும் எனல் பொருந்துவதே. அறிவுடையவன் பிறவுயிர்கள் மாட்டும் அருளுடைய வனுதல் வேண்டுமெனவே வள்ளுவர் எதிர்பார்ப்பார்.

அறிவினு ளாகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை (315)

எனப் பிற இடத்துக் கூறினர் அல்லவா? ஆகவே 'மன்னுயிர்க்கெல்லாம் இனிது' என்ற தொடர் விரிந்த பொருளையே தருகிறது.

தன்னைச் சான்றோனாக்க விழைந்த பெற்றோர்க்கு மகன் (அல்லது மகள்) செய்ய வேண்டிய உதவியையும் வள்ளுவர் கூறினர்.

மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல் (70)

மகன் தந்தைக்குச் செய்யத்தக்க உதவி பிறர் 'இவன் தந்தை இத்தகைய புதல்வனைப் பெற என்ன தவம் செய்தானோ' எனக் கூறுமாறு நடந்து கொள்வதே. வழக்கம் போலவே இங்கும் குறள் மிகவிரிந்தபொருளைத் தருகிறது. மகன் தந்தைக்குக் கீழ்ப்படிதல் வேண்டும், தந்தைக்கு மதிப்பளித்தல் வேண்டும், தந்தை முதுமை யுற்றபோது பொருளளித்தும் பிறவகையில் உதவியும் காத்தல் வேண்டும், நோயுற்றால் ஆவன செய்தல் வேண்டும் என்பதனைத்தும் அதில் அடங்கும். இவற்றையெல்லாம் செய்யாத மகனைப் பார்த்து யாரும் 'இவன் தந்தை என்னோற்றான் கொல்?' எனக் கூறார். ஆனால் இவற்றை விட வேறுகடமைகளும் இதில் அடங்கும். மகன் தன்தாயை மதிக்காமலிருந்தால் அல்லது தன் உடன்பிறந்தோருடன் பகை கொண்டவனாக இருந்தால் பிறர் அவ்வாறு கூறுவரா? அப்பொழுதும் கூறார். மகன் தன்குடும்பத்தோர்க்குச் செய்ய வேண்டிய யாவற்றையும் செய்தானாயினும் அவன் கள்ளுண்பவனாகவோ பிற வகையில் ஒழுக்க மற்றவனாகவோ ஒருதொழில் முயற்சியுமில்லாது மடிந்திருப்பவனாகவோ இருப்பினும் இச்சொல்லைப் பெறான். தன் பெற்றோரிடத்தும் குடும்பத்தினரிடத்தும் மிக்க அன்புடையவனாய் அவர் திறத்துச் செய்யத்தக்க கடமைகள் யாவும் செய்பவனாய் அது மட்டுமன்றி எல்லாவகையிலும் நல்லொழுக்கமுடையவனாய் வாழும் மகனே அத்தகைய இனிய புகழ்ச்சொல்லைப் பெறுவான்.

அளைந்த உணவை அமுதமாக உண்டும் மழலை கேட்டு மகிழ்ந்தும் அணைத்து உவகையுற்றும் பெற்றோர் அருமை பாராட்டி வளர்க்கும் மக்கள் தக்க கல்வியும் பயிற்சியும் அளிக்கப்பட்டுப் பெரியவராயபின் பெற்றோர்க்கும் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் உயிர்கள் யாவுக்குமே நற்பயனளிப்பவர்களாய்த் திகழும் நல்லில்லத்தையே வள்ளுவர் எவ்விடத்தும் காண விரும்பினர்.

## 2. 7. பிற இயல்புகள்

இல்லறத்தோர் கடைப்பிடிக்கத்தக்க அறங்களையும் இல்லத் தலைவியின் இயல்புகளையும் மக்கட் பேற்றையும் குறித்து வள்ளுவர் இல்லறவியலில் மூன்று அதிகாரங்களில் கூறினர். திருக்குறளின் பிற பகுதிகளிலும்கூட இல்லத்தைக் குறித்த அவர் கருத்துக்கள் ஆங்காங்குக் காணப்படும். அவற்றையும் இங்கு ஆய்வது பொருத்தமே.

### 2. 7. 1. இல்லத்தில் தலைமை

வள்ளுவர் பெண்கட்கு மதிப்பளித்தார். மகளிர் பிறரால் கட்டுப்படுத்தப்படுதலின்றி உரிமையுடன் வாழ வேண்டுமென விரும்பினர். ஆயினும் இல்லத்தில் தலைமை ஆடவனுக்கே உரியது என அவர் எண்ணினர் என்பது **பெண்வழிச்சேறல்** என்னும் அதிகாரத்தினின்றும் புலனாகும். நல்ல மனைவி கணவனிடம் பணிந்து நடப்பாள் என்னும் அவர் கருத்தைக் 'கொழுநற்றொழுதெழுவாள்' என **வாழ்க்கைத்துணைநலத்தில்** வரும் தொடரினலும் அறியலாம். குடும்பத்தில் இருவரும் ஒருவரிடம் ஒருவர் அன்பு பாராட்டி ஒருவரை யொருவர் போற்றிக் காக்க வேண்டியவர்களே. ஆயினும் மனைவி குடும்பத்தில் தலைமையிடம் பெறுவதையும் கணவன் மனைவியின் விருப்பப்படியே நடப்பதையும் அவர் விரும்பவில்லை.

குடும்பத்தில் ஆடவனே தலைவன் என்பது பண்டைக் காலத்தில் பலநாடுகளிலும் பரவியிருந்த கருத்தே யாகும். **தாய்வழித் தாய உரிமையைப்** பின்பற்றிய ஒருசில நாகரிகங்களைத் தவிரத் தந்தை வழித் தாயஉரிமையைப் பின்பற்றிய நாடுகள் அல்லது இனங்களி லெல்லாம் ஆடவனே இல்லத்தின் தலைவன் என்ற கருத்தே நிலவி வந்தது. வள்ளுவர்காலத் தமிழ்நாட்டிலும் **தந்தைவழித் தாய உரிமையே** பெரும்பாலும் நிலவி வந்ததெனத் தோன்றும். பொருளீட்டுவதும் பெரும்பாலும் ஆடவர் கடமையாகவே யிருந்தது. ஆகவேதான் 'தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத்துணை' என வள்ளுவர் கூறினர். பண்டைத் தமிழ்நாட்டில் அரசரே நாட்டை யாண்டனர். அரசியர் உடன் வீற்றிருப்பதாகச் சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் வரும் சில நிகழ்ச்சிகளில் காணப்படினும், **காட்சிக் காதையில்** "கண்ணகியா பாண்டிமாதேவியா பாராட்டத்தக்கவர்?" எனச் **செங்குட்டுவன்** தன்மனைவியிடம் வினவியது போல ஒரமையம் அரசன் அரசியுடன் கலந்தாலோசித்தல் கூடுமாயினும் முடிசூடி ஆள்பவன் அரசனே. நாட்டையாளும் பொறுப்பு அரசனுடையதே. அக்காலத்து அமைச்சராகவும் தூதராகவும் அரசியலலுவலராகவும் பிறவகையிலும்

பொதுவாழ்க்கையில் பணியாற்றியவர்கள் ஆடவர்களே. அதியமான் சார்பாக ஔவையார் தொண்டைமானிடம் தூது சென்றதைப் புறநானூற்றில் காண்கின்றோமாயினும் அது ஒருதனிப்பட்ட நிகழ்ச்சியே யன்றி வழக்கமன்று. சங்ககாலத்தில் பெண்கள் பலர் சிறந்தகல்வி யறிவுடையவராயிருந்தனர். காக்கைபாடினியார், நக்கண்ணையார், குறமகள் இளவெயினி, காவற் பெண்டு, பாரிமகளிர் முதலிய பல பெண்புலவர்கள் புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றைப் பாடி யுள்ளனர். ஆயினும் அவ்வாறு கவிபாடும் ஆற்றல் உடைய மகளிரும் கூட,

> ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே (புறம். 312.1)

எனவும்,

> புலிசேர்ந்து போகிய கல்லளை போல
> ஈன்ற வயிறோ இதுவே
> தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே (புறம். 86. 4-6)

எனவும் பாடிய தாய்மாரைப் போல இல்லத்திலிருந்து பணி செய்தலே தம்கடன் எனவும் வெளியுலக வாழ்க்கை ஆடவர்க்குரியது எனவும் கருதினர்.

> வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்
> மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரென
> நமக்குரைத் தோரும் தாமே (135. 1–3)

என்ற குறுந்தொகைச் செய்யுளும் இக்கருத்தையே தரும். இல்லத்தி லிருந்து கணவனுக்கு வேண்டிய செய்து அவனைப் போற்றுதலும் மக்களைப் பேணி வளர்ப்பதுமே மகளிரின் தலையாய கடனாகக் கருதப் பட்டது.

பொருளீட்டி வெளியுலக வாழ்க்கையில் ஈடுபடும் ஆடவன் உலகியலறிவிலும் பட்டறிவிலும் இல்லுறை மகளிரைவிட மிக்கவனாக இருத்தல் இயல்பே. வெளியுலக வாழ்க்கையில் ஈடுபடும் அவன் குடும்பத்தின் நலத்தை மட்டுமன்றிச் சமூக நலத்தையும் நாட்டின் நலத்தையும் குறித்து அதிகம் எண்ணுவதும் இயல்பே. ஆகவே அறச் செயல்களிலும் பொருளீட்டும் முயற்சியிலும் இன்னது செய்யப்பட வேண்டும் எனத் துணிவது ஆடவனாகவும், ஒத்துழைப்பதே மனைவியின் இயல்பாகவுமே இல்லங்களில் நிகழ்ந்து வந்தது. தற்காலத்தில் மாதரும் வெளியுலக வாழ்க்கையில் ஈடுபடுகின்றனர். பலர் பொருளீட்டு கின்றனர். ஆயினும் தற்போதும் குடும்பங்களில் பொருளீட்டுங்

கடமை சிறப்பாக ஆடவர்க்கே உரியதாக இருக்கிறது. சில நாடுகளில் (இந்தியாவில், இலங்கையில், இரண்டொரு ஆண்டுகளின் முன் இஸ்ரவேல் நாட்டில்) பெண்களே நாட்டின் தலைவியர்களாக இருக்கும் இக்காலத்திலுங் கூட இல்லத்தில் தலைமை பெரும்பாலும் ஆடவர்க்கே உரியதாக இருப்பதைக் காணலாம். கொடுக்கல் வாங்கல் முதலிய பொருள் விபரங்களைக் குறித்தோ அறப்பணிக்கு உதவுதலைக் குறித்தோ இல்லங்களில் மகளிரை வினவும்போது 'அவரைக் கேட்டுச் சொல்கிறேன்' என்றோ 'அவரைத் தான் கேட்க வேண்டும்' என்றோ கூறுவதே இயல்பாக இருக்கிறது. ஆகவே பெண்கள் வெளியுலக வாழ்க்கையில் அதிகம் பங்கு பற்றுதிருந்த தம்காலத்தில் வள்ளுவர் தலைமை ஆடவர்க்கே உரியது எனக் கருதியதில் வியப்பில்லை.

இல்லத்தில் கணவன் எப்பொழுதும் மனைவி விருப்பப்படியே நடப்பின் அது அவனுக்கு நல்லாருள் நாணுத்தரும் எனவும் அவன் வெளியுலகில் செய்யும் முயற்சிகள் சிறப்பெய்த மாட்டா எனவும் வள்ளுவர் கூறினர். மேலும் (தன்னலம் பேணும்) மனைவியின் சொற்கேட்டு நடக்கும் ஒருவன் அறவோர், விருந்தினர் ஆகியோர்க்குச் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்யான். தன் நண்பர்க்கு ஒரு குறை நேரின் அதை நீக்குதற்கும் நல்ல அறச்செயல்களைச் செய்வதற்கும் உரிமையற்றவனுக இருப்பான். அவ்வாறு உரிமையற்றவனுய் மனைவி விருப்பப்படி நடக்கும் ஒருவனின் பொருளீட்டும் முயற்சிகளும் கைகூடாமற் போகும். இவ்வாறு கூறி வள்ளுவர் கணவன் விருப்பப்படி மனைவி நடத்தலே சிறப்பென விளக்கினர்.

பெண்வழிச்சேறல் பொருட்பாலில் **அங்கவியலிலேயே** கூறப்படுவதால் அது முக்கியமாக அரசியலில் ஈடுபட்டோர்க்குக் கூறப்பட்ட அறிவுரையாகவும் கருதப்படல் கூடும். பெண்கள் அரசாளுதல் ஆகாது என்ற கருத்து சில வடஇந்திய நூல்களில் சிறப்பாகப் பௌத்த நூல்களில் காணப்படுவதை வரலாற்றுசிரியர்கள் எடுத்துரைக்கின்றனர்.[14] அக்கருத்தின் செல்வாக்கு ஓரளவு குறளிலும் காணப்படுவதாக இருக்கலாம். அவ்வாருயின் அரசியலில் ஈடுபடுவோர் அரசியல் செய்திகளைக் குறித்து மனைவியின் விருப்பைக் கேட்டு நடத்தலை விலக்கவே இவ்வதிகாரம் எழுந்தது எனக் கொள்ளுதல் கூடும். ஆயினும் இப்பத்தில் அடங்கிய குறள்களனைத்தையும் நோக்கும் போது அது பொதுமக்கட்கும் பொருந்துமெனவே தோன்றுகிறது.

---

14. Spellman, John W., **Political Theory of Ancient India,** Clarendon Press, Oxford, 1964, P. 46.

## 2. 7. 2. குடும்பத்திற்காக உழைப்பும் தன்மறுப்பும்

ஒருவன் தன்குடும்பத்துக்காகக் கடும்உழைப்பை மேற்கொள் வதும் தன்குடியை யுயரச்செய்தற்பொருட்டுத் தான் பலதுன்பங் களைத் தாங்குவதும் சிறப்பாகும் என வள்ளுவர் கருதினர். ஒரு குடியில் பிறந்த பலருள் யாவரும் ஒரேயளவு முயற்சியும் ஊக்கமும் உடையவராயிருக்கமாட்டார்கள். முயற்சியும் ஊக்கமும் உடையவன் தன்சகோதரரை உயரச்செய்யும் பொருட்டுத் தான் உழைத்தல் சிறப்பாகும். சகோதரர் ஒருவர் பொருட்டு ஒருவர் அல்லது வயது வந்த மகன் தன்பெற்றோர் பொருட்டுச் செய்ய வேண்டிய உழைப்பை யும் தன்மறுப்பையும் குறித்து வள்ளுவர் குடிசெயல்வகை என்னும் அதிகாரத்துள் கூறினர்.

குடி என்பது யாது? குடியும் குடும்பமும் ஒன்ரு என்ற கேள்வி இங்கு எழலாம். வள்ளுவர் தாமே குடும்பம் என்னும் சொல்லே ஒரு குறளில் 'குடி'க்குப் பதிலாகப் பயன்படுத்துகிருர் (1029). இல்லென்னும் சொல்லும் அதே பொருளில் ஆளப்படுகிறது (1026). குடும்பம் என்னும் சொல்லேச் சற்று விரிந்த பொருளில் பயன்படுத்தின் அது குடியைக் குறிப்பதாகலாம்.

தன் குடும்பத்தை உயரச் செய்வதற்காகக் கடும்உழைப்பை மேற்கொள்ளும் ஒருவன் அப்பணியில் நான் கை சோரேன் அல்லது அதை ஒருபோதும் விட்டொழியேன் எனக் கூறுவதே அவனுக்குப் பெருமையாகும். அதைவிடப் பீடுடையது வேறொன்றும் இல்லே. அறிவும் முயற்சியுமே குடும்பத்தை முன்னேறச் செய்யும். அவ்வாறு தன்குடிக்காக முயன்றுழைப்பவர்க்குத் தெய்வமே முன்னின்று உதவி செய்யும் எனவும் அவர் செய்யும் முயற்சிகள் சூழாமல் தாமே முடி வெய்தும் எனவும் வள்ளுவர் கருதினர். குடும்பத்தின் நலத்துக்காகத் தானும் ஒருவன் குற்றமாயினவற்றைச் செய்தலாகாது. ஈன்ருள் பசி காண்பானுயினும் ஒருவன் சான்ருேர் பழிக்கும் வினே செய்தலாகாது அல்லவா? ஆகவே குடிசெய்பவனும் 'குற்றம் இலனுய்க் குடிசெய்து வாழ்தல்' வேண்டும். அவ்வாறு வாழ்பவனே உலகத்தோர் யாவரும் சுற்றமாகச் சார விழைவர். குடும்பத்துக்காக உழைப்பவர் பருவத்தை நோக்குதலாகாது. இது கோடை, இது பனி, இது மழை எனக் கருதி வெப்பம், குளிர் தாங்க விரும்பாராகி முயற்சியைக் கைவிடுவாராயின் குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யாராவர். சோம்பலுக்கும் அவர் இடங் கொடுத்தலாகாது. மானம் கருதினும் அவர் முயற்சி கெடும். 'இத்தொழில் எனக்கு ஏற்றது அன்று' என்ருே

'என் குடும்பத்தில் பிறர் இன்புற்றிருக்க நான்மட்டும் துன்புற்று உழைத்தல் வேண்டுமா' என்றே எண்ணுபவன் தன்குடும்பத்தை உயரச் செய்யான். ஒருபோரின்கண் செல்லும் வீரரனைவரும் ஒரே யளவு வீரத்துடன் போர் செய்வது இல்லையே. பிறர் பின்வாங்கினும் வீரமுள்ளோன் ஒருவன் முன்வந்து போரைத்தாங்கிப் பிறருக்கும் ஊக்கம் அளிக்கிறான். அவ்வாறே குடும்பத்திலும் சிலர் மடிந்திருப் பினும் முயற்சியுள்ளவன் குடும்பபாரத்தைத் தாங்கிக் கொள்ள முன் வரல் வேண்டும். வயதுவந்த மக்கள் குடும்பத்துக்குச் செய்யும் கடமையை இவ்வாறு விளக்கிய வள்ளுவர்,

> இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
> குற்றம் மறைப்பான் உடம்பு (1029)

என்றார். (தன் குடும்பத்தில் பிறருக்குத் துன்பம் வராமல் காக்க அல்லது பிறர் செய்யும் குற்றத்தை மறைக்க முன்வரும் ஒருவன் எவ்வளவு துன்பமாயினும் தாங்க இசைவான். அவன் உடம்பு இடும்பைக்கே கொள்கலமாயினும் அவன் தளரான்.) 'குற்றம் மறைப்பான்' என்பதற்கு 'மூவகைத் துன்பமும் உறற்பாலதாகிய தன்குடியை அவை உறாமல் காக்க முயல்வான்' எனப் பரிமேலழகரும் 'சுற்றத்தார்மாட்டு உளதாகிய குறையை மறைக்கக் கருதுவான்' என மணக்குடவரும் பொருள் கூறினர். குடும்பத்தில் அண்ணனோ தம்பியோ முயற்சியற்றவனாக இருப்பின் மற்றவன் முயன்று தனக்காக மட்டு மன்றி அவனுக்காகவும் பொருளீட்ட வேண்டும் அல்லது குடும்பத்தில் ஒருவன் கடன்பட்டால் மற்றொருவன் முயன்றுழைத்து அதனைத் தீர்க்க முன்வருதல் வேண்டும் என்பது பொருள் போலும். உடன் பிறந்தோருள் ஒருவர் பிறர்க்காகவோ வயதுவந்த மகன் தந்தைக் காகவோ இத்தகைய தன்மறுப்பைச் செய்ய முன்வருதல் கூடும். இதையே நாலடியாரும்,

> சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
> மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
> குதலைமை தந்தைகட் டோன்றின்தான் பெற்ற
> புதல்வன் மறைப்பக் கெடும் (197)

என்ற செய்யுள் மூலம் விளக்குகிறது. ஆலமரத்தின் அடிப்பாகம் சிதலையால் அரிக்கப்படினும் அதன் விழுதுகள் நிலத்தில் நன்கு ஊன்றியிருப்பின் அவை மரத்தைத் தாங்கும். அதுபோலத் தந்தை யிடத்துத் தளர்ச்சியோ குற்றமோ ஏற்படின் அது புதல்வன் தன் முயற்சியால் மறைப்பக் கெடும்.

தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன
ஓங்குகுலம் நையஅத னுட்பிறந்த வீரர்
தாங்கல் கடன் ......... (சீவக சிந்தாமணி 498)

எனச் சற்றுப் பிற்கால நூலாகிய சீவக சிந்தாமணியும் கூறுவதைப் பரிமேலழகர் தாமே எடுத்துக் காட்டினர்.

குடும்பத்துக்காக அல்லது குடிக்காகச் செய்யப்படும் தன்மறுப்பு அக்காலத்தில் போற்றப்பட்டது. வள்ளுவரும் அதைப் போற்றினர்.

## 2. 7. 3. குடும்ப அன்பும் வெளியுலகக் கடமைகளும்

குடும்பத்தில் நிறைந்த அன்பு இருத்தல் வேண்டும். ஆனல் குடும்பத் தலைவன் வெளியுலகக் கடமைகளைச் செய்யாது விடுதலும் ஆகாது. அவன் அவற்றைச் செவ்வனே செய்தலும் வேண்டும் என்பதே வள்ளுவர் கருத்து. குடும்பத்தில் அன்புடைய தலைவன் தன்னில்லத்திலிருந்து தன் மனைவி மக்களைப் பேணிப் பாதுகாத்து அதே நேரத்தில் விருந்தோம்பியும் சமுதாயத்தில் பிறர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்தும் நல்லில்லறம் நடத்தவே விழைவன். ஆயினும் தலைவன் எப்பொழுதுமே தன்னில்லத்தில் இருக்கத்தக்கதாகச் சமுதாயம் அமையவில்லையே. குடும்பத்தலைவன் பொருள் தேடும் முயற்சியில் வாணிபத்தின் பொருட்டோ பிற வேலைகளின் பொருட்டோ வெளியூர் செல்ல வேண்டியிருக்கலாம். போர் நிகழுங்கால் தன் நாட்டைக் காக்கக் குடும்பத்தலைவன் போர்முனைக்குச் செல்லலாம். அவ்வாறு தலைவன் தன் குடும்பத்தைவிட்டுப் பிரியவும் வெளியூரில் தங்கவும் நேரிடுங்கால் குடும்ப அன்புக்கும் கடமைக்கும் இடையே அவன் மனநிலை எவ்வாறிருக்கும் என்பதையும் வீட்டில் தனியே இருந்து வருந்தும் இல்லத்தலைவியின் துயர் எத்தகையது என்பதையும் பண்டைத் தமிழ்நூல்கள் பல அழகுறச் சித்திரிக்கின்றன. திருக்குறள் காமத்துப்பாலின் கற்பியலும் அதைக் காட்டுகின்றது.

கற்பியலில் பெரும்பான்மையான அதிகாரங்கள் பிரிவைக் குறித்தே கூறுகின்றன. தொல்காப்பியர் ஓதல், பகைதணிவினை, தூது, காவல், பொருள்தேடல், கல்வி முதலிய பலவற்றைப் பிரிவுக்குரிய காரணங்களாக்கிப் பரத்தையிற் பிரிவையும் அகத்திணையியலுள்ளும் கற்பியலுள்ளும் கூறினர். திருக்குறளிலோ பிரிவுக்குரிய காரணங்கள் தெளிவாகக் கூறப்படவில்லை. பரத்தையிற் பிரிவை வள்ளுவர் கூறவில்லை. வள்ளுவர் விரும்பும் இல்லத்தில் அது நிகழாது எனக் கொள்ளலாம்.

பிற பிரிவுகளுள்ளும் ஓரளவு குறிப்பாக உணர்த்தப்படுவன பொருள் வயிற்பிரிவும் பகைதணிவினை அல்லது வேந்தர்க்கு உற்றுழிப் பிரியும் பிரிவுமே.

பொருள்மாலை யாளரை யுள்ளி மருள்மாலை
மாயும்என் மாயா உயிர் (1230)

என்ற குறள் தலைவன் பொருள் தேடும் விருப்பினால் பிரிந்தான் என்பதைக் காட்டும்.

வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து (1268)

எனத்தலைவன் கூற்றாக வரும் குறள் வேந்தர்க்கு உற்றுழிப்பிரிந்தோன் கூற்றே. 'உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்' (1263) எனப் பிறிதொரு குறளில் வரும் தொடர் போர்வினையைக் குறிப்பதாக இருக்கலாம். பிற தொழிலில் வலிமை அல்லது வெற்றியைக் குறிப்பதாகவும் இருக்கலாம். பிரிவின் காரணத்தைப் பற்றிய பிற குறிப்புக்கள் குறளில் இல்லை.

வீட்டிற்கு வேண்டிய பொருளைத் தேடவோ நாட்டிற்குப் பாதுகாப்பளிக்கவோ என முக்கிய காரணமாகவே தலைவன் பிரிகிறான். வீட்டில் உள்ள பாசப்பிணிப்பினால் வெளியுலகக் கடமைகள் தவிர்க்கப் படுவதில்லை. அக்கடமைகளினாலோ நெடுநாட் பிரிவினாலோ அன்பு பெருகுவதேயன்றி யருகுவதில்லை. இத்தகைய இல்லத்தையே காமத்துப் பாலில் கற்பியல் காட்டுகிறது. பிரிவின் கண்ணும் தலைவி எப்போதும் தலைவனின் எண்ணமாகவே யிருக்கிறாள். அவர் நல்லியல்புகளை யுன்னிப் பொழுதைப் போக்குகிறாள். அவரைக் குறித்தே தன் அன்பார்ந்த தோழியிடமும் உரையாடுகிறாள். பிரிந்திருக்கும் தலைவனும் தன்வேலைகட்கிடையே நேரம் கிடைக்கும் போது தன்னில்லத்தையும் தன்னில்லக்கிழத்தியையும் நினைவுகூருகிறான். விரைவில் வேலை முடிந்து மனை திரும்ப வேண்டுமென ஆர்வமுறுகிறான். இத்தகைய பாசப்பிணைப்புள்ள குடும்பத்தையே வள்ளுவர் விரும்பினர். தலைவி இரவில் துயில் பெறுதவளாய்த் துன்புறுகிறாள். ஒரொருசால் துயின்றால் தலைவனைக் குறித்தே கனவுகள் காண்கிறாள். பிரிந்திருக்கும் தலைவனும் தலைவியும் ஒருவருக்கொருவர் தூதனுப்புவதும் உண்டு என்பது திருக்குறளினின்றும் தெரிகிறது. அஞ்சல் (post) இல்லாத அக்காலத்தில் தூது மூலமே செய்தி தெரிவித்தனர் போலும். கடமையையும் அன்பையும் கைவிடாது ஒழுகும் தலைவன் தலைவியரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளே கற்பியலில் காணப்படுவன.

இவ்வாறு நல்லில்லத்தைக் குறித்த வள்ளுவரின் கருத்துக்கள் பலவற்றைத் திருக்குறளின் பல பகுதிகளில் காணலாம்.

## 2. 8. உலக இல்லங்களிடை வள்ளுவர் காட்டும் இல்லத்தின் இடம்

**சமூகவியலறிஞர்** உலகில் நிலவிவரும் பலவகைக் குடும்பங்களையும் ஆய்கின்றனர். குடும்பங்கள் எத்தனை வகைப்படும் என வகுக்க முயல்கின்றனர். **பிரித்தானிய கலைக்களஞ்சியமும்** (Encyclopaedia Brittanica) பல வகைக் குடும்பங்களைக் குறித்துக் கூறுகிறது.[15] இவற்றுள் முதன்மையானதாகக் கருதப்படுவது தந்தை தாய் பிள்ளைகள் ஆகியோரை மட்டும் கொண்ட அடிப்படையான சிறு குடும்பமே (the nuclear family). **பெருங்குடும்பங்கள்** அல்லது **கூட்டுக் குடும்பங்கள்** இருவகையாக ஏற்படுதல் கூடும். மணமான பின்னும் மக்கள் பெற்றோருடன் வசிப்பதால் மூன்று தலைமுறைகளடங்கிய கூட்டுக் குடும்பம் ஏற்படுகிறது. தந்தைக்குத் தலைமை நல்கும் குடும்பமாக இருப்பின் ஓர் ஆடவனும் அவன் மனைவியும் அவன் ஆண்மக்களும் அவர்களின் மனைவிமாரும் அவர்தம் குழந்தைகளும் ஆகியோர் ஒரு பெருங் குடும்பமாகின்றனர். பலதாரம் கொள்வதினாலும் பெருங் குடும்பம் ஏற்படுகிறது. ஓர் ஆடவன் பல மனைவியரை மணந்து வாழுங்கால் அம்மனைவியரும் அவர்தம் குழந்தைகளும் அவ்வாடவனைத் தலைவனாகக் கொண்ட ஒருகுடும்பமாகின்றனர்.

இம்முறையில் பார்க்கின்றபோது சிறுகுடும்பமே (the nuclear family) வள்ளுவர் உளத்தில் கொண்ட குடும்பமாகும். துவ்வாதார்க்கு இல்வாழ்வான் துணை எனக் கூறிய வள்ளுவர் குடும்பத் தலைவனின் அல்லது தலைவியின் தாயோ தந்தையோ அல்லது உறவினரில் ஒருவரோ, உறவினருள் பெற்றோரை இழந்த ஒரு குழந்தையோ பிற ஆதரவற்ற நிலையில் அல்லது உதவி வேண்டிய நிலையில் அக்குடும்பத்துடன் இணைந்து வாழும் நிலையை ஒப்புதல் கூடும். ஆயினும் பெரும்பாலும் அடிப்படைச் சிறுகுடும்பத்தை உளத்திற் கொண்டே அவர் எழுதினர் எனத் தோன்றும். பலதாரம் கொள்ளும் முறையை வள்ளுவர் ஆதரிக்கவில்லை யென்பது முன்பே விளக்கப்பட்டது.

**ரால்ப் லின்டன்** (Ralph Linton) என்னும் ஓர் அறிஞர் குடும்பங்களைப் **பிறப்புத் தொடர்பை** முக்கியமாகக் கொண்ட குடும்பங்கள் (consanguinial families) எனவும் **திருமணத் தொடர்பை** முக்கியமாகக் கொண்ட **குடும்பங்கள்** (conjugul families) எனவும் இருவகையாகப் பிரித்தார். பெற்றோர் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள்

15. **Encyclopaedia Brittanica**, Vol. 9, Family.

அடங்கியது பிறப்பை அடிப்படையாகக் கொண்ட குடும்பம். பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் கொள்ளும் தாரங்களும் (மனைவி அல்லது கணவன்) அக்குடும்பத்தின் வெளியெல்லையில் இடம் பெறுவர். கணவனும் மனைவியும் குழந்தைகளும் அடங்கியது திருமணத்தை அடிப்படையாகக் கொண்ட குடும்பம். கணவன் மனைவியரின் பெற்றோர் சகோதரர் பிற உறவினர் வெளியெல்லையில் நின்று குடும்பத்துடன் ஓரளவு உறவு கொள்வர். இம்முறையில் பார்க்கும்போது பின்னதே வள்ளுவர் கண்ட குடும்பமாகும். திருமண உறவையே வள்ளுவர் அடிப்படையாகக் கொண்டார். ஆகவேதான் மனைவியை வாழ்க்கைத்துணையென்றார். அவர் கருத்துப்படி மணமான ஆடவன் தன்பெற்றோரையோ சகோதரரையோ அன்றி மனைவியையே வாழ்க்கைத்துணையாகக் கருதுகிறான். மணமான பெண் காலையில் எழும்போது தன்பெற்றோரையோ உறவினருள் பிறபெரியோரையோ எண்ணுவதின்றித் தன் கணவனையே எண்ணித் துயிலெழுகின்றாள்.

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே (குறுந்தொகை 40)

என்பன போன்ற பழந்தமிழ்ச் செய்யுட்களும் எவ்விதப் பிறப்புத் தொடர்புமின்றி ஓர் ஆடவனுக்கும் பெண்ணுக்குமிடையே ஏற்படும் அன்புத்தொடர்பையே சிறப்பிக்கின்றன. வள்ளுவரும் **தார உறவையே** (conjugal relationship) குடும்பத்தின் அடிப்படையாகக் கொண்டார்.

குடும்பங்களைத் **தாய்வழிக் குடும்பங்கள் தந்தைவழிக் குடும்பங்கள்** எனவும் பிரிப்பர். ஓர்ஆடவனும் பெண்ணும் குடும்பமாக இணையுங்கால் யார் இருக்கும் இடத்திற்கு யார் செல்லுதல் வேண்டும்? கணவன் இடத்திற்கு அல்லது ஊர்க்கு மனைவியா? மனைவியின் ஊர்க்குக் கணவனா? முன்னதாயின் அது **தந்தைவழிக் குடும்பமாகும்** (patrilocal family). பின்னதாயின் **தாய்வழிக்குடும்பமாகும்** (matrilocal family). **பெண்வழிச்சேறலை** விரும்பாத வள்ளுவர் முன்னதையே உளத்தில் கொண்டார் என்பது உறுதி. தாயஉரிமையும் (inheritance) வள்ளுவர் காலத்தில் தந்தைவழியதே எனத் தோன்றும். ஆடவனின் செல்வமும் அவன் பெறும் ஊதியமுமே குடும்பத்தின் பொருளாயின. ஆகையினாலேயே 'தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத்துணை' என வள்ளுவர் கூறினர். பெண்ணே தன்பெற்றோ

ரிடமிருந்து பெருஞ்செல்வத்தைக் குடும்பத்துக்குக் கொணர்பவளாயின் 'வளம்தருவாள் வாழ்க்கைத்துணை' எனக் கூறலே பொருந்தும்.

## 2. 9. இல்லங்களின் அடிப்படை

இன்னும் குடும்பம் இயல்பூக்கங்களினுல் எழுவதா சமுதாயத்தால் ஏற்படுத்தப்படுவதா என்பதும் சமூகவியல் அறிஞர்களால் ஆயப்படுவதாகும். பெற்ருேரோ ஊராரோ பேசி மணம் செய்விக்கும் முறையையன்றித் தலைவனும் தலைவியும் தாமே எதிர்ப்பட்டு அன்பு கொண்டு பின் மணம் செய்யும் முறையை ஆதரித்த வள்ளுவர் குடும்பம் இயல்பூக்கங்களினுல் (instinct) எழுவதே என்ற கருத்தையே பின்பற்றியிருத்தல் வேண்டும். பொதுவாகப் பழந்தமிழரின் கருத்தும் அதுவே யாகும். குடும்பம் சமுதாயத்தோடு தொடர்புடையது, சமுதாயத்தோடு ஒத்தியங்க வேண்டியது, சமுதாயத்தினுல் நல்லதென ஏற்றுக் கொள்ளப்படுவது, ஆனல் அது சமுதாயத்தினுல் செயற்கையாக அமைக்கப்படுவதன்று; இயல்பூக்கத்தால் ஒன்று சேர்க்கப்படுவதே. இக்கருத்தின்படியே அகப்பொருள் நூல்களனைத்தும் தலைவன் தலைவியர்க்கிடையே இயல்பாக எழும் அன்பைப் போற்றுகின்றன. சில அமையங்களில் சமுதாயத்தை எதிர்த்தும் பெற்ருேரை மீறியுங் கூடத் தலைவன் தலைவியர் ஒன்று சேர விழைவதைக் காட்டுகின்றன. ஆயினும் அவர்கள் சமுதாயத்தின் ஒப்புதலையும் இறுதியில் பெற்ருேரின் ஏற்பையும் பெறுதலையும் உடன்போக்கு என்ற துறையில் வரும் பலபாடல்கள் காட்டும். இயல்பூக்கங்களினுல் உண்டாகும் குடும்பம் பின் சமுதாயத்தின் ஆதரவையும் பெறுகிறது.

பண்டைத் தமிழ்மக்கள் குடும்பம் இயல்பூக்கங்களினுல் எழுவது எனக் கருதியதனுலேயே மக்களிடையே மட்டுமன்றி விலங்குகள் பறவைகளிடையேயும் ஒருவகைக் குடும்பஉறவைக் காண முயன்றனர். பாலைநிலத்து நீர் நிலையில் கிடைத்த சிறிதளவாகிய நீரைத் தன் குட்டி உண்டபின் பெண்யானையை உண்பித்து இறுதியில் நீர் எஞ்சினுல் தான் உண்ணும் ஆண்யானையையும் (கலித்தொகை 11) உணவில்லாத பாலை நிலத்தில் உதிர்ந்த மூங்கில்நெல்லைக் கண்டவுடன் உடன்உண்ணத் தன்பிணையை யழைக்கும் கலைமானையும் (அகம். 129) ஊனைவிரும்பிய பிணவின் உறுபசி களைவதற்காகக் கலைமானின் தசையை அறுத்தெடுத்த ஆண்செந்நாயுடன் தன்கலை தாக்கப்பட்டதைக் கண்டு அலறும் மடப்பிணை (பெண்மான்)யையும் (அகம். 285) அகப்பொருள் நூல்களில் வரும் புனைந்துரைகள் காட்டு

கின்றன. பிற உயிரினங்களிலும் காணப்படும் ஆண்பெண்ணுறவாகிய அன்புத் தொடர்பே மக்களினத்தில் குடும்பத்தையும் இல்லத்தையும் தோற்றுவிக்கத் தூண்டுகோலாக உதவுகிறது என்பதே பழந்தமிழர் கருத்தாம். ஆகவேதான் பொருள் தேடவோ பிற பணிகட்கோ தன்னில்லத்தை விட்டு வேறூர் செல்லும் தலைவன் பாலை அல்லது காட்டுவழியின்கண் ஆண்விலங்கு அல்லது பறவை தன் பிணை அல்லது பெடையைப் பாதுகாப்பதைக் காண்பதாகவும் தானும் தன் அன்பிற்குரிய மனைவியை அவ்வாறே பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டை உணர்ந்தவனாய் விரைவில் வினைமுடித்துத் திரும்புவதாகவும் பல கவிஞர்கள் கவிதை புனைந்தனர்.

'இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்' என்ற திருக்குறள் தொடரும் இல்லம் அல்லது குடும்பம் இயல்பாக அமைவதே என்ற கருத்தையே வலியுறுத்தும்.

ஆயினும் இல்லத்தின் அடிப்படை மக்களின் இயல்பூக்கங்கள் (instincts) மட்டும் தானா?வள்ளுவரைப் போல் காமக் கூட்டத்தையே (தலைவன் தலைவியர் தாமே விரும்பி மணம் புரிதல்) ஆதரித்த தொல்காப்பியர் ஓர்ஆடவனும் பெண்ணும் எதிர்ப்பட்டு அன்புடையராதலை விளக்குமிடத்து,

> ஒன்றி யுயர்ந்த பால தாணையின்
> ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப (தொல். பொருள். 93)

என்றார். எதிர்ப்படும் தலைவனும் தலைவியும் இயல்பூக்கத்தினால் ஒருவரால் ஒருவர் கவரப்பட்டு ஒன்று சேர்க்கப்படுகின்றனர். ஆனால் அதில் பாலின் ஆணையும் உண்டு என்றார் தொல்காப்பியர். குடும்பம் மக்களின் இயல்பூக்கங்களினால் ஏற்படுவதாயினும் மக்கள் குலத்திற்கு அப்பாற்பட்ட தெய்வமோ பாலோ அறமோ ஆகிய ஏதோ ஒரு ஆற்றலின் ஆதரவும் அதற்குண்டு என்பதே பழந்தமிழர் கொள்கையெனத் தெரிகிறது. சில குறள்களில் (50, 58) நல்இல்லத்திற்கு மறுமைப் பயனைக் கூறிய வள்ளுவர்க்கும் இக்கருத்து உடன்பாடேயாதல் வேண்டும்.

3

# தொழில்கள்

திருக்குறளில் காணப்படும் தொழில்கள் பல. சில தொழில்களைக் குறித்து வள்ளுவர் வெளிப்படையாகக் கூறும் கருத்துக்களையும் குறளில் காணலாம். பிற கருத்துக்களை விளக்குங்கால் வருங்குறிப்புக்களினாலும் உவமைகளினாலும் பல தொழில்களையும் தொழிற்கருவிகளையும் பற்றிய செய்திகளை அறியலாம். திருக்குறளில் வரும் செய்திகளையும் குறிப்பிடப்படும் பொருள்களையும் கொண்டு அக்காலத்து நிலவி வந்த சில தொழில்களை ஊகத்தால் உணரலாம். இவ்வாறு நேர்முகமாகவும் குறிப்பினாலும் உணர்த்தப்படும் பொருள்கள் பலவுமே இப்பகுதியில் ஆயப்படுகின்றன.

இங்குத் தொழில் எனக் கொள்ளப்படுவது கைத்தொழில் மட்டுமன்று. உடலுழைப்பினாலோ அறிவுத்திறமையினாலோ கல்வியினாலோ பண்பினாலோ வீரத்தினாலோ ஆற்றப்படும் பணிகளனைத்துமே கொள்ளப்படுகின்றன. இன்னும் கலைகளும் பொழுதுபோக்குகளும் கூட இப்பகுதியில் ஆயப்படுகின்றன. தொழில்யாது, கலையாது? இசை ஒருகலை. இசை மூலமாகவே ஊதியம் பெறுபவர்க்கு அதுவே தொழிலுமாயிற்று. கூத்து, நாடகம் ஆகியவை கலைகள். இவற்றையே வாழ்நாள் முழுதும் பயின்று அவற்றின் மூலம் ஊதியம் பெறுவோர்க்கு அவை தொழிலுமாகும்.

தொழில்களே நாட்டிற்கு வளத்தைத் தருகின்றன. பலவகைத் தொழில்கள் நிறைந்திருக்கும் சமுதாயமே சிறந்த சமுதாயமாகும். மக்கள் கல்விக்கும் அறிவுக்கும் திறமைக்கும் உடல் வலிமைக்கும்

தக்கனவாக அவர்கள் செய்யும் பணிகளும் பலவாகும். கல்வியிலும் சொல்வன்மையிலும் அறிவுக் கூர்மையிலும் பிற ஏற்ற பண்புகளிலும் மிக்கோர் சிலர் அமைச்சர் முதலிய அரசியற்பணிகளில் ஈடுபடுகின்றனர்; அல்லது தெரிந்தெடுக்கப்படுகின்றனர். பிறர் வாணிபம், உழவு, மருத்துவம் முதலிய தொழில்களில் ஈடுபடுகின்றனர். சிலர் கல்வியையே தம்பணியாகக் கொண்டு ஆசிரியத்தொழிலில் அமர்கின்றனர். வீரம் மிகுந்த இளைஞர் படைத்தொழிலுட் பாய்கின்றனர். பலவகைக் கைத்தொழில்களிலும் பிறருக்கு ஏவல் செய்யும் பணிகளிலும் ஈடுபடுவோரும் உளர்.

இக்காலத்து இருக்கும் தொழில்கள் அல்லது பணிகள் சில அக்காலத்து இல. எடுத்துக்காட்டாகத் தற்காலத்து உள்ள சட்ட வலுல்நர் அல்லது வழக்குரைஞர்களும் (lawyers, advocates) பொறியியல் வல்லுநர்களும் (engineers) அக்காலத்து இல்லை. அக்கால நீதிமன்றங்களில் வழக்குரைஞர் வேண்டப்பட்டிலர். வழக்காளிகளே தம் கருத்தை எடுத்துக் கூறக்கூடிய நிலையே இருந்தது. அக்காலத்தும் நீதிநூல்களைக் கற்ற அறிஞர்கள் இருந்தனர் எனினும் அவர்கள் பணி தற்கால வழக்குரைஞர்களின் பணியைவிட வேறுயது. அக்காலத்தும் ஒரு சில பொறிகளிருந்தன எனினும் நீராவியினாலும் மின்னாற்றலினாலும் எண்ணெயினாலும் கையினாலும் இயக்கப்படும் பலவகைப்பொறிகளும் அவை குறித்த கல்வியும் தற்காலத்தில் பெருகி வளர்ந்திருப்பதுபோல் அக்காலத்து வளர்ந்திருக்கவில்லை. இக்காலத்து உள்ள ஆலைத் தொழில் அக்காலத்து இல்லை. அக்காலத்தும் செல்வமோ திறமையோ மிகுந்த ஒருவனின்கீழ்ப் பலர் தொழில்புரியும் முறை இருந்தது சிலப்பதிகாரம் கொலைக்களக்காதையில் கோவலனைத் தெருவில் எதிர்ப்பட்ட பொற்கொல்லன் 'கண்ணுள் வினைஞர் கைவினை முற்றிய நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர' மெய்ப்பை புக்கவனாகி (சட்டை அணிந்தவனாகி) வந்தான் எனக் கூறப்படுகிறது. ஆயினும் தற்போதுள்ளனபோன்ற ஆலைகள் இல்லையாகையினால் பெரும் ஆலைகளில் பலர் பணியாற்றும் முறையில்லை. பொறிகள் திருத்துவோர் (mechanics போன்ற தொழிலர்களும் அக்காலத்து இல்லை.

சமுதாய நிலைக்கும் பொருளியல் நிலைக்கும் ஏற்றபடி சில தொழில்கள் வேறுபடினும் மருத்துவம், ஆசிரியத்தொழில், வாணிபம், உழவு போன்ற தொழில்கள் எச்சமுதாயத்திலும் வேண்டப்படுவனவே. இவற்றிலும் தொழில்முறைகளும் தொழிலுக்குரிய கல்வி, கருவிகள் ஆகியவையும் காலந்தோறும் மாறுதல் அடைதல் கூடும். ஆயினும்

இவை போன்ற சிலதொழில்கள் எச்சமுதாயத்திலும் ஏதோ ஒரு வடிவில் நடைபெறும். போரேயில்லாத ஒரு காலம் வரும் வரை படைத் தொழிலும் வேண்டியதே. மிகப் பழங்காலத்துச் சிறூர்ச் சமுதாயத்தைத் தவிர நாகரீக முன்னேற்றமடைந்த சமுதாயங்களனைத்திலும் பலவகை அரசியற்பணிகளும் வேண்டப்படுவனவே. இவற்றிலும் காலம் தோறும் மாறுதல்கள் ஏற்படுதல் கூடும்.

சங்ககாலமும் சங்கமருவிய காலமும் தமிழ்நாட்டில் வாணிபமும் தொழிலும் செழித்தோங்கியிருந்த காலமே. கலைகளும் மலிந்திருந்தன. நாட்டின் பலபகுதிகளைப் பலஅரசர்கள் (மூவேந்தரும் சிற்றரசரும்) ஆண்டதால் அரசியற்பணியில் ஈடுபடுவோரும் படைவீரரும் பலர் நாட்டில் இருந்தனர். பயிர்த்தொழிலும் வளமுற்றோங்கியது. ஆயுள் வேதம், தர்க்கம், சோதிடம் முதலிய நூல்களில் வல்லவரும் இருந்தனர். கைத்தொழில், வாணிபம், அறிவும் கல்வியும் சான்ற பலவகைப் பணிகள் ஆகியவற்றைக் குறித்த பலகுறிப்புக்களைப் பத்துப்பாட்டு சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் காணலாம். தொழில்களையும் பலபணிகளையும் (occupations and professions) குறித்த செய்திகள் பல திருக்குறளிலும் காணப்படுகின்றன.

### 3. 1. அரசியற் பணிகள்

வள்ளுவர்காலத் தமிழ்நாட்டில் நிலவியிருந்த ஆட்சி முடியாட்சியே. 'பெரு நில முழுதாளும் பெருமகன் தலைவைத்த ஒரு தனிக் குடிகள்'[1] எனச் சிலப்பதிகாரத்தில் கூறப்படுவதுபோல அரசன் குடிகளில் ஒருவனாகவும் குடிகட்குத் தலைவனாகவும் கருதப்பட்டான். 'மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்' என மன்னனைப் போற்றிய அக்காலக்கருத்திற்கேற்ப வள்ளுவரும் அரசனின் கடமைகளையும் அவனுக்கு இருக்க வேண்டிய பண்புகளையும் அரசியலில் பல அதிகாரங்களில் கூறினர்.

அக்காலத்து அரசியற்பணியில் ஈடுபடுவோர் அனைவரும் அரசனின்கீழ்ப் பணியாற்றுபவர்களே. அவர்களுள் மேலிடம் பெறுபவர்கள் அமைச்சர்களே. அமைச்சர்க்குரிய இயல்புகளையும் வள்ளுவர் அங்கவியலில் விரிவாகக் கூறினர். அமைச்சர் என ஒரு குலம் இல்லை. கல்வியறிவிலும் பல்வகைத் திறமைகளிலும் குடிப்பிறப்பிலும் உயர்ந்தோரே அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் எனத் தோன்றும். மன்னரைச் சேர்ந்தொழுகலுள்,

1. சிலப்பதிகாரம் 1. 31—32

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும் (698)

எனக் கூறப்படுகிறது. அமைச்சர், அரசரொடு பழகுங்கால் 'எனக்கு இளையவன்' எனவும் 'எனக்கு இன்ன உறவுமுறையை யுடையவன்' எனவும் எண்ணி அரசனை இகழாது உரியமதிப்பை யளித்து அவனுடன் பழகுதல் வேண்டும் எனக் கூறப்படுவதால் அரசகுடும்பத்தைச் சேர்ந்தவரும் அமைச்சராகப் பணியாற்றக் கூடும் எனத் தெரிகிறது. சேரன் செங்குட்டுவன் அரசவையில் அழும்பில்வேள் என்னும் ஒருவன் அமைச்சனாக இருந்தனன் என்பது சிலப்பதிகாரம் காட்சிக் காதையினின்றும் தெரியவருகிறது (சிலம்பு 25.177). வேளிர்குலத்தவரும் அக்காலத்து அமைச்சராகப் பணியாற்றினர்.

அங்கவியலுள் முதல் பத்து அதிகாரங்களுமே அமைச்சரின் கடமைகளையும் அத்தொழிலுக்கு வேண்டிய திறமைகள் இயல்புகள் ஆகியவற்றையும் கூறுவன. சில உரையாசிரியர்கள் இவற்றை அமைச்சியல் எனத் தனி இயலாகக் கொள்வர். தூது என்னும் அதிகாரமும் இவற்றினிடையேயே வருவதால் அமைச்சர்களே தூதராகவும் பணியாற்றினர் எனத் தோன்றும். பார்ப்பன குலத்தவரும் தூதுவராகப் பணியாற்றியமை புறநானூற்றினுட் குறிக்கப்படுகிறது. ஒரு அரசன் மற்றொரு அரசனின் நகரை முற்றியிருந்தபோது வயலைக் கொடிபோன்ற வாடிய மருங்குலையும் வருந்திய நடையினையும் உடைய பார்ப்பானொருவன் முற்றப்பட்ட அரசனின் சார்பாக முற்றுகையிட்ட அரசனிடம் தூது வந்து சில சொல் கூற அப்பகையரசன் பகைதணிந்து தான் அரணைத் தாக்குதற்குப் பயன்படுத்திய ஏணியையும் சீப்பையும் அகற்றித் தன் யானைகளையும் போர் நிறுத்தும்படி செய்தான் எனப் புறநானூற்றுள் பார்ப்பன வாகைச் செய்யுளொன்று கூறுகிறது.[2] ஆகவே பார்ப்பனர், அரச குலத்தோர், வேளாளர் ஆகிய பல குலத்தவரும் அமைச்சராகவும் தூதுவராகவும் பணியாற்றல் கூடும் எனத் தெரிகிறது.

அமைச்சரல்லாத பிறஅலுவலர் பலர் இருந்திருத்தல் வேண்டும் ஆயினும் அக்காலத்திருந்த அரசியற் பணிகள் எவை எவை என்பது

---

2. புறநானூறு 305

வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவல் ஊர்திப் பயலைப் பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே அதற்கே
ஏணியும் சீப்பும் மாற்றி
மாண்வினை யானையு மணிகளைந் தனவே

திருக்குறளில் தெளிவாகக் கூறப்படவில்லை. அரசியலில் இடம் பெறும் தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் என்னும் அதிகாரங்கள் அரசன் அலுவலரை எவ்வாறு தெரிந்தெடுத்தல் வேண்டும் எவ்வாறு ஆளுதல் வேண்டும் என்பதையே கூறுகின்றன, அரசியல் பணியில் இன்ன இன்ன பிரிவுகள் இருந்தன என வள்ளுவர் விரித்துக் கூறவில்லை.

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த உணர்ந்து செயல் (516)

வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல் (518)

என்னும் குறள்கள் பலவித அரசியற்பணிகள் இருந்தன என்பதைக் குறிப்பாக உணர்த்தும். பலபணிகள் இருந்தமையினுல் தானே அவ்வப்பணிக்குத் தகுதியுள்ளவர் யார் என ஆய்ந்து தக்கவரை அப் பணிகளில் அமர்த்த வேண்டியதாகிறது.

ஒற்றாடல் என்னும் அதிகாரத்தினால் ஒற்றர்கள் அரசியற் பணியில் இருந்தனர் என்பது தெளிவாகிறது. சிலப்பதிகாரகாலத்திருந்த ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் வள்ளுவர் காலத்திருந்தனவா என்பது தெளிவின்று.)

## 3. 2. படைத்தொழில்

படைமாட்சி, படைச்செருக்கு என்னும் அதிகாரங்கள் படைத் தொழில் அக்காலத்துப் பாடுற்றிருந்தமையைக் காட்டும். (போர் நிகழுங்கால் பிற பல தொழில்களில் ஈடுபட்டிருக்கும் மக்களும் படைக் கலங்கள் தாங்கிப் போர்முனைக்குச் செல்லல் இயல்பு. வள்ளுவர் காலத்திலும் அவ்வழக்கம் இருந்திருத்தல் வேண்டும். காமத்துப்பாலில்,

வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து (1268)

எனக் கூறும் தலைவன் போரில்லாத காலத்துத் தன் இல்லத்தில் வாழ்ந்து பிறபணிகளில் ஈடுபடுபவனும் போர் நேர்ந்த காலை இல்லத்தைவிட்டுப் போர்முனைக்குச் சென்றவனுமாவன் எனக் கொள்வதே பொருந்தும்.)

ஆயினும் போரையும் படைக்கலப்பயிற்சியையுமே தொழிலாகக் கொண்ட வீரரும் நிலையான படையும் வள்ளுவர் காலத்திருந்தன

என்பதைத் திருக்குறளில் வரும் பல குறிப்புக்களினின்றும் உணரலாம். எல்லா உறுப்புக்களும் அமையப் பெற்று ஊறு அஞ்சாத வெல்படை அரசன் செல்வங்களுள் தலையாயது (761) எனக் கூறப்படுவதனுல் நிலையானபடை அரசனுக்கு வேண்டியபோது உதவத்தக்கதாய் அமைந்திருந்ததென்பது புலப்படும். மற்றும் 'தொல்படை' 'வழி வந்த வன்கண்ணதுவே படை' முதலிய தொடர்களும் படைக்கு வேண்டப்படுவனவற்றுள் மாண்டவழிச் செலவு (tradition of bravery) குறிக்கப்படுதலும் படைக்கலப்பயிற்சியையும் போரையுமே தொழிலாகக் கொண்ட வீரர் இருந்தனர் என்பதை மட்டுமன்றித் தலைமுறை தலை முறையாகப் போரில் ஈடுபடும் பரம்பரை வீரர் குலத்தவர் இருந்தனர் என்பதையும் உணர்த்தும். 'வில்லேருழவர்' (872) என்ற தொடரும் போரையும் போர்ப்பயிற்சியையும் முழுநேரத்தொழிலாகக் கொண்ட வீரரையே குறித்தல் வேண்டும். உழவர் ஏரைத் தங்கள் தொழிலுக் குரிய கருவியாகக் கொண்டமையைப் போல இவர்களும் வில்லைத் தங்கள் தொழிலுக்குரிய கருவியாகக் கொண்டமையினுலேயே வில்லே ருழவர் எனப்பட்டனர்.

வீரன் மகன் வீரன் என்ற மரபு புறநானூற்றுள்ளும் பல பாடல் களில் காணப்படுகிறது. ஔவையார் ஓரரசனை நோக்கி 'நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை' போரில் மாய்ந்தான் என ஒரு வீரனை அறிமுகப்படுத்தும் பாடல் குறிப்பிடத்தக்கது (புறம் 290). சில நாள் முன் தன் தமையன் பகைவேந்தன் படையைச் சேர்ந்த யானை களைக் கொன்று இறந்திருப்ப முதல் நாள் தன்கணவனும் பகைவர் நிரைகவர்தலைத் தடுத்துப் போரில் மாய அன்று தன் இளமகனை வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து உடுத்திப் போர்க்களத்துக்கு அனுப்பிய வீரமகளைக் குறித்த பாடலும் (279) பரம்பரை வீரத்தையே காட்டும்.

வள்ளுவர் காலத்தில் நால்வகைப்படைகளும் இருந்தன. 'உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை' (761) என்ற தொடரில் உறுப்பு என்னும் சொற்கு யானை, குதிரை, தேர், காலாள் ஆகியவை எனவே பல உரையாசிரியர்கள் பொருள் கொண்டனர். வடமொழியில் இவை சதுரங்கம் எனப்படுவதால் இவற்றை உறுப்பு எனக் குறிப்பிடல் பொருந்துவதே. மேலும் குறளில் வரும் பலகுறிப்புக்களினின்றும் நால்வகைப்படையும் அக்காலத்துப் பயன்படுத்தப்பட்டமையை யுணர லாம்.

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும் (774)

என்ற குறளும் 'வேலாண் முகத்த களிறு' (500) எனவும் 'புதையம்பின் பட்டுப்பா டூன்றும் களிறு' (597) எனவும் பிற இடத்துவரும் தொடர்களும் யானைகள் போரில் பயன்படுத்தப்பட்டு அவையும் தம் வீரர் சார்பாகப் போர் புரிந்து படைக்கலங்களால் தாக்கப்பட்டு நின்ற இயல்பை விளக்கும். 'அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா' (814) அதாவது போரில் தன் தலைவனுக்குப் பயன்படாது போகும் போதிய அளவு பழக்கப்படாத குதிரை குறிப்பிடப்படுவதால் குதிரைகள் போரில் பயன்படுத்தப்பட்டன என்பது தெளிவாகும். கால்வல் நெடுந் தேர்கள் (496) வள்ளுவர் காலத்திருந்தன. அவையும் போரில் பயன் பட்டிருத்தல் வேண்டும். நால்வகைப் படைகளும் போரில் ஈடுபட்டன எனக் கொள்ளல் தகும். மேலே காட்டப்பட்டகுறளில் கை வேலைக் களிற்றின் மேல் எறிந்து தன்மெய்யின்கண் தைத்த வேலைப் பறித்து நக்க வீரன் காலாட்படையைச் சேர்ந்தவனாகவே யிருத்தல் வேண்டும்.

**வில், வாள், வேல்** முதலியன போரில் பயன்பட்டன. இவை குறளில் பன்முறை குறிப்பிடப்படுகின்றன. மேற்காட்டப்பட்ட தொடர்களில் போரில் பயன்படுத்தப்படும் யானை வேல் வீரர்களை எதிர்த்து நிற்றலும் அவர்கள் வேலை யானை மேல் எறிதலும், அம்புகள் பல தன்மேல் வந்து தாக்கவும் அவற்றைப் பொருட்படுத்தாது முன்னேறும் யானையின் வீரமும் குறிப்பிடப்பட்டன. மற்றும் 'கணை கொடிது' (279), 'வில்வணக்கம் தீங்கு குறித்தமை யான்' (827) என உவமைகளில் வரும் தொடர்களும் வில்லையும் அம்பையும் குறிப்பிடுகின்றன. அவ்வாறே 'வாள்போல் பகைவரை யஞ்சற்க' (882), 'வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு' (726) முதலிய பல தொடர்கள் வாளைக் குறிப்பிடும். வாள், வேல், வில் என்னும் பல்வகைப் படைக் கலங்கள் இருந்தமையால் அவற்றில் சிறப்பாகப் பயிற்சி பெற்ற பல்வகை வீரர்களும் இருந்திருத்தல் வேண்டும்.

நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல் (770)

என்ற குறள் தானையில் நிலைமக்களாகிய வீரர்கள் மட்டுமன்றித் தலைவர்களும் இருந்தமையைக் காட்டும்.

வள்ளுவர் காலத்தில் **அரண்கள்** இருந்தன. அவற்றைப் பாது காத்து நன்னிலையில் வைத்துக் கொள்ளவும் அவற்றைச் சூழ்ந்த

அகழி காவற்காடு ஆகியவை ஏற்ற நிலையில் உள்ளனவா எனக் கவனிக்கவும், உணவு படைக்கருவிகள் ஆகியவற்றை அவற்றினுள் சேகரித்து வைக்கவும் தக்க அலுவலர்களும் இருந்திருத்தல் வேண்டும்.

ஆகவே அக்காலத்து வீரர் இருந்தனர். அவர்களில் பல பிரிவுகள் இருந்தன. நிலமக்கள் தலைமக்கள் என வெவ்வேறு நிலையினரும் இருந்தனர்.

அரசியலை ஆய்வது இந்நூலின் நோக்கமன்று ஆகையினாலும் மதுரைப் பல்கலைக்கழகத் திருக்குறள் ஆராய்ச்சித் துறையினால் வெளியிடப்படும் பிற நூல்களில் அப்பொருள் விரிவாக ஆயப்படுவதனாலும் அரசியல் அலுவலர்களின் கடமைகளும் படையின் இயல்பும் இங்கு விரிவாக ஆயப்படவில்லை. சமூகத்தில் இன்ன இன்ன வகையினர் இருந்தனர் என்பதே இங்குக் குறிப்பிடப்பட்டது.

## 3. 3. வாணிபம்

சங்க காலத்திலும் சங்க மருவிய காலத்திலும் தமிழ்நாட்டில் **உள்நாட்டு வாணிபமும் வெளிநாட்டு வாணிபமும்** சிறப்புற்றிருந்தன. 'கலத்தினும் காலினும் தருவனர் ஈட்டக் (கடல் வாணிபத்தினாலும் தரை வாணிபத்தினாலும், பொருள் ஈட்டி) குலத்திற்குன்றாக் கொழுங் குடிச் செல்வர்' (2.7-8) எனச் சிலப்பதிகாரம் அவர்களைக் குறிப்பிடு கின்றது. இக்காவியத்தின் காலத்தில் வணிகர்கள் அரசர்க்கு அடுத்த படியாக எண்ணப்படத்தக்க செல்வச்செழிப்பையுடையவராயிருந்தனர் எனவும் தெரிகிறது.

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின் (120)

வாணிகஞ் செய்வோர் தம்பொருள் போலப் பிறர் பொருளையும் எண்ணி அதையும் பாதுகாக்கும் முறையில் வாணிகஞ்செய்வாராயின் அது சிறப்பான வாணிகமாகும்.) கொடுக்கும்போது குறைவாகக் கொடுக்காமலும் கொள்ளும்போது அதிகமாகக் கொள்ளாமலும் இருத்தல் வேண்டும் என்றார் **பரிமேலழகர்**. பிறவும் தமபோல் பேணிச் செய்தல் வேண்டும் என்பதில் கொடுப்பதிலும் கொள்வதிலும் ஒரே அளவுள்ள நிறைகள் மரக்கால் முதலிய அளவைக் கருவிகளைப் பயன் படுத்தல் வேண்டும் என்பது மட்டுமன்றி ஒரேஅளவுக் கவனத்துடன் அளத்தல் அல்லது நிறுத்தல் வேண்டும், தான் பொருளைக்கொள்ளும் போது எவ்வாறு கேடில்லாததாய் கலப்பற்றதாய்த் தூயதாய்த்

தேர்ந்து கொள்முதல் செய்கின்றனே அவ்வாறே கேடில்லாததாய்க் கலப்பற்றதாய்த் தூயதாய் உயர்ந்த தரமுள்ளதாய்ப் பார்த்து விற்றலும் வேண்டும் என்பன எல்லாம் அடங்கும். வள்ளுவர் வணிகர்க்குக் கூறிய நீதி இது ஒன்றே.

நடுவுநின்ற நன்னெஞ்சினேர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉங் குறை
கொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்
தொல்கொண்டித் துவன்றிருக்கை (பட். 207–212)

எனவரும் பட்டினப்பாலையடிகளும் வணிகர்களின் நடுவுநிலைமையையே கூறுகின்றன. 'நடுவுநிலைமையை யுடைய நல்லஉள்ளத்தைக் கொண்ட வணிகர்கள் பொய் கூறின் தம்குடிக்கு வடுவாம் என அஞ்சி உண்மையையே பேசித் தம்பொருளையும் பிறர் பொருளையும் ஒப்ப நினைத்து, கொள்ளும்போது அதிகமாகக் கொள்ளாமலும் கொடுக்கும் போது குறைவாகக் கொடுக்காமலும் பலபண்டங்களையும் விலை கூறி விற்பர்' என இங்குக் கூறப்படும் கருத்தும் வள்ளுவர் குறளின் கருத்தையே ஒக்கும்.

'சமன்செய்து சீர்தூக்கும் கோல்' (118) உவமையில் குறிப்பிடப்படுவதனுல் அக்காலத்து நிறுக்கும் துலாக் கோல்கள் இருந்தன, அவை வாணிகத்தில் பயன்பட்டன என அறியலாம். உழவுத் தொழிலைக் குறித்துக் கூறுங்கால் வள்ளுவர் தொடியளவினதாகிய மண்ணைக் கஃசு அளவினதாக உலர்த்தல் வேண்டும் என்ருர். தொடி, கஃசு என்னும் அளவுகள் அக்காலத்தில் வழக்கில் இருந்தன. இவையும் வாணிபத்தில் பயன்பட்டிருத்தல் வேண்டும்.

நுண்ணிய மென்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்ல தில்லை பிற (710)

கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல் (796)

என்னும் குறள்களில் நீட்டலளவைக் குரிய அளக்கும் கோல்கள் குறிப்பிடப்படுகின்றன. இவையும் வாணிபத்தில் துணி முதலியவற்றை அளக்கப் பயன்பட்டிருத்தல் வேண்டும்.

## 3. 4. மருத்துவம்

வள்ளுவர் மருந்து என்ற தலைப்பில் ஓரதிகாரத்தை எழுதினர். மருந்து என்னும் சொல் இவ்வதிகாரத்தில் மிகப் பரந்த பொருளிலேயே ஆளப்படுகிறது. ஆங்கிலத்திலும் ஒரே சொல் (medicine) உண்ணப்படும் மருந்தையும் சில தொடர்களில் நோய் தடுக்கும் முறையையும் (preventive medicine) உடற்பயிற்சி மூலம் வலுவூட்டல் முதலிய பிற மருத்துவ முறைகளையும் (physical medicine) குறிக்கப் பயன்படுகிறது. மருந்து என்னும் சொல்லையும் அவ்வாறே வள்ளுவர் பரந்த பொருளில் பயன்படுத்தினர்.

இவ்வதிகாரத்தில் பல குறள்கள் தக்க உணவு உட்கொள்ளுதல் முதலியவற்றின் மூலம் நோய் தடுக்கும் முறைகளையே கூறுகின்றன. இறுதி மூன்று குறள்கள் நோய் நீக்குதலைக் கூறும். நோய் தடுப்பதைக் கூறும்போதும் தாம் மருத்துவ நூலோரின் கருத்தைப் பின்பற்றிக் கூறுவதாக வள்ளுவர் எழுதினர்.

> மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
> வளிமுதலா எண்ணிய மூன்று (941)

மருத்துவ நூல்கள் (ஆயுள்வேத நூல்கள் அல்லது சித்த மருத்துவ நூல்கள் போலும்) வள்ளுவர் காலத்திருந்தன. அவற்றைக் கற்று வல்லவர்களாகிய மருத்துவர்கள் இருந்தனர் எனத் தெரிகிறது. உணவு முதலியவை மிகினும் குறையினும் நோய் ஏற்படும் என அவர் கூறினர். வளி முதலா எண்ணிய மூன்றினல் நோய்கள் ஏற்படுகின்றன என்பது தற்கால மருத்துவ அறிவொடு பொருந்தாதெனினும் மிகினும் குறையினும் என்பது பொருந்துவதே. உணவு, தொழில், உறக்கம் ஆகிய அனைத்தும் அளவோடிருப்பதே உடல் நலத்துக் கேற்றதாகும். அவை மிகின் அல்லது குறையின் உடல் நலம் கெடும் என்பதைத் தற்கால மருத்துவரும் ஒப்புவர். போதிய உணவை உட்கொள்ளாததனல் அல்லது உட்கொள்ளப்படும் உணவில் போதிய ஊட்டம் இன்மையால் (malnutrition) ஏற்படும் உடற்குறைகளையும் நோய்களையும் குறித்துத் தற்காலத்தில் மருத்துவர்கள் அதிகமாக ஆய்ந்தும் வெவ்வேறு வகையில் ஊட்டமளிக்கும்பொருள்கள் ஒத்திருக்கும் உணவை (balanced diet) உண்ண வேண்டும் எனப் பிரசாரம் செய்தும் வருகின்றனர். ஒருவர் செய்யுந் தொழில் அதிகமாக இருப்பதனல் போதிய உறக்கம் இன்மையால் இரத்த அழுத்தம் முதலிய நோய்கள் உண்டாகின்றன என்பதும் மருத்துவர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதே.

மருத்துவர் நோயாளியின் நிலையை யாய்ந்து சிகிச்சை செய்யும் முறையை வள்ளுவர் இருகுறள்களில் கூறினர்.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் (948)

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல் (949)

தன்னிடம் மருத்துவ உதவிக்காக வரும் ஒருவனை ஆயுங்கால் மருத்துவன் முதலில் அவன் உற்றநோய் இன்னது என்பதை அறிகுறிகளால் ஆய்ந்து அறிந்து பின் அந்நோய் ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பதை உணர்ந்து அதைத் தணிப்பதற்குரிய வழி இன்னது என்பதையும் கருதி நோய்நீங்கி நலம் வாய்க்குமாறு சிகிச்சை செய்தல் வேண்டும். மற்றும் நோயுற்றவனின் பருவம் (குழந்தை, சிறுவன், இளைஞன், நடுத்தர வயதினன், முதியோன் என்னும் பருவங்கள்), நோய்த்துன்பத்தின் அளவு, நோயின் அளவு – தொடக்க நடுவிறு என்னும் நிலை (stage of the disease) மிகுதி குறைவு என்னும் தன்மை (severity of the attack) - காலம் ஆகிய அனைத்தையும் கருதியே மருத்துவம் செய்தல் வேண்டும்.

அக்காலத்து மருத்துவ அறிவு (medical knowledge) இக்காலத்தைப்போல் அவ்வளவு முன்னேறியிராவிடினும் சிகிக்சை முறைகள் தற்காலத்தைப்போல் சிறந்தனவாக அமையாவிடினும் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் மருந்துகள் கருவி வகைகள் அக்காலத்தில் இல்லாவிடினும் மருத்துவத் தொழிலையும் அதிலுள்ள பொறுப்பையும் குறித்த உயர் கருத்துக்கள் அக்காலத்தும் இருந்தன என்பது மேற்காட்டப்பட்ட குறள்களினின்றும் தெளிவாகும். மருத்துவன் எவ்வளவு பொறுப்புடன் நோயாளியின் உடல்நிலையை நன்கு ஆய்ந்து எண்ண வேண்டிய பொருள்களனைத்தையும் குறித்து எண்ணித் தக்க சிகிச்சையைத் தெரிந்து செய்தல் வேண்டும் என்பதையே வள்ளுவர் இங்கு வற்புறுத்தினர்.

மருத்துவர் திறமையுள்ளவராக இருப்பது மட்டும் போதுமானதன்று. **நோய் உற்றவன், தீர்க்கும் மருத்துவன், மருத்துவன் சொற்படி சிகிச்சை செய்வோர், மருந்து** (உண்ணப்படும் மருந்து மட்டுமன்றிப் பிற சிகிச்சை முறைகளும்) என்னும் நான்கும் மருந்துக்கு நான்கு கூறுகளாகும் என்றார் வள்ளுவர்.

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பால்நாற் கூற்றே மருந்து (950)

இக்குறளில் கூறப்பட்ட கருத்து மிகச் சீரியதும் ஆழ்ந்த பொருளுள்ளதும் ஆகும். இக்குறளுக்குப் பரிமேலழகரும் காலிங்கரும் கூறிய உரைகளும் சீரியனவே. ஒரு விலங்கு நான்கு கால்களால் நடப்பது போல இக்குறளில் கூறப்பட்ட நான்கையும் (உற்றவன், தீர்ப்பான், மருந்து, உழைச்செல்வான்) கால்களாகக் கொண்டே சிகிச்சை நடைபெறுமாதலால் இவற்றைப் பாதம் என ஆயுள்வேதநூலார் குறிப்பிடுவர் எனவும் இவை மாறுபட்டவழி சிகிச்சையில் வெற்றி காண முடியாதெனவும் பரிமேலழகர் விளக்கினர். மேலும் இவை யொவ்வொன்றிலும் நான்கு தன்மைகள் பொருந்தியிருத்தல் வேண்டும் என்றார். அவை வருமாறு.

"உற்றவன் வகை நான்காவன: பொருளுடைமை, மருத்துவன் வழி நிற்றல், நோய்நிலை உணர்த்தல் வன்மை, மருந்துத்துன்பம் பொறுத்தல் என இவை" பொருளுடைமை சிகிச்சைக்கு வேண்டும் பொருளை அளித்தலையுட்படுத்தும். இந்நான்கு தன்மைகளையும் தம் நோயாளிகளிடம் காணில் இன்றும் வைத்தியர் உவப்பர். சிகிச்சை பெற்றபின் உரிய பணத்தைக் கொடுக்கத் தயங்குதல், மறுத்தல், பின் அனுப்புகிறோம் எனக் கூறிப் பணத்தை யளிக்காது ஏய்க்கமுயலுதல் ஆகிய நோயாளிகளின் செயல்கள் இன்றும் வைத்தியர்களுக்கும் வைத்தியசாலை நடத்துவோர்க்கும் சிக்கலாக உள்ளன. நோயாளிகள் அறிகுறிகளை (symptoms) தெளிவாக அறிவிக்காமலிருப்பதனாலும் மருத்துவர்சொற்படி நடவாமலிருப்பதனாலும் மருத்துவர்களிடம் தெரிவிக்காது வேறு மருந்துகளைப் பெற்று உண்பதனாலும் சிகிச்சையில் இடையூறுகள் இன்றும் ஏற்படுகின்றன. சிகிச்சை துன்பமாக இருப்பின் அதைப் பொறுக்க விரும்பாது வைத்தியசாலையை விட்டுச் செல்லும் நோயாளிகளும் உளர். மருத்துவன்வழி நிற்றல், நோய்நிலை உணர்த்தல் வன்மை, மருந்துத்துன்பம் பொறுத்தல் என்பன எம்மருத்துவமுறைக்கும் (ஆயுள்வேத ஆங்கில அல்லது பிற) ஏற்றனவே.

"தீர்ப்பான் வகை நான்காவன: நோய்கண்டு அஞ்சாமை, ஆசிரியனை வழிபட்டோதிய கல்வியும் நுண்ணறிவுமுடைமை, பல்காலும் தீர்த்து வருதல், மனமொழி மெய்கள் தூயனாதல் என இவை." நோய் கண்டு அஞ்சாமை என்றும் மருத்துவர்க்கு வேண்டிய இயல்பே. ஆசிரியனை வழிபட்டோதிய கல்வியறிவுடைமை என்பதும் ஆழ்ந்த பொருளுடையதே. திறமையும் அறிவும் அருளும் நிறைந்த சிறந்த

மருத்துவர்களிடம் கல்விபயின்றோர் பிற்காலத்தில் தாமும் சிறந்த மருத்துவர்களாக விளங்குவதை இன்றும் காணலாம். சிறந்த வைத்தியர்களிடம் கல்வி பயில்வோர், அவர் மாட்டு அன்பும் நன்மதிப்பும் உடையராயுமிருப்பின் தம் ஆசிரியராகிய அவ்வைத்தியர்களிடமிருந்து மருத்துவத் தொழில்பற்றிய மிக்க அறிவைப் பெறுவதுடன் தம் தொழிலைக் குறித்த உயர் கொள்கைகள், நோயாளிகளிடமும் தம்கீழ்ப்பணியாற்றுவோரிடமும் அன்புடன் பழகும் பண்பு, பொறுப்புணர்ச்சி, தம்துன்பத்தையோ ஊதியக் குறைவையோ பொருட்படுத்தாது பிறர் உடல் நலத்திற்காக உழைக்கும் தன்மறுப்பு ஆகியவற்றையும் கற்றுக் கொள்கின்றனர். பல்காலும் நோய் தீர்த்த பட்டறிவும் மனமொழி மெய்கள் தூயனாதலும் என்றும் மருத்துவர்கட்கு வேண்டிய இயல்புகளே. ஒரு சில மருத்துவர் நோயாளியின் உடல் நிலையை யாய்ந்து கருத்துடன் சிகிச்சை செய்யாது ஏதாவது மருந்தைக் கொடுத்துப் பணம் பெற முயல்வதையே பிற பொறுப்புள்ள மருத்துவர்கள் 'தீய வைத்தியமுறை' (malpractice) எனக் கூறிக் கண்டிக்கின்றனர். பலஆண்டுகள் ஒருவைத்தியராகப் பணியாற்றிப் பின் எழுத்துத்துறையில் ஈடுபட்ட ஆங்கில நாவலாசிரியர் டாக்டர் ஏ. ஜே. கிரனின் (A. J. Cronin) தம் நூல்களில் இத்தகைய போலி வைத்தியம் செய்வோர் ஆங்கில நாட்டிலும் உள்ளமையை எடுத்துக் காட்டி அவர்கள் செயலைக் கண்டித்தார். மருத்துவன் மனமொழி மெய்கள் தூயனாக அதாவது தன்பணியை உண்மையுடன் செய்பவனாக இருத்தல் வேண்டியதன் அவசியம் இவற்றினின்று தெளிவாகும்.

"மருந்தின் வகை நான்காவன: பலபிணிகட்கும் ஏற்றல், சுவை வீரியம் விளைவாற்றல்களால் மேம்படுதல், எளிதின் எய்தப்படுதல், பகுதியொடு பொருந்துதல் என இவை". இவற்றில் கவனத்திற்குரியது பகுதியொடு பொருந்துதல் அதாவது குறிப்பிட்ட நோயாளியின் உடலுக்கு அம்மருந்து ஏற்றதாதல் என்பதே. அதே நோய்க்கு அதே மருந்தை அளிப்பினும் ஒரு நோயாளிக்கு விரைவில் குணமளிக்கும் மருந்து மற்றொரு நோயாளிக்கு விரைவில் அவ்வாறு பயனளிப்பதில்லை என்பதைத் தற்போதும் மருத்துவர் எடுத்துக் கூறுகின்றனர்.[3]

---

3. அருணசலம், டாக்டர் பி., எனது அனுபவத்திலே' (கட்டுரை, கல்கி தீபாவளி மலர், 1955)

"ஒருவருக்கும் இன்னொருவருக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. அதே போல் நோயும் ஒருவருக்கு வந்தாற் போல் இன்னொருவருக்கு வருவதில்லை. ஒரே நோயாயினும் மாறுபாடுகளும் அதிகமாகவேயிருக்கின்றன. ஒருவருக்கு ஒரு மருந்து குணமளித்திருக்கும். அதே நோய் கண்ட இன்னொருவருக்கு அதே மருந்தைக் கொடுப்பதால் பலன் ஏற்படும் என்று நிச்சயம்சொல்வதற்கில்லை."

"இயற்றுவான் வகை நான்காவன: ஆதுரன் மாட்டு அன்புடைமை, மனமொழி மெய்கள் தூயவாதல், சொல்லியன அவ்வாறே செய்தல் வன்மை, அறிவுடைமை என இவை". இவ்வியல்புகளும் இன்றும் மருத்துவப்பணியில் ஈடுபடும் அனைவரிடமும் இருக்க வேண்டியவையே. மருத்துவர்சொற்படி சிகிச்சையைச் செய்யவேண்டுமெனவும் சோம்பலும் கவனமின்மையும் இன்றி உண்மையுடன் உழைத்தல் வேண்டுமெனவும் மருத்துவரிடம் எப்பொழுதும் உண்மையையே கூறவேண்டுமெனவும் தாம் ஏதாவது தவறுசெய்ய நேரிடினும் அதை மறைக்க முயலாது மருத்துவர்களிடம் உடனே தெரிவிக்க வேண்டுமெனவும் தற்போதும் வைத்தியசாலைகளில் பணியாற்றும் நேர்ஸ்மாரும் பிறரும் கற்பிக்கப்படுகின்றனர். சிகிச்சை மட்டுமன்றிச் சிகிச்சை செய்வோர் நோயாளிகளிடம் காட்டும் பரிவும் நோயினால் வருந்தும் அவர்களின் உள்ளத்தையும் உடலையும் தேற்றி நலமளிப்பதாகும் என்பதும் எக்காலத்திற்குமேற்ற கருத்தே யாகும்.

காலிங்கர் தம்முரையில் நோயாளி அறிவுடையோனாயிருந்து 'நான் இந்நோயினால் இடருறக் கடவேனல்லேன், இதுதீருமளவும் ஏற்ற உணவு முதலியவற்றை யுட்கொண்டு வேண்டிய முயற்சியெல்லாம் எடுத்துக் கொள்வேன்' என உறுதி கொள்வானாயின் அதுவே ஒரு மருந்தாகும் என்றும் உழைச்செல்வான் தாயினுமினிய தன்மையனாகில் அவன் தானேயும் ஒரு மருந்தாவான் எனவும் கூறினார்.

இவை உரையாசிரியர் தரும் விளக்கங்களேயெனினும் நோயைத் தீர்ப்பது மருந்து மட்டுமன்று, உற்றவன், தீர்ப்பான், உழைச்செல்வான் ஆகிய முத்திறத்தார்க்கும் இருக்கவேண்டிய நல்லியல்புகள், அவர்களிடையே உள்ள நல்லுறவு, ஒத்துழைப்பு அனைத்தும் சேர்ந்தே நோயைத்தீர்க்கின்றன என்ற வள்ளுவரின் அடிப்படைக் கருத்தினின்று பிறந்தவையே.

மருத்துவர்கள், மருத்துவமனைகளில் பணிபுரிவோர், மருத்துவமனைக்குச் செல்லும் பொதுமக்கள் (நோய் உற்றோர்) ஒருவரையொருவர் புரிந்துகொண்டு ஒத்துழைத்தல் வேண்டும், அவர்களிடையே நல்லுறவு நிலவ வேண்டும் என்பதைக் குறித்துத் தற்காலத்தில் பல மருத்துவர்களும் பிறரும் சிந்தித்தும் பேசியும் எழுதியும் வருவது இங்குக் கருதத்தக்கது. தமிழில் இப்பொருளைக் குறித்து அதிகம் எழுதியவர் 'லஷ்மி' என்ற புனைபெயரில் கதைகளும் நாவல்களும் எழுதியவரும் தம் இயற்பெயரிலேயே வைத்திய நூல்களும் கட்டுரைகளும் எழுதியவருமாகிய டாக்டர்

திரிபுரசுந்தரியவர்களே எனலாம். இவர்தம் வைத்திய நூல்களிலும் கட்டுரைகளிலும் பொதுமக்கள் வைத்திய முறைகளைப்புரிந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டியதன் அவசியத்தையும் வைத்தியர்களுக்கும் வைத்தியசாலையில் பணியாற்றும் பிறர்க்கும் உள்ள பொறுப்பு அவர்கள் தொழிலிலுள்ள இடர்ப்பாடுகள் ஆகியவற்றையுணர்ந்து அவர்களிடத்தும் பொறுமையுடனும் அனுதாபத்துடனும் நடந்து கொள்தல் நலமெனவும் அவர்களும் நோயாளிகள் அவர்களின் உறவினர் ஆகியோரின் மனநிலையையும் அவர்கள் அடையும் அச்சத்தையும் கவலையையும் புரிந்துகொண்டு அருளுடன் பணிசெய்தல் வேண்டுமென்பதையும் அடிக்கடி எடுத்துக் கூறினர். ஆங்கில நாவலாசிரியர் டாக்டர் ஏ. ஜே. கிரனினும் தம் நாவல்கள் சிலவற்றின் மூலமாகவும் தாமே எழுதிய '**இருஉலகங்களில் பெற்ற அனுபவங்கள்**' (Adventures in the Two Worlds) என்ற தம் வாழ்க்கை வரலாற்றின் மூலமாகவும் மருத்துவர்களும் பொதுமக்களும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள உதவினர் எனலாம். சில அமெரிக்க வைத்தியர்களும் அவ்வாறே தம்தொழிலில் தாம் பெற்ற அனுபவங்களை விரிவாக எழுதி வெளியிடுவதன் மூலம் தம்தொழிலைப் பொதுமக்கள் புரிந்து கொள்ள வழி செய்தனர். பல மருத்துவர்கள் பொதுமக்களின் நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் கோரி மருத்துவத் தொழில் சார்ந்த பல பொருள்களைக் குறித்து 'வாசகர் மஞ்சரி' (Reader's Digest) 'அறிவியல் மஞ்சரி' (Science Digest) முதலிய ஆங்கில இதழ்களில் எழுதி வருகின்றனர்.

மருத்துவர்கள் காட்டும் இவ்வார்வம் பொதுமக்களில் சிலராலும் காட்டப்படுகிறது. அமெரிக்க நாவலாசிரியர் லாயிட் டக்லஸ் (Lloyd. C. Douglas) மருத்துவமனையை நிலைக்களனகக் கொண்டு மருத்துவர்களின் தொழிலையும் மருத்துவமனை வாழ்க்கையையும் சித்திரிக்கும் மூன்று நவீனங்களை எழுதினர்.[4] இவ்வாசிரியர் மருத்துவரல்லர். ஆயினும் மருத்துவர்களுடன் நெருங்கிப்பழகியும் மருத்துவ நூல்களைப் படித்தும் அத்தொழிலைக் குறித்து ஓரளவு அறிவை அவர்

4. அந்நவீனங்கள் பின்வருவன :

1. Douglas, Leoyd. C., **Dr. Hudson's Secret Journal,**
2. **The Magnificient Obsession,** Houghton Miffins company, 2, Park Street, Boston, 7. U.S.A.,
3. **Disputed Passage,** Pocket books Inc., Rockfeller Centre, New York

பெற்றிருத்தல் வேண்டும். இந்நாவல்களின் மூலமாகவும் மருத்துவர்களும் மருத்துவமனையில் பணியாற்றும் நேர்ஸ்மார் முதலியோரும் நோயாளிகளும் அவர்தம் உறவினரும் நன்கு ஒத்துழைப்பதனுல் எத்தகைய நலம் விழையும் என்பதனையே காட்ட ஆசிரியர் விழைந்தார். 'போட்டியிடப்பட்டபாதை' (The Disputed Passage) என்னும் அவர் நாவல் தொழில்முறையில் சற்று வேறுபட்ட கருத்தையுடைய இருமருத்துவர்க்கிடையே ஏற்பட்ட போட்டியைக் காட்டுகிறது. ஒருவர் நோயாளிகளுடனும் பொதுமக்களுடனும் பழக விழைபவர். மற்றவர் அதிக அறிவும் திறமையும் பெற்றவர்; ஆனுல் விலகியிருக்கவே விரும்புபவர். மருத்துவர்கள் அறிவியல் முறைப்படி நோய்க்கு மருத்துவத்தை மட்டுமே செய்தற்குரியவர் என்ற கொள்கையுடையவர். முன்னவர் நோயாளிகளின் மனநிலை குடும்பச்சூழ்நிலை வாழ்க்கை யாகியவற்றையும் புரிந்து கொண்டு சிகிச்சை செய்வதே சிறப்பாகும் எனக் கருதுபவர். முன்னவரின் கருத்தே வெற்றியடைகிறது எனக் கதை முடிகிறது. வைத்தியரும் பிறரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு ஒத்துழைத்தல் சிறப்பாகும் என மேல் நாடுகளில் பரவி வரும் கருத்தையே இக்கதை காட்டுகிறது.

சில ஆண்டுகளின் முன் அமெரிக்கப் பத்திரிகை நிருபர் ஒருவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள மருத்துவமனைகட்குச் சென்று மருத்துவமனைகளை நடத்துவோருடனும் நோயாளிகள் பலருடனும் தனித்தனியே பேசிப் பல்வேறு மருத்துவமனைகளிலுள்ள விதிகளை ஒப்பிட்டு ஆய்ந்து அங்குத் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகட்கு உள்ள குறைகள் யாவை அவற்றை நீக்குதல் கூடுமா எவ்வாறு நீக்குதல் கூடும், எத்தகைய நடைமுறைகளை நோயாளிகள் விரும்புகின்றனர் எவற்றை அவர்கள் விரும்பவில்லை, எத்தகைய வைத்தியசாலைகளில் நோயாளிகள் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர், சில முற்போக்கான வைத்தியசாலைகள் எவ்வாறு நோயாளிகளின் வசதிக்கேற்றபடி சில விதிகளை மாற்றியமைத்து அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுப் பயனடைகின்றன என்ற செய்திகளனைத்தையும் திரட்டிச் **'சனிக்கிழமை மாலை அஞ்சல்'** (Saturday Evening Post) என்ற அமெரிக்க வார இதழில் ஒரு கட்டுரை எழுதினர்.[5]

இப்பொருளை இவ்வாறு பலர் ஆய்கின்றனர். நம்நாட்டிலும் நோயாளிகளின் நல்லுறவையும் ஒத்துழைப்பையும் பெறச் சில முற்

5. Silverman, Milton, "Are Patients Human Beings?", (Essay: The Saturday Evening Post, Oct. 1955)

போக்கான மருத்துவமனைகளில் பல முயற்சிகள் எடுத்துக் கொள்ளப் படுகின்றன. சில மருத்துவமனைகளில் நோயாளிகளின் வசதிகளைக் கவனிக்கவும் அவர்களும் மருத்துவமனையில் பணிசெய்வோரும் (hospital staff) ஒருவரையொருவர் புரிந்து கொள்ள உதவும் சமூக நலப்பணியாளர்கள் (social workers) அமர்த்தப்படுகின்றனர். சில சிகிச்சைகள் ஏன் அவசியமாகின்றன, அவற்றைச் செய்வதனால் உடலுக்கு என்ன நலம் ஏற்படுகிறது, அவற்றைச் செய்யாவிட்டால் வரும் கேடு என்ன என்பது நோயாளிகட்குச் சொற்பொழிவுகள் மூலமாகவும் படக்காட்சி மூலமாகவும் விளக்கப்படுகிறது.

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பால்நாற் கூற்றே மருந்து (950)

என வள்ளுவர் பண்டு கூறிய நல்லுரை மருத்துவத்தில் எவ்வளவோ முன்னேற்றமடைந்து விட்ட இக்காலத்திலும் மாறுத உண்மையாக இலங்குகின்றது.

வள்ளுவர் தம்கால மருத்துவர்களை 'நூலோர்' எனவும் 'கற்றான்' எனவும் குறிப்பிடுவதால் ஆயுள்வேத மருத்துவநூல்களை முறையாகக் கற்ற மருத்துவர்கள் அக்காலத்திருந்தனர் என்பது புலனாகும். சிலப்பதிகாரத்திலும் பட்டினப்பாக்கத்தில் குடியிருந்த மக்களுள் ஆயுர்வேதரும் குறிப்பிடப்படுகின்றனர் (சிலம்பு 5. 44). புறநானூற்றில் கவிபாடிய புலவர்களுள் மருத்துவன் தாமோதரனாரும் ஒருவர். தற்காலத்திலும் கூட டாக்டர் திரிபுரசுந்தரி, டாக்டர் ஏ. ஜே. கிரனின் போன்றோர் பல ஆண்டுகள் வைத்தியராகப் பணியாற்றிப் பின் எழுத்துத்துறையிலும் ஈடுபட்டது போல மருத்துவன் தாமோதரனாரும் முறையாக மருத்துவத் தொழிலும் பயின்று கவிபாடுதலிலும் வல்லவாராயிருந்தனர் போலும். தற்காலத்தில் மருத்துவரின் சொற்படி பணிபுரியும் பல வகையினர் மருத்துவமனைகளில் உளர். உடனிருந்து நோயாளிகளைக் கவனிக்கும் நேர்ஸ்மார், நோயாளிகளின் குருதி முதலியவற்றை ஆய்வோர் (laboratory technicians), மருந்துகளைக் கலந்து கொடுப்போர் (compounders), இயன் மருத்துவம் புரிவோர் (physiotherapists), தொழில்முறை மருத்துவம் புரிவோர் (occupational therapists) என இவர் பலவகையினராவர். பண்டைக் காலத்தில் இவர்கள் இல்லை. ஆயினும் மருத்துவர் சொற்படி பணிபுரியும் ஏதோ ஒருவகை உதவியாளர்கள் இருந்திருத்தல் வேண்டும். அவர்களையே வள்ளுவர் '**உழைச்செல்வான்**' என்ற தொடரால் குறிப்

பிட்டார். உரையாசிரியர்களும் 'உழைச் செல்வோரை'த் தனியே ஒரு பிரிவினராகக் கருதி அவர்க்கு இருக்க வேண்டிய இயல்புகளையும் கூறினர்.

'மருந்தாகித் தப்பா மரத்தற்றால்' (217) எனத்திருக்குறளில் பிற இடத்து வரும் ஓர் உவமை மூலமாக மருந்து மரம் குறிப்பிடப்படுவதால் மருந்துத் தன்மையுடைய மரங்களின் வேர், இலை, பட்டை முதலியவற்றை அக்காலத்து மருந்தாகப் பயன்படுத்தினர் என அறியலாம்.

## 3. 5. ஆசிரியத் தொழில்

கல்வியையும் கேள்வியையும் வள்ளுவர் போற்றினர். கல்வியை மக்கள் தாமாகவும் கற்றல் கூடும். ஆசிரியர்கள் மூலமாகவும் கற்றல் கூடும். ஆயினும் கல்வி போற்றப்படும் ஒரு சமுதாயத்தில் ஆசிரியர்கள் பலர் இருத்தலே இயல்பு.

தொல்காப்பியர் காலத்திலேயே கல்வி போற்றப்பட்டது. அறிவுடையோரால் விரும்பித்தேடப்பட்டது. ஒரு குடும்பத்தலைவன் தன் இல்லத்தையும் ஊரையும் விட்டுச் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டி நிகழும் காரணங்களுள் கல்வியையும் ஒன்றாகத் தொல்காப்பியர் கூறினர். 'வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது' (தொல். பொருள் 188) எனவும் விதித்தார். தொல்காப்பியர் காலத்திலேயே ஆடவர்கள் கல்விக்காக வெளியூர் செல்வது வழக்கமெனவும் அவ்வாறு செல்வோர் மூன்று ஆண்டுகள் வரையில் தங்கிக் கல்வி பயிலுதல் கூடும் எனவும் தெரிகிறது. ஆகவே அக்காலத்திலேயே சிறந்த உயர்தரக்கல்வி யளிக்கத் தக்க கல்வி நிலையங்கள் அல்லது கழகங்கள் இருந்தன எனக் கொள்ளலாம்.

> உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
> கடையரே கல்லா தவர் (395)

என்னும் குறள் வள்ளுவர் காலத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இருந்தமையையும் அவர்களிடத்து மாணவர்கள் பணிவுடன் நடந்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டனர் என்பதையும் தெளிவாகக் காட்டும். செல்வரிடம் பொருளுதவி பெறச் செல்லும் வறியோர் பணிவுடன் நிற்பது போலப் பணிவுடன் நின்றாயினும் கற்றோரே சிறந்தோர், கல்லாதோர் கடையரே என வள்ளுவர் இங்குக் கூறினர். 'பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே' (புறம். 183) என்ற பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கூற்றும் அக்காலத்திருந்த இவ்வழக்கத்தைக் காட்டும்.

ஆசிரியர்களிடம் எத்தகைய இயல்புகளை வள்ளுவர் எதிர்பார்த்தார் என்பதையும் கல்வி, அறிவுடைமை என்னும் அதிகாரங்களினின்றும் அறியலாம். கற்றோர் தம் கல்வியைக் கசடறக் கற்று அதற்குத் தக நிற்றலும் வேண்டுமாகையினால் ஆசிரியர்கள் சிறந்த கல்வியுடன் நல்லொழுக்கமும் உடையராய்த் திகழ்தல் வேண்டும். அவர்களின் அறிவு அவர்களைச் சென்ற இடத்துச் செலவிடாது தீதொரீஇ நன்றின்பால் உய்த்தல் வேண்டும். கற்றோர் பிறரிடம் நன்முறையில் பழக வல்லவராயும் இருப்பர்.

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில் (394)

கற்றோர் பிறரைக் கண்டு பேசுங்கால் அவர்கள் உவக்குமாறு பழகிப் பிரியுங்கால் 'இவரை மறுபடி எப்பொழுது காண்போம்' எனப் பிறர் எண்ணுமாறு பிரிவர். அறிஞர்கள் தாம் கற்றவற்றைக் குறித்து உரையாடி மகிழும்படி கூடுவர். பின்பு அவற்றைக் குறித்துத் தனியே இருந்து சிந்திக்குமாறு பிரிவர் எனவும் இக்குறளுக்குப் பொருள் கொள்வர். அவ்வாறாயின் அது கற்றோர் தாம் கற்ற பொருளை ஆயுமாற்றைக் காட்டும்.

உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலு மில்ல தறிவு (425)

என்ற குறளும் அறிவுடையோர் யாவரிடமும் இனியமுறையில் பழகி யாவரையும் நண்பராகக் கொள்ளுதலையும் அந்நட்பில் மாறுதிருத்தலையும் காட்டும்.

கற்றோர் கல்வியைப் பரப்பவும் விழைவர். தாமும் முன் கற்றதனோடு நிற்காது மேலும் மேலும் கற்றலை விழைவர். தாம் கல்வியினால் அடையும் நன்மையையும் இன்பத்தையும் கண்டு உலகுமுழுதும் அதே விதக் கல்வியை யடைந்து பயனுற வேண்டும் எனவே விரும்புவர்.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார் (399)

கல்வியொடு கேள்வியைக் குறித்தும் வள்ளுவர் கூறினர். அக்காலத்தில் கற்றோர் மாணவர்கட்கு முறையாகக் கல்வி கற்பித்தலுடன் பொதுமக்கள் கேட்கச் சொற்பொழிவுகள் செய்வதன் மூலமும் கல்வியைப் பரப்பினர் போலும். கல்வியறிவில்லாத மக்களும் புரிந்து கொள்ளுமாறு எளியமுறையில் நூற்பொருள்களை விரித்துச் சொல்லல்

அக்காலத்து ஒரு கலையாக வளர்ந்திருத்தல் வேண்டும். 'கற்றில னாயினும் கேட்க' (414) என வள்ளுவர் கல்லாதவரையும் கேள்வியறிவு பெறுமாறு ஊக்கினர்.

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு (424)

எனக் கல்வியறிவுடையோர் பிறர் கூறும் நுண்ணியபொருளை யறியத் தாம் வல்லவராயினும் தாம் கூறுவதை எளிதாகப் பிறர் நன்கு புரிந்து கொள்ளுமாறு சொல்ல வல்லவராதலும் வேண்டும் என்றார். பொது மக்கள் கேட்க நூற்பொருளை விரித்துரைப்போரிடமும் வள்ளுவர் ஒழுக்கத்தையே எதிர்பார்த்தார்.

இழுக்க லுடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல் (415)

ஒழுக்கமுடையவரின் வாய்ச் சொற்களே கேட்டோர்க்கு இழுக்க லுடையுழி ஊன்றுகோல் போல உதவும்.

இவ்வாறு பொது மக்கள் கேட்க விரித்துரைக்கப்பட்ட பொருள்கள் யாவை அவை எவ்வெக்காலங்களில் விரித்துரைக்கப் பட்டன என்பது தெளிவாகத் தெரியவில்லை. 'எனைத்தானும் நல்லவை கேட்க' என வள்ளுவர் கூறுவதனாலும் கேட்கப்படும் பொருள் மக்களை நன்னெறியில் செலுத்த உதவும் என அவர் கருதுவதனாலும் விரித் துரைக்கப்பட்டன சமயநூல்களாகவும் அறநூல்களாகவும் இருத்தல் கூடும் என எண்ணலாம்.

சிலப்பதிகாரமும் இந்திரவிழாவின்போது பொதுமக்கட்குச் சமய நூல்களும் அறநூல்களும் விரித்துரைக்கப்பட்டமையை,

அறவோர் பள்ளியும் அறனோம் படையும்
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்
திறவோர் உரைக்கும் செயல்சிறந் தொருபால்
(5. 179—181)

எனக் கூறுகிறது. புத்தர், அருகர் பள்ளிகளிலும் அறத்தைப் பாதுகாக்கும் பிற இடங்களிலும் நகரமதிலுக்கு வெளியே இருந்த புண்ணியத்தானங்களிலும் அறத்தின் கூறுபாடுகளையறிந்தோர் தருமம் போதிக்கும் செயல் சிறப் பாக நிகழ்ந்தது எனக் கூறப்படுகிறது. மணிமேகலையுள்ளும் இந்திர விழாவின்போது மக்கள் பலரும் செய்ய வேண்டிய கடமைகளைக் கூறுமிடத்து,

தண்மணற்பந்தரும் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை யறிவீர் பொருந்துமின் (1. 58-59)

எனக் கூறப்படுகிறது. பொதுமக்கட்கு அறநூல்களை விரித்துரைக்கத் தக்க பந்தர்களும் பொதுமன்றங்களும் அக்காலத்திருந்தன போலும். விழாநாட்களில் அறிஞர் அவ்விடங்களில் கல்லாதோரும் புரிந்து கொள்ளத்தக்க வகையில் நன்னூற்பொருளைக் கூறினர் போலும். இவ்வாறு பலவகையில் கல்வி பரப்பப்பட்டது.

**மதுரையாசிரியர் நல்லந்துவனர், மதுரைக்கணக்காயர் மகனர் நக்கீரனர்** எனவரும் சங்ககாலக்கவிஞர்களின் பெயர்களும் அக்காலத்து ஆசிரியர்கள் இருந்தமையைக் காட்டும்.

## 3. 6. அவையத்தோர் பணி

தற்காலத்து **நீதிமன்றங்கள்** உள. அவற்றில் பணிபுரியும் நடுவர்கள் (judges) உளர். அவர்கட்கு அது முழுநேரப்பணியாகவுள்ளது. அதற்காக அவர்கட்கு அரசால் ஊதியமும் வழங்கப்படுகிறது.

பண்டைக்காலத்து நீதி கூறும் **அவையங்கள்** இருந்தன. அவற்றில் பலரும் சேர்ந்து நீதி கூறினரா ஒருவர் தலைமையாக இருந்து பிறர் உதவியுடன் நீதி கூறினரா என்பது தெளிவாகத் தெரியவில்லை. அவையங்களில் பணிபுரிந்தோர் அதை முழுநேரத் தொழிலாகக் கொள்ளாது பிறதொழில்களைச் செய்பவராயும் வேண்டியபோது அவையமாகக் கூடுபவராயும் இருந்திருத்தல் கூடும். சோழர் காலத்தில் **குடவோலைத் தேர்தல்** மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட **ஊர்மன்றத்தினர்** இருந்தனர் என்பதை அக்காலக்கல்வெட்டுகள் காட்டுகின்றன. சங்க காலத்திலும் வள்ளுவர் காலத்திலும் இருந்த அவையத்தோர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரா அரசரால் நியமிக்கப்பட்டவரா என்பதும் தெளிவின்று.

**புறநானூற்றில் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்** கூறியவஞ்சினத்தில்,

அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக (புறம் 71. 7—9)

என வரும் அடிகளை நோக்க அவையத்தில் ஒருவன் தலைவனுக இருந்

தானெனவும் அவன் அரசனுல் நியமிக்கப்பட்டான் எனவும் தோன்றும்.

அவையம் எவ்வாறு அமைக்கப்பட்டதென்பதைத் திருக்குறள் கூறவில்லை. நடுவுநிலைமை என்னும் அதிகாரத்தில் வரும் சில குறள்கள் அவையத்தோர் நீதி கூற வேண்டிய முறைமையைக் குறிப்பனவாகத் தோன்றும்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்ரேர்க் கணி (118)

சொற்கோட்ட மில்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்ட மின்மை பெறின் (119)

இவ்விரண்டு குறள்களும் அவையத்தோரை நோக்கின எனப் பரிமேலழகரும் கூறினர். தான் முதலில் சமமாக நின்று தன்னிடத்து வைக்கப்பட்ட பொருள்களின் நிறையைச் சரியாக வரையறுத்துக் காட்டும் துலாக்கோல் போல வருபவரின் வழக்கைச் சரியாக ஆராய்ந்து ஒருபால் கோடாமல் நீதி கூறுவது அவையத்திலுள்ள சான்ரேர்க்கு அழகாகும். சொல்லில் கோடுதல் இல்லாததே நடுவு நிலைமையாகும். அதுவும் உள்ளத்தின் கண்ணும் கோடுதல் இல்லாத தன்மையைத் திண்ணமாகப் பெற்றபோதே யாம். சொல்லிலும் உள்ளத்திலும் நடுவுநிலைமையைமாருது கடைப்பிடிக்க வேண்டிய அவையத்தோர் கடனை வள்ளுவர் இவ்வாறு கூறினர்.

பகை, நொதுமல் (பகையும் நட்புமின்றிப் பொதுவானவர்கள்), நட்பு என்னும் முத்திறத்தாரிடத்தும் ஒரேவிதமாக ஒழுகுதலே தகுதி என இவ்வதிகாரத்தின் முதலாவது குறளுட் கூறப்பட்டதும் அவையத் தாருக்குப் பொருந்துவதாகக் கொள்ளலாம்.

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே யொழிய விடல் (113)

நன்மையே தருவதாக இருப்பினும் நடுவுநிலைமையிலிருந்து விலகு வதனல் பெறும் செல்வத்தை அன்றே ஒழியவிடல் வேண்டுமெனக் கூறும் இக்குறளும் அவையத்தோர் கையூட்டுப் பெறலாகாதென விலக் குவதாகக் கொள்ளலாம்.

இவ்வாறு அவையத்தோரைக் குறித்த சிலகருத்துக்கள் திருக்குறளினின்றும் பெறப்படுகின்றன.

## 3.7. உழவு

வள்ளுவர்காலத்தில் தமிழ்நாட்டில் நிலவிய சமுதாயம் உழவுத் தொழிலை அடிப்படையாகக் கொண்ட சமுதாயமே. பிற தொழில்களை ஆங்காங்கே குறிப்பிட்ட வள்ளுவர் உழவுக்கே தனியொரு அதிகாரத்தை வகுத்தார். தமிழ்நாட்டு மக்களின் முக்கிய உணவு அக்காலத்திலும் இக்காலம் போல் நெல்லினின்றும் பெறும் சோறே யாகும். ஆகவே நெல் விளைவித்தலே சிறந்த தொழிலாகப் போற்றப் பட்டது.

பண்டைக் காலத்துத் தமிழ்நாட்டில் உழவுத் தொழிலில் ஈடுபட்ட பலவகையினர் இருந்தனர் எனவும் அவருள் தம் நிலத்தைத் தாமேயுழுது பயிர் செய்தோரே பெரும்பாலவராவர் எனவும் தமிழர் சமுதாய வரலாற்றை ஆய்ந்தோர் கூறுவர். இவர் உழுதுண்பார் எனவும் ஏரின் வாழ்நர் எனவும் அழைக்கப்பட்டனர். கூலியாட்களை யமர்த்தி உழுவித்துண்போரும் இருந்தனர். இன்னும் நிலத்தில் பிறரை வேலை செய்யவிட்டு விளைபொருளில் ஒரு பகுதியைப் பெற்று உடைமை யினின்றும் விலகி யுறைந்த நிலக்கிழார்களும் (absentee landlords) இருந்தனர் என்பர்.[6]

வள்ளுவர் உழவர்களைச் சிறப்பித்துக் கூறியபோது பெரும் பாலும் முதல் பிரிவினராகிய உழுதுண்பாரையே உளத்திற் கொண்டார் எனத் தோன்றும். 'உழந்தும் உழவே தலை' 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' 'கைசெய்தூண் மாலையவர்' என்ற தொடர்கள் இதைக் காட்டும். தம் நிலத்தைத் தாமே முயன்று உழுது தம்கையினால் வேலை செய்து பயன்கொள்ளும் முறையையே வள்ளுவர் பெரிதும் விரும்பினர் போலும்.

உழுதுண்போர் அக்காலத்து வளமாக வாழ்ந்தனர் எனவும் சமூகத்தில் நன்கு மதிக்கப்பட்டனர் எனவும் அரசர்களாலும் போற்றப் பட்டனர் எனவும் குறளினின்றும் தெரிகிறது. 'சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம்' எனக் கூறத்தக்கதாக உழவுத் தொழில் அக்காலத்துச் சிறப் புற்றிருந்தது. சமுதாயமாகிய தேர்க்கு உழுவோரே அச்சாணி போன்றவர் என வள்ளுவர் கூறினர். ஏனெனில் அதற்கு வேண்டிய முயற்சியில்லாதோராய்ப் பிறதொழில்களை நாடிச்செல்வோரனை வரையும் உழுவோரே தாங்குகின்றனர். எத்தொழிலைச் செய்யினும்

6. Pillai K. K., A Social History of the Tamils, Part I, P. 192 - 193

உழவுத் தொழிலினுல் கிடைக்கும் உணவையுண்டுதானே அவர்கள் வாழ்தல் வேண்டும். உழுதுண்டு வாழ்வோர் உரிமையுடன் வாழ்கின்றனர். அமைச்சர், படைவீரர் முதலிய பிறர் செல்வ வளம் மிக்கவராக இருப்பினும் ஒருதலைவனுக்குக் கீழ்ப்பட்டு அவன் தரும் ஊதியத்தைப் பெற்று வாழ வேண்டியவரே. இவ்வுரிமை வாழ்வைக் குறள் போற்றுகிறது.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். (1033)

உழவுத்தொழிலின் பெருக்கமே நாட்டில் நல்வளத்தையேற்படுத்தி மக்களை உடல் வலிமையும் ஊக்கமும் பெறச் செய்து போரில் வெற்றியையும் தரும் என்பதைப் பண்டையோர் நன்குணர்ந்தனர். நெற்கதிர்களையும் தண்ணருளையும் உடைய உழவர்கள் பிற அரசரின் குடையின் கீழ் உள்ள நாடுகளையும் தம் அரசனின் குடையின் கீழ் வரக்காணும் ஆற்றலுடையவர் ஆவர் என வள்ளுவர் கூறினர்.

பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர். (1034)

சோழ நாட்டில் உழவுத் தொழில் வளத்தை **நாடுகாண்காதையில்** சிறப்பித்துக்கூறிய இளங்கோவும் 'இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை விளைப்போர்' (சிலம்பு 10. 149-150) என உழவர்தம் பணியைப் பாராட்டினர்.

வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே (புறம் 35. 24–26)

என்ற வெள்ளைக்குடி நாகனர் தம்சொற்களும் இவற்றுடன் ஒக்கும். பிறஅரசர் படை யெடுத்துவரின் அவர் எதிர்ப்பைத் தாங்கி அப்படை புறங்கொடுத்து ஓடக்கண்டு ஆரவாரம் செய்யும் படை வீரரின் வெற்றியும் உழவர்தம் உழுகருவியால் ஏற்படுத்தப்பட்ட சால்களில் விளையும் நெல்லின் பயனே யாகும் என அவர் இங்குக் கூறினர்.

உழவுத்தொழிலின் முக்கியத்துவத்தையும் அது நாட்டுக்கும் தமக்கும் தரும் ஏற்றத்தையும் உணர்ந்த பண்டையரசர்களும் அத்தொழிலைப் பலவிதத்தில் ஊக்குவித்தனர் எனத் தெரிகிறது. அரசர்கள் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவித்தனர். காடாகக் கிடந்த நிலங்களைத் திருத்திப் பண்படுத்தினர். **காவிரிக்குக் கரைகண்ட**

காவலன் எனக் கரிகாலன் போற்றப்படுகிருன். காவிரியில் வெள்ளம் பெருகி வருங்கால் அந்நீர் கரைமீது பாய்ந்து வீணுகாது கரையமைத்து நீர்ப்பாசன வசதிகளையும் அவன் ஏற்படுத்தியிருத்தல் வேண்டும். 'காடுகொன்று நாடாக்கிக் குளம்தொட்டு வளம் பெருக்கி'னன் என (283-4) இவ்வரசனைப் பட்டினப்பாலையும் பாராட்டுகிறது. 'கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும் உடையானும் வேந்தர்க் கொளி' (390) என்ற குறளுக்கு உரைகூறுங்கால் மணக்குடவர், "கொடுத்தல் - தளர்ந்தகுடிக்கு விதை, ஏர் முதலியன கொடுத்தல்; அளித்தல் - அவரிடத்துக் கொள்ளும் கடமையைத் தளர்ச்சி பார்த்து விட்டுவைத்துப் பின்பு கோடல்; செங்கோன்மை-கொள்ளும் முறைமை யொழியக் கொள்ளாமை; குடியோம்பல்-தளர்ந்த குடிக்கு இறை கழித்தல்" என நான்கையும் உழவுத்தொழிலோடு தொடர்புபடுத்தியே கூறினர். மழையின்மையினலோ காலந்தவறிப் பெய்யும் மழையினலோ வெட்டுக்கிளி முதலியவற்றினலோ பயிர் சேதமுறின் உழவர் கொடுக்க வேண்டிய விளைபொருளில் ஆறிலொன்ருகிய கடமையை அவ்வாண்டு பெருது விட்டுவைத்துப் பின் அடுத்தஆண்டு பெறுதலும் அல்லது முற்ருகத் தவிர்த்தலும் ஏர், விதை முதலியவற்றைப் பெற்றுக் கொள் ளவும் ஆற்றலற்றவராக உழவர் வறுமையுறின் அவர்க்கு அவற்றை நல்கி ஆதரித்தலும் அரசர் வழக்கம் போலும்.

அரசர்கள் நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தியும் கடமையை ஏற்றபோது நீக்கியும் உழவுத் தொழிலை ஊக்குவித்த அல்லது ஊக்கு விக்க வேண்டிய திறத்தைச் சில புறநானூற்றுப் பாடல்களும் காட்டும். குடபுலவியனர் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை நோக்கி நாட்டில் நீர்வளத்தையும் உணவையும் பெருக்க வேண்டியதன் அவசியத்தைக் கூறி நிலனெளிமருங்கின் நீர் நிலைகளைப் பெருக்கித் தன்புகழையும் உலகில் தேக்கி வைக்குமாறு அவ்வரசனை வேண்டிக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாம். 'உண வெனப்படுவது நிலத்தொடு நீரே' எனக் கூறி உழவுத் தொழிலுக்கு வேண்டிய நீர்ப்பாசன வசதிகளின் முக்கியத்துவத்தை அவர் உணர்த் தினர் (புறம் 18). வெள்ளைக்குடி நாகனர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிப் பழஞ்செய்க்கடன் வீடு கொண்டனர் எனப் புறநானூற்றில் கூறப்படுகிறது. அவர் பாடிய காலத்தின் முற் பட்ட சில ஆண்டுகள் ஏதோ காரணத்தால் விளைபொருள் குறைவாக இருந்ததனல் உழவர் செலுத்த வேண்டிய கடமை இறுக்கப்படாமல் விட்டு வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாண்டு முன் செலுத்த வேண்டிய கடமைகளையும் சேர்த்துச் செலுத்துதல் உழவர்க்குப் பெரும்

பாரமாகத் தோன்றியதால் புலவர் பழங்கடனை நீக்கி விடுமாறு கேட்க அரசனும் அவ்வாறு செய்திருத்தல் வேண்டும். மணக்குடவர் கூறிய 'தளர்ச்சி பார்த்து விட்டுவைத்துப் பின்பு கோடல்' 'தளர்ந்த குடிகட்கு இறை கழித்தல்' ஆகியவையே இங்கும் காணப்படுகின்றன. பகடு புறந்தருநர் பாரம் ஓம்புதலே குடிகள் அனைவரையும் பாதுகாத்தற்கு வழியாகும் என வெள்ளைக்குடி நாகனார் தம் கவிதையில் எடுத்துரைத்தார் (புறம் 35).

எப்பொழுதாயினும் மழை பொய்த்தபோதோ பிற காரணத்தால் பயிர் கெட்டபோதோ துன்பமுறினும் உழுவோர் பொதுவாகச் செல்வ வளமுடையோராகவே இருப்பர். நெல் அவர்களிடமே ஏராளமாக இருப்பதனால் விருந்தோம்பல் வறியோர்க்கு உதவுதல் ஆகிய அறச் செயல்களில் அவர்கள் சிறந்து விளங்குவர்.

இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர் (1035)

தம் கையினால் உழவுத் தொழிலைச் செய்து உண்கின்ற தன்மையையுடையோர் தாம் பிறரிடம் சென்று இரவார் எனவும் தம்பொருளை மறைத்து வைக்காது இரப்பார்க்கு ஈவர் எனவும் குறள் கூறுகிறது. வேளாளர் என்பது உழவர்க்கு மற்றொரு பெயராகும். வேளாண்மை என்னும் சொல்லின் நேர் பொருள் உழவுத் தொழில் என்பதே.[7] இத்தொழிலைச் செய்வோர் விருந்தோம்புதலிலும் வருந்தினோர்க்கு உதவுதலினும் மிக்கு விளங்கினமையால் நாளடைவில் வேளாண்மை உழவுத் தொழிலை மட்டும் குறிப்பதின்றிப் பிறர்க்கு உதவும் அறச் செயல்களையும் குறிப்பதாயிற்று.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு (81)

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும் (614)

7. வேளாளர் என்னும் சொல் வெள்ளாளரின் திரிபே, வெள்ளத்தை ஆள்பவர் வேளாளர் என்பர் சிலர். சிலர் வேள்வி என்னும் சொல்லினின்றும் வேளாளர் தோன்றிற்றென்பர். (Pillai. K.K., A Social History of the Tamils, Part I, P. 231) ஆயினும் வேளாளர் மண்ணினை ஆள்பவர் எனப் பொருள் கொள்வதே சிறந்த விளக்கமாகத் தோன்றுகிறது. குயவர்க்கு வேட்கோ என்ற இனப்பெயருண்டு. அவர்களும் மற்றொரு வகையில் மண்ணினையாள்பவர்களே. வேளாளர் மண்ணினையாள்பவர் என்பது ஆறுமுக நாவலர் முதலிய யாழ்ப்பாணத்துத் தமிழ் அறிஞர் கொண்ட பொருள் (சூடாமணி நிகண்டு மூலமும் உரையும், ஆறுமுக நாவலர் பதிப்பு, குரோதன ஆண்டு, முதலிரண்டு தொகுதிகளின் பதப்பொருள் விளக்கம், பக்கம் 44, வேளாளர்-மண்ணினை ஆள்பவர்).

இக்குறள்களில் வேளாண்மை என்னும் சொல் இவ்விரண்டாவது பொருளிலேயே வழங்கப்படுகிறது. 'பிறர்க்கு உபகாரம் செய்தல்' 'உபகாரியாந்தன்மை' எனவே இக்குறள்களில் இச்சொல்லுக்குப் பொருளும் கூறப்படுகிறது. விருந்தோம்பிப் பிறர்க்கு உதவுதற்கே இல்வாழ்க்கை, முயற்சியில்லாதவன் பிறர்க்கு உதவுதல் இயலாது என்பது பொருளேயன்றி இங்கு உழவுத் தொழில் குறிக்கப்படவில்லை. இச்சொல்லாட்சியும் பண்டைக்காலத்து உழவர் செல்வ வளத்திலும் அறச் செயல்களிலும் உயர்ந்திருந்தனர் என்பதைக் காட்டும்.

உழவுத் தொழில் செய்யும் முறையைக் குறித்தும் வள்ளுவர் சில குறள்களிற் கூறினர்.

தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும் (1037)

ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு (1038)

நிலத்தை உழுதபின் உலரவிடுதல் அக்காலத்தில் வழக்கமெனத் தெரிகிறது. அவ்வாறு நன்றாக உலர விடப்பட்ட நிலம் எருவிடாவிடினும் பயன் கொடுக்குமெனக் கருதினர். ஆனால் எரு விடாமலும் இருக்கவில்லை, எருவிடும் முறையையும் அறிந்திருந்தனர். உழுதல், எருவிடுதல், நீர்பாய்ச்சுதல், களைகட்டல், பயிர் விலங்கு முதலியவற்றால் அழியாமல் காத்தல் ஆகிய ஐந்தினையும் முறையே செய்தனர் எனத் தெரிகிறது. களை நீக்குவதன் அவசியத்தை நன்குணர்ந்த வள்ளுவர் அரசன் தீயோரை ஒறுத்து அல்லது நீக்கி நன்மக்களைக் காத்தலையும் பைங்கூழ் களை கட்டலுக்கே ஒப்பிட்டார் (550).

உழவுத் தொழிலில் வேண்டப்படும் முயற்சிகள் இன்னின்ன என்பதனுடன் நன்னிலம் எது புன்னிலம் எது என்ற வேறுபாடுகளையும் அக்கால மக்கள் அறிந்திருந்தனர் என்பதைக் குறளில் பிற இடங்களில் வரும் குறிப்புக்கள் காட்டும். எவ்வித முயற்சி எடுத்துக் கொள்ளினும் எதையும் விளைவிக்க முடியாத நிலத்தைக் களர்நிலம் என்றனர்.

உளரெனும் மாத்திரையர் அல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர் (406)

எனக் கல்லாதவரை ஒன்றும் பயவாத களர்நிலத்திற்கு வள்ளுவர் ஒப்பிட்டார். விளைநிலங்களும் அனைத்தும் ஒரேஅளவு செழிப்பாக இருப்பதில்லை. ஒருநிலத்தில் விளையும் பயிர் பிறபொருள்களெல்லாம்

ஒத்திருப்பினும் மற்றொரு நிலத்தில் விளையும் பயிரைவிட அதிகச் செழிப்பாக வளர்கிறது. இவ்வித வேறுபாட்டை,

> நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
> குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல் (959)

என்னும் உவமை காட்டும். இங்கு நிலம் எத்தகைய செழிப்பையுடையது என்பதை அதில் விளையும் பயிர்காட்டுவது போல ஒருவரின் சொற்கள் அவர் பிறந்த குலத்தின் தன்மையைக் காட்டும் எனக் கூறப்பட்டது. நிலவேறுபாடுகள் அக்காலத்து அறியப்பட்டிருந்தன.

உழவுத் தொழிலைக் குறித்து வள்ளுவர் கூறிய மற்றொரு கருத்து நிலத்திற்குரியவன் தன்னிலத்தைக் கவனிக்காமல் விட்டு விட்டிருத்தல் ஆகாது என்பதாம். நிலத்திற்கு உரியவன் அடிக்கடி விளைநிலத்திற்குச் செல்லாதிருப்பின் அந்நிலம் கணவன் வீட்டிற்கு வராதிருப்பின் மனைவி ஊடுவது போல ஊடிவிடும் என்றார். நிலத்துக்குரியவன் தானே சென்று கவனிக்காது வேலையாட்களிடமோ பிறரிடமோ பயிர்த் தொழிலை விட்டுவிட்டு விலகியிருப்பின் அவர்கள் போதிய கவனமெடுக்க மாட்டார்கள், நிலமும் ஏற்ற பயன் தராது. வள்ளுவர் காலத்தில் உடைமையினின்று விலகியுறையும் நிலக்கிழார் இருந்திருத்தல் கூடும். அம்முறையை விரும்பாததனாலேயே வள்ளுவர் இவ்வாறு கூறினர் போலும். முன்பே கூறியபடி நிலத்திற்குரியவர்கள், கூலியாட்களையும் அமர்த்தினும் தாமும் சேர்ந்து நிலத்தைப் பண்படுத்தியுழைக்கும் முறைமையையே வள்ளுவர் பெரிதும் விரும்பினர்.

நிலம் உழுது பயன்கொள்பவர்களுக்கு வளம் நல்கக் காத்திருக்கிறது. ஆகவே முயற்சியில்லாதவர்களாய் நாம் பொருள் இலோம் எனக் கூறிச் சோர்வுற்றிருப்பவர்களைக் கண்டு அது நகைக்கும் என்றார் வள்ளுவர்.

> இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
> நிலமென்னும் நல்லாள் நகும் (1040)

வள்ளுவர் இவ்வாறு கூறியதன் பொருள் யாதோ? நிலமுடையவர்கள் இலமென்று அசைஇ இருப்பார்களா? நிலமில்லாதவர்களுக்கு நிலம் எவ்வாறு பயனளிக்கும்? வள்ளுவர் காலத்தில் நிலமில்லாதோர் ஆனல் முயற்சியும் வலிமையும் உடையோர் முயன்று பண்படுத்திப் பயிர் செய்யத்தக்க பண்படுத்தப்படாத பொதுநிலங்கள் இருந்தனவா? மக்கள் தொகைப் பெருக்கம் அதிகமில்லாத அக்காலத்தில் அத்தகைய பொதுநிலங்கள் இருந்திருத்தல் கூடும்.

கரிகாலன் காடு கெடுத்து நாடாக்கினன். அதுபோலப் பிற அரசர்களும் அக்காலத்து அதிகமாகப் பரந்திருந்த காடுகளை அழித்து விளைநிலங்களாக்கும் முயற்சியை எடுத்துக் கொண்டிருத்தல் கூடும். அப்போது நிலமற்றவர்கள் ஆனல் பயிர்த்தொழிலில் விருப்பும் ஊக்கமும் உள்ளவர்கள் அந்நிலங்களில் குடியேற வாய்ப்பு இருந்திருத்தல் கூடும். நிலமற்றோர் பிறர் நிலங்களில் உழைத்துத் தக்க ஊதியமோ விளை பொருளில் பங்கோ பெறுதல் கூடும் என எண்ணியும் வள்ளுவர் அவ்வாறு கூறியிருக்கலாம். இவ்விபரங்கள் தற்போது தெளிவாகத் தெரிந்தில. நிலத்தைக் குத்தகையெடுத்து பயிர் செய்யும் முறை (tenancy) அக்காலத்தும் இருந்ததெனவும் ஆனல் அது பற்றிய விதிகள் அல்லது நிலமுடையோர் பெறும் பங்கு எது பயிர் செய்வோர் பெறும் பங்கு அல்லது ஊதியம் எது என்னும் செய்திகள் தெரிந்தில எனவும் சமூக வரலாற்றை ஆய்ந்தோரும் கூறுகின்றனர்.[8] ஆயினும் நிலமற்ற வறியோரும் உழவுத் தொழிலில் ஈடுபடுவதற்கு ஏதோ வழியிருந்ததனலேயே மேற்காட்டப்பட்ட குறளை வள்ளுவர் எழுதினர் எனக் கொள்ளலாம்.

உழவுத் தொழில் சிறந்திருக்கும் ஒருசமுதாயத்தில் அதற்கு உதவியான வேறுசில தொழில்களும் வளர்ந்திருக்கும் என ஊகிக்கலாம். காலிங்கர் தம்முரையில் கூறியபடி வாய்க்கால்களமைத்தலும் உழுவதற்கும் உரிய ஏர் முதலியவற்றைச் செய்தலும் உழவுக்குத் துணைத் தொழில்களாம். வன்புலத்துக்கும் மென்புலத்துக்கும் வெவ்வேறு கருவிகள் பயன்பட்டன எனவும் அவர் குறிப்பிடுகின்ருர். ஆகவே ஏர் களைகட்டுதற்கும் அறுவடைக்கும் வேண்டிய கருவிகள் என்னுமிவற்றைச் செய்யுந் தொழிலாளர்களும் பண்டைத் தமிழகத்தே இருந்திருப்பர் எனக் கொள்ளலாம்.

## 3. 8. தோட்டக்கலை

வயலை உழுது பயிர்செய்யுந் தொழிலே உழவெனப்படுவது. அது மட்டும் அன்றிப் பாத்தியமைத்துச் செடி நட்டோ விதை யூன்றியோ நீர் ஊற்றி வளர்க்கும் தோட்டந் தொழில் அல்லது கலையும் பண்டைக் காலத்திலேயே தமிழ்நாட்டில் இருந்திருத்தல் வேண்டும்.

வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோர் ஆறு (465)

8. Pillai, K. K., A Social History of the Tamils, Part I, P. 193-194

உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று (718)

இவ்விரு உவமைகளும் தோட்டத் தொழிலினின்றும் எடுக்கப் பட்டவையே. அரசன் தன் நிலைமையையும் படைவலிமையையும் நன்கு ஆராயாது போருக்கெழுதல் பகைவருக்குப் பாத்தியமைத்து அதில் அவரை நாட்டுவது போல அவர்க்கு நலமாய் முடியும். சொல்திறன் உடையோன் ஒருவன் அறிவுடையோர் முன் பேசுதல் வளரும் செடியின் பாத்தியுள் நீர் சொரிவது போல் பயனுள்ளதாகும். தோட்டம் செய்வோன் பாத்தியமைத்து நிலத்திற்கு உரமிட்டோ மென்மையாக்கியோ ஏற்றதாகச் செய்து செடியை நடுதல் அல்லது விதையையூன்றுதல், வளரும் செடிக்கு நீருற்றுதல் ஆகியவை இங்குக் குறிப்பிடப்பட்டன.

பாத்தியில் நட்டு வளர்க்கப்படுபவை பூச்செடிகளாகவோ காய்கறிச் செடிகளாகவோ பழமரக்கன்றுகளாகவோ இருத்தல் கூடும்.

வள்ளுவர் காலத்தில் மகளிர் மலர்களை விரும்பியணிந்தமையும் ஆடவரும் மலர்மாலை யல்லது கண்ணிசூடிக் கொண்டமையும் முன்பே குறிப்பிடப்பட்டன (இல்லம், வளமான வாழ்க்கை பார்க்க). 'பூவும் புகையும் மேவிய விரையும் பகர்வனர்' (சிலப்பு. 5. 14) எனச் சிலப்பதி காரத்துள்ளும் 'வீங்குநீர் அவிழ்நீலம் பகர்பவர்' (கலி. 66) என்க் கலித் தொகையுள்ளும் பூ விற்பவர் குறிப்பிடப்படுகின்றனர். வள்ளுவர் காலத்திலும் பூந்தோட்டங்கள் அமைப்போரும் பூ விற்போரும் இருந் திருத்தல் கூடும். 'இல்வளர் முல்லையொடு மல்லிகை' (சிலப்பு. 4. 27) எனச் சிலப்பதிகாரத்தில் வரும் தொடர் செல்வர்கள் இல்லங்களிலும் பூச்செடி கொடிகள் வளர்க்கப்பட்டன என்பதைக் காட்டும். பலவகை யினும் தோட்டக்கலை அக்காலத்து வளர்ந்திருத்தல் வேண்டும்.

### 3. 9. உணவு தரும் பிற தொழில்கள்

காவலன் காவா விடின் ஆபயன் குன்றும் என்றார் வள்ளுவர் (560). இதினின்றும் பசுக்களை வளர்த்துப் பயன் கொள்ளல் நாட்டில் ஒரு தொழிலாக இருந்ததெனவும் பசு தரும் பால் ஒரு முக்கிய உணவு வகையாகக் கருதப்பட்டதெனவும் உணரலாம். ஆயர் தொழில் நானி லங்களில் ஒன்றாகிய முல்லை நிலத்துக்குரிய தொழிலாகச் சங்க நூல்கள ளைத்திலும் கூறப்பட்டு 'ஆகாத் தோம்பி ஆப்பய னளிக்கும் கோவலர் வாழ்க்கையோர் கொடும்பாடில்லை' (15, 120 - 121) எனச் சிலப்பதிகாரத்

துள்ளும் போற்றப்படினும் திருக்குறளில் அத்தொழில் பற்றி அதிகம் கூறப்படவில்லை.

> அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
> குழல்போலும் கொல்லும் படை (1228)

எனக் காமத்துப்பாலுள் தலைவி கூற்றாகக் கூறப்படுவதனால் அக்காலத்து ஆயர்கள் இருந்தனர் எனவும் அவர்கள் மாலைப் பொழுதில் பசுக் களுடன் வீடு திரும்பும்போது குழலூதி வருவது வழக்கம் எனவும் தெரிகிறது.

> பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
> கலந்தீமை யால்திரிந் தற்று (1000)

என்ற உவமையால் அக்காலமக்கள் பாலைப் பயன்படுத்தினர் என்பதும் தூயதல்லாத கலத்தில் இடப்பட்டபால் கெடும் என்பதை அறிந்திருந்தனர் என்பதும் தெளிவாகும்.

> சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
> கொல்லப் பயன்படும் கீழ் (1078)

என்பது குறளில் வரும் மற்றொரு உவமையாகும். கீழோர் கரும்பு போல் கொல்லப் பயன்படுவர் என்பது இங்குக் கூறப்பட்டது. இதிலி ருந்து கரும்பு விளைநிலங்கள் இருந்தமையும் கரும்பை வெட்டிச் சாறு கொள்ளும் தொழில் இருந்தமையும் அறியப்படும். பிழியப்பட்ட சாறு வெல்லமாகவோ சர்க்கரையாகவோ காய்ச்சப்பட்டிருத்தல் வேண்டும். கரும்பு பழந் தமிழ்நாட்டில் இருந்த விளைபொருள்களிலொன்றே. அது பலநூல் களில் குறிப்பிடப்படுவதே. கரும்பு விளைநிலங்கள் புறநானூற்றிலும் (புறம். 35) கரும்பு சாறு பிழியப்பட்டுக் காய்ச்சப்படும் ஆலைகள் சிலப்பதி காரத்திலும் (சிலம்பு. 10.151) குறிப்பிடப்படுகின்றன.

வேட்டுவத் தொழிலினின்றும் எடுக்கப்பட்ட உவமை அல்லது பிற அணிகளும் கூடக் குறளில் காணப்படுகின்றன.

> தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
> வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று (274)

> கான முயலெய்த அம்பினில் யானை
> பிழைத்தவேல் ஏந்தல் இனிது (772)

இங்கு முற்கூறிய குறள் பறவைகளைக் கைப்பற்றும் வேட்டுவன் செயலைக் குறிக்கிறது. சிமிழ்த்தல் வாய்மேல் விரலால் எற்றிப் பயில விளித்தல் எனக் காலிங்கர் உரை கூறினர். வேடர்கள் சிறு செடிகளி

னிடையே மறைந்து நின்று பறவைபோல் ஒலிசெய்து அது கேட்டுப் பறவைகள் அருகில் வர அவற்றைப் பிணிப்பது வேட்டைத் தொழிலில் கையாளப்பட்ட ஓருபாயம் போலும். அடுத்த குறள் போரில் வீரமற்ற வர்களை வெல்வது சிறப்பன்று என்ற பொருளில் பிறிது மொழிதல் அணியாக வரினும் அதுவும் அக்காலத்து நடைபெற்ற வேட்டைத் தொழில் முறைகளைக் காட்டுவதே. முயல் முதலிய சிறுவிலங்குகளும் யானைமுதலிய பெருவிலங்குகளும் வேட்டையாடப்பட்டன வென்றும் சிறு விலங்குகளைக் கொல்வதற்கும் வில்லையும் அம்பையும் பயன்படுத் தினர் எனவும் யானை போன்ற பெருவிலங்குகளை வேலெறிந்து கொன் றனர் எனவும் தெரிகிறது. முயல் உண்பதன் பொருட்டே கொல்லப் பட்டிருத்தல் வேண்டும். யானை தோலின் பொருட்டோ தந்தத்தின் பொருட்டோ கொல்லப்பட்டிருக்கலாம். ஆயினும் யானைத்தசையும் பண்டைக் காலத்தில் உண்ணப்பட்டது எனச் சில அறிஞர் கருது கின்றனர்.[9]

ஊன் உண்ணலாகாது என வள்ளுவர் விலக்கினர். ஊனுண் ணுமையைக் கூறுமிடத்து,

தினற்பொருட்டாற் கொல்லா துலகென்னில் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவா ரில் (256)

என்றார். ஊன் உண்பவர்கள் இருப்பதனால் தான் அவர்கள் பொருட்டுப் பிறர் விலங்குகளைக் கொல்கின்றனர். உண்பவர்களும் அவர்க்காக விலங்குகளைக் கொல்பவர்களும் இல்லாவிட்டால் விலைக் காக ஊன் விற்பவர்களும் இருக்கமாட்டார்கள் என்றார். ஊனுணவை யாவரும் விட்டொழிப்பின் ஊன் விற்பாரும் அதற்காக விலங்குகளைக் கொல்வாரும் இல்லா ஒருநிலை நாட்டில் ஏற்படும் என வள்ளுவர் கூறியதனால் அவர் காலத்தில் கொல்வாரும் விற்பாரும் இருந்தமை தெளிவு. 'பைந்நிணவிலைஞர்' என ஊன் விற்போர் சிலப்பதிகாரத் துள்ளும் குறிப்பிடப்படுகின்றனர் (5. 26). வேட்டையாடுதலும் ஊன் உண்டலும் வேட்டையாடிப் பெற்ற விலங்கின் தசையைக் கொடுத்து நெல் முதலியவற்றைக் கொண்டு பண்டமாற்றுச் செய்தலும் புறநானூறு, பத்துப்பாட்டு முதலிய பல நூல்களில் காணப்படும் செய்திகளே.

வேட்டுவத் தொழிலுடன் மீன் பிடிக்கும் தொழிலும் வள்ளுவர் காலத்திருந்தது. அதுவும் ஓர்உவமைமூலம் குறிப்பிடப்படுகிறது.

வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று (931)

---

9. Ibid, P. 291

இங்குத் தூண்டிலிட்டு மீன் பிடிக்கும் வழக்கம் காட்டப்படுகிறது. இங்குப் பொன் என்றது இரும்பையே போலும். பழந்தமிழில் உலோகங்கள் அனைத்துமே பொன் (செம்பொன், வெண்பொன், கரும் பொன்) எனக் குறிப்பிடப்பட்டன. உரையாசிரியர்களும் இருப்பு எனவே பொருள் கொண்டனர். நீண்டகோலில் வளைந்த இரும்பை முனையிற் கொண்ட கயிற்றைப் பிணித்து அவ்விரும்பை இரையால் மறைத்து நீரிலிட்டு இரையொடு சேர்த்து இரும்பை மீன் விழுங்க அம்மீனை இழுத்தெடுப்பதே இங்குச் சுட்டப்பட்ட முறைபோலும்.

பிற்கூறப்பட்ட இம்மூன்று தொழில்களும் (வேட்டுவத்தொழில், ஊன்விற்றல், மீன்பிடித்தல்) வள்ளுவர்காலத் தமிழ்நாட்டில் இருந் தனவே எனினும் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமையையே விரும்பிய அவர்க்கு இவை உடன்பாடற்றவையே. வள்ளுவர் விரும்பும் வகையில் ஒரு சமுதாயம் அமையும் ஆயின் அங்கு இத்தொழில்கள் நடைபெறமாட்டா.

## 3. 10. கடற்றொழில்

வான் சிறப்பைக் கூறுங்கால் வள்ளுவர்,

> நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி
> தானல்கா தாகி விடின் (17)

என்றார். மேகம் மின்னி மழைபொழியாவிடின் நெடிய கடலும் தன் னியல்பு குறையும். இயல்பு கெடும் என்பதற்கு நீரில் வாழ்வனவும் படுவனவும் கெடும் எனப்பொருள் கொள்ளப்படுகிறது. பரிதியார் 'பெருமையான கடலில் சங்கு முத்து பவளம் பிறவாது' என்றார். மணக்குடவர் இக்குறளுக்குப் பொருள் கூறுங்கால் இதனாற் பொருட் கேடு கூறப்பட்டது எனக் குறிப்பிட்டார். இக்குறளினின்றும் அக்காலத் தமிழ்மக்கள் கடலினின்றும் ஏதோ பயன்கொண்டனர் என ஊகிக்கலாம். கடலில் மீன் பிடிக்கும் தொழில் நடைபெற்றிருத்தல் கூடும். கடலினின்று சங்கு முத்து பவளம் ஆகியவற்றை எடுக்கும் தொழிலும் நிகழ்ந்திருத்தல் கூடும். வலை ஒரு குறளில் குறிப்பிடப்படுகிறது.

> தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
> வலைப்பட்டார் மற்றை யவர் (348)

துறவாதோர் வலையிலகப் பட்டவர் போலாயினர் என இங்குக் கூறப் படுவதால் உயிர்ப் பொருள்களை வலையில் அகப்படுத்துதல் அக்காலத்து அறியப்பட்டிருந்ததே. வலை வேடர்கள் விலங்கு பறவை யாகிய வற்றைப் பிடிப்பதற்கும் பயன்பட்டிருக்கலாம். பரதவர்கள் கடலில்

வீசி மீன்களைப் பிடிப்பதற்கும் வலை பயன்பட்டிருக்கலாம். மீன் பிடித்தல் முதலியன நெய்தல் நிலத்திற்குரிய தொழிலாகச் சங்க நூல்கள் பலவற்றில் காணப்படினும் அதைப் பற்றிய குறிப்புக்கள் அதிகம் குறளில் இல்லை.

'கடலோடும் நாவாய்' (496) எனப் பெருங்கப்பல்களும் 'கலன்' (605) எனக் கப்பல் அல்லது படகுகளும் குறளில் குறிப்பிடப்படுகின்றன. புணையும் பன்முறை குறிப்பிடப்படுவதே. வாணிபத்தின் பொருட்டோ மீன் பிடித்தல், சங்கு முத்து எடுத்தல் முதலிய தொழில்களின் பொருட்டோ மக்கள் கப்பலிலும் படகிலும் சென்றிருத்தல் கூடும்.

உப்பெடுக்கும் தொழிலைப் பற்றியும் திருக்குறளில் குறிப்புக்கள் இல்லை. ஆனால் உப்பு பலமுறை குறிப்பிடப்படுகிறது.

## 3. 11. கட்டடக் கலையும் தச்சுத் தொழிலும்

கட்டடக் கலையைக் குறித்த விபரமான குறிப்புக்கள் குறளில் இல்லை. தூண் சில குறள்களில் (615, 983) குறிப்பிடப்படுகிறது. இவை 'ஊன்றும் தூண்' 'ஊன்றிய தூண்' எனப் பாரத்தைப் பொறுப்பனவாகக் குறிப்பிடப்படுகின்றன. வீடுகள் அல்லது மண்டபங்கள் கட்டுமிடத்துத் தூண்கள் அமைத்துக் கூரையின் அல்லது மேற்கட்டின் பாரம் அத்தூண்களில் பொறுக்கும்படி செய்யும் முறை அக்காலத்திருந்தது.

வெண்மை, 'வான்சுதை வண்ணம்' எனக் குறளில் (714) குறிப்பிடப்படுவதால் கட்டிடங்களின் மேல் வெண்சுதை (சுண்ணாம்பு) தீட்டும் வழக்கம் அக்காலத்தும் இருந்தது எனக் கருத இடம் உண்டு.

நுண்மாண் நுழைபுலம் இல்லா னெழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று (407)

என்னும் குறளில் மண்ணினால் புனையப்பட்ட சிறந்த பாவை குறிப்பிடப்படுகிறது. இது கட்டிடங்களின் மேல் அழகுக்காகப் புனையப்பட்ட பாவைகளைக் குறிக்குமா பிற இடங்களில் தனியாகப் பாவைகளைச் செய்து வைத்தனரா என்பது தெரியவில்லை. மண்ணினால் பாவையமைக்கும் கலை அக்காலத்திருந்ததென்பதே அறியப்படுவது.

எவ்வகை யுயிர்களும் உவமங் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய
கண்கவர் ஓவியம் கண்டுநிற் குநரும் (மணி 3. 129-131)

எனக் கட்டிடங்களின் மேல் வெண்சுதை தீட்டுவதும் ஓவியங்கள் புனைவதும் மணிமேகலையுள்ளும் குறிப்பிடப்பட்டன.

தச்சுத் தொழிலைச் சார்ந்த பல செயல்கள் உவமைகள் மூலம் குறிப்பிடப்படுகின்றன. அத்தொழிலில் பயன்படும் கருவிகளைப் பற்றிய குறிப்புக்களும் திருக்குறளில் இடையிடையே காணப்படுகின்றன.

இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லா ளிலாத குடி (1030)

குடும்பத்தின்பொருட்டு உழைக்கும் . முயற்சியுடையோர் இல்லாத குடி அழிவது இங்கு வெட்டப்பட்டு விழும் மரமாக உருவகிக்கப்பட்டது. 'இடுக்கண் கால் கொன்றிட வீழும்' என்னும் தொடருக்குத் 'துன்பமாகிய நவியம் புகுந்து தன்முதலை வெட்டிச் சாய்க்க ஒரு பற்றின்றி வீழாநிற்கும்' எனப் பரிமேலழகர் உரை கூறினர். இவ்வணி மரம் வெட்டும் தொழிலினின்றும் பிறந்ததே.

நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின் (334)

இதுவும் மரம் அறுக்கும் தொழிலினின்றும் பிறந்த அணியே. நாள் உயிரை (உயிர் வாழ்க்கையை, வாழ் நாளை) ஈர்ந்து செல்லும் வாளைப் போன்றுள்ளது. இங்குக் குறிப்பிடப்பட்ட வாள் மரமறுக்கும் வாளே, தான் அறுக்கும் பொருளைச் சிறிது சிறிதாக ஈர்ந்தறுப்பது அதுவே. 'ஈர்வாள்' என்றார் காலிங்கர்.

மரங்களை வெட்டிச் சாய்க்கும் கோடரி போன்ற கருவிகளும் வெட்டிய மரத்தை யறுக்கும் ஈர்வாள்களும் அக்காலத்துப் பயன் பட்டன.

காமக் கணிச்சி யுடைக்கும் நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு (1251)

இங்கு நிறை கதவாகவும் காமம் அதையுடைக்கும் கணிச்சி யாகவும் உருவகிக்கப்பட்டன. மரத்தையுடைக்க அல்லது பிளக்கக் கணிச்சியென்னும் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. முன்பே குறிப்பிடப்பட்ட அளக்குங்கோல்களும் கட்டடக் கலையிலும் தச்சுத்தொழிலிலும் பயன்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு தச்சுத் தொழிலுக்குரிய கருவிகள் குறிப்பிடப்படுவதுடன் குறளில் குறிப்பிடப்படும் வேறு பல பொருள்கள் தச்சுத் தொழில் வல்லோராலேயே செய்யப்பட்டிருத்தல் வேண்டும். 'கால்வல் நெடுந்தேர்' (496) 'உருள் பெருந்தேர்' (667) எனத் தேர்கள் குறிப்பிடப்பட்டன. இரு குறள்களில் (667, 1032) அச்சாணி குறிப்பிடப்பட்டது. அச்சு என்பது தேரின் இரு உருளைகளும் கோக்கப்படும் மரம் அச்சாணி உருளை கழலாதவாறு அச்சு

மரத்தின் இருகோடிகளிலும் செறிக்கப்படும் ஆணியாகும். அது சிறிதாக இருப்பினும் தேருக்கு மிக முக்கிய உறுப்பாகிறது. சிலர் உருவத்தால் சிறியவரெனினும் தேரின் அச்சாணிபோல் பயன்படுவர் என்றார் ஆசிரியர். உழுவோர், சமுதாயமாகிய தேருக்கு அச்சாணி போல்வர் எனவும் வள்ளுவர் கூறினர். தேர் செய்யும் தொழில் அக்காலத்து நன்கு அறியப்பட்டிருந்த ஒன்றே. கடலோடும் நாவாய், கலன் எனக் கப்பலும் படகும் குறிப்பிடப்பட்டமை முன்பே சுட்டப்பட்டது. மக்கள் ஏறிச் செல்லும் சிவிகையும் (37) பண்டங்கள் ஏற்றப்படும் சாகாடும் (475) குறளில் குறிப்பிடப்படுகின்றன. இவையனைத்தும் அவ்வவற்றைச் செய்வதில் பயிற்சியும் திறமையுமுள்ள தச்சுத் தொழில் வல்லோராலேயே செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தேர் செய்வோர் தச்சர் எனவே புறநானூற்றினுள்ளும் குறிப்பிடப்படுகின்றனர். (வைகல் எண்டேர் செய்யும் தச்சன், புறம். 87). அக்காலத்துக் கப்பல்களும் படகுகளும் மரத்தாலேயே செய்யப்பட்டன.

செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை யுற்ற குடி (887)

மூடியையுடைய செப்பு இங்குக் குறிப்பிடப்பட்டது. செப்பும் மூடியும் நன்ருகப் பொருந்தினும் அவை ஒன்ருகா. வெவ்வேருகப் பிரித்தெடுத்தல் கூடும். அது போல் உட்பகையுற்ற குடியும் சேர்ந்திருப்பது போலத் தோன்றினும் எளிதில் பிரிந்துவிடும் என இங்கு உவமை கூறப்பட்டது. நன்ருகப் பொருந்தும் மூடிகளையுடைய செப்புக்கள் அக்காலத்துப் பயன்பட்டன. இவை மரத்தினலோ உலோகப் பொருள்களினலோ செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

உழவுத் தொழிலைச் சிறப்பிக்கும் திருக்குறளில் ஏர் பன்முறை குறிப்பிடப்படுவதே. உழுகருவியும் அக்காலத்து மரத்தினலேயே செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

சிறியனவும் பெரியனவும் ஆகித் தொழில்வளந்தரும் கருவிகளும் நுண்ணிய வேலைப்பாடு அமைந்த ஊர்திகளும் பிறவும் எனப் பல பொருள்களைச் செய்வதில் அக்காலத் தச்சர் திறமை பெற்றிருந்தனர்.

மண்ணெ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர் (576)

என்பது ஒரு குறள். மண்ணோடியைந்த மரம் என்பதற்குப் பல பொருள்கள் கூறப்படுகின்றன. 'மண்ணெடியைந்தமரம்' சுதைமண்ணெடு கூடிய மரப்பாவையைக் குறிப்பதாகக் கொண்டார் மணக்

குடவர். அவ்வாறயின் அது மண்ணினல் பாவை செய்யும் கலையையே குறிக்கும். மரத்தை யுள்ளீடாகக் கொண்டு மேலே மண் பூசிப் பாவை செய்யும் கலை போலும். மண்மேல் எழுதிய சித்திரத்தில் காணப்படும் மரமே 'மண்ணேடியைந்த மரம்' எனப் பரிதியாரும் காலிங்கரும் பொருள் கொண்டனர். அவ்வாறயின் அது சுவர் முதலியவற்றின் மேல் சித்திரம் தீட்டும் கலையைக் குறிக்கும்.

தற்காலத்து டாக்டர் துரையரங்கனர் சுந்தரர் பாடலைப் பற்றிய தம் ஆராய்ச்சி நூலில் கோயில் கலையை விளக்குமிடத்துப் பண்டைக் காலத்துக் கோயில்கள் மரத்தினல் அமைக்கப்பட்டனவென்றும் செங்கல்லினல் கோயிலெழுப்பிச் சுதை பூசும் வழக்கம் சற்றுப் பின்பே ஏற்பட்டதென்றும் கூறி இக்குறளைக் குறிப்பிட்டு 'மண்ணேடியைந்த மரம்' என்பது மரத்தினலாகிய கோயில் முதலியன சிதைந்த விடத்து அவற்றுக்கு மேல் சுதை மண்ணிட்டுப் பழுது பார்க்கப்பட்டுப் புதுப் பிக்கப்பட்ட நிலையைக் குறிக்கும் போலும் என்ருர்.[10] அவ்வாறயின் அது தச்சு வேலையும் கட்டிட வேலையும் இணைந்த ஒருதொழிலே யாகும்.

## 3. 12. கொல்லர் தொழில்

சங்க காலத்திலும் சங்கமருவிய காலத்திலும் பலவகை உலோகத் தொழில்களும் தமிழ்நாட்டில் பயிலப்பட்டன. இரும்புக் கொல்லரையும் பொற்கொல்லரையும் அவர்கள் பயன்படுத்திய சிலகருவிகளையும் பற்றிய குறிப்புக்கள் திருக்குறளில் உள.

கொல்லர்கள் உலோகத் தகடுகளை அல்லது உலோகத்தினல் தாம் செய்யும் பொருள்களைப் பட்டடையில் வைத்து அடித்து வேண்டிய வடிவம் பெறச் செய்தனர். எறிதற்கு (பொருளை வைத்து அடித்தற்குதவும்) பட்டடை திருக்குறளில் குறிப்பிடப்படுகிறது (821). இருப்புப் பொருள்களைத் தேய்த்து ஏற்ற வடிவம் பெறச் செய்வதற்கு அரம் என்னும் கருவியைப் பயன்படுத்தினர் எனத் தெரிகிறது. இவ் வரமும் குறளில் பன்முறை குறிப்பிடப்படுவதே.

---

10. Dorairangasamy, M.A., The Religion and Philosophyof Tevaram, Book I Chap I, Rise of the Temple Cult in Saivaism, P. 8.

"Tirukkural also takes us back to an anterior period when instead of bricks, wood was used. When the plastering art developed and constructions in brick grew in number, the old decaying wood works were also probably plastered for restoring former shape. This leads to a new art of plastering on wooden frame as skeleton. It is this which is referred to according to some commentators in the kural which speaks of such artistic works: Mannotiyainta maram."

அரம்போலும் கூர்மைய ரேனும் (997)

என அரத்தின் கூர்மையும்,

கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம் (567)

அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொரு
துட்பகை யுற்ற குடி (888)

எனப் பிற பொருள்களைத் தேய்க்கும் அதன் ஆற்றலும் கூறப்பட்டன. பிற கருவிகளைத் தேய்த்துக் கூர்மை செய்வதற்குக் கொல்லர் அரத்தைப் பயன்படுத்தினர் என்பதை,

கருங்கைக் கொல்லன் அரஞ்செய் அவ்வாய்
நெடுங்கை நவியம் (புறம் 36. 6 - 7)

(வலியகையையுடைய கொல்லன் அரத்தினால் தேய்த்துக்கூராக்கிய அழகிய வாயையும் நீண்ட பிடியையும் உடையகோடரி) என வரும் புறநானூற்று அடிகளாலும் அறியலாம்.

வில், வேல், வாள் ஆகிய போர்க்கருவிகள் வள்ளுவர் காலத்துத் தமிழ் மக்களால் பயன்படுத்தப்பட்டமை முன்பே குறிப்பிடப்பட்டது (படைத்தொழில் பார்க்க). வில்லில் தொடுக்கும் அம்பும்,வாள், வேல் ஆகியனவும் கொல்லர்களாலேயே செய்யப்பட்டன. மற்றும் தச்சுத் தொழிலுக்கு வேண்டிய கோடரி, ஈர்வாள் முதலியனவும் உழவுத்தொழிலோர் கதிரறுக்கும் அரிவாளும் கொல்லர்களாலேயே செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு (267)

என்ற குறள் மூலம் பொற்கொல்லர் பொன்னைத் தீயிலிட்டுத் தூய்மை செய்தல் குறிப்பிடப்பட்டது. தீயிலிடப்பட்ட பொன் மாசு நீங்கப் பெறுவதால் முன்னிலும் அதிகமாக ஒளிரும்.

பொற்கொல்லர் பொன்னை உரைத்து மாற்று அறிவதற்கு (அது கலப்பில்லாத தூய பொன்னா அன்றா என அறிவதற்கு) உரைகல்லைப் பயன்படுத்தினர் எனத் தெரிகிறது. அது கட்டளைக் கல் எனப்படும். இக்கட்டளைக்கல்லும் குறளில் இரு இடங்களில் குறிப்பிடப்பட்டது (505, 986).

வள்ளுவர்காலத் தமிழ்நாட்டில் மகளிர் குழை, வளை, தொடி முதலிய பல அணிகலன்களை அணிந்தமை **காமத்துப்பாலினின்றும்** அறியப்படுகிறது.

சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து (777)

என்னும் குறளினுல் வீரர்கள் காலில் கழல் அணிந்தனர் என அறியலாம். செல்வர்கள் இத்தகைய அணிகலன்களைப் பொன்னினுலும் பிறர் வேறு உலோகங்களினுலும் செய்து அணிந்தனர் போலும். இவற்றைக் கொல்லர்களே இயற்றியிருத்தல் வேண்டும்.

## 3. 13. குயவர் தொழில்

வள்ளுவர் காலத்தில் தமிழ்மக்கள் மட்கலங்களைப் பயன்படுத்தினர். மண்ணுல் பொருள்கள் செய்யும் தொழில் நாட்டில் இருந்தது. இதையும் குறளில் வரும் சில குறிப்புக்களினுல் உணரலாம்.

சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள் நீர் பெய்திரீஇ யற்று (660)

என்ருர் வள்ளுவர். தீய வழியில் செல்வத்தைச் சேர்த்து அதைப் பாதுகாக்க எண்ணுதல் பசுமண்ணினுலாகிய கலத்தில் நீரைச் சொரிந்து பாதுகாத்து வைக்கமுயன்றதை யொக்கும். மண்ணினுல் கலங்கள் புனைந்து அவற்றை நெருப்பிலிட்டு உறுதிப்படுத்தும் தொழில் அக்காலத்திருந்தது. மட்கலங்களைச் சுட்டுத் திடமாக்கும் பழக்கம் இருந்ததனுலேயே பசுமட்கலம் எனச் சுடப்படாத கலம் பிரித்துக் கூறப்பட்டது.

குயவர்கள் மட்கலங்களை ஏற்ற அளவோடு அறுப்பதற்கு ஒரு சிறுகருவியைப் பயன்படுத்தினர். அது மட்பகையெனப்பட்டது. அதுவும் குறளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும் (883)
வேட்கோச் சிருஅர் தேர்க்கால் வைத்த
பசுமட் குரூஉத்திரள் போல (புறம் 32.8-9)

எனக் குயவர் தொழில் புறநானூற்றுள்ளும் குறிப்பிடப்படுகிறது.

## 3. 14. பளிங்கு மணி செய்தல்

மணியுள் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியுள் திகழ்வதொன் றுண்டு (1273)

இக்குறள் நூலால் கோத்து அணியப்படும் மணியைக் குறிப்பிடுகின்றது. 'மணியுள் திகழ்தரும் நூல்போல்' என மணியினூடே

உட்கோக்கப்பட்ட நூல் புலப்படுதல் குறிப்பிடப்படுவதனால் அது பளிங்கு மணியாகவேயிருத்தல் வேண்டும். 'கோக்கப்பட்ட பளிங்கு மணியகத்துக் கிடந்து புறத்துப் புலனும் நூல் போல' எனப் பரிமேலழகரும் உரையெழுதினர். பளிங்கு மணிநூலில் கோத்து அணியப்படுதல் குறிப்பிடப்படவே மணி செய்யும் தொழில் நாட்டில் இருந்தமையும் பெறப்படும்.

புதுவை நகரருகில் அரிக்கமேடு என்னுமிடம் புதைபொருளாய் வாளரால் அகழப்பட்டபோது அங்கு ஏராளமான மணிகளும் மணி செய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட ஒருவகை நிறக்கற்களும் காணப் பட்டன. அவ்விடத்து ஒரு மணி செய்யும் தொழிற்சாலையே இருந்திருத்தல் வேண்டுமெனப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் கருதினர்.[11] 'திரு மணி குயிற்றுநர்' என மணி செய்வோர் சிலப்பதிகாரத்துள்ளும் குறிப்பிடப்பட்டனர் (சிலப்பு 5·46). வள்ளுவர் காலத்திலும் மணி செய்யுந்தொழில் இருந்தது எனக் கொள்ளல் பொருந்துவதே.

## 3. 15. கிணறு வெட்டுதல்

பண்டைத் தமிழ்மக்கள் சில இயல்பான நீர் நிலைகளினின்றும் நீர் எடுத்தாராயினும் கிணறு வெட்டும் தொழிலும் அக்காலத்திருந்ததே.

> தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு (396)

இங்குக் கற்குந்தோறும் அறிவு பெருகுதல் அகழ அகழக் கிணற்றில் நீர் பெருகுதற்கு ஒப்பிடப்பட்டது. கிணறு வெட்டுதலும் அக்காலத்து ஒரு தொழிலாக நடைபெற்றது போலும்.

கிணறு வெட்டுவோர் கூவலர் எனக் குறிப்பிடப்பட்டனர் என்பதும் அவர் கணிச்சி என்னும் கருவியைப் பயன்படுத்தினர் என்பதும்,

---

11. அரிக்கமேட்டில் புதைபொருள் ஆய்வாளரால் அகழப்பட்ட இடம் இவ்வாய்வை எழுதும் ஆசிரியர் நேரில் கண்டதே. பண்டைத்தமிழகத்தில் நிறக்கற்களினின்றும் மணி செய்யும் தொழில் இருந்தமையை வரலாற்றாசிரியர்களும் குறிப்பிடுகின்றனர்.

Pillai, K.K., Social History of the Tamils, Part I, P. 76: 'Intensive explorations conducted in the District of Tanjavur have revealed a number of coastal sites datable to the beginning of the Christian era as evidenced by the finds of rouletted ware, black and red ware and beads of semi-precious stones like jasper, chalcedony and agate."

பரல்மண் சுவல் முரண்நிலம் உடைத்த
வல்வாய்க் கணிச்சிக், கூழ்ஆர் கூவலர்
ஊறுது இட்ட உவலைக் கூவல் (அகம். 21.21-23)

என்ற அகநானூற்று அடிகளால் அறியப்படும்.

## 3. 16. யானைகளைப் பிடித்துப் பழக்கும் தொழில்

பண்டைத் தமிழகத்தில் யானைகளும் குதிரைகளும் போருக்கும் ஏறிச் செல்வதற்கும் பிற தொழில்கட்கும் பயன்படுத்தப்பட்டன. குதிரைகள் வெளிநாட்டிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தமிழ்நாட்டுக் காடுகளில் யானைகள் வாழ்ந்தன. அவை பிடித்துப் பழக்கப்பட்டன. சிலப்பதிகாரத்தில் கோவலனும் கண்ணகியும் மதுரையை நெருங்கிய போது கேட்ட பலவித ஒலிகளைக் கூறுமிடத்துப் 'போரிற் கொண்ட பொருகரி முழக்கமும் வாரிக் கொண்ட வயக்கரி முழக்கமும்' என யானைகளை இருவகையாகக் கூறி அவற்றின் ஒலியை இளங்கோ குறிப்பிட்டார். 'வாரிக் கொண்ட வயக்கரி' என்பதற்குக் காட்டில் பிடித்துக் கொண்டு வந்தவலிய யானை எனப் பொருள் கூறப்படுகிறது.

நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத்
துரவுச்சினம் தணித்துப் பெருவெளிற் பிணிமார்
விரவுமொழி பயிற்றும் பாக ரோதை (325-327)

என மலைபடுகடாம் யானைகளைப் பிடித்துப் பழக்கும் தொழிலைக் குறிப்பிடுகிறது. யானைகளின் வலிய சினத்தைத் தணியும்படி செய்து அவற்றைப் பெரிய கம்பங்களில் பிணிக்கும் பாகர் அவை ஏவல் செய்யப் பழகுமாறு சில சொற்களைச் சொல்லிப் பழக்கினர் என்பதே இவ்வரிகளில் கூறப்பட்டது.

பாகர் காட்டானைகளைப் பிடித்துப் பழக்குவதற்குப் பழகிய யானைகளைப் பயன்படுத்தினர் என்பது ஒரு குறளினின்றும் தெரிய வருகிறது.

வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று (678)

இக்குறளுக்குக் காலிங்கர் கூறிய உரை வருமாறு - "ஒரு கருமத்திற்கு வேண்டும் பொருள் சேர்த்து நிறைவு செய்து பின் அக்கருமத்தானே வேண்டிய கருமத்தை ஆக்கிக் கோடல் எத்தன்மைத்தோ எனின், மதத்தினாலே நனையும் கபோல நன்மைக்கு உரியது ஓர் அண்ணல் யானையை ஆர்த்தற்கு வேண்டும் பொருள் சேர்த்துப் பின்மற்று

அதனாலே வேறு அடவியுள் வாழும் யானைபலவற்றையும் தன்கண் பிணித்துக் கொள்ளுகிற அத்தன்மைத்து என்றவாறு".

முதலில் ஒரு யானையைப் பிடித்துப் பின் அதன் உதவியால் வேறு யானைகளையும் பிடிக்கும் முறை இங்குக் கூறப்பட்டது.

யானைப்பாகர்கள் யானையை யடக்கத் தோட்டி என்னும் கருவியைப் பயன்படுத்தினர் எனத் தெரிகிறது. நீத்தோர் உள்ள-உறுதி (உரன்) என்னும் தோட்டியால் ஐம்புலன்களாகிய யானைகளை அடக்குவர் என ஓர்உருவகம் திருக்குறளுள் கூறப்படுகிறது (24). யானைகளை வளர்ப்போர் யானைகட்கு முகபடாம் அணிவித்தனர். 'கடா அக் களிற்றின்மேல் கட்படாம்' (1087) என அவ்வணியும் குறிப்பிடப் பட்டது. முகபடாம் அல்லது கட்படாம் அழகுக்காகவோ அன்றி யானையை நெறியில் செலுத்துதற்கு உதவியாகவோ இடப்பட்டது போலும்.

## 3. 17. வள்ளுவர் விரும்பாத சில தொழில்களும் பொழுது போக்குகளும்

வள்ளுவரால் விரும்பப்படாத சில தொழில்களும் பொழுது போக்குகளும் கூட அவர்காலத்தில் இருந்தன. அவற்றைப் பற்றிய குறிப்புக்களையும் திருக்குறளில் காணுதல் கூடும்.

### 3. 17. 1. வரைவின் மகளிர் தொழில்

வரைவின் மகளிர் திருமணம் செய்யத்தகாதோர் என விலக்கப் பட்டவராவர். அவர்கள் ஆடல் பாடலையும் தம்மை அழகு செய்து கொள்ளும் கலையையும் சிறு வயதிலிருந்து பயின்றனர் எனச் சிலப்பதிகாரம் போன்ற பிற நூல்கள் கூறுகின்றன. அவர்களின் ஆடல் பாடல்களைக் குறித்து வள்ளுவர் கூறவில்லை. வரைவின் மகளிர் தம்மை விரும்பிவரும் ஆடவரைச் சேர்ந்து அவரிடமிருந்து பொருள் பெற்றனர். இதையே வள்ளுவர் எடுத்துக்கூறி அத்தகையோரிடம் ஆடவர் செல்லலாகா தென்றூர்.

வள்ளுவர் வரைவின் மகளிரைப் 'பொருள் விழையும் ஆய் தொடியார்' (911) 'பொருட்பெண்டிர்' (913) 'பொருட்பொருளார்' (914) என அழைப்பதினின்று அவர்கள் தம்மை நாடிவரும் ஆடவர்களி டமிருந்து பொருள் பெற்றமை தெளிவாகும். 'இன்சொல் இழுக்குத் தரும்' (911) 'பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பில் மகளிர்' (912) என்னும் தொடர்கள் அவர்கள் பிறரைக் கவர்தற்பொருட்டு இனிய

சொற்களைப் பேசுவர் என்பதைக் காட்டும். அவர்கள் 'ஆய்தொடியார்' (911) 'மாணிழையார்' (919) எனக் குறிப்பிடப்படுதல் அவர்கள் நல்ல அணிகலன்கள் அணிவது வழக்கம் என்பதையும் உணர்த்தும்.

### 3. 17. 2. கள்பதம் செய்தலும் விற்றலும்

வள்ளுவர் எழுதிய கள்ளுண்ணமை என்னும் அதிகாரம் அக்காலத்து அளவுக்குமிறிக் கள்ளுண்போர் பலர் இருந்தனர் என்பதையே காட்டுகிறது. பலவிதமான கள் அல்லது மது வகைகள், சங்க கால அல்லது சங்க மருவிய கால மக்களால் உண்ணப்பட்டன. 'நீடமை விளைந்த தேக்கள் தேறல்' (முருகு. 195) 'திருந்தமை விளைந்த தேக்கட் டேறல்'(மலை.522) என மூங்கில்குழாய்களில் சேமித்து வைக்கப் பட்டு விளைந்து பதமாகிய தேனுலான கள் பத்துப்பாட்டில் குறிப்பிடப் பட்டது. அகநானூறு முதலிய பிற சங்கநூல்களிலுங் கூட இவ்வகைக் கள் குறிப்பிடப்படுவதே. 'கரும்புகைச் செந்தீ மாட்டி ... ... நுளைமகள் அரித்த பழம்படு தேறல்' என நெருப்பில் காய்ச்சப்பட்ட ஒருவகைக் கள்ளும் பத்துப்பாட்டில் (சிறுபாண். 156-159) சுட்டப்பட்டது. 'பேரூர் அட்டகள்' (பெரிய ஊரின் கண்ணே அடப்பட்ட கள்) எனக் காய்ச்சப் படும் கள் புறநானூற்றினுள்ளும் (300.5) கூறப்பட்டது. 'கொழுமடற் றெங்கின் விளைபூந் தேறல்' எனத் தென்னை மரத்தினின்றும் இறக்கப் பட்ட கள்ளை மணிமேகலை (3.98) கூறுகிறது. நாட்டில் செய்யப்பட்ட இவற்றிெடு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மதுவும் அரசரால் பயன்படுத்தப்பட்டதை 'யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்' என்ற புறநானூற்று வரியால் (56.18) அறியலாம். யவனர்களின் நல்ல மரக்கலங்கள் கொண்டு வந்த குளிர்ந்த நறுமணமுள்ள தேறல் திராட்சைப் பழச்சாற்றினின்றும் செய்யப்பட்டதாகவே இருத்தல் வேண்டும். ஏனெனில் அத்தகைய மதுவே மத்தியதரைக் கடலைச் சூழ்ந்த நாடுகளில் அக்காலத்தில் பெரிதும் உண்ணப்பட்டது.

வள்ளுவர் கள்ளுண்ணமை என்னும் பத்தில் கள்ளின் வகைகளைக் குறிப்பிடாது பொதுவாகவே கூறினர். ஆயினும் குறளில் பிற இடத்து 'அடுநறு' (1090) எனக் காய்ச்சப்படும் கள் குறிப்பிடப்பட்டது. வள்ளுவர் காலத்தில் கள்ளைப் பலர் விரும்பியுண்டனர். அளவுக்கு மீறி உணர்வு கெடும் வரையில் உண்டோரும் (925) கள்ளையுண்டு போதையில் உளறித்திரிந்தோரும் (923, 930) இருந்தனர் என்பதைக் கள்ளுண்ணமை என்னும் பத்தில் வரும் குறள்கள் காட்டும். உண்பவர் அதிகமாக இருக்கவே கள்ளைப் பதம்செய்வோரும் விற்போரும் இருந்தமை பெறப்படும். கள்ளுண்டோர் அனைவரும் தாமாகக்

கள்ளைச் செய்து உண்ணவில்லை, பொருள் கொடுத்து வாங்கியே உண்டனர் என்பதை,

> கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
> மெய்யறி யாமை கொளல் (925)

என்ற குறள் தெளிவாக்கும். தன்னறிவு கெடத்தக்க மயக்கத்தைத் தரும் கள்ளை மக்கள் பொருள் கொடுத்து வாங்கி உண்கின்றனரே, இது எத்தகைய பேதைமை என வள்ளுவர் இங்கு இரங்கிக் கூறுகிறார். ஆகவே விற்போரும் இருந்தமை தெளிவு. 'கள் நொடை யாட்டியர்' எனக் கள் விற்கும் மகளிர் சிலப்பதிகாரத்துள்ளும் குறிப்பிடப்பட்டனர் (சிலம்பு. 5.24).

கள்ளைப் பதம்செய்து விற்போருக்கு அது தொழில். உண்போருக்கு அது ஒரு விதப் பொழுதுபோக்கு.

### 3 17.3. சூது

சூதைச் சிலர் பொழுது போக்காகக் கொண்டனர் என்பது சூது என்னும் பத்தினின்று தெரியவருகிறது.

> பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
> கழகத்துக் காலை புகின் (937)

என வள்ளுவர் எச்சரிப்பதனால் கழகம் எனப்படும் சூதாடும் இடங்கள் இருந்தனவெனவும் சிலர் காலையிலேயே அவ்விடங்கட்குச் சென்று அவ்வாட்டத்தில் ஈடுபட்டு நாள் முழுதும் அங்கிருந்தனர் எனவும் ஊகிக்கலாம். சூதாடுவோர் கவறு என்னும் கட்டையை எறிந்து அது விழுந்த இலக்கத்தைக் கொண்டு வெற்றியையும் தோல்வியையும் ஏற்று ஆடுவர் போலும். 'உருளாயம் ஓவாது கூறின்' (933) என்னும் தொடர் ஆடுவோர் கவறு விழுந்த இலக்கத்தை உரக்கச் சொல்லி ஆடுதலைக் குறிக்கும். சூதாடுவோர் ஒன்றெய்தி நூறிழப்பர் என வள்ளுவர் கூறினார். ஆயினும் சூதில் ஒருவர் பொருள் இழந்தால் மற்றொருவர் அதையடைவதாகவே அமையும். கழகம் எனச் சூதாடுகளம் குறிப்பிடப்படுவதனால் தற்காலத்திலும் மேல்நாடுகள் சிலவற்றில் நிகழ்வது போலச் சூதாடுகளங்களை அமைத்து நடத்துபவர்கள் சிலர் இருந்தனரா அவர்கள் பொருள் பெற ஆடச் செல்வோர் பொருள் இழந்தனரா என எண்ண இடமுண்டு. எவ்வாறாயினும் அது சிலருக்கு ஒரு பொழுது போக்காக இருந்தது.

### 3.17.4. வழிப்பறி

வேலொடு நின்ரான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்ரான் இரவு (552)

அரசன் குடிமக்களிடம் (இறுக்க வேண்டிய இறையையொழிய வேறு) பொருள் வேண்டுதல் தகாது எனக் கூறவந்த வள்ளுவர் அது வேலொடு நின்ரான் இடு என்றது போலும் என்ருர். 'ஆறலைக்கும் இடத்துத் தனியே வேல் கொண்டு நின்ற கள்வன், ஆறு செல்வானை நின் கைப்பொருள் தா என்று வேண்டுதலோடு ஒக்கும், ஒறுத்தல் தொழிலோடு நின்ற அரசன் குடிகளைப் பொருள் வேண்டுதல் என்றவாறு' எனப் பரிமேலழகர் இக்குறட்குப் பொருள் கூறினர். இவ்வாறு வழிப்பறிச் செய்வோர் சிலரும் வள்ளுவர் காலத்து இருந்தனர் போலும். பத்துப்பாட்டு கலித்தொகை யாகிய பிறசங்கநூல்களிலும் ஆறலை கள்வர் குறிப்பிடப்படுகின்றனர்.

வள்ளுவர் விரும்பும் வகையில் ஒரு சமுதாயம் அமையின் இப்பகுதியில் குறிப்பிடப்பட்ட இந்நான்கு தொழில்களும் அதில் இடம் பெரு.

## 3. 18. ஏவலாளர், பிறர் பொருட்டுத் தொழில் செய்வோர்

'முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்' (619) என்ருர் வள்ளுவர். கூலி என்னும் சொல் குறளில் பயன்படுத்தப்படுதலால் கூலியின் பொருட்டு வேலை செய்வோர் அக்காலத்து இருந்தனர் எனக் கொள்ளலாம்.

பிறர் இல்லத்தில் பணி செய்வோர், பிறர் பொருட்டு வேலை செய்து ஊதியம் பெறுவோர் ஆகியோர் பல வகையினர் அக்காலத் திருந்தனர் எனத் தெரிகிறது.

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானெ டூர்ந்தா னிடை (37)

சிவிகையில் ஏறிச் செல்வோரும் சிவிகையைத் தாங்கிச் செல்வோரும் இக்குறளில் குறிப்பிடப்படுகின்றனர். இக்குறளுக்குப் பல விதமாகப் பொருள் கூறப்படுகிறது. சென்ற பிறவியில் அறம் செய்தோர் இப்பிறவியில் சிவிகையில் ஏறிச்செல்ல, சென்றபிறவியில் அறம் செய்யாதோர் இப்பிறவியில் சிவிகை தூக்கிச் செல்லும் ஏவலாளர் ஆயினர் எனவும் சிவிகையில் சிலர் ஏறிச்செல்லச் சிலர் தூக்கிச் செல்லினும் இருவரும் அறத்தையே செய்கின்றனர், வாழ்க்

கையில் எந்நிலையில் இருப்பினும் அவரவர் கடமையைச் செய்வதே அறம் எனவும் சிவிகையில் ஏறிச் செல்வோர் சமுதாயத்துக்குப் பாரமாக இருந்து சுகவாழ்க்கை வாழ்கின்றனர், ஆகையினால் அவர்களே அறம் செய்யாதார், தாங்குவோர் முயன்று உழைப்பவர் ஆகையினால் அவரே அறஞ்செய்வோர் எனவும் பலவகை விளக்கங்கள் பலரால் தரப்படுகின்றன.

எவ்வாறு விளக்கம் கூறினும் சிவிகை தாங்கிச் செல்லும் தொழிலாளர் அக்காலத்து இருந்தனர் என்பதே இங்குக் கருதப்படவேண்டியது.

பண்டங்களை ஏற்றிச் செல்லும் சாகாடுகளை வள்ளுவர் குறிப்பிட்டார். அவற்றை ஓட்டுவோரும் இருந்திருத்தல் வேண்டும்.

யானை, தேர், குதிரை யாகியவை போரிலுப் செல்வர்கள் ஏறிச் செல்வதற்கும் பயன்பட்டன. யானைகட்கு உணவளித்தும் நீராட்டியும் பேணும் பாகர்களும் தேரையோட்டுவோரும் பலகுதிரைகளை வைத்திருக்கும் அரசர், செல்வர் தம் பந்திகளில் குதிரைகளைப் பாதுகாக்கும் தொழிலாளர்களும் இருந்திருத்தல் வேண்டும்.

அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு (757)

என்பது ஒரு குறள். அருள், அன்பு என்னும் நற்றாயின் குழந்தையாக உருவகிக்கப்பட்டது. அது பொருளாகிய செவிலித்தாயால் வளர்க்கப்படுகிறதாம். இவ்வுருவகத்தினின்றும் குழந்தைகளைப் பேணி வளர்க்கும் செவிலியர் செல்வரில்லங்களில் இருந்தனர் என உணரலாம்.

'அறைபறை யன்னர் கயவர்' (1076) எனவும் 'எம்போல் அறைபறை கண்ணார் அகத்து' (1180) எனவும் இன்னும் பிற இடத்தும் குறளில் பறை என்னும் தோற்கருவி குறிப்பிடப்படுகிறது. பறையடிப்போரும் இருந்திருப்பர் என ஊகித்தல் கூடும்.

பாரமுள்ள பொருள்களைத் தூக்கிச் செல்வதற்குப் பயன்படும் காத்தண்டு குறளில் காணப்படுகிறது.

காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்
நோனா உடம்பி னகத்து (!163)

ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது (1196)

இவ்வணிகளினின்றும் கா என்பது பாரமுள்ள பொருள்களை இருபுக்கமும் தூக்கித் தோளில் தாங்கிச் செல்லும் தண்டு என ஊகிக்

கலாம். இருபக்கமும் பாரம் சமமாக இருப்பின் தூக்குவோர்க்கு எளிதாகவும் ஒருபக்கம் அதிகபாரமிருப்பின் தூக்கிச் செல்வோர்க்குத் துன்பமாகவும் இருக்கும். அதுவே மேற்காட்டப்பட்ட உவமையில் குறிப்பிடப்பட்டது. இத்தகைய காத்தண்டுகளைப் பாரம் தூக்கும் தொழிலாளர்களே பயன்படுத்தியிருத்தல் வேண்டும். சிறு விற்பனை யாளர்களும் அவற்றைப் பயன்படுத்தியிருக்கலாம்.

விலைக்குக் கொள்ளப்பட்ட அடிமைகள் பண்டைத் தமிழகத்தில் இருந்தனரா இல்லையா என்பது ஆய்வுக்குரியதே. தமிழக வரலாற்றை ஆய்வோர் சிலர் சங்ககாலத்தில் அடிமைகளே தமிழ்நாட்டில் இல்லை யென்றும் கூறுகின்றனர். சிலர் அடிமைகள் தொல்காப்பியர் காலத் திருந்தே இருந்தனர் எனக் கொள்கின்றனர். ஆயினும் அடிமை கொள்ளுதல் பண்டைத் தமிழகத்தில் பெருவழக்காக இல்லையென்றே தோன்றுகிறது. கிரேக்க ரோமநாடுகள் முதலிய மேல்நாடுகளில் நிகழ்ந் ததுபோல் பண்டைத் தமிழ்நாட்டில் அடிமைகள் அங்காடிகளில் விற்கப்படவில்லை, கடுமையாக ஆளப்படவுமில்லையாயினும் அடிமைகள் சிலர் இருந்தனர் என்பதே பல வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ளும் கருத்தாகும்.[12]

அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர் (தொல். பொருள். 2)

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தில் 'வினைவலர்' என்னும் சொல் ஏவலாளர்களைக் குறிக்குமெனவும் 'அடியோர்' அடிமைகளைக் குறிக்கு மெனவும் சிலர் கொள்வர். அவ்வாறே,

குடிமுதல் சுற்றமும் குற்றிளையோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி (சிலம்பு. 16. 84. 85)

என வரும் சிலப்பதிகார அடிகளுள்ளும் குற்றிளையோர் ஏவலரையும் அடியோர் அடிமைகளையும் குறிக்குமென்பர். புறநானூற்றில் வரும் 'அடிபுறை' (புறம் 67. 12) என்னும் சொல்லும் விலைக்குக் கொள்ளப் படும் அடிமைகளைக் குறிக்கும் சொல்லாகவே யிருத்தல் கூடும்.

திருக்குறளில் பின்வரும் செய்யுட்களில் மக்கள் விற்கப்படுதல், அடிமை புகுதல் ஆகிய கருத்துக்கள் காணப்படுகின்றன.

---

12. Subrahmanian, N., Sangam Polity, P. 284-285
Basham, A. L, The Wonder that was India, P. 153-154

ஒப்புரவி னல்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து (220)

எற்றிற் குரியர் கயவர்ஒன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து (1080)

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்
கடிமை புகுத்தி விடும் (608)

வேறு பொருளைக் குறித்து எழுதும்போது விற்றல், அடிமை புகுதல் இடையே குறிக்கப்படுகின்றனவேயன்றி அடிமைகளைக் குறித்தும் அவர்கள் எவ்வாறு ஆளப்படவேண்டும் என்பதைக் குறித்தும் வள்ளுவர் தெளிவாக எக்கருத்தையும் கூறவில்லை. கயவரே விற்றற் குரியர் என வள்ளுவர் கூறுவதனால் பொதுவாக மக்கள் அடிமையாக விற்கப்படும் முறையை அவர் விரும்பவில்லை எனக் கொள்ளலாம்.

## 3. 19. கலைகள்

இசையும் கூத்தும் பிற கலைகளும் வள்ளுவர் காலத்திருந்தன குழல், யாழ் என்னும் இசைக் கருவிகளே அக்காலத்து அதிகமாகப் பயிலப்பட்டன போலும்.

குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர் (66)

என்றார் வள்ளுவர். மழலைச் சொல்லே குழல் யாழ் ஆகியவற்றினும் இனிதென்றாராயினும் அக்காலத்தில் மக்கள் இவ்விசைக்கருவிகளின் இன்னேசையை மிகவும் விரும்பினர் என்பதை இக்குறள் காட்டும். வள்ளுவரும் இசையை விரும்பினர். இன்கலைகள் நல்லன என்றே கருதினர். 'யாழ்கோடு செவ்விது' (279), யாழின் கோடு வளைந்திருப் பினும் அது இனிய ஓசையை யெழுப்பி நன்மையே செய்கின்றது என்றார்.

பண்ணோடு பயிலப்படும் வாய்ப்பாட்டும் அக்காலத்து ஒரு கலை யாகக் கற்கப்பட்டதென்று தெரிகிறது.

பண்ணென்னும் பாடற் கியைபின்றேல் கண்ணென்னும்
கண்ணேட்டம் இல்லாத கண் (573)

என்ற குறள் இதைக் காட்டும். பண் பாட்டோடு இயைதல் வேண்டும் எனக் கருதினர்.

வாத்திய இசையும் வாய்ப்பாட்டும் பொது மக்களால் ஓரளவு பயிலப்பட்டிருத்தல் கூடும். இவற்றில் திறமை பெற்ற கலைஞர்களும்

இருந்திருப்பர். பலவகை வாத்தியங்களையும் வாய்ப்பாட்டையும் கற்று வல்லகலைஞர்களும் அவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் இருந்த ஒரு நிலையையே சிலப்பதிகாரம் காட்டுகிறது.

கூத்தும் குறளுள் கூறப்படுவதே.

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று (332)

ஒருவனிடம் பெரிய செல்வம் வந்து சேர்தல் கூத்து நிகழ்கின்ற அரங்கின் கண்ணே பெரிய கூட்டம் வந்து சேர்தல் போலும். பின் அச்செல்வம் போதலும் கூத்து முடிந்தபின் கூட்டம் கலைந்தாற் போலும். இவ்வாறு கூறப்படுவதனுல் அக்காலத்தில் கூத்து நிகழ்வதற்குரிய அரங்கங்கள் இருந்தமையும் அவற்றில் கூத்துக்கள் நிகழ்ந்தமையும் அவற்றைக் காணப் பெருந்திரளாக மக்கள் கூடுவர் என்பதும் அறியப்படும்.

குறளில் காணப்படும் மற்றொரு கலை மரப்பாவையை இயக்கும் கலையாகும்.

நாணகத் தில்லா ரியக்கம் மரப்பாவை
நாணல் உயிர்மருட்டி யற்று (1020)
இரப்பாரை யில்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று (1058)

உள்ளத்தில் நாண் இல்லாதாரின் இயக்கம் மரப்பாவை கயிற்றுல் இயக்கப்பட்டு உயிருள்ளதெனப் பிறர் எண்ணுமாறு செய்வதை ஒக்கும். இரப்போர் உலகில் இல்லையெனில் உலகத்தோர் வரவு செலவுகளனைத்தும் மரப்பாவை (கயிற்றுல் இயக்கப்பட்டுச்) சென்று வந்தாற்போலும். மரத்தினுல் பாவைகளைச் செய்து அவற்றைக் கயிற்றுல் இயக்கி உயிருள்ளனபோல் நடிக்கச் செய்யும் ஒரு கலை (puppet show) அக்காலத்தில் இருந்ததென்பதை இக்குறள்கள் காட்டுகின்றன.

### 3. 20. பொழுதுபோக்குகள்

இசைகேட்டு இன்புறல், கூத்தாட்டுக்காணல், மரப்பாவைகளின் இயக்கங்களைக் காணல் ஆகியவையும் பொழுது போக்குகளே. அவற்றைச் செய்வோர்க்கு அவை கலைகள். அவற்றைக் காண்போர்க்கும் கேட்போருக்கும் அவை பொழுது போக்குகள்.

வட்டாடுதல் என்னும் ஒரு விளையாட்டைச் சிலர் பொழுது போக்காகக் கொண்டனர்.

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல் (401)

அரங்கின்றி வட்டாடுதல் நிரம்பிய நூலறிவின்றி அவையோர் முன் பேச முயன்றதை யொக்கும் எனப்பட்டது. எனவே வட்டு என்னும் விளையாட்டிற்கு முதலில் ஓர்அரங்கு வரையப்படுதல் வேண்டும் எனத் தெரிகிறது. நெல்லிக்காய்களை அவ்வரங்கின் பல கட்டங்களிலும் முறைவைத்து நகர்த்தி அவற்றைக் கொண்டு சேர்க்க வேண்டிய கட்டத்தில் சேர்த்தலே அவ்விளையாட்டாகும் என்பர். யார் முதலில் காய்களைக் குறித்த கட்டத்தில் கொண்டு சேர்க்கின்ற னரோ அவர்களே வெற்றி பெற்றவர் ஆவர் என்பர்.[13] இது பெரும் பாலும் சிறுவர் விளையாடும் விளையாட்டுப் போலும்.

கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்
கல்லாச் சிறுஅர் நெல்லிவட் டாடும்
வில்லே ருழவர் வெம்முனைச் சீறூர் (நற். 3. 3-5)

என நற்றிணையுள்ளும் சிறுவர் வட்டாடுதல் குறிப்பிடப்பட்டது.

நீந்துதல் திருக்குறளில் பன்முறை குறிப்பிடப்படுகிறது.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார் (10)

காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன் (1167)

எனப் பிறவிக்கடலைக் கடத்தலும் காமத்தை வெல்லுதலும் கடலில் நீந்துவதாக உருவகிக்கப்பட்டன. தமிழகம் மூன்று திக்கிலும் கடலால் சூழப்பட்ட நாடே யாகும். பல ஆறுகளையும் ஏரி, குளம் முதலிய பிற நீர்நிலைகளையும் கொண்டது. ஆகவே கடலிலும் ஆறு முதலியவற்றிலும் நீந்துதலை ஒருபொழுதுபோக்காகப் பலர் கற்றல் இயல்பே. புணை என்னும் சொல்லும் குறளில் பன்முறை ஆளப்படு கிறது.

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும் (306)

காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை (1134)

13. Pillai, K.K., A Social History of the Tamils, Part I, P.328

காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல் (1164)

புணை என்னும் சொல் ஆளப்படும் இடங்களை நோக்க அது நீர்ப் பரப்பைக் கடக்க உதவும் ஒரு பொருள் என்பது தெளிவாகும். இச் சொல் சிறு படகு அல்லது தெப்பத்தைக் குறிக்கும் எனச் சில உரை யாசிரியர் கொள்வர். நீந்துவதற்கு உதவியாகப் பயன்படும் நீரில் மிதக்கும் ஒரு பொருளைக் குறிக்கும் எனவும் சிலர் கருதுவர். 'அது நீந்தும் ஏமப் புணை' என்னும் தொடர் பிற் கூறப்பட்ட பொருளுக்கு ஏற்றதாகும்.

நறுவீ நாகமும் அகிலும் ஆரமும்
துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய
பொருபுனல் தரூஉம் (சிறுபாண். 116 - 118)

எனப் பத்துப்பாட்டிலும்

புணைகை விட்டுப் புனலோ டொழுகின்
ஆண்டும் வருகுவள் (குறுந். 222, 3 – 4)

எனக் குறுந்தொகையிலும் வரும் அடிகளாலும் அப்பொருள் தெளி வாகும். நாகம், அகில், சந்தனம் ஆகிய மரங்களின் துண்டங்கள் ஆற்றில் அடித்து வரப்பட்டுத் துறையில் நீராடும் மகளிர் தோளால் அணைத்து நீந்துவதற்குரிய புணையாயின என்பதும் மகளிர் புணையைப் பிடித்தும் அதை விட்டும் நீந்துவர் என்பதும் இவ்வடிகளில் கூறப் பட்டன. நீரில் நீந்தி மகிழ்வதும் அதற்கு உதவியாக மிதக்கும் மரக் கட்டைகளைப் புணையாகக் கொள்வதும் அக்கால மக்கட்கு முக்கியமாக மகளிர்க்கு ஒருபொழுதுபோக்கு எனக் கொள்ளலாம்.

கப்பல்களும் படகுகளும் திருக்குறளில் குறிப்பிடப்பட்டமை முன்பே சுட்டப்பட்டது. இவை வாணிபத்துக்கும் மீன் பிடித்தல், முத்தெடுத்தல் ஆகிய தொழில்கட்கும் பயன்பட்டதுடன் படகுகள் மக்கள் பொழுதுபோக்காக ஏறிச் செல்வதற்கும் பயன்பட்டிருத்தல் கூடும்.

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன் (605)

என்பது ஒரு குறள். இங்குக் காமக்கலன் என்னும் சொல் பல உரை யாசிரியர்களால் விரும்பியேறும் மரக்கலன், இன்பம் தருவது போல் காட்டும் கலன் என்று உரை கொள்ளப்படுகிறது. சில ஆங்கில

மொழிபெயர்ப்பாளர்களும் அலங்கரிக்கப்பட்ட படகுகள் அல்லது விழாக் காலங்கட்குரிய படகுகள் (festive boats) என மொழிபெயர்த்துள்ளனர். வள்ளுவர் காலத்தில் இன்பச் செலவுக்குரிய படகுகள் இருந்தனவா அதில் ஏறிச் செல்வதை மக்கள் பொழுதுபோக்காகக் கொண்டனரா என எண்ண இடம் உண்டு.

வேட்டையாடுந்தொழில் முன்பே கூறப்பட்டது. முயல், யானை முதலியவற்றை வேட்டையாடுதல் வேட்டுவர்க்குத் தொழில். சிலருக்கு அவை பொழுதுபோக்காகவும் இருந்திருத்தல் கூடும். ஓரி, நள்ளி முதலிய அரசர்கள் வேட்டையாடுதலைப் பொழுதுபோக்காகக் கொண்டனர் என்பதைப் புறநானூற்றுச் செய்யுள்கள் காட்டும்.

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை (758)

இக்குறளின் பொருள் ஓரளவு ஆய்வுக்குரியதே. இங்கு யானைப்போர் எனக் குறிப்பிடப்பட்டது யாது? 'குன்றின் மேல் ஏறியிருந்து யானையொடு யானை போர் செய்தலைக் கண்டாற்போலும்' என மணக்குடவர் உரை கூறினர். ஏனைய உரையாசிரியர் எவ்வித விளக்கமும் இன்றி யானைப் போர் என்றே கூறிச் சென்றனர். இது எவ்வித யானைப் போர்? யானைகள் தாமாகப் பொரும்போரா, மக்கள் இரு யானைகளை ஒன்றோடொன்று போர் செய்யும்படி மூட்டிவிடும் போரா என்றெல்லாம் ஆராய்ந்து இறுதியில் யானைகள் தம்முள் போர் செய்வதைக் காண்பது என்று கொள்வதைவிட ஒருவன் தான் யானையுடன் போர் செய்து அதன் திறத்தைக் காணல் என்று கொள்வதே ஏற்றது என்ற முடிவுக்கு வந்தார் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை. ஆயினும் மணக்குடவர் உரையைக் கொண்டால் வேட்டையாடவோ வேறுவகையிலோ காட்டுக்குச் சென்றவர்கள் வனவிலங்குகளின் செயல்களைக் கண்டு மகிழ்தலை ஒரு பொழுதுபோக்காகக் கொண்டனர் எனக் கருதுதலும் கூடும். அவ்வாறாயின் அது யானைகள் தாமாகப் பொரும் போரைக் காண்பதாகும். சேரன் செங்குட்டுவன் தன் மனைவி வேண்மாளுடனும் ஏவலாளருடனும் மலைவளங்காணச் சென்றான் எனவும் அங்குப் பிறமலைநாட்டுக்குரிய ஒலிகளுடன் புலியொடு பொரூஉம் புகர்முக ஓதையையும் ஓர்ந்து மகிழ்ந்தான் எனவும் சிலப்பதிகாரத்தில் காட்சிக்காதை (சிலம்பு. 25.29) கூறும். இவ்வாறு வனவிலங்குகளைக் காண்டல் அவற்றின் செயல்களைக் கவனித்தல் ஆகியவையும் அதற்கு ஏற்ற செல்வவளமுடையோர் சிலர்க்குப் பொழுதுபோக்காக இருந்திருத்தல் கூடும்.

ஆண்யானைகளை ஒன்றோடொன்று போரவிட்டுப் பார்க்கும் வழக்கம் பண்டைத்தமிழகத்தில் இருந்ததெனவும் சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.[14]

யானைகளைப் பொர விடுதல் உண்டாயினும் இல்லையாயினும் ஆடு, மாடு, சேவல் ஆகியவற்றைப் பொரவிடும் வழக்கம் பண்டைத்தமிழகத்தில் இருந்தது என்பதைப் பலரும் ஏற்றுக்கொள்கின்றனர். இத்தகைய விளையாட்டைக் கம்பர் தம் நாட்டுப் படலச் செய்யுள்களில் ஒன்றில் குறிப்பிட்டார்.[15] கம்பரின் நூல் பிற்காலத்ததேயாயினும் சங்க காலத்திலும் இவ்விளையாட்டு இருந்தது என அக்காலச் சமுதாய நிலையை யாய்ந்தோர் கருதுகின்றனர்.[16] ஆட்டின் போரைப் பற்றிய குறிப்பும் குறளில் உண்டு.

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து (486)

ஊக்கமுடையவன் காலம் நோக்கி ஒடுங்கியிருத்தல் போர் செய்யும் ஆடு தன்எதிரியைத் தாக்குவதற்காகப் பின் வாங்குவது போலும் என்பதே இங்குக் கூறப்பட்டது. போரிடும் ஆட்டின் செயலை நன்கு கவனித்தே வள்ளுவர் இவ்வுவமையைக் கூறியிருத்தல் வேண்டும்.

இவ்வாறு பல, தொழில்கள், கலைகள், பொழுதுபோக்குகள் அனைத்தும் செழித்திருந்த ஒரு சமுதாயத்தையே திருக்குறள் மூலமாகக் காண்கிறோம்.

14. Subrahmanian, N., Sangam Polity, P. 316: "A fight among bull elephants was but occasionally organised".

15. சேவல்களைப் பொர விடுதல்—கம்பராமாயணம், பாலகாண்டம், நாட்டுப்படலம் 16
எருமைகளைப் பொர விடுதல்—கம்பராமாயணம், பாலகாண்டம், நாட்டுப்படலம் 17.

16. Subrahmanian, N. Sangam Polity, P. 316
Pillai K.K., A Social History of the Tamils, Part I, P. 329.

# 4

## அறங்கள்

திருக்குறள் ஓர்அறநூலே யாகும். வள்ளுவர் விரும்பும் சமுதாயம் அறம் நிறைந்ததாகவேயிருக்கும். அவர் கூறும் அறங்கள் பல திறத்தன. முன்பே கூறப்பட்டது போல் வள்ளுவர் தனிப்பட்டோர்க்குரிய அறத்தையே (individual ethics)கூறினர். ஆயினும் அவர் கருத்தின்படி தனிப்பட்ட ஒவ்வொருவரும் தத்தம் ஆன்மீக ஈடேற்றத்தை மட்டும் குறிக்கோளாகக் கொள்வதற்குரியரல்லர். சமூகநலத்தையும் எண்ண வேண்டியவர்களே. பல அறங்களைக் கூறும்போது வள்ளுவர் அவற்றைக் கடைப்பிடிப்பதனல் ஏற்படும் மறுமைப் பயனையும் கூறியுள்ளார். ஆயினும் அறத்தைக் கடைப்பிடிப்பதனல் ஒவ்வொருவரும் தமக்கும் பிறர்க்கும் இம்மையில் விளைவிக்கும் நற்பயனையும் அவர் ஒவ்வொரு இடத்திலும் எடுத்துக் கூறத்தவறவில்லை. மக்கள் அறத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது மறுமை நோக்கியன்று. வள்ளுவரின் இக்கருத்து,

நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று (222)

என்பது போன்ற குறள்களால் தெளிவாகும்.

அறம் யாவர்க்கும் உரியது. வாழ்க்கையில் எல்லாத்துறைகளிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டியது. அரசர், அமைச்சர், பிற அரசியலலுவலர், வீரர், வணிகர், உழவர் முதலிய பல திறத்தவர்க்கும் அறம் உரியதே. செல்வர்க்கும் வறியோர்க்கும் பொதுவாயதே. இரப்பவர்க்கும் 'இரப்பான் வெகுளாமை வேண்டும்' என வள்ளுவர் அறத்தைக் கற்பித்தார். அரசர்க்கும் அமைச்சர்க்குப் அவ்வவர்க்குரிய அறத்தைப் பலவகையில் விரிவாகக் கூறினர்.

அறம் யாவர்க்கும் உரியது என்பதனோடு வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் கடைப்பிடித்தற்குமுரியதாகும். அரசியலிலும் போரிலும் தொழில் முறையிலும் பொருளையாளும் திறத்தினும் இல்லத்திலும் சமுதாய வாழ்வினும் துறவிலும் கூட அறமே ஓம்புதற்குரியது. பிற அனைத்தையும் துறந்தோரும் அறத்தைத் துறக்குமாறில்லை.

வள்ளுவர் காட்டும் அறம் ஓர் அளவோடு நிற்பதன்று, எல்லையற்றது. பொய்சொல்லலாகாது, களவு செய்தலாகாது, வருவாயில் ஆறிலொன்றை அறச் செயல்கட்காக ஒதுக்க வேண்டும் என்பன போலச் சில நீதிகளை மட்டும் அவர் எடுத்துக் கூறவில்லை. மிக ஆழ்ந்த அறவியலுணர்வோடு தம் நூலை எழுதினர்.

ஒல்லும் வகையான் அறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாம் செயல் (33)

அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (72)

கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
சான்ருண்மை மேற்கொள் பவர்க்கு (981)

மனமொழிமெய்களால் எவ்வெவ்வகையிலெல்லாம் அறம் செய்யமுடிகிறதோ, உடல் வலிமையும் பொருள் வளமும் எவ்வளவு தூரம் இடம் தருகிறதோ அவ்வவ்வகையில் அவ்வளவும் அறம் செய்க.

அன்பிலார் எல்லாவகையாலும் தமக்கே உரியராவர்; அன்புடையவர் தம் என்பினும் பிறர்க்குரியராவர்.

தமக்குத் தகுதி இது என்று அறிந்து சான்ருண்மையை மேற்கொண்டொழுகுபவர்க்கு நல்லவை எல்லாம் கடனுகும்.

இவ்வாறு கூறப்படவே அறத்தின் விரிந்த பொருள் நன்கு புலனுகும். ஏதோ சிலகடமைகளைச் செய்து விட்டோம் என்ற அளவுடன் அறம் முற்றுப் பெறுவதன்று. அல்லது பொருளில் ஒரு பகுதியையோ நேரத்தில் ஒரு கூற்றையோ அறச்செயல்களுக்கு ஒதுக்குவதோடு அமைவதன்று. தன் உள்ளத்தாலும் உடலாலும் சொல்லாலும் மற்றும் தன்பொருளை உடல் வலிமையைத் திறமையை ஈடுபடுத்தியும் எவ்வெவ்வகையிலெல்லாம் பிறர்க்கு நலம் பயக்க முடியுமோ அதையெல்லாம் செய்வதே அறமாகும். அன்புடையர் பொருள், நேரம் முதலியவற்றைப் பிறர்க்கு நல்குவது மட்டுமன்றி என்பும் உரியர் பிறர்க்கு என்ருர் வள்ளுவர். சான்ருண்மையை விளக்குங்காலும்

நல்ல இயல்புகளை நற்செயல்களையெல்லாம் மேற்கொள்வதே சான்றோர்க்குக் கடனாகும் என்றார். இவ்வாறு அறத்தைக் கடைப்பிடிப்போர் ஓரளவு நற்செயல்களுடன் நிறைவடையாது இன்னும் என்ன என்ன வகையிலெல்லாம் அறத்தைச் செய்யலாம் என நாள்தோறும் சிந்தித்து மேலும் மேலும் முயலத் தக்கவகையிலேயே வள்ளுவர் அறம் கூறினர்.

## 4. 1. இல்லறம் துறவறம் என அறம் இரண்டா ?

வள்ளுவர் விரும்பும் சமுதாயத்தில் இல்லறத்தோரும் இருப்பர் துறவியரும் இருப்பர். வள்ளுவர் அறத்தை இல்லறம் துறவறம் என இரு இயலில் எதிழுனர். ஆயினும் அறம் இல்லறம் துறவறம் என இரண்டு வகையா என்பது ஆய்வுக்குரியதே. அறத்துப்பாலை வள்ளுவர் தாமே இவ்விருவகையாகப் பகுத்துத் தற்போது இல்லறவியலில் காணப்படும் அதிகாரங்களை முதற்பிரிவிலும் துறவறவியலில் காணப்படும் அதிகாரங்களை இரண்டாம் பிரிவிலும் அமைத்தாரா அல்லது இவ்வியல் உரையாசிரியர்களால் வகுக்கப்பட்டவைதாமா என ஐயுறுவாரும் உளர்.[1] வள்ளுவரே வகுத்தாராயினும் அவ்வியல்களில் கூறப்பட்ட அறம் வேறு ?

இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணைநலம், மக்கட்பேறு என்பவை இல்லறத்தார்க்கே உரியன. இல்லறத்தோரிடமே இடம் பொருள் ஏவல் முதலியன சிறந்திருக்கும் ஆகையினால் அவர்களே விருந்தோம்புதலுக்கும் அதிக வாய்ப்புடையவர் ஆவர். ஆயினும் துறவியரும் உள்ளதைக் கொண்டு (பிறர் தமக்குக் கொடுத்த உணவு முதலியவற்றையோ, காட்டில் வாழ்பவராக இருப்பின் காட்டில் கிடைக்கும் கிழங்குகள் முதலியவற்றையோ, பிற்காலத் துறவியர் போல் மடத்தில் வாழ்பவராயின் மடத்தின் பொருளையோ கொண்டு) விருந்தோம்புதலும் கூடும். 'கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல் வானகத்துள் உய்க்கும் வழி' (168) எனப் புறப்பொருள் வெண்பாமாலை துறவியர்க்கும் விருந்தோம்பலை விதித்தது. காட்டில் வாழ்ந்த முனிவர் இராம இலக்குமணர்களை விருந்தேற்று மகிழ்ந்தனர். பழங்கள் முதலிய வற்றை யளித்துப் பேணினர் எனக் கம்பராமாயணம் ஆரண்ய காண்டத்துள் கூறப்படுகிறது. தற்காலத்தில் மடங்களில் வாழும் துறவியர் மடத்தின் சார்பாகத் தக்க விருந்தினரை வரவேற்று விருந்தளித்தல் உண்டு. வள்ளுவர் சிறப்பு நோக்கி விருந்தோம்பலை இல்லற

1. கலியாண சுந்தர முதலியார், திரு. வி., திருக்குறள் விரிவுரை, (பாயிரம், அறத்துப்பால் – இல்வாழ்க்கையியல்), பக்கம் 403.

வியலில் சேர்த்தார் எனினும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே அற நூலோர் தொகுத்தவற்றுளெல்லாம் தலையாய அறமாம் (322) எனத் துறவறவியலுள்ளும் கூறித் துறவியர்க்கும் பகுத்துண்ணலை விதித்தார். ஆகையினால் துறவியர் விருந்தோம்புதல் கூடும் என்னும் கருத்து அவருக்கும் இருந்ததெனக் கொள்ளலாம்.

அன்புடைமை இல்லறவியலிலும் அருளுடைமை துறவறவியலிலும் கூறப்பட்டது. இதுவும் சிறப்பு நோக்கியே கூறப்பட்டது. இல்லறத் தோர் குடும்பமாக வாழ்வதால் மனைவி, மக்கள், உடன்பிறந்தோர், உறவினர் என நெருங்கிய தொடர்புடையோர்மாட்டு அன்பு பூண் டொழுகுதல் இயல்பு. துறவியர் அத்தகைய தொடர்பில்லாதவர் ஆகையினால், பொதுவாகப் பலரிடமும் அருளுடையராதல் இயல்பு. ஆயினும் இல்லறத்தோரும் தொடர்பில்லாத பிறரிடத்து அருள் பாராட்ட வேண்டியவரே. அருளுடைமை அவர்க்கும் உரியதே. 'அருளென்னும் அன்பின் குழவி' (757) எனக் கூறி அன்பினின்றும் அருள் தோன்றுவதை வள்ளுவரும் ஏற்றார். தொடர்புடையோ ரிடத்து அன்பு பாராட்டும் இல்லறத்தோர் பின் தொடர்பற்ற வறியோ ரிடத்தும் அருள் பாராட்டி உதவுகின்றனர். துறவியர் குடும்பத் தொடர்பு அற்றவரெனினும் அவரும் சிலரிடத்து அன்பு பாராட்டுதலும் கூடும். சங்கமாகவோ மடமாகவோ இணைந்து வாழும் துறவியர் அச் சங்கத்தில் அல்லதுமடத்தில் வாழும் பிறதுறவியரிடம் அன்பு பாராட்டு தல் இயல்பு. ஆசிரிய மாணவத் தொடர்பு துறவியரிடையே அமையுங் கால் ஒருதுறவி தமக்குச் சமய நூல்களை அல்லது கருத்துக்களைக் கற்பித்த ஆசிரியர்பாலும் தன்னிடம் சமயக்கருத்துக்களை அல்லது துறவொழுக்கத்திற்குரிய விதிகள் நடைமுறைகள் முதலியவற்றைப் பயிலும் மாணவர்களிடமும் சிறப்பாக அன்பு பாராட்டலும் இயல்பே. சென்ற நூற்றுண்டில் சுவாமி விவேகானந்தர் தம்ஆசிரியர் இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் பாராட்டிய ஆழ்ந்த அன்பு யாவரும் அறிந்ததே. அப்பரமஹம்சரின் பிற மாணவரிடத்தும் பின்பு தம்மிடம் சமயக்கல்வியும் துறவொழுக்கமும் கற்க வந்த தம் மாணவரிடத்தும் கூட விவேகானந்தர் மிக்க அன்பு பாராட்டினர்.

> சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
> ஏமப் புணையைச் சுடும் (306)

என வள்ளுவர் வெகுளாமையில் கூறினர். துறவிக்கு இனமாவோர் யார்? "ஈண்டு இனமென்றது தவஞானங்களால் பெரியோராய்க் கேட்டார்க்கு உறுதி பயக்கும் மொழிகளை இனியவாகச் சொல்லுவாரை"

எனப் பரிமேலழகர் விளக்கம் கூறினர். "தான் துன்பக் கடலில் அழுந் தாமல் தன்னைக் கரையேற விடுகின்ற நட்டோராகிய புணை" என்ருர் மணக்குடவர். துறவியருள் சிலர் பிறருக்கு உறுதி பயக்கும் மொழி களைக் கூறல் கூடும், துறவியருள்ளும் நண்பர்கள் இருத்தல் கூடும் என்பன இங்கு ஏற்றுக் கொள்ளப்படவே அவ்வாறு அறிவுரை கூறு வோரிடத்தும் நட்டோரிடத்தும் அன்பு பாராட்டலும் பொருந்துவதே. சிறப்பு நோக்கி வெவ்வேறியலுட் கூறப்படினும் அன்புடைமை துறவி யர்க்கும் அருளுடைமை இல்லறத்தோர்க்கும் விலக்கப்படுவன வல்ல.

இனியவை கூறலும் துறவியர்க்கும் ஏற்றதே. துறவியரும் சிலர் தவஞானங்களால் சிறந்தோராய்ப் பிறர்க்கு அறிவுரைகளை இனியன வாகக் கூறுவர் என மேற்காட்டப்பட்ட குறளின் உரையில் பரிமேலழகர் கூறினர் அல்லவா ?

துறவியர்க்கு நன்றியறிதல் வேண்டப்படுவதன்றே? இல்லறத் தோரே இடம் பொருள் ஏவல் முதலியவற்றைச் சிறப்பாகப் பெற்றவர். ஆகையினல் பிறர் செய்த உதவிக்கும் பதிலுதவி செய்தற்கு அவர்களே நடைமுறையில் அதிக வாய்ப்பைப் பெற்றோர் என எண்ணி வள்ளுவர் செய்நன்றியறிதலை இல்லறவியலுள் சேர்த்திருத்தல் கூடும்.

நடுவுநிலைமையும் சிறப்பாக இல்லறத்தோர்க்குரியதே. ஏனெனில் அவரே அவையத்தோராகப் பணியாற்றற்கும் அமைச்சர், அரசிய லலுவலர் முதலிய பொறுப்புள்ள நிலையையேற்றற்கும் வாணிபத்தையும் தொழிலையும் மேற்கொண்டு கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதற்கும் உரியவர் ஆவர். இவற்றிலேயே நடுவுநிலைமை கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும்.

ஆனல் அடக்கமுடைமையும் ஒழுக்கமுடைமையும் இரு திறத் தார்க்கும் உரியனவே.

> ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
> எழுமையும் ஏமாப் புடைத்து (126)

ஒருபிறப்பின்கண் ஒருவன், ஆமை தன் ஐந்துறுப்புக்களையும் (நான்கு கால்களும் தலையும்) இடர் புகாதவாறு காப்பது போல் ஐம்புலன்களையும் (மெய், வாய், கண், மூக்கு, செவி) தீமை புகாதவாறு காப்பானயின் அது எழுமையிலும் அவனுக்குப் பாதுகாவலான நன்மையைத் தரும் என்னும் இக்குறளைச் சிலர் துறவியர்க்கே சிறப்பாக

உரியதாகக் கொள்வர்.[2] ஒழுக்கமுடைமையும் இல்லறத்தோர்க்கும் துறவறத்தோர்க்கும் ஒருங்கே உரியதாகும். ஒழுக்கம் துறவியர்க்கும் வேண்டப்படுவதாலேயே கூடாவொழுக்கம் துறவறவியலுள் கண்டிக்கப் பட்டது.

பொறையுடைமையும் இரு திறத்தார்க்கும் வேண்டிய ஒன்றே. இல்லறவியலில் கூறப்பட்ட பொறையுடைமை என்னும் அறமே துறவற வியலில் வெகுளாமை எனக் கூறப்பட்டது. மிக ஒத்த கருத்துடைய சில குறள்களை இவ்வதிகாரங்களில் காணலாம். பொறையுடைமை-

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று (157)

வெகுளாமை-

இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று (308)

மற்றும் இன்னாசெய்யாமையில் வரும் ஒரு குறள்,

கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள் (312)

என்பது. பிறர் தமக்கு எத்தகைய துன்பத்தைச் செய்யினும் தாம் சினம் கொள்ளாதும் தீங்கு செய்தோர்க்குப் பதில் தீங்கு செய்யாதும் இருப்பதே சிறப்பாகும் என்னும் ஒரு அடிப்படைக் கருத்தே இம்மூன்று குறள்களிலும் கூறப்பட்டதாம்.

அழுக்காறுமை இல்லறவியலுள்ளேயே கூறப்பட்டது. துறவியர் அழுக்காறு கொள்ளலாம் என்பதன்று, ஊர்களிலும் நகர்களிலும் தங்கிப் பிறருடன் இணைந்து வாழும் இல்லறத்தோர்க்கே அழுக்காறு கொள்வதற்குத் தக்க சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. இல்லறத்தோர் குடும்பத்துடனும் உறவினர்களுடனும் இணைந்து வாழ்கின்றனர். பொருளீட்டுகின்றனர். சமூகத்தில் ஒரு தொழிலை அல்லது பணியை ஏற்கின்றனர். நட்பு முறையில் தொழில முறையில் பிற முறைகளில் பலருடனும் பழகுகின்றனர். தம்மைவிட அதிகச் செல்வத்தையுடைய வரை, செல்வாக்கு உடையவரை, சமுதாயத்தில் தம்மைவிட உயர் நிலையில் இருப்பவரைக் காண்கின்றனர். தமக்கு அத்தகைய செல்வமோ வாய்ப்புக்களோ இல்லையே என்ற எண்ணம் ஏற்படுகிறது.

2. Subrahmanian, N., Sangam Polity, P. 266

அதுவே அழுக்காறு அடைவதற்கு ஏதுவாகிறது. செல்வத்தையோ பதவியையோ நாடுவதில்லையென உறுதி கொண்ட துறவிக்கு அவை குறித்து அழுக்காறு கொள்ளத்தக்க சூழ்நிலை இல்லை. ஆகவே அழுக்காருமை இல்லறவியலில் சேர்க்கப்பட்டது. ஒருகால் துறவியொருவன் மற்றொரு துறவிக்குச்சமயநூலறிவு பொருட்டோ உயர்தவ ஒழுக்கத்தின் பொருட்டோ பிற துறவியரால் அல்லது பொதுமக்களால் அளிக்கப்படும் மதிப்பைக் கண்டு அழுக்காறு கொள்வானேயாகில் அதுவும் தவறேயாகும். 'அவாவறுத்தல்' என்பதனுல் மதிப்பையோ புகழையோ அவாவுவதே விலக்கப்பட்டதனுல் அவற்றின் பொருட்டு அழுக்காறு கொள்ளுதலும் விலக்கப்பட்டதாகும்.

பிறர் பொருளை வெஃகாமை இல்லறவியலில் கூறப்பட்டதற்கொப்பக் கள்ளாமை துறவறவியலில் கூறப்பட்டது. பலதொழிலில் ஈடுபடும் இல்லறத்தோர் பிறர் பொருளை வெஃகி வாணிபத்தில் பிறரை ஏமாற்றுதலும் தொழிலில் உண்மையின்மையும் கையூட்டுப் பெறுதல் முதலிய முறையற்ற செயல்களும் மேற்கொண்டு பொருளீட்டுதல் கூடும். துறவிக்கு இவற்றைச் செய்தற்கு வாய்ப்பில்லை. துறவி பிறர் பொருளை விரும்பினுல் களவு செய்தல் ஒன்றே கூடும். இவ்வித வாய்ப்பு வேறுபாட்டையெண்ணி வள்ளுவர் இல்லறத்தில் வெஃகாமை எனப் பொதுவாகவும் துறவறத்தில் கள்ளாமை எனக் களவைச் சிறப்பாகவும் விலக்கியிருத்தல் கூடும். இவற்றுள்ளும் ஒத்தகருத்தையுடைய குறள்களைக் காணலாம்.

வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன் (177)

களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும் (284)

பிறர் பொருளைக் கவர்தல் முடிவில் அதிகத் துன்பத்தையே தரும் என்ற அடிப்படைக் கருத்தையே இவ்விரு குறள்களும் தருகின்றன.

அழுக்காற்றைப் போலவே புறங்கூறுதல் பயனிலசொல்லுதல் ஆகிய தவறுகளைச் செய்தற்கும் இல்லறத்தோர்க்கே ஏற்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. ஆகையினுல் அவர்களே முக்கியமாக அவற்றைச் செய்யாதிருக்குமாறு கற்பிக்கப்பட வேண்டியவராகின்றனர். சமுதாயத்தில் பிறருடன் இணைந்து வாழும் இல்லறத்தோர் பிறர் செயல்களைக் கவனிக்கின்றனர். பிறர் குறைகளை அவரில்லாத போது எடுத்துரைக்கவும் தலைப்படுகின்றனர். பலர் சேர்ந்துப்

பழகும்போது வீண் பேச்சுக்கள் பேசவும் சிலருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. துறவியர் தனித்து வாழின் புறங்கூறுவதற்கும் பயனில சொல்லற்கும் வாய்ப்பைப் பெருர். மடங்களில் வாழினும் பல விதிகட்கு உட்பட்டு நடப்பாராகையினுல் இவற்றிற்கு வாய்ப்பு அரிதே. சூழ்நிலை நோக்கிப் புறங்கூருமை பயனில சொல்லாமை என்பன இல்லறவியலுள் கூறப்பட்டன. துறவறவியலில் வாய்மையுள்,

வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல் (291)

எனக் கூறப்படுவதால் தீமைபயக்கும்புறங்கூற்றும் பயனில் சொற்களும் அங்கும் விலக்கப்பட்டனவாயின.

தீவினையச்சமும் இன்னுசெய்யாமையும் தொடர்புடையனவே. பிறர்க்கு (பிற உயிர்கட்கும்) துன்பம் செய்யாமலிருப்பதே இன்னுசெய்யாமையாகும். இவற்றுள்ளும் ஓரளவு ஒத்தகருத்துள்ள குறள்களைக் காணலாம்.

அறிவினுள் ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல் (203)

கறுத்தின்னு செய்தவக் கண்ணும் மறுத்தின்னு
செய்யாமை மாசற்ருர் கோள் (312)

பிறர் தம்மேற் சினங்கொண்டு தமக்குத் தீமை செய்தபோதும் அவர்க்குத் தீமையை அல்லது துன்பத்தைச் செய்யாமலிருப்பது அறிவினுள்ளெல்லாம் சிறந்த அறிவாகும் எனவும் குற்றமற்ற மேலோர் தம் கொள்கையாகும் எனவும் இங்குக் கூறப்பட்டது.

தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான் (206)

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர் (320)

பிறர்க்குத் துன்பம் செய்யின் பின்பு அது தமக்கே துன்பமாகும். ஆகையினுல் தாம் துன்பத்தையடையாதிருக்கவேண்டுபவர் பிறர்க்குத் துன்பத்தைச் செய்யார் என இக்குறள்கள் கூறின. தீவினையச்சம் முக்கியமாக மக்களுக்குத் தீமை செய்யாதிருப்பதைக் கூற இன்னுசெய்யாமை உயிர்களனைத்தையும் எண்ணி அவற்றிற்குத் துன்பம் செய்யாமையைக் கூறுகிறதென்பதே இவற்றிடையே உள்ள வேறுபாடு போலும்.

ஈகையும் ஒப்புரவும் இல்லறத்தார்க்குக் கூறப்பட்டன, பொருள் தேடி வாழ்பவர் அவரேயாகலால். பொருளுடையோரே ஈகையும் ஒப்புரவும் செய்தல் கூடும். பிற்காலத்தில் துறவிகள் சங்கங்களாக இணைந்தும் மடங்களில் வசித்தும் பணி செய்யும் நிலை ஏற்பட்ட பின் துறவியர் தனித்தனியே பொருள் சேர்த்துப் பொருளையாளும் உரிமை யற்றவராயினும் சங்கங்கள் அல்லது மடங்கள் பொருளுடையனவாயின துறவியர் தம் சங்கத்துக்கு அல்லது மடத்துக்குரிய பொதுப் பொருளைக் கொண்டு ஈகையும் ஒப்புரவும் செய்யக் கூடியவராயினர். சுதமதியையும் அவள் தந்தையையும் பௌத்ததுறவியர் ஆதரித்துக் காத்ததும் மணிமேகலை வறியோர் பலர்க்கு உணவீந்ததும் மணிமேகலைக் காவியத்தில் கூறப்பட்டன[3]. தற்காலத்தில் இராமகிருஷ்ண மடங் களையும் கத்தோலிக்க கிருஸ்தவ மடங்களையும் சார்ந்த துறவியர் தம்தம் மடங்களுக்குரிய பொருளைக் கொண்டு ஈகையும் ஒப்புரவும் செய்வதைக் காணலாம். ஆனால் வள்ளுவர் காலத்தில் துறவியர் இவ்வறங்களைச் செய்யும் நிலை இருந்ததா என்பது ஐயத்திற்குரியதே.

புகழ் இல்லறவியலில் கூறப்பட்டது. ஏனெனில் புகழ் தேடுதற் குரியவர்கள் இல்லறத்தோரே. துறவியர் புகழையும் விரும்பார் என்பது கருத்துப் போலும். இல்லறத்தோர் புகழுக்காகவே ஈகை முதலிய வற்றைச் செய்தல் பொருந்துமா எனில் அதுவும் பொருந்தாததே. கைம்மாறு கருதாமல் ஒப்புரவு செய்தல் வேண்டும் எனவே வள்ளுவரும் கூறினர். ஆயினும் இல்லறத்தோர் புகழையும் விரும்புவது தவறில்லை என அவர் கருதியதாகத் தோன்றுகிறது.

துறவறவியலில் கூறப்பட்ட அறங்களை நோக்கின் அங்கும் சிலவே துறவியர்க்கு மட்டும் உரியனவாகவும் பல இல்லறத்தோர்க்கும் ஏற்றனவாகவுமே காணப்படும்.

அருள் இல்லறத்தார்க்கும் உரியதே யென்பது முன்பே கூறப் பட்டது. 'அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை' (247) எனவும் அருளா தான் செய்யும் அறம் தானுகவே யழியும் (249) எனவும் கூறப்படுவதால் அருள் யாவர்க்கும் உரியதே என்பது உறுதியாகும். இன்னும்,

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து (250)

---

3. மணிமேகலை, 5.45-70, சுதமதி தந்தையைப் பௌத்த துறவியர் ஆதரித்தல், மேற்படி 17-19, மணிமேகலை வறியோர்க்கு உணவளித்தல்.

என்ற குறள் துறவியரை விட இல்லறத்தோர்க்கே பொருந்துவதாகத் தோன்றும். சமூகத்தில் செல்வமும் செல்வாக்கும் உடையோரே பிறரை ஒறுக்கவல்லவராக இருப்பர். தம்மின் மெலியாரைத்தாம் ஒறுக்க எண்ணுமிடத்துத் தம்மின் வலியார்முன் தாம் அஞ்சி நிற்கும் நிலையை யெண்ண வேண்டுமென்பது தாம் பிறர் ஆணைக்கு அடங்கியும் தம் ஆணைக்கு அடங்கியவரை ஆளுகை செய்தும் சமுதாயத்தில் பொறுப்புள்ள நிலையில் இருப்போர்க்கே சிறப்பாகப் பொருந்தும்.

புலான் மறுத்தலும் யாவர்க்கும் உரியதெனவே தோன்றும். ஒரு வேளை இல்லறத்தோரில் சிலர் புலால் உண்ணினும் துறவியராயினும் அதை முற்றிலும் தவிர்வார்களாக என எண்ணி வள்ளுவர் அதைத் துறவறவியலில் சேர்த்திருக்கலாம். முன்பே சுட்டப்பட்டது போல் இயல்களை வள்ளுவர் தாமே வகுத்தாரா என்பதைக் குறித்தே ஐயம் உண்டு. எவ்வாறுயினும் இல்லறத்தோரும் ஊனுண்ணுமல் இருப்பதையே வள்ளுவர் விரும்புவார் என்பது உறுதி. ‘தான்பிறி தூன் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்’ (251) எனவும் ‘ஒன்றன் உடல் சுவை யுண்டார் மனம் நன்றாக்காது’ (253) எனவும் கூறும் வள்ளுவர் யாவரும் புலாலுணவை விட்டொழித்தல் வேண்டுமெனவே எண்ணினார். மற்றும்,

> தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
> விலைப்பொருட்டால் ஊன்தருவா ரில் (256)

எனக் கூறினரே. இக்குறள் ஊனுண்ணமையாகிய அறம் இல்லறத்தோர்க்கும் உரியதே என்பதைக் காட்டுகிறதல்லவா? துறவியர் மட்டும் ஊன் உண்ணதிருப்பின் அதையுண்ணும் இல்லறத்தோர் பொருட்டு விலங்குகளைக் கொல்வோரும் விற்போரும் இருப்பார்களே.

தவம், கூடாவொழுக்கம் என்பன துறவியர்க்கே கூறப்பட்டன எனக் கொள்ளலாம்.

கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னுசெய்யாமை, கொல்லாமை என்பன பொதுவான அறங்களே. கள்ளாமைக்கும் வெஃகாமைக்கும் உள்ள தொடர்பும், பொறையுடைமைக்கும் வெகுளாமைக்கும் உள்ள தொடர்பும் முன்பு கூறப்பட்டன. வாய்மை, இன்னுசெய்யாமை ஆகியவற்றை முற்றமுடியக் கடைப்பிடிக்கத் தக்கவர் துறவியரே என எண்ணி வள்ளுவர் அவற்றைத் துறவறவியலில் சேர்த்திருத்தல் கூடும். இல்லறத்தோர் தீங்கு பயக்கும் உயிர்ப்பொருள்களைக் கொல்ல வேண்டியநிலை ஏற்படக் கூடும். ஒரு குடும்பத்தலைவன் தன்மனைவி

மக்களைக் காக்க ஒரு பாம்பை அல்லது கொடிய விலங்கைக் கொல்ல வேண்டிய கடமையுடையவனுகலாம். துறவி தன்னுயிரைப் பொருட் படுத்தாது அவற்றைக் கொல்லாமையைக் கடைப்பிடித்தல் கூடும் பயிர்த்தொழிலில் தோட்டத் தொழிலில் ஈடுபடுவோர் பயிரையழிக்கும். வெட்டுக்கிளி போன்றவற்றை யழித்துப் பயிரைக் காக்கவேண்டியவ ராகலாம். மற்றும் போரை வள்ளுவர் விலக்கவில்லையே. போரில் வீரர்கள் பகை வீரர்களையும் பகைவர் படையைச் சேர்ந்த குதிரை யானை முதலியவற்றையும் கொல்ல வேண்டியதாகத்தானே யிருக்கிறது? ஒன்றன் உயிர் செகுத்துண்ணுமையை விரும்பியவரும் ஊன் உண்டலைக் கடிந்தவருமாகிய வள்ளுவர், போரில் கை வேல் களிற்ருேடு போக்கி வருபவனுய் மெய்வேல் பறித்து நக்க வீரனின் வீரத்தைப் 'படைச் செருக்கு'ள் பாராட்டினுர். அங்கு அவன் யானையைக் கொன்றமை அருளுக்கு மாறு என அவர் கடியவில்லை. நாட்டை, நாட்டு மக்களைக் காக்கப் போரில் ஈடுபடவேண்டியிருப்பதால் போரில் கொல்லல் விலக்கப்படவில்லை. இவ்வாறு சில சூழ்நிலைகளில் நாட்டின் பொருட்டோ, பிறர் பொருட்டோ பொதுநன்மையின் பொருட்டோ இல்லறத்தோர் இன்னுசெய்தல் பகைவரைக் கோறல் ஆகியவற்றை யும் செய்யவேண்டி நேரிடுதலால் வெகுளாமை, கொல்லாமை, இன்னு செய்யாமை ஆகிய அறங்களை முற்ருகக் கடைப்பிடிக்கத் தக்கவர் துறவியரே என அவர் கருதியிருத்தல் கூடும்.

சமுதாயத்தில் சில பொறுப்புள்ள நிலையிலிருப்போர் நாட்டின் நன்மையின் பொருட்டு வாய்மைக்கு மாருகவும் நடக்க வேண்டியிருக்க லாம். வள்ளுவர், அரசர்கள் பகைவரிடம் பகைபாராட்டாதவர் போலும் நண்பர் போலும் நடித்துத் தக்கசமயத்தில் அவர்களை வீழ்த்துவதைத் தவருகக் கருதவில்லை.

பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்பர் ஒள்ளி யவர் (487)

செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை (488)

என்ற குறள்கள் இதைக் காட்டும். இந்நடிப்பு நாட்டின் நன்மைக் காகச் செய்யப்படுவது ஆகையினுல் தவறன்று என ஏற்றுக் கொள்ளப் பட்டது போலும். கிரேக்க அறிஞர் பிளேட்டோவும் 'அரசு' (Republic) என்ற தம்நூலில் அரசியலில் ஈடுபடுவோர் நாட்டின் நன்மைக்காகப்

பொய் கூறலாம் என்றார்.[4] ஒற்றகள் துறந்தார் படிவத்தாராகியும் பிற மாற்றுருவம் பூண்டும் செல்லல் தகும் என வள்ளுவர் விதித்தார். மாற்றுருவம் பூண்டு செல்லும் ஒற்றன் தான் ஒற்றன் என உண்மையைக் கூறான். தான் ஒரு துறவி எனப் பொய்யே கூறுவான். வாய்மைக்குமாறாக நடத்தலும் பொய் கூறலும் கடமையின் பொருட்டு அல்லது நாட்டின் நன்மையின் பொருட்டு ஒற்றற்கும் ஏற்றதாயிற்றா் இவையனைத்தையும் உளத்திற் கொண்டு வள்ளுவர் வாய்மையைத் துறவறவியலுள் சேர்த்திருத்தல் கூடும்.

ஆயினும் இத்தகைய ஒரு சில சூழ்நிலைகளைத் தவிரப் பொதுவாக இவ்வறங்கள் இல்லறத்தோராலும் ஏற்றஅளவு கடைப்பிடிக்கத்தக்கனவே எனக் கொள்ளலாம். பொதுவாகப் பிறர்க்கு இன்னாசெய்தல் அல்லது பொய் கூறல் இல்லறத்தோர்க்கேற்றது என வள்ளுவர் கருதியிருக்கமாட்டார். யாவரும் ஏற்ற அளவு இல்லறங்களைக் கைக்கொள்ளத் துறவியர் முற்றாக அவற்றைக் கடைப்பிடித்தல் பொருந்தும் எனவே எண்ணியிருப்பார். நம்காலத்தில் துறவு மேற்கொள்ளாது இல்லறத்தில் ஈடுபட்டிருந்த காந்தியடிகள் சமூகப்பணியிலும் அரசியலிலும் கூட வாய்மை, இன்னாசெய்யாமை என்னும் அறங்களை வெற்றியுடன் கடைப்பிடித்துக் காட்டவில்லையா? அவர் வள்ளுவர் அறத்தை வாழ்ந்து காட்டினர் எனத் தமிழ்நாட்டுக் கவிஞர் நாமக்கல் இ. வெ. இராமலிங்கம் பிள்ளையும் அவரைப் போற்றினரல்லவா? ஆகவே இவை பொது அறங்களே.

நிலையாமையைக் குறித்துச் சிறப்பாக எண்ணவேண்டியவர் துறவியரேயாயினும் இல்லறத்தோறும் இவ்வுண்மையை உணரவேண்டியவர்களே.

அற்கா வியல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப வாங்கே செயல் (333)

என்னும் குறள் துறவறத்தோரை விட இல்லறத்தோர்க்கே நன்கு பொருந்தும், செல்வத்தைப் பெற்று அது கொண்டு அறத்தைச் செய்தற்குரியவர் அவரேயாகலால். **துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல்** என்பன துறவியர்க்கே உரியன எனக் கொள்ளுதல் கூடும்.

---

4. **Plato, The Republic, P. 80**
"To the rulers of the state then, if to any, belong of right to use falsehood, to decieve either enemies or their own citizens, for the good of the state; and no one else may meddle with this privilege".

அறம் அடிப்படையில் ஒன்றே. இல்லறத்தோர்க்கும் துறவறத்தோர்க்கும் அவர்தம் வாழ்க்கைமுறை, சூழ்நிலை வேறுபாட்டால் சிலசில கடமைகள் வேறுபடினும் பல அறங்கள் இருதிறத்தார்க்கும் பொதுவானவையே.

இனி குறளில் அறத்துப்பாலில் மட்டுமன்றிப் பொருட்பாலிலும் பல அதிகாரங்கள் அறத்தையே கூறுகின்றன. காமத்துப்பாலும் அறத்தோடியைந்த அகவாழ்க்கையையே காட்டுகிறது. ஏனெனில் திருக்குறள் ஓர் அறநூலே.

## 4.2. சமுதாய அறங்கள்

வள்ளுவர் காட்டும் அறங்கள் பலவகையின. அவற்றுள் மக்களைச் சமுதாயத்தில் தம்பொறுப்பை உணர்ந்து தம்மால் பிறர்க்குத் துன்பம் ஏற்படாது காத்தும் தம்மால் பிறருக்குச் செய்யத்தக்க நன்மையைச் செய்தும் வாழத்தூண்டுவனவே இங்குச் சமுதாய அறங்கள் எனக் கருதப்படுகின்றன.

### 4.2.1. பொருளைப் பிறர் பொருட்டுப் பயன்படுத்தல்

விருந்தோம்பல், சுற்றந்தழுவுதல், ஈகை, ஒப்புரவு முதலியன வெவ்வேறு வகையில் ஒருவன் தன்பொருளைப் பிறர்பொருட்டுப் பயன்படுத்துவதே யாகும். ஆயினும் விருந்தோம்புதல், சுற்றந்தழுவுதலில் வேறு பண்புகளும் அடங்கியுள்ளன.

இல்லந்தோறும் விருந்தோம்பல் சிறப்பாக நடைபெறும் ஒரு சமுதாயத்தையே வள்ளுவர் விரும்பினர். சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய பல தமிழ்நூல்களிலும் விருந்தோம்பல் சிறப்பிக்கப்படுவதே. கண்ணகி 'தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும்' இழந்தேன் என வருந்திக் கூறினள்.[5] கண்ணகியையும் கோவலனையும் மாதரி விருந்தேற்று மகிழ்ந்த திறம் சிலப்பதிகாரம் மதுரைக் காண்டத்தில் கூறப்படுகிறது. ஐந்து வகை நிலங்களிலும் பொதுமக்களனைவரும் விருந்தோம்பும் திறத்தையும் அரசர்களும் பாணர் முதலியோரை விருந்தினராகக் கொண்டு பேணும் தன்மையையும் பத்துப்பாட்டில் வரும் ஆற்றுப்படைச்செய்யுட்கள் கூறுகின்றன. ஈத்திலையால் வேயப்பட்ட சிறுகுடிலில் வாழ்ந்து எறும்புகளால் புற்றில் சேர்க்கப்பட்ட புல்லரிசியை அகழ்ந்தெடுத்து நிலவுரலில் இட்டுக் குற்றி ஆழமான கிணற்றின் அடியிலுள்ள உவர் நீரை முகந்து விளிம்பில்

---

5. சிலப்பதிகாரம் *16, 72-73*

சிறிது உடைந்திருந்த பானையில் இட்டு உணவாக்கும் மிக்க வறுமை நிலையிலுள்ளோரும் தாம் அரிதிற்பெற்ற அவ்வுணவை விருந்தினர்க்கு அளித்து மகிழ்வர் எனப் பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது. வடமொழியிலுள்ள பல அறநூல்களும்கூட விருந்தோம்பலை இல்வாழ்வோர்க்குரிய முக்கிய கடமைகளில் ஒன்றாகக் கூறுகின்றன என அந்நூல்களை ஆய்ந்தோர் எடுத்துரைக்கின்றனர்.[6] நம் நாட்டில் மட்டுமன்றிப் பல பண்டைநாகரீகம் சார்ந்த நாடுகளிலும் கூட விருந்தோம்பல் மிகவும் போற்றப்பட்டதென்பதை அந்நாட்டு இலக்கியங்கள் காட்டும்[7]. இவ்வறத்தை வள்ளுவரும் போற்றியது இயல்பே

மக்கள் இல்லத்திலிருந்து பொருளைப் போற்றி வாழ்வதெல்லாம் விருந்தினரைப் பேணி அவர்க்கு உபகாரம் செய்தற் பொருட்டே என வள்ளுவர் கருதினர். விருந்தினர்க்கு உணவளித்த பின்னரே வீட்டிலிருப்போர் தாம் உண்ணுதல் வேண்டும். அல்லது உடன் உண்ணுதல் கூடும். முன்னுண்ணுதலை அவர் விரும்பவில்லை யென்பதை விருந்து புறத்ததாத் தானுண்ணுதலை அவர் கண்டித்தமை காட்டும் (குறள் 82). வருவிருந்து வைகலும் ஓம்புவதனால் பொருள் அழியாதா? அழியுமென ஆசிரியர் கருதவில்லை. விருந்தோம்புபவனுடைய வாழ்க்கை பருவந்து பாழ்படுதலின்று எனவும் அவன் இல்லத்தில் செய்யாள் அகமலர்ந்து உறையும் எனவும் கூறிப் பின்னும் அவன் புலத்தில் வித்தும் இடல் வேண்டும் கொல்லோ எனவும் வினவினர்.

விருந்தோம்புபவன் இல்லத்தில் செல்வம் பெருகும், வறுமை தலைகாட்டாது என்பது வள்ளுவர் கருத்து. இறையருளால் அது கூடும் என அவர் கருதியிருக்கலாம். நாள்தோறும் விருந்தினரை வரவேற்று உணவும் உறையுளும் அளித்துப் பேணுபவர் அவ்விருந்தினர் வரவால், பேச்சால், கூட்டுறவால் மிக்க மகிழ்ச்சியை யடைவர். மகிழ்ச்சியுடையோராய் இருப்பவே தம்தொழிலில் தாம் எடுத்துக் கொள்ளும் பிறமுயற்சிகளில் ஊக்கமும் உழைப்பும் உடையோர் ஆவர். அவ்வாறு அவர் முயற்சியுடையோராய் இருப்பதால் வறுமை யடையார் எனவும் கொள்ளலாம். விருந்தினர் விருந்தோம்புவோர்க்குப் பதிலுதவி செய்வர் எனக் கொள்ளுதல் பொருந்தாது. விருந்தோம்பும் அறம் பயன் கருதிச் செய்யப்படுவதன்று. ஊருக்குப் புதிதாக வருபவரே விருந்தினர் ஆவர். அவர் அவ்வூரில் தங்கும்

---

6. Chattopadhyaya, Dr. Sudhakar., **Social Life in Ancient India**, P. 79-80

7. **பரிசுத்த வேதாகமம்,** பழைய ஏற்பாடு, ஆதியாகமம் 18, ஆபிரகாம் விருந்தினரை வரவேற்று உணவளித்தல்.

இடமோ அறிமுகமான பல நண்பரோ செல்வாக்கோ இல்லாதவராக இருக்கும் நிலையிலேயே அவரை வரவேற்று உபசரித்தல் சிறப்பான அறம் ஆகிறது. அவரிடம் பதிலுதவி எதிர்பார்த்தல் இயல்பன்று. ஆயினும் விருந்தோம்பும் அறத்திற்குச் சமூகத்தில் அதிக ஆதரவு இருப்பதனல் சிலர் விருந்தோம்பும் சிறப்பைக் கண்டு அவ்வூரிலுள்ள பிறர் உதவ முன்வருவர், அவ்வாறு பிறர் தாமாகவே உதவ முன் வருவதனல் விருந்தோம்புவோரது செல்வம் குறைவுபடாமல் இருக்கு மெனவும் கருதுதல் கூடும்.

வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம் (85)

என்ற குறளுக்கு உரைகூறுங்கால் திரு வி.க., சுந்தரரும் பரவையாரும் விருந்தோம்புதற் பொருட்டுக் குண்டையூர்க் கிழார் என்னும் செல்வரிடமிருந்து நெல் பெற்றதாகப் பெரியபுராணத்துள் கூறப்படும் நிகழ்ச்சியை இதன் கருத்தை விளக்கும் எடுத்துக்காட்டாகக் கொண்டார்.[8] பக்தியிலும் அறச்செயல்களிலும் ஈடுபட்டிருந்த சுந்தரரும் பரவையாரும் உழவுத்தொழிலில் ஈடுபடவில்லை. ஆயினும் நெல் வேண்டியபோது அவர்தம் பணியை யறிந்து உதவ முன்வந்த குண்டையூர்ச்செல்வரால் தம் தேவை நிறைவடையப் பெற்றனர். இவ்வாறு சமூகத்தில் உள்ள ஆதரவினல் விருந்தோம்புபவனின் செல்வம் குறைவுபடாமலிருக்கும் என்பதும் பொருந்துவதே.

விருந்தின் துணைத்துணையாகிய (விருந்தினரின் தகுதியின் அளவதாகிய) விருந்தோம்பல் என்னும் இவ்வேள்வியின் பயன் யாது? விருந்தோம்புபவன் பயன் கருதாமலல்லவா அப்பணியைச் செய்கிறன்? அதனல் அவன் பெறும் மகிழ்ச்சியும் நிறைவுமே பயனுகலாம். பயன் என்பதை விருந்தோம்புபவன் பெறும் பயன் எனக் கொள்ளாமல் சமுதாயம் பெறும் பயன் எனவும் கொள்ளலாம். தாம் நன்முறையில் விருந்தேற்று உபசரிக்கப்பட்டதை எண்ணி மகிழும் விருந்தினர் தாமும் அதேபோல் பிறரை விருந்தேற்று உபசரித்தல் கூடும் அல்லது வேறு வகையில் பிறருக்கு உதவிச் சமூகத்தில் நன்மை பயத்தல் கூடும்.

சுற்றம் தழுவுதல் திருக்குறளில் அரசியலில் கூறப்பட்டதெனினும் அது பொதுமக்களுக்கும் உரிய அறம் அல்லது கடமையே யாகும். பொருளைப் பிறர்பொருட்டுப் பயன்படுத்தலில் வறிய உறவினருக்கு

8. கலியாணசுந்தர முதலியார், திரு. வி., திருக்குறள் விரிவுரை, பக்கம் 700

உதவுவதும் முக்கிய பகுதியே. ஓர் ஆங்கிலப் பழமொழியில் கூறப்பட்டதுபோல அறம் தன்வீட்டில் தொடங்கப்பட வேண்டியதல்லவா? (Charity begins at home). **இல்வாழ்க்கையில் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான்** என ஐந்து பகுதியினரையும் ஓம்புதல் வேண்டும் என்பது கூறப்பட்டது. ஒக்கலே சுற்றமாகும். சுற்றம் தழால் என்னும் அதிகாரத்துள் சில குறள்கள் (526, 528–530) அரசர்க்கே உரிய எனினும் ஏனைய யாவர்க்கும் பொருந்துவனவே.

செல்வமுடையோர் அச்செல்வத்தைத் தம்சுற்றத்தோர் பொருட்டுப் பயன்படுத்தி அவர்தம்மைச் சூழுமாறு வாழ்தலே அவர்கள் அச்செல்வத்தைப் பெற்றதன் பயனாகும். காகம் உணவைக் கண்டால் அதை மறைத்துத் தான் மட்டும் உண்ண எண்ணாமல் பிற காகங்களையும் தன் ஒலியால் அழைத்து உடன் உண்கிறது. அதுபோல் தம் பொருளைச் சுற்றத்தாரும் அனுபவிக்குமாறு உகந்தளிப்பவரிடத்திலேயே செல்வம் சேரும். இன்னும் வேண்டியபோது பொருள் கொடுத்து உதவுவதும் இனிய சொற்களைக் கூறுவதுமே சுற்றத்தார் தன்னிடம் வந்து சேர்வதற்கு ஒருவன் செய்ய வேண்டிய உபாயமாம் எனவும் அவ்வாறு சுற்றத்தாருடன் அளவளாவுதல் இல்லாதவனுடைய வாழ்க்கை கரையமைக்கப்படாத குளத்து நீர் நிறைந்து அது பாதுகாக்கப்படாமல் வீணானது போல வீணாகும் என்றும் வள்ளுவர் கூறினார். இவை யாவரும் கைக்கொள்ளத்தக்க அறிவுரைகளே.

நாட்டில் வறுமையை நீக்குவதற்கு வள்ளுவர் தனிப்பட்டோர் செய்யும் அறத்தையே பெரிதும் நம்பினார் எனத் தோன்றுகிறது. ஈகை அரசன் இயல்புகளில் ஒன்று எனவும் (382) கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும் உடையவனாக இருப்பவன் வேந்தர்க்கு ஒளி (390) எனவும் வள்ளுவர் இறைமாட்சியில் கூறினாரேயாயினும் வறுமை நீக்குதலைப் பொதுமக்களின் கடமையாகவே **அறத்துப்பாலிலும் ஒழிபியலிலும்** எடுத்துரைத்தார். அரசன் கொடையளிப்பது படைவீரர்க்கெனவும் உழவுத்தொழிலை யூக்கும்பொருட்டுத் தளர்ந்த குடிகட்கு ஏர், விதை முதலிய நல்கலே அரசன் கொடை எனவும் சில உரையாசிரியர் கொண்டனர். வறியோர் யாவர்க்கும் பொருள் வழங்கி யுதவுவதும் அரசன் கடமையெனக் காலிங்கர் போன்ற சில உரையாசிரியர் கூறினர். ஆயினும் போக்குவரத்து வாய்ப்புக்கள் குறைவாக இருந்த அக்காலத்தில் அரசரிடம் நேரில் சென்று உதவி பெறக் கூடியவர் சிலராகவே யிருப்பர். பாணர் முதலியோர் நெடுவழி தாண்டி அரசர்களிடம் சென்று பொருள் பெற்றமையைப் புறநானூற்

றிலும் பத்துப்பாட்டிலும் வரும் சில பாடல்கள் காட்டும். பொதுவாக வறியோர் செல்வர்களின் உதவியையே நாடும் நிலைமை நாட்டில் அக்காலத்து இருந்திருத்தல் வேண்டும். இந்நிலையையே குறளும் காட்டுகிறது.

தற்காலத்தில் சில சமயச்சார்பான நிறுவனங்களினாலும் சமூகப் பணி புரியும் பிறநிறுவனங்களினாலும் பல அறங்கள் செய்யப்படுகின்றன. வள்ளுவர் காலத்தில் இவ்வாறு கூட்டுமுயற்சியினால் வறியவர்க்குதவும் முறை இருந்ததா என்பது தெரியவில்லை. வள்ளுவர் தனிப்பட்டோர் செய்யும் அறத்தை உளத்திற் கொண்டே ஈகை, ஒப்புரவு, இரவு முதலிய அதிகாரங்களை எழுதினார் எனத் தோன்றும்.

மழை வழங்கும் வானம் போன்ற கைமாறு கருதாத ஒப்புரவாளரின் தன்மையை வள்ளுவர் பலவாறு போற்றினார். நீர் நிறைந்த ஊருணி போலவும் உள்ளூர்ப் பழுத்த பயன்மரம் போலவும் மருந்தாகித் தப்பாமரம் போலவும் தன்செல்வம் பிறர்க்குப் பயன்பட வாழ்வோரே பேரறிவாளர் எனவும் நயனுடையார் எனவும் பெருந்தகை எனவும் உலகோரால் ஏத்தப்படுவர். ஈகை என்னும் தலைப்பின்கீழ் வறியார்க்கொன்றீதலையும் சிறப்பாக அற்றார் அழிபசி தீர்த்தலையும் கூறிய வள்ளுவர் ஒப்புரவின்கீழ்ச் செல்வத்தைப் பல வழிகளிலும் பிறர்க்குப் பயன்படுத்தலைப் பொதுவாகக் கூறினார். இவ்வொப்புரவுக் கொள்கை மேல்நாடுகளில் இடைக்காலத்தில் கிருஸ்தவ சீர்திருத்த இயக்கத்தலைவர்களால் அரசர்கள் பிரபுக்கள் ஆகியோரின் கடமை குறித்துப் போதிக்கப்பட்டுப்[9] பின் பொதுமக்கள் தம் உடைமைகளைப் பயன்படுத்தும் முறை குறித்தும் பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தர்மகர்த்தாக் கொள்கை (Theory of Trusteeship)யை யொக்கும். 'உன் பொருளை நிலத்தை அல்லது ஆட்சியை உனக்கே உரியது நீயே துய்த்தற்குரியது எனக் கருதாதே. அப்பொருள் சமுதாய நலத்தின் பொருட்டு உன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக எண்ணு' என்பதே இக்கொள்கையாகும். வள்ளுவர் காட்டும் ஒப்புரவாளனும் அவ்வாறே எண்ணுவான்.

### 4.2.2. பிறர் பொருட்டுத் துன்பமேற்றல்-தன்மறுப்பு

தன்மறுப்பு (தியாகம்) என்பதைக் குறித்து வள்ளுவர் தனியாக ஓர் அதிகாரம் எழுதவில்லையெனினும் பிறர் பொருட்டு ஒருவன் தன் னலத்தை மறுத்தல் துன்பத்தை ஏற்றல் சிறந்தனவாகும் என்னும் கருத்து திருக்குறளில் பல இடங்களில் வருவதே. குடும்பத்திற்காகச்

9. Ebenstein, William., Great Political Thinkers, P. 302-303

செய்யப்படும் தன்மறுப்பு முன்பே கூறப்பட்டது (இல்லம் பார்க்க). தன் குடும்பத்தார்க்கு வரத்தக்க துன்பத்தை அகற்றிக் காக்க விரும்பும் ஓருவன் தன் உடம்பு இடும்பைக்கே கொள்கலம் எனக் கூறப்படும் அளவிற்குத் தான் துன்பத்தை ஏற்க முன்வருவான் என்பது அங்குக் கூறப்பட்டது.

படைவீரர் தம் நாட்டிற்காகவும் அரசற்காகவும் போரில் புண் படவும் உயிரிழக்கவும் உகந்து முன்வரல் வேண்டும் என்பது படை மாட்சி, படைச்செருக்கு என்னும் அதிகாரங்களில் கூறப்பட்டது. 'உலை விடத்து ஊறஞ்சா வன்கண்' (762), 'வேண்டா உயிரார்' (777) 'உறின் உயிர் அஞ்சா மறவர்' (778) என்னும் தொடர்கள் வீரர்களின் இப் பண்பைக் காட்டும்.

புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோட் டக்க துடைத்து (780)

என்னும் குறள் வீரர்கள் தம்மரசர் பொருட்டுப் போரில் உயிரிழப் பதைச் சிறந்த பேறாகக் கருதுவர் எனக் கூறுகிறது.

'அழிவின்கண் அல்லல் உழப்பதாம் நட்பு' (787) என்னும் தொடர் நண்பர்கள் நட்டோர்க்குத்துன்பம் அல்லது அழிவுநேரிடுங் கால் தாம் அத்துன்பத்தை யவருடன் சேர்ந்து அனுபவித்தல் வேண்டும் எனக் காட்டுகிறது. இது நட்டோர் பொருட்டுத் தன்-மறுப்பாகும்.

பொதுவாகச் சமுதாயத்திலும் நல்லோர், அன்புடையோர் பிறர் பொருட்டுத் தம்நலத்தைத் துறப்பர். பிறர்க்கு உதவி செய்ய முன் வருவோர் அது பொருட்டுத் தாம் வறுமையுறுவர். நுகர்தற்குரிய வற்றை நுகராதிருப்பர்.

அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (72)

என்பது ஒரு குறள். அன்புடையார் தம் பொருளை, நேரத்தை, உழைப்பைப் பிறர்க்கு நல்குவது மட்டுமன்றி ஏற்றபோது தம் உடம்பையும் அளிப்பர் அதாவது மரணத்தையோ பெரும் உடல் துன்பத்தையோ பிறர்பொருட்டு ஏற்கவும் துணிவர் என்பதே இங்குக் கூறப்பட்டது.

ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து (220)

நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது (235)

என்னும் குறள்களும் மேலோர் பிறர் பொருட்டுச் செய்யும் தன்மறுப்பையே காட்டும். பிறருக்கு உதவுவதனுல் கேடு நேரிடுமாயின் ஒருவன் தன்னை விற்ருயினும் ஒப்புரவு செய்து அக்கேட்டை யேற்றுக் கொள்ளுதலே தக்கதாம். மற்றும் புகழ் தரும் கேடும் புகழ் என்றும் நிலைத்திருக்கத்தக்க சாக்காடும் வித்தகர்க்கல்லால் பிறர்க்கு அரிதாம் எனவும் கூறப்பட்டன. சிறந்த அறிவுடையோர் (வித்தகர்) பிறர் பொருட்டுத் தாம் கேட்டையேற்பர், சாவதற்கும் துணிவர். அதனுல் என்றும் உளதாம் புகழையடைவர்.

இவ்வாறு சிறந்தோர் செய்யும் தன்மறுப்பு குறளில் விளக்கப்பட்டது.

### 4.2.3. பிறர்திறத்துப் பொறுப்பு

சமுதாயத்தில் மக்கள் தத்தம் விருப்பின்படியே வாழ்தற்குரியரல்லர். யாவரும் பிறர் திறத்துத் தம் பொறுப்பையுணர்ந்து வாழ்தற்குரியவரே. முன்பு நல்லில்லத்தின் தன்மையை விளக்கும் போதும், 'பிறன்பழிப்ப தில்லாயின் நன்று' (49) என்ற தொடருக்கு, 'இல்வாழ்வார் பிறரைப் பழித்தலாகாது; ஏனெனில் சமூகத்தில் தீமை நிகழின் அதில் தம்பொறுப்பையும் அவர்கள் உணர்தல் வேண்டும்' எனச் சிலர் பொருள் கொண்டமை குறிப்பிடப்பட்டது. பிறரால் பழிக்கப் படாதிருக்க வேண்டுமென முயலவேண்டியது ஏன்? பிறர் திறத்துத் தம்பொறுப்பை உணர்வதனுலேயே. குடும்பத்தலைவன் பிறர் பழிக்காதபடி குடும்பத்தை நடத்துதல் வேண்டும். மனைவி நற்சொல் காக்க வேண்டும். மகன் 'இவன்தந்தை என்னோற்ருன் கொல்' என்ற புகழ்ச் சொல்லைத் தோற்றுவித்தல் வேண்டும்.

திருக்குறள் முழுவதிலும் மக்கள் பிறர் எண்ணுவதைப் பிறர் கூறுவதைக் கவனித்து நடக்க வேண்டியவர்களே, பிறர் திறத்தில் தம் பொறுப்பை உணரவேண்டியவர்களே என்ற கருத்தைக் காணலாம். நாட்டில் குற்றம் செய்வோரை ஒறுத்துக் குற்றங்கள் நிகழாமல் காக்க வேண்டியவன் அரசன். அவன் யாருக்குப் பொறுப்பாவான்? அவனும் அமைச்சர் கூறும் அறிவுரையைக் கவனிக்க வேண்டியவனே. அவன் விரும்பாததாக அது இருப்பினும் அதையும் கேட்க வேண்டியவனே. அவன் செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடையவனுக

இருத்தல் வேண்டும் என்றார் வள்ளுவர். அமைச்சர் சொல்லை மட்டு மன்றிப் பொதுமக்கள் எண்ணத்தையும் அவர்கள் கூற்றையும் கூட அவன் கவனித்தல் வேண்டும். 'இறைகடியன்' என அவர்கள் கூறும்படி அவன் நடத்தல் ஆகாது. அவ்வாறு மக்கள் கூற அவன் நடப்பானே யாகில் அவன் ஆட்சி விரைவில் அழியும் என்றார்.

நாட்டில் தீமை பெருகாமலும் குற்றங்கள் மலியாமலும் காக்கும் பொறுப்பு அரசனுடையது மட்டுமன்று. மக்களுடையதுமே யாகும். 'மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை' என்ற தொடர்க்கு மகளிர் தத்தம் இல்லத்திலுள்ளோரைத் தவறு செய்யாமல் தடுத்துக் காப்பாரேயாயின் சிறை காக்கும் அரசர்காப்பைவிட அது பயனுள்ளதாகும் எனச் சிலர் பொருள் கொண்டது முன்பு குறிப்பிடப்பட்டது. இத்தொடர்க்கு இவ்வாறு பொருள் கொள்ளாவிட்டாலும் கூட இல்லந்தோறும் அன்பு நிலவுமாயின், விருந்தோம்பல் முதலிய அறங்கள் நிகழுமாயின் நாட்டில் குற்றங்கள் மலிதல் அரிதே. வறுமை பலர் குற்றம் புரிவதற்குக் காரணமாக இருக்கிறது என்பதையுணர்ந்தே வள்ளுவர்,

இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும் (1042)

என்றார். மேலும் நல்குரவு 'தொல்வரவும் தோலும் கெடுக்கும்' (1043) என்றும் 'அறம்சாரா நல்குரவு' (1047) என்றும் கூறினர். ஈகை, ஒப்புரவு ஆகியவற்றால் வறுமையை நீக்குவதும் நாட்டில் குற்றங்கள் நிகழாமல் காத்துச் சமுதாயத்தை நன்னிலையில் வைக்க ஒரு வழியே யாகும். இவ்வுண்மையையே மணிமேகலையென்னும் காவியமும் விளக்குகிறது. வள்ளுவரும் பல இடத்திலும் ஈகையைப் போற்றிப் பசி நீக்கும் அறத்தையும் பகுத்துண்ணலையும் வற்புறுத்தினர்.

குடும்பத்தில் யாவரும் தத்தம் கடமையைச் செய்யவேண்டிய வராயினும் சிலர் சிறப்பாகக் குடும்ப பாரத்தைத் தாங்கவும் குடும்பத்தி லுள்ள பிறர் பொருட்டு உழைக்கவும் தம் நலத்தைத் துறக்கவும் முன் வருவர் என்பது குடி செயல் வகையுள் கூறப்பட்டது. அவ்வாறே சமுதாயத்தில் யாவரும் பிறர் திறத்துத் தப்பொறுப்பை யுணர்ந்து வாழ வேண்டியவரேயாயினும் சிலர் சிறப்பாகச் சமுதாயப் பொறுப்பை யுணர்வர். அத்தகையோரே பண்புடையோர் எனவும் சான்றோர் எனவும் போற்றப்படுவர். அத்தகையோர் ஈகை முதலியவற்றால் வறுமைத்துன்பத்தை நீக்குவதுடன் தம்சொல்லாலும் செயலாலும் முன்மாதிரியாலும் பிறர்க்கு நலம் பயப்பர். அவர் நற்செயல்கள்

வரையறைக்குட்பட்டனவல்ல. எல்லா நன்மையையும் செய்ய விழைவர் என்பதையே,

> கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
> சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு (981)

என்ற குறள் கூறுகிறது. அவர் யாவரிடத்தும் அன்பும் கண்ணோட்டமும் உடையவராயிருப்பர். பிறர் தீமைசொல்லார். ஆயினும் தம் இனிய இயல்பினாலும் பணிவினாலும் பிறரை வென்று நல்வழிப்படுத்துவர்.

பிறர் பொருட்டுத் தம் பொறுப்பையுணர்வோர் சமுதாயத்தில் குற்றங்கள் நிகழக் காணின் பிறரைக் குறை கூறார்; வெகுளார். பிறர் தவற்றின் பொருட்டுத் தாம் நாணுவர்.

> பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
> உறைபதி என்னும் உலகு (1015)

என இத்தகையோரை வள்ளுவர் போற்றினர்.

சமூகத்தில் உள்ள நற்பண்புடையோர் பலர் பிறரையும் நல்வழிப்படுத்திச் சமுதாயத்தை நன்னிலையில் நிறுத்திக் காக்க முயன்று வருவதினாலேயே சமுதாய ஒழுங்கு நிலைத்திருக்கிறது.

> பண்புடையார் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
> மண்புக்கு மாய்வது மன் (996)

என்ற குறள் இதைக் காட்டும். 'அமுதம் கிடைப்பினும் தனியே உண்ணாதவரும் முனிவும் சோர்வும் இன்றிப் பிறர்க்குவரும் துன்பத்திற்கு அஞ்சிப் புகழ் தரும் செயலின் பொருட்டு உயிரையும் கொடுக்க விழைபவராய் உலக முழுவதையும் பெறினும் பழிதரும் செயலைச் செய்யாதவர்களாய்த் தமக்கென முயலாது எப்பொழுதும் பிறர்க்கென முயல்வோர் சிலர் இருப்பதனாலேயே உலகம் நிலை பெற்றிருக்கிறது' என்ற **இளம்பெருவழுதியின் புறநானூற்றுப்** பாடலும் (புறம். 182) இக்கருத்தையே தரும். சமுதாயப் பொறுப்பைக் குறித்த இத்தகைய கருத்துக்கள் பண்டைத் தமிழரிடையே நிலவின போலும்.

## 4. 3. உள்ளப்பண்புகள்

உண்மையில் சமுதாய அறங்கள், உள்ளப் பண்புகள் என அறத்தைப் பிரித்தல் இயலாது. உள்ளப்பண்புகளிலிருந்தே செயல்கள் தோன்றுகின்றன. உள்ளத்திலிருந்தே அறமனைத்தும் தோன்றும் என்பதை

உணர்ந்தே வள்ளுவர் 'மனத்துக்கண் மாசிலனுதல் அனைத்தறன்' (34) என்ருர். அறக்கருத்துக்களை ஆயும் பொருட்டு இவ்வாறு இங்கு இத்தலைப்புக்களின்கீழ்த் தொகுக்கப்பட்டனவேயன்றி நடைமுறையில் இவைவேறல்ல.

### 4. 3. 1. அன்பும் அருளும்

அன்பும் அருளும் நிலவும் சமுதாயத்தையே வள்ளுவர் விரும்பினுர். சமுதாயத்தில் சிலர் அன்புடையர் சிலர் அருளுடையர் என்ற பாகுபாடு இல்லை. அன்பும் அருளும் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றுபவையே. தொடர்புடையோரிடத்து நிகழும் அன்பு தொடர்பிலார் மாட்டும் அருளைத் தோற்றுவிக்கிறது. தொடர்பிலாரிடத்து ஏற்படும் அருள் பின் அவருடன் நெருங்கிப் பழக அன்பாக நட்பாக மாறுகிறது. அருளென்னும் அன்பீன் குழவி' (757), 'அருள்கருதி யன்புடைய ராதல்' (285) என்ற திருக்குறள் தொடர்களும் இதை விளக்கும்.

அன்பு செய்யப்பட்டோர் துன்புற்றவிடத்து உடன் துன்புற்று அவர் பொருட்டுக் கண்ணீர் சொரிதலும் அன்பினுல் எத்தகைய தன் மறுப்பையும் செய்து தன் உடலையும்கூடப் பிறர்க்களித்தலும் அன்பின் முக்கிய இயல்புகள் என வள்ளுவர் கருதினுர். அருளும் பிறர் துன்ப முருமல் காப்பதே. அருளாள்வார் மன்னுயிரோம்புவர்.

அன்பும் அருளும் இல்லத்திலும் அறச்செயல்களிலும் மட்டு மன்றிப் போரிலும் அரசியலிலும்கூடக் கடைப்பிடிக்கப்படவேண்டிய வையே. நாட்டைக் காக்கப் போர் சில சூழ்நிலைகளில் அவசியமாகிறது. போரில் பகைவரைக் கொல்வதும் கடமையாயினும் அவர்க்கு ஒரு துன்பம் நேர்ந்தவிடத்து (அவர் படைக்கலத்தையிழந்தோ காயமுற்ருே இடருறும் ஒரு நிலையில்) அருள் கொண்டு உதவுதல் அல்லது தாக்கா தொழிதல் ஏற்றது என வள்ளுவர் கூறினுர் (773). அரசன் நாட்டில் குற்றங்கள் நிகழாதிருத்தற் பொருட்டுக் குற்றம் செய்வோரை ஒறுத்தல் ஏற்றதாயினும் அங்கும் அருள் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும். கையிகந்த தண்டம் ஆகாது. 'கடிதோச்சி மெல்ல எறிக' (562) என அங்கும் அருள் நோக்கத்தை வள்ளுவர் வற்புறுத்தினுர்

> அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
> மறத்திற்கும் அஃதே துணை (76)

என்னும் குறட்கு உரை கூறுங்கால் பரிமேலழகர் மறத்தை நீக்குதற்கு அன்பு துணை எனக் கொண்டார். அவ்வாருயின் இங்கு மறம் சினத்தைக் குறித்தல் வேண்டும். சினம் தோன்றும்போது அன்பு

அச்சினத்தை நீக்கும் என்பதாகும். மறத்தையும் அன்பு வெல்லும் என்ருர் பரிதியார். 'மறத்திற்கும் அன்பே துணை' என்பதற்கு "வீர வாழ்வாகிய மறத்திற்கும் (அது சார்ந்த ஆட்சிக்கும் சமுதாய அமைதிக்கும்) அந்த அன்பே தக்க பாதுகாப்பாகும்" எனக் கா. அப்பாத்துரை உரை கூறினர். அறத்தையும் இன்பத்தையும் சமுதாயத்தில் நிலை நிறுத்தவேண்டுமென்ற அன்பு சார்ந்த நோக்கத் துடன் செய்யப்படும் போரே நீடித்த வெற்றியைத் தரும், அத்தகைய நோக்கம் கொண்ட ஆட்சியே நிலைத்திருக்கும் என அவர் விளக்கினர். அன்பு வாழ்க்கையின் பல துறைகளிலும் நிலவவேண்டும் என்ற வள்ளுவர் கருத்தை இவ்வுரைகள் வெவ்வேறு வகையில் விளக்கின.

### 4.3.2. உண்மையும் நேர்மையும்

அவையத்தோரும் வணிகரும் எவ்வாறு நேர்மையைக் கடைப் பிடிக்க வேண்டுமென்பது முன்பு கூறப்பட்டது (தொழில்கள் பார்க்க). ஆயினும் நேர்மை யாவர்க்கும் வேண்டப்படுவதே. பகைவர் திறத்தும் நண்பர்திறத்தும் பிறர்திறத்தும் நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் நேர்மை தவறுவதனல் பொருள் பெறும் வாய்ப்பு ஒன்று ஏற்பட்டால் அதை அப்பொழுதே விட்டுவிடவேண்டுமென்றும் வறுமை காரணமாகவோ செல்வம் காரணமாகவோ தன் உள்ளத்தில் கோடாமலிருப்பதே சான்ருேர்க் கணி எனவும் வள்ளுவர் பொதுப் படவே கூறினர். வறுமை காரணமாக மக்கள் வறுமைத் துன்பத்தைப் போக்க எண்ணித்தவறு செய்தல் கூடும். செல்வர்கள் தம்செல்வத் தினலும் செல்வாக்கினலும் செய்த தவற்றை மறைக்கலாமென எண்ணி யும் தவறிழைத்தல் கூடும். இரண்டையும் விலக்கி எந்நிலையிலும் நேர்மை தவறலாகாது என்ருர்.

மக்கள் உண்மையைப் பேசவும் வேண்டும், உண்மையைநாட வும் வேண்டும் என வள்ளுவர் விரும்பினர். 'தன்நெஞ் சறிவது பொய்யற்க' (293) எனவும் 'மனத்தொடு வாய்மை மொழியின் தவத் தொடு, தானஞ்செய் வாரில் தலை' (295) எனவும் பேச்சில் வாய்மையைக் கடைப்பிடிக்க வேண்டுமென வற்புறுத்திய வள்ளுவர் எல்லாவற்றிலும் உண்மையை ஆய்ந்து அறியவேண்டுமெனவும் கற்பித்தார். உலக வாழ்க்கையிலும் அரசியலிலும் ஈடுபடுவோர்க்கும் இவ்வியல்பு வேண்டும். தத்துவ ஆய்விலும் சமய நூற் கல்வியிலும் ஈடுபடுவோர்க் கும் இவ்வியல்பு வேண்டும். அரசியலில் ஈடுபடுவோர் பலருடன் பழகுவர்; உரையாடுவர். பல செய்திகளைப் பலர் வாயிலாகக் கேட்பர். சொல்வோர் யாராக இருப்பி அனும் அவர் சொல்வன உண்மையா

இல்லையா, அன்றி நன்மை பயப்பனவா தீமை பயப்பனவா என்பதை அவர்கள் ஆய்ந்து தேர்தல் வேண்டும். பிறர்பிறர் கூறுவதை அவ்வாறே கொள்ளுதல் ஆகாது.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (423)

என்னும் குறள் இதனையே வற்புறுத்துகிறது. நண்பரோ பகைவரோ கற்றோரோ கல்லாதாரோ சமூகத்தில் மேல்நிலையில் இருப்பவரோ தாழ் நிலையிலிருப்பவரோ யாராக இருப்பினும் அவர் கூறுவதை ஆய்ந்து உண்மையை உணர்தலே அறிவாம். துறவியரும் மற்றும் தத்துவ ஆய்விலும் சமய நூலாய்விலும் ஈடுபடும் பிறரும் தம்சிந்தனையிலும் ஆய்விலும் உண்மையை அறியவே விழைதல் வேண்டும்.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (355)

எனக் குறள் அவர்கட்கு அறிவுரை கூறுகிறது. எப்பொருள் எவ்வியல்பை யுடையதாகத் தோன்றினும் அதன் மெய்யான இயல்பை ஆராய்ந்து உணர்வதே அவர்கட்கு அறிவாம். எத்துறையினும் உண்மையை யறிய விழைபவராகவும் உண்மையறிவில் நாட்டம் உடைய வராகவுமே மக்கள் இருக்க வேண்டுமென வள்ளுவர் விரும்பினர்.

### 4. 3. 3. ஊக்கமும் உறுதியும்

இப்பண்புகள் **ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை இடுக்கணழியாமை** என்னும் நான்கு அதிகாரங்களிலும் அதிகமாக் வற்புறுத்தப்படுகின்றன. இவை அரசியலில் வருவதால் இப்பண்புகள் சமுதாயத்தில் சிறப்பாகப் பொறுப்புள்ள நிலையில் உள்ளோர்க்கு வேண்டப்படுவன எனக் கொள்ளலாம்.

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையான் நீளும் குடி (1022)

என **ஒழிபியலில் குடிசெயல்வகையுள்ளும்** கூறப்பட்டது. ஊக்கமும் முயற்சியும் குடிமக்கள் யாவர்க்கும் தத்தம் தொழில்களில் வேண்டப் படுவனவே.

ஒருவற்கு உடைமையாவது ஊக்கமே. ஊக்கம் இல்லார் செல்வ முடையராயினும் அதை இழப்பர்; ஊக்கமுடையாரே செல்வத்தை யிழப்பினும் அது பொருட்டு உளங்கலங்கார். அசைவிலா ஊக்கமுடை

யவரிடம் செல்வம் சென்று சேரும். செல்வத்தை ஒருகால் இழப்பினும் திரும்பவும் தேடிக் கொள்வர். ஊக்கம் உயர்வைத் தரும்.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு (595)

நீர்ப்பூக்களின் தாளினது நீளம் அப்பூக்கள் மலரும் நீர் நிலையில் நின்ற நீரின் அளவாக இருக்கும். நீர்மட்டத்தின் மேலே மலர் பூப்பதால் நீரின் அளவிற்குத் தாள் உயர்கிறது. அவ்வாறே மக்களின் உள்ளத்திலுள்ள ஊக்கத்தின் அளவுக்கு அவர் உயர்வர் என்றார். இவ்வாறு கூறுவதனால் அவரவர் ஊக்கத்திற்குத் தக மக்கள் உயர்வடையத்தக்க நிலை சமுதாயத்தில் இருக்க வேண்டுமென வள்ளுவர் விரும்பினர் போலும். ஆனால் சமுதாயத்தில் போதிய வாய்ப்புக்கள் இல்லாவிடின் எவ்வளவு ஊக்கமும் முயற்சியும் இருப்பினும் ஒருவன் தான் எய்த முயன்ற குறிக்கோளை எய்த முடியாது போதலும் கூடும். மக்கள் (சிறப்பாகப் பொறுப்புள்ள நிலையிலுள்ளோர்) உயர்ந்த குறிக்கோளையே உளத்திற் கொண்டு முயறல் வேண்டும். அம்முயற்சி கைகூடிற்றில்லையாயினும் உயர் குறிக்கோள்கள் அல்லது கருத்துக்கள் கைவிடற்பாலன அல்ல. யானையின் உடம்பில் பல அம்புகள் தைப்பினும் அது தன்பெருமை குறையாது வீறுடன் நிற்கும். அதுபோல ஊக்கமுடையோரும் தம்முயற்சிக்குச் சிதைவு ஏற்பட்ட போதும் தளராது மேலும் முயல்வர்.

மடியினல் ஒருவனின் குடியழியும், குற்றங்கள் பெருகும். மடியுடையோர் செல்வத்தையிழப்பர், பிறரால் இகழப்படுவர், இறுதியில் பகைவர்க்கு ஏவல் செய்யும் நிலையையும் அடைவர். ஆகவே மக்கள் மடியின்றி வாழ வேண்டுமென வள்ளுவர் விரும்பினர்.

முயற்சியுடையோர் எச்செயலையும் அருமையுடையது என எண்ணார். ஒரு செயலைத் தொடங்கிய பின் அதை இடையில் விட்டு விடார், முயன்று செய்து முடிப்பர். முயற்சியுடையோர் இன்பத்தையும் விழையார். வினையையே விழைவர். அத்தகையோர் தம் கேளிர்க்கு வரும் துன்பத்தையும் நீக்கி உதவ வல்லவராயிருப்பர். முயற்சியுடையோரே பிறர்க்கு உதவவும் வல்லவராயிருப்பர். போதிய வாய்ப்புக்கள் இல்லாநிலையிலும் (தெய்வத்தானாகா தெனினும்) முயற்சி ஓரளவு பயனைத்தரும். ஆகவே மிக முயற்சியுடையோர் மாறுன சூழ்நிலைகளையும் வெல்வர் (ஊழையும் உப்பக்கம் காண்பர்).

இடுக்கண் ஏற்படுங்கால் அது பொருட்டுக் கலங்குதல் ஆகாது அதற்குமாறாகச் சிரித்தல் வேண்டும் என்றார் வள்ளுவர். அவ்வாறு சிரித்தலே அவ்விடுக்கணை வெல்வதற்குரிய வழியாம். எத்தகைய மேடுபள்ளங்கள் நிறைந்த பாதையிலும் வண்டியை இழுத்துச் செல்லும் எருது போல இடுக்கண் ஏற்படுங்கால் கலங்காமலும் துன்பம் அடுக்கி வரினும் அதற்கு அழியாமலும் இருப்பவன் துன்பம், இடுக்கண் அனைத்தையும் வெல்வன். துன்பத்திற்கு அழிதலாகாது எனக் கூறுங் கால் இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகக் கருத வேண்டும், துன்பத்தை இன்பமாகக் கொள்ள வேண்டும் எனவும் வள்ளுவர் கற்பித்தார்.

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன் (628)

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன் (629)

இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு (630)

என்னும் குறள்கள் இதனைக் காட்டும். இக்குறள்களில் கூறப்பட்ட கருத்து சீனோ (Zeno) என்ற கிரேக்க அறிஞரின் இன்பதுன்பநடு நிலைக் கொள்கையை (Stoicism) ஒக்கும். பண்டைக்காலத்தில் கிரேக்கநாட்டுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையே வாணிபத் தொடர்பும் பிற தொடர்புகளும் இருந்தன என்பதைச் சங்க இலக்கியங்கள் அனைத்தும் காட்டுகின்றன. காவிரி கடலோடு கலக்கும் இடத்திற் கருகே பயனற வறியா யவனர் பலர் (செல்வம் குறைவுபடுதலில்லாத கிரேக்கர்) இருப்பிடங்கள் அமைத்துக் குடியிருந்தனர் எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது.[10] இவ்வாறு நல்லுறவு பூண்டு தமிழ்நாட் டாருடன் பல தொடர்புகளை யேற்படுத்திக் கொண்ட கிரேக்கருக்கும் நம் நாட்டவருக்கும் இடையே ஓரளவு கருத்துப் பரிமாற்றமும் இருந் திருத்தல் கூடும். பொதுவாகப் பண்டை இந்தியாவின் சமுதாய சமயக்கருத்துக்களையும் பண்பாட்டையும் ஆய்ந்தோரும் கிரேக்கர்க்கும் இந்தியர்க்குமிடையே நிகழ்ந்த கருத்துப் பரிமாற்றத்தைக் குறிப்பிடு கின்றனர்.[11]

10. சிலப்பதிகாரம் 5. 10

11. Chatterji, Shuniti Kumar, Indian Culture, P. 6.
"In ancient times there was much give and take between the Greeks and the Indians".
Prabhu Pandharinath, H., Hindu Social Organization, P. 69-72

இனி வள்ளுவர் மேன்மக்களுக்கு மட்டும் முயற்சியைக் கூற வில்லையென்பதும் பிற இடங்களில் வரும் சில குறள்களால் தெளிவாகும். நம்மிடம் பொருளில்லை எனக் கூறிச் சோர்ந்திருப் பவரைக் கண்டு நிலம் என்னும் நல்லாள் நகும் என்றார் வள்ளுவர், மக்கள் முயற்சியுடையோராய் உழைத்துப் பயனடைதல் வேண்டும் எனக் கருதியதனாலேயே. மேலும்,

> தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்த
> துண்ணலின் ஊங்கினிய தில் (1065)

என அவர் இரப்போர்க்கும் அறிவுரை கூறினர். ஒருவன் தன்முயற்சி யினல் தேடியது தெளிந்த நீரில் அடப்பட்ட புல்லரிசியால் ஆகிய உணவேயாயினும் அதை உண்பதைவிட இனிது வேறில்லை என்றார். சமுதாயத்தில் இரப்போரும் இருத்தல் இயல்பு என வள்ளுவர் கருதி னரேயாயினும் மக்கள் முயன்று வாழ்தலையே விரும்பினர். 'காணர் கேளார் கான்முடப் பட்டோர் பேணுந ரில்லோர் பிணிநடுக் குற்றோர்' (மணி. 13. 111-112) ஆகியோரே உணவளிப்பதற்கு ஏற்றவர் என மணிமேகலையுள் குறிக்கப்பட்டதுபோல் உடல்வலிமையற்றோர், முயன்று பயனடையும் வாய்ப்பில்லோர் இரத்தல் பொருந்துமெனவும் உடல் வலிமையுள்ளோர் முயற்சியினல் சிறிதளவு பொருளோ உணவோ தேடக்கூடியவராயினும் இரத்தல் தகுதியன்று எனவும் கருதினர்போலும்.

## 4. 3. 4. அடக்கம் முதலியன

அடக்கம் என்பதற்குப் பலவகையாகப் பொருள் கொள்ளுதல் கூடும். செயலில் பேச்சில் உள்ளத்து உணர்ச்சிகளில் எண்ணங்களில் கூட அடக்கத்தைக் கடைப்பிடித்தல் கூடும். செருக்கின்றிப் பணிவுடன் நடந்து கொள்ளுதலையும் அடக்கம் என்பர். ஐம்புல ஆசைவழி மனத்தைச் செல்லவிடாது தடுத்தலைப் புலனடக்கம் என்பர். பேச்சில் கடுஞ்சொல்லின்றித் தணிவுடன் பேசுதலையும் அடக்கம் என்பர். உள்ளத்தில் சினம் தோன்றுது காத்தலும் அடக்கமாகும். இவை யனைத்தையுமே வள்ளுவர் அடக்கமுடைமை என்ற தலைப்பின்கீழ்க் கொண்டார்.

சமுதாயத்தில் யாவரும் அடக்கமுடையவராயிருத்தல் விரும்பப் படுமாயினும் செல்வர்களே அதை மற்றெரு செல்வமாகக் கருதிக் கடைப்பிடித்தல் வேண்டும் என்றார். சமூகத்தில் செல்வமுடையோர், செல்வாக்குடையோர், உயர்குலத்தோர் எனப் பிறரால் மதிக்கப்

படுவோர் ஆகியோரனைவரும் செருக்கின்றிப் பணிவுடையவராய் அடக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டுமென்பது வள்ளுவர் பல இடத்தில் பன்முறை கூறும் கருத்தே யாகும்.

செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து (431)

என அரசர்க்கும் அவர் செருக்கின்மையையே விதித்தார். பின்னும் 'வியவற்க எஞ்ஞான்றும் தன்னை' (439) எனக் கூறி உள்ளத்தில் தாழ்மையைக் கற்பித்தார். அடக்கமுடைமையில் செல்வரின் அடக்கத்தைச் சிறப்பித்தார்.

புலனடக்கம் துறவியர்க்கு மட்டுமன்றி இல்லறத்தோர்க்கும் உரியது என்பதே வள்ளுவர் கருத்து எனத் தெரிகிறது. முன்பு இல்லம் என்னும் பகுதியில் கூறப்பட்டதுபோல இல்லறத்தோர் இனிய பொருள்கள் அனைத்தையும் நுகர்தற்கும் வாழ்க்கையில் இன்பம் துய்த்தற்கும் உரியவரேயெனினும் நெறியினின்றும் தவருது அறவழியில் நிற்றற்பொருட்டு அவர்களும் அடக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டியவர்களே. ஆமை தன்ஐந்துஉறுப்புக்களையும் தீமைபுகாது ஓட்டின் கீழ்அடக்கிக் காப்பதுபோல ஐம்புலன்களையும் பாவம் புகுதாமல் காக்க வேண்டும் என்ருர் வள்ளுவர். இத்தகைய புலனடக்கம் அல்லது மனவடக்கம் பகவத்கீதை முதலிய வடமொழி நூல்களிலும் வற்புறுத்தப்படுவதே.

'யாகாவா ராயினும் நாகாக்க' (127) என வள்ளுவர் நாவடக்கத்தின் அவசியத்தைக் கூறினர். ஒருவன் சொல் ஒன்ருயினும் பிறர்க்குத் தீங்கு பயப்பதாக இருக்குமாயின் அவன் செய்யும் பிற அறங்கள் நன்ருகாதன ஆகிவிடும். தீயினல் சுட்ட புண்ணும் ஆறும். ஆனல் ஒருவன் கூறும் கடும் சொல்லினல் பிறர் உள்ளத்தில் ஏற்பட்ட வடுவோ ஆருது. கடும் சொல்லைப் பிறர் எளிதில் மறப்பதில்லை. ஆகவே சொல்லில் அடக்கத்தைக் கடைப்பிடிக்கவேண்டியது சமூக வாழ்க்கையில் மிக அவசியமாகிறது. உள்ளத்தில் தோன்றும் சினத்தினலேயே வாயினின்றும் கடுஞ்சொல் தோன்றுகிறது. உள்ளத்தில் சினம் எழாதவாறு ஒருவன் காத்துக் கொள்வானேயாகில் அவன் கடுஞ்சொல்லும் கூருன். எத்தகைய தீங்கையும் பிறர்க்குச் செய்யான். கற்றறிவுடையவனய் உள்ளத்தில் சினம் எழாது காத்து அடக்கமுடன் திகழும் ஒருவனையே அறம் சென்று சேர்கிறது என்ருர் வள்ளுவர்.

ஒழுக்கமுடைமை குறளில் கூறப்பட்ட மற்ருெரு பண்பாகும். ஒருவன் பல நூல்களைக் கற்ருனுயினும் உயர்ந்தோர் ஒழுக்கத்தை நோக்கி அதற்கேற்ப ஒழுகுதலே சிறப்பாகும் என்று இங்குக் கூறப் பட்டது.

மேலும் மக்கள் பொறையுடையோராய்ப் பிறர் செய்யும் குற்றங்களைப் பொறுப்பவராய்ப் பிறர் கூறும் இன்னுச் சொற்களைக் கேட்கும் போதும் வெகுளாதவர்களாய் இருத்தல் வேண்டுமெனவும் பிறர் செல்வத்தையோ வளத்தையோ கண்டு அழுக்காறடையாதவர் களாய்ப் பிறர் பொருளை விரும்பாதவர்களாய் நற்பண்புகளுடன் வாழ வேண்டுமெனவும் வள்ளுவர் விரும்பினுர்.

சமூகத்தில் யாவருமே அடக்கத்தையும் ஒழுக்கத்தையும் கடைப் பிடித்தால் குற்றம் புரிவோர் யார்? யாருடைய குற்றத்தைப் பொறுத்தல் வேண்டும்? இயல்பான அறிவுடையோர் கல்விபெறும் வாய்ப்பைப் பெற்ரேர் அறநூல்களைப் பயின்ரேர் தாம் எல்லாவித நற்பண்புகளும் உடையோராய்த் திகழ்ந்து அறிவில்லோர், கல்வி பெறும் வாய்ப்போ அறநூல்களைக் கற்கும் ஆற்றலோ இல்லாதோர் செய்யும் குற்றங்களையும் பொறுப்பவர்களாய் வாழ்தல் வேண்டும் என அவர் கருதியதாகத் தோன்றுகிறது. 'வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை' (153). அறிவிலார் செய்யும் குற்றங்களைப் பொறுப்பதே வலிமை யாகும் என்ருர்.

'யாருக்கு அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது' என விவிலிய நூலுள் புதிய ஏற்பாட்டில் கூறப்படுவது[12] போலச் சமுதாயத்தில் மேல்நிலையிலி ருப்போரே அதிக நற்பண்புகள் உடையவராயும் நல்லறங்களைக் கடைப்பிடிப்பவராயும் இருத்தல் வேண்டுமெனக் குறளும் கூறுகிறது. முதலில் அரசன் தான் குற்றமற்றவனுகவிருத்தல் வேண்டுமெனவும் தன்பொறுப்பை நன்குணர்ந்து நீதியும் அருளும் உடையவனுய் அரசாள்தல் வேண்டுமெனவும் வள்ளுவர் அரசியலில் கூறினுர். நாட்டில் அடுத்த இடத்தைப் பெறத்தக்க அமைச்சர் வினைத்தூய்மை யுடையோராய் ஆன்ற அறிவும் நற்பண்புகளும் உடையோராய் இருக்க

12. பரிசுத்த வேதாகமம் (விவிலியம்), புதிய ஏற்பாடு, லூக்கா. 12. 48,
"எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகம் கேட்கப் படும்; மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிருர்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்".

வேண்டுமென அங்கவியலில் எடுத்துரைத்தார். பொதுமக்களுள்ளும் மேலோர் எனமதிக்கப்படுவோர், கல்வி, செல்வம் முதலியவற்றைப் பெற்றோர், நற்குடிப்பிறந்தோர் எனப் பிறரால் கருதப்படுவோர் ஆகியோர் பிறருக்கு முன்மாதிரியாகவும் ஏனையோரைவிட உயர்அறத்தைப் பேணுபவராகவும் இருத்தல் வேண்டும் என்பதையே குடிமை, பெருமை, சான்றாண்மை முதலிய ஒழிபியலில் வரும் அதிகாரங்கள் காட்டும்.

சென்ற விடத்தால் செலவிடாத் தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு (422)

அஃகி அகன்ற அறிவென்னும் யார்மாட்டுஞ்
வெஃகி வெறிய செயின் (175)

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை (315)

முதலிய குறள்கள் இயல்பான அறிவும் கல்வியும் உடையோரிடமிருந்தே அதிக நல்லியல்புகள் எதிர்பார்க்கப்பட்டன என்பதை விளக்கும்.

## 4. 4. ஒருவரொடொருவர் பழகும் முறை

மக்கள் தனித்து வாழ்பவர் அல்லர். குடும்பமாக, சமுதாயமாக இணைந்து வாழ்பவரே. ஆகவே பிறரோடு பழகும் முறை வாழ்க்கையில் பயிலவேண்டியவற்றுள் மிக அவசியமான ஒன்றாகிறது. ஒருவன் உள்ளத்தில் உண்மையும் நேர்மையும் உடையவனேயாயினும் பல அறச்செயல்களைச் செய்பவனாயினும் பிறரொடு இனியமுறையில் பழக அறியாதவனாயின் அவன் அறங்களால் பலர் பயனடையார். ஆகவே அறங்களைக் கூறுங்கால் பிறர்உள்ளம் மகிழும்படியும் பிறர்உள்ளம் துன்புறாவகையிலும் பேசவும் நடந்து கொள்ளவும் வேண்டுமென்பதனையும் வள்ளுவர் வற்புறுத்தினர்.

அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம் (35)

எனப் பாயிரத்திலேயே அழுக்காறு, அவா, வெகுளி ஆகியவற்றை விலக்கி உள்ளத்தூய்மையைக் கற்பித்ததுடன் இன்னாச்சொல்லும், பிறர்உள்ளத்தை வருத்தும் கடும் சொல்லும் நீக்கிச் செய்யப்படுவதே அறம் என்றார். அடக்கமுடைமை என்னும் பத்தினுள்ளும் ஒருவன் கூறும் சொற்கள் ஒன்றே யாயினும் பிறர்க்குத் தீங்கு பயக்குமாயின்

அவன் செய்யும் அறங்கள் நன்ருகா என்ருர். வீட்டிற்கு விருந்தினர் வருங்கால் அவருள்ளம் வருந்தாதபடி இன்முகத்துடன் வரவேற்க வேண்டுமென வள்ளுவர் விருந்தோம்பலுள்ளும் கூறினர்.

## 4 4 1. இனியவை கூறல் முதலியன

திருக்குறளில் இனியவைகூறல் புறங்கூருமை பயனில சொல்லாமை ஆகிய அதிகாரங்கள் பிறரொடு பேசும் முறையை விளக்கு கின்றன. கேட்டவர்க்கு இனிமை பயப்பது மட்டுமே நோக்கமாயின் வெறும் இச்சக மொழிகளையே மக்கள் ஒருவருக்கொருவர் வழங்கிக் கொண்டிருத்தல் கூடும். ஆனல் வள்ளுவர் இன்சொல் எனக்கூறுவது அதையன்று. இன்சொல் பேச்சளவில் இனியதாக அன்றி அன்போடு கூடியதாயும் உள்ளத்திலிருந்து பிறப்பதாயும் இருத்தல் வேண்டும். ‘அகத்தானும் இன்சொல்’ (93) என்ற தொடர் இதை விளக்கும். முகமலர்ச்சியுடன் கூறப்படும் இனிய சொற்கள் பிறர்க்கு இன்பம் பயப்பனவே என்பதை ‘இன்புறூஉம் இன்சொல்’ (94) என்ற தொடர்காட்டும். ஆயினும் அச்சொற்கள் அந்நேரத்துக்கு இனிமை பயப்பனவாகமட்டுமன்றிக் கேட்டோர் உள்ளத்தில் நல்லெண்ணங்களை உண்டாக்கி நிலையான நன்மையைத் தருவனவாயும் அமைதல் வேண்டும். அவ்வாறு பிறருள்ளத்தில் நல்லெண்ணங்களையுண்டாக்கத் தக்க கருத்துக்களைத் தேர்ந்து இனிய சொற்களால் கூறுவோர் சிலராயினும் சமுதாயத்தில் இருப்பார்களேயாயின் அவர் மூலமாக அறத்துக்குமாருன தீமைகள் நீங்கச் சமுதாயத்தில் அறம் பெருகும். ஒருவன் பிறனெருவனிடத்துச் சினங்கொண்டு அவனுக்குத் தீங்கு செய்ய முற்படும்போது, ஒருவன் பொருளாசை காரணமாகக் களவு செய்யவோ மற்ருெருவனை ஏமாற்றி அவன் பொருளைக் கவரவோ எண்ணும்போது அதையறிந்த நல்லோனெருவன் இனியசொற்களினல் தீமைசெய்ய முற்பட்டவனின் மனதை மாற்றி அதைத் தடுப்பானயின் அச்சொற்களால் அல்லவை தேய அறம் பெருகுகிறது. அரசனின் ஆணையும் நல்ல இல்லங்களின் அமைவும் சமுதாயத்தில் குற்றங்கள் பெருகாமல் தடுக்கின்றன என முன்பு கண்டோம். அறத்தை உணர்ந் தோரின் இனிய சொற்களும் குற்றம் பெருகாமல் காப்பனவாகும். குற்றத்தைத் தடுப்பது மட்டுமன்றி இனிய சொற்கள் பலநற்செயல்களை ஊக்குவித்தலும் கூடும். ஓரிடத்தில் வறியோர் சிலர் படும் துன்பத் தினையோ வெள்ளத்தினல் அல்லது தொற்றுநோயினல் ஓரிடத்தில் பலர் அடையும் துன்பத்தினையோ கண்ட அறச்சிந்தனையுடைய ஒருவன்

அது குறித்துப் பிறரிடம் பேசித் துன்புற்றோர்க்கு உதவுமாறு இனிய சொற்களினால் அவர்களைத் தூண்ட அவன் சொற்களால் கவரப்பட்ட அவர்கள் அவ்வாறே சென்று ஏற்ற உதவியைச் செய்து துன்புற்றோரின் துன்பத்தை நீக்குகின்றனர். இவ்வாறு தீமையைத் தடுக்கவும் நன்மையை ஊக்கவும் வல்ல இன்சொற்களின் ஆற்றலையே,

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின் (96)

நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல் (97)

என்னும் குறள்கள் எடுத்துரைக்கின்றன.

வீண்பேச்சையும் வள்ளுவர் விரும்பவில்லை. பயனில்லாமல் வெறும் சொற்களைப் பேசிக் கொண்டிருக்கும் வழக்கத்தினாலேயே பிறர் குறையைக் கூறவும் வாய்மைக்கு மாறாகப் பொய் கூறவும் இடம் ஏற்படுகிறது. மக்கள் வீண்பேச்சையேவிட்டொழிப்பராயின் இவற்றிற்கு இடமில்லை. மக்கள், முக்கியமாக நல்ல நூல்களைக் கற்றவரும் அறிவிற் சிறந்தவருமாயிருப்போர் மிகுந்த பயனைத்தரும் சொற்களையே கூற வேண்டுமென வள்ளுவர் விரும்பினார்.

அரும்பய னாயும் அறிவினார் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல் (198)

## 4. 4. 2. பணிவும் பிறர்க்கு மதிப்பளித்தலும்

பணிவு இன்சொல்லோடு தொடர்புடையதே. தற்பெருமையின்றிப் பணிவோடு கூடிய சொற்களே பிறர்க்கு இன்பம் பயப்பன. பணிவு சொல்லிலும் தோன்றும். பெரியோரிடத்து இருக்கையெழல், கைகூப்புதல், தலைதாழ்த்தி வணங்குதல் முதலிய செயல்களினாலும் புலனாகும். உள்ளத்தில் பெருமிதமற்ற தாழ்மையே சொல்லிலும் செயலிலும் பணிவைத் தோற்றுவிக்கிறது.

பணிவு அல்லது தாழ்மை என்பது திருக்குறளில் ஓரதிகாரத்தின் தலைப்பாக அமையாவிடினும் இவ்வியல்பும் அங்குப் பன்முறை போற்றப் படுவதே. இன்சொல்லும் பணிவும் யார்க்கும் அழகளிப்பன எனக் கருதியே,

பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற (95)

என வள்ளுவர் கூறினர். சிறப்பாகச் சமுதாயத்தில் செல்வர்களும் நற்குடிப்பிறந்தோரும் பணிவுள்ளவர்களாய் நடத்தல் வேண்டும் என எதிர்பார்த்தார். பணிதல் யாவர்க்கும் நன்றேயாயினும் அது செல்வர்க்கே மற்றெரு செல்வமாகும் சிறப்புடையதாம் என்ருர். 'குலம் வேண்டின் வேண்டுக யார்க்கும் பணிவு' (960) என மேற்குலத்தோர்க்கும் அறிவுரை கூறினர். ஒருவன் செல்வமும் செல்வாக்கும் உடையனுக இருக்கும் காலத்தில் அவன் சமூகத்தில் மேம்பாடு அடையும் நிலையிலேயே முக்கியமாகப் பணிதலைக் கடைப்பிடித்தல் வேண்டும். செல்வத்தையோ பதவியையோ இழந்து தாழ்வுற்ற நிலையில் தன்மதிப்பை யிழக்காதவனுயிருத்தல் வேண்டும். இதையே,

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு (963)

என்ற குறள் கற்பிக்கின்றது. சமூகத்தில் மேல்நிலையிலுள்ளோர் பெரியோர் என மதிக்கப்படுவோர் பணிவுடையவர்களாயிருத்தல் வேண்டும் என்பதனையே 'பணியுமாம் என்றும் பெருமை' (978), 'பெருமை பெருமித மின்மை' (979) என்னும் தொடர்களும் காட்டும்.

பணிவு யாரிடம் காட்டப்படுதல் வேண்டும்? சமூகத்தில் தம்மைவிட உயர்நிலையிலுள்ளோரிடமும் ஒத்தநிலையிலுள்ளோரிடமும் பணிவு காண்பித்தல் இயல்பு. இன்னும் நண்பரிடமும் தனக்கு நலஞ்செய்வோரிடமும் பணிவுடன் பழகுதலும் இயல்பாம். சான்ருேர் பகைவரிடமும் பணிவுடன் நடப்பர். அப்பணிவே பகையை மாற்றும் என்ருர் வள்ளுவர்.

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்ருேர்
மாற்ருரை மாற்றும் படை (985)

தம்மைவிடத் தாழ்ந்தோரிடத்து சான்ருேர் உரிய இடத்துப் பணிவு காட்டுவர். தமக்கு நிகரல்லாதவராய்த் தம்மை எதிர்த்து நிற்கமாட்டாதாரிடத்தும் தோல்வியை ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலையில் (தம்மிடத்துத் தவறிருந்தால், தாம் அறியாது பிறருக்கு இடர் உண்டாம் வகையில் நடந்ததுண்டானுல்) ஏற்றுக் கொள்வர். அதுவே சான்ருேரின் மேன்மையை விளக்கும் இயல்பாகும்.

சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல் (986)

பணிவுடையோர் பிறரையிகழார். பிறர்க்கு மதிப்பளிப்பர். பிறரை இகழாதிருக்கும் பண்பும் வள்ளுவர் விரும்பியதொன்றே.

நகையீகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு (953)

என நற்குடிப்பிறந்தோரின் இயல்பைக் காட்டும் ஒரு குறள் கூறுகிறது. இந்நான்கும் சிறப்பாகத் தம்மிடம் உதவிகோரி வரும் வறியோரிடத்தே கடைப்பிடிக்கப்படவேண்டியன என எண்ணிப் பரிமேலழகர், "வறியார் சென்றவழி முகமலர்ச்சியும், உள்ளன கொடுத்தலும், இன்சொற் சொல்லுதலும், இகழாமையும் ஆகிய இந்நான்கும்" என்று விளக்கம் கூறினர். இது பொருந்துவதே. மிக வறியோராய் இரப்பவரையும் இகழ்தலாகாது.

நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு (995)

என்பது பண்புடையோரின் இயல்பை விளக்கும் மற்றொரு குறள். விளையாட்டிலும் இகழ்ச்சி விரும்பத்தக்கதன்று. ஆகவே பகைவரிடத்தும் பண்புடன் நடந்துகொள்வதே விரும்பத்தக்கதாகும். பெருமிதம் காரணமாக வறியோரையோ சினம் காரணமாகப் பகைவரையோ இகழாது யாவர்க்கும் மதிப்பளித்தலையே வள்ளுவர் விரும்பினர்.

## 4. 4. 3. நகுதல் அல்லது மகிழ்ந்துரையாடல்

மக்கள் மலர்ந்த முகத்துடன் ஒருவரையொருவர் காணுதல் வேண்டும். அவர்தம் உரையாடல்களும் மகிழ்ச்சி கலந்தனவாய் இருத்தல் வேண்டுமெனவே வள்ளுவர் விரும்பினர். விருந்தினரை மலர்ந்த முகத்துடன் வரவேற்றல் வேண்டும். இரப்போரையும் முகமலர்ந்து நோக்கல் வேண்டும். அறத்தில் மட்டுமன்றி அரசியலிலும் அவ்வின்னகை வேண்டப்படுவதே. அரசர்க்கு வேண்டப்படும் குணங்களுள் ஒன்றாகிய 'அளி' (390) என்பதை 'முகமலர்ந்தினிய கூறல்' எனப் பரிமேலழகர் விளக்கினர். 'நகச்சொல்லி நன்றி பயப்பதாம் தூது' (685) எனவும் ஒருகுறள் கூறுகிறது. கேட்போர் முகமலர்ந்து புன்னகையுடன் தனக்குச் செவிசாய்க்கும் வகையிலேயே தூதுவனும் பேசுதல் வேண்டும். அதுவே இருநாட்டுக்கும் நன்மை பயக்கும். கேட்போர் முகம் வாடும் வகையில் அல்லது கடுக்கும் வகையில்

பேசினால் நன்மை ஏற்படுமா? பொருளும் (உள்ளத்தில் ஊக்கமும் மகிழ்வும் சேர அதைக்காட்டும்) முகமலர்ச்சியுடையவனிடம் சேர்ந்தால் அவனால் நல்லறங்கட்காகச் செலவு செய்யப்பட்டோ, தொழில் வாணிபம் முதலியவற்றில் ஈடுபடுத்தப்பட்டோ நாட்டுக்கு நற்பய னளிக்கும்; என்றும் முகமலர்ச்சியற்றவனாய் வாழ்பவனிடம் சேர்ந்த செல்வமோ யார்க்கும் பயன்படாது.

அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து (565)

இக்குறள் அரசியலில் கூறப்பட்டதெனினும் பொதுமக்கட்கும் பொருந் துவதே. முகமலர்ச்சியே ஒருவனுடன் சேர்ந்து தொழில் செய்யவோ கொடுக்கல் வாங்கலில் ஈடுபடவோ நாடி வந்து உதவி பெறவோ மற்றவரைத் தூண்டும். அது இல்லாவிடத்துப் பொருள் பேயின் கையில்பட்டது போலப் பயனற்றதாகிறது.

துன்பம் வந்த காலத்தும் நகுதலே ஏற்றது எனக் கருதி 'இடுக்கண் வருங்கால் நகுக' என்றார் வள்ளுவர். துறவியரும் முகமலர்ச்சியின்றி இருத்தல் வேண்டும் என வள்ளுவர் கருதவில்லை. நகையும் உவகையும் அவர்க்கும் வேண்டப்படுவதே, அவற்றை யழிக்கும் சினமே தகாதது என்றார் (304).

அறவாழ்விலும் பொருள் வாழ்விலும் இல்லத்திலும் அரசியலிலும் துறவோர்வாழ்க்கையிலும்கூட முகமலர்ச்சி மிகவிரும்பத்தக்கதாகிறது. ஆகவே,

நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள் (999)

என்றார் வள்ளுவர். பிறருடன் கலந்து மகிழவும் சிரிக்கவும் வல்ல வர்க்கே உலகம்ஒளிமயமாக இருக்கும். அவ்வாறு செய்யாதார்க்குப் பகலும் இருளாகவே இருக்கும்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் போன்ற பேரறங்களை, இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் உயர்சான்றாண்மையை, போரில் உறின் உயிர் அஞ்சா வீரத்தை, வீட்டிலும் நாட்டிலும் செய்யத்தக்க தன்மறுப்பைக் கூறிய வள்ளுவர் மக்கள் ஒருவரையொருவர் காணுங் கால் கொள்ளும் முகமலர்ச்சி, உரையாடுங்கால் தோன்றும் இன்னகை ஆகிய சிறுசெயல்கள் அல்லது பண்புகளிலும்கூடத் தம் கவனத்தைச் செலுத்தினர். அவற்றையும் போற்றினர்.

## 4.5. வள்ளுவர் காட்டும் அறத்தின் தன்மைகள் சில

சமுதாயத்தை வளப்படுத்தத்தக்க அறங்கள் பல மேலே வகுத்துரைக்கப்பட்டன. வள்ளுவர் கூறிய அறத்தின் பொதுவான இயல்புகள் சில இப்பகுதியில் ஆயப்படுகின்றன.

### 4.5.1. அறம் மாறுவதா மாற்றம் அற்றதா ?

அறம் காலந்தோறும் இடந்தோறும் மாறுவதா என்றும் மாற்றமற்றிருப்பதா என்பது ஆயத்தக்கதே. வள்ளுவர் காட்டும் அறம் எத்தகையது? வாய்மை, கொல்லாமை போன்ற குறிப்பிட்ட அறம் ஒன்றைக் கடைப்பிடிப்பதில் கடைப்பிடிப்பவரின் நிலைமைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப மாறுதல் இருக்கக் கூடும் என்பது வள்ளுவராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதே.

> பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கு மெனின் (292)

உள்ளதை உள்ளபடியே கூறுதல் அறம். ஆனால் பொய் கூறுவதனால் குற்றமற்ற நலம் விளையுமானால் அந்நிலைமையில் பொய்மையே வாய்மையாகும். எத்தகைய நிலைமையில் என்பதை வள்ளுவர் விளக்கவில்லை. பரிமேலழகர் 'கேடாதல் சாக்காடாதல் எய்த நின்றதோருயிர் அச்சொற்களின் பொய்ம்மையானே அதனின் நீங்கி இன்புறுதல்' புரைதீர்ந்த நன்மையாகும் எனக் கொண்டார். பிளேட்டோவும் அரசு (Republic) என்ற தம்நூலில் பொதுவாக உண்மை கூறல் நீதியேயாயினும் மனநோயுற்ற ஒருவனிடம் போய் முழு உண்மையைக் கூறுதல் நீதிக்கு மாறாகலாம் (நன்மையற்றதாகலாம்) எனவும் பொதுவாக ஒருவர் கொடுத்து வைத்த பொருளை அவர் கேட்டபோது திருப்பிக் கொடுத்தல் நீதியாயினும் மன ஆரோக்கியத்துடன் இருக்குங்காலை ஒருவன் கொடுத்த ஆயுதங்களை அவன் மன நோயுற்றகாலை வந்து கேட்பின் திருப்பிக் கொடுத்தல் நீதியன்று எனவும் விளக்கினார்[13].

'ஒன்றாக நல்லது கொல்லாமை' (323) எனக் கொல்லாமையைப் போற்றிய வள்ளுவர் போரில் வேலெறிந்து களிற்றைக் கொன்ற வீரனைப் புகழ்ந்தமை முன்பும் குறிப்பிடப்பட்டது ('இல்லறம் துறவறம்

13. Plato, The Republic, P.6

என அறம் இரண்டா' பார்க்க). இவ்விரு இடத்தும் பொதுவாக அறத்திற்கு மாருகக் கருதப்படும் ஒன்று பிறரைக் காப்பதற்காகச் செய்யப் படுங்கால் அறனயிற்று.

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு (963)

இங்கு வெவ்வேறு நிலைமையில் வெவ்வேறு விதமாக நடந்து கொள்ளுதல்-பணிதலும் பெருமிதத்துடன் நடத்தலும் ஏற்றதாயின; அறமாயின.

இவ்வாறு குறிப்பிட்ட ஒரு அறத்தைக் கடைப்பிடிக்கும் முறை சூழ்நிலைக்குத்தக மாறக் கூடுமேயன்றி அறமே காலந்தோறும் இடந்தோறும் மக்கள் கருத்திற்கேற்ப மாறும் என்ற கருத்து வள்ளுவர்க்கு இருந்ததாகத் தெரியவில்லை. அறம் மக்களால் நியமிக்கப்படுவதென்றே அந்தந்த நாட்டில் காலத்தில் மக்கள் எதையேற்றுக் கொள்கிருர்களோ அதுவே யறம் என்றே வள்ளுவர் எண்ணியதாகத் தோன்றவில்லை. சில அறங்களைக் குறித்துக் காலந்தோறும் நாடு தோறும் வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. ஒரே நாட்டில் ஒரே காலத்தில் வேறுபட்ட கருத்துக்கள் மக்களிடையே காணப்படுவதுமுண்டு. சங்க காலத்திலும் சிற்சில செயல்களைக் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் இருந்தன. ஊனுண்டலைப் பல புறநானூற்றுக் கவிஞர்கள் சிறப்பாகக் கருதி ஊனுணவு பரிமாறியவர்களைப் புகழ்ந்து பாடினர். ஊனுணவு ஒருநாட்டில் மலிந்திருப்பதைச் சிறப்பாகக் கருதினர். பத்துப்பாட்டில் வரும் ஆற்றுப்படைச் செய்யுட்களிலும் இதே கருத்தைக் காணலாம். திருமுருகாற்றுப்படையுள் நக்கீரர் முருகன் வழிபாட்டில் மறியறுத்தலையும் குருதியொடு விரை இய தினையை அல்லது அரிசியைப் படைத்தலையும் கூட தவறெனமறுக்காது ஏற்றுக் கொண்டார்.[14] ஆனல் வள்ளுவரோ விலங்குகளைக் கொல்வதும் ஊனுண்பதும் சிலர் கருத்துப்படி தவருகும் சிலர் கருத்துப்படி தக்கதாகும் என இரு திறமாகக் கூறவில்லை. அவற்றைத் திட்டமாகக் கண்டித்தார். அவ்வாறே கள்ளுண்ணுதல் பல சங்ககாலக் கவிஞர்களால் சிறப்பாகக் கருதப்பட்டது. அதையும் வள்ளுவர் ஐயமின்றி விலக்கினர்.

---

14. முருகாற்றுப்படை *218........ ... மறியறுத்து*
*233 குருதியொடு விரைஇய தூவெள் ளரிசி*
*243 குருதிச் செந்தினை பரப்பி*

ஆகவே அறம் அவரவர் கருத்துப்படி வேறுபடும் என எண்ணுது அது மாருத தன்மைத்து யாவர்க்கும் பொதுவானது எனவே அவர் எண்ணியதாகத் தோன்றும்.

## 4. 5. 2. அறத்திற்குத் தூண்டுகோல்

மக்களை அறத்தைக் கடைப்பிடிக்கும்படியும் அறத்திற்கு மாருன வற்றைச் செய்யாதிருக்கும்படியும் தூண்டுவது எது, அறிவா, உணர்ச்சியா, உள்ளத்தின் பிறிதொரு திறனு என்பதும் ஆயத்தக்க தாகும். நல்லுணர்ச்சிகள் மக்களை அறம் செய்யத் தூண்டும் எனக் கருதியே வள்ளுவர் அன்பு, அருள் என்னும் அதிகாரங்களை எழுதினர். 'அன்பிற்கு அடைக்குந்தாழ் உண்டோ? அன்புள்ளோரின் புல்லிய கண்ணீரே அவ்வன்பை வெளிப்படுத்துமன்ருே' (71) என வினவும் போது உணர்ச்சியையே ஆசிரியர் சிறப்பித்தார். பெற்ருேர் தம் குழந்தைகள் மெய் தீண்ட மகிழ்வதும் அவர் மழலைச் சொற்கேட்டு உவப்பதும் அன்புணர்ச்சியிஞலேயே யாம். 'ஈத்துவக்கும் இன்பம்' (228) என்ற தொடரும் ஈகையைத்தூண்டுவது உணர்ச்சியே என்ற கருத்தைத் தரும்.

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்ருல் தேரின்
அருளாதான் செய்யும் அறம் (249)

என்ற குறளில் அருளுணர்ச்சியில்லாதான் அறம் செய்தல் கைகூடாது எனத் திட்டமாகக் கூறப்படுகிறது. ஆனுல் அறம் செய்ய மக்களை உந்துவதில் அறிவின் பங்கையும் ஆசிரியர் கவனிக்கத் தவறவில்லை.

சென்ற விடத்தால் செலவிடாத் தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு (422)

என்ற குறளில் மக்களைத் தீதினின்றும் விலக்கி நன்னெறியில் கொண்டு செல்லும் அறிவின் ஆற்றலை விளக்கினர். பகுத்தறிவினுல் ஒருவன் இச்செயலின் பயனுக நன்மை விளையுமா தீமை விளையுமா, ஒருகால் முதலில் நன்மை போல் தோன்றினும் இறுதியில் தீமை பயக்குமா, என்றெல்லாம் சிந்தித்துத் தியதை நீக்கி நல்லதைத் தேர்ந்தெடுக் கிருன்.

அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின் (123)

கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் (130)

அறனறிந்து வெஃகா அறிவுடையார் (179)

அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல் (203)

என்பன போன்ற பிற குறள்வரிகளும் அறத்தைச் செய்யும்படி தூண்டுவதில் அல்லது அறமல்லாதவற்றைச் செய்யாதபடி விலக்குவதில் அறிவின் பங்கை விளக்கும்.

தன்னை மற்றவர்கள் நிலைமையில் வைத்துப் பார்க்குமாறும் தான் எதை விரும்புவானே அதைப் பிறர் திறத்துச் செய்யுமாறும் வாசகனைத் தூண்டும் குறள்களும் உள. பிறர் தன்னிடம் கூறும் இன்சொல் தனக்கு இனிமை பயப்பதை உணரும் ஒருவன் பிறரிடத்து வன்சொல் வழங்குவது ஏன் என வள்ளுவர் வினவுகின்ருர் (99). வணிகர்கள் பிறர் பொருளையும் தம்முடையது போலக் கருதித் தமக்கு ஏற்படும் பொருளாக்கம் கேடு குறித்து எவ்வளவு கவனமெடுத்துக் கொள்கிருர்களோ அவ்வளவு கவனத்தைப் பிறர் பொருள் திறத்திலும் காட்டி வாணிபம் செய்ய வேண்டும் என்ருர் (120).

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து (250)

தன்னுயிர்க் கின்னமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்ன செயல் (318)

என்ற குறள்களும் சினமுற்ற ஒருவன் தன்னின் மெலியான் ஒருவனை நலிய எண்ணுங்கால் தன்னை விட வலியான் ஒருவன்முன் தான் அஞ்சிநிற்கும் நிலையை எண்ணுதல் வேண்டும் எனவும் தன்னுயிர்க்குத் துன்பம் தருவன எவை என்பதைப் பட்டறிவினல் உணரும் ஒருவன் அச்செயல்களைப் பிறர்திறத்துச் செய்யாதொழிதல் வேண்டுமெனவும் கூறும். இங்கு வேண்டப்படுவது யாது? தன்னைப் பிறரிடத்தில் வைத்துப் பார்க்கவல்ல கற்பனையாற்றலே (imagination) யாகும்.

இன்னும் அறவழியில் நிலைநிற்பதற்கு வேண்டிய மனஉறுதியையும் வள்ளுவர் சில குறள்களில் குறிப்பிட்டார். தன் அறத்தில் நிலைத்து நிற்கும் துறவியை 'உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்' (24) என்ருர். உரன் என்பதற்குத் திண்மை எனப் பொருள் கூறினர் பரிமேலழகர். ஐம்புலன்களையும் அடக்குவதற்கு மனஉறுதி வேண்டப்படுகிறது.

வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று (273)

போலித்துறவி ஏன் போலித் துறவியாக இருக்கிறன்? வலி இல் நிலைமையால்-உண்மைத் துறவை மேற்கொள்வதற்கு வேண்டிய மன வலிமை இல்லாததனலேயே.

ஆகவே திருக்குறளின்படி உள்ளத்தின் பலகரணங்கள் அல்லது திறன்களாகிய உணர்ச்சி (feeling) அறிவு (reason) கற்பனை யாற்றல் (imagination) மன உறுதி (will power) அனைத்தும் மக்களை அறவழியில் நடத்துவதில் பயன்படுகின்றன. தற்கால சமூகவியல் அறிஞர்களும் உளவியல் அறிஞர்களுங்கூட அவ்வாறே கூறுகின்றனர்[15].

### 4. 5. 3. அறத்தின் அடிப்படை

அறத்தின் அடிப்படை யாது? சமுதாயத்தின் ஒப்புதலா தனிப் பட்டோரின் உள்ளச்சான்ரு? ஒருவன் இது அறம் அல்லது அறம் அன்று என எப்படி அறிந்து கொள்கிருன்? அவன் உள்ளச்சான்றே இதை விளக்குகிறதா? சமுதாயத்தில் உள்ள நடைமுறைகளை நோக்கி அவற்றினேடு பொருந்துவதே அறம் எனக் கொள்கிருனு? அல்லது அறநூல்களைக் கற்று அவற்றின் மூலம் அறம் எது அறமல்லாதது எது என அறிகிருனு?

உலகத்தோ டொட்ட ஒழுகுவோரே கற்ருர் எனவும் (140) 'உலகம் தழீஇயது ஒட்பம்' (425) எனவும் கூறிய வள்ளுவர் சமுதாயத்தின் ஒப்புதல் அறத்தை யுணர்த்தும் என்னும் கருத்தை ஓரளவு ஏற்றுக் கொண்டவரே. சிறப்பாகச் சமுதாயத்திலுள்ள அறிவொழுக்கங்களினுல் உயர்ந்த சான்ருேர் அறத்தை உணர்த்தவும்

15. Ginsberg, Morris, Essays in Sociology and Social Philosophy, 8. On the Diversity of Morals, P. 257
"Sympathy however is not a matter of feeling only but requires imagination, the power of seeing oneself in the place of the other and recognising that the other is a person like oneself and therefore includes a cognitive element. In any case, moral universalism cannot depend on kindliness or benevolence, which, I suppose, is psychologically always limited and discriminatory. One cannot love anybody and everybody with the same intensity but one can recognise that there are certain things to which men are entitled whether we love them or not".

உணரவும் வல்லவரெனவும் அவர் விரும்பாததை விலக்குவதன் மூலம் அறத்தைப் பின்பற்றலாமெனவும் வள்ளுவர் கருதியதாகத் தெரிகிறது.

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை (656)

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி (923)

என்பன போன்ற குறள்கள் இக்கருத்தையே தரும். சான்றோர் பழிக்கும் வினை செய்யலாகாது. சான்றோர் கள்ளுண்டுகளிப்பவர்களைக் காண விரும்பார்களாகையினால் கள்ளுண்ணலை விட்டொளித்தல் வேண்டும். ஆகவே சான்றோரால் எது ஏற்றுக் கொள்ளப்படுகிறதோ விரும்பப்படுகிறதோ அது அறம் என்பதாயிற்று.

ஆனால் வள்ளுவர் எப்பொழுதுமே உலகத்தின் ஒப்புதலையும் சான்றோரின் விருப்பையும் அறத்திற்கு ஆதாரமாகக் காட்டவில்லை. வேறு ஆதாரங்களையும் தருகிறார்.

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும் (293)

இங்கு உள்ளச்சான்றே அறத்தைக் காட்டுவதாகக் கொள்ளப்படுகிறது. ஒருவன் அறிந்து பொய் கூறுவானாகில் அவனுள்ளமே அவனை வாட்டும். சான்றோரும் உலகமும் அவன் செய்தவற்றை அறியா நிலையிலும் 'நீ செய்தது அறமன்று' என உள்ளச்சான்று அவனுக்கு எடுத்துரைக்கிறது.

நீதி நூல்கள் அல்லது அறநூல்களையும் வள்ளுவர் சில இடங்களில் தம் அறக்கருத்துக்கட்கு ஆதாரமாகக் காட்டுகிறார்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை (322)

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற (300)

இக்குறள்களில் முன்னது தெளிவாக அறநூல்களைக் குறிப்பிடுகிறது. வள்ளுவர் காலத்தில் வேறு எவ்வகை அறநூல்களிருந்தன, அவை ஆரிய நூல்களா தமிழ்நூல்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

ஆயினும் அறநூல்கள் இருந்தன என்பது தெளிவு. அறங்களெல்லாவற்றுள்ளும் தலையாய அறம் எது என அறிதற்கு ஆசிரியர் அவ்வற நூல்களை ஆதாரமாகக் கொண்டார். பரிமேலழகர் உரையின்படி இங்கு 'மெய்' என்பது மெய்நூல்களைக் குறிப்பதாகக் கொள்வோமாயின், வாய்மையே சிறந்த அறம் என அறிவதற்கும் மெய்ந்நூல்கள் (சமய அல்லது தத்துவ நூல்கள் போலும்) ஆதாரமாகிறது.

ஆகவே அறத்திற்கு அடிப்படை உள்ளச்சான்று சமுதாயத்தின் ஒப்புதலா சான்றோர் கருத்தா பெரியோரால் இயற்றப் பெற்ற அற நூல்களா என வினவின் இவை யாவுமே எனலாம். இவையாவுமே அறத்தை உணர்த்த உதவுகின்றன. தலைமுறை தோறும் அறத்தைப் பாதுகாக்கின்றன.

### 4.5.4. அறம் யாருக்காக?

வள்ளுவர் அறங்களனைத்தையும் நாட்டில் அல்லது சமுதாயத்தின் நலத்துக்காகக் கூறினரா தனிப்பட்டோரின் நலத்துக்காகக் கூறினரா என்பது ஆய்தற்குரிய ஒருபொருளே யாகும். சமூகவியல் அரசியல் சார்ந்த கொள்கைகளை வகுக்குங்கால் சமுதாயத்தின் நலன் எவ்வளவு தூரம் கவனிக்கப்படல் வேண்டும் தனிப்பட்டோரின் நலன் எவ்வளவு தூரம் கவனிக்கப்படல் வேண்டும் என்பதைக்குறித்துப் பலர் சிந்திக்கின்றனர். 'தனியொருவனுக் குணவிலை யெனில் ஜகத்தினை யழித்திடு வோம்'[16] எனப்பாடிய பாரதியார் தனிப்பட்டோரின் நலத்திற்கு மிக அழுத்தம் கொடுத்தார் எனலாம்.

திருக்குறளிலுள்ள நூற்றுமுப்பத்துமூன்று அதிகாரங்களுள் எழுபது பொருட்பாலிலேயே அடங்கும். பொருட்பாலில் ஒழிபியலாக அமையும் பதின்மூன்று அதிகாரங்களைத் தவிர ஏனையன அரசியலையும் அங்கவியலையுமே கூறுகின்றன. அரசனும் அமைச்சர் முதலிய அலுவலரும் சிறந்த முறையில் தம்பணிகளைச் செய்தல் வேண்டும், அரண் படை முதலியவை நன்முறையில் அமைய வேண்டும் என்பதைக் குறித்து வள்ளுவர் அதிகக் கவலை கொண்டார் என்பது உண்மையே. நாட்டின் நன்மைக்காக வீரர் உயிரிழக்கவும் துணிதல் வேண்டும், தூதுவர் இறுதி பயப்பினும் அஞ்சாது இறைவற்கு உறுதி பயத்தல் வேண்டும்,

16. பாரதியார், தேசியப் பாடல்கள், பாரத சமுதாயம்.

அமைச்சரும் தம் நன்மையைவிட நாட்டின் நலத்தில் கவனம் கொள்ளுதல் வேண்டும், அறம் பொருளின்பம் உயிரச்சம் ஆகியவற்றை விட அரசனின் அல்லது நாட்டின் நலத்தைப் பேணுபவனே அமைச்சனுகக் கொள்ளத்தகுந்தவன் என்றெல்லாம் கூறப்படும்போது பொது நலம் பேணப்படுகிறது.

வள்ளுவர் தனிப்பட்டோர் நலத்தையும் கருதாமல் இல்லை. தனிப்பட்டோரின் இல்லமும் வாழ்க்கையும் சிறப்பாக அமைதலைக் கருதியே வள்ளுவர் இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணை நலம், மக்கட்பேறு ஆகியவற்றைக் கூறினர். அரசர்கள் ஆளுந்திறத்தையும், உயர் அலுவலர்தம் 'வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை ஆராய்தல்' (512) முதலிய கடமைகளையும் பகையிலும் நட்பிலும் அரசர் ஒருவரோடொருவர் கொள்ளும் தொடர்பையும், தூதர் பிறவேந்தரவையில் நடந்து கொள்ளும் முறைமையையுங் கூறிய வள்ளுவர், ஓரில்லத்தில் தன் சிறுகையினுல் கூழையளைந்து விளையாடும் குழந்தையையும் அதைக் கண்டு மகிழும் பெற்றோரின் உள்ளத்தையும் கூடத் தம் நூலில் காட்டத் தவறவில்லை. மற்றும் காமத்துப்பால் முழுவதும் தனிப்பட்ட இருவரின் அன்பு நிறைந்த வாழ்க்கையையும் அவர்தம் உள்ளத்து உணர்ச்சியையும் தானே காட்டுகிறது?

ஒரு தூதனே வீரனே தன்நாட்டிற்காக அல்லது சமுதாயத்திற்காக உயிர்துறத்தலும் சிறப்பாகும் என வள்ளுவர் கூறினர். ஆனல் சமுதாயம் (அதன் சார்பாக அதனை ஆள்வோர்) பொதுநன்மைக்காகச் சிலரின் அல்லது ஒருவரின் நலத்தைத் துறத்தல் தகும் என அவர் எங்கும் கூறவில்லை. அரசன் தனிப்பட்ட ஒவ்வொருவரின் நலத்தையும் எண்ண வேண்டியவனே; ஒரு குடிமகன் தன் குறையைக் கூறவரின் காட்சிக்கு எளியனுக இருக்க வேண்டியவனே. போரில் வீரர் சிலர் இறத்தலும் தகுதியே என அரசன் கவலையற்றிருத்தலும் ஆகாது.

புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோட் டக்க துடைத்து (780)

என்ற குறள் இருவருக்கும் இருக்க வேண்டிய மனநிலையைக் கூறுகிறது. வீரன் நாட்டிற்காகவோ அரசனுக்காகவோ தன்னுயிரையளிக்கலாம். அரசன் அது அவன் கடமையெனக் கவலையற்றிராது 'இவ்வீரன் இறந்தானே' என வருந்திக் கண்ணீர் சிந்த வேண்டியவனே. தனிப்பட்ட ஒவ்வொரு வீரனின் உயிரும் அரசன் பார்வையில் அருமையாக இருக்க வேண்டியதே.

துறவையும் ஓரறமாக வள்ளுவர் ஏற்றுக்கொண்டார். துறவின் நோக்கம் யாது? துறவியரும் சமுதாயத்திற்கு நன்மை செய்தல் கூடும். ஆனால் துறவின் முக்கிய நோக்கம் (அதுவும் வள்ளுவர் காலத்தில்) துறவு பூண்பவரின் ஆன்மீக முன்னேற்றமாகும் (துறவு பார்க்க). இங்குத் தனிப்பட்டோரின் நலனே, அதுவும் அவர் ஆன்மீக நலனே முக்கியமாகக் கருதப்படுகிறது. துறவியரல்லாத பிறரும் தத்தம் ஆன்மீக உயர்வையும் மறுமையில் தாம் அடையும் பயனையும் கருதவேண்டியவர்களே. அவற்றையும் எண்ணியே வள்ளுவர் அறங்களைக் கூறினர் அது,

அன்றறிவாம் என்னாது அறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை (36)

என்பது போன்ற குறள்களால் புலனாகும்.

வள்ளுவர் அறத்தைக் கூறுங்கால் சமுதாயத்தின் நலத்தையும் உளத்தில் கொண்டார். தனிப்பட்டோரின் இவ்வுலக வாழ்க்கை வளத்தையும் கருதினர்; தனிப்பட்டோரின் ஆன்மீக முன்னேற்றத்தைக் குறித்தும் எண்ணினர். இவையாவற்றையும் உளத்தில் கொண்டே தம் நூலை எழுதினர் எனல் பொருந்தும்.

5

## மக்களின் அன்றாட வாழ்க்கை

ஒரு சமுதாயத்தின் இயல்பை ஆய்வதில் அதிலடங்கிய மக்களின் அன்றாட வாழ்க்கை எத்தகையதாய் இருந்தது என்பதை யறிவதும் ஒருபகுதி யாகும். திருக்குறள் மக்களின் அன்றாட வாழ்க்கையை நேரடியாகப் புனைந்துரைக்கவில்லை. ஆயினும் குறளில் வரும் பல குறிப்புக்களினின்றும் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையைப் பற்றிய பல செய்திகளை அறிதல் கூடும்.

மக்கள் பல தொழில்களைச் செய்து முயற்சியுடையோராய் வாழ்ந்தனர், பல கலைகளும் பொழுதுபோக்குகளும் அவர்களால் பயிலப்பட்டன என்பது முன்பே காட்டப்பட்டது. துறவிகளொழியப் பிறர் வாழ்க்கைவளங்களைத் துய்ப்பதற்கு ஆவலாகவே யிருந்தனர். குடும்ப வாழ்க்கையில், குழந்தைகளின் தொடர்பில், நண்பர்களின் கூட்டுறவில் மகிழ்ச்சியுற்றனர். பலர் அறச்சிந்தனை யுடையவராயிருந்தனர்.

ஆயினும் நாட்டில் செல்வமும் வறுமையும் ஒருங்கே யிருந்தன. வளமான வாழ்க்கையுடைய தலைவன் தலைவியரைக் காமத்துப்பால் காட்ட, பிறர்க்கு அளித்து உதவும் பெருஞ்செல்வரை ஈகை, ஒப்புரவு என்னும் அதிகாரங்கள் காட்ட, துய்ப்பதற்கு ஒன்றுமில்லாத வறியோரை நல்குரவு, இரவு, இரவச்சம் என்னும் அதிகாரங்கள் காட்டுகின்றன. சிவிகையில் ஏறிச் செல்வோரையும் சிவிகை தாங்கிச் செல்வோரையும் 'சிவிகை பொறுத்தானொ டூர்ந்தா னிடை' (37) என்ற தொடரே காட்டுகிறது. மக்களின் செல்வநிலை தொழில் ஆகியவற்றுக்கு ஏற்றவாறு உணவு, உடை, உறையுள் முதலியவற்றிலும் வேறுபாடுகள் இருத்தல் இயல்பே.

மக்களின் உணவு, உடை, உறையுள், ஊர்தி, பழக்கவழக்கங்கள், கருத்துக்கள், விருப்பு வெறுப்புக்கள் முதலியவற்றைக் குறித்துத் திருக்குறள் மூலம் அறியப்படும் செய்திகளே இவ்வதிகாரத்தில் ஆயப்படுகின்றன.

வள்ளுவர் காலத்தில் அரசர்களுக்கிடையே அடிக்கடி போர் நிகழ்ந்ததெனினும் வீரர்கள் போரில் ஈடுபட வேண்டியிருந்ததெனினும் பொதுமக்களின் வாழ்க்கை பெரும்பாலும் அமைதி நிறைந்ததாகவே இருந்தது. அக்காலத்துத் தமிழ் நாட்டில் பலவித சமயக்கருத்துக்கள் பரவிக் கொண்டிருந்தன. பலருக்குச் சமய நூற்கல்வியிலும் தத்துவ ஆய்விலும் கவனம் சென்றது. மரணம் என்பது என்ன, மறுபிறப்பு உண்டா, வாழ்வில் மக்கள் அடையத்தக்க பயன் எது, உயிருக்கு இறுதியில் அடையத்தகும் குறிக்கோள் எது என்றெல்லாம் மக்கள் ஆயத் தலைப்பட்டனர். இவற்றைப் பற்றிய பல கருத்துக்களைக் குறளிலும் காணலாம். ஆயினும் மக்கள் கவனம் இவ்வுலகப் பொருள்களிலும் செல்லாமலில்லை. தற்போதுள்ளன போல விரைந்து செல்லும் ஊர்திகளும் பல செயற்கை வசதிகளும் இல்லாத அக்காலத்தில் மக்கள் இயற்கையோடொட்டிய வாழ்க்கையே வாழ்ந்திருத்தல் வேண்டும். மக்கள் தொகைப் பெருக்கமும் அக்காலத்தில் குறைவாக இருந்ததனால் காடுகளும் இயல்பான மரச்செறிவுகளும் தமிழ்நாட்டில் பல பகுதிகளில் இருந்திருத்தல் வேண்டும். விலங்கு, பறவை, மரம் செடி கொடிகள், மலர்கள் முதலியவற்றை மக்கள் கூர்ந்து நோக்கி அவ்வவற்றின் தன்மைகளையும் இயக்கங்களையும் நுண்ணிதாக ஆய்ந்துணர்ந்தனர். சங்கநூல்கள் பலவற்றிலும் அவ்வந்நிலங்களுக்குரிய விலங்கு, பறவை, தாவரம் முதலியவற்றைக் குறித்த குறிப்புக்கள் பலவற்றைக் காணலாம். இவற்றையே அகநூலார் கருப்பொருள் என்றனர். திருக்குறளும் விலங்கு, பறவை, மலர்கள் முதலியவற்றின் தன்மைகளையும் செயல்களையும் பல உவமைகளில் பயன்படுத்துகிறது. தனது ஐந்து உறுப்புக்களையும் தீமை புகுதாமல் ஓட்டினுள் அடக்கும் ஆமையையும் (126) பரியது கூர்ங்கோட்டது ஆயினும் புலிதாக்குறின் வெருவும் யானையையும் (599) இணரூழ்த்தும் நாறா மலரையும் (650) திருக்குறளில் காண்கிறோம்.

இவ்வாறு இயற்கையைக் கண்டு மகிழ்ந்தும் இசை, பாடலாடல் முதலியவற்றை நுகர்ந்தும் உள்ள நிறைவுடன் வாழ்ந்த பழந்தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையின் தன்மையைக் குறள் மூலம் ஆய்வது சுவையுடையதே.

## 5. 1. உணவு

நீரையும் வள்ளுவர் ஓர்உணவாகக் கருதினர். மழை உண்பவர்களுக்கு உண்ணத்தகுந்த உணவுப் பொருள்களை உண்டாக்கித் தானும் ஓர்உணவாக அமைந்தது என்றார் (12). காப்பி, தேநீர் முதலிய சூடான சுவைநீர்களை உண்ணும் வழக்கம் ஏற்படாத அக்காலத்தில் குளிர்ந்த நீரையே மக்கள் விரும்பி யருந்தினர்கள் போலும். 'நீரில் இன்சுவை நிகழ்ந்தோன்' என நீரின் சுவையைப் பல்லவர் காலத்தில் மணிவாசகரும் பாராட்டினர். 'ஊருணி நீர்நிறைந் தற்றே' (215) என ஊருணி குறளில் குறிப்பிடப்படுகிறது. ஊர்மக்களனைவரும் குடிநீர் பெறுவதற்காகத் தூயநீரை யுடைய குளங்கள் பொதுவாக ஊர்களில் இருந்தனபோலும். ஊருணிகள் மழை நீரினல் நிறையப் பெற்றனவா ஊற்றை யுடையனவா என்பது தெளிவின்று. 'ஊருணி' என்பதற்குப் பரிமேலழகர் 'ஊரின் வாழ்வார் தண்ணீருண்ணும் குளம்' எனவும் மணக்குடவர் 'ஊர் உண்கின்ற கேணி' எனவும் பொருள் கொண்டனர். பரிதியார் 'வானேரி' என்றார். கேணி என்பது பொருளாயின் ஊற்று நீரையுடையதாக இருத்தல் கூடும். 'வானேரி' என்ற தொடர் தெளிவாக மழைநீரினல் நிறைந்த பெருங்குளத்தைக் குறிக்கிறது. சில ஊர்களில் ஊற்று நீரையுடைய கேணிகளும் சில இடங்களில் மழை நீரினல் நிறைந்த குளங்களும் உண்ணும் நீரெடுக்கப் பயன்பட்டிருத்தல் கூடும். மழைநீர் நிறைந்த குளங்களை, நீராடுவதற்கும் துணி துவைப்பதற்கும் பயன்படுத்தாமலும் ஆடு மாடுகள் அருகிற் செல்லாது பாதுகாத்தும் குடி நீர்க்குளங்களாகப் பயன்படுத்தும் முறை இக்காலத்தும் சில ஊர்களில் உண்டு. அக்காலத்தும் இருந்திருத்தல் கூடும்.

ஊற்றுநீரை யுடையனவும் அகழப்பட்டனவுமாகிய கிணறுகள் அல்லது கேணிகள் நீரெடுக்கப் பயன்பட்டன என்பதைத் திருக்குறளில் வரும் 'தொட்டனைத் தூறும் மணற்கேணி' (396) 'இறைப்பவர்க்கு ஊற்றுநீர் போல மிகும்' (1161) என்ற தொடர்கள் காட்டும். ஊற்று நீர் இறைக்க இறைக்கத் திரும்பவும் ஊறுவதும், கேணி எவ்வளவு ஆழமாக அகழப்படுகிறதோ அவ்வளவுக்கு அதில் நீர் மிகுவதும் இங்குக் குறிப்பிடப்பட்டன.

> அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
> கோடின்றி நீர்நிறைந் தற்று (523)

என்னும் குறள் கரைகளையுடைய பெருங்குளங்களைக் காட்டுகிறது. இவை வயல்கட்கும் தோட்டங்கட்கும் நீர் பாய்ச்சுவதற்கு நீர் தேக்கி

வைக்கப்பட்ட குளங்கள் போலும். குளங்களின் கரைகள் செம்மையாக அமைக்கப்பட வேண்டியதையும் கரை சிதையின் நீர் புறத்தே பாய்ந்து கெடும் என்பதையும் அக்கால மக்கள் அனுபவத்தில் அறிந்திருந் தனர் போலும். உறவினர்களோடு அளவளாவுதலில்லாதவனுடைய வாழ்க்கை, குளம் கரையின்றி நீர் நிறைந்ததை யொக்கும் எனக் குறள் கூறுகிறது. உறவினர் செல்வத்துக்குப் பாதுகாவலாக அமைவதும் கரை குளநீர்க்குப் பாதுகாவலாக அமைவதும் இங்கு ஒப்பிடப்பட்டன. கரையை யுடைய பெருங்குளங்களும் மாரிகாலத்தில் கரையுடையாமலும் நீர் பெருகி வெளியில் பாயாமலும் அவற்றைக் காக்கும் காவலாளர் களும் **அகநானூற்றிலும்** குறிப்பிடப்படுகின்றன.[1] 'குளவளாக் கோடின்றி நீர் நிறைந்தற்று' என்னும் தொடர்க்கு உரை கூறுங்கால் **பரிதியார்** 'கட்டுக் கரையும் கொடியும் காவலுமில்லாத குளம் நீர் நிறைந்ததற்கு ஒக்கும்' என்றார். நீரைச் சேமித்துப் பாதுகாக்கும் முறைகளைப் பண்டைத் தமிழ்மக்கள் நன்கறிந்திருந்தனர்.

உழவுத்தொழில் வள்ளுவரால் போற்றப்பட்டது. அங்குக் குறிப்பிடப்பட்டது முக்கியமாக நெல்லை விளைவிக்கும் உழவர் தொழிலே எனலாம். உழவர் 'அலகுடை நீழ லவர்' (1034) எனக் குறிப்பிடப்படு கின்றனர். அலகு என்பதற்கு நெல் எனவே **பரிமேலழகர்** பொருள் கொண்டார். ''அலகு - கதிர்; அஃதீண்டு ஆகுபெயராய் நெல் மேல் நின்றது'' என்றார். நெல்லை விளைவித்தல் முக்கிய தொழிலாக இருப்பவே நெல் மக்கட்கு முக்கிய உணவாக இருந்திருத்தல் வேண்டும்.

**தினை**, **எள்** என்னும் புன்புல விளை பொருள்களும் குறளில் குறிப்பிடப்படுகின்றன. 'எட்பக வன்ன சிறுமைத்தே யாயினும்' (889) எனவும் 'தினைத்தனை' எனவும் இவை சிறிய பொருள்கட்கு எடுத்துக் காட்டாகக் குறிப்பிடப்படினும் இவை அக்காலத்து உண்பொரு ளாகவும் பயன்பட்டன என ஊகிக்கலாம். இவை அவ்வாறு பயன் பட்டமை பிற சங்க நூல்களினின்றும் அறியப்படுவதே.

**பழங்களை** அக்கால மக்கள் விரும்பியுண்டனர் என்பதைப் பல குறள்களில் வரும் குறிப்புக்களால் உணரலாம்.

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்

---

1. அகநானூறு *252, 11—13*

   *தொழில்மழை பொழிந்த பானுட் கங்குல்*
   *எறிதிரைத் திவலை தூஉம் சிறுகோட்டுப்*
   *பெருங்குளம் காவலன் போல*

நயனுடை யான்கண் படின் (216)

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று (100)

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி (1191)

துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று (1306)

நயனுடையான் பெற்ற செல்வம் ஊர் நடுவில் பயன் மரம் பழுத்தது போலும் என இங்குக் கூறப்படுவதால் ஒருவர்க்கு உரித்தாகுதல் அன்றி யாவரும் பயன் கொள்ளத்தக்கதாகப் பொதுவாக (ஊர் மன்றத்தினராலா?) நட்டு வளர்க்கப்பட்ட பழ மரங்களும் அக்காலத்தில் இருந்தனவா என எண்ண இடம் உண்டு. கனியின் இனிமையை உணர்ந்ததனாலேயே அது இன்சொல்லுக்கும் காய் இன்னாச்சொல்லுக்கும் ஒப்பிடப்பட்டன. 'காழில்கனி' என வித்தில்லாத கனி மூன்றாம் குறளில் குறிப்பிடப்பட்டது. வித்தில்லாத கனியை முழுவதும் சுவைத்து உண்ணுதல் கூடும். இத்தொடர் இங்கு உவமைக்காக மட்டும் ஆளப்படுகிறதா வித்தில்லாத கனிவகை ஏதாவது அக்காலத்தில் தமிழ் நாட்டில் இருந்ததா எனத் தெரியவில்லை. வாழைக்கனியைக் காழில்கனி எனக் குறிப்பிடுதல் கூடும். இங்குக் காட்டப்பட்ட இறுதிக் குறள், பழங்களை மிகவிரும்பிய தமிழ் மக்கள் அவற்றைப் பதமறிந்து உண்ணவும் பழகியிருந்தனர் என்பதைத் தெரிவிக்கிறது. மிகமுதிர்ந்த பழமும் காயும் இன்றி அளவாகக் கனிந்த பழமே உண்ண இனியதாகும். மிகமுதிர்ந்த கனியும் கருக்காயும், துனியும் புலவியும் இல்லாத சுவை குறைந்த காமத்துக்கு ஒப்பாகக் காட்டப்பட்டன. "மிக முதிர்ந்து இறும் எல்லைத்தாய கனி, நுகர்வார்க்கு மிகவும் இனிமை செய்யாதாகலின், துனியில்லையாயின் கனியற்று என்றும் கட்டிளமைத்தாய காய், நுகரும் செவ்வித்தன்றாகலின் புலவியில்லையாயின் கருக்காயற்று என்றும் கூறினான்'' என்பது பரிமேலழகர் விளக்கம். மக்கள் கனியின் பதங்களையறிந்து உண்பதற்கு ஏற்ற நிலையில் உண்டனர் போலும்.

பழங்களைப் பன்முறை குறிப்பிட்ட வள்ளுவர், பலா, மா, வாழை என எக்கனிவகையையும் விதந்து கூறவில்லை. அவர் பெயரிட்டுக் குறிப்பிட்டது நெருஞ்சிப் பழம் ஒன்றே. அது உண்ணப்படும் தன்மைக்காக அன்றி முள்ளுடைமை பொருட்டே குறிப்பிடப்பட்டது (1120).

தினை சிறியனவற்றிற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளப்பட்டது போலவே பனை குறளில் பெரியனவற்றிற்கு எடுத்துக்காட்டாக கொள்ளப்படுகிறது. மூன்று குறள்களில் இவ்விரண்டும் உவமைகளாக ஒருங்கே பயன்படுத்தப்படுகின்றன.

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார் (104)

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார் (433)

தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின் (1282)

இக்குறள்களில் பனை பெரியனவற்றுக்கு உவமையாக அமைவதால் பனையெனக் குறிப்பிடப்படுவது பழமன்றி மரமே போலும். தினை பனை என்பன அளவுப் பெயர்களாதலும் கூடும். 'பனையென்னளவு' தொல்காப்பியத்துள் குறிப்பிடப்படுகிறது (தொல். எழுத்து. 168). அவை முறையே தானியத்தையும் மரத்தையும் குறிப்பனவாகக் கொள்ளப்படுதலும் கூடும். 'எட்பகவன்ன சிறுமைத்தே' என எள்ளும் சிறியதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடப்பட்டது. தினை பனை என்பன இப்பொருளில் (தானியத்தையும் மரத்தையும் குறித்து அவற்றின் அளவைக் காட்டுவனவாய்ப்) பிற இலக்கியங்களிலும் ஆளப்பட்டுள்ளன[2]. பனைமரத்தை வள்ளுவர்கால மக்கள் நன்கறிந்திருந்தனர். அதை எவ்வாறு பயன்படுத்தினர்? முன்பு காட்டப்பட்ட குறளில் 'பயன் மரம்' (216) என்ற தொடருக்குப் பரிமேலழகர் 'பயன்படு மாமரம், பலாமரம், பனைமரம்' என உரை கூறினர். இவ்வுரை வள்ளுவர்காலத்துக்கும் பொருந்துமாயின், மா, பலாவின் பழங்களைப் போலப் பனம் பழத்தையும் மக்கள் உண்பதற்குப் பயன்படுத்தினர் எனக் கருதலாம். பனையின் குரும்பை நீரை (நுங்கை)யும் பனம்பழத்தையும் சங்க கால மக்கள் உண்டமை புறநானூற்றினின்றும் அறியப்படுகிறது[3]. நுங்கு

2. திருவள்ளுவமாலை 5.
   தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
   பனையளவு காட்டும் படித்தான் ... ... ...
   இங்கு 'நீண்ட' என்னும் அடையாலும் பனையளவு புன்னீரில் காணப்படுவதாகக் கூறியதனாலும் 'பனை' மரத்தைக் குறிப்பதாகக் கருதலே பொருந்தும்.

3. புறநானூறு
   இரும்பனையின் குரும்பைநீரும்
   பூங்கரும்பின் தீஞ்சாறும்
   ஓங்குமணல் குவவுத்தாழைத்
   தீம்நீரோ டுடன்விராஅய்
   முந்நீர் உண்டு 24, 12—16

   தெங்குபடு வியன்பழ முனையின் தந்தையர்
   குறைக்க ணெடும்போ ரேறி விசைத்தெழுந்து
   செழுங்கோட் பெண்ணைப் பழந்தொட முயலும் 61. 9—11

இக்காலத்திலும் உண்ணப் படுவதே. பனம் பழத்தையோ பழச் சாற்றையோ உண்ணும் வழக்கம் தற்காலத்து அருகிவரினும் சில ஊர்களில் சிறப்பாக இலங்கையைச் சேர்ந்த யாழ்ப்பாணத்தில் தற்போதும் உண்ணப்படுபவையே. பனம்பழச்சாற்றைத் தட்டுகளில் அல்லது பாய்களின்மேல் ஊற்றிக் காய வைத்து உண்ணும் வழக்கமும் யாழ்ப்பாணத்தில் உண்டு. அதைப் பனாட்டு என்பர். தொல்காப் பியமும் நன்னூலும் பனாட்டு என்னும் சொல்லுக்கு இலக்கணம் கூறுவதால் இச்சொல்லும் அது குறிக்கும் பொருளும் இவ்விரு இலக்கண நூல்களின் காலத்திலும் பொதுவாகத் தமிழ்நாட்டில் பலராலும் அறியப்பட்டிருத்தல் வேண்டும்[4]. நுங்கு மட்டுமன்றிப் பனம் பழத்தையும் அதன் சாற்றையும் உண்ணும் வழக்கம் தமிழ் நாட்டில் சங்க காலத்தும் இடைக் காலத்தும் இருந்ததெனக் கொள்ள லாம்.

கொல்லப் பயன்படும் கரும்பு (1078) குறளில் குறிப்பிடப் படுவதால் கருப்பும் கரும்பின் சாறும் சாற்றினால் காய்ச்சப்படும் வெல்லம் அல்லது சர்க்கரை முதலியன அக்கால மக்கட்கு உணவாகப் பயன்பட்டிருத்தல் வேண்டும்.

'ஆபயன் குன்றும்' (560) 'நன்பால் கலந்தீமையால்திரிந் தற்று' (1000) என்னும் தொடர்கள் ஆவின்பயனாகிய பால், தயிர், வெண்ணெய் முதலியன அக்காலத்திலும் உணவாகப் பயன்பட்டமையைக் காட்டும்.

வள்ளுவர் காலத்தில் ஊனுணவு உண்பவரும் இருந்தனர். உண்ணாதவரும் இருந்தனர். இந்நிலையையே புலான் மறுத்தல் காட்டுகிறது. அக்காலத்து வேட்டையாடுதல், மீன் பிடித்தல், விலங்கு களைக் கொன்று ஊனை விற்றல் ஆகிய தொழில்களும் ஊனுண்பவரும் இருந்தமை முன்பு விளக்கப்பட்டது (தொழில்கள் பார்க்க). ஆனால் அக்காலத்தில் பௌத்த சமண சமயங்களின் செல்வாக்கினாலோ என்னவோ ஊனுண்ணலாகாது என ஓர்இயக்கம் முக்கியமாகச் சமய நூல்களைக் கற்றோரிடையே பரவி வந்ததெனத் தெரிகிறது. அதை ஆதரித்தே வள்ளுவர் எழுதினார். ஊன் உண்டலை யொழிக்கவேண்டும் என்ற கொள்கையை யுடையவர்கள் ஊன் உண்பது அருளுக்கு முற்றிலும்மாறானதென்றும் தன் ஊன் பெருக்குவதற்குப்பிறிதொன்றின் ஊன் உண்பது தகுதியற்றதெனவும் கருதினர். ஊன் உண்பதன்

4. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், 284, நன்னூல், 203.

பொருட்டே பல விலங்குகள் கொல்லப்படுகின்றன. ஊன் உண்ணாமையினால் அவை காக்கப்படும், உயிர்வாழும்; ஆகவே ஊன் உண்ணாதவனை எல்லா உயிர்களும் கைகூப்பித் தொழும் என்றார் வள்ளுவர். ஊன் உண்பவர்கள் அன்பையும் அருளையுமிழந்து கொடியவராகின்றனர் என்ற கருத்தும் அவர்களிடையே இருந்தது. 'நன்றாக்காதொன்றன் உடல்சுவை யுண்டார் மனம்' (253) எனக் குறள் கூறுகிறது. மற்றும் ஊனுண்ணாமையை ஆதரித்தோர் ஊனுணவைத் தூய்மையற்றது எனவும் கருதினர் என்பதை,

> உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
> புண்ண துணர்வார்ப் பெறின் (257)

என்ற குறள் காட்டும். இவ்வாறு ஓரியக்கம் அக்காலத்தில் சிலரிடையே பரவியபோதும் துறவியரும் சமுதாயத்தில் அந்தணர் போன்ற சில பிரிவினரும் அவ்வியக்கத்தைப் பின்பற்றி ஊனுண்டலைக் கைவிட ஏனைய பொதுமக்களிடையே ஊனுண்ணும் வழக்கம் தொடர்ந்தது என்பதைப் பல இலக்கியங்கள் காட்டுகின்றன. வள்ளுவர்காலத்திற்குப் பின்னெழுந்த சிலப்பதிகாரமும் ஊன் விற்போர் புகார் நகரத்தின் ஒரு பகுதியில் வாழ்ந்தனர் எனக் கூறுகிறது. ஆயினும் கதைத் தலைவனும் தலைவியுமாகிய கோவலனும் கண்ணகியும் ஊனுண்ணாதவர்களாகவே காணப்படுகின்றனர். மதுரையில் ஆயர்பாடியில் தங்கிய கண்ணகி, அயலவர்கள் அளிப்பப் பெற்று உணவாக்குவதற்குப் பயன்படுத்திய பொருள்களனைத்தும் அரிசி, காய்கறி, பழவகைகள், பால், தயிர் முதலிய ஊனற்ற பிறவகைகளாகவே இருப்பதைக் காணலாம்.[5] கோவலனும் கண்ணகியும் அந்தணர் அல்லர், வணிகர்களே. வள்ளுவர் காலத்திலும் அதன் பின்னும் துறவியரும் அந்தணரும் மட்டுமன்றி மேற்குலத்தோராகக் கருதப்பட்டவரும் அறநூல்களைக் கற்கும் வாய்ப்பைப் பெற்றவர்களுமாகிய பலர் ஊனுணவைக் கைவிட்டனர் போலும். ஆயினும் தொடர்ந்து ஊனுண்டவர்களும் பலராவர்.

செல்வர்கள் சுவையுள்ள நல்லுணவையுண்டனர். 'பாலொடு தேன்கலந் தற்றே' (1121) என்ற உவமை பாலையும் தேனையும் கலந்துண்ணும் வழக்கம் அக்காலத்திருந்ததென்பதைக் காட்டும். பாலையும்

5. சிலப்பதிகாரம் 16. 24-28
கோளிப்பாகல் கொழுங்கனித் திரள்காய்
வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்
மாவின் கனியொடு வாழைத்தீங்கனி
சாலியரிசி தம்பாற் பயனொடு
கோல்வளை மாதே கொள்கெனக் கொடுப்ப

தேனையும் கலந்துண்ணும் வழக்கம் பிற சங்ககால நூல்களிலும் குறிப் பிடப்படுவதே. உணவாக்கும் கலையையும் அக்காலமக்கள் நன்கறிந் திருந்தனர்.

உப்பமைந் தற்றால் புலவி யதுசிறிது
மிக்கற்றால் நீள விடல் (1302)

என்பது ஒரு குறள். உப்பு அளவாக இருப்பின் உணவு சுவையுள் ளதாக இருக்கிறது. அது சிறிது மிகினும் சுவை கெடுகிறது. பழத்தைப் பதமறிந்து உண்பதைப் போலவே உணவாக்கும் போதும் உப்பு முதலியவற்றை அளவறிந்து கூட்டிச் சுவை பார்த்து உண்பதில் அக்கால மக்கள் தேர்ந்திருந்தனர் போலும்.

வறியோர் உணவு குறித்தும் சில குறிப்புக்கள் குறளில் காணப் படுகின்றன.

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ் (64)

தம்குழந்தையின் கைபட்ட கூழும் பெற்றோர்க்கு அமுதத்தை விட இனிதாகும். எனவே கூழ் சுவை குறைந்ததும் வறியோர் உண்ணும் உணவுமாகுமென்பது உணரப்படல் கூடும்.

தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது
உண்ணலி னூங்கினிய தில் (1065)

என மற்றொரு குறளிற் கூறப்படுவதனால் **தெண்ணீர் அடுபுற்கையும்** வறிய வரின் உணவு எனத் தெரிகிறது. புற்கை எனப்படும் ஒரு வகை யரிசியை நீரிலிட்டுக் காய்ச்சி உண்டனர் போலும்.

துப்புர வில்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று (1050)

என்ற குறள் இரப்போர் தம்மிடமுள்ள கூழுடனோ கஞ்சியுடனோ சேர்த்து உண்பதற்குப் பிறரிடம் உப்பும் காடியும் இரக்கும் வழக் கத்தைக் காட்டுகிறது. காடி எனப்படுவது காடியில் இடப்பட்ட ஊறுகாய் போலும். பெரும்பாணாற்றுப்படையில் வரும் 'காடி வைத்த கலன்' (பெரும். 57) என்ற தொடருக்கு உரை கூறுங்கால் நச்சினார்க் கினியர் 'புளியங்காய் நெல்லிக்காய் முதலியன ஊறவிட்டு வைத்த தனைக் காடியென்றார்' எனவே பொருள் கூறினார். ஊறுகாய் செய்து உண்ணும் வழக்கம் அக்காலத்தும் இருந்தது எனக் கொள்ளலாம்.

ஒருபால் கூழும் புற்கையும் உண்பவர்களும் உப்பும் காடியும் இரப்பவர்களும் இருப்ப அளவுக்குமீறி யுண்ட செல்வர்களும் இருந்தமையை மருந்து என்னும் அதிகாரம் காட்டுகிறது. இவ்வதிகாரத்தில் பல குறள்களில் அளவோடு உண்ண வேண்டும் என்பதையும் முன் உண்டது அற்றபின், துவரப்பசித்தபின் உண்ணவேண்டும் என்பதையும் ஆசிரியர் வற்புறுத்திக் கூறினர். 'கழிபே ரிரையான்கண் நோய் நிற்கும்' (946) எனவும் 'பெரிதுண்ணின் நோயள வின்றிப் படும்' (947) எனவும் அளவுக்கு மீறியுண்பவர்களை அவர் எச்சரித்தார். சுவையுள்ள உணவை ஆக்கும் வகையை யறிந்தது போலவே உடல் நலத்துக்கேற்றவாறு உண்ணும் வகையையும் உடல்நலம் பேணுவோர் அறிந்திருந்தனர். மருந்து போலவே உணவுவகைகளிலும் ஒருவர்க்கேற்றது மற்றொருவர்க்கு ஏற்றதாகாது போதல் கூடும் என்பதும் சில உணவு வகைகள் தம்முள் ஒத்துவரா, அதாவது அவற்றைச் சேர்த்து உண்பதனல் நோயோ துன்பமோ ஏற்படல் கூடும் என்பதும் அக்காலத்து அறியப்பட்டதே. 'மாறல்ல துய்க்க' (944) 'மாறுபா டில்லாத உண்டி' (945) என்ற தொடர்கள் இதைக் காட்டும்.

நஞ்சைப் பற்றிய குறிப்பும் குறளில் உண்டு.

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் (580)

நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று (1008)

என்ற குறள்கள் நஞ்சைக் குறிப்பிடுகின்றன. பழத்தை விரும்பிய மக்கள் சில பழங்கள் நச்சுத்தன்மை யுடையனவாயிருத்தல் கூடும் என்பதையும் அறிந்திருந்தனர். நஞ்சையிட்டு அளிப்பின் உண்டவன் இறப்பான் என நஞ்சின் தன்மை உணரப்பட்டதனலேயே பெயக்கண்டும் நஞ்சை யுண்பவன் நண்பர் பொருட்டு மேற்கொள்ளும் தன்மறுப்பு இங்குப் போற்றப்படுகிறது.

உண்ணப்படும் பொருள்களின் பலவிதத் தன்மைகளும் அக்காலத்து அறியப்பட்டனவே.

## 5 2. உடை

பழந்தமிழர் சமுதாயத்தை ஆய்பவர் சிலர் உடையை அக்கால மக்கள் முக்கியமாகக் கருதினரா அன்ரு என ஆய்ந்து வேறுபட்ட

கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர்.[6] உடை வகைகளைக் குறித்து வள்ளுவர் அதிகம் கூறுவிடினும் உடையை மக்கள் முக்கியமாகக் கருதினர் என்பதைச் சில குறள்கள் காட்டுகின்றன.

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும் (166)

உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ் (1079)

என்னும் குறள்கள் உணவுக்கு நிகராக மக்கள் உடையை மிக வேண்டப் படுவதும் விரும்பத்தக்கதுமான ஒன்றாகவே கருதினர் என்பதைக் காட்டும். ஆடை சிறிது நழுவினும் உடனே கை தானாகச் சென்று அதைச் சீர்செய்தல் போல இடுக்கண் ஏற்படும்போது தானே சென்றுதவுவதே சிறந்த நட்பு என்னும் உவமையும் (788) அக்கால மக்கள் ஆடையை முக்கியமாகக் கருதினர் என்பதையுணர்த்தும்.

பண்டைத்தமிழக மகளிர் மேலாடை யணிந்தனரா என்பதைக் குறித்துச் சிலர் ஐயுறுகின்றனர்.[7] மகளிர் மேலாடை யணிந்தமையை ஒருகுறள் தெளிவாகக் காட்டுகிறது. தலைவன் கூற்றாக வரும் அக்குறளில் தலைவியணிந்திருந்த மேலாடை யானையின் முகபடாத் திற்கு ஒப்பிடப்படுகிறது. அவ்வாடை துகில் எனக் குறிப்பிடப்படு கிறது (1087). தழையாடையைப் பற்றிய குறிப்பு எதுவும் குறளில் இல்லை. வள்ளுவர் காலத்தில் தழையாடை யணியும் வழக்கம் இறந் திருத்தல் கூடும்.

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும் (1023)

என்ற குறள் தொழில் புரியுங்கால் ஆடையை இறுக அணியும் வழக் கத்தைக் காட்டும்.

சூதாடுவோர் கல்வி, செல்வம், புகழ் முதலியவற்றுடன் ஊண் உடை யாகியவற்றையும் இழப்பர் எனவும் வள்ளுவர் எச்சரிக்கின்றார் (939). சூதாடுவோர் அழுக்காறு கொள்வோர் உடையும் உணவும் இழப்பர் என எச்சரிப்பவே பொதுவாகச் சமுதாயத்தில் யாவரும்

---

6. திரு. கனகசபை தம்நூலில் பழந்தமிழ்மக்கள் ஆடையை முக்கியமாகக் கருதவில்லை, ஆடையின்மை அக்காலத்துக் குறைவாகக் கருதப்படவில்லை எனக் கூறியதற்கு மாறாகத் திரு. என். சுப்ரமணியம், திரு. கே. கே. பிள்ளை முதலியோர் பழந்தமிழரனைவரும் பலவகை யாடைகளை அணிந்தனர் என விளக்குகின்றனர்.
Subrahmaniam, N., History of Tamil Nad, P. 351.
Pillai, K. K., A Social History of Tamils, Part I, P.302-306

7. Nilakanda Sastri, K. A., The Sangam Age, P. 62

போதிய உடையும் உணவும் பெற வேண்டுமென்பதே வள்ளுவர் கருத்தாதல் தெளிவாகும்.

வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று (273)

எனப் புலியின் தோல் ஒருவமையில் குறிப்பிடப்படுவதால் புலித்தோலை உரித்தெடுத்துப் பயன்படுத்தும் வகையை மக்கள் அறிந்திருந்தனர் எனக் கொள்ளலாம். புலியின் தோலை மக்கள் அமரும் இருக்கை யாகவோ படுக்கும் பாயாகவோ பயன்படுத்தி யிருத்தல் கூடும். புலித்தோல் போர்வீரர்க்கு ஒருவகைக் கவசமாக அல்லது மேலுடை யாகப் பயன்பட்டதெனவும் அக்கால உடை முதலியவற்றை ஆய்வோர் சிலர் கருதுகின்றனர்.[8]

வள்ளுவர்கால மகளிர் பலவகை அணிகலன்கள் அணிந்தனர் என்பதும் மகளிரும் ஆடவரும் மலர்களணிந்தமையும் மற்றும் மகளிர் கண்ணுக்கு மைதீட்டித் தம்மை யழகு செய்து கொள்ளும் வழக்கமும் முன்பே குறிப்பிடப்பட்டன (இல்லம் பார்க்க). மகளிர் பொன்னாலாகிய அணிகலன்கள் மட்டுமன்றிப் பளிங்குமணியினாலாகிய மாலை முதலிய வற்றையும் அணிந்தனர் (தொழில்கள் பார்க்க). வீரர்கள் காலில் கழல் அணிவதும் குறளில் குறிப்பிடப்படுகிறது (777).

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு (1113)

என்ற குறளில் முத்தம் முறுவலுக்கு உவமையாகக் குறிப்பிடப்படு கிறது. முத்து உவமையாக ஆளப்படுவதால் முத்தை யணிந்து கொள்ளும் வழக்கம் அக்காலத்திலிருந்ததென அறியலாம். 'வெறி நாற்றம்' என்னும் தொடரால் நறுமணப் பொருள்களைப் பயன் படுத்தும் வழக்கமும் ஊகிக்கப்படும்.

மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய ஆக்கந் தரும் (692)

என்ற குறளுக்கு உரை கூறுங்கால், 'விழைப' என்பதற்கு 'அவை நுகரப்படுவன, ஒப்பனை, மேன்மை என்றிவை முதலாயின' என உரை கூறப்பட்டது. அரசர்கள் உயர்ந்த ஆடையணிகலன்களை அணிவர் எனத் தெரிகிறது. அதே தரமுள்ள ஆடையணிகளை அமைச்சர் விழைதலாகாது என வள்ளுவர் இங்குக் கூறினர். சமுதாயத்தில் அவரவர் நிலைக்கு ஏற்ற ஆடையணிகளை அணிவது தக்கது என்பது

8. Ibid P. 62.

கருத்துப் போலும். வழக்கம் போல் இங்கும் வள்ளுவர் ஓரளவு அடக்கத்தையே கற்பித்தார்.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம் (706)

என வரும் உவமை அடுத்தது காட்டும் பளிங்கை அக்கால மக்கள் அறிந்திருந்தனர் என்பதை உணர்த்தும். பளிங்கு முகம்பார்க்கும் கண்ணாடியாக அக்காலத்துப் பயன்பட்டது போலும். ஏதோ ஒரு வகை முகம் பார்க்கும் கண்ணாடிகள் அக்காலத்துப் பயன்பட்டமை பிற சங்கநூல்களிலும் குறிப்பிடப்படுகிறது[9].

## 5.3. உறையுள்

தூண்கள் அமைக்கப்பட்ட இல்லங்களும் மண்டபங்களும் வள்ளுவர் காலத்து இருந்தமையும் சுவர்களின் மேல் சுதை தீட்டப் பட்டமையும் முன்பு குறிப்பிடப்பட்டன (தொழில்கள் பார்க்க). செல்வ வளமுடையவர்கள் செங்கல்லினலாகிய பெரிய வீடுகளிலும் மாளிகைகளிலும் வசிப்ப வறியோர் சிறு வீடுகளிலும் குடிசைகளிலும் வசித்தமையைப் பத்துப்பாட்டு முதலிய நூல்கள் காட்டுகின்றன. 'குடங்கர்' என்ற சொல் குறளில் ஆளப்படுகிறது. இச்சொற்குக் குடில் எனவே பரிமேலழகரும் மணக்குடவரும் உரை கூறினர். வறியோர் குடில்களில் வசிக்கும் வழக்கம் வள்ளுவர்காலத்தும் இருந்தது. மேலும் தனியே ஓரில்லத்தில் வசிக்கும் வசதியில்லாதவர்கள் ஒருவீட்டின் ஒருசிறு பகுதியில் குடியிருக்கும் வழக்கமும் அக்காலத்திலேயே இருந்ததென எண்ண இடம் உண்டு.

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு (340)

என்னும் குறளில் துச்சில் என்னும் ஒருசொல் ஆளப்படுகிறது. உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு நிலையானதும் தனக்கு உரியதுமாய வீடு ஒன்று கிடைக்கவில்லையோ என ஆசிரியர் வினவினர். உயிர் உடம்பில் தற்காலிகமாகக் குடியிருப்பதாக இங்குக் குறிப்பிடப்படுகின்றது. 'உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு' என்னும் தொடர்க்கு 'வாதம் முதலியவற்றின் இல்லாய உடம்புகளுள் ஒதுக்கிருந்தே போந்த உயிர்க்கு' எனப் பரிமேலழகரும், 'தனது அல்லாத

9. அகநானூறு 71.13: *எள்ளற இயற்றிய நிழல்காண் மண்டிலத்து*

உடம்பினுள்ளே ஒதுக்குக் குடியாக இருந்த உயிர்க்கு' என மணக்குடவரும் உரை கூறினர். 'துச்சில் என்பது ஒருத்தர் அளவிலே ஒதுக்குக் குடியிருத்தல்' என்றார் பரிதியார். இவ்வாறு ஒதுக்குக் குடியிருக்கும் வழக்கம் அக்காலத்தும் இருந்ததனாலேயே துச்சில் என்னும் சொல் இங்கு ஆளப்பட்டிருத்தல் வேண்டும்.

உறையுளைக் குறித்து அதிகக் குறிப்புக்கள் குறளில் இல்லை.

## 5.4. ஊர்தி

வள்ளுவர் காலத்தில் 'உருள் பெருந்தேர்' 'கால்வல் நெடுந்தேர்' எனக் குறிப்பிட்ட தேர்கள் இருந்தன. குதிரைகளும் யானைகளும் ஏறிச் செல்வதற்குப் பயன்பட்டன. இவை பெரும்பாலும் அரச குடும்பத்தவர் வீரர் முதலியோர்க்குப் பயன்பட்டன போலும். செல்வர்கள் சிவிகையில் ஏறிச் செல்லும் வழக்கமும் இருந்தது. இவை முன்பே குறிப்பிடப்பட்டன (தொழில்கள் பார்க்க). ஆயினும் பெரும்பாலோர் கால்நடையாகச் செல்லும் வழக்கமும் இருந்திருத்தல் வேண்டும்.

எருதுகள் இழுத்துச் செல்லும் வண்டிகள் பண்டங்கள் ஏற்றிச் செல்லப் பயன்பட்டன. அவற்றைச் சாகாடு என்றனர்.

> பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
> சால மிகுத்துப் பெயின் (475)

என்ற குறளில் பண்டம் ஏற்றிச் செல்லும் சாகாடு குறிப்பிடப்படுகிறது. இச்சாகாடுகளை எருதுகள் இழுத்துச் செல்லுமெனவும் பாதைகள் மேடுபள்ளமாக இருப்பினும் சேற்று நிலமாக இருப்பினும் முயன்று இழுத்துச் செல்லுமெனவும் 'மடுத்தவாய் எல்லாம் பகடன்னான்' என்னும் உவமையால் அறியலாம். 'மடுத்த வாயெல்லாம் பகடன்னான்' என்ற தொடருக்கு 'விலங்கிய இடங்கள் எல்லாவற்றிலும் சகடம் ஈர்க்கும் பகடுபோல' என்றே உரை கூறப்படுகிறது.

தொல்காப்பியர் காலத்திலிருந்தே தமிழர்கள் கடற் செலவு மேற்கொண்டனர் எனத் தெரிகிறது. வாணிபத்திற்காகவும் மீன் பிடித்தற்காகவும் முத்து சங்கு முதலியவற்றை எடுத்தற்காகவும் மக்கள் கடல்மேல் சென்றிருத்தல் கூடும். மணிமேகலையில் ஆதிரையின் கணவன் சாதுவன் வாணிபத்தின் பொருட்டு மரக்கலம் ஏறிச்

சென்றமை குறிப்பிடப்படுகின்றது (மணி 16. 11-12). சங்க நூல்களிலும் கடற் செலவைப் பற்றிய குறிப்புக்கள் உள.

'கடலோடும் நாவாய்' (496) 'கலன்' (605) 'தோணி' (1068) ஆகியவை குறளில் குறிப்பிடப்படுகின்றன.

> இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
> பார்தாக்கப் பக்கு விடும் (1068)

என்னும் உருவகம் அக்காலமக்கள் கடற் செலவில் பெற்றுள்ள அனுபவத்தைக் காட்டுகிறது. ஏறிச்செல்லும் தோணி வலிமையற்றதாக இருப்பின் கடலில் உள்ள பாறைகள்மேல் தாக்க நேரிட்டால் அது பிளந்து விடும் என்பதை அறிந்திருந்தனர்.

இவ்வாறு நிலத்தின் மேலும் கடலின் மேலும் செலுத்தப்படும் சில ஊர்தி வகைகள் திருக்குறளில் குறிப்பிடப்பட்டன.

## 5. 5. பிற

மக்கள் வாழ்க்கையின் பிற இயல்புகள் குறித்தும் அறியப்படுவன சில.

### 5. 5. 1. வீட்டில் பயன்பட்டவை

வீடுகளில் கட்டில், இருக்கை முதலியவை பயன்படுத்தப்பட்டனவா இல்லையா என்பதற்குரிய குறிப்புக்கள் குறளில் காணப்படவில்லை. 'அன்னத்தின் தூவி' (1120) மிக மென்மையான பொருளுக்கு எடுத்துக்காட்டாகக் கூறப்படுவதால் செல்வர்கள் அன்னத்தூவியை அணையாகப் பயன்படுத்தியிருத்தல் கூடும்.

மூடியையுடைய செப்புக்கள் குறளில் குறிப்பிடப்படுகின்றன (887). இவை சிறுபேழைகள் போலும். 'பசுமட் கலத்துள் நீர் பெய்திரீஇயற்று' (660) என்னும் உவமையால் மக்கள் மட்பாண்டங்களில் நீரெடுத்து வைத்தனர் எனத் தெரிகிறது.

இரவில் விளக்கேற்றும் வழக்கம் இருந்தது. பல நற்குணங்கள் அல்லது பொருள்கள் குறளில் விளக்காக உருவகிக்கப்படுகின்றன.

> எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
> பொய்யா விளக்கே விளக்கு (299)

> பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
> எண்ணிய தேயத்துச் சென்று (753)

பொய்யாமை சான்றோர்க்கு ஏற்ற விளக்காக உருவகிக்கப் பட்டது. நல்வழியில் தேடிய பொருள் விளக்காகவும் பகை இருளாகவும் கூறப்பட்டன.

குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும் (601)

என்னும் உருவகமும்

விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் (1186)

என்னும் உவமையும் இருளகற்றும் ஒளியின் ஆற்றலையும் எண்ணெயின் மையாலோ பிற காரணத்தாலோ விளக்கின் ஒளி குன்றி அது அணையப் பரவும் இருளையும் கவனித்துப் பார்த்துக் கூறப்பட்டவையே யாகும்.

நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல் (1148)

என்ற உவமை எரியை அழிக்காது மிகுவிக்கும் நெய்யின் இயல்பைக் குறிப்பிடுகிறது. இங்குக் குறிப்பிடப்பட்டது விளக்கெரிக்கப் பயன்படும் எண்ணெயே போலும். எண்ணெயிட்டு ஏற்றப்படும் விளக்குகளே அக்காலத்துப் பெரிதும் பயன்பட்டிருத்தல் வேண்டும்.

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும் (435)

என ஓர் உவமை கூறப்படுகிறது. வைக்கோலைப் போராகக் குவித்து வைத்துப் பயன்படுத்திக் கொள்ளும் வழக்கம் அப்போதும் இருந்திருக்கிறது. வைக்கோல் பலவகைகளில் மக்களால் பயன்படுத்தப் பட்டது. ஆடுமாடுகளுக்கு உணவாகப் பயன்பட்டதுடன் வீட்டின் கூரை வேய்வதற்கும் பயன்பட்டதெனச் சங்க நூல்களில் வரும் புனைந்துரைகள் காட்டுகின்றன.[10] வைக்கோலின் விரைவில் எரியப் படும் தன்மை இங்குக் குறிப்பிடப்படுவதால் வைக்கோல் நெருப் பெரிப்பதற்கும் பயன்பட்டிருக்குமெனை ஊகித்தல் கூடும். சிலப்பதி காரத்தில், ஆயர்பாடியில் தங்கியிருந்த கண்ணகிக்கு உதவி செய்ய வந்த ஐயை வைக்கோலை அடுப்பில் வைத்து நெருப்பு மூட்டினள் எனக் கூறப்படுகிறது.[11]

10. Nilakanda Sastri, K. A., The Sangam Age, P. 34
11. சிலப்பதிகாரம் 16. 33, "வையெரி மூட்டிய ஐயைதன்னொடு"

## 5. 5. 2. மக்கள் விரும்பியவை

பண்டைக்காலத் தமிழ் மக்கள் மலர்களை மிகவும் விரும்பினர். மலர்களைச் சூடி மகிழ்ந்தனர். பலவித மலர்களைக் கவனித்து அவற்றின் நிறத்தையும் வடிவத்தையும் நறுமணத்தையும் பிரித்தறிந்தனர். சங்க நூல்களனைத்திலும் பலவித மலர்கள் குறிப்பிடப்படுகின்றன. சிறப்பாகக் குறிஞ்சிப் பாட்டில் மலைநில மலர்கள் புனைந்துரைக்கப்படுகின்றன. கவிஞர்கள் மலர்களைக் கொண்டு பலஉவமைகளைக் கூறினர்.

குவளை அனிச்சம் முதலிய மலர்கள் திருக்குறளில் குறிப்பிடப் படுகின்றன. அனிச்சத்தின் மென்மையை ஆசிரியர் பன்முறை குறிப்பிட்டார். விருந்தினர்களின் உள்ளத்தை அனிச்சமலருக்கு ஒப்பிட்டு அவர்கள் உள்ளம் அம்மலரைவிட மெல்லிது எனக் காட்டினர். காமத்துப்பாலில் தலைவன் கூற்றாக வரும் குறள் அனிச்சம் பூவும் தலைவியின் பாதத்திற்கு நெருஞ்சிப் பழம்போல் துன்பம் செய்யும் எனத் தலைவியின் மெல்லடியைப் புனைந்துரைத்து அனிச்சம் பூவின் மென்மையையும் தெரிவிக்கின்றது. அனிச்சமலர்களைத் தலைவி அணிந்து கொண்டிருப்பதைக் கண்டு அவற்றைக் காம்பு கொய்யாது அணிந்ததனால் அவள் இடை இற்று விடுமோ எனக்கூறித் தலைவன் இடையின் சிறுமையை மிகுத்துரைக்கிறான். குவளை கண்ணுக்கு ஒப்பிடப்படுகிறது. தலைவியின் கண்களைக் காணின் அவற்றோடு ஒவ்வேமென்று குவளை கவிழ்ந்து நிலம் நோக்கும் என்பது தலைவனின் மற்றொரு கூற்று. மக்கள் மலர்களின் தன்மைகளை மிக நுண்ணிதாகக் கூர்ந்து நோக்கி யறிந்தமையை இவை காட்டும்.

> காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
> மாலை மலரும்இந் நோய் (1227)

என்ற குறளில் தலைவி பிரிவுத்துன்பத்தைக் காலையில் சிறுஅரும்பாக இருந்து பகலெல்லாம் பேர் அரும்பாக முதிர்ந்து மாலை மலரும் பூவாக உருவகிக்கின்றாள்.

மொட்டு சிறிதாகத் தோன்றிப் பெரிதாகிப் பின் விரிவதைக் கூர்ந்து நோக்கிக் கூறப்பட்ட அணி இது. 'முகைமொக்குள் உள்ளது நாற்றம்' (1274) என்னும் தொடர் முகை சிறிது முகிழ்க்கும் போது இன்னும் முற்றிலும் வெளிப்படாது சிறிது தோன்றும் நறுமணத்தைக் குறிக்கும். அரும்புகளையும் முகிழ்க்கும் மலர்களையும் பறித்தும் தொடுத்தும் அணிந்து அவற்றின் எழிலையும் நறுமணத்தையும்

நுகர்ந்து மகிழ்ந்த பழந்தமிழ் மக்களின் உள்ளத்தை இவ்வணிகள் காட்டும்.

நிழலும் நீரும் மக்களால் விரும்பப்பட்டன. வெப்பம் மிகுந்த இந்நாட்டில் இது இயல்பே. 'நிழல்நீரும் இன்னாத இன்னா' (881). அதாவது நிழலும் நீரும் துன்பத்தைத் தந்தால் இன்னாதவாகும் என்னும் குறளடி இயல்பாக நிழலையும் நீரையும் மக்கள் இனியவாகக் கருதினர் என்பதை யுணர்த்தும். நீரிலும் நிழலிலுள்ள நீரை மக்கள் விரும்பினர். 'நீரும் நிழல தினிதே' (1309) என்பது மற்றொரு குறளடி. ஆறு, குளம் முதலிய நீர்நிலைகளில் நீராடுவதே பண்டைக்காலத்தில் பெருவழக்காக இருந்தது. பலர் நீந்தவும் கற்றிருந்தமை முன்பே குறிப்பிடப்பட்டது. நிழல் தரும் சோலைகளையும் மக்கள் விரும்பினர். அக்காலத்து இயல்பாய காடுகளும் அழகுக்காக அமைக்கப்பட்ட சோலைகளும் பிற மரச்செறிவுகளும் அதிகமாக இருந்தன எனவே சங்க இலக்கியங்களில் வரும் புனைந்துரைகள் காட்டுகின்றன.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு (385)

என்னும் குறளுக்கு உரை கூறுங்கால் பரிமேலழகர் வகுத்தல் என்பதை அறப்பொருட்டாகவும் பொருட் பொருட்டாகவும் இன்பப் பொருட்டாகவும் வகுத்தல் எனக் கொண்டார். அவற்றில் இன்பப் பொருட்டாக வகுக்கப்பட்ட பொருள் மண்டபம், வாவி, இளமரக்கா, செய்குன்று முதலிய இயற்றுதற்குப் பயன்படும் என்றார். பரிமேலழகர் காலத்தில் மட்டுமன்றி வள்ளுவர் காலத்தில் அல்லது அதற்குமுன் சங்ககாலத்திலேயே அரசர்கள் இவற்றை இயற்றும் வழக்கம் இருந்ததென அக்காலத்தை ஆராய்ந்தோர் கருதுகின்றனர்.[12] இவை பொது மக்களால் பயன்படுத்தப்பட்டு நகர்களுக்கு எழில் நல்கின போலும்.

நிலவொளியையும் மக்கள் மிகவும் விரும்பினர். வளர்பிறையையும் பின் முழுநிலவையும் விண்மீன்களையும் நோக்கி மகிழ்ந்தனர். விசும்பு, மதி, மீன் என்னும் சொற்கள் குறளில் ஆளப்படுகின்றன. இரவில் தலைவியின் முகத்தையும் வான்மதியையும் நோக்கிய தலைவன்,

---

12. Arokiasamy, M., The classical Age of the Tamils, P. 70

"They produced mechanical wonders like 'automatic wells' (though we are not in a position to say what they were) and artificial hills, waterfalls and tanks. They built rooms in marble and laid out wonderful gardens".

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன் (1116)

எனத் தலைவியின் முக எழிலைப் புனைந்துரைக்கின்றனனும். வெண் மதியையும் அதைச்சுற்றியுள்ள மீனினத்தையும் கண்டு மகிழ்ந்த பழக்கத்தினுல் தோன்றிய புனைந்துரை இது. 'அறுவாய் நிறைந்த அவிர் மதி' (1117) என்ற தொடரும் அக்கால மக்கள் சிறுபிறையாகத் தோன்றி நாடோறும் வளர்ச்சியுற்று முழுநிலவன்று நிறைவடிவாகத் தோன்றும் திங்களைக் கண்டு மகிழ்ந்த தன்மையைக் காட்டும். தலைவி கூற்ருக வரும் மற்ருெரு குறள் இங்குக் குறிப்பிடற்குரியது. பிரிவுக் காலத்தில் தனியே இருந்த தலைவி வானில் திங்களை நோக்கினுள். அந்த நேரத்தில் தலைவர் எங்கேயிருப்பினும் அவரும் திங்களைப் பார்த்துக் கொண்டிருப்பார் என எண்ணினுள். இருவரும் வெவ்வேறிடத்திருப்பினும் ஒரு பொருளை நோக்கு மளவிற்கு ஒன்றுபடுகின்றனர் என்ற எண்ணம் அவளுக்கு ஆறுதல் அளித்தது. ஆகவே, இவ்வொற்றுமை நீடிக்குமாறு மறையாதிருப்பாயாக என மதியை இரந்தாள்.

விடாஅது சென்ருரைக் கண்ணினுல் காணப்
படாஅதி வாழி மதி (1210)

இக்குறள்கள் அக்காலமக்கள் தண்ணிலவைப் பெரிதும் விரும்பினர் என்பதைக் காட்டும்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை இணையடி நீழலே (294.1 தலமுறை)

எனப் பிற்காலத்தில் நாவுக்கரசர் இறைவனருளை இயற்கையில் இனியன வற்றிற்கு ஒப்பிட்டுப் பாடியதும் நிழலையும் நீரையும் மாலை மதியத்தையும் விரும்பி நுகரும் இவ்வியல்பைப் பின்பற்றியே போலும்.

மழையும் மக்களால் பெரிதும் விரும்பி வரவேற்கப்பட்டது என்பதை,

வாழ்வார்க்கு வானம் பயந்தற்ருல் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி (1192)

என்னும் உவமை காட்டும்,

வெப்பம் நிறைந்த இந்நாட்டில் குளிர்ச்சியைத் தரும் பொருள்களை மக்கள் விரும்புதல் இயல்பே. மாறாகப் பனியும் குளிரும் மிகும் நாட்களில் நெருப்பருகிலிருந்து வெப்பம் பெறும் வழக்கமும் மக்களிடையே இருந்ததென்பதை ஒரு குறள் காட்டுகிறது.

அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார் (691)

குளிர் நிறைந்த இரவில் நெருப்பின் அருகில் அமர்ந்து அதன் வெப்பத்தை அடைய விரும்புவோர் மிக அகலாதும் அணுகாதும் இடைப்பட இருந்து தீக்காய்வர் என்பது இங்குக் குறிப்பிடப்படுகிறது. 'பகுவாய்த் தடவின் செந்நெருப்பார' (பகுத்தாற் போன்ற வாயையுடைய இந்தளத்திலிட்ட சிவந்த நெருப்பின் வெம்மையை நுகர. நெடு. 66) என நெடுநல்வாடையில் மக்கள் நெருப்பருகிலிருந்து குளிராற்றுதல் கூறப்படுகிறது. அக்காலத்தில் மாரிகாலத்துக் குளிர் இக்காலத்திலிருப்பதை விட அதிகமாக இருந்திருத்தல் வேண்டும்.

### 5. 5. 3. ஊர் அமைப்பு

ஊர்கள் எவ்வாறு அமைக்கப்படவேண்டும் என வள்ளுவர் கூறவில்லை. வள்ளுவரின் காலத்தில் ஊர்கள் இருந்தன. ஊரில் ஒருவர் வாழ்க்கையைச் செயல்களை மற்றவர்கள் அறிந்தும் அதைக் குறித்து ஒருவரோடொருவர் உரையாடியும் வந்தனரெனத் தெரிகிறது.

உறுஅதோ ஊரறிந்த கௌவை (1143)

ஊரவர் கௌவை எருவாக (1147)

யாம்வேண்டும்
கௌவை எடுக்குமிவ் வூர் (1150)

இமைப்பின் கரப்பாக் கறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னும் இவ்வூர் (1129)

என்னும் குறளடிகள் தலைவன் தலைவியரின் செயல்களை ஊரவர் கவனிப்பதையும் அவற்றைக் குறித்துத் தமக்குள் பேசிக் கொள்வதையும் காட்டும்.

மக்கள் ஊராகக் கூடி ஒருவரையொருவர் அறிந்தும் பேசியும் பழகியும் வாழ்ந்தனர். நண்பர்களும் உறவினரும் ஒரு ஊரில் இருப்பின் நெருங்கிப் பழகுவர். மாதரும் தோழியருடன் நெருங்கிப் பழகித் தம் இன்பதுன்பங்களைப் பகிர்ந்து கொள்வர் எனத் தெரிகிறது. நட்பும் உறவும் இல்லாத ஊர்களில் வாழ மக்கள் விரும்பார்.

'இன்னா தினனில்ஊர் வாழ்தல்' (1158)

என்ற அடி இதை யுணர்த்தும்.

ஊர்களில் மறுகுகள் இருந்தன. நடுவில் மன்று அல்லது மன்றம் எனப்படும் பொதுவிடம் இருந்தது. 'காமம் மறையிறந்து மன்று படும்' (1138), 'காமம் மறுகின் மறுகும் மருண்டு' (1139) என்னும் அடிகள் மன்றையும் மறுகையும் குறிப்பிடும். இல்லங்களிடையே தெருக்கள் அமைக்கப்பட்டிருந்தன. மன்று என்பது ஊருக்குள் நடுவே இருந்திருத்தல் வேண்டும். ஊரின் நடுவில் ஆல் அல்லது பிற பெரிய மரத்தினருகில் உள்ள பொதுவிடமே மன்று எனப்படும் என்றும் அங்கு ஊரவை கூடுவது மட்டுமன்றிப் பொதுவாக விழா வெடுக்கவும் விளையாட்டுக்களுக்கும் ஊரார் அனைவரும் அவ்விடத்துக் கூடுவரென்றும் அக்காலச் சமுதாயத்தை ஆய்ந்தோர் கூறுவர்.[13]

## 5.6. சில பழக்க வழக்கங்கள்

வயது முதிர்ந்தோர்க்கு அக்கால மக்கள் மதிப்பளித்தனர். அரசவையில் அமைச்சர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறையைக் கூறும் போது வள்ளுவர்,

நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு (715)

என்றார். தன்னைவிட முதியோர் அவையில் இருப்பின் தான் அவர் கட்குமுன் பேசாது அவர் பேசியபின் தன் கருத்தைக் கூறும் அடக்க முடைய தன்மை அமைச்சனுக்கு இருக்கவேண்டிய நற்பண்புகளுள் மிக நன்றாகும். குற்றங்கடிதலுள் அரசர்க்கு இருக்கத் தகாதனவாகிய சில இயல்புகளைக் கூறுங்கால் வள்ளுவர் 'மாண்பிறந்த மானம்' (432) என ஒரு குற்றத்தையும் குறிப்பிட்டார். 'அந்தணர் சான்றோர் அருந் தவத்தோர் தம்முன்னோர் தந்தை தாய் என்றிவரை வணங்காமை' என இத்தொடர்க்குப் பரிமேலழகர் உரை கூறினர். அரசரும் தம் முன்னோர், தந்தை, தாய் ஆகியோரை வணங்கினர். அமைச்சரும் அரசரும் நாட்டில் முன் மாதிரியாக விளங்க வேண்டியவர். பெரியோரிடம் மதிப்பு அவர்கட்குக் கூறப்படவே யாவரும் குடும்பத்திலும் பொதுவிடங்களிலும் வயதிற் பெரியோர்க்கு மதிப்பளித்தல் வேண்டுமென்பதே அக்காலக் கருத்து எனக் கொள்ளலாம்.

13. Pillai K. K., A Social History of the Tamils, Part I, P. 326

மதிப்புக்குரியவரைக் காணும் போது கை கூப்பி வணக்கம் தெரிவிக்கும் வழக்கம் அக்காலத்திலும் இருந்திருக்கிறது.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும் (260)

என்ற குறள் இதைக் காட்டும்.

மக்கள் உடலையும் இல்லத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்வதை முக்கியமாகக் கருதினர். பண்டைத் தமிழ்மக்கள் நாடோறும் நீராடுவதை வழக்கமாகக் கொண்டனர் என அக்கால வாழ்க்கையை ஆய்ந்தோர் கூறுவர். 'புறந்தூய்மை நீரா னமையும்' (298) என்ற குறளும் இதைக் காட்டும். வீட்டை, முக்கியமாகப் படுக்கும் இடத்தை மிகத் தூயதாகப் பாதுகாப்பர். இரவில் படுக்கச் செல்லும் முன் பாதங்களைக் கழுவித் தூய்மை செய்து பின் துயில் செய்யச் செல்வர் போலும்.

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல் (840)

என்ற குறள் இதைக் காட்டும். பேதை சான்றோர் அவையுள் புகுவது தூய்மை செய்யப்படாத பாதத்தைப் படுக்கையில் வைப்பது போன்ற தகுதியற்ற செயல் என வள்ளுவர் இங்குக் கூறினர். அதிலிருந்து படுக்கையைத் தூயதாக வைத்துக்கொள்ளும் வழக்கத்தை யறியலாம்.

முக்கிய செய்திகளைப் பறையறைந்து அறிவிக்கும் வழக்கம் அக்காலத்திலிருந்தது. நாட்டில் போர் ஏற்படின் போர் முரசு ஒலிக்கும். அரச குடும்பத்தில் திருமணம் அரசன் பிறந்த நாள் முதலிய மங்கல நிகழ்ச்சிகள் நிகழ இருப்பின் அச்செய்தியும் பறையறைந்து அறிவிக்கப் படும். விழாவெடுக்கும் போதும் அவ்விழாவின் தொடக்கத்தை முரசறைந்து அறிவித்தனர். இந்திர விழாவின் தொடக்கத்தில் அவ்வாறு முரசறையப்பட்டமையைச் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கூறுகின்றன. செல்வர்களும் தம்குடும்பத் திருமண நிகழ்ச்சியை அவ்வாறு முரசறைந்து அறிவித்தனர். கோவலன் கண்ணகி திருமணம் பற்றிய செய்தி அவ்வாறு மாநகர்க்கு அறிவிக்கப்பட்டமை சிலப்பதிகாரத்து மங்கல வாழ்த்துப்பாடலுள் கூறப்படுகின்றது. பறை யறைந்து செய்திகள் அறிவிக்கப்படும் வழக்கத்தைத் திருக்குறளில் வரும் சில உவமைகளும் காட்டுகின்றன.

அறைபறை யன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான் (1076)

மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணா ரகத்து (1180)

கயவர் பிறர் மறைத்து வைக்க விரும்பும் செய்திகளைக் கேள்வியுறின் தாம் சென்று யாவர்க்கும் அறிவிப்பர் ஆதலின் அறைபறை போல்வர். தலைவி கூற்றாக வரும் இரண்டாவது குறள் துயில் செய்யாததனாலும் நீர் சிந்துதலினாலும் வேறுபட்டுத் தோன்றும் தலைவியின் கண்கள் அறைபறை போல் அவள் துன்பத்தைப் பிறர்க்கு உணர்த்துவதால் மறைக்க வேண்டிய அந்நிலையை ஊரவர் அறிவது அரிதன்று எனக் கூறும். இவற்றினின்றும் பறையறைந்து செய்தியறிவிக்கும் வழக்கம் அறியப்படும்.

செய்தி அறிவித்தற்கு மட்டுமன்றி இறந்தோர்க்குப் பறையடிக்கும் வழக்கமும் அக்காலத்திருந்தது. தலைவியின் மலரணியைக் கண்ட தலைவன்,

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை (1115)

எனத் தலைவியின் இடையது சிறுமையை மிகைப்படுத்திப் புனைந்துரைக்கிறான். மலரின் பாரத்தால் அவள் இடை இற்றுவிடும் எனக் கூறுகின்ற தலைவன் இனி இவள் இடைக்கு நல்லபறைகள் ஒலியா என்றான். 'செத்தார்க்கு உரிய நெய்தற்பறையே படுவது' என உரையிற் கூறப்படுகிறது. இது இறந்தவர்க்குப் பறையடிக்கும் வழக்கத்தைக் காட்டும்.

வீரர்கள் போருக்குச் செல்லுங்கால் போரில் தான் இன்ன வீரச் செயல்களைச் செய்யானாகில் இன்னன் ஆவான் என வஞ்சினம் கூறிச் செல்லல் அக்காலத்திருந்த ஓர் வழக்கமாகும்.

இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர் (779)

என்ற குறள் இதனைக் காட்டும். தாம்கூறிய வஞ்சினம் தவறாமைப் பொருட்டுப் போரில் உயிர்துறக்கும் வீரர்களை அது தவறிற்று எனக் கூறி எள்ளுபவர் யார் என வீரர்களின் இயல்பை வள்ளுவர் இங்குக் கூறினார்.

போருக்காகவோ பிற தொழிலின் பொருட்டோ குடும்பத் தலைவன் வீட்டை விட்டுப் பிரிந்து சென்ற காலை மனைவி அவன் பிரிந்த நாட்களைக் கணக்கிடும் பொருட்டுச் சுவரில் கோடிழைத்து அவற்றை

அடிக்கடி எண்ணி அவன் பிரிந்து இத்தனை நாள் ஆயிற்று, இன்னும் இத்தனை நாளில் திரும்பிவருவன் எனக் கணக்கிடுதல் வழக்கம் எனத் தெரிகிறது.

வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல் (1261)

என்பது காமத்துப்பாலில் தலைவி கூற்றாக வரும் ஒரு குறள். தலைவன் வரும் வழியைப் பார்த்துப் பார்த்து அவள் கண்கள் ஒளியிழந்தன என்றும் அவன் சென்ற நாட்களைக் குறித்துச் சுவரில் இழைத்த கோடுகளை ஒற்றி எண்ணுவதால் கைவிரல் தேய்ந்தது என்றும் தலைவி கூறுகிறாள்.

இவ்வாறு பண்டைத் தமிழகத்துப் பழக்க வழக்கங்கள் சில குறள் மூலம் அறியப்படுகின்றன.

## 7.5 பொது மக்களிடையே வழங்கிய சில கருத்துக்கள் (Some Popular Beliefs)

மக்களோ அரசனோ அறம் தவறின் இயற்கை பயன் தராது என்பது பண்டைக் காலத்தில் பல நாடுகளில் வழங்கி வந்த கருத்தாகும். பல பழம்தமிழ் இலக்கியங்களிலும் இக்கருத்தைக் காணலாம். அறம் கடைப்பிடிக்கப்படின் நாட்டில் நல்வளம் பெருகும் என்பதும் இதனோடொத்த கருத்தாகும். கலித்தொகையில் ஒரு குறமகள் 'மலை வாழ் மக்கள் அறமல்ல புரியின் நிலத்தில் வள்ளிக் கிழங்குகள் விழ மாட்டா; மலையில் தேன் தொடுக்கப்படமாட்டாது. நிலத்தில் வளரும் தினைப்பயிர் கதிர் ஈனாது' எனத் தன் ஊரவரை எச்சரிக்கிறாள்.[14] சிலப்பதிகாரத்தில் கண்ணகியை மாதரியிடத்து அடைக்கலப்படுத்திய கவுந்தியடிகள் பத்தினிப் பெண்டிர் இருந்த நாட்டில் 'வானம் பொய்யாது வளம் பிழைப்பறியாது' (15.145) எனக் கூறுகின்றாள். இத்தகைய கருத்துக்களைக் குறளிலும் காணலாம்.

தன் கணவன் நினைவாகவே துயிலெழும் கற்புடைய மகள் மழை வேண்டியபோது மழை பொழியும் என்ற வள்ளுவர் கருத்து முன்பு குறிப்பிடப்பட்டது (இல்லம் பார்க்க).

வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம் (239)

---

14. கலித்தொகை 39

என்ற குறளும் மக்கள் புகழ்தரத்தக்க நல்வாழ்க்கை வாழாவிடின் நிலம் பயன் தராது எனக் கூறுகிறது.

அரசன் நீதி தவறினும் இயற்கை வளம் குன்றும் என மக்கள் கருதினர்.

மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்கும்இக் கண்ணகன் ஞாலம்
(புறம் 35. 27—29)

என வெள்ளைக்குடி நாகனார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை நோக்கிக் கூறினர். மழை பெய்யாது பொய்ப்பினும் நாட்டில் விளைபொருள் குறையினும் மக்கள் அரசரைக் குறை கூறுவது அரசர் எவ்வகையிலோ நீதி தவறியதனல் இவை நிகழ்ந்தன எனக் கருதியதனுலேயே. திருக்குறளிலும் இக்கருத்தைக் காணலாம்.

இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு (545)

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல் (559)

பருவத்தில் பொழியும் நன்மழையும் நிறைந்த விளைபொருளும் சேர்ந்து அறநூல்கள் சொன்ன இயல்பால் அரசு செலுத்தும் அரசனின் நாட்டிடத்தவாம் என்றும் அரசன் முறை தவறி அரசு செய்யின் வானம் அவன் நாட்டில் பருவ மழை பொழிதலைச் செய்யாது என்றும் நீதியுடைய அரசன் நாட்டில் இயற்கைவளம் பெருகுதலும் அது தவறிய அரசன் நாட்டில் வளம் குன்றுதலும் கூறப்பட்டன. இவை அக்கால மக்களிடையே வழங்கிய கருத்துக்களாதல் மட்டுமின்றி வள்ளுவர் தாமே இவற்றை எடுத்துக் கூறுவதால் அவர் கருத்துக்களு மாகும்.

பேய்கள் தீயஆவிகள் ஆகியவற்றில் பழந்தமிழ்மக்கட்கு நம்பிக்கை இருந்ததென அறிஞர் பலர் கருதுகின்றனர்.[15] அலகை, பேய் என்னும் சொற்கள் குறளிலும் ஆளப்படுகின்றன. உலகத்தார் உண்டென்பதை இல்லையென்பவன் மக்களுள் அலகையாகக் கருதப் படுவான் என்றார் வள்ளுவர் (850). அரசன் தன் குடிமக்கட்குச்

15. Pillai K. K., A Social History of the Tamils, Part I, P. 538-539

செவ்வி யரியனுய் அவர்கள் தம்குறை கூற வருங்கால் அருளற்ற பார்வையுடையவனுயிருத்தல் ஆகாது எனக் கூற வந்த வள்ளுவர்,

அருஞ்செவ்வி இன்னு முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து (565)

என்ருர். 'பேஎய் கண்டன்னதுடைத்து' என்ற தொடருக்குப் 'பேயால் காணப்பட்டாற் போல்வதொரு குற்றம் உடைத்து' எனப் பரிமேலழகர் பொருள் கூறிக் காணுதல் தன்வயமாக்குதல் என விளக்கமும் தந்தார். நிலத்தில் புதைக்கப்பட்ட செல்வத்தைப் பேய் பாதுகாக்கும் என்ற ஒரு கருத்து பிற்காலத்தில் மக்களிடையே வழங்கலாயிற்று. வள்ளுவர் காலத்திலும் இக்கருத்து இருந்திருத்தல் கூடும். 'பேயைக் கண்ட தொக்க அச்சம் தருதலுடைத்து' எனவே மணக்குடவர் உரை கூறினர். 'பேய் செல்வம் பெற்றதற்கு ஒக்கும்' என்ருர் பரிதியார். பேய்கள் உள்ளன என்பது வள்ளுவர் கருத்து எனக் கூறுதற்கு இல்லை. பொதுமக்களிடையே வழங்கிய கருத்தை யெடுத்து அவர் உவமையில் பயன்படுத்தி யிருக்கலாம்.

அன்புடையோர் பிரிந்திருப்பின் ஒருவரையொருவர் கனவிற் காணுவர் என்ற கருத்து காமத்துப்பாலில் காணப்படுகிறது. விரும்பிய தொன்றைக் கனவிற் காணுதல் (wish fulfilling dreams) என்னும் உளவியல்பு தற்காலத்து உளநூல் வல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதே. மிக வெப்பமான நாட்டில் தங்குவோர் குளிர்ச்சியுள்ள இடங்களையும் மிகு குளிரில் துருவக்கடல்மேல் செல்லும் மாலுமிகள் வெப்பமுள்ள இடங்களையும் கனவில் காணுவர் என உளநூல் வல்லோர் கூறுவர். காமத்துப்பாலில் தலைவி பன்முறை தலைவனைத் தான் கனவில் காணுவதாகக் கூறுகிருள். ஆயினும் குறளில் கனவு பின்வரும் நிகழ்ச்சிகளை அறிவிக்கும் என்னும் கருத்து இல்லை. சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் கனவு பின்வரும் நிகழ்ச்சிகளை அறிவிக்கும் எனக் கூறப்படுகிறது. கனவுநிலையுரைத்தல் என்னும் திருக்குறள் அதிகாரத்திலோ தலைவி தான் காதலரைக் கனவில் கண்டதால் அவர் விரைவில் வருவார் எனக் கூறவில்லை. கனவில் பன்முறை காண்பதால் ஆற்றியிருப்பதாக மட்டுமே கூறுகிருள்.

நிலவின் கிரகணத்தைக் கண்டு அந்நேரத்தில் திங்களைப் பாம்பு கௌவியதாகக் கூறுதல் புராணக் கதைசார்ந்த வழக்கு. அவ்வழக்கும் வள்ளுவர் காலத்திலேயே இருந்ததென்பதை ஒரு குறள் காட்டும்.

கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று (1146)

தான் தலைவனைக் கண்டது ஒரு நாளே எனவும் ஆயினும் அதனால் ஏற்பட்ட அலர் திங்களைப் பாம்பு கௌவிய செய்தி போல யாவராலும் அறியப்பட்டதெனவும் தலைவி கூறுகின்றாள்.

ஒருவர்க்குத் தும்மல் ஏற்படின் அது பிறர் அவரை நினைப்பதால் ஏற்படுகிறது என்னும் கருத்தும் தும்முபவரை அருகிலிருப்போர் வாழ்த்த வேண்டும் என்னும் கருத்தும் குறளில் காணப்படுகின்றன. சிறு குழந்தைகள் தும்முங்கால் தாய்மார் 'நூறு' (நூறாண்டுகள் வாழ்வாயாக) என வாழ்த்தும் வழக்கத்தை இன்றும் காணலாம். புலவி நுணுக்கம் என்னும் அதிகாரத்தில் வரும் பின்வருங் குறள்கள் தும்மலைக் குறித்த கருத்துக்களைக் காட்டும்.

ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து (1312)

வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று (1317)

தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று (1318)

ஊடியிருந்தபோது தலைவர் தும்மினராம், தலைவி நீடுவாழ்க என வாழ்த்த ஊடல் நீங்கும் என நினைந்து. தும்மியவுடனே வழுத்திய தலைவி யாரோ மற்றொரு பெண் அவரைக்குறித்து எண்ணுவதால் தான் தும்மினார் எனக் கூறி மறுபடியும் ஊடல் கொண்டு அழுதாள். அது கண்டு அவர் தும்மலை அடக்கமுயலப் பிறர் தன்னை எண்ணுவதைத் தலைவர் மறைக்க முயல்கிறார் எனக் கூறி மேலும் அழுதாள். இவ்வாறு தும்மலைக் குறித்துச் சுவைபட வள்ளுவர் கூறிய குறள்கள் மேற்கூறிய கருத்துக்களைக் காட்டும்.

பிரிவுக் காலத்தில் தலைவி கூற்றாக வரும் ஒரு குறளும் தும்மலைக் குறித்த கருத்தைக் காட்டுகிறது.

நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும் (1203)

தலைவிக்குத் தும்மல் தோன்றுவது போலிருந்து தோன்றாது அடங்கிற்று. அது தலைவர் தாம் செய்யச் சென்ற வினைமுடியாமையினால்

தன்னை நினைக்கத் தொடங்கியும் நினையாது வேறு வினைகளில் ஈடுபட்ட தனுல் ஏற்பட்டது போலும் எனத் தலைவி கூறினுள். இவ்வாறு பொது மக்களிடையே வழங்கி வந்த சிலகருத்துக்களைக் குறளின் மூலம் அறிய லாம்.

தம்காலமக்களின் வாழ்க்கை எத்தகையதாயிருந்தது என வள்ளுவர் நேரடியாகப் புனைந்துரைக்காவிடினும் திருக்குறளில் வரும் குறிப்புக்கள் மூலம் அக்கால மக்களின் வாழ்க்கையைக் குறித்த செய்தி-கள் ஓரளவு அறியப்படுகின்றன. அவை இங்கு ஆயப்பட்டன. நம்கால மக்களைப்போல் செயற்கையையே நாடாமல் பெரிதும் இயற்கையோ டொட்டிய வாழ்க்கையை மேற்கொண்டதே அவ்வாழ்க்கையின் சிறப் பாகும்.

# 6

## சமுதாயத்தின் பிற இயல்புகள்

இல்லம், தொழில்கள், அறங்கள் முதலியவை ஆயப்பட்ட பின் சமுதாயத்தின் பிற இயல்புகள் இவ்வதிகாரத்தில் ஆயப்படுகின்றன. அக்காலத்தில் கல்வி எந்நிலையில் இருந்தது, பிறப்பினால் ஏற்றத்தாழ்வு (வர்ண அல்லது சாதி வேறுபாடுகள்) கற்பிக்கும் முறை தமிழ்நாட்டில் இருந்ததா, இவற்றைக் குறித்து வள்ளுவர் யாது கருதினர் என்பன வற்றைத் திருக்குறள் மூலம் ஆய்தல் கூடும். இன்னும் அக்கால மக்கள் யாருக்குச் சமுதாயத்தில் அதிக மதிப்பளித்தனர், கற்றோர்க்கா, செல்வர்க்கா, பிறப்பினால் உயர்ந்தோர்க்கா, அரசியல் அலுவலர்க்கா, யார் சமுதாயத்தில் தலைமையுள்ளவராக இருந்தனர், இவற்றைக் குறித்துத் திருக்குறளினின்றும் யாது தெரிய வருகிறது என்பதும் ஆயத்தகும்.

மேல்நாடுகளில் சமூகவியலை ஆய்வோர், சமுதாயம் இயல்பாக நல்லதா தீயதா இரண்டுமின்றி இடைப்பட்டதா, சமுதாயம் முன்னேறிக் கொண்டிருப்பதா, ஒரே நிலையில் இருப்பதா, முன்னேறிக் கொண்டிருப் பதானால் எத்தகைய இலக்கை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது, சமுதாயம் இயல்பாக அமைதி நிறைந்ததா போராட்டமும் மாறுபாடும் அவசியமா என்றெல்லாம் ஆய்கின்றனர். வள்ளுவர் இவற்றைக் குறித்து இவ்வாறெல்லாம் வெளிப்படையாக ஆயாவிடினும் இவற்றைக் குறித்து அவர் கருத்து யாதாக இருக்கலாம் என்பதையும் திருக்குறளைக் கொண்டு அறியமுயல்வது பொருத்தமே யாகும்.

நாட்டில் மக்கள் அவரவர் விருப்பியவாறு தொழில் செய்யவும் வாணிபம் முதலியவற்றில் ஈடுபடவும் விரும்பியவாறு வாழ்க்கை

நடத்தவும் வாய்ப்பு இருத்தல் வேண்டுமா, அரசு மக்களின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தி யாவற்றையும் ஒழுங்கு செய்ய வேண்டுமா என்பது தற்காலத்தில் பெரிதும் தர்க்கிக்கப்படும் பொருளாயுள்ளது. வள்ளுவர் காலத்தில் இந்தகைய விவாதம் இருக்கவில்லை. ஆயினும் வள்ளுவர் தற்காலத்தில் உள்ள இக்கருத்துக்களை யறிந்தால் யாது கூறுவார்? தற்காலத்தில் எழும் சில கேள்விகட்கும் திருக்குறளை ஆய்ந்து விடை கூறமுடியுமா எனச் சிந்திப்பதும் நல்லதே. ஆகவே இத்தகைய பொருள்கள் இப்பகுதியில் ஆயப்படுகின்றன.

## 6. 1. கல்வி

தொல்காப்பியர் காலத்திருந்தே தமிழர் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தனர். தலைவனுக்கும் தலைவிக்குமிடையே இருக்கவேண்டிய பத்துப் பொருத்தங்களைக் கூறிய தொல்காப்பியர் அவற்றுள் கல்வியையும் ஒன்ருகக் கூறினர்.[1] தொல்காப்பியர் காலத்திலேயே பெண்களும் கல்வி கற்பதற்குரியவராகக் கருதப்பட்டாரெனத் தெரிகிறது. பின்பு கற்புக்காலத்தில் நிகழும் பிரிவின் வகைகளைக் கூறும் போதும் அவர் கல்வியின் பொருட்டு மூன்ருண்டுகள் வரையில் குடும்பத் தலைவன் தன் இல்லத்தை நீத்து வெளியில் தங்குதல் கூடும் என்ருர் (தொல். பொருள். 188). திருமணத்துக்கு முன்பே பருவத்திற்கேற்ற கல்வி கற்றிருந்த தலைவன் பின் உயர்கல்வி கற்றற்பொருட்டு வெளியூர் செல்லுதல் கூடும் என்பது கருத்தாதல் வேண்டும்.

வள்ளுவரும் கல்வியைப் போற்றினர். கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என நான்கு அதிகாரங்களை எழுதினர். கல்வியைக் குறித்த வள்ளுவரின் கருத்துக்களை இவ்வதிகாரங்களில் காணலாம். கல்வியைப் பற்றிய பல குறிப்புக்களைப் பிற அதிகாரங்களிலும் காணலாம்.

### 6. 1. 1. கல்வியைப் பற்றிய கருத்துக்கள்

தம்காலத்தில் எத்தகைய கல்வி நிலையங்கள் இருந்தன என்பதை வள்ளுவர் தெளிவாகக் கூறவில்லை. கல்வியைக் குறித்துப் பொதுவாகவே கூறினர்.

---

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், 272, 3 நிறையே யருளே உணர்வொடு திரு...
(உணர்வு அறிவாகும். கல்வியையும் உளப்படுத்தும்.)

வள்ளுவர் காலத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் இருந்தனர் என்பதும் ஆசிரியர்களிடம் எவ்வியல்புகளை வள்ளுவர் எதிர்பார்த்தார் என்பதும் முன்பே கூறப்பட்டன (தொழில்கள் பார்க்க). கல்வி வெறும் ஏட்டுக்கல்வியாக மட்டும் நாட்டில் நிலவாது நடைமுறையில் கடைப்பிடிக்கப்படவும் வேண்டும் என்பதே வள்ளுவர் கருத்தாதல் கல்வி குறித்த முதற்குறளினின்றும் புலனாகும்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக (391)

ஒருவன் கற்க வேண்டுவனவற்றைப் பழுதறக் கற்பானாக, பின் தான் கற்றதற்குத் தக ஒழுகுவானாக என்றார். 'இது கற்கவும் வேண்டும், அதனைக் கடைப்பிடிக்கவும் வேண்டும் என்றது' என மணக்குடவர் தம் முரையிற் கூறினார்.

கல்வியைக் குறித்த வள்ளுவருடைய சிறப்பாய கருத்து கல்வியும் கேள்வியும் அறிவும் ஒருவனை நல்வழிப்படுத்தவல்லனவாக இருத்தல் வேண்டும் என்பதே. கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் தொடர்பில்லையென வள்ளுவர் கருதவில்லை, இரண்டும் இணைந்தன எனவே கருதினர். கற்றவர் கற்றதற்குத் தக ஒழுகுதல் வேண்டும். கேள்வியறிவு ஒருவற்குத் தளர்ச்சி வந்துழிப் பற்றுக்கோடாகும் (414). ஒழுக்க முடையவரின் வாய்ச்சொற்களைக் கேட்பின் அக்கேள்வியறிவு ஒருவனுக்கு வழுக்கலுடைய நிலத்து ஊற்றுக்கோல் போல் உதவி நன்னெறியினின்றும் நீங்காமல் காக்கும் (415). அறிவு உள்ளத்தை அது சென்றவிடத்தில் செல்லவிடாது தீதினின்றும் நீக்கி நன்றின் பாலுய்க்கும் (422). இக்குறள்கள் கல்வியும் அறிவும் மக்களை நல்வழிப் படுத்தல் வேண்டும் என்ற வள்ளுவர் கருத்தைக் காட்டும்.

கல்வியின் பயனைக் குறித்து வள்ளுவர் கூறும் மற்றொரு கருத்து கற்றோர் பிறரொடு நன்முறையில் பழகவல்லவராயிருப்பர் என்பதே. இது முன்பும் குறிப்பிடப்பட்டது (தொழில்கள், ஆசிரியர் பார்க்க). கற்றோர் அனைவரிடமும் நட்புப் பாராட்டி உலகமுழுவதையும் தமக்கு நட்பாகக் கொள்வர். பிறருடன் இணைந்து வாழ்வர்.

எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு (426)

என அறிவுடைமையிற் கூறிய வள்ளுவர்,

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் (140)

என ஒழுக்கமுடைமையின் கீழும் கூறினர். உலகத்தோடொட்ட ஒழுகலைக் கல்விக்கும் அறிவுக்கும் பயனாக அவர் கருதினர். கற்றோரே அவையில் பேசவும் தம் கருத்தை எடுத்துச் சொல்லவும் வல்லவரா யிருப்பர் என்ற வள்ளுவர் கருத்தையும் கல்லாமை என்னும் அதிகாரத்தின் முதலைந்து குறள்களும் காட்டும். கற்றோர் அவையில் அல்லது பலர் முன்னிலையில் தம்கருத்தைப் பிறர் ஏற்றுக் கொள்ளும் வகையில் எடுத்துச் சொல்லி நலம் விளைவிப்பர். இன்னும் கேள்வி யறிவுடையோரே பிறரிடம் பணிவுடன் பேசுவர் எனவும் குறள் கூறுகிறது.

நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது (419)

நுண்ணிய கேள்வியறிவினையுடையரல்லாத பிறர் பணிவுடைய சொற்களைக் கூறும் வாயினராதல் அரிது. எனவே அத்தகைய கேள்வியுடையோர் பணிவுடன் பேசுவர் என்பது தெளிவாயிற்று. நிறைந்த கேள்வியறிவினையுடையோர் ஒன்றைத் தவறாக உணர்ந்த போதும் அறிவில்லாத சொற்களைச் சொல்லார் என்பதும் மற்றொரு குறளின் பொருளாம் (417). கல்வியும் கேள்வியும் உடையோர் நன்கு ஆராய்ந்தே பேசுவர், பேச்சில் அடக்கமுடையவராயிருப்பர் என்பன பெறப்பட்டன. ஆகவே கல்வியின் பயன் கற்றோரை நல்லொழுக்க முடையவராக்குவதுடன் பலவகைகளிலும் பிறருடன் நன்கு பழக வல்லவராக ஆக்குவதே.

கல்வி எப்பொழுது கற்கப்படவேண்டும்? 'இளமையிற்கல்' என்பது முதுமொழி. வள்ளுவரும் மக்கள் இளமையிலேயே கல்வி பயிலத் தொடங்குவதை விரும்புவார் என்பது உறுதி. ஏனெனில் கல்வியையே மக்கட்குக் கண்ணாகக் கருதினர். ஆனால் அவர் கருத்துப்படி கல்வி இளமையில் மட்டும் கற்கப்படுவதன்று. கல்வி ஓரளவு கற்றவுடன் இனி இது போதும் என நிறுத்தத் தக்கதன்று. மக்கள் இளமையிலிருந்து வாழ்நாளின் இறுதி வரையில் மேன்மேலும் கற்றலில் ஈடுபட வேண்டும் என்பதே வள்ளுவர் அவா. கல்வி ஒருவனை மேன் மேலும் கற்கும்படி தூண்ட வேண்டும் என்பது அவர் கருத்து. ஏனெனில் கல்வி கற்கக் கற்க அறிவு பெருகும். அகழ அகழக் கேணியில் நீர் ஊறும்; அது போலக் கற்கக்கற்க அறிவு பெருகும்

என்றார் வள்ளுவர் (396). 'அறிதோ றறியாமை கண்டற்றால்' (1110) எனக் காமத்துப் பாலில் வரும் உவமையும் அறிவின் எல்லையற்ற தன்மையையே காட்டும். 'அறிவிற்கு எல்லையின்மையான் மேன்மேல் அறிய அறிய முன்னையறிவு அறியாமையாய் முடியுமாறு போல' எனப் பரிமேலழகர் இத்தொடர்க்கு உரை கூறினர். கல்வியும் அறிவும் எல்லை யற்றன. தக்கோர் மேலும்மேலும் கற்று அறிவைத் தேடிக் கொள்ளவே விழைவர், அவ்வறிவை விரும்புவர், அதில் இன்புறுவர் என்ற ஆசிரியரின் கருத்தையே இவ்வுவமையும் காட்டுகிறது.

கல்வியினாலும் அறிவினாலும் ஒருவன் தான் ஒழுக்கமுடைய வனாகிப் பிறரொடு நன்முறையில் பழகித் தன்னைப் பொறுத்தவரையில் திருத்தமடைவது மட்டுமன்றிப் பிறராலும் நன்கு மதிக்கப்படுகிறான். தன் ஊரில் தன்நாட்டில் மட்டுமன்றி எங்குச்சென்றினும் கற்றவன் தன்னூரில் இருப்பது போல் பிறராதரவையும் நன்மதிப்பையும் பெறு கிறான். ஆகவே சாந்துணையும் கல்வி கற்றல் வேண்டுமென்றார் வள்ளுவர்; ஏன் அவ்வாறு கற்காமலும் சிலர் இருக்கின்றனர் என வியந்தார்.

> யாதானும் நாடாமால் ஊராமா லென்னொருவன்
> சாந்துணையும் கல்லாத வாறு (397)

இவ்வாறு வினவும்போது மக்கள் சாந்துணையும் கற்கவேண்டுமெனக் கூறுவதுடன் கல்விக்கு எத்தகைய மதிப்பைச் சமுதாயம் அளிக்க வேண்டும் என வள்ளுவர் எதிர்பார்த்தார் என்பதும் தெளிவாகும். கற்றோர் எவ்வூராராயினும் எந்நாட்டாராயினும் அவரைப் போற்றி வேண்டிய உதவிகளைச் செய்து தம்மூரில் வதிவது போல் இனி திருக்கச் செய்தல் சமுதாயத்தில் பிறர் கடன் என்பதும் அவர் கருத்தாம்.

கற்றோர் மேன்மேலும் கற்கவிழைதலோடு கல்வியைப் பரப்பவும் விழைதல் வேண்டும். கல்வியால் தாம் இன்புறுவது மட்டுமன்றி உலகும் அதனால் இன்புறுதல் கண்டு அக்கல்வியையே கற்றறிந்தோர் மேலும் மேலும் விரும்புவர் என்றார் வள்ளுவர் (399). கற்றறிந்தோர் தம் கல்வியின் பொருட்டு உலகம் இன்புறுவது எவ்வாறு? இவர் தாம் அறிந்தனவற்றைப் பிறரும் அறியும்படி எடுத்துச்சொல்லிக் கல்வியைப் பரப்புவதனாலேயே. 'உலகு இன்புறுதலாவது-இம்மிக்காரோடு தலைப் பெய்து அறியாதன எல்லாம் அறியப்பெற்றேம் என்று உவத்தல்' எனப் பரிமேலழகர் தம்முரையிற் கூறினர். கற்றோர் தாம் இன்புறுவது போல் பிறரும் கல்வியறிவு பெற்று இன்புறவேண்டுமென முயல்வர்,

தாம் பிறரோடு பழகுங்கால், பேசி அளவளாவுங்கால் தாம் கற்றறிந்த வற்றைப் பிறர் உளங்கொள்ளுமாறு எடுத்துக் கூறுவர். கற்றறிந்தோர் கல்வியினால் உலகு இன்புற வேண்டுமெனில் அவர் கல்வியைப் பரப்ப விழைவதோடு பிறரும் அறிவு பெற ஆர்வமுள்ளவராக இருத்தல் வேண்டும். அவ்வாறு யாவரும் கல்வியறிவு பெற ஆர்வங்கொள்ளும் ஒருநிலையையே வள்ளுவர் விரும்பினர் எனலாம்.

இனி கல்வி யாருக்கு உரியது என வள்ளுவர் கருதினர் என்பதும் எண்ணத்தக்கதாகும். கல்வி முதலிய அதிகாரங்கள் குறளில் அரசியலுட் காணப்படுகின்றன. ஆயினும் கல்வி அரசர்க்கு மட்டும் உரியதா? பரிமேலழகர் தம்முரையில் முதலில் அரசர்க்குரிய கல்வியைக் கூறிப் பின் கல்வி யாவர்க்கும் உறுதி பயக்கவல்லதே எனவும் யாவர்க்கும் பொதுவாகவே கூறப்பட்டதெனவும் எழுதினர். அரசர் கல்விபெறல் மிக இன்றியமையாதது என்பது உறுதியே. 'தூங்காமை கல்வி துணிவுடைமை' (383) என இறைமாட்சியுள்ளும் கல்வி அரசர்க்குவேண்டிய இயல்புகளுள் ஒன்ருகக் கூறப்பட்டது. ஆனல் கல்வி என்னும் அதிகாரத்தில் அது அரசர்க்கு உரியது என வள்ளுவர் கூறவில்லை. 'வாழும் உயிர்க்கு' (392), 'மாந்தர்க்கு' (396), 'ஒருவன்' (397), 'ஒருவற்கு' (398) எனவரும் சொற்கள் கல்வி யாவர்க்கும் உரியது என்பதையே காட்டும். மற்றும் உயர்குலமாகக் கருதப்படும் சில குலங்களில் பிறந்தோரே கல்வி பயில்தற்குரியர் எனவும் வள்ளுவர் கருதவில்லை. எக்குலத்தில் பிறந்தோரும் கற்றற்குரியரே.

மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்ருர் அனைத்திலர் பாடு (409)

என்னும் குறள் இதைக் காட்டும். தாழ்ந்த குலமாகக் கருதப்படுங் குலங்களில் பிறந்தோரும் கல்வி கற்றல் கூடும். கல்வியால் அவர் மேன்மையடைதலுங்கூடும் எனவே வள்ளுவர் கருதினர்.

உண்மையிலேயே அக்காலத்தில் பலகுலத்தைச் சேர்ந்தோரும் பல தொழில்களில் ஈடுபட்டோரும் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தனர் என்பதைச் சங்ககாலப் புலவர்தம் பெயர்களே காட்டும். அந்தணர், வணிகர், அரசர் மட்டுமன்றிப் பிறதொழில்கள் புரிவோருள் பலரும்கூடக்கல்விகற்றதுமட்டுமன்றிக் கவிபாடவல்லவராயுமிருந்தனர் என்பதை இப்பெயர்கள் காட்டுகின்றன. இடையன் சேந்தங்கொற்றனர், இடையன் நெடுங்கீரனர், கழார்க்கீரன் எயிற்றியார், விற்றூற்று மூதெயினனர் (அகநானூற்றுப் பாடல்கள் பாடியோர்), குறமகள் இளவெயினி (புறநானூற்றில் பாடியோர்) என்ற பெயர்கள் பல குலத்தை அல்லது

வெவ்வேறு நிலத்தைச் சேர்ந்தோரும் கல்விகற்றுக் கவி யியற்றினர் என்பதைக் காட்டும். தங்கால் பொற்கொல்லனர், உறையூர் மருத்துவன் தாமோதரனர், மதுரை தமிழ்க் கூத்தனர், (அகநானூற்றிலும் புறநானூற்றிலும் பாடியோர்), வெண்ணிக் குயத்தி, காவற்பெண்டு (புறநானூற்றுக் கவிஞர்) என்னும் புலவர் பெயர்களும் பலதொழில்களில் ஈடுபட்டுள்ளோர் கல்வியில் வல்லவராயிருந்தமையை விளக்கும்.

இவ்வாறு சமுதாயத்தில் பல்வேறு நிலையிலுள்ளோரிடையிலும் கற்கும் ஆர்வமும் கல்வியும் பரவும் ஒரு நிலையையே வள்ளுவரும் விரும்பினர் போலும்.

## 6.1.2. கல்வியின் வகைகள்

பல்வகை மக்களும் கற்றனர் எனவே பல்வகைக் கல்வியும் அமைந்திருத்தல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட கவிஞர்களைக் கவிபாடவல்லவர்களாக்கியது தமிழிலக்கண இலக்கியக் கல்வியே. வேறு பல்வகைக் கல்விகளும் அக்காலத்திருந்தன என எண்ண இடம் உண்டு.

வெவ்வேறு குலத்தைச் சேர்ந்தவரும் தொழிலைச் செய்பவரும் ஆடவரும் பெண்டிரும் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தனரெனினும் நாட்டில் யாவரும் எழுத்துக்கல்வி கற்க வல்லவராயிருந்திருத்தல் இயலாது. வறுமையினலோ சிறுவயதிலிருந்தே வேறு தொழில்களில் ஈடுபடவேண்டியிருந்ததனலோ சில ஊர்களில் கல்வி கற்கும் வாய்ப்பு இல்லாததனலோ பலர் படித்தறிவில்லாதவராயும் இருந்திருப்பர். இத்தகையோரைக் கேள்வியறிவையாவது பெறும்படி வள்ளுவர் ஊக்கினர். எழுத்துக்கல்வி யில்லாதோரும் நன்னூல்களின் பொருளைக் கேட்டறியும் வாய்ப்பு அக்காலத்திருந்திருத்தல் வேண்டும் (தொழில்கள், ஆசிரியர் பார்க்க). ஆகவே வள்ளுவர் 'கற்றில னாயினும் கேட்க' (414) என்றார். ஆயினும் கேள்வி கல்லாதோர்க்கு மட்டும் உரியதன்று. கற்றோரும் கேள்வியினல் பயனுறுவர். கற்றோரும் சில நூல்களையே கற்றிருத்தல் கூடும். அச்சுப்பொறி இல்லாத அக்காலத்தில் நூல்கள் அரியனவாகவே இருந்திருத்தல் வேண்டும். பொதுமக்கள் பலரும் பலநூல்களையும் பெற்றுச் சேர்த்து வைத்துக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிரார். ஆகவே ஓரளவு கல்வியறிவுடையோரும் தாம் கற்றிராத பிற நூல்களை அவற்றைக் கற்றோர்பால் கேட்டுப் பயனடைதல் பொருத்தமே. எனவே கேள்வி என்பதற்குப் பரிமேலழகர் பின்வருமாறு விளக்கம் கூறினர்.

"அஃதாவது கேட்கப்படும் நூற்பொருளைக் கற்றறிந்தார் கூறக் கேட்டல். கற்றவழி அதனியை அறிவை வலியுறுத்தலானும் கல்லாத வழியும் அதனை உண்டாக்குதலானும் இது கல்வி கல்லாமைகளின் பின்வைக்கப்பட்டது".

இவ்வாறு கல்லாதோரும் கேட்டுப்பயனடையுமாறு நூற்பொருளை விரித்துரைக்கும் முறை அக்காலத்திருந்தமை ஒரு சிறப்பேயாகும்.

இனி கற்றோர் எவ்வெவ்வகைக் கல்விகளைக் கற்றனர் என ஆய்வதும் கூடும்.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு (392)

என்றார் வள்ளுவர். இவ்வாறு கூறப்படுதலால் கணிதமும் இலக்கியமும் (இலக்கணமுட்பட) அடிப்படைக் கல்வியாகக் கருதப்பட்டன எனவும் கற்போரனைவரும் இவற்றை ஓரளவாவது பயின்றனர் எனவும் அறியலாம்.

இலக்கண அறிவும் இலக்கியம் படைக்கும் ஆற்றலும் அக்காலத்து உயர்நிலையிலிருந்தன என்பதைத் தமிழ்நூல்கள் தெளிவாக்கும். தொல்காப்பியம் வள்ளுவர் காலத்திற்கு முற்பட்டதே. தற்காலத்து இறந்துவிட்ட சில இலக்கண நூல்களும் அக்காலத்திருந்திருத்தல் கூடும். எட்டுத்தொகை நூல்களுள்ளும் பல பாடல்கள் வள்ளுவர் காலத்தின் முன்னெழுந்தனவே. வள்ளுவர் காலத்தமிழ் மக்கள் சிறந்த இலக்கிய இலக்கணங்களைப் பெற்றிருந்தனர் என்பது உறுதி.

கணிதமும் அக்காலமக்கள் அறிந்ததே. ஏரம்பம் என்னும் ஒரு கணிதநூலைப் பரிமேலழகர் குறிப்பிட்டார். அது வள்ளுவர் காலத்திலேயே இருந்ததா என்பது தெளிவன்று. ஆயினும் தச்சுத்தொழில், கட்டடத்தொழில் ஆகியவை சிறந்திருந்த ஒரு சமுதாயத்தில் கணிதமும் பொருள்களின் நீளம், அகலம், உயரம், கனம் ஆகியவற்றை அளக்கும் முறைகளும் இருந்திருத்தல் வேண்டும். அளக்குங்கோல் பல்வகை நிறைகள் ஆகியவை குறளில் குறிப்பிடப்பட்டமை முன்பே விளக்கப்பட்டது (தொழில்கள் பார்க்க). இவற்றைப் பயன்படுத்தினோர் ஓரளவு கணிதநூலறிவு பெற்றோராகவே யிருந்திருப்பர். வாணிபம் அக்காலத்து மிகச் செழித்தோங்கியிருந்ததென்பதைப்

பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் காட்டுகின்றன. வாணிபம் நன்முறையில் நடத்தற்கும் கணித நூலறிவு மிக அவசியமே.

பேரெண்களைத் தமிழர் அறிந்திருந்தனர். கோடி (337) எழுபது கோடி (639) என்னும் பேரெண்கள் குறளில் ஆளப்படுகின்றன.

அரசர் அமைச்சர் முதலியோர்க்குச் சிறப்பாக உரிய நூல்களும் கல்விவகைகளும் அக்காலத்திருந்தன எனத் தெரிகிறது. அரசர்க்குக் கல்வி வேண்டும் என வள்ளுவர் விதித்தார். அரசர் கற்க வேண்டியன, "அறநூலும் நீதிநூலும் யானை, குதிரை, தேர், படைக் கலமென்ற இவற்றின் நூல்களும் முதலாயின" எனப் பரிமேலழகர் கூறினர். யானை குதிரை தேர் படைக்கலமென்றவற்றைக் குறித்துத் தனித்தனி நூல்கள் வள்ளுவர் காலத்திருந்தனவா என்பது தெளிவின்று. ஆயினும் அரசர் கற்றற்குரிய அறநூல்களும் பொருள் நூல்களும் இருந்திருத்தல் வேண்டும். இறைமாட்சியில் 'கல்வி' (383) என்னும் சொற்கு "அருமறை முதலாக அறநீதி முடிவாக இங்ஙனம் தாம் கற்கத்தகுமவற்றைக் கற்கும் கல்வி" எனக் காலிங்கர் பொருள் கூறினர்.

அமைச்சர்க்கும் கல்வி பன்முறை கூறப்பட்டது. அமைச்சர்க்கு வேண்டிய இயல்புகளுள் 'கற்றறிதல்' ஒன்றாகக் கூறப்பட்டது (632). மற்றும் இயல்பான மதிநுட்பமும் நூலறிவும் உடைய அமைச்சர்க்கு மிக்க நுட்பத்தையுடைய சூழ்ச்சிகளாய் முன்னிற்பவை எவை எனவும் வள்ளுவர் வினவினர் (636). இங்கும் கற்றறிதல் என்பதற்கு "நீதி நூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வன அறிதல்" எனப் பரிமேலழகரும், "பெரும் பொருள் நூல் கற்று உணர்ந்து அறிதல்" எனக் காலிங்கரும் உரை கூறினர். அரசர் கற்றற்குரிய அறநூல்கள் நீதிநூல்கள் பொருள் நூல்கள் ஆகியவற்றையே அமைச்சரும் கற்றனர் போலும்.

அறநூல்கள் பொருள் நூல்கள் எனக் குறிப்பிடப்படுவன வட மொழியிலுள்ள தர்ம, அர்த்த நூல்களாதல் கூடும். வடமொழி யற நூல்கள் தொல்காப்பியர் காலத்திலிருந்து தமிழ்நாட்டில் அறியப்பட்டவையே. தொல்காப்பியர் மறையோர் தேஎத்து மன்றல் எட்டைக் குறிப்பிட்டார். இவ்வெட்டுவகை மணங்கள் வடமொழியிலுள்ள பழைய அறநூல்களில் கூறப்படுபவையே.[2] வடமொழி யறநூல்களுள் முற்பட்

2. Nilakanda Sastri, K.A., A History of South India, P 130

"It is well known that the earliest Dharma Sastras mention eight forms of marriages as Part of the Aryan code-itself a blend between Aryan and Pre-Aryan forms that prevailed in the North. These eight forms are mentioned in the Tolkappiam."

டவை சில கி.மு. 4-ஆம் நூற்றுண்டிலோ அதற்கு முன்னே எழுந்தவை என அறிஞர் கருதுவதால் தொல்காப்பியரும் அவற்றை அறிந்திருத்தல் கூடும்.[3] வள்ளுவர் காலத்தில் வடமொழி யறநூல்களும் பொருள் நூல்களும் தமிழ்நாட்டில் நன்கு அறியப்பட்டிருந்தன எனக் கொள்ளுதலே பொருந்தும்.

ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளஎன
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி இல்என
அறம்பாடிற்றே .................. (புறம். 34)

என்று வரும் அடிகளில் அறம் எனக் குறிப்பிடப்பட்டது திருக்குறள் அன்று, மனு கூறிய அறநூலே எனச் சிலஅறிஞர் கருதுவர். ஏனெனில் இப்பாடலில் முதல் நான்கு வரிகளிற் கூறப்பட்ட குற்றங்களைக் குறிப்பிட்டு அவற்றிற்குக் கழுவாயைத் திருக்குறள் கூறவில்லை. அவ்வாறு கூறுவது மனுநீதியே யென்பர்.[4] இப்புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுவது மனுநீதியாயின் வடமொழி யறநூல்கள் அக்காலத்துத் தமிழ் நாட்டில் கற்றோரால் அறியப்பட்டிருத்தல் வேண்டும். வள்ளுவர் தாம் வடமொழி நூல்களை எப்பொழுதும் பின்பற்றவில்லையாயினும் அவர்காலத்து அரசரும் அமைச்சரும் கற்ற நூல்கள் வடமொழியிலுள்ள அறநூல்களும் பொருள் நூல்களுமாகவேயிருக்கலாம்.

அரசர்களிடையே தூது செல்வோரும் கல்வியில் வல்லவராதல் வேண்டும்.

நூலாருள் நூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு (683)

அறிவுரு வாராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு (684)

---

3. வடமொழித் தர்ம நூல்களில் முற்பட்டவை கி.மு. 4-ம் நூற்றுண்டளவில் எழுந்தன எனச் சிலர் கருதுவர்.
Chattopadhyaya. Dr. Sudhahar, Social life in Ancient India P 4-5.
இன்னும் முற்பட கி.மு. 6ம் நூற்றுண்டிலேயே எழுந்தன என்றும் சிலர் கூறுகின்றனர்.
Prabhu, Pandharinath, H., Hindu Social Organisation. P 11.

4. அருணசலம், ப., குறளின் செய்தி, ப 287—290

கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாம் தூது (686)

இக்குறள்கட்கு உரை கூறும்போதும் நீதிநூல்களைக் கற்றலையே பரிமேலழகர் சிறப்பாகக் கூறினர். அமைச்சரே தூதுவராகவும் பணியாற்றியதனால் அமைச்சர்கற்ற நீதிநூல்கள் பொருள் நூல்கள் ஆகியவையே தூதுவர்க்கும் உரியனவாதல் வேண்டும். நூல்களைக் கற்றுவல்ல அமைச்சருக்குள்ளும் மிக்க நூலறிவுடையவரே தூது செல்லற்குரியவராவர் என்ருர் வள்ளுவர். தூதுவர் இவற்றுடன் அளவை நூல் (தர்க்க நூல், logic) கற்றலும் தகும் என்ருர். பிற அரசரது அவையிடத்துப் பிறர் வினவும் வினக்கட்கு அஞ்சாது பதிலளித்தற்காக அளவை நூலேயும் முறைப்படி கற்றல் வேண்டும் (725). இவ்வாறு கூறப்பட்டதால் அளவைநூற்கல்வியும் அக்காலத்திலேயே தமிழ் நாட்டில் பரவியிருந்ததெனு அறியலாம்.

இனி அரண் எவ்வாறு அமைக்கப்படவேண்டும் எனக் கூறும் நூல்கள் இருந்தன என்பதை அரண் என்னும் அதிகாரத்தில் வரும் ஒருகுறள் காட்டும்.

உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல் (743)

உயர்வும் அகலமும் திண்மையும் அணுகுவதற்கு அருமையுமாகிய தன்மைகள் அமைந்ததே நல்லஅரணுவது என நூல்கள் கூறும் என்று சொல்லப்படுவதால் அரணின் அமைப்பு குறித்த செய்திகள் நூல்களினின்று கற்றறியப்பட்டன எனத்தெரிகிறது. இவற்றைக் கூறுவன பொருள் (அர்த்த) நூல்களே போலும். அல்லது கட்டடக் கலையைக் குறித்த நூல்கள் அக்காலத்து இருந்திருத்தல் கூடும்.

அரசர் அமைச்சர் அரசியலலுவலர் ஆகியோரன்றிப் பிற தொழில்களில் ஈடுபட்டோர்க்கும் அவ்வத்தொழில்கட்குரிய சிறப்பு வகைக் கல்வியும் அதற்கேற்ற நூல்களும் இருந்தன எனவும் கொள்ளலாம். மருந்து என்னும் அதிகாரத்தில் 'நூலோர்', 'கற்ருன்' என்னும் சொற்களை அக்காலமருத்துவரைக் குறிக்க வள்ளுவர் பயன்படுத்துவதனுல் மருத்துவநூல்கள் இருந்தமை தெளிவாகின்றது. இவை ஆயுள் வேத நூல்களாகவோ சித்தவைத்திய நூல்களாகவோ இருக்கலாம்.

உழவுக்கும் வாணிபத்திற்கும் உரிய நூல்கள் இருந்தன எனவும் அமைச்சர் அவற்றையும் கற்றல் ஏற்றதென்றும் மணக்குடவர் தம்முரையில் குறிப்பிட்டார் (குறள் 725 உரை). 'வாரிபெருக்கி'

என்னும் தொடருக்கு உரை கூறுங்கால் பரிமேலழகரும் அமைச்சர் அறிந்திருக்க வேண்டுவனவற்றை 'உழவு, பசுக்காவல், வாணிகம் என்னும் வார்த்தையுமாம்' என்றார் (குறள் 512 உரை). வார்த்தை என்றதனால் 'உழவு, பசுக்காவல், வாணிபம்' ஆகியவற்றிற்குரிய நூல்களை அமைச்சர் கற்று இத்தொழில்களை நாட்டில் பெருக்க வேண்டும் என்பது இவ்வுரையாசிரியர் கருத்தாகலாம். வள்ளுவர் காலத்திலேயே இத்தொழில்கட்குரிய தனி நூல்கள் இருந்தனவா என்பது தெளிவின்று. சங்ககாலத்தில் உழவும் வாணிபமும் மிகச் செழித்தோங்கியிருந்தமையால் இவை குறித்த நூல்களும் இருந்திருத்தல் கூடும்.

அந்தணர் நூலை வள்ளுவர் குறிப்பிட்டார். மறைமொழி என்ற சொல்லும் குறளில் ஆளப்படுகின்றது (28).

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல் (543)

என்பது குறள். நீத்தார் பெருமையைக் கூறுங்கால் வள்ளுவர் அந்தணர் எனத் துறவியரைக் குறிப்பிட்டார். ஆயினும் இங்கு அந்தணர் எனக் குறிப்பிட்டது பார்ப்பன குலத்தவரையே எனவும் இங்கு நூல் எனக் குறிப்பிட்டது நான்கு வேதங்கள் முதலியனவே எனவும் கொள்வதே பொருத்தமாகும். அந்தணர் நூல் என்பதை வேதம் எனவே பழைய உரையாசிரியர்கள் அனைவருங் கொண்டனர். மற்றும் காவலன் காவானெனின் அறுதொழிலோர் நூன் மறப்பர் எனவும் வள்ளுவர் கூறினர் (560). அறுதொழிலோர் என்ற சொல்லும் அந்தணர் அல்லது பார்ப்பன குலத்தவரையே குறிக்கும். அவர்க்குரிய ஆறுதொழில்கள் தொல்காப்பியத்துள்ளும் பதிற்றுப்பத்துள்ளுங் கூட கூறப்படுகின்றன. அவை பின்னர் ஆயப்படும் (பிறப்பு வேறுபாடு பார்க்க). வேதமும் அவை சார்ந்த ஆறங்கங்களும் பயிலும் கல்வி தமிழ் நாட்டில் அக்காலத்திலேயே இருந்ததெனவும் அவற்றை அந்தணர் சிறப்பாகக் கற்றும் கற்பித்தும் வந்தனரெனவும் கருதுதல் கூடும்.

கற்றதன் பயன் கடவுளைத் தொழுவதே என வள்ளுவர் கருதுவதனால் பொதுவாகச் சமயநூற்கல்வியை வள்ளுவர் விரும்பினர் எனவே கொள்ளலாம்.

உலகப்பணிகளில் ஈடுபடுவோர்க்கு மட்டுமன்றித் துறவியர்க்கும் கல்வி உரியதே.

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி (356)

என்ற குறள் சமயநூல் அல்லது மெய்யுணர்வு (தத்துவம்) நூல் துறவிகளால் கற்கப்பட்டதென்பதைக் காட்டும். மெய்ப்பொருள் காண்பதற்குக் கல்வியும் துணையாக இருந்ததென்னும் கருத்து இங்குக் காணப்படுகிறது. 'தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால்' (249) என்ற தொடருக்கு உரை கூறுங்கால் பரிமேலழகர் "மெய்ப்பொருள்–மெய்ந்நூலில் சொல்லும் பொருள்" என விளக்கம் கூறினர். 'யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை, எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற' (300) என்ற குறளினுரையிலும் "யாம் மெய்யாக் கண்டவற்றுள்-யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள்" என்றே பரிமேலழகரால் கூறப்படுகிறது. துறவியர் கற்றற்குரிய பல மெய்யுணர்வு அல்லது தத்துவ நூல்கள் அக்காலத்திருந்தன போலும். ஆயினும் வள்ளுவர் துறவறவியலுள் எச்சமயத்து நூலையும் குறிப்பிட்டுக் கூறவில்லை. பொதுவாகவே கூறவிரும்பினர் போலும்.

அமைச்சர் அளவுநூலைக் கற்க வேண்டுமென வள்ளுவர் கூறினர். துறவறவியலுள்ளும் 'அளவு' குறிப்பிடப்படுகிறது.

அளவின்கண் நின்றொழுக லாற்றார் களவின்கண்
கன்றிய காத லவர் (286)

களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல் (287)

அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு (288)

இங்குக் களவை விரும்புவோர் அளவு நெறியின் கண்ணின்றொழுக வல்லவர் ஆகார் எனவும் அளவென்னும் ஆற்றலை விரும்பிப் பயின்றவரின் உள்ளத்தில் களவென்னும் இருண்ட அறிவு தங்குதலில்லை எனவும் அளவை யறிந்தவர் நெஞ்சத்தில் அறம் தங்கியிருப்பது போலக் களவைப் பயின்றவர் உள்ளத்தில் வஞ்சனை தங்கும் எனவும் கூறப்பட்டது. இங்கு அளவு எனக் குறிப்பிடப்பட்டது யாது? தர்க்க நூலா? தர்க்க நூலைக் கற்பதற்கும் களவு செய்யாமலிருப்பதற்கும் என்ன தொடர்பு, தர்க்க நூலைக் சற்றவரும் களவு செய்தல் கூடுமே எனத் தற்காலத்தோர் எண்ணலாம். அளவு எனப்படும் தர்க்கநூல் (logic) நம்நாட்டில் வடக்கிலும் தெற்கிலும், மெய்யுணர்வு அல்லது தத்துவ ஆய்வின் (philosophy) ஒரு பகுதியாகவே தோன்றி வளர்ந்தது. உயிர், உலகு, மறுபிறப்பு, வினைத்தொடர்பு முதலியவற்றை

ஆய்ந்துணர அளவு நூலறிவு பயன்படும் எனப் பண்டைக்காலத்தும் இடைக் காலத்தும் கூட நம்நாட்டில் கருதப்பட்டு வந்தது. அளவு நூல் வல்லார் கண்ணுல் காணப்படாததை அனுமானத்தால் உணர்வர். வாழ்க்கையில் நிகழும் இன்பதுன்பங்களைக்கண்டு இவை முன்வினைப்பயன் என அனுமானித்தறிவர். ஆகவே களவு முதலிய தீச்செயல்களில் ஈடுபடார் என்பது கருத்து.

பௌத்த காவியமாகிய மணிமேகலையின் இருபத்தொன்பதாவது காதை அக்காலத்து பௌத்தர்களால் கற்பிக்கப்பட்ட அளவை அல்லது தர்க்க முறைகளை விளக்குகிறது. அறவண அடிகள் மணிமேகலைக்கு அளவையிலக்கணத்தை முதலில் போதித்து இதனுல் மெய்யையும் பொய்யையும் பிரித்தறிவாயாக எனக் கூறிப் பின் பௌத்த அறத்தைப் போதித்தார் என இக்காவியத்துள் கூறப்பட்டது. பிற்காலத்தும் சிவஞானசித்தியார் போன்ற சில தத்துவ நூல்கள் முதலில் அளவையிலக்கணத்தைக் கூறியே பின் தத்தம் தத்துவக் கருத்துக்களை விரித்துரைப்பதைக் காணலாம். மெய்யுணர்வுக்குத் துணையாக அளவு நூல் சற்கும் முறையை இவை காட்டுகின்றன.

மேற்காட்டப்பட்ட குறள்கட்கு உரை கூறுங்கால் பரிமேலழகர் அளவாவது உயிர் முதலியவற்றை அளத்தல் எனக் கூறிப் பின் வருமாறு விளக்கமும் தந்தார்.

“உயிர் முதலியவற்றை அளத்தலாவது - காட்சி முதலாகச் சொல்லப்பட்ட அளவைகளான் உயிர்ப் பொருளையும் அதற்கு அநாதியாய் வருகின்ற நல்வினை தீவினைக்குற்ற விளைவுகளையும் அவற்ருன் அது நாற்கதியுள் பிறந்து இறந்து வருதலையும் அது செய்யாமல் அவற்றைக் கெடுத்தற்கு உபாயமாகிய யோகஞானங்களையும் அவற்ருன் அது எய்தும் விட்டினையும் அளந்து உள்ளவாறறிதல்.”

காட்சி, அனுமானம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அளவையிலக்கணம் கூறுவதே இந்திய தர்க்க நூல் மரபாகும். இக்குறள்களில் அளவு எனக் குறிக்கப்பட்டது இத்தர்க்க நூலே எனக் கொள்ளலாம்,

வள்ளுவர் காலத்தில் அரசியலில் ஈடுபட்ட அமைச்சர் முதலியோர் தம்தொழிலுக்கு உதவியாகத் தர்க்க நூலைக் கற்கத் துறவியரும் மெய்யுணர்வின் பொருட்டு அதைக் கற்றனர் போலும்.

இசை முதலிய நுண்கலைகளின் கல்வியும் வள்ளுவர் காலத்து நன்கு வளர்ந்திருந்தது என்பது முன்பே விளக்கப்பட்டது (தொழில்கள் பார்க்க).

இவ்வாறு பலவகைக் கல்விகள் அக்காலத் தமிழகத்தில் பரவியிருந்தன.

## 6. 2. பிறப்பிலை் வேறுபாடு (சாதி, வர்ண வேறுபாடுகள்)

தொல்காப்பியர் காலத்தின் முன், ஆரிய நாகரிகமும் பண்பாடும் தமிழகத்தில் பரவுமுன் சில உயர்வாகவும் சில தாழ்வாகவும் கருதப்படும் சாதி, வர்ண வேறுபாடுகள் தமிழ்நாட்டில் இருக்கவில்லை யெனவே அறிஞர் பலர் கருதுகின்றனர். அத்தகைய பழங்காலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற நில வேறுபாடுகளும் அவற்றில் வாழ்ந்த குறவர், ஆயர், உழவர், பரதவர், எயினர் என்ற இன வேறுபாடுகளுமே இருந்தன என்பர்.[5] இவை அவரவர் அவ்வந் நிலத்திற்குரியர் என்ற பாகுபாடுகளேயன்றி இவற்றில் ஏற்றத்தாழ்வு இருக்கவில்லை என்பர். இவற்றுள் தலைமக்கள் பொது மக்கள் என்ற வேறுபாடு மட்டும் இருந்திருத்தல் கூடும். இவ்வைந்நிலவேறுபாட்டையும் நிலத்திற்கேற்றபடி மக்கள் பகுக்கப்படும் முறையையும் தொல்காப்பியத்திலும் சங்கநூல்களிலும் ஓரளவு காணலாகும். சங்க காலத்தில் இம்முறை முற்றுக அற்றுப்போய்விட இல்லை.

ஆனால் தொல்காப்பியர் காலத்திலேயே வர்ண அல்லது சாதி வேறுபாடுகள் தமிழ்நாட்டில் புகத்தொடங்கி விட்டன என எண்ண இடம் உண்டு. பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்பனவே வடமொழி நூல்களில் கூறப்பட்ட நான்கு வர்ணங்களாகும். இவற்றுள் அடங்காதவரும் மிகத்தாழ்ந்த குலத்தவருமாகக் கருதப்பட்ட சிலரைப் பஞ்சமர் எனப் பிறிதொரு வகுப்பாகவும் சேர்ப்பர். முதல் நான்கு வர்ணங்களைப் பற்றிய குறிப்பு வேதத்திலேயே உண்டு. இருக்கு வேதத்தில் புருடசூக்தம் என்னும் பாடலில் பிராமணர் புருடனின் வாயிலிருந்தும் சத்திரியர் தோளிலிருந்தும் வைசியர் தொடையிலிருந்தும் சூத்திரர் பாதங்களிலிருந்தும் தோன்றினர் எனக் கூறப்படுகிறது.[6] வேதங்களிலும் உபநிடதங்களிலும் குறிப்பிடப்பட்ட இவ்வர்ண வேறுபாட்டைப் பின் தோன்றிய தர்ம, அர்த்தநூல்களும் ஏற்றுக் கொண்டன. தொல்காப்பியர் பண்டைமரபைப் பின்பற்றி அகத்திணை

5. Subrahmanian, N., The History of Tamil Nad, P 335.

6. Prabhu, Pandharinath, H., Hindu Social Organisation, P 285.

புறத்திணையியல்களில் ஐந்நில வேறுப்பாட்டையும் அவற்றிற்குரிய மக்கள் பகுப்பையும் கூறினரெனினும் மரபியலில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பாகுபாட்டையும் கூறினர் (தொல். பொருள். 625-639).

தொல்காப்பியச் சூத்திரங்களுட் சில இடைச் செருகலாக இருக்குமோ என ஐயுறுவோரும் உளர். ஆயினும் அந்தணர் பற்றிய குறிப்புக்கள் மரபியலுள் மட்டுமன்றித் தொல்காப்பியத்துள் பிற இடங்களிலும் வருவனவே (தொல். எழுத்து. 102, தொல். பொருள். 92). ஆகவே மரபியலில் காணப்படும் மேற்குறிக்கப்பட்ட சூத்திரங்களும் தொல்காப்பியரால் எழுதப்பட்டனவாகக் கொண்டே இங்கு அக்காலநிலை ஆயப்படுகிறது.

தொல்காப்பியர் காலத்தில் நிலம் பற்றிய பழைய பாகுபாடுகள் இன்னும் நிலத்தில் பரவியிருப்ப வர்ண வேறுபாடுகளும் ஓரளவு புகுந்தன எனலாம். வடமொழிநூல்களிற் கூறிய பிராமணர், சத்திரியர் வைசியர், சூத்திரர் என்னும் நான்கு வர்ணங்களும் தொல்காப்பியர் கூறிய அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பாகுபாடும் நேருக்கு நேர் பொருந்தா. முக்கியமாக வேளாளரும் சூத்திரரும் நிகராகார். வடமொழிநூல்களில் உழவுத்தொழில் வைசியர்களின் தொழில்களில் ஒன்ருகவே கருதப்படுகின்றது.[7] சூத்திரர் ஏவலாளரும் பிறருக்குப் பணி செய்பவருமாவார் எனக் கூறப்படுகின்றனர். பெரும்பாலும் தம்நிலத்தைத் தாமே உழுதுண்பவர்களாய் சமுதாயத்தில் வளமும் மதிப்பும் மிகுந்தவர்களாய்த் தாம் விருந்தோம்பியும் வறியோர்க்கு உதவியும் ஆதரிக்க வல்லவர்களாய் வாழ்ந்த, தமிழ் நாட்டு வேளாளர்களை வடமொழிநூல்களில் சூத்திரர் எனக் கூறப்படும் வகுப்பினருக்கு நிகராகக் கொள்ளுதல் பொருந்தாது. தொல்காப்பியர் கூறிய அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பாகுபாட்டில் வடநாட்டு வர்ணப்பிரிவின் செல்வாக்கு ஓரளவு காணப்படுகிறது. அம்முறையைப் பின்பற்றித் தொல்காப்பியர் தமிழ்நாட்டிலுள்ள மேன்மக்களை (தமிழ்நாட்டில் வேளாளரும் சமுதாயத்தில் மேல் நிலையில் இருந்தோரே) நான்கு பிரிவாக வகுத்துக் கொள்ள முயன்ருர் எனக் கூறலாமேயன்றி வடநாட்டு நான்கு வர்ணங்களை அவ்வாறே ஏற்றுக் கொண்டார் எனக் கருதுமாறில்லை.

சங்க நூல்களுள்ளும் வர்ண, சாதி வேறுபாடுகள் பற்றிய குறிப்புக்கள் உள. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியைப் பற்றிப் பாடிய புறநானூற்றுச் செய்யுளில்,

7. Chattopadhyaya, Dr. Sudhakar, Social Life in Ancient India P 93.

வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே (புறம். 183.8-10)

என்றுன். இவ்வரிகளினின்றும் வேற்றுமை தெரிந்த நாற்பால் (நான்கு வர்ணங்கள்) தமிழ்நாட்டில் இருந்தன எனவும் அவற்றில் சில மேல் எனவும் சில கீழ் எனவும் இப்பாடல் எழுந்த காலத்தில் கருதப்பட்டன எனவும் அறிதல் கூடும். நான்கு வர்ணங்கள் மட்டு மன்றிப் பல சாதி வேறுபாடுகளும் சங்ககாலத்தில் தோன்றத் தொடங்கின எனலாம். இவ்வேறுபாடுகள் தோன்றுதற்கு ஆரியர் செல்வாக்கு மட்டுமன்றி நாகரீகம் முதிரப் பலபுதுத்தொழில்கள் நாட்டில் தோன்றியமையும் காரணமாதல் கூடும். தொழிலின் வழியே சாதிவேறுபாடுகள் முதற்கண் தோன்றினபோலும். வர்ணம் என்னும் சொல் வடமொழியில் நிறத்தைக் குறித்ததாகலாம். ஆனல் தமிழர் களிடையே தொழிலை அடிப்படையாகக் கொண்டே பிறப்பு வேறுபாடுகள் தோன்றியிருத்தல் கூடும். வெவ்வேறு தொழில் செய்வோர் புகார் நகரத்தில் வெவ்வேறு தெருக்களில் அல்லது வெவ்வேறு குடியிருப்புக்களில் வாழ்ந்தனர் எனச் சிலப்பதிகாரம் இந்திர விழாவூரெடுத்த காதையுட் கூறப்படுகிறது. சங்ககாலத்திலேயே சிலரைப் பிறப்பினல் இழிந்தவராகக் கருதும் வழக்கம் ஏற்பட்டுவிட்டதென் பதைப் புறநானூற்றுள் வரும் 'இழிசினன்', 'இழிபிறப்பாளன்' என்னும் சொற்கள் காட்டும்.[8]

இச்சூழ்நிலையை யறிந்தபின் வள்ளுவர்காலத்தில் இருந்த நிலைமை யாது, பிறப்பினல் வரும் ஏற்றத்தாழ்வுகளைக் குறித்து அவர் கருத்து யாது என ஆய்தல் பொருந்தும். ஐந்து நிலங்களையும் அவற்றுக்குரிய மக்கட்பாகுபாட்டையும் பற்றிய குறிப்புக்கள் குறளில் இல்லை. காமத்துப்பால் தொல்காப்பியத்தில் கூறப்பட்ட மரபின்படிக் களவு கற்பு எனப்பகுக்கப்பட்டதாயினும் தொல்காப்பியத்தில் கூறப்பட்ட ஐந்திணைப் பாகுபாடுகள் அங்கில்லை. திணைக்குரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவை பொருந்தக் காமத்துப்பாலி லுள்ள குறட்பாக்கள் எழுதப்படவில்லை. இரண்டொரு குறள்களில் துறைவன் என்ற சொல் தலைவனைக் குறிக்க வழங்கப்பட்டதைத் தவிர[9] ஐவகை நிலங்கட்குரிய தலைமக்கள், பொதுமக்கள் பெயர்களும்

8. புறநானூறு. இழிசினன் — 82.3, 287.2, 289.10
இழிபிறப்பாளன் 170.5

9. குறள் 1157, 1277

குறளில் ஆளப்படவில்லை. வேட்டையாடுதல், மீன் பிடித்தல் ஆநிரை காத்தல் ஆகிய தொழில்கள் குறளின் காலத்து மிருந்தன என்பது சில உவமைகளாலும் பிற குறிப்புக்களாலும் பெறப்படுகிறதேயன்றி இவை குறிஞ்சி முதலிய நிலங்களின் தொழில்களாகக் கூறப்படவில்லை, ஐந்நிலப்பாகுபாடும் அதற்கேற்ற மக்கட் பிரிவும் வள்ளுவர் காலத்தும் இருந்தனவா என்பது ஐயத்திற்குரியதே.

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய பாகுபாடுகள் வள்ளுவர் காலத்தில் இருந்தமை தெளிவு. அப்பாகுபாட்டை (அவற்றுள் ஏற்றத்தாழ்வு உண்டென்று கருதினும் கருதா விட்டாலும்) வள்ளுவரும் ஏற்றுக் கொண்டார் எனவே தோன்றும்.

> அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
> நின்றது மன்னவன் கோல் (543)
>
> ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
> காவலன் காவா னெனின் (560)

என்னும் குறள்கள் அந்தணரையும் அவர் தொழிலையும் குறிப்பிடுகின்றன. **வேதம்** முதலிய நூல்களைக் கற்றலும் கற்பித்தலும் அந்தணர் (இங்கு பார்ப்பனரே போலும்) இயல்பாய தொழில் எனக் கருதியே அந்தணர் நூல் என வள்ளுவர் அவற்றைக் குறிப்பிட்டார். இன்னும் **ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல்,** ஏற்றல் என்னும் ஆறு தொழில்கள் அவர்க்குரியன எனக் கருதப்பட்டதனாலேயே அவர்கள் **அறுதொழிலோர்** என அழைக்கப்பட்டனர். அந்தணரும் அவர்தம் அறுதொழிலும் வள்ளுவர்க்கு உடன்பாடே யாகும். அவர் நூலையும் அவர் பணியையும் நன்மை பயப்பன, சமுதாயத்திற்கு வேண்டப் படுவன எனக் கருதியே நல்லரசன் ஆட்சியில் அந்தணர் நூல் சிறக்குமெனவும் அரசன் நாட்டைக் காவாதுவிடின் அவரும் தம் நூலை மறப்பர் எனவும் கூறினர். அந்தணர் தம் நூலை மறப்பின் அது சமுதாயத்திற்குத் தீங்காகும், அதனால் சமுதாயம் ஒரு நற்பயனையிழக்கிறது என்ற குறிப்பு இங்குண்டு. வேள்வியை வள்ளுவர் விரும்பினரா?

> அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
> உயிர்செகுத் துண்ணாமை நன்று (259)

எனக் கூறிய ஆசிரியர்க்கு வேள்வி உடன்பாடா? விலங்குகளைக் கொல்வதை வள்ளுவர் விரும்பவில்லை யாகையினால் வேள்வியின் பொருட்டுக் கொல்வதையும் விலக்கினர். ஆயினும் வேள்வியை ஓர் நற்செயலாகக் கருதியே உயிர் செகுத்துண்ணாமை அதைவிட நன்று

என்றார். இருநற்செயலைத் தானே ஒப்பிடமுடியும், உண்ணாது நோற்பதைவிட இன்னாச் சொல் நோற்பது நல்லது என்பது போல! ஆகவே விலங்குகளைக் கொல்லாது நெய் முதலியவற்றைத் தீயிலிட்டு வேள்வி வேட்டல் வள்ளுவர்க்கு உடன்பாடே எனக் கொள்ளலாம். அதை அவர் முக்கியமாகக் கருதவில்லை, கொல்லாமை முதலிய அறங்களை முக்கியமாகக் கருதினார். அவற்றிற்கு முரணாகாதவிடத்து வேள்வி, வேதமோதல் முதலியவற்றையும் ஏற்றுக் கொண்டார்.

அறுதொழிலைக் கொண்ட அந்தணர் அல்லது பார்ப்பார் பரம்பரையாக வந்த வகுப்பினரே என்பதை,

> மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
> பிறப்பொழுக்கம் குன்றக் கெடும் (134)

என்ற குறளால் அறிதல் கூடும். இங்கும் ஆசிரியர் ஒழுக்கத்தை முக்கியமாகக் கருதினார் எனினும் பிறப்பையும் ஏற்றுக் கொண்டார். பார்ப்பானுக்குப் பிறப்பினால் ஏற்றமுண்டு எனக் கருதப்பட்டதனாலேயே அவ்வேற்றம் ஒழுக்கக்குறைவினால் கெடும் எனப்பட்டது.

சங்ககாலத்திலும் சங்கமருவிய காலத்திலும் தமிழ்நாட்டில் வாழ்ந்த அந்தணர் (பார்ப்பனர்) அனைவரும் ஆரியரல்லர் எனவும் தமிழினத்தில் சேர்ந்தோர் சிலர் வேதம் முதலிய வடமொழி நூல்களைக் கற்று வேள்வி முதலிய வினைமுறைகளை இயற்றுதலிலும் தேர்ச்சி பெற்று அந்தணராயினரெனவும் சில அறிஞர் கருதுவர்.[10] ஆரியராயினும் தமிழராயினும் பரம்பரையாக வரும் அத்தகைய ஒரு பிரிவினர் தமிழ் நாட்டில் வள்ளுவர் காலத்திருந்தனர் என்பதே இங்குக் கருதத்தக்கது. இவரையே வள்ளுவர் மேற்காட்டிய குறள்களில் குறிப்பிட்டார்.

அரசர்கள் இருந்தனர். அவர்களைக் குறித்தே அரசியல் என்னும் இயல் எழுதப்பட்டது. வணிகரையே வள்ளுவர் 'வாணிகம் செய்வார்' (120) எனக் குறிப்பிட்டார். வேளாளர்களைக் குறித்து உழவு என்னும் அதிகாரத்தை எழுதினார். வேளாளர் என்ற சொல்லை வள்ளுவர் ஆளவில்லை. உழுவார், உழுதுண்பார், உழவினர், கைசெய்தூண்மாலையவர் என்னும் பல சொற்களைப் பயன்படுத்தினர். ஆயினும் வேளாளர் என்னும் சொல் அக்காலத்து வழக்கிலிருந்ததே.

10 Subrahmanian, N. Sangam Polity P 277
"The Brahmins at least most of them were natives of Tamilakam who at an early period in the history of their land adopted Brahminism."

அதினின்றும் பிறந்த வேளாண்மை என்னும் சொல் குறளில் பன்முறை ஆளப்படுகிறது.

வள்ளுவர் காலத்தில் வர்ண, சாதி வேறுபாடுகள் ஓரளவு நாட்டில் இருந்தன. வள்ளுவர் தாமே அவற்றை ஏற்றுக் கொண்டாரா இல்லையா என்பதே பெரிதும் தர்க்கத்துக் கிடமான ஒரு பொருளாக உள்ளது. அதைக்குறித்து மாறுபட்ட கருத்துக்கள் உள. பரிமேலழகர் முதலிய இடைக்கால உரையாசிரியர்கள், வள்ளுவர் வர்ண வேறுபாட்டை ஏற்றுக் கொண்டதாகவே எண்ணி அக்கருத்தை யுளத்திற் கொண்டே பல விடத்தும் பொருள் கூறினர். ஒழுக்கம் என்னும் சொல்லுக்கே 'அதாவது தத்தம் வர்ணத்துக்கும் நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினையுடையராதல்' என விளக்கம் கூறினர் பரிமேலழகர்.

ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும் (133)

என்ற குறளுக்கும் பரிமேலழகர் பின்வருமாறு பொருள் கூறினர். "ஒழுக்கமுடைமை குடிமை-எல்லார்க்கும் தத்தம் வர்ணத்திற்கேற்ற ஒழுக்கமுடைமை குலனுடைமையாம்; இழுக்கம் இழிந்தபிறப்பாய்விடும்-அவ்வொழுக்கத்தில் தவறுதல் அவ்வருணத்தில் தாழ்ந்த வருணமாய் விடும் என்றவாறு".

தற்காலத்தில் பலர் இத்தகைய கருத்துக்களை மறுக்கின்றனர். கவிஞர் பாரதிதாசன் 'கசடறக் கற்க' என்ற தலைப்புள்ள தம் கவிதை யொன்றில் பரிமேலழகர் கூறிய இத்தகைய உரைகளைச் சுட்டிக் காட்டி இவை தவருன உரைகளென்றும் இவற்றை நீக்கிக் குறளைக் கற்க வேண்டுமெனவும் தம் கருத்தை விளக்கினர்.[11]. வேறுபலரும் தற்காலத்தில் இக்கருத்தை ஆதரிப்பர்.

வடமொழி நூல்களில்கூறப்பட்ட வர்ண, சாதி வேறுபாடுகளை வள்ளுவர் ஏற்றுக் கொண்டாரா எனின் அப்படியே ஏற்றுக் கொள்ள வில்லை யென்று கூறுதல் பொருந்தும். தொல்காப்பியரே வர்ண வேறுபாட்டினை அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை; ஓரளவு தழுவிக் கொண்டார் என்று கூறல் தகும். வள்ளுவரும் வடமொழிநூல்களில் உள்ள பிறப்பு வேறுபாட்டை முழுதாக ஏற்றுக் கொண்டாரல்லர். ஆயினும் அத்தகைய வேறுபாட்டை வள்ளுவர் தீவிரமாக எதிர்த்த

11. பாரதிதாசன் கவிதைகள், இரண்டாம் தொகுதி, 16-ம் செய்யுள், இசைபெறு திருக்குறள் — கசடறக்கற்க

தாகவும் தோன்றவில்லை. தம் காலத்திருந்த அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய பாகுபாடுகள் அவர்க்கும் உடன்பாடே என்பது மேலே காட்டப்பட்டது. வடமொழி மரபுப்படி வர்ணசாதி வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் பிறப்பினால் ஏற்றத்தாழ்வு உண்டு என்பதை வள்ளுவர் ஏற்றுக் கொண்டாரா? இது பெரிதும் ஆய்வுக்குரிய ஒரு பொருளே.

பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை என்ற கருத்தைத் தரும் குறள்களும் உள. பிறப்பினால் உயர்வு உண்டு என்ற கருத்தைத் தரும் குறள்களும் உள.

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் (972)

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர் (973)

ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும் (133)

இக்குறள்கள் பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை போலும் என எண்ணச் செய்யும். 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்ற தொடரே வர்ண வேறுபாட்டிற்கு மாறாக அடிக்கடி எடுத்துக் காட்டப் படுகிறது. பிறப்பினால் யாவரும் ஒப்பர், தத்தம் செயல்கள் நல்லன தீயன இரண்டுமற்றன எனப் பலவகைப்படுதலினாலேயே மக்கள் சிறந்தவர் என்றும் சிறப்பில்லாதவரென்றும் கருதப்படுகின்றனர் என முதற்குறளுக்குப் பொருள் கூறுதல் கூடும். அவ்வாறாயின் செயல்களே ஏற்றத்தாழ்வைத் தருகின்றன பிறப்பு அன்று என்பது கருத்தாகும். இரண்டாவது குறட்குப் பழைய உரையாசிரியர்களே பலவாறு பொருள் கூறினர். மேலிருந்தார் என்பது செல்வத்தால், பதவியால் மேலிருந் தாரையும் குறிக்கலாம். குலத்தால் மேலாயினாரையும் குறிக்கலாம். 'மேலான அமளிமிசையிருந்தார்' எனப் பரிமேலழகர் நேர்ப்பொருளையே கொண்டார். செல்வத்தாலோ, குலத்தாலோ, பிறவகையிலோ சமுதா யத்தில் மேன்மை பாராட்டப்படுவார் மேலான குணமிலாராயின் மேலானவராகார். அவ்வாறே எக்காரணத்தினாலாயினும் தாழ்வாகக் கருதப்படுவோர் குணத்தால் தாழ்ந்தோராகவன்றி உயர்ந்தோராக இருப்பின் தாழ்ந்தவராகார் என்பதே பொருள் போலும். ஒழுக்கமே உயர்குலமாகக் கருதப்படும், ஒழுக்கத்தினின்றும் தவறுதலே இழிந்த பிறப்பாகக் கருதப்படும் என மேற்காட்டப்பட்ட மூன்றாவது குறள் கூறுகிறது.

இவ்வாறு ஆசிரியர் இக்குறள்களில் கூறினாரெனினும் உயர்குடிப் பிறப்பால் (வடமொழி நூல்களில் கூறப்பட்ட வர்ணத்தின் படியல்லா விடினும் வேறு எவ்வகையிலாவது) ஏற்றம் உண்டு எனக் கருதியே குடிமை என்னும் அதிகாரத்தை எழுதினர். இங்கும் ஒழுக்கத்தையும் அறத்தையுமே வற்புறுத்தினர். ஆனால் நற்குடிப்பிறந்தோர் இயல்பாக நல்லொழுக்கமுடையவராயும் நல்லறங்களைக் கடைப்பிடிப்பவராயும் இருப்பர், மற்றையோர் அவ்வாறு செய்தல் அரிது என வள்ளுவர் இவ்வதிகாரத்தில் கூறுகின்றார்.

இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு (951)

என்ற ஒரு குறளே இதைக் காட்டும். உயர்குடிப்பிறந்தார் மாட்டல்லது பிறர்மாட்டுச் செம்மை (நேர்மை, நடுவுநிலைமை)யும் பழி பாவங்களுக்கு நாணுந்தன்மையும் இயல்பாக உண்டாகா. மற்றும் ஒழுக்கம், வாய்மை, நாண் (பழிபாவங்களுக்கு நாணுதல்) ஆகியவற்றில் குடிப்பிறந்தார் தவறார். நகை, ஈகை, இகழாமை, இன்சொல் ஆகியவை நற்குடிக்கு இயல்பாம். கோடி கொடுப்பினும் குடிப்பிறந்தார் நல்லொழுக்கத்திற்கு மாறாகச் செயல்களைச் செய்யார். தொன்று தொட்டு வரும் நற்குடிக் கண்ணே தோன்றினோர் வறுமையுற்ற காலத்தும் ஈகைப் பண்பினின்றும் பிரியார். குற்றமற்ற நற்குடியில் பிறந்து அதற்கேற்ற வகையில் ஒழுகுவோர் சினத்தினாலும் தீமையைச் செய்யார். நற்குலத்தில் பிறந்தோரின் வாய்ச்சொற்களே அவர்தம் குலத்தின் மேன்மையை விளக்கும். இவ்வாறு உயர் பிறப்பாளரின் நலங்கள் இவ்வதிகாரத்தில் பலவகையிலும் கூறப்படுகின்றன.

குடிமை என்னும் அதிகாரத்தில் மட்டுமன்றிப் பிற இடங்களிலும் நற்குலத்தில் பிறந்தோர் இயல்பாக நற்பண்புகளைப் பெற்றிருப்பர் என்ற கருத்தைத் தரும் குறள்கள் உள.

இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே உள (223)

இரப்பவன் தன் வறுமையை எடுத்துக் கூறுமுன் (அல்லது என்னிடம் தற்போது பொருள் இல்லை எனக் கூறி மறுக்காது) தாராளமாகக் கொடுத்து உதவும் தன்மை நற்குலத்தில் பிறந்தவனிடமே காணப் படும் என ஈகையைக் குறித்துக் கூறுங்காலும் சொல்லப்படுகிறது. பண்புடைமை என்னும் அதிகாரத்துள் இத்தன்மை எவ்வாறு தோன்றும் என விளக்குமிடத்து,

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு (992)

அன்புடைமை, நல்லகுடியிற்பிறத்தல் ஆகிய இவ்விரண்டுமே பண்புடைமை என்றார். 'ஆன்ற குடிப்பிறத்தல்' என்ற தொடர்க்கு 'உலகத்தோடமைந்த குடியின்கண் பிறத்தல்' எனப் பரிமேலழகரும் 'நெறியமைந்த தம் குடிப்பிறப்பு' எனக் காலிங்கரும் உரைகூறினர். இக்குறளுக்குப் பரிப்பெருமாள் பின்வருமாறு விளக்கம் தந்தார்.

"அன்பு உடையனுகப் பிறர் வருத்தத்திற்குப் பரிதலும், கலந்து ஒழுகுதலும், கொடுத்தலும் முதலாயின உளவாம்; குடிப்பிறப்பினுனே பழிப்படுவ செய்யாமையும் புறங்கூருமையும் முதலாயின உளவாம்; ஆதலால் இவ்விரண்டினையும் உடைமை பண்புடைமை என்று கூறப்பட்டது."

குடிமையென்னும் அதிகாரத்துள்ளும் பழிபாவங்களுக்கு நாணுந்தன்மை குடிப்பிறந்தாரிடம் உள, அவர் அத்தன்மையினின்றும் இழுக்கார் என வள்ளுவர் இருகுறள்களுட் கூறியமை முன்பு சுட்டப்பட்டது. இங்கும் பரிப்பெருமாள் அதையே குடிப்பிறத்தலின் பயனுகக் கூறி விளக்கினர்.

'குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின்' (1019) என்ற தொடரும் குலத்தினல் மேன்மை உண்டு என்பதையே காட்டுகிறது. இத்தொடர்க்கு 'ஒருவனுக்கு ஒழுக்கம் பிழைக்குமாயின் அப்பிழைக்கு அவன் குடிப்பிறப்பொன்றனையும் கெடுக்கும்' எனப் பரிமேலழகரும் 'தன் குலப் பண்பினைச் சுட்டுவிடும், அக்குலத்துக்கேற்ற கோட்பாட்டைத் தாம் பிழைப்பர் ஆயின்' எனக் காலிங்கரும் உரை கூறினர். நற்குலங்களில் பிறந்தோர்க்கு இயல்பாக நற்கொள்கையும் அதனல் மேன்மையும் உண்டு என்ற கருத்து இங்குக் காணப்படுகிறது. ஆனல் ஒருவன் அக்கொள்கையை இழப்பானுயின் அம்மேன்மையும் இல்லையாம்.

இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும் (1044)

என இன்மையின் கொடுமை கூறப்படுகிறது. 'இற்பிறந்தார் கண்ணேயும்' என்பதில் உள்ள உம்மை உயர்வுசிறப்பும்மையேயாம். இற்பிறந்தார் இயல்பாக இளிவந்த சொல் சொல்லார் எனவும் பிறரிடம் சென்று இரத்தலை மேற்கொள்ளார் எனவும் வள்ளுவர்

கருதினர். வறுமையால், நல்லகுடியிற் பிறந்தாரும் ஒருகால் பிறரிடம் சென்று 'ஈக' எனக் கேட்பதை எண்ணுவர் என்று வறுமையின் கொடுமையைக் கூறினர். இங்குக் குடிப்பிறந்தோர் இயல்பாக நற் பண்புடன் நடந்து கொள்வர் என்ற கருத்தே புலனாகிறது. 'தொல் வரவும் தோலும் கெடுக்கும்' (1043) என்னும் தொடரிலும் தொல்வரவு என்பது பழைய குடியின்கண் பிறத்தலும் அதற்கேற்ற ஒழுக்கமும் என்றே கொள்ளப்படுகிறது. பலதலைமுறைகளுக்கு முன்பே நன்னிலை யிலிருந்த குடியிற்பிறந்தோர் அதற்கேற்ற நற்பண்புகளை அல்லது நல்லொழுக்கத்தையுடையவராயிருப்பர். ஆயினும் வறுமை அதையும் கெடுத்துவிடுதல் கூடும் என்பதே இங்குக் கருத்து. மணிமேகலை யாசிரியரும் வறுமை 'குடிப்பிறப்பழிக்கும்' என்றார் (மணி.11.76).

நற்குலங்களில் பிறந்தோர், சில பழஞ்சிறப்புடைய குடிகளிற் பிறந்தோர் பலநல்லியல்புகளை யுடையவராயிருப்பர் என வள்ளுவர் கருதினர். அக்காலத்துப் பிறராலும் அவ்வாறு கருதப்பட்டது.

இனிக் குடிப்பிறப்புக்குச் சமுதாயத்தில் மதிப்பிருக்க வேண்டுமா, நற்குலமாகக் கருதப்படும் குலங்களில் பிறந்தோர்க்கு ஏனையோரை விட அதிகமதிப்பு அளிக்கப்பட வேண்டுமா என்பவற்றைக் குறித்து வள்ளுவர் யாது கருதினர் எனவும் ஆய்தல் கூடும். இங்கும் பிராமண குலத்திற் பிறந்தோர், சத்திரிய குலத்திற் பிறந்தோர் என வள்ளுவர் வடமொழி நூல்களில் கூறப்பட்ட வர்ணங்களைக் குறிப்பிட்டுக் கூற வில்லை. ஆனால் சில சந்தர்ப்பங்களில் குடிப்பிறப்பு (ஒருவன் எத்தகைய குடும்பத்தில் அல்லது குலத்தில் பிறந்தவனென்பது) கவனிக்கப்பட வேண்டுமென்றே அவரும் கருதினர். அரசன் அமைச்சரை அல்லது பிற அலுவலரைத் தேர்ந்தெடுக்கும்போது அவர்கள் பிறப்பு எத்தகையது என்பதையும் கவனிக்க வேண்டும்.

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு (502)

இங்கும் குடிப்பிறப்பு மட்டும் அமையும் என ஆசிரியர் கருதவில்லை. நற் குடியில் பிறந்தவனைக் குற்றம் இல்லாதவனைத் தன்னிடம் வடு (பழி) ஏற்படாதவாறு பரிந்து காப்பவனை விளங்கும் ஒருவனே தேரப்படுதல் வேண்டும். தூதுவனொருவனைப் பிற அரசர்பால் அனுப்பும் போதும் நற்குடியில் பிறந்தவனையே அனுப்புதல் வேண்டும்.

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு (681)

இங்குத் தன்னரசனிடத்து அன்புடைமை பிற அரசரும் விரும்பத்தக்க பண்பு நலங்கள் ஆகியவை வேண்டப்படுகின்றன எனினும் ஆன்ற குடிப்பிறத்தலும் வேண்டப்படுகிறது.

தற்காலத்தில் ஓர் அரசியல் அலுவலுக்கோ பிற பொறுப்புள்ள நிலைக்கோ ஒருவரைத் தேர்ந்தெடுக்கும்போது அவர் எக்குடியில் அல்லது குலத்தில் பிறந்தவர் என்பது கருதப்படுவதில்லை. கருதப் படுதலாகாது என்பதே தற்காலத்துக் கொள்கை. கல்வி, அத்தகைய பணிகளில் முன்பு பெற்ற பயிற்சி, பிறர் தரும் நற்சான்று ஆகிய தகுதிகளே கவனிக்கப்படுகின்றன. ஆனால் பண்டைக்காலத்தில் ஒருவர் எக்குடியில் அல்லது குலத்தில் பிறக்கின்றாரோ அதற்கேற்ற பண்பை அல்லது இயல்பை உடையவராயிருப்பர் என்ற கருத்து நிலவிற்று. அது அக்காலச் சமுதாய அமைப்புக்கு ஓரளவு ஏற்ற தாகவும் இருந்திருத்தல் கூடும். ஆகவே பிறதகுதிகளுடன் பிறப்பும் கருதப்பட்டது.

எத்தகையோரை நண்பராகக் கொள்ளுதல் வேண்டும், எத்தகை யோரை நண்பராக ஏற்றுக் கொள்ளுதலாகாது என வகுக்கும் போதும் வள்ளுவர் குடிமையையும் கருதினார்.

குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு (793)

குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு (794)

ஒருவனை நண்பனாகத் தேரும் பொழுது அவன் குணம், குற்றம், மற்றும் அவன் எத்தகைய இனத்துடன் சேருகிறான் என்பனவும் எண்ணப்படவேண்டியனவே. ஆனால் இவற்றுடன் குடிமையும் கருதப்படவேண்டியதே. நற்குடியில் பிறந்து பழிநாணும் அதாவது தவறானவற்றைச் செய்யாத ஒருவனை, அவன் விரும்பிய பொருளைக் கொடுத்தாயினும் நண்பனாகக் கொள்ளுதல் வேண்டும்.

இவை யனைத்தையும் சேர்த்து நோக்குங்கால் நற்குடியில் அல்லது குலத்தில் பிறந்தோர் இயல்பாக நற்பண்புகளைக் கொண்ட வராக இருப்பர் எனவே வள்ளுவரும் கருதினார். ஆயினும் குலத்திற் கேற்ற பண்பு இருக்கிறதா என்பதையும் எவ்விடத்தும் கவனிக்க வேண்டும். குலத்திற்கேற்ற ஒழுக்கமோ பண்போ இல்லாதவர் தாழ்ந் தோரே, வெறும் பிறப்பினால்மட்டும் அவர் உயர்ந்தோராக மாட்டார்

எனவும் அவர் கற்பித்தார் என்பது புலனாகும். இன்னும் தாழ்ந்த தாகக் கருதப்படும் குலங்களில் பிறந்தோரும் ஒழுக்கம், கல்வி ஆகிய வற்றால் உயர்வடைதல் கூடும் எனவும் கருதினர். இக்கருத்து முன்பே காட்டப்பட்ட 'ஒழுக்கம் உடைமை குடிமை' 'மேற்பிறந்தாராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும் கற்றார் அனைத்திலர் பாடு' என்னும் வரி களால் பெறப்படும்.

வடமொழித் தர்மநூல்களில் கூறப்படுவது போல வர்ணங்களைக் குறிப்பிட்டு இன்னஇன்ன வர்ணத்தில் பிறந்தவர் இன்னஇன்ன தொழிலைத்தான் செய்தல் வேண்டும் என வள்ளுவர் எங்கும் கூற வில்லை. சமுதாயத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் வகுப்போர் இருந்தனர். அவரவர்க்குரிய அறங்களை அவர் ஆங்காங்கே கூறினர்; அவ்வளவே. இன்னும் வெவ்வேறு வர்ணங் களில் பிறந்தோர்க்கு வெவ்வேறுவகைத் திருமணமுறைகளையோ வெவ்வேறு நீதிகளையோ வெவ்வேறு விதிகளையோ வள்ளுவர் கூறவு மில்லை. இத்தகைய வேறுபாடுகள் மனு முதலிய வடமொழியாளர்தம் தர்மநூல்களில் காணப்படுபவையே.[12] அந்தணர் தாம் கற்ற ஓத்தை மறவாதிருப்பதுடன் உயர்ஒழுக்கமும் உடையோராதல் வேண்டும், வணிகர் கொடுப்பதையும் கொள்வதையும் ஒப்பநாடி நடுவுநிலைமை யுடன் வாணிகஞ்செய்தல் வேண்டும், உழவர் நிலத்தின்கண் நாடோறும் சென்று உழுதல், எருவிடல், களைகட்டல், நீர் பாய்ச்சுதல் ஆகியவற்றைச் செய்து பயிரைக் காத்து வளம்பெருக்குவதுடன் அதிக உணவுப் பொருளையுடையோர் ஆதலால் இரப்பார்க் கொன்றீதல் வேண்டும் என இயல்பாக அவ்வத்தொழிலினின்றும் விளையும் தொழில் முறை யறங்களையே வள்ளுவர் கூறினர். வெவ்வேறு குலங்கட்கு வெவ் வேறு நீதிகளை யவர் கூறவில்லை. இம்முறையில் திருக்குறள் வட மொழித் தர்மநூல்களினின்றும் வேறுபட்டதே.

ஆயினும் வள்ளுவர் பார்ப்பார் ஏன், அவர் அறுதொழில் ஏன், இவையெல்லாம் சமுதாயத்துக்கு வேண்டியன வல்ல என மறுத்துக் கூறவுமில்லை. சமுதாயத்தில் இருந்த அமைப்பை எதிர்க்காது அதை ஒருவாறு ஏற்றுக்கொண்டே அறங்களைக் கூறினர் எனலாம். வட நாட்டில் இருந்தது போன்ற அதே வகையான வர்ணசாதி வேறுபாடு-கள் அக்காலத் தமிழ்நாட்டில் இருந்ததாகவும் தோன்றவில்லை.

12. Chattopadhyaya, Dr. Sudhakar, Social life in Ancient India, Section A, Chapter one, Varna--Jati P. 7-29. Section B, Chapter four, Occupation P. 92.-105.

தொல்காப்பியர் கூறிய அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற வகுப்பினரும் மற்றும் பல தொழில்கள் புரிவோரும் இருந்தனர். இவருள் ஏற்றத்தாழ்வு கூறும் முறையும் தமிழ்நாட்டில் ஓரளவு இருந்தது. வடநாட்டில் இருந்த அளவு வேற்றுமை பாராட்டும் விதிகளும் கட்டுப்பாடுகளும் தமிழ்நாட்டில் இருந்தனவா என்பது ஐயமே. ஓரளவு பிறப்பால் ஏற்றத்தாழ்வு கூறும் வழக்கம் ஏற்பட்டுவிட்ட ஒரு சூழ்நிலையில் பிறப்பால் உயர்ந்தோராகக் கருதப்படுவோர் ஒழுக்கத்திலும் நற்பண்புகளிலும் உயர்ந்தவராக இருத்தல் வேண்டுமென வள்ளுவர் எதிர்பார்த்தார். அவ்வாறு ஒழுகுக எனக் கற்பித்தார். குலத்தால் தாழ்ந்தோராகக் கருதப்பட்டோரும் கல்வியாலும் ஒழுக்கத்தாலும் உயர்வு பெறல் கூடும் எனவும் கூறினர்.

## 6. 3. சமுதாயத்தில் தலைமை

வள்ளுவர் காலத்துச் சமுதாயத்தில் பிறப்பால் உயர்ந்தோராகக் கருதப்பட்டோர்க்கு ஓரளவு மதிப்பு இருந்ததென்பது மேலே காட்டப்பட்டது. வேறு எவ்வெவ்வகையில் மக்கள் சமுதாயத்தில் மதிப்பையும் உயர்வையும் பெற்றனர் என்பதையும் திருக்குறள் கொண்டு ஆய்தல் கூடும்.

அறுதொழில், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பன அந்தணர்க்குரியனவாயிருந்தன. வட இந்தியாவில் அந்தணர் (பிராமணர்), சத்திரியர், வைசியர் ஆகிய மூன்று வர்ணத்தவரும் **உபநயனம்** (கல்வி கற்க, முக்கியமாகச் சமய நூல்களைக் கற்கத் தொடங்குங்கால் செய்யப்படும் வினைமுறை) செய்விக்கப் பட்டனர். **வேதம்** முதலிய வடமொழிச் சமயநூல்களைக் கற்றனர். வேள்விகள் செய்வதற்கும் உரியவராயினர். மூன்று வர்ணத்தாரும் மார்பில் முப்புரிநூல் அணிந்து கொண்டனர் என நூல்கள் கூறுகின்றன.[13] ஆனால் தமிழ்நாட்டில் அரசரும் வைசியரும் முப்புரிநூல் அணிந்துகொண்டதாகத் தெரியவில்லை. நூல் ஆயுங்காலை அந்தணர்க்குரியது என்றே **தொல்காப்பியர்** கூறினர் (தொல். பொருள். 625) வேதங்களையும் தமிழ்நாட்டில் பெரும்பாலும் அந்தணர்களே கற்றனர் போலும். ஆயினும் ஓதலும் வேட்டலும் அரசர்க்கும் உரியதாகத் **தொல்காப்பியத்துள்** கூறப்படுகிறது. வேதநூல்களை அரசரும் வணிகரும் கற்றல் கூடும் எனத் திருக்குறளுரையாசிரியர் சிலரும்

13 Prabhu, Pandharinath, H., Hindu Social Organization, P. 114

கூறினர். 'அந்தணர் நூற்கும்' (543) என்ற தொடர்க்கு 'அந்தணர்க்கு உரித்தாகிய வேதத்திற்கும்' என உரை கூறிய பரிமேலழகர் பின் 'அரசர் வணிகர் என்னும் ஏனையோர்க்கும் உரித்தாயினும் தலைமை பற்றி அந்தணர் என்றார்' என விளக்கம் தந்தார்.

அரசரும் வணிகரும் வேதம் முதலிய நூல்களைக் கற்குங்காலும் அரசர் வேள்வி வேட்குங்காலும் அந்தணர் உதவியை நாடினர் போலும்.

அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும் (தொல். பொருள். 75)

என்ற தொல்காப்பியச் சூத்திர உரையில் (நச்சினார்க்கினியம்) ஓதல் வேட்டலுடன் ஓதுவித்தல் வேட்பித்தல் ஆகியவை பார்ப்பார்க்குரிய தொழில்களாக இவற்றுள் ஓதலும் வேட்டலும் பிறதொழில்களுடன் அரசர்க்கும் ஏனோர்க்கும் உரியனவாகக் கூறப்படுகின்றன. ஓதுவித்தல் வேட்பித்தல் அரசர்க்கும் பிறர்க்கும் கூறப்படவில்லை. வேதம் முதலிய வைதிக சமயநூல்களைக் கற்பித்தலும் வேள்விக்குரிய விதிகளைக் கூறி வேள்வியை நடத்துவித்தலும் தொல்காப்பியர் காலத்திலிருந்து சிறப்பாக அந்தணர்கட்கே உரியனவாக இருந்திருத்தல் வேண்டும்.[14] வள்ளுவர் காலத்தும் அந்நிலைமையே இருந்ததனாலேயே அவர் அவர்களை 'அறுதொழிலோர்' என்றார்.

சிலப்பதிகாரத்தில் கோவலனும் கண்ணகியும் மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத் தீவலம் செய்து மணம் புரிந்தனர் (சிலம்பு. 1. 52) எனக் கூறப்படுகிறது. இம்மணவினைமுறை வள்ளுவர் காலத்திலேயே இருந்ததா என்பது தெளிவின்று. இருந்திருத்தல் கூடும். வேட்பித்தலை அந்தணர்க்குரிய ஒரு தொழிலாகவே வள்ளுவர் ஏற்றுக்கொண்டார். திருமணத்தையும் ஒரு வேள்வியாகக் கூறும் வழக்குண்டு.[15] திருமண

---

14. அந்தணரின் அறுதொழில்கள் தொல்காப்பிய உரையுள் மட்டுமன்றிப் பதிற்றுப் பத்துள்ளும் குறிப்பிடப்படுகின்றன.

ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்
ஈதல் ஏற்றலென்று ஆறுபுரிந் தொழுகும்
அறம்புரி அந்தணர் (பதிற். 24)

15. திருவாசகம், திருச்சாழல், 13

மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் ... ......

பெரியபுராணம், தடுத்தாட்கொண்டபுராணம், 35

நின்னுடைய வேள்வியினை நீமுயல்தி என்றான்.

வினைமுறைகளைக் கூறி அவற்றை நிகழ்த்துவித்தலும் வேட்பித்தலே யாகும்.

வள்ளுவர் காலத்தின் முன்னும் அவர் காலத்திலும் பின்னும் கூடச் சமயநூற்கல்வியிலும், சமயச் சார்பான வினைமுறைகளிலும் அந்தணர் முதன்மை பெற்றிருந்தனர். அதற்குரிய மதிப்பும் செல்வாக்கும் அவர்கட்குச் சமுதாயத்தில் இருத்தல் இயல்பே. அரச குடும்பத்தைச் சேர்ந்தோரும் அவர்களிடம் வேதம் முதலியவற்றைக் கற்றனர். வேள்விகளை இயற்றுங்கால் அவர் உதவியை நாடினர். கோவலன் கண்ணகியின் பெற்றோர் போன்ற பெருஞ் செல்வரும் திருமணம் முதலிய நிகழ்ச்சிகளில் அவர்க்கு முதன்மை அளித்தனர். சங்க காலத்தில் அந்தணர் சிலர் வேதநூலறிவிலும் வேள்வி வேட்டலிலும் வல்லவராய் மிக்க புகழும் செல்வமும் பெற்றிருந்தனர் என்பதைச் சோணாட்டுப் பூஞ்சாற்றூரைச் சேர்ந்த கௌணியன் விண்ணந்தாயன் என்னும் ஓர் அந்தணனைக் குறித்து ஆவூர் மூலங்கிழார் பாடிய பார்ப்பன வாகை என்ற துறையைச் சேர்ந்த புறநானூற்றுச் செய்யுள் (புறம். 166) காட்டும். இவ்வாறு அந்தணர் அக்காலத்தில் சமயத்துறையில் சிறப்புற்றிருந்தனர். குறளும் அதைக் காட்டுகிறது.

ஆட்சியில் தலைமை அரசனுடையதே. அமைச்சரும் அரசியல் அலுவலரும் அரசனுக்குத் துணை நின்று உதவினர் அரசன் அமைச்சர் ஆலோசனையைக் கேட்டும் குடிகளின் விருப்பத்தைப் பொருட்படுத்தியும் ஆண்டான் எனினும் ஆட்சி அரசன் கையதே. அந்தணர் சமயத்துறையில் சிறப்புற்றிருந்தனர் எனினும் அரசன் அந்தணர் சொல்லைக் கேட்டு ஆட்சி செய்தல் வேண்டும் என்னும் கருத்து வள்ளுவருக்கு இருந்ததாகத் தோன்றவில்லை.

அரசன் அந்தணரை ஆதரித்து அவர் தொழிலுக்கு இடையூறு நேராமல் காக்க வேண்டும் என்ற கருத்தே காணப்படுகிறது. 'அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்' (543) என வள்ளுவர் கூறினரேயன்றி 'மன்னவன் கோற்கு ஆதியாய் நின்றது அந்தணர் நூல்' என அவர் கூறவில்லை. ஆட்சியில் முதன்மை அரசனுக்கே.

மக்கள் அரசனிடம் பெருமதிப்பும் நம்பிக்கையும் வைத்திருந்தனர். இதையுணர்ந்தே வள்ளுவர்,

> வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
> கோனோக்கி வாழும் குடி (542)

என்றார். அரசனிடம் அத்தகைய பெருமதிப்பை வைத்திருந்த மக்கள் அவனால் நியமிக்கப்பட்ட அமைச்சர், அரசியல்அலுவலர் ஆகியோர்க்கும் மதிப்பளித்து உரிய இடத்தில் அவர்கள் ஆணையை ஏற்று ஒழுகுதல் இயல்பே. அதை எண்ணியே,

நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு (520)

என வள்ளுவர் கூறினர். அரசன் தன் அலுவலர்களின் செயல்களை நாடோறும் ஆராய்தல் வேண்டும். அவர்கள் தம் கடமையை ஒழுங்காகச் செய்துவரின் அவர்கள் வழிநிற்கும் குடிமக்களும் நெறிவழி நிற்பர். அரசியல் அலுவலர் தவறு செய்யவில்லையாயின் குடிமக்களும் தவறு செய்யார் எனக் கூறும் ஆசிரியர் குடிமக்கள் எத்தகைய மதிப்பையும் கீழ்ப்படிதலையும் உரிய அலுவலர்க்களித்து அவர் சொற்படி நடப்பர் என எதிர்பார்த்தார் என்பது தெளிவாகும். அரசனும் அமைச்சரும் பிற அரசியல் அலுவலரும் ஆட்சித்துறையில் மிக்க மதிப்பையும் செல்வாக்கையும் பெற்றிருந்தனர் எனலாம்.

பொருளுக்கும் மதிப்பு இல்லாமலில்லை. எச் சமுதாயத்திலும் செல்வர்க்கு மதிப்பிருத்தல் இயல்பே. யார் பொருள் தேடுதல் கூடும்? பண்டைத்தமிழகத்தில் பலருக்கும் அவரவர் முயற்சிக்குத் தகப் பொருள் தேட வாய்ப்பிருந்ததெனவே தோன்றுகிறது. சில வடமொழித் தர்ம நூல்களில் முதல் மூன்று வர்ணத்தவரே கல்வி கற்பதற்கும் பொருள் தேடுவதற்கும் உரியவரெனக் கூறப்படுகிறது.[16] சூத்திரர் பொருள் தேடினால் அது தவறாகும் எனவும் சில நூல்கள் கூறுகின்றன.[17] தமிழ்நாட்டில் இத்தகைய விதிகள் இருந்ததாகத் தோன்றவில்லை. ஒருகால் இருந்திருப்பினும் அது வள்ளுவர் கருத்தன்று. முன்பே கூறப்பட்டதுபோல் (அறங்கள், உள்ளப்பண்புகள் பார்க்க) 'மாந்தர் தம் உள்ளத்தனைய துயர்வு' எனக் கூறிய ஆசிரியர் அவரவர் உள்ளத்திலுள்ள ஊக்கத்திற்கேற்ப அவரவர் முயன்று முன்னுக்கு வரக்கூடிய ஒரு நிலைமையையே விரும்பினர்.

---

16. Prabhu, Pandharinath, H., Hindu Social Organization, P. 112
"The Sudras were not to go in for learning according to these authorities." (The writers of Dharma Sastras).

17. Ibid. P. 299 " Sudra, created 'as the servant of the other three varnas' should never amass wealth (Samchayam) for himself, for then he makes the members of the three superior classes obedient to him. By this he would incur sin".

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள் (751)

என்பது குறள். குலத்தாலோ கல்வியாலோ பிறவகையிலோ உயர்வும் மதிப்பும் இல்லாதோருக்கும் செல்வம் உயர்வளிக்கிறது. பிறர் அவரை ஒரு பொருட்டாக மதிக்கும்படி செய்கிறது. இக்குறளுக்கு "ஒரு பொருளாக மதிக்கப்படாதாரையும் மதிக்கப்படுவாராகச் செய்ய வல்ல பொருளையொழிய ஒருவனுக்குப் பொருளாவது இல்லை" என உரை கூறிய பரிமேலழகர் பின் "மதிக்கப்படாதார்-அறிவிலாதார், இழிகுலத்தார்", "மதிக்கப்படுவாராகச் செய்தல்-அறிவுடையாரும் உயர்குலத்தாரும் அவர்பாற் சென்று நிற்கப்பண்ணுதல்" என விளக்கினர். எக்குலத்தோராயினும் பொருள் தேடுதல் கூடும். முயன்று நல்வழியில் பொருள் தேடியவர்க்கு, அதிலும் பொருளை நல்வழியில் செலவு செய்பவராகவும் இருப்பவர்க்கு மக்கள் மதிப்பளித்தனர். "செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு" (752). ஆயினும் அப்பொருள் திறனறிந்து தீதின்றி வந்த பொருளாகவும், அருளென்னும் அன்பின் குழவிக்குச் செல்வச் செவிலியாக அதாவது அருளை வளர்க்கப் பயன்படுவதாக அருளோடு பொருந்திய செயல்களிலேயே ஈடுபடுத்தப் படுவதாகவும் இருத்தல் வேண்டும் என வள்ளுவர் கருதினர். ஆகவே செல்வர்க்கு, சிறப்பாக நற்செல்வர்க்குச் சமுதாயத்தில் ஒருவகை மதிப்பும் செல்வாக்கும் இருந்தது.

கல்விக்கும் நாட்டில் மதிப்பிருந்தது. கற்றோரும் பிறரால் சிறப்பிக்கப்பட்டனர். எந்நாட்டிற்குச் செல்லினும் எவ்வூர்க்குச் செல்லினும் தம்மூர்போல் மதிப்பையும் ஆதரவையும் பெறுவர் என வள்ளுவர் கூறினர். கல்வி பெற விரும்புவோர் அதன் பொருட்டுக் கற்றோரை நாடிச் செல்வர். அவரிடம் பணிவோடு நடந்து கல்வியறிவைப் பெற விழைவர்.

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர் (395)

என்ற குறள் கல்வியை அவாவுவோர் கற்று வல்லோர்க்கு அளிக்கும் மதிப்பைக் காட்டுகிறது. செல்வரிடம் பொருளுதவி பெற விரும்பும் வறியோர் அவர்முன் பணிந்து நிற்பது போலக் கல்வியைப் பெற விரும்புவோர் கற்றோரிடம் பணிந்து நிற்பர். பொருள் துறையில் செல்வர்க்கு மதிப்பும் செல்வாக்கும் இருந்தது போலக் கல்வித்துறையில் கற்றோர்க்கு மேன்மை தரப்பட்டது. குலத்திற்கு நாட்டில் ஓரளவு மதிப்

பிருந்ததெனினும் தாழ்ந்த குலத்தோர் கற்றவராயின் கல்லாத மேற் குலத்தோரைவிடப் பாடு (மேன்மை) பெறுவர் என வள்ளுவர் கூறினர் (409).

புறநானூற்றில் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் பாட்டும் கற்றோர்க்கு அக்காலச் சமுதாயத்தில் இருந்த மதிப்பைக் காட்டும். "துன்பம் நேர்ந்தபோது உதவி செய்தும் மிகுந்த பொருளைக் கொடுத்தும் (கற்றோரிடம்) பணிந்தொழுக வேண்டிய நிலைமையை வெறுக்காது கல்வி கற்பது நல்லதே. ஏனெனில் தாயும் தன்மக்களுள் கல்வியிற் சிறந்தவனிடமே அதிக அன்பு பாராட்டுவாள். ஒரு குடிப் பிறந்த பலருள்ளும் (அரசியல் அலுவல்கட்கு) மூத்தோனை வருக என அழைக்காது, அறிவுடையவனையே அழைத்து அரசனும் அவன் ஆலோசனையை ஏற்று நடப்பான். வேறாக அறியப்படும் நான்கு குலங்களுள்ளும் தாழ்ந்தகுலத்தில் பிறந்தோனொருவன் கல்வியிற் சிறந்தவனாயின் மேற்குலத்தில் பிறந்தோனும் அவனிடம் பணிவன். அவன் ஆலோசனையை ஏற்பன்" என இவ்வரசகவி கூறினன். அரசியல் அனுபவமுடைய நெடுஞ்செழியன் சமுதாயத்தில் அக்காலத் திருந்த நிலைமையை நன்கு உணர்ந்தே எழுதியிருத்தல் வேண்டும். வயதுக்கும் குலப்பிறப்புக்கும் அக்காலத்தில் மதிப்பிருந்ததெனினும் கல்விக்கே அவற்றைவிட அதிகம் மதிப்பு அளிக்கப்பட்டதென இக் கவிதை (புறம். 183) கூறுகிறது. இந்நிலையே வள்ளுவர் காலத்திலும் இருந்தது போலும்.

அரசர் பெரியோரைத் துணைக்கோடல் வேண்டும் என வள்ளுவர் கூறினர். பெரியோர் என்பது இங்கு அமைச்சரையும் புரோகிதரையும் குறிக்குமென உரையாசிரியர் கருதினர். அமைச்சரைக் குறித்துப் பின் அங்கவியலில் கூறப்படுகிறது. புரோகிதர் வள்ளுவர் காலத்தில் இருந் தனரா என்பதும் தெளிவின்று. ஆசிரியர் அமைச்சரையும் புரோகித ரையுமே கருதினராயின் இங்குத் தெளிவாக அவ்விருதிறத்தாரையும் குறிப்பிட்டிருக்கலாமே. 'அறன்அறிந்து மூத்த அறிவுடையார்' 'உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும் பெற்றியார்' 'பெரியார்' 'சூழ்வார்' 'தக்கார்' 'இடிக்கும் துணையார்' 'நல்லார்' என்னும் சொற்களும் தொடர்களும் இவ்வதிகாரத்தில் ஆளப்படுகின்றன. இவை அமைச்சரைக் குறிப்பனவா நண்பரைக் குறிப்பனவா பிறரைக் குறிப்பனவா என்பது குறளைப் படிக்குமளவில் தெளிவின்று. 'தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல் வன்மையுள் எல்லாந் தலை' (444) எனவும் ஒரு குறள் கூறுகிறது. தம்மிற் பெரியார் என அமைச்சரைக் கூறல்

பொருந்துமா? தன்னைவிட அறிவிற் சிறந்தவரை அரசன் அமைச்சராகக் கொள்வது சிறப்பு என்பது கருத்தா? அவ்வாறாகவும் இருத்தல் கூடும். நாட்டில் பொதுவாக அறிவிலும் குணத்திலும் உயர்ந்தோராயிருக்கும் பெரியோரை அரசன் தன் ஆட்சிக்குத் துணையாகக் கொள்ளல் வேண்டுப் என்பது கருத்தாகவும் இருக்கலாம். 'உற்றநோய் நீக்கி உறுஅமை முற்காக்கும் பெற்றியார்' (442) என்போர் யார்? "தெய்வத்தானுக மக்களானுகத் தனக்கு வந்த துன்பங்களை நீக்குமாறறிந்து நீக்கிப்பின் அப்பெற்றியன வாரா வண்ணம் முன் அறிந்து காக்கவல்ல தன்மையினை யுடையார்" எனப் **பரிமேலழகர்** பொருள் கூறினர் நீண்ட விளக்கமும் தந்தார்.

"தெய்வத்தான் வருந்துன்பங்களாவன: மழையினது இன்மை மிகுதிகளானும் காற்றுத்தீப்பிணி என்ற இவற்றானும் வருவன. அவை கடவுளரையும் தக்கோரையும் நோக்கிச் செய்யும் சாந்திகளால் நீக்கப்படும். மக்களான் வரும் துன்பங்களாவன: பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் என்றிவர்களான் வருவன. அவை சாமபேத தான தண்டங்களாகிய உபாயத்துள் ஏற்றதனல் நீக்கப்படும். முற்காத்தலாவது: தெய்வத்தான் வருவனவற்றை உற்பாதங்களான் அறிந்து அச்சாந்திகளாற் காத்தலும் மக்களான் வருவனவற்றை அவர் குணம், இங்கிதம், ஆகாரம், செயலென்பனவற்றான் அறிந்து அவ்வுபாயங்களுள் ஒன்றாற் காத்தலுமாம். ஆகவே புரோகிதரையும் அமைச்சரையும் கூறியவாறாயிற்று."

இது பரிமேலழகர் தம்காலத்திற்கேற்பக் கூறிய விளக்கமாகும். தற்காலத்திற்கேற்றவாறு பொருள் கொள்வதாக இருந்தால் நாட்டில் நீர்த்தேக்கங்களையும் மின்னாற்றல் எடுக்கும் நிலையங்களையும் அமைத்து இவற்றின் குறைவால் மக்களுக்குத் துன்பம் நேராது காக்கும் **பொறியியல் வல்லுநர்**, நாட்டில் உணவுப்பஞ்சம் ஏற்படாதவாறு உணவு உற்பத்தியைப் பெருக்க வல்ல **பயிர்த்தொழில் நிபுணர்**, நோய் பரவாது தடுக்கவல்ல **வைத்திய நிபுணர்**, போர் ஏற்படின் நாட்டில் தக்க பாதுகாப்புக்கள் அமைக்கத்தக்க **போர்த்துறை அறிவுமிக்கோர்** ஆகியோரே 'உற்றநோய் நீக்கி உறுஅமை முற்காக்கும் பெற்றியார்' எனலாம்

சங்க காலத்திலும் நாட்டில் நீரின்மையும் அதனல் விளைபொருட் குறைவும் உணவின்மையும் ஏற்படாதவாறு முற்கூட்டியே நாட்டில் நீர்நிலைகளைப் பெருக்கும்படி அறிவுரை கூறிய குடபுலவியனர் (புறம். 18), **அதியமான்** சார்பாகத் **தொண்டைமானிடம்** தூது சென்று இரு அரசர்க்கும் இடையே போர் நிகழாது தடுத்த **ஔவையார்** (புறம். 95), போர்

ஏற்பட்டபோது ஆலோசனை கூறியும் ஊக்கமளித்தும் பாரிக்குதவிய **கபிலர்** (புறம். 109-111) போன்ற நல்லறிஞர்கள் இருந்தனரே.

பொதுவாக அறிவும் அறச்சிந்தனையும் உடையோராய் முன்-யோசனையும் பொறுப்புணர்ச்சியும் நாட்டின் நலத்தைக் கருதும் பான்மையும் உடையோராய்த் திகழும் நல்லோர் துணையை (அவர் அமைச்சர் முதலிய அரசியற் பணிகளுள் இருப்பினும் குடிமக்களுள் சிறந்தோராயிருப்பினும்) அரசன் நாடி அரசாள்வதே பெரியோரைத் துணைக்கோடல் எனக்கொள்ளலாம். ஆகவே அவ்வாறு **பொதுநலத்தைப் பேணும் பண்புடையோர்க்கும்** (public spirited persons) **சமுதாயத்தில் மதிப்பு இருந்தது** எனத்தெரிகிறது.

'**பெரியாரைப் பிழையாமை** என்னும் ஓரதிகாரம் குறளில் உண்டு. இங்குப் பெரியோர் எனக் குறிப்பிடப்பட்டவர் பெருவேந்தரும் முனிவருமேயாவர் என்பர் உரையாசிரியர். 'கெடல் வேண்டின் ஆற்றுபவர்' (893), 'வெந்துப்பின் வேந்து' (895) போன்ற தொடர்கள் வேந்தரையே குறிப்பது தெளிவு. 'தகைமாண்ட தக்கார்' (897), 'ஏந்திய கொள்கையார்' (899), 'சிறந்தமைந்த சீரார்' (900) என்ற தொடர்கள் முனிவரைக் குறிப்பனவாகவே தோன்றும். ஏந்திய கொள்கையர் சீறின் வேந்தனும் தன்சிறப்பை யிழந்து கெடுவான் எனக் கூறப்படுவதால் படைவலிமையையும் செல்வச் சிறப்பையும் உடைய அரசனும் முனிவர் அல்லது தவத்தோரின் ஆன்மிக ஆற்றலுக்கு எதிர் நிற்கமாட்டான் என்பது கருத்தாதல் வேண்டும். இவ்வதிகாரத்தில் வரும் ஒரு குறளும் **நீத்தார் பெருமையில்** வரும் ஒரு குறளும் ஒப்புநோக்கத்தக்கன.

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்த லரிது (29)

குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து (898)

நீத்தார் பெருமையில் நீத்தார் 'குணமென்னும் குன்றேறி நின்றார்' எனக் குறிப்பிடப்படுவதால் இங்கும் 'குன்றன்னார்' என வழங்கியது அவரையே எனல் தகும். ஆகவே அக்காலத்து முனிவர்கட்கு அரசரும் மதிக்கத்தக்க உயர்வு அளிக்கப்பட்டது எனத் தோன்றும்.

இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே (புறம். 6. 19-20)

என்பது புறநானூற்றில் ஒரு புலவர் ஓர் அரசனுக்குக் கூறிய அறிவுரை யாகும். பிறர் யார்க்கும் முடி தாழ்த்தாத அரசன் நான்மறைமுனிவர் எதிரே சென்னி தாழ்த்திப் பணிதல் வேண்டுமென இங்குக் கூறப் படுகிறது. இது அக்காலச் சமுதாயத்தில் முனிவர்க்கிருந்த மதிப்பைக் காட்டும். வைதாலும் வாழ்த்தினாலும் தாம் விரும்பியது விளைவிக்கும் நிறைமொழி மாந்தர் அவர் எனக் கருதப்பட்டதனாலோ என்னவோ அக்காலமக்கள் முனிவர்கட்கு அத்தகைய மதிப்பை யளித்தனர். இத்தகைய கருத்துக்கள் உண்மையல்லன எனக் கொள்ளினும் தன்மறுப்பும் தூய ஒழுக்கமும் அருளுள்ளமும் கொண்ட உண்மைத்துறவி தன் செல்வாக்கினால் சமுதாயத்தில் உள்ள பல குறைகளை நீக்கி மிக்க நலம் விளைவித்தல் கூடும் என்பது தற்காலத்திலும் சுவாமி விவேகானந்தர் போன்ற ஒரு சிலரின் வாழ்க்கையில் காணப்படுவதே.

பகைத்திறம் தெரிதல் என்னும் அதிகாரத்தில் வரும் ஒரு குறளும் இங்குக் கவனிக்கத்தக்கது.

வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை (872)

வில்லைத் தம் கருவியாகக் கொண்டு வாழும் வீரர் அல்லது அரசர் பகையை ஒருவன் தேடிக் கொள்ளினும் சொல்லைத் தமக்குரிய கருவி யாகக் கொண்டு வாழும் சொல்வல்லோரை அரசன் பகை கொள்ள லாகாது என்பதே இங்குக் கூறப்பட்டது. சொல்லேருழவர் என வள்ளுவர் யாரைக் குறிப்பிட்டார்? சொல்லேருழவர் என்பதற்குச் சூழ்ச்சியுடையோர் எனப் பரிமேலழகரும் அமைச்சர் என மணக்குடவரும் உரை கூறினர். பரிதியாரும் காலிங்கரும் முறையே சொல்வல்லவன் எனவும் கற்றுணர்ந்த சான்றோரெனவும் பொருள் கொண்டனர். வள்ளுவர் சொல்லேருழவர் எனக் கூறினர். சூழ்ச்சி வல்லோர் எனக் கூறவில்லை; அமைச்சர் எனத் தெளிவாகக் குறிப்பிடவும் இல்லை. 'வாளின் ஆற்றலைவிட எழுதுகோலின் ஆற்றல் பெரியது' (The pen is mightier than the sword) என்ற ஆங்கிலப் பழமொழியின் கருத்தே இக் குறளிலும் தொனிப்பதாகத்தோன்றுகிறது இங்குச் சொல்லேருழவர் எனக் குறிப்பிடப்பட்டது வடநாட்டில் மோரிய அரசர்க்குத் துணை நின்ற சாணக்கியர் போன்ற சூழ்ச்சித் திறனுடையோரையா? சங்க காலத்தில் கபிலரும் பல்லவர் காலத்தில் திருநாவுக்கரசரும் போன்று

தம்சொல்லாற்றலால் செல்வாக்குப் பெற்று அதைப் பிறர் நன்மைக்கே பயன்படுத்திய கவிஞர் பெருமக்களேயா? அல்லது பிறர் விரும்பிக் கேட்கத்தக்க வகையில் சொற்பொழிவு செய்வதில் வல்லோரையா? சாணக்கியர் போன்றோரின் பகையினால் அரசர்க்குத் தீங்கு விளைதல் கூடும். கபிலர், நாவுக்கரசர் போன்றோரைப் பகைகொள்ளினும் தீங்கு செய்யார். ஆயினும் அரசன் அத்தகைய செல்வாக்குள்ள சொல்வல்லோரைப் பகைகொள்வதனால் அவனும் அவன் நாடும் அவர்களின் நற்பணியை இழக்குமே. ஆகையினால் பகை கொள்ளலாகாது என்பது கருத்தா?

எவ்வாறாயினும் பேச்சிலோ எழுத்திலோ ஆற்றலுடைய சொல்வல்லோர்க்கும் அக்காலமக்கள் மதிப்பளித்தனர். தற்காலத்திலும் சிறந்த பேச்சாளர், எழுத்தாளர் ஆகியோர் புகழ்பெறுவது போல எனக் கொள்ளலாம்.

ஆகவே குலத்திலுயர்ந்தோர், கல்வியிற்சிறந்தோர், முயன்று பொருள் தேடிச் செல்வவளம் பெற்றோர், அரசியலில் உயர்நிலையிலிருந்த அமைச்சர் பிற அலுவலர் ஆகியோர், முன்யோசனையும் பொறுப்பும் உடையோராய் நாட்டின் நலத்தைத் தேடுவோர், ஆன்மீக உயர்வுபெற்ற முனிவர் அல்லது துறவியர், சொல்லாற்றலுடையோர் ஆகியபலதிறத்தவர்க்கும் வெவ்வேறு துறைகளில் தலைமையும் அதற்கேற்ற மதிப்பும் செல்வாக்கும் இருந்தன எனக் கூறல் பொருந்தும்.

பலதுறைகளிலும் வளர்ச்சி பெற்று வரும் ஒரு நற்சமுதாயத்தில் இருக்கவேண்டிய நிலையும் அதுவே.

## 6.4. சமுதாயத்தின் தன்மை

பொதுவாகச் சமுதாயத்தின் இயல்பைக் குறித்துக் குறள் மூலம் அறியப்படும் கருத்துக்கள் சிலவே இப்பகுதியில் ஆயப்படுவன. சமுதாயம் இயல்பாக நல்லியல்பையுடையதா, தனிப்பட்டோர் நல்லவராகவோ தீயவராகவோ இருப்பதன்றிச் சமுதாயம் நன்மை தீமையற்றதா என ஆய்தல் கூடும். சமுதாயம் எப்போதும் ஒரே நிலையில் இருப்பதா மாறும் தன்மையுடையதா, மாறுவதானால் அது காலப் போக்கில் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிறதா அல்லது முன்பு இருந்ததைவிடத் தாழ்ந்த நிலையைத்தான் அடைந்து கொண்டிருக்கிறதா எனவும் ஆய்தல் கூடும். இம்முறையில் மக்கள் சமுதாயத்தைக் குறித்து வள்ளுவர் கொண்ட கருத்து யாது எனத் திருக்குறளினின்று அறிய இடம் உண்டா என்று ஆய்ந்து காணலாம்.

இனி சமுதாயத்தில் வாணிபம் தொழில் பொருள்சேர்க்கும் உரிமை முதலியன அனைத்தும் அரசாலோ ஆள்வோராலோ பிறவகையிலோ கட்டுப்படுத்தப்படவேண்டுமா அல்லது அவரவர் விரும்பியவாறு அவரவர் திறமைக்கும் முயற்சிக்கும் ஊக்கத்துக்கும் தக்கவாறு செயலாற்றவும் பயனடையவும் தக்கநிலை இருக்கவேண்டுமா எனவும் ஆய்தல் கூடும். இதில் எதுவும் சமுதாயத்தின் இயல்பான தன்மையன்று, அவ்வச்சமுதாயத்தில் மக்கள் வகுத்துக் கொள்ளும் ஓர் நிலையேயாகும். இதில் கட்டுப்பாடு மிக்கதை மூடிய இயல்பையுடையது (close) என்றும் விரும்பியவாறு செயலாற்ற வாய்ப்பளிப்பதைத் திறந்த இயல்பை யுடையது (open) எனவும் மேல்நாட்டுச் சமூகவியலறிஞர் கூறுவர்.[18]

### 6. 4. 1. சமுதாயம் நல்லியல்பையுடையதா?

சமுதாயம் இயல்பாக நல்லதா தீயதா எனப் பலர் ஆய்கின்றனர். மேல்நாட்டில் இடைக்காலத்தில் வாழ்ந்த கிருஸ்தவச் சீர்திருத்த இயக்கத் தலைவரான (Reformation leader) **ஜான் கால்வின்** மக்கள் சமுதாயம் அல்லது மக்களினமே தீயஇயல்பை யுடையது எனக் கருதினர்.

தற்காலஅறிஞர் சிலர் மக்கள்சமுதாயம் இயல்பாக நல்லதென்றும் சிலர் இயல்பாக நல்லதா தீயதா எனக் கூறுதற்கில்லை எனவும் கருதுவர். டார்கீம் (Durkheim) என்ற சமூகவியலறிஞர் சமுதாயம் இயல்பாக நல்லது நன்மையை யாதரித்துத் தீமையை நீக்கும் இயல்பை யுடையது எனக் கூற வீபர் (Weber) முதலிய பிற அறிஞர் சமுதாயம் நல்லதா தீயதா என்ற எக்கருத்துமின்றிச் சமுதாயத்தின் நிலையை அவ்வக்காலத்து ஆய்வதே தகும் என்னும் கொள்கையை நாட்ட முயன்றனர்.[19]

வள்ளுவர் கருத்து யாது? வள்ளுவர் சமுதாயத்தில் நல்லோரும் இருப்பர் தீயோரும் இருப்பர், நன்மையுமுண்டு தீமையுமுண்டு என உணர்ந்தே தம் நூலை எழுதினர் என்பது முன்பு விளக்கப்பட்டது. (‘திருக்குறள் கூறும் சமுதாயம் ஓர் இலக்கியல் சமுதாயமா?’ பார்க்க.) ஆயினும் பொதுவாகச் சமுதாயத்தின் இயல்பு நல்லது எனவே வள்ளுவர் கருதியதாகத் தோன்றுகிறது. சமுதாயத்தோடொட்டி வாழ்தலையே வள்ளுவர் சிறப்பாகக் கருதினர்.

18. Freund, Julien., Sociology of Max Weber (tran. Mary Ilford), P. 154-157
19. Ibid P. 12-13

எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு (426)

உலகம் எவ்வாறு ஒழுகுகின்றதோ அதற்கேற்ப அவ்வாறு ஒழுகுவதே அறிவாம் என ஆசிரியர் இங்குக் கூறினர். சமுதாயம் நல்லோரையே ஆதரிக்கிறது, நன்மையையே விரும்புகிறது என்ற கருத்தையும் பல குறள்களில் காணலாம்.

கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு (117)

ஒறுத்தாரை ஒன்ருக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து (155)

உரைப்பார் உரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன்
றீவார்மேல் நிற்கும் புகழ் (232)

உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன் (294)

என்பன சிலவாம். நடுவுநிலைமையாகிய நன்மையின்கண் நிலைத்திருக்கும் ஒருவனுக்குத் தாழ்வு நேரிடினும் அதை உலகோர் தாழ்வாகக் கருதார். நேர்மையுடன் நடந்துகொண்டு அதனல் தாழ்வை யடைந்த ஒருவனை மூடன் என்று பிறர் கருதுவர் என்றோ நேர்மையிற் சிறந்தோரைப் பிறர் விரும்பார் என்றோ வள்ளுவர் எண்ணவில்லை, அவர் வறுமையுறினும் சமுதாயம் அவர்க்கு உயர்வளிக்கும் என எண்ணினர். தமக்குத் தீங்கு செய்வோரை ஒறுத்தவர்க்கு அன்று ஒருநாளே மன நிறைவு ஏற்படும், பொறுத்தவர்க்கோ என்றும் புகழ் நிலைத்திருக்கும். இங்கும் பொறுத்தவனைக் கோழை என்றோ ஏமாந்தவன் என்றோ பிறர் இகழக்கூடும் என ஆசிரியர் எண்ணவில்லை. ஈவோரையே எல்லாரும் புகழ்வர். ஈவோரைக் கண்டு தாம் ஈகையை மேற்கொள்ளாதார் அழுக்காறு கொள்ளுதல் கூடும் என வள்ளுவர் கருதவில்லையா? அத்தகையோரும் இருப்பர் என உணர்ந்தே 'கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம், உண்பதூஉம் இன்றிக் கெடும்' (166) எனக் கடுமொழி கூறினர். ஆயினும் எங்காவது ஒருசிலரே அவ்வாறு அழுக்காறு கொள்வர் எனவும் சமுதாயத்தில் பெரும்பாலோர் கொடையாளரைப் புகழ்வர் எனவும் எண்ணினர் போலும். தன் உள்ளத்திற்கேற்ப உண்மையை மொழிந்து பொய் கூருதொழுகுபவன் யாவராலும் நன்கு மதிக்கப்படுவானகையால் அவன் யாவருளத்திலும் இருப்பன். இங்கும் உலகில் பெரும்பாலோர் உண்மையயன்றி வெறும் இச்சக மொழிகளையே விரும்புகின்றனர் என ஆசிரியர் கருதவில்லை, வாய்மையையே யாவரும் விரும்புவர் என்றூர்.

உலகில் நன்மையும் தீமையும் உண்டு என்பதை வள்ளுவர் உணர்ந்தாராயினும் சமுதாயம் பொதுவாக நல்லியல்பை யுடையதே, நல்லோர் சார்பாகவே நிற்கிறது என்பதே ஆசிரியர் கருத்தாகும்.

### 6. 4. 2. சமுதாயம் முன்னேறிக்கொண்டிருக்கிறதா?

மக்கள்சமுதாயம் காலம் செல்லச் செல்ல முன்னேறிக் கொண்டிருக்கிறது என்னும் கொள்கை மேல்நாடுகளில் சற்றுப் பிற்காலத் தெழுந்ததே யாகும். டார்வின் (Darwin) என்ற அறிவியலறிஞரால் கூறப்பட்டதும் தமிழில் கூர்தல் அறம் எனவும் உயிர்மலர்ச்சிக் கொள்கை எனவும் தற்கால எழுத்தாளர்களால் வழங்கப்படுவதுமாகிய உயிரினங் களின் முன்னேற்றம் பற்றிய கொள்கையினின்றே (The Theory of Evolution) மக்கள் சமுதாயத்தின் முன்னேற்றம் பற்றிய கருத்தும் தோன்றுகிறது. உலகில் அறிவிலும் இயக்கத்திலும் குறைந்த சிற்று யிர்களே முன் தோன்றின எனவும் அவற்றிலிருந்து தோன்றி உயிரினங்கள் சிறிது சிறிதாக முன்னேறிப் பல்வகை ஊர்வன, பறப்பன, விலங்குகள் ஆகியவையாய்ப் பிரிந்தன என்றும் இறுதியில் மக்கள் தோன்றினர் என்றும் அவ்வறிவியலறிஞர் கருதினர். அம் முன்னேற்றம் மக்களினத்திலும் தொடர்ந்து நடந்துகொண்டிருக் கிறது, இறுதியில் மக்கள் சமுதாயம் மிகஉயர்நிலையை யடையும் எனப் பலர் கருதலாயினர்.

சமுதாயம் நல்லியல்பை யுடையது எனக் கூறிய மேனாட்டுச் சமூகவியலறிஞர் டார்கீம் (Durkheim) சமுதாயம் தீமையை விலக்கி நன்மையை யாதரிக்கும் இயல்பை யுடையது ஆகையினால் அது தானாகவே முன்னேற்ற மடையவல்லது எனவும் கருதினர். வீபர் (Weber) சமுதாயம் நல்லதா தீயதா எனக் கூறுதற்கில்லை எனவும் காலந்தோறும் மாறுதல்கள் ஏற்படுகின்றன எனினும் அது முன்னேற்றம்தானா எனத் திட்டமாகக் கூறமுடியாது எனவும் உலகில் அறிவியல் வளர்ச்சியும் அதனால் ஏற்படும் ஆக்கங்களும் பெருகுகின்றன எனினும் அவற்றால் இறுதியில் ஏற்படும் பயன் நன்மையானதா அன்றா என்பது இறுதியில்தான் தெரியும் என்றும் கூறினர்.[20]

---

20. Ibid P. 12: "He (Durkheim) believed not only that society is endowed with moral authority, but also that it is the bearer of reform because it is the vehicle of rationality, and he thought moreover, that rationality can have only beneficial effects." Weber's view, P. 17-24

எச். ஜி. வெல்ஸ் (H. G. Wells) என்னும் ஆங்கில அறிஞர், முக்கியமாகத் தம் இளம்வயதில் மக்கள்சமுதாயம் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்ற கருத்தைப் பெரிதும் ஆதரித்தனராம். இக்கருத்தையொட்டியே எதிர்பார்த்தல் (Anticipations) புது உட்டோப்பியா (A Modern Utopia) உருவாகிக் கொண்டிருக்கும் மக்கள் குலம் Mankind in the Making) என்னும் நூல்களை எழுதினரென்பர். ஆயினும் இரு உலகப் போர்களைக் கண்டபின் தாமே இக்கொள்கையைக் குறித்து ஐயுறத் தொடங்கினராம்.[21]

மக்கள் சமுதாயம் ஏதோ ஒருஇலக்கை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறதாயினும் அது விருப்பத்தக்க இலக்கா என்ற கேள்வியை எழுப்புவதற்காகவே அல்டஸ் ஹக்ஸ்லி (Aldous Huxley) புது விரஉலகம் (The Brave New World) என்ற நூலை எழுதினர். அறிவியல் வளர்ச்சியினுலும் பொருள்துறையிலும் அரசியலிலும் ஏற்படும் மாற்றங்களினுலும் சிலவகை முன்னேற்றங்கள் ஏற்படுகின்றன எனினும் மக்கள்சமுதாயம் சில வகைகளில் சில நற்பண்புகளை இழந்து கொண்டும் வருகிறது என அவர் கருதினர்.

இவ்வாறு மேல் நாட்டு அறிஞர்பலர் மக்கள் சமுதாயம் முன்னேறிக் கொண்டிருக்கிறதா என்பதைக் குறித்துப் பலகருத்துக்களைத் தெரிவித்தனர்.

இந்நூற்றுண்டில் நம் நாட்டில் வாழ்ந்த சிறந்த தத்துவ அறிஞராகிய யோகி திரு. அரவிந்தரின் உள்ளத்தையும் இம்முன்னேற்றக் கொள்கை பெரிதும் கவர்ந்தது. அவர் உயிர்மலர்ச்சிக் கொள்கையையும் (The Theory of Evolution) அத்துவைத வேதாந்தத்தையும் இணைத்தார். பிரமம், படைப்பு முழுவதிலும் உயிரற்ற பொருளிலும் (matter) உயிரினத்திலும் (life) சிந்திக்கும்உளம் படைத்த மக்களினத்திலும் (mind) உள்நிற்பதனுல் அனைத்தும் ஒரு சிறந்த இலக்கை நோக்கி முன்னேறுகின்றன. சிந்திக்கும் உள்ளம் வாய்ந்த மக்களினின்றும் மீயுள்ளமும் (supermind) மீமக்களும் (supermen) தோன்றப் பிரமத்தின் இயல்பாகிய உண்மை, யறிவு, பேரின்பம் (சச்சிதானந்தம்) என்னும் தன்மைகளே மக்கள் வாழ்க்கை முழுவதிலும் விரவிநிற்கும் உயர்நிலையைச் சமுதாயம் இறுதியில் அடையும் என அரவிந்தர் கற்பித்தார்.[22]

---

21. Encyclopaedia Brittanica, Vol. 23. Wells, H. G.

22. Sat Prem, Sri Aurobindo or The Adventure of Consciousness. (இந்நூலில் அரவிந்தரின் கருத்துக்களைப் பரவலாகக் காணலாம். புதுவை ஆசிரமத்தாரால் வெளியிடப்பட்ட அரவிந்தரின் நூல்கள் பலவற்றிலும் காணலாம்.)

சமுதாயம் முன்னேறிக்கொண்டிருக்கிறது என்னும் கருத்து குறளில் உண்டா ? சில குறள்கட்கு அவ்வாறு பொருள் கொள்ளலா மாயினும் முன்னேற்றக் கொள்கை குறளில் அவ்வளவு தெளிவாக இல்லை எனலாம்.

தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது (68)

என்ற குறட்குத் தம்மைவிடத் தம்மக்கள் அறிவிற் சிறந்தவராக இருப்பதே யாவர்க்கும் இனிது எனப் பொருள்கொள்ளின் அது முன்னேற்றக் கொள்கைக்கு ஆதரவு தருவதே. மக்கள் யாவரும் தம் பிள்ளைகளைத் தம்மைவிடச் சிறந்த அறிவுடையோராக்க விழைவதே யியல்பாயின், ஒவ்வொரு தலைமுறையும் சென்ற தலைமுறையைவிட அதிக அறிவைப் பெறுமாயின் சமுதாயம் முன்னேறிவருதல் இயல்பே. அது இனிது என வள்ளுவர் கூறினரேயன்றி எப்போதும் அவ்வாறு அமைகிறது என அவர் கூறவில்லை.

கா. அப்பாத்துரை தம் மணிவிளக்கவுரையில் வேறு சில குறள்கட்கும் உயிர்மலர்ச்சிக் கொள்கை, சமுதாயம் முன்னேறிக்கொண்டிருக்கிறது என்ற கொள்கைகளைத் தழுவிப் பொருள் கூறினர்.

அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு (73)

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு (75)

இவற்றுள் முதல் குறளுக்கு ஆருயிர் உடம்போடுகூடிப் பிறப்பெடுத்தல் அன்போடு பொருந்தி வாழ்வதற்காகவே எனப் பொருள்கொள்ளாது உயிரின வளர்ச்சியில் எலும்போடுகூடிய உயிர்களின் தோற்றம் அன்போடு கூடி வாழ்வதற்காகவே என இவ்வுரையாசிரியர் பொருள் கொண்டார். எலும்பில்லாத சிற்றுயிர்கள் அன்போடு கூடி வாழ்தல் இல்லை. எலும்பை யுடைய உயர்உயிரினங்கள் (மக்கள் மட்டுமன்றி விலங்கு பறவை முதலியவைகூட) அன்போடு பொருந்தி வாழ்கின்றன. உயிர் மலர்ச்சியில் எலும்போடு கூடிய உயிர் தோன்றும் நிலை ஏற்பட்ட போதே அன்புப்பிணைப்பும் ஏற்பட்டது என அவர் கொண்டார். அவர் உரை பின்வருமாறு:

“(இனமேலோராகிய உயிர்மலர்ச்சி நூலோர்) அம்மலர்ச்சியால் ஏற்பட்ட இனப் பண்பில் உயர்வுற்றுப் பண்பட்டு, உயர் பண்பாட்டு வளத்தினை எய்திய அருமைப் பாட்டினையுடைய உயர்தர உயிர் இனங்

களுக்கு (அவற்றின் தசையுடம்பு) எலும்புக் கூட்டோடு நீடித்துப் பொருந்தி வளர்ந்துள்ள மலர்ச்சி மரபானது (அவ்வுயர் உயிரினங் களின் இனவாழ்வு) அன்பு என்னும் திறத்தோடு ஒத்து நீடித்து இணைந்து வளர்ந்துள்ள பண்போடியைந்த பண்பு மரபே, என்று கூறுகின்றனர்.''

அவ்வாறே அடுத்த குறளுக்கும் இவ்வுலகத்து இன்புற்று வாழ்ந்தோர் மறுமையிலும் துறக்கத்தில் அடையும் சிறப்பு இவ்வுலகில் அன்போடு பொருந்தி வாழ்ந்ததன் பயனே யாகும் எனக்கொள்ளாது, **கா. அப்பாத்துரை**, மக்களினத்தின் இன்பத்தை நாடி அதற்காக முயலும் சான்றோர் இறுதியில் அடையப்போகும் பேரின்பவெற்றி, மக்களினம் நெடுநாள் அன்போடு கூடி வாழ்ந்த வாழ்க்கையின் பயன் எனப் பொருள்கொண்டார். மக்கள்சமுதாயம் அன்பு முதலிய நற்பண்பு களில் காலப்போக்குடன் முன்னேறிக் கொண்டிருக்கிறதென்றும் இறுதியில் சிறந்தநிலையை யடையுமென்றும் அவர் கருதினர். மனித சமுதாயம் சென்று அடையப்போகும் அந்நல்லிலக்கையே 'நிறை பேரின்ப வெற்றி' என்றார். அவர் உரை வருமாறு :

"(இனமேலோராகிய பண்பியல் நூலோர் ஆகியோர்கள்) 'நிலைபேறுடைய இந்த உலகத்தில் உலக இன்ப நாடிப் பாடுபடும் சான்றோர் அடைய இருக்கும் நிறைபேரின்ப வெற்றியானது, மனித இனம் அன்போடு பொருந்தி அதில் நிலைபெற்று நின்று, நீடித்து வளர்ந்த பண்பு மரபு அல்லது பண்பாட்டின் விளைவு' என்று கூறுவார்கள்."

"காதலின்பத்திலிருந்து பிறந்தது அன்பு. அவ்வன்பு மலர்ச் சியால் தோன்றி வளரும் நாகரிகப் பண்பாடு, சான்றோர் தலைமையில் நின்று உலகின் நிறைபேரின்ப நோக்கி முன்னேறும் தன்மை யுடையது."

இவ்வாறு சில குறள்கள் முன்னேற்றக் கொள்கையின்படி பொருள்கொள்ள இடந்தரினும் இவை வேறுவகையிலும் பொருள் கொள்ளப்படுதல் கூடும். பழைய உரையாசிரியர்கள் இக்குறள் தனிப் பட்ட உயிரின் ஆன்மிக முன்னேற்றத்தை அல்லது தனிப்பட்டோர் அன்பு செய்வதனல் அடையும் மறுமைப்பயனைக் குறிப்பதாகக் கொண்டனர். கா. அப்பாத்துரை இவை இனவளர்ச்சியை, இனத்தின் முன்னேற்றத்தைக் குறிப்பதாகக் கொண்டார்.

இன்னும் ஒரு சில குறள்கள் ஓரளவு **அரவிந்தரின்** கொள்கையை வலி செய்வனவாகவும் உள்ளன.

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு (23)

"புண்ணிய பாவத்தின் வழியறிந்து தன்மத்தின் வழிநின்றார் பெருமையினால் உலகம் விளங்கும் என்றவாறு"-பரிதியார் உரை.

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து (353)

அரவிந்தரின் நூல்களைக் கற்றோர்க்கு இக்குறள்கள் அவர் கருத்துக்கள் சிலவற்றை நினைவூட்டும். சான்றோர் சிலரின் தலைமையில் மக்கள் சமுதாயம் இறுதியில் சிறந்தநிலையை யடையும் எனக் கா. அப்பாத்துரை கூறிய கருத்துடனும் பொருந்துவதேயாம். மெய்யுணர்வுபெற்றோர் தலைமையில் மக்கள் சமுதாயம் உயர்நிலையை யடையும் காலம் வரும், அப்பொழுது இவ்வுலக வாழ்வே அமர வாழ்வு (The Life Divine) ஆகும் என்பதே அரவிந்தர் கருத்தாம்.

சிலசில குறள்கள் உலக முன்னேற்ற அல்லது சமுதாய முன்னேற்றக் கொள்கையின்படி பொருள்கொள்ள இடம்தரினும் வள்ளுவர் தாமே அக்கருத்தை யுளத்தில் கொண்டு எழுதினரா என்பது ஐயமே.

## 6.4.3. சமுதாயம் அமைதி நிறைந்ததா, போரும் மாறுபாடும் இயல்பா?

சமுதாயத்தில் போராட்டமும் மாறுபாடும் (conflict) இயல்பானதும் வேண்டப்படுவதுமாகும். போராட்டத்தினாலேயே முன்னேற்றம் ஏற்படும் என்பது கார்ல் மார்க்ஸ் (Karl Marx), லெனின் (Lenin) முதலிய சென்ற நூற்றாண்டிலும் இந்நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த பொதுவுடைமைக் கொள்கையாளரின் கருத்தே யாகும். தொழில் முன்னேற, உற்பத்தியைப் பெருக்கும் முறைகள் வளர, செல்வம் சிலரிடமே திரள்வதும் பலர் வறுமையினால் துன்புறுவதும் இயல்பென்றும் அந்நிலையில் சிலகாலம் செல்ல வறுமையினால் துன்புறுவோர் புரட்சி செய்து நாட்டின் செல்வத்தைப் பொதுவுடைமை ஆக்குவதே இயல்பாகும் எனவும் அவர்கள் கருதினர். அத்தகைய புரட்சி நன்மையே பயக்குமெனவும் பொதுவுடைமை ஏற்பட்டபின் வறுமை நீங்கஅமைதிநிலவும் எனவும் கருதினர்.[23]

23. Ebenstein William, Great Political Tainkers, Plato to the Present, Totalitarian Communism, P. 691-740

வள்ளுவர் காலத்தில் இக்காலத்துத் தொழில்முறைகளும் உற்பத்திப் பெருக்கமும் (அத்துடன் மக்கள்தொகைப் பெருக்கமும்) முதலாளிகட்கும் தொழிலாளர்கட்குமிடையே உள்ள மாறுபாடும் இல்லை. ஆயினும் அக்காலத்திலும் பெருஞ்செல்வர்களும் இருந்தனர். வறியோரும் இருந்தனர். ஆனால் குடிமக்கள் அரசனுக்கு மாருகவோ வறியோர் செல்வர்க்கு மாருகவோ புரட்சி செய்தல் கூடும் என்னும் கருத்து குறளில் இல்லை. வள்ளுவர் காலத்தில் போர் என்பது ஓரரசர்க்கும் பிறஅரசர்க்கும் இடையே நிகழும் போரே இத்தகைய போரையும் வள்ளுவர் விருப்பாமையினலேயே போர் நிகழாது காத்தலே ஏற்றதாம் என இகல் என்னும் அதிகாரத்துள் கூறினர். ஆயினும் தவிர்க்கமுடியாது போரில் ஈடுபட வேண்டிய நிலைமையும் ஏற்படலாம் என எண்ணி அரசன் அதற்கேற்பப் படை யரண் முதலியவற்றையுடையனுய்ப் போர் ஏற்படினும் நாட்டைக் காக்க வல்லனயிருத்தல் வேண்டுமென்ருர். நாட்டில் செல்வர், வறியரென்றே வேறு வகையிலோ வெவ்வேறு வகுப்பாரிடையே ஏற்படும் மாறுபாடு (conflict) வள்ளுவர் காலத்திலிருந்ததா என்பது ஐயமே.

வறுமையை நீக்க வள்ளுவர் காட்டியவழி 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பல்' என்பதே. செல்வர்கள் தம்உடைமையையும் உரிமைகளையும் இழக்க எளிதில் ஒருப்படார் என மார்க்ஸ், லெனின் முதலியோர் ஓர்ந்து கூறிய சமுதாயவியலுண்மையை வள்ளுவர் அறியவில்லையா? செல்வர்பலர் பொருளை ஈட்டுவதிலேயே ஆர்வமுடையோராயிருப்பர், அதைப் பிறர்நலத்துக்குப் பயன்படுத்தார் என்பதையறிந்தே வள்ளுவர் நன்றியில் செல்வம் என்னும் அதிகாரத்தை யெழுதினராதல் வேண்டும். ஆயினும் தம்பொருள் பிறர்க்கே பயன்படுமாறு வாழும் நற்செல்வரை ஒப்புரவு என்னும் அதிகாரம் காட்டுகிறது. வள்ளுவர் காலத்துத் தமிழகத்தில் இருவகைச் செல்வரும் இருந்தனர் போலும்.

பொதுவாக வள்ளுவர் அரசனும் செல்வரும் செய்யும் கொடை முதலிய அறங்களினலும் (மற்றும் நாட்டில் உழவு, தொழில், வாணிகம் முதலியவற்றைப் பெருக்கும் ஆக்கச்செய்கைகளினலும்) வறுமைத் துன்பம் நீங்குதல் வேண்டும் என எதிர்பார்த்தாராயினும், தம் செல்வத்தைச் சிறிதும் பிறர்க்குப் பயன்படுத்தாத தன்னலமிகுந் தோரின் செல்வம் வன்முறையினல் பிறர்க்குப் பயன்படுத்தப்பட வேண்டும் நிலையும் ஏற்படக் கூடும் என்ற கருத்தும் சில குறள்களில் உண்டு.

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கைய ரல்லா தவர்க்கு (1077)

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ் (1078)

வள்ளுவர் வறுமையைத் தீர்ப்பதற்கு வன்முறையை விரும்பாவிடினும் செல்வர் உவந்து முன்வந்து அற்றுர் அழிபசி தீராராயின் வன்முறையினல் தம்செல்வத்தை யிழக்கவும் நேரிடும் என எச்சரித்தார். ருசியப்புரட்சி போன்ற பெரும்புரட்சிகள் வள்ளுவர் அறியாதன எனினும் வள்ளுவர் காலத்தில் ஆறலைகள்வர் முதலியோர் இருந்தனர். வறுமைத் துன்பம் பெருகினல் பலர் கள்வராக மாறி வழிப்பறி செய்தோ பிறவகையிலோ செல்வரின் பொருளைக் கவரும்நிலை ஏற்படல் கூடும் என வள்ளுவர் கருதியிருக்கலாம். வறுமையும் பசியும் சமுதாயத்தில் பெருகி அவை நீக்கப்படாமலிருப்பின் அதனல் ஏதாவது தீமைவிளையும் என்னும் உண்மை பலநாட்டு அறிஞர்களும் உணர்ந்ததே.

பொதுவுடைமை ஏற்பட்டபின் மக்கள் வஞ்சனையின்றியுழைப்பர், யாவரும் தத்தம் ஆற்றலுக்கேற்றவாறு உழைத்து யாவருக்கும் அவரவர் தேவைக்கு ஏற்றவாறு பகிர்ந்தளிப்பர் என லெனின் எதிர் பார்த்தார் (பொதுவுடைமை ஏற்படும்முன் மக்களிடையே விரவும் தன்னலம் பொதுவுடைமை ஏற்பட்டபின் நீங்குமா என்பதும் ஐயமே). பொதுவுடைமையின்றியே இத்தகையதொரு நிலையைத்தான் வள்ளுவர் பின்வரும் குறளில் காட்டினர்.

இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர் (1035)

மக்கள் வஞ்சனையின்றி யுழைத்துப் பெற்ற செல்வத்தால் பிறர் தேவையை நிரப்புவதே சமுதாயத்தை நன்னிலையில் வைத்துக்காக்கும் வழியாகும் என்பதை அவரும் உணர்ந்திருந்தார்.

### 6. 4. 4. திருக்குறள் கூறும் சமுதாயம் திறந்த இயல்பையுடையதா (a society of open relationships) முடிய இயல்பையுடையதா (a society of close relationships)?

சமுதாயத்தில் யார் யார் இன்னஇன்ன தொழிலைச் செய்தல் கூடும் யார் யார் இன்னஇன்ன வாய்ப்புக்களைப் பெறுதல் கூடும் என்பது குறித்துக் கட்டுப்பாடுகள் மிகுந்த நிலைமையே முடிய இயல்பு

(close relationship) எனவும் அத்தகைய கட்டுப்பாடுகள் அற்ற நிலையே திறந்த இயல்பு (open relationship) எனவும் சமூகவியலறிஞர் சிலரால் விளக்கப்படுகின்றது. பெரும்பாலும் சமுதாயத்தில் இரு இயல்புகளும் ஓரளவு கலந்து நிற்றல் இயல்பே.

வள்ளுவர் காலத்தில் தமிழ்நாட்டிலும் வர்ணசாதி வேறுபாடு-கட்கேற்பத் தொழில் முதலியவற்றில் கட்டுப்பாடுகள் ஓரளவு இருந்திருத்தல் கூடும். ஆனால் அவை திருக்குறளில் விளக்கப்படவில்லை. வள்ளுவரும் அறுதொழில்கள் அந்தணர்க்குரியன என்பதை ஏற்றுக் கொண்டார். ஓதுவித்தல் வேட்பித்தல் ஆகியன அவர்க்கே தனியுரிமையாக (monopoly) அக்காலத்திருந்தன எனத் தோன்றும். ஆட்சி அரசனுடையதே. அரசுரிமையும் பரம்பரையுரிமையே. ஆயினும் பிற தொழில்களில் அதிகக்கட்டுப்பாடு இருந்ததா எனத் தெரியவில்லை. உழவு எவரும் செய்தல் கூடும் எனக் கருதப்பட்டதனாலேயே,

இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும் (1040)

என ஆசிரியர் கூறியிருத்தல் வேண்டும். மற்றும் கல்வி கற்பதிலும் செல்வம் சேர்ப்பதிலும் பிறப்புப் பற்றிய அல்லது பிறகாரணம் பற்றிய கட்டுப்பாடு தமிழ்நாட்டில் இருக்கவில்லையென்பது முன்பே விளக்கப் பட்டது. ஒவ்வொருவனும் தன்முயற்சியினாலும் அறிவினாலும் தன் குடியை யுயரச்செய்தல் கூடும் என வள்ளுவர் குடிசெயல்வகையில் கூறுவதும் மற்றும் 'பெருமை முயற்சி தரும்' (611), 'முயற்சி திருவினை ஆக்கும்' (616), 'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கம் உடையா னுழை' (594), 'மாந்தர்தம் உள்ளத் தனைய துயர்வு' (595) என்னும் வரிகளும் திறந்தஇயல்புடைய சமுதாயத்தையே காட்டும். சிலவாய்ப்புக்கள் (வேதமோதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், அரசாட்சி முதலியன) சிலருக்கே உரியன எனினும் சமுதாயத்தில் வேறுபல வாய்ப்புக்கள் பலருக்கும் உரியனவாயிருந்தன எனக் கொள்ளலாம்.

கருமம் செயவொருவன் கைதூவேன் என்னும்
பெருமையிற் பீடுடைய தில் (1021)

என வள்ளுவர் கூறியதும் நாட்டில் குடிமக்கள் பல தொழில்களில் ஈடுபடும் வாய்ப்பு இருந்ததனாலேயே போலும்.

நாட்டிலுள்ள மக்கட்குத் தொழில் செய்தல், கல்வியிலோங்குதல், செல்வம் தேடல், இவற்றினால் சமுதாயத்தில் உயர்வடைதல் ஆகிய

வாய்ப்புக்கள் இருந்ததோடு பிறநாட்டோரும் விரும்பினல் வந்து தங்கி வாழ வாய்ப்பைப் பெறல் வேண்டும் எனவே வள்ளுவர் விரும்பினர்.

> பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
> இறையொருங்கு நேர்வது நாடு (733)

என்ற குறள் இதனைக் காட்டும்.

இக்குறட்கு உரை கூறுங்கால் பரிமேலழகர் "பிறநாடுகள் பொறுத்த பாரமெல்லாம் ஒருங்கே தன்கண் வருங்கால் அவற்றைத் தாங்கி, அதன்மேல் தன்னரசனுக்கு இறைப்பொருள் முழுவதையும் கொடுப்பதே நாடாவது" என்ருர். பின்னும் "பாரங்கள்-மக்கள் தொகுதியும், ஆன், எருமை முதலிய விலங்குத் தொகுதியும். தாங்குதல்-அவை தத்தம் தேயத்துப் பகை வந்திறுத்ததாக, அரசு கோல் கோடிய தாக, உணவின்மையாகுக தன்கண் வந்தால் அவ்வத்தேயங்களைப் போல இனிதிருப்பச் செய்தல்" என விளக்கமும் தந்தார். "பெரும் பொருளால் பெட்டக்க தாகி" (732) என்னும் தொடருக்கும் உரையா சிரியர், மிக்க பொருளுடைமையால் பிறதேயத்தாரும் விரும்பத்தக்க தாய் எனவே பொருள் கொண்டனர். பிறநாட்டவர் விருப்புவது குடியேறுவதற்கோ வாணிபத்திற்கோ இடம் கொடுத்தலினுலேயேயாம்.

கடல் வாணிபத்தை வள்ளுவர் நேரடியாகக் குறிப்பிடாவிடினும் 'கடலோடும் நாவாய்' குறளில் குறிப்பிடப்படுவதால் கடல் வாணிபமும் அக்காலத்து நடைபெற்றுக் கொண்டிருந்தமை புலனுகும். உண்மையில் சிலப்பதிகாரம் புறநானூறு முதலிய நூல்கள் கடல் வாணிபம் நன்கு செழித்தோங்க அயல்நாட்டவர் பலர் தமிழ்நாட்டில் இல்லங்களமைத்து வாழவும் முற்பட்ட நிலையையே காட்டுகின்றன.

வள்ளுவர் காலத்துத் தமிழர்சமுதாயம் பெரிதும் திறந்தஇயல் பையுடையதே. வள்ளுவர் விரும்பியதும் அதுவே.

வள்ளுவர் காலத்தில் பல்வகைக் கல்வி நாட்டில் தழைத்திருந்தது. அது மேன்மேலும் பெருகவேண்டுமெனவும் மக்கள் யாவரும் கல்வியினுலும் கேள்வியினுலும் அறிவு பெற வேண்டுமெனவும் கல்வியை மேலும் அதிகமாகப்பெற, சாந்துணையும் கற்க விழைதல் வேண்டு மெனவும் அவர் விரும்பினர். அக்காலத்து வர்ணசாதி வேறுபாடுகள் தமிழ்நாட்டில் புகத் தொடங்கிவிட்டன; பிறப்பினுல் ஏற்றத்தாழ்வு

பாராட்டும் வழக்கம் ஏற்படத் தொடங்கியது. இந்நிலையில் வள்ளுவர் ஒழுக்கத்தையும் கல்வியையும் வற்புறுத்தி இவையே உண்மையில் உயர்வளிப்பன எனக் காட்டினர். பலவகைத் திறமைகள் தகுதிகள் உடையோர்க்குப் பல்வேறு துறைகளில் ஏற்றமும் மதிப்பும் அளிக்கப்பட்டன. அதையே ஆசிரியரும் ஏற்றுக்கொண்டார். சமுதாயம் பொதுவாக நல்லியல்புடையது எனவே வள்ளுவர் கருதினர். மற்றும் அவர் கண்ட சமுதாயம் பொதுவாக அமைதி யுடையதே. ஆயினும் நாட்டில் வறுமையும் பசியும் ஓங்கச் செல்வர் அவற்றைக் களையாமலிருக்கும் ஒரு நிலை ஏற்படுமாயின் பொதுமக்கள் வன்முறைச் செயல்களிலும் ஈடுபடக் கூடும் என எச்சரித்தார். ஈகை முதலிய அறங்களை ஊக்குவித்தார். மக்கள் பலருக்கும், வெளிநாட்டவர்க்கும்கூடப் பலவித வாய்ப்புக்களை அளிக்கும் நிலையே சமுதாயத்தில் இருந்தது. அதையே அவரும் போற்றினர்.

7

# துறவு

திருக்குறள் இல்லறத்தையும் கூறுகிறது; துறவறத்தையும் கூறுகிறது. வள்ளுவர் விரும்பும் சமுதாயத்தில் இல்லறத்தோரும் இருப்பர்; துறவியரும் இருப்பர்.

பல நாடுகளிலும் பல சமயங்களிலும் பண்டைக் காலத்திலிருந்து துறவறமும் இல்லறத்துடன் போற்றப்பட்டு வந்திருக்கிறது. துறவறம் இல்லாத சமுதாயங்களும் உள. துறவறம் பண்டைக் காலத்தில் சிறப்புற்று வளர்ந்தது கீழ்நாடுகளிலேயே என்பர். கி.மு.விலேயே இந்து பௌத்த சைன சமயங்களில் துறவறம் செழித்தோங்கலாயிற்று. பண்டை அசீரிய கிரேக்க ரோம நாடுகளில் வழிபாடு புரியும் வகுப்பினர் (priests) இருந்தனர். ஆனால் துறவியர் (ascetics, monks) இருந்ததாகத் தெரியவில்லை. ஆயினும் யூதர்களிடையே கிருஸ்துவின் காலத்திற்குச் சிறிது முன்பிருந்தே எஸ்ஸேனர் (Essener) எனப்படும் துறவியர் இருந்தனர். கிருஸ்தவச் சமயத்திலோ துறவற வியக்கம் தோன்றி வளர்ந்தது பிற்காலத்திலேயே; கி.பி. மூன்றும் அல்லது நான்காம் நூற்றுண்டளவிலேயே[1].

துறவிற்குப் பல விளக்கங்களும் உலகில் துறவறம் தோன்றி வளர்ந்ததற்குப் பல காரணங்களும் கூறப்படுகின்றன.

துறவு, சமயத்தோடும் அறத்தோடும் பொருந்தியதும் கடவுளால் வழிநடத்தப்படுவதாகக் கருதப்படுவதுமான செயல் அல்லது செயல்களாகும் எனவும் துறவி தான் கடவுளின் சித்தத்தைச் செய்யும் ஓர்கருவியே என எண்ணுவான் எனவும் வீபர் கூறினர்.

1. Encyclopaedia Brittanica, Vol. 13, P. 687, Monasticism.

அவர் துறவு (asceticism) இருவகைப்படும் என்றார். ஒன்று, உலகை நீத்துக் குடும்பச் சமுதாயத் தொடர்புகளனைத்தையும் விட்டு விலகிப் பொருள் அனைத்தையும் துறந்து அரசியலிலோ கலைகளிலோ காமத்திலோ ஈடுபடாது கடவுளுக்குமட்டும் பணிபுரியும் நிலையாகும். மற்றது உலகிலிருந்தே துறவைக் கடைப்பிடிப்பது. கடவுளால் படைக்கப்பட்டவை யனைத்தும் கடவுளின் கருவிகளே எனக் கருதித் தன் தொழிலின் மூலமாகவும் சிறந்த குடும்ப வாழ்க்கையின் மூலமாகவும் கட்டுப்பாடு நிறைந்த நன்னடத்தை மூலமாகவும் ஒருவன் தன்கடமைகளனைத்தையும் தேவசித்தப்படி செய்து கடவுளுக்குப் பெருமை யளிக்க எண்ணுவதாகும் என வீபர் கூறினார்[2]. கத்தோலிக்கத் துறவறம் முற்கூறப்பட்ட இயல்பை யுடையதெனவும் எதிர்ப்புப்பிரிவை (Protestants) சேர்ந்த கிருஸ்தவருள் தூய்மைக் கோட்பாடுடையோர் (Puritans) பிற்கூறப்பட்ட துறவுமுறையைக் கடைப்பிடித்தனர் எனவும் அவர் கருதினார்.

கீழ் நாடுகளில் பரவியிருந்த துறவறத்தையும் முற்கூறப்பட்ட வகையைச் சேர்ந்ததாகக் கருதலாம். வீபர் கடவுளுடைய சித்தத்தின் படி நடப்பதாக எண்ணியே துறவியர் துறவு பூணுகின்றனர் என்றார். நம் நாட்டில் கடவுள் நம்பிக்கையில்லாத பௌத்த சமயத்திலும் துறவு தோன்றி வளர்ந்தது.

ஒரு நாட்டில் உணவின்மையாலோ அன்னியர் படையெடுப்பினாலோ பிற காரணங்களினாலோ துன்பம் மிகுதியாக இருக்கும் போதே துறவறவியக்கம் பெருகி வளரும் எனச் சிலர் கருதுகின்

2. Freund, Julien, The Sociology of Max Weber, P. 197.

"Asceticism is an ethical and religious activity accompanied by the consciousness that God directs this activity, so that the individual feels himself to be the instrument of the divine will .. ...... Asceticism, further may assume two forms. On the one hand, it takes the form of flight from the world, cutting all ties with family and society, and renunciation of all personal possessions and all political, artistic and erotic interests, so that the individual concerned may be at the service of God alone. This Weber Calls an asceticism that renounces the world (weltablehrende), on the pattern of the Catholic monk. The other form is asceticism practised within the world (innerweltliche) ; like the Puritan, for example, the individual concerned will consider creatures too as instruments of God, and will seek to glorify God through his professional activity, by an exemplary family life, by the strictness of his conduct in every area of life, and by carrying out all his functions as duties willed by God."

றனர்.[3] 'உலகில் யாவும் துன்பமயமே' எனக் கருதிய புத்தர் வாழ்க்கையை நோக்கும் போதும் உரோமப் பேரரசு அழிவுற மேல்நாடுகளில் அமைதியின்மையும் அன்னியர் படையெடுப்பால் அச்சமும் பரவிய காலத்திலேயே கிருஸ்தவத் துறவறவியக்கம் அந்நாடுகளில் தோன்றி வளர்ந்ததை யுன்னும்போதும் இக்கருத்தில் ஓரளவு உண்மையிருப்பதை யுணரலாம். ஆயினும் நம்நாட்டில் செல்வச்செழிப்பு மிக்கிருந்த காலங்களிலும் துறவியர் பலர் இருந்தனர். புத்தரின் கருத்துக்கு மாறாக 'உலகில் யாவும் இன்பமயமே' (சச்சிதானந்தம்—உண்மை அறிவு, ஆனந்தம் என்னும் இயல்பையுடைய பிரமமே எங்கும் நிறைந்துள்ளது) எனக் கருதிய சங்கரரும் துறவியே.

வள்ளுவர் வாழ்க்கையைத் துன்பமயமானது எனக் கருதியவரல்லர். அவர் காலத்து மக்கள் பெருப்பாலும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்ததாகவே தோன்றுகிறது. ஆயினும் அவரும் துறவை ஆதரித்தார்.

உலகிலுள்ள துன்பங்களினின்றும் தப்புவதற்காக மட்டுமன்றி, ஆன்மிகஉயர்வு கருதியும், உலகப்பற்றைத் துறப்பதன் மூலம் கடவுளைக் குறித்த அறிவைப் பெறுதல் கூடும் அல்லது கடவுளுடன் ஐக்கியமடைதல் கூடும் என்ற நம்பிக்கை காரணமாகவும் துறவின் மூலம் (கடவுள் நம்பிக்கையின்றெனினும்) நிலையான வீட்டின்பத்தைப் பெறுதல் கூடும் என்ற கொள்கை காரணமாகவும் மக்கள் துறவு மேற்கொள்ளல் உண்டு. வள்ளுவர் கூறும் துறவின் நோக்கம் நிலையான வீட்டின்பத்தை யடைதலே எனத் தோன்றும்.

மேற்குலத்தோர் (பிராமணர், சத்திரியர், வைசியர்) அனைவருமே வாழ்க்கையின் இறுதியில் துறவு பூணுதல் வேண்டுமென வடமொழித் தர்ம நூல்கள் கூறுகின்றன. மாணவநிலை, இல்வாழ்க்கைநிலை, காடுறை வாழ்க்கை நிலை, துறவுநிலை ஆகிய நான்கும் அந்நூல்களின்படி மேற்குலத்தோர் யாவர்க்கும் உரியனவாகும்.[4] ஆயினும் நடைமுறையில் யாவரும் இந்நான்கு நிலையை ஏற்றுக்கொள்ளவில்லை எனவே வரலாற்றுசிரியர் கூறுகின்றனர் (இல்லம், இல்லறத்தோர் கடமை பார்க்க). வள்ளுவர் இல்லறம், துறவு என்னும் இருநிலைகளைக் குறித்தே எழுதினர். துறவறத்தை யாவரும் வாழ்க்கையின் இறுதியில் கடைப்பிடிக்க வேண்டும் என அவர் கருதவும் இல்லை.

---

3. Oman, John Campbell, The Mystics, Ascetics and Saints of India, P. 7.
4. Prabhu, Pandharinath, H., Hindu Social Organization, P. 14.
Chattopadhyaya, Dr. Sudhakar, Social Life in Ancient India, P. 30.

தவமும் தவமுடையார்க் காகும் அவமதனை
யஃதிலார் மேற்கொள் வது (262)

என்ற குறள் துறவும் தவமும் சிலர்க்கே யுரியன, அவற்றை மேற்கொள்ளத் தகுந்தோர் சிலரே என்ற கருத்தையே தரும். துறவறத்திற்குச் சிறப்பாக உரியது தவம், தவத்தில் ஈடுபடவேண்டியது துறவியரின் கடமை யாகையால், தவம் சிலருக்கே தகும் எனக் கூறப்படத் துறவும் சிலருக்கே தகும் என்பது பெறப்பட்டது.

யாவரும் துறவு மேற்கொள்வது தகுதியற்றதாயினும் துறவியர் எனச் சிலர் இருப்பது நலம், துறவினால் அவர்கள் ஆன்மீகவுயர்வை, அடைகின்றனர், சமுதாயமும் அத்துறவியரால் நலமடைதல் கூடும் எனக் கருதியதனாலேயே ஆசிரியர் துறவறம் என ஓர் அறத்தை வகுத்தார்.

## 7.1. வள்ளுவரால் கூறப்பட்ட துறவியர் யார்?

வள்ளுவரால் கூறப்பட்ட துறவியர் யார், வைதீகச் சமயத்தவரா, பௌத்த சமணசமயத்தவரா அன்றி வேறுவகையினரா என முதற்கண் ஆய்தல் பொருந்தும். மற்றும் அக்காலத் துறவியர் இளமையிலேயே துறவுபூண்டவரா வாழ்க்கையின் கடமைகளனைத்தையும் முடித்து முதுமையில் துறவு பூண்டவரா என்பதும் கருதத்தகும்.

இல்லத்தைவிட்டுப் பிரிந்து செல்லாது இல்லத்திலிருந்தே மனமாசுகளை நீத்தோரே துறவியராவர் எனவும் அவர்க்காகவே வள்ளுவர் துறவறவியலை எழுதினரெனவும் தற்கால அறிஞர் சிலர் கருதுவர்.[5] இது அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை. துறவறவியலில் கூறப்படும் அருளுடைமை, வாய்மை முதலிய பலவறங்கள் இல்லறத்தோர்க்கும் பொருந்து மெனினும் துறவியர் இல்லத்திலிருந்தே மனமாசுகளை நீக்கியோர் அல்லர். இல்லறத்தோர் துறவறத்தோர் என இருவேறு வகுப்பினரை யுளத்திற்கொண்டே வள்ளுவர் இவ்விருவியல்களையும் எழுதினர் எனத் தோன்றும். இல்லத்தை நீத்துப் பொருளனைத்தையும் துறந்து துறவோர்க்குரிய (உடை முதலியவற்றால்) வடிவம் தாங்கியவராய் ஒரு கூட்டத்தினர், அக்காலத்து இருந்தாராதல் வேண்டும்; பலகுறள்கள் மூலம் இதையறியலாம்.

---

5. கலியாண சுந்தர முதலியார், திரு. வி., திருக்குறள் விரிவுரை, அறத்துப்பால் இல்வாழ்க்கை இயல். பக்கம், 410.

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம் (263)

துறந்தார் மனமாசுகளை நீக்கித் தம்இல்லத்திலேயே வசிப்பவராயின் அவர்க்குத் துப்புரவு பிறர் நல்க வேண்டியதில்லை. இங்குத் தாம் இல்லமும் பொருளும் அற்றவராய் முற்றுந் துறந்தவராகிய ஒரு வகுப்பினரும் (துறந்தார்) அவர்க்கு உணவு முதலியவை அளித்து உதவத் தக்க மற்றொரு வகுப்பாரும் (மற்றையவர்கள்-இல்லறத்தார்) குறிப்பிடப்படுகின்றனர்.

கூடாவொழுக்கம் துறவியரை நோக்கியே எழுதப்பட்டது. இதுவும் துறவு வேடம் பூண்ட துறவியர் என்னும் ஒரு வகுப்பினர் இருந்தமையைத் தெளிவாக்கும். இல்லறத்திலிருந்தே மனமாசுகளைத் துறந்து அகப்பற்றற்றவராய் வாழ்வதே துறவு என அழைக்கப்பட்ட-தாயின் நாட்டில் இல்லறத்தோரேயிருப்பர். சிலர் துறவு என்னும் நிலையை யடைந்தவராயும் ஏனையோர் அந்நிலையை யடையாத இல்லறத்தோராயுமிருப்பரேயன்றிப் போலித்துறவியர் இரார். கூடாவொழுக்கம் என்னும் அதிகாரம் எழவும் இடம் இருந்திருக்காதே.

இன்னும்,

இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை (344)

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பு மிகை (345)

தலைப்பட்டார் தீரத் துறந்தார் (348)

என்னும் குறள்களும் இல்லம் பொருள் யாவையும் நீத்து அகத்திலும் புறத்திலும் முற்றத்துறத்தலே இங்குத் துறவு எனக்கொள்ளப்பட்டது என்பதைக் காட்டும்.

வள்ளுவர் காலத்தில் துறவுக்குரிய வடிவத்தை மேற்கொண்டோராய் இல்லமும் பொருளும் அற்றோராய் வாழ்ந்த துறவியர் இருந்தனர் என்பது தெளிவு. இத்துறவியர் யார், எச்சமயக் கொள்கையைப் பின்பற்றுபவர் என்பதே ஆயத்தக்கது. நீத்தோரும் துறவியரும் இருவேறு வகுப்பினர் எனவும் சிலர் கருதுவர்.[6] நீத்தார் பெருமை என்னும் அதிகாரத்திலேயே 'நீத்தார்' 'துறந்தார்' என்ற இரு சொற்களும் ஒரே பொருளில் ஆளப்படுகின்றன.

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று (22)

---

6. அப்பாத்துரை, கா., திருக்குறள் மணிவிளக்கவுரை, இரண்டாம்பகுதி, பக்கம்: 37-38 (குறள் 41 உரை)

என வருவதால் துறவியரே நீத்தார் எனவும் குறிப்பிடப்பட்டனர் எனக் கொள்வது பொருத்தமாகும்.

**வேதநூற்** கல்வி தமிழ்நாட்டில் பரவுதற்கு முன்பே இங்குத் துறவியர் இருந்தனர் எனவும் (வள்ளுவர் காலத்தின் முன்பே வேத நூற்கல்வி தமிழ்நாட்டில் பரவிவிட்டதெனினும்) அப்பழந்தமிழ் மரபில் வந்த துறவியரையே அவர் நீத்தார் எனக் கூறி அவரை யுளத்திற் கொண்டே **துறவறவியலையும்** எழுதினர் எனவும் சிலர் கருதுவர்.[7] இன்னும் **வைதிகச் சமயத்** துறவியரை உளத்திற்கொண்டே எழுதினரெனவும் **பௌத்த சமணத்** துறவியரைக் குறித்தே எழுதினரெனவும் பல வகையாகக் கூறுவர்.

வள்ளுவர் காலத்தில் பல்வகைத் துறவியர் இருந்திருத்தல் வேண்டுமெனப் பிறநூல்களில் வரும் குறிப்புக்களினின்றும் உணரலாம்.

**தொல்காப்பியர்** காலத்திற்கு முன்பே வேதநூற் கல்வி தமிழ் நாட்டில் பரவியிருந்தது. வைதிகத் துறவியரும் இருந்தனர்.

நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய (தொல். பொருள். 625)

எனத் தொல்காப்பியர் அந்தண குலத்தைச் சேர்ந்த துறவியரை யுளத்திற்கொண்டே கூறியிருத்தல் வேண்டும். நூல் அந்தணர் அனைவர்க்கும் உரியதாயினும் கரகமும் முக்கோலும் துறவியர்க் கேற்றனவே. **புறத்திணையியலுள்ளும்** 'நாலிரு வழக்கிற் தாபதப் பக்கமும்' (தொல். பொருள். 75) எனத் துறவியரின் செயல்கள் எட்டைத் தொல் காப்பியர் குறிப்பிட்டார். இவ்வெட்டும் யாவை என மூலத்தில் விளக்கப்படவில்லை. தொல்காப்பியர் குறிப்பிடும் துறவியரும் வேதக் கல்வி தமிழ்நாட்டில் பரவுமுன்னிருந்த பழந்தமிழ்த் துறவியரே எனச் சிலர் கருதுவர்.[8] தாபதரின் அதாவது துறவியரின் எட்டு செயல்கள் அல்லது வழக்கங்கள் எனக் குறிப்பிடப்படுவன **புறப்பொருள்வெண்பா மாலையில்** குறிப்பிடப்பட்ட

நீர்பலகால் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச்
சோர்சடை தாழச் சுடரோம்பி — ஊரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத்து உய்க்கும் வழி (168)

7. Subrahmanian, N., History of Tamil Nad (to A.D. 1336), P. 344.
8. Ibid P. 344.

அதாவது நீரில் பலமுறை மூழ்கல், நிலத்தில் துயிலுதல், தோலுடுத்தல், சடைவளர்த்தல், சுடரோம்புதல், ஊருள் செல்லாதிருத்தல், காட்டில் உள்ள கனி முதலியவற்றையே உண்ணல், கடவுளை வழிபட்டு விருந்தோம்புதல் ஆகியவையாயின் சுடரோம்புதல் குறிப்பிடப்படுவதனுல் அவர் வைதிகத்துறவியரேயாவர். ஆனுல் தொல்காப்பியர் கருதியவை இவைதாமா என்பது தெளிவின்று. சில அறிஞர் கருதுவது போல, வேதநூற்கல்வி தமிழ்நாட்டில் பரவுமுன் தமிழ்நாட்டிலிருந்த துறவியர், அறிஞர், சமயஅறிவும் ஆர்வமும் உடையோர், அக்கல்வி பரவியபின் வேதநூலையும் சுடரோம்புதல் முதலிய வழிபாட்டு முறைகளையும் ஏற்று அவரே அந்தணரும் (துறவறம் பூண்டாராயின்) அந்தணத் துறவியரும் ஆகியிருக்கலாம்.[9]

வைதிகத்துறவியர் (ஆரியராயினும் தமிழரேயாயினும்) பிற சங்க நூல்களிலும் குறிப்பிடப்படுபவரே. முன்பே குறிப்பிடப்பட்ட,

இறைஞ்சுக பெருமநின் சென்னி, சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை யெதிரே (புறம். 6.19-20)

என்ற அடிகளில் குறிப்பிடப்படுபவர் வைதிகத்துறவியரே. முனிவர் என்பதனுல் துறவியர் என்பதும் நான்மறை என்பனுல் வைதிகசமயத்தோர் என்பதும் தெளிவாகும்.

எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேருரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணிர் (கலி. 9)

என்ற அடிகள் **கலித்தொகையில்** காணப்படுவன. மகளைத் தேடிச் சென்ற ஒருதாய் வழியில் கண்ட துறவியரை இவ்வாறு வினவினர்.

இங்குக் குறிப்பிடப்பட்டோரும் அந்தண குலத்தைச் சேர்ந்த வைதிகத்துறவியரே போலும். தொல்காப்பியர் குறிப்பிடும் கரகமும் முக்கோலும் இங்கும் குறிப்பிடப்படுகின்றன. முக்கோல் குறிப்பிடப் படுவதனுல் அத்துறவியர் வைதிக சமயத்தைச் சேர்ந்தோர் எனக் கொள்ளலாம்.

இவ்வாறு **தொல்காப்பியத்திலும்** சங்க நூல்களிலும் குறிப்பிடப் படும் வைதிகத் துறவியர் வள்ளுவர் காலத்திலும் தமிழ்நாட்டில் இருந்தனர் எனக் கொள்ளல் பொருந்தும்.

---

9. Pillai, K. K., Social History of Tamils, Part I, P. 217—219.

தமிழ்நாட்டில் சிற்சில இடங்களில் மலைக் குகைகளில் காணப்படும் பிராமி கல்வெட்டுகளை (Brahmi Inscriptions) ஆய்ந்தோர் கி. மு. இரண்டாம் நூற்றாண்டின் முன்பே பௌத்த சமண சமயத்தைச் சார்ந்த துறவியர் தமிழ்நாட்டில் புகுந்தனர் எனக் கூறுகின்றனர்.[10] சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இக்காவியங்கள் எழுந்த காலத்தில் கவுந்தியடிகள், அறவண அடிகள் போன்ற சமண பௌத்த சமயத்தைச் சேர்ந்த துறவியர் தம் கொள்கைகளை ஆர்வத்துடன் பிரசாரம் செய்து வருவதையும் அச்சமயங்கள் தமிழ்நாட்டில் பெருகி வளர்வதையும் காட்டும். பத்துப்பாட்டில் மதுரைக் காஞ்சி பௌத்தசமணத் துறவியரைக் குறிப்பிடுகின்றது. அத்துறவியர் தங்கும் பள்ளிகள் மதுரையில் இருந்தன எனவும் அச்சமயங்களைச் சார்ந்த இல்லறத்தோர் மனைவி மக்களுடன் மாலை வேளைகளில் அப்பள்ளிகட்குச் சென்று பூவும் புகையும் கொண்டு வழிபாடு செய்வர் எனவும் துறவியர் வழிபாட்டிற்குரிய மலர்களை எளிதிற் பெறும்பொருட்டுச் சமணப்பள்ளியருகில் பூந்தோட்டம் அமைக்கப்பட்டிருந்ததென்றும் அங்குக் கூறப்படுகிறது.[11]

உண்ணா மையின் உயங்கிய மருங்கின்
ஆடாப் படிவத்து ஆன்றோர் போல (அகம். 123. 1-2)

என்னும் அகநானூற்று அடிகளும் உண்ணாநோன்பு மேற்கொள்வதனால் மெலிந்த தோற்றத்தை யுடையவரும் நீராடாதவருமாகிய சமணத் துறவியரையே குறிக்கும் எனச் சில அறிஞர் கொள்வர்.[12]

போதியார், உலோச்சனார் முதலிய சங்கப் புலவர் சிலரின் பெயர்களும் அக்காலத்தில் பௌத்த சமண சமயங்கள் தமிழ்நாட்டில் பரவியிருந்தமையையே காட்டும் என்பர். போதி எனப்படும் அரசமரம் பௌத்தர்களால் புனிதமாகக் கருதப்படுவதனால் போதியார் அச்சமயத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். 'உலோச்' என்பது சமண சமயத்தோரின் வினைமுறை (ritual) களில் ஒன்று எனவும் உலோச்சனார் என்னும் பெயர் அதினின்றே பெறப்பட்டது என்றும் அறிஞர் கருதுகின்றனர்.[13]

---

10. Ibid P. 518 "The Brahmi inscriptions found in the natural caverns of Tamilakam unmistakably reveal that the Jains and Buddhists had entered the Tamil country before 2nd century B. C."

11. பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி, 461 - 467, 475-487.

12. Nilakanta Sastry, K. A., The Sangam Age, P. 77.

13. Pillai, K.K., Social History of Tamils, Part I, P. 520

வள்ளுவர் காலத்தின் முன்பே பௌத்த சமண சமயங்கள் தமிழ் நாட்டில் பரவியிருந்தன என்பதும் அச்சமயங்களைச் சார்ந்த துறவியரும் அவர் காலத்திருந்தனர் என்பதும் உறுதி. ஊன் உண்ணாமை, இன்னாசெய்யாமை முதலிய வள்ளுவரின் கொள்கைகள் சிலவுங்கூடப் பௌத்த சமண சமயங்களின் செல்வாக்கைக் காட்டும்.

வள்ளுவர் **துறவறவியலில்** அது எச்சமயத்தோர்க்குரியது எனக் குறிப்பிடவில்லை. ஆனால் அவர் எத்துறவியரை உளத்திற்கொண்டு அவ்வியலை எழுதினர் என்பது எண்ணத்தக்கதே. வள்ளுவர் துறவியர் தங்கும் பள்ளிகளையோ மடங்களையோ குறிப்பிடவில்லை. சங்கம் அல்லது கழகம் எனத் துறவியர் சேர்ந்தியங்கும் நிறுவனங்களையும் குறிப்பிடவில்லை. துறவியரிடையே ஆசிரிய மாணவத் தொடர்பும் அவ்வளவு தெளிவாகக் குறளில் குறிப்பிடப்படவில்லை. அதே சமயத்தில் பிற நூல்களில் வைதிகத் துறவிகளின் செயல்களில் ஒன்றாகக் கூறப் படும் அனலோம்புதலையும் வள்ளுவர் இவ்வியலில் கூறவில்லை. பொதுவாகவே தம் அறத்தைக் கூறவேண்டும் என விரும்பி ஆசிரியர் குறிப்பிட்ட ஒரு சமயத்திற்குரிய நடைமுறைகளைக் கூறாது விட்டிருத்தல் கூடும்.

துறவியரின் பழக்க வழக்கங்களும் எங்காவது இரண்டொரு குறளிலேயே குறிப்பிடப்படுகின்றன.

> மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
> மறைந்தொழுகு மாந்தர் பலர் (278)

இங்கு நீராடுதல் துறவியர்க்குரிய செயல்களில் ஒன்றாகக் குறிப்பிடப் படுகின்றது. இது 'நீர் பலகால் மூழ்கி' எனப் **புறப்பொருள் வெண்பா** மாலையில் கூறப்படும் துறவியர் வழக்கத்தை ஒத்திருக்கிறதேயன்றிச் சமண சமயத் துறவியரைக் குறித்து இவ்வாறு கூறுதற்கில்லை. அத் துறவியர் நீராடார் எனவே நூல்கள் கூறுகின்றன. மணிமேகலையும் சமணத்துறவியொருவனை 'மண்ணா மேனியன்' எனக் குறிப்பிடுகின்றது (மணி 3. 91).

> மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
> பழித்த தொழித்து விடின் (280)

என்ற குறள் அக்காலத்தில் நீண்ட சடைவளர்த்தோரும் சிகையை முற்றாக நீக்கி மழித்தோரும் துறவியருள் இருந்தனர் என்பதைக் காட்டும். 'மழித்தல்' பௌத்த சமண சமயத்தோர்க்குப் பொருந்து மெனினும் நீட்டல் அவர்க்குப் பொருந்தாது. பௌத்த சமணத்துற

வியர் எக்காலத்திலும் நீண்ட சடை வளர்த்ததாகத் தெரியவில்லை. 'சோர் சடைதாழ' எனப் புறப்பொருள் வெண்பாமாலை கூறுவதற்கேற்பச் சடை வளர்த்தல் வைதிகத்துறவியரின் வழக்கமாகவேயிருந்தது. வைதிகத்துறவியருள்ளும் சிகையை நீக்கி மழித்தோரும் அக்காலத்தில் இருந்திருக்கலாம்.

அக்காலத்து வைதிகத்துறவியர் பெரும்பாலும் அந்தணர் குலத்தைச் சேர்ந்தவரே. அந்தணர், சத்திரியர், வைசியர் ஆகிய மூன்று குலத்தவரும் துறவு பூணுதல் கூடும் என வடமொழித் தரும நூல்கள் கூறுகின்றன.[14]

தமிழ்நாட்டில் வைதிகத்துறவியர் பெரும்பாலும் அந்தணர் குலத்தைச் சேர்ந்தவராகவே யிருந்தனர் எனத் தோன்றுகிறது. 'நான்மறை முனிவர்' என்பது போல அந்தணர்குலத் துறவியரே புறநானூற்றில் பன்முறை குறிக்கப்படுகின்றனர். மதுரைக்காஞ்சியும் பௌத்த சமணப்பள்ளிகட்கு நிகராகச் சிறந்த வேதம் விளங்கப் பாடி அன்பும் அறமுமுடையோராய் வாழ்ந்த அந்தணரின் பள்ளியையும் குறிப்பிடுகின்றது.[15] பள்ளி எனக் குறிப்பிடப்படுவதனால் அது அந்தணர் குலத்தவரும் வைதிகச் சமயத்தவருமாகிய துறவியர் தங்குமிடம் போலும். புறநானூற்றில் தாபத வாகை என்னும் துறையைச் சேர்ந்த இரு செய்யுட்கள் (புறம். 251 – 252) அரச குலத்தைச் சேர்ந்த ஒருவன், இல்லறத்தில் ஈடுபட்டு வாழ்ந்து முதுமை எய்தியபின், துறவு பூண்டு காட்டில் தனித்து வாழ்ந்த திறத்தைக் கூறுகின்றன. ஆயினும் சங்க நூல்களில் குறிப்பிடப்படும் வைதிகத் துறவியர் பெரும்பாலும் அந்தணர் குலத்தவராகவே காணப்படுகின்றனர்.

> அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுக லான் (30)

என நீத்தார் பெருமையுள் துறவியரையே அந்தணர் எனக் கூறிய வள்ளுவர்,

> அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
> நின்றது மன்னவன் கோல் (543)

என்னும் குறளில் அந்தண அதாவது பார்ப்பன குலத்தவரையே அந்தணர் என்றார். அக்காலத்து வைதிகத்துறவியருள் பெரும்பாலோர் பார்ப்பன குலத்தைச் சேர்ந்தவராக இருந்ததும் ஆசிரியர்

14. Chattopadhyaya, Dr. Sudhakar, Social Life in Ancient India, P. 166-171.
15. பத்துப்பாட்டு, மதுரைக் காஞ்சி, 468-474.

இவ்வாறு அந்தணர் என்னும் சொல்லைத் துறவியர்க்கும் பார்ப்பன குலத்தவர்க்கும் பொதுவாக வழங்கியதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். எல்லாவுயிர்களிடத்தும் செவ்விய தண்ணளியை (நேர்மையையும் அருளையும்) பூண்டொழுகுவோரே அந்தணர் என வள்ளுவர் விளக்கம் கூறினாரெனினும் தொல்காப்பியர் காலத்திலிருந்து இச்சொல் ஒரு குலத்தவரை, ஆரியரேயாயினும் தமிழரேயாயினும் வேத மோதுதல் வழிபாடுகளியற்றல் முதலிய சமயச் சார்பான செயல்களைப் புரிந்துவரும் ஒரு குலத்தவரைக் குறிக்கப் பயன்பட்டமை தெளிவு. அவர்களும் அக்காலத்தில் யாவரிடமும் செவ்விய அருளுடையோராய் ஒழுகவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டனர். ஆகவே அந்தணர் என்னும் சொல் அக்குலத்தைக் குறிப்பதாயிற்று. துறவியரையும் அச்சொல் குறித்தது.

வள்ளுவர் **துறவறவியலை** அக்காலத்திருந்த பலவகைத் துறவியர்க்கும் பொதுவாக எழுதியிருக்கலாமெனினும் வைதிகச் சமயத்துறவியரைச் சிறப்பாக உளத்திற்கொண்டு எழுதினரா என எண்ண இடம் உண்டு. வேதக்கல்வி தமிழ்நாட்டில் பரவுதற்கு முன்பே இங்குத் துறவியர் இருந்திருக்கலாமெனினும் வள்ளுவர் காலத்தில் அம்மரபில் வந்தோரும் வேதக் கல்வியையும் ஏற்றுக்கொண்டு வைதிகத் துறவியருடன் ஒன்றியிருத்தல் கூடும். வள்ளுவர் தாமே அம்மரபில் வந்தவராக இருப்பின் அவரும் அக்கல்வியையும் வழிபாடுகளையும் கூட (உயிர்ப் பலி நீங்கலாக) மறுக்காது ஏற்றுக் கொண்டவரே.

## 7.2. துறவியர் வாழ்க்கை

வள்ளுவர் காலத்தில் தமிழ்நாட்டுத் துறவியர் இளமையிலேயே துறவு பூண்டனரா அன்றி இல்லறத்தில் ஈடுபட்டுக் குழந்தைகளைப் பெற்று வளர்த்துத் தம்மக்கள் குடும்பப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின் துறவு பூண்டனரா என்பதைத் தெளிவாகக் காட்டத்தக்க குறிப்புக்கள் குறளில் இல்லை.

> வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபின்
> ஈண்டியற் பால பல (342)

என்ற குறளை நோக்கி வள்ளுவர் இளமையில் துறவு பூணுதலை ஆதரித்தார் எனச் சிலர் கருதுவர். **பரிமேலழகர்** அவ்வாறே பொருள் கொண்டார். "எல்லாப் பொருள்களையுந் துறந்தால் ஒருவர்க்கு

இம்மைக் கண்ணே உளவாம் முறைமையையுடைய இன்பங்கள் பல; அவ்வின்பங்களை வேண்டின் அவற்றைக் காலம் பெறத் துறக்க என்றவாறு" என இக்குறட்குப் பொருள் கூறினர். மேலும் "இளமைக்கண் துறந்தான் அவற்றை நெடுங்கால மெய்துமாகலின் 'உண்டாகத் துறக்க' என்றார்" என விளக்கமும் தந்தார். ஆயினும் 'உண்டாகத் துறக்க' என்பதற்கு மணக்குடவர் "தன்னுடைமை எல்லாவற்றையும் துறக்க" எனவும் பரிதியார் "வேண்டின செல்வமுண்டாயிருக்கத் துறக்க வேணும்" எனவும் காலிங்கர் "உண்மையாகத் துறக்க" எனவும் பொருள் கூறினர். ஆகவே 'வேண்டினுண்டாகத் துறக்க' என்னும் தொடர் இளமையில் துறத்தலையே குறிக்கின்றதா என்பது தெளிவின்று.

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும் (349)

என்னும் குறளுக்கு உரை கூறுங்கால் காலிங்கர் மக்கள் முதலில் இல்லறம் பூண்டு பின் உரிய காலத்தில் அதை நீத்துத் துறவு பூணுதல் இயல்பென்றும் அதுவே மெய்யுணர்வு பெறுதற்கு ஏற்றவழி என்றும் கூறினர். அவர் கூற்று வருமாறு:

"இனி, இவ்வுலகத்து மக்கட் பிறந்தோரில் சிறந்தோராகிய சான்றோர் முன்னர்த் தம்குலத்தியல்பாகிய இல்லறம் இயற்றிப் பின்னர் மற்றதன் பயனாகிய துறவறமியற்றுவதற்கு அதனை முனிந்து நீத்துப் போந்து துறவறமியற்றிய பின்னர் இத்துறவறத்தின் பெரும் பயனாகிய முத்திஇன்பத்து முயன்று அமைதல் இயல்பாதலால் இதன் பின்னரே மெய்யுணர்தல் என்னும் பெயரினன் அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்."

ஊழ் என்னும் அதிகாரத்தில்,

இருவேறு உலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு (374)

என்ற குறளும் ஒருவர் வாழ்க்கையில் மேற்கொள்ளும் இல்லறம் துறவறம் என்னும் இருநிலைகளிலும் நல்லூழினல் பெறத்தக்க பயனைக் குறிப்பதாகக் காலிங்கர் கொண்டார்.

"இரண்டு கூறுபட்டிருக்கும் உலகத்தார் ஊழாம் இயற்கை: எங்ஙனம் எனில் செல்வம் உண்டாதலும் ஒரு நல்லூழின் கூறு; கல்வியால் தெளிந்த நல்லறிவுடையராகலும் மற்றொரு நல்விதிக்கு

அமைந்த கூறு; எனவே முன்னமே இல்லறத்தாராகலும் பின்னும் துறவறமியற்றியவழித் தெளிந்த ஞானத்தாராகலும் என இங்ஙனம் இரண்டு கூறுபடும் என்றவாறு".

இல்லறத்திலிருக்குங்கால் செல்வத்தைத் தருதலும் துறவறத்தில் ஈடுபட்டபின் மெய்யுணர்வு அல்லது ஞானத்தைத் தருதலும் இரண்டும் நல்லூழின் செயலே என்பது காலிங்கர் கருத்துப் போலும். இங்கும் இல்லறத்தில் ஈடுபட்டுப் பின் துறவறம் பூணுதல் ஏற்றது என்ற கருத்துக் காணப்படுகிறது.

உரையாசிரியர்கள் சிற்சில குறள்கட்கு இவ்வாறெல்லாம் பொருள் கூறினர் எனினும் இளமையில் (திருமணம் செய்யாது) துறவு பூணுதல் தக்கதா அல்லது இல்லறத்தையேற்றுப் பின் உரிய காலத்தில் துறவு பூணுதல் ஏற்றதா எனத் திருக்குறள் மூலத்தில் தெளிவாகக் கூறப்படவில்லை. இருவகைத் துறவியரும் வள்ளுவர் காலத்தில் இருந்திருத்தல் கூடும். இருவகைத் துறவில் எதையும் ஆசிரியர் விலக்கவில்லையாகையினால் இரண்டையும் ஏற்றுக்கொண்டார் போலும்.

மக்கள் துறவு பூண்பதன் நோக்கம் யாது? துறவியர்க்குரிய பல அறங்களையும் கூறிய வள்ளுவர் **மெய்யுணர்தல் அவாவறுத்தல்** என்னும் அதிகாரங்களையே **துறவறவியலின்** இறுதியில் வைத்தார். இவையே துறவின் நோக்கம் போலும். இளம் வயதிலேயே மெய்யுணர்விலும் வீடுபேற்றிலும் ஆர்வமுடையோர் இளமையிலேயே துறவு பூணுதல் கூடும். வாழ்க்கையின் கடமைகள் முடிந்தபின் மீதியுள்ள நாட்களை மெய்யுணர்வு பெறும் முயற்சியில் செலவிட விரும்பினோர் முதுமையிலும் துறவு பூண்டிருப்பர். இவ்வாறன்றி வறுமையினாலோ உலக வாழ்வில் ஏற்படும் பிற துன்பங்களினாலோ அலுப்புற்றவர்களும் அது காரணமாகத் துறவு வாழ்க்கையை ஏற்றல் கூடும். இவ்வாறு வாழ்க்கையில் அலுப்புற்றுத் துறவு பூணுதலையும் வள்ளுவர் விலக்காது ஏற்றுக் கொண்டார் என்பதை,

துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியு மெனின் (378)

துப்புர வில்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று (1050)

என்ற குறள்கள் காட்டும். வறுமையால் நுகர்வதற்குரிய பொருள் களில்லாதவர் துறப்பதே தக்கது எனவும் அவர் அவ்வாறு செய்யா மலிருப்பது அவர் துன்பம் அடைதல் வேண்டுமென்னும் ஊழின் நியதியாற் போலும் எனவும் அவர் கூறினர். வறியோர் தம்வறுமையை யெண்ணி வருந்திக் கொண்டிருப்பதை அல்லது பிறரிடம் உள்ள உணவு முதலியவற்றை விழைவதைவிடத் துறப்பதே மேல் என ஆசிரியர் கருதினர்.

இனித் துறவு பூண்டோர் எங்கு எவ்வாறு வாழ்ந்தனர் என்பதும் ஆய்தற்குரியதே. முன்பே எடுத்துக் காட்டப்பட்ட புறப் பொருள் வெண்பாமாலையில் கூறப்பட்ட துறவியர் ஊருக்குள் புகாது காட்டிலேயே வாழ்வர் எனத் தெரிகிறது. அவர் தோலை யாடை யாகக் கொண்டு காட்டில் கிடைக்கும் பழம் கிழங்கு முதலியவற்றையே உண்பர். இதுவே தொல்காப்பியர் கருத்துமாயின் இவ்வியல்புகள் தொல்காப்பியர் காலத்துத் துறவியரிடம் காணப்பட்டவையாக இருக் கலாம். புறப்பொருள் வெண்பாமாலையாசிரியர் பழைய மரபைப் பின்- பற்றி எழுதியிருத்தல் கூடும்.

புறநானூற்றில் வரும் தாபதவாகைத் துறையைச் சேர்ந்த இரு செய்யுட்களும்கூடக் காட்டில் வாழும் ஒரு துறவியின் வாழ்க்கையையே காட்டுகின்றன. அத்துறவி அருவியில் நீராடிக் காட்டு யானைகளினால் கொண்டு வரப்பட்ட விறகைக் கொண்டு தீவளர்ப்பதாகவும் உணவின் பொருட்டுக் காட்டில் கிடைக்கும் சிலவகை இலைகளைக் கொய்வதாகவும் அங்குக் கூறப்படுகிறது (புறம். 251, 252).

மதுரைக் காஞ்சி அந்தணர் பள்ளியைக் குறிப்பிடுகின்றது.

சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து
நிலம்அமர் வையத்து ஒருதா மாகி
உயர்நிலை உலகம் இவண்நின் றெய்தும்
அறநெறி பிழையா அன்புடை நெஞ்சின்
பெரியோர் மேஎய் இனிதின் உறையும்
குன்றுகுயின் றன்ன அந்தணர் பள்ளியும் (468-474)

என அது புனைந்துரைக்கப்படுகிறது. இங்கு 'ஒரு தாமாகி, யுயர்நிலை யுலகம் இவணின் றெய்தும் அறநெறி பிழையா அன்புடை நெஞ்சிற் பெரியோர்' என்னும் தொடர்க்கு "ஒன்றுகிய இறை தாங்களேயாய் உயர்ந்த நிலையினையுடைய வீட்டுலகத்தை இவ்வுலகிலே நின்றே

சேரும் அறத்தின் வழி ஒருகாலமும் தப்பாது பல்லுயிர்களிடத்தும் பரந்துபட்டுச் செல்லும் அருள் நிரம்பிய நெஞ்சினையுடைய பெரியோர்'' எனத் திரு. பொ. வே. சோமசுந்தரனுர் உரை கூறினர். இது நச்சினர்க்கினியர் உரையைத் தழுவி எழுதப்பட்டதே. பள்ளியில் உறைவோர் இறையுடன் ஒன்றுபட்டதன்மையை யுடையவர் எனவும் வீட்டுலகத்தை அடையத்தக்கவர் எனவும் கூறப்படுவதால் அவர் துறவியர் எனக்கொள்வதே பொருந்தும். அவ்வாருயின் மதுரைக் காஞ்சி எழுதப்பட்ட காலத்தில் வைதிகத்துறவியர் தங்குதற்குரிய பள்ளி மதுரையில் இருந்திருத்தல் வேண்டும். காட்டில் தனித்து வாழ்வோர், ஊருள் பள்ளிகளில் வதிவோர் ஆகிய இருவகைத் துறவியரும் வைதிக நெறியிலேயே சங்ககாலத்திருந்தனர் போலும். பௌத்த சமணத் துறவியர் ஆண்டில் சிலசில திங்கள் ஊரூராகச் செல்லும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர் எனினும் ஏற்றபோது தங்குவதற்குரிய பள்ளி அல்லது மடங்களும் அவர்கட்கு இருந்தன. மதுரைக்காஞ்சி பௌத்த சமணப்பள்ளிகளைக் குறிப்பிடுகிறது. சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் காவியங்களுள்ளும் அத்தகைய பள்ளிகள் அல்லது துறவியர் தங்கும் இருப்பிடங்களைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. துறவியர் ஊரூராகச் செல்லும் வழக்கத்தையும் இக்காவியங்கள் காட்டுகின்றன. பௌத்த சமண சமயங்கள் தமிழ்நாட்டில் பரவிய பின் அவர்கள் வழக்கத்தைத் தழுவி வைதிக அந்தணரும் துறவியர் தங்குதற்குரிய பள்ளிகளை அமைத்திருத்தல் கூடும்.

வள்ளுவர் காலத்துத் துறவியர் புறப்பொருள் வெண்பாமாலையிலும் புறநானூற்றிலும் கூறப்பட்டது போல முற்றுகக் காட்டில் வாழ்ந்தவராகத் தோன்றவில்லை. அவ்வாறு வாழ்ந்து தோலுடுத்துக் காட்டில் கிடைக்கும் காய்கனியை உண்பவராயின் பிறர் அவர்க்கு உணவு, உடை முதலியவற்றை அளித்து உதவவேண்டிய நிலை இராது. ஆனல் வள்ளுவரோ இல்வாழ்வார் துறந்தார்க்குத் துணையாக நின்று உதவுதல் வேண்டுமென இல்வாழ்க்கையில் கூறியதுடன்,

> துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
> மற்றை யவர்கள் தவம் (263)

எனத் திரும்பவும் சொல்லி, துறந்தார்க்கு வேண்டிய உணவு முதலியவற்றை அளிப்பது மற்றையோர் கடன் என்பதை வலியுறுத்தினர். ஆகவே அவர் கூறும் துறவியர் ஊருள் வாழ்ந்தனர் ஆதல் வேண்டும். ஆயினும் பள்ளிகள் மடங்கள் ஆகியவற்றைப் பற்றிய குறிப்பு எதுவும் குறளில் இல்லை.

ஒற்றர்களைக் குறித்துக்கூறுங்கால் வள்ளுவர் அவர் 'துறந்தார் படிவத்தாராகி'ச் (586) செல்லுதல் கூடும் என்றமையால் துறவியர் ஊரூராகச் செல்லும் வழக்கம், தம் நாடுவிட்டுப் பிறநாடுகட்கும் செல்லும் வழக்கம் இருந்ததென்பது தெளிவாகும். அவ்வழக்கம் இருந்ததனுலேயே ஒற்றன் துறவி வேடத்தில் பிறநாடு சென்று பிறர் ஐயுருதவாறு தங்க ஏதுவாயிற்று.

வள்ளுவரால் கூறப்படும் துறவியர் முழுதும் தனித்து வாழ்ந்தவர் அல்லர் என்பதைத் துறவறவியலில் சொல்லப்படும் அறங்களாலும் அறியலாம் காட்டில் தனித்து வாழும் துறவியர்க்குக் களவு செய்யும் வாய்ப்பே இல்லை. அவர்க்குக் கள்ளாமை கூறப்பட வேண்டியதில்லை. ஊருள் வாழும் துறவியரே களவு செய்வதில் ஈடுபடலாகாது என எச்சரிக்கப்படவேண்டியவர். கூடாவொழுக்கத்தில் சில போலித் துறவியர் துறவு வேடத்தில் மறைந்துகொண்டு பலதவருன செயல்களைச் செய்தனர் எனவும் கூறப்படுகிறது. காட்டில் தனித்து வாழ்பவராயின் பிறரை ஏமாற்றவோ எத்தவற்றையும் செய்யவோ வழியுமில்லை. இதுவும் துறவியர் நாட்டில் வாழ்ந்த நிலையையே காட்டுகிறது. துறவியர் தனித்து வாழாது பிறரொடு தொடர்புகொள்ளும் நிலை இருந்ததனுலேயே வாய்மை, வெகுளாமை ஆகிய அறங்களும் கூறப்படுகின்றன. பிறருடன் பேசும்போதே வாய்மையைக் கடைப்பிடித்தல் வேண்டும். பிறரொடு பழகும்போதே பிறரால் தனக்கு இடையூறு நேரின் வெகுட்சி தோன்றுதல் கூடும். அந்நிலையிலேயே வெகுளாமை என்னும் அறம் தேவைப்படுகிறது.

ஆகவே வள்ளுவர் உளத்துட் கொண்ட துறவியர் பெரும்பாலும் ஊருள் (ஊரூராகச் சென்றோ மடங்களில் தங்கியோ) வாழ்பவரே எனவும் பிற இல்லறத்தாருடனே துறவியருடனே தொடர்புடையவரே எனவும் கொள்ளலாம்.

## 7.3. அவாியல்பும் கடனும்

துறவியர் அனைத்துயிர்க்கும் அருள் பூண்டொழுகுதல் வேண்டும் என வள்ளுவர் எதிர்பார்த்தார். ஊன் உண்ணல் ஆகாது. பொருளில் அவா அற்றவர்களாக இருத்தல் வேண்டும். களவைக் கருதுதலும் ஆகாது. வாய்மையை எப்பொழுதும் கைக்கொள்ளுதல் வேண்டும். ஆனல் நிகழ்ந்ததை அவ்வாறே கூறுவதை மட்டும் வள்ளுவர் வாய்மையாகக் கருதவில்லை. அதையும் யார்க்கும் தீமை

ஏற்படாத வகையில் கூறவேண்டும். நிகழாததொன்றைக் கூறுவதனல் பிறர்க்குக் குற்றமற்ற நன்மை ஏற்படுமாயின் அத்தகைய பொய்யையும் கூறலாம் என்ருர்.

> பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கு மெனின் (292)

இக்குறளை விளக்குங்கால் பரிமேலழகர் ஓருயிரைக் காப்பாற்றுவதற்காகப் பொய் கூறவேண்டியிருப்பின் கூறலாம் என்ருர். அத்தகைய தொருசூழ்நிலையினைத் தவிரப்பிறவிடத்துத் தன்னெஞ்சறிவதுபொய்த்தலாகாது. வள்ளுவர் வாய்மையை மிகவும் போற்றினுரெனினும் அருளுடைமைக்கே அதைவிட ஏற்றத்தை யளித்தனர் எனத் தோன்றும்.

பொறையுடைமை இல்லறவியலிலும் கூறப்பட்டதெனினும் அதைத் துறவியரிடம் இன்னும் அதிக அளவில் வள்ளுவர் எதிர்பார்த்தார். வெகுளாமை, இன்னுசெய்யாமை, கொல்லாமை என்னும் அதிகாரங்களில் வரும் குறள்கள் இதைக் காட்டும். பிறர் தனக்கு எவ்வகைத்துன்பத்தைச் செய்யினும் துறவி வெகுள்தல் ஆகாது. பிறருக்கு மட்டுமன்றிப் பிறவுயிர்களுக்கும்கூட எத்தகைய துன்பத்தையும் செய்தலாகாது. தன்னுயிர் போவதாக இருப்பினும் பிறவுயிர் எதையும் கொல்லுதல் ஆகாது.

> தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
> தின்னுயிர் நீக்கும் வினை (327)

துறவி தற்பாதுகாப்பிற்காகவும் கொடியவிலங்கையோ பாம்பையோ கூடக் கொல்லான் போலும்.

இவ்வறங்கள் இல்லறத்தோரும் கடைப்பிடிக்கத்தக்கனவே (அறங்கள் பார்க்க). இல்லறத்தோர் இவற்றை முற்ற முடியக் கடைப்பிடிக்க இயலாதவர்களாய் ஓரளவே மேற்கொள்ளினும் துறவியர் இவற்றைத் தவருது கடைப்பிடித்தல் வேண்டும் என்பதே ஆசிரியர் கருத்தெனத் தோன்றும்.

தவம், உள்ளத்துறவு, நிலையாமையை யுணர்தல், மெய்யுணர்வு பெறுதல், அவாவறுத்தல் ஆகியவை துறவியர்க்கேயுரிய சிறப்பான அறங்கள் அல்லது செயல்கள் எனக் கருதலாம்.

தவம் என்பதற்கு வள்ளுவர் கொண்ட பொருள் யாது?

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு (261)

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு (267)

என்னும் குறள் பொறுமையுடன் துன்பத்தைத் தாங்குதல் தவத்தின் முக்கிய பங்காகும் என எண்ணச் செய்யும். துறவி பிறவுயிர்க்குத் துன்பஞ்செய்தலாகாது என்பது அருளுடைமை, இன்னுசெய்யாமை முதலிய பிற பகுதிகளிலும் கூறப்படுவதே. துறவி தாங்க வேண்டிய துன்பம் எத்தகையது என்பது மூலத்தில் தெளிவாகக் கூறப்படவில்லை.

"அஃதாவது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உண்டி சுருக்கலும் கோடைக்கண் வெயில்நிலைநிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்ருல் தம்முயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்துப் பிற உயிர்களை ஓம்புதல்" எனப் பரிமேழலகர் தவத்திற்கு இலக்கணம் கூறினர். ஆயினும் கோடைக்கண் வெயில் நிலைநிற்றல் மாரியில் நீர் நிலை நிற்றல் ஆகியவை குறளில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. துறவியரைக் குறித்த புறப்பொருள் வெண்பாமாலைச் செய்யுளுள்ளும் புறநானூற்றில் வரும் தாபத வாகைச் செய்யுள்களுள்ளுங்கூட இவை குறிப்பிடப்படவில்லை. காட்டில் கிடைத்தவற்றையுண்டு எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டு உடலின் தூய்மையின் பொருட்டு நீரில் மூழ்கி நல்லாடை, அணிகலன், மென்மையான படுக்கை முதலியவையின்றி வதிதலையே அவை குறிப்பிடுகின்றன. ஆகவே வள்ளுவரும் இயல்பாக வரும் துன்பங்களைத் தாங்குதல் என்ற கருத்திலேயே 'உற்ற நோய் நோன்றல்' எனக் கூறியிருத்தல் கூடும். இல்லத்தையும் பொருளையும் நீத்த துறவி, ஊரூராகத் திரிபவனுயினும் காட்டிலோ ஊரில் வெளியிடங்களிலோ தங்குபவனுயினும் இயல்பாக வெயில், மழை, குளிர் முதலியவற்ருல் துன்பமுற நேரலாம். பிறமக்களாலோ பிறவுயிர்களாலோ துன்பம் நேரிடினும் துறவி அவர்க்கோ அவ்வுயிர்க்கோ துன்பம் செய்யாமையினுல் அவர் அல்லது அவ்வுயிர்கள் தொடர்ந்து துன்பம் செய்யினும் பொறுத்திருக்க நேரலாம். பொருளற்ற துறவி நோயுறினும் அருளுள்ளபிறர் மருந்து முதலியவையளித்து உதவினுலொழிய நோயினுல் துன்புறவும் நேரலாம். துறவிக்குப் பசிவேளையில் உணவு கிடைக்காதிருத்தலும் கூடும். துறவு வாழ்க்கையில் இவ்வாறு நேரத்தக்க இயல்பாய துன்பங்களைப் பொறுத்தல் வேண்டுமென்பதே கருத்தாதல் கூடும்.

மற்றும் 'ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்' (225), 'உண்ணாது நோற்பார் பெரியர்' (160) என்ற தொடர்கள் குறளில் பிற இடங்களில் காணப்படுவதால் உண்டி சுருக்கலை வள்ளுவர் சிறந்த செயலாகக் கருதினர் எனவும் துறவியர் உண்டி சுருக்கல் அவர்க்கும் உடன்பாடே எனவும் கொள்ளலாம். மணிமேகலை சமண சமயத் துறவியொருவனை 'உண்ணா நோன்பி' (மணி. 3. 102) எனக் குறிப்பிடுகின்றது. பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை ஆவிநன்குடியில் வாழ்ந்த முனிவரை (வைதிகத்துறவியர்) 'என்பெழுந் தியங்கும் யாக்கையர் நன்பகல் பலவுடன் கழிந்த உண்டியர்' (130-131) எனக் குறிப்பிடுகின்றது. சங்க காலத்திலும் சிலப்பதிகார காலத்திலும் பல சமயங்களைச் சேர்ந்த துறவியருள்ளும் உண்டி சுருக்கும் வழக்கம் நடைமுறையில் இருந்தது என்பதை இக்குறிப்புக்களும் காட்டும்.

தவம் செய்வோர் அதீத ஆற்றலைப் பெறுவர் எனப் பண்டைக் காலத்தில் நம்நாட்டில் நிலவிய கருத்து வள்ளுவர்க்கும் இருந்ததெனவே தோன்றும். அவர் 'ஒன்னார்த்தெறலும் உவந்தாரை ஆக்கலும்' 'கூற்றங்குதித்தலும்' 'வேண்டிய வேண்டியாங்கெய்தலும்' தவத்தால் ஆகும் என்றார்.

தவம் செய்பவனைத் 'தன்னுயிர் தானறப் பெற்றான்' (268) எனவும் குறள் குறிப்பிடுகின்றது. இத்தொடர்க்குப் பரிமேலழகர் 'தன் உயிரைத் தனக்கு உரித்தாகப் பெற்றவனை' எனவும் மணக்குடவர் 'தன்னுயிரானது தான் என்று கருதும் கருத்து அறப்பெற்றவனை' எனவும் பொருள் கொண்டனர். 'தன்னுயிர் தானறப் பெற்றானை' என்பது பரிமேலழகர் கருத்துக்கியைய 'முழுவதும் தன் வயத்தனாயவனை' (one who has complete control over oneself) எனப்பொருள்படுமா, மணக்குடவர் கருத்துக்கியையத் தன் தனித்தன்மை பற்றிய உணர்வை இழந்தவனை (one who has lost the sense of one's individuality) எனப் பொருள்படுமா என்பது ஐயமே. வள்ளுவர் காலம் அத்துவைதக் கொள்கைகள் தமிழ்நாட்டில் அவ்வளவு தூரம் பரவுவதற்கு முற்பட்ட காலமாகையால் முன்னதே பொருளாகலாம்.

மெய்யுணர்தலும் அவா வறுத்தலுமே துறவின் முக்கிய நோக்கமாகையினால் யாக்கை, செல்வம் முதலியவற்றின் நிலையாமையைத் துறவியர் என்றும் உளத்துக் கொள்ளுதல் வேண்டும். துறவி ஒருகால் எவ்வாறாயினும் (பிறர் கொடையினாற் போலும்) செல்வம் பெற்றால் அதைப் பேணி வைக்காது நற்செயல்களில் செலவிடல் வேண்டும்.

இவ்வுலக வாழ்வும் நிலையற்றது என உணர்ந்து நாளை வீணாக்காது நல்வினையைச் செய்தல் வேண்டும். ஒருபொழுது தானும் இவ்வுலகில் வாழ்வது கூடுமா அன்று என்பது ஒருவன் அறியமுடியாது. வாழ்வு நிலையற்றது என்பதைத் துறவி நன்குணர்வான். ஆகையினால் வருங் காலத்தில் தான் செய்யப் போவன குறித்து அவன் பலவாறு எண்ணு வதில்லை. மேலும் உயிர்க்கும் உடம்புக்கும் இடையே உள்ள தொடர்பு முட்டைக்கும் அல்லது கூட்டுக்கும் பறவைக்கும் இடையே உள்ள தொடர்பு போன்றதே எனத் துறவி அறிவானாகையினால் இறப்பிற்கு அவன் அஞ்சுவதுமில்லை. மரணத்தை உறக்கத்தைப் போலவே கருதுவான்.

துறவிக்குப் புறத்துறவு அகத்துறவு இரண்டும் வேண்டப் படுவதே என்பது வள்ளுவர் கருத்து. 'இயல்பாகும் நோன்பிற் கொன்றின்மை' (344) 'விடல்வேண்டும் வேண்டிய எல்லாம் ஒருங்கு' (343) என்ற தொடர்கள் துறவி தனக்கெனப் பொருள் ஏதும் அற்ற வனாய் உடைமைகள் யாவற்றையும் துறந்தவனாயிருத்தல் வேண்டும் என்பதைக் காட்டும். மேலும் ஐம்பொறிகளால் நுகரப்படும் பொருள்களை அவன் விரும்புதலாகாது. துறவு நெறியில் மிக முன்னேறியவன் 'யான்' 'எனது' என்னும் எண்ணம் அற்றவனாய் எவ்விதப் பற்றுமில் லாதவனாய் இருப்பான்.

துறவி மெய்ப்பொருள் (நிலையுள்ள பொருள்) எவை, பொய்ப் பொருள் (நிலையற்ற பொருள்) எவை என்பதைப் பிரித்தறிவான். துறவுநிலையில் மேல்நிலையை யடைந்தோர் இத்தகைய மெய்யுணர்வைப் பெற்றிருப்பர் ஆகையினால் அவர்கள் உள்ளத்தில் இன்பமே நிறைந் திருக்கும். இவ்வுலகம் அவர்கட்கு வானுலகு போலிருக்கும் எனலாம். துறவியர் தத்துவ ஆய்வில் ஆர்வம் உடையவராக இருத்தல் வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. ஒவ்வொரு பொருளின் உண்மைத் தன்மையையும் ஆராய்ந்து அறிவதும் துறவியின் கடனாகும்.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (355)

என்றார் வள்ளுவர். கடவுள், உயிர், உலகம் ஆகியவற்றின் உண்மைத் தன்மையை ஆய்ந்து அறிவதில் துறவி அதிக நாட்டம் உடையவனாக இருப்பான் போலும். இத்தகைய மெய்ப்பொருள் ஆய்விற்குக் கல்வியும் துணையாக இருக்க வேண்டும் என்ற ஆசிரியர் கருத்தைக் 'கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார்' (356) என்னும் தொடரால் அறியலாம்.

துறவியர்க்குக் கல்வியறிவும் வேண்டும். இங்குக் கல்வி என்பது சமய நூல்கள் தத்துவநூல்கள் ஆகியவற்றின் கல்வி போலும். 'கற்று' என்பதற்கு 'உபதேசமொழிகளை அனுபவமுடைய தேசிகர்பால் கேட்டு' எனப் பரிமேலழகர் பொருள் கூறினராயினும் துறவியர்க்குரிய கல்வி ஓர் ஆசிரியர்பால் கற்கப்பட வேண்டும் என வள்ளுவர் கூறவில்லை. பரிதியாரும் காலிங்கரும் முறையே 'ஞான சாஸ்திரமே கற்று' எனவும் 'மெய்ப்பொருள் தெரிதற்கு விளங்கிய நூல்களைக் கசடறக் கற்று' எனவும் பொருள் கூறினர். குரு மூலமாகவே கடவுளை யறிய முடியும் எனப் பிற்காலத்து சைவசித்தாந்த நூல்கள் முதலியவற்றில் காணப்படும் கொள்கை வள்ளுவர் காலத்திலேயே இருந்ததா என்பது ஐயமே. துறவி, ஆசிரியர் அல்லது பிற துறவியர் உதவியுடனோ அன்றித் தானாகவோ எவ்வாறாயினும் உரியநூல்களைக் கற்றல் கூடும் எனக் கொள்ளலாம். மெய்ப்பொருளையுணர்ந்தார் திரும்பவும் இவ்வுலகில் பிறவார் என்பதே வள்ளுவர் கொள்கை. மெய்ப்பொருளை யுணர்ந்து பிறப்பறுத்தலே அவர் கருத்துப்படி துறவின் முக்கிய நோக்கமாகும்.

மெய்ப்பொருளை உணர்ந்தவர் அவா அற்றவராகவும் இருப்பர். துறவி வேண்டாமையை விழுச்செல்வமாகக் கொள்வான். எதை யாவது வேண்டினானாயின் பிறவாமையை வேண்டுவான். பிறவற்றை வேண்டான். அவாவற்றோர் உள்ளத்தில் இன்பமே நிறைந்திருக்கும் என்பது ஆசிரியர் கருத்தாதலின் துறவியர் என்றும் மகிழ்ச்சியுடைய வராயிருப்பர் என்பதே அவர் எண்ணமாகும். 'நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் பகையும் உளவோ பிற' (304) என்ற குறளும் துறவியர் இயல்பாக நகையும் உவகையும் உடையவராயிருப்பர் என்ற கருத்தைத் தரும். துறவியர் தமக்கென உடைமை இல்லாதவராய்ப் பற்றற்றவராய் அவாவை நீத்தவராய் ஆயினும் மகிழ்ச்சி நிறைந்த-வராய் வாழவேண்டும் என வள்ளுவர் எதிர்பார்த்தார். பற்றும் அவாவும் இல்லாத துறவி கள்ளாமை, வாய்மை, வெகுளாமை முதலிய அறங்களைக் கைக்கொள்ளல் இயல்பே.

இத்தகைய துறவு வாழ்க்கையினையே வள்ளுவர் தம்நூலில் காட்டினர்.

## 7.4. துறவியரால் சமுதாயம் பெற்ற பயன்

வள்ளுவர் அறங்களனைத்திற்கும் இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் கூறினர். மறுமையில் நம்பிக்கையுடையராய் மக்கள் பெறத் தகும் மறுமைப்பயனில் கருத்துடையராய் இருந்தபோதிலும் சமுதா

யத்தின் நலத்தையும் எப்பொழுதும் உளத்திற்கொண்டார். துறவின் முக்கிய நோக்கம் ஆன்மீக உயர்வே; மெய்யுணர்வு பெற்று அவா வறுத்து வீடுபேறு அடைதலே. ஆயினும் வள்ளுவர் காட்டும் துறவியர் பிறர்க்குத் தொண்டு செய்தற்கும் உரியவரா அவரும் சமுதாயத்திற்குப் பணி புரிந்தனரா என்பது ஆய்தற்குரியதே.

துறவியர் சமயநூல்களைக் கற்றனர். உண்மைத்துறவியர் தன்னலமற்றவராய் வாய்மை வெகுளாமை முதலிய அறங்களைக் கடைப் பிடிப்பவர்களாய் வாழ்வர். அத்தகையோர் பிறர்க்குச் செய்யத்தக்க சிறந்த உதவி சமயநூல்கள் அறநூல்கள் ஆகியவற்றின் பொருளை விரித்துரைத்தல், பிறவகையில் அறிவுரை கூறி நல்வழிப்படுத்துதல் ஆகியவையேயாம். 'இனம்என்னும் ஏமப் புணையைச் சுடும்' (306) என்னும் தொடருக்கு உரை கூறுங்கால் 'இனம் என்றது முற்றத் துறந்து தவஞானங்களால் பெரியாராய்க் கேட்டார்க்கு உறுதி பயக்கும் மொழிகளை இனியவாகச் சொல்லுவாரை' எனப் பரிமேலழகர் விளக்கிச் செல்வதால் துறவியர் ஒருவருக்கொருவர் அறிவுரை கூறி உதவுவர் எனத் தெரிகிறது. துறவியர் நகையும் உவகையும் உடையவரா யிருப்பர் என்ற கருத்தும் அவர் முகமலர்ந்து பிறருடன் உரையாடுவர் என்பதைக் குறிப்பால் உணர்த்தும். துறவியர் ஒருவருக்கொருவர் அறிவுரை கூறி உதவுவது போல இல்லறத்தார்க்கும் உதவுவர் எனக் கொள்ளல் இயல்பே. இல்லறத்தோர் துறவியர்க்கு உணவு முதலியன உதவித் துணையாக இருப்பர் எனக் கூறப்பட்டதால் அவர்களிட மிருந்து இப்பயன்களைப் பெற்றுக் கொண்ட துறவியரும் தம்முடைமை யாகிய சமயநூற் கல்வியினையும் அறக்கருத்துக்களையும் அவர்கட்குப் பகிர்ந்தளித்திருப்பர் எனக் கருதலாம்.

பெரியாரைப் பிழையாமை என்னும் பத்தில் அரசர்கள் முனிவரிடம் அதாவது சிறந்த துறவியரிடம் பிழை செய்தலாகாது எனக் கூறப்படு-வதால் (இப்பத்தில் சில குறள்கள் முனிவரைக் குறிக்கும் என்பது முன்பு விளக்கப்பட்டது. சமுதாயத்தின் பிற இயல்புகள், சமுதாயத்தில் தலைமை பார்க்க.) துறவியர் அரசரைச் சென்று காண்பதும் அவர்க்கு அறிவுரை கூறுதலும்கூட உண்டு எனக் கொள்ளுதல் பொருந்தும். துறவியர்க்கும் அரசர்க்கும் தொடர்பிருப்பதனாலேயே அவரைப் பிழை யாதொழுகல் பின்னவரின் கடனாயிற்று.

துறவியர் அரசர்க்கும் பிறர்க்கும் அறிவுரை கூறியும் சமயநூல் களைக் கற்பித்தும் விரித்துரைத்தும் வந்திருத்தல் கூடும். அவர் அவ்வாறு தம்சொற்களினால் பிறரை நல்வழிப்படுத்த முயலாவிடினும்

கூட உண்மைத் துறவியரின் அருள், பொறை, வாய்மை முதலிய நற்பண்புகள் பிறர்க்குச் சிறந்த முன்மாதிரியாக இருந்திருத்தல் வேண்டும். இதுவே,

இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு (23)

என்ற குறளின் பொருள் போலும். 'பெருமை பிறங்கிற் றுலகு' என்பதற்குத் துறவியர் பெருமையே உலகில் உயர்ந்தது எனவும் அவர் பெருமையால் உலகு விளக்கமுற்றது எனவும் பொருள் கொள்ளலாம். 'இஃது எல்லோராலும் போற்றப்படும்' என்றார் **மணக்குடவர்**. துறவியர் பெருமை உலகில் உயர்ந்தது எனக் கருதுவோர், அவரைப் போற்றுவோர் ஓரளவேனும் அவரைப் பின்பற்ற முயறல் இயல்பே. அவர் பெருமையால் உலகு விளக்கமுற்றது எனப் பொருள்கொள்ளின் துறவியர் தம் முன்மாதிரியால் அறமும் நற்பண்புகளும் உலகமுழுவதும் பரவச் செய்தனர் என்பதே கருத்தாம்.

துறவியர் பிறர்க்குப் பல்வகையிலும் அறிவுரை கூறியமையைப் பிற பழந்தமிழ் நூல்களும் காட்டும். **இந்திரவிழாவின்போது** அறவோர் பள்ளிகளிலும் அறத்தைப் புரக்கும் சாலைகளிலும் மதிற்புறத்தேயுள்ள புண்ணியத்தானங்களிலும் அறத்தின் கூறுபாடுகளை உணர்ந்தோர் மக்கட்கு அறத்தை எடுத்துரைத்தனர் எனச் **சிலப்பதிகாரம்** கூறுகிறது.[16] துறவியர் இருப்பிடங்களே அறவோர் பள்ளி எனக் குறிப்பிடப்படுவதால் அவ்விடங்களில் அறங்கூறியவர்கள் துறவியரேயாதல் வேண்டும். இவ்வாறு விழாக்காலங்களில் திரளான மக்கட்கு அறக் கருத்துக்களை விரித்துரைத்ததுடன் தனித்தனியே வாழ்க்கையின் துன்பங்களால் வாட்டமுற்றோ அறத்தைப் பின்பற்றும் ஆர்வத்தினாலோ தம்மிடம் வந்தவர்க்கும் சமயக்கருத்துக்களையும் அறக்கருத்துக்களையும் துறவியர் விரித்துரைத்தனர் என்பதை **மணிமேகலை** காட்டும். **கோவலன்** இறந்ததைக் கேள்வியுற்றுத் துயர்கொண்ட **மாதவி அறவண அடிகள்**பாற் சென்று தன் துன்பத்தைக் கூற அவர் அவட்கு நால்வகை வாய்மைகளையும் ஐவகைச் சீலத்தையும் விளக்கி அவளுளத்தைத் தேற்றி அறவழிப்படுத்தினர் என அந்நூல் கூறும் (மணி. 2.60-69). தம்மிடம் அறங்கேட்க வந்தோர்க்கு மட்டுமன்றி வழியில் கண்டவர்க்கும்

---

16. சிலப்பதிகாரம் 5 : 179 – 181

"அறவோர் பள்ளியும் அறனோம் படையும்
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்
திறவோ ருரைக்கும் செயல்சிறந் தொருபால்"

துறவியர் நற்கருத்துக்களையே எடுத்துக் கூறினர். மதுரைக்குச் செல்லும் கோவலன் கண்ணகியைக் கண்டு அவர்களுடன் சென்ற காவுந்தி வழியில் கிடக்கத்தக்க அலவன் நந்து முதலியவற்றிற்குத் துன்பம் செய்யாது நடக்குமாறு கூறி உயிர்களிடத்து அருளைக் கற்பித்தார் (சிலம்பு. 10.91-94). கலித்தொகையில் காணப்படும் நிகழ்ச்சியும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். மகள் தன் அன்பைப் பெற்ற தலைவனுடன் உடன்போக்கு மேற்கொள்ள அவளைத் தேடிவந்த தாய், குடையும் கரகமும் முக்கோலும் உடையவர்களாய் வழி நடந்து சென்றுகொண்டிருந்த அந்தணத்துறவியரைக் கண்டு வினவ, அம்மகளையும் அவள் அன்பனையும் முன்பே வழியிற் கண்டிருந்த அத்துறவியர் தாய்க்கு ஆறுதல் கூறி உலகஇயல்பையும் எடுத்துச்சொல்லி உடன்போன மகளுக்கு இடையூறு செய்யலாகாதெனவும் அறிவுரை கூறினர். மலையில் பிறக்கும் சந்தனமும் நீரில் பிறக்கும் முத்தும் யாழின் இன்னிசையும் பிறந்த இடத்திற்குப் பயன்படாது அணிபவர் அல்லது நுகர்பவர்க்கே பயன்படுதல் போல ஒரு பெண்ணும் தான் பிறந்த இல்லத்துக்கன்றிப் பிறனொருவனுக்கே பயன்படத்தக்கவள் என்பதை விளக்கி,

இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறந்தலை பிரியா வாறுமற் றதுவே

என அறிவுரையும் கூறினர் (கலி. 9).

துறவியரை மக்கள் பெரிதும் மதிக்க அவரும் அவர்கட்குப் பல வழிகளிலும் அருள் மொழி வழங்கி நல்வழிப்படுத்திய அக்காலச் சூழ்நிலையில் வள்ளுவர் துறவியர் பெருமையால் உலகு விளக்கமுற்றது எனக் கூறியது பொருத்தமே.

துறவியர் பிற அறங்களைச் செய்தனரா என்பதும் கருதத்தக்கதே. இல்லமும் உடைமையும் அற்ற துறவியர் அறங்களை எவ்விதம் செய்தல் கூடும் என்ற ஐயம் எழலாம். ஆயினும்,

மன்னுயி ரோம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை (244)

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை (322)

என்னும் குறள்கள் துறவியர் தம் ஆன்ம ஈடேற்றத்தை நாடுதல் மட்டுமன்றிப் பிற உயிர்களை ஓம்பும் கடனும் உடையவரே என்பதைக் காட்டும். விருந்தோம்பல் வறியோர்க்கீதல் இல்லறத்தார் கடனாதல்

மட்டுமன்றித் துறவியும் பகுத்துண்ணுதல் வேண்டும். துறவி பிறரால் தனக்கு அளிக்கப்பட்ட உணவைப் பசியோடிருக்கும் பிறருக்கு அல்லது உயிர்கட்குப் பகிர்ந்து அளித்துப் பின் உண்ணுதல் வேண்டும். சென்ற நூற்றாண்டில் தாம் கண்ட அல்லது அறிந்த இந்தியத் துறவியரைக் குறித்து ஒரு நூல் எழுதிய ஆங்கிலேயர் **ஜான் காம்பல் ஓமன் (John Campbell Oman)** ஒருசார் **சீக்கியத் துறவி** யரிடையே தாம் கண்ட ஒரு வழக்கத்தைக் குறிப்பிடுகிறார். அத்துறவி யர்களில் ஒவ்வொருவரும் உணவருந்துமுன் 'உணவு வேண்டிய வர்கள் யாராவது உளரா?' என உரத்துக் கூறி உணவில் பங்கு கொள்ள எவரேனும் முன்வரின் அவர்கட்கு உணவளித்துப் பின்பே உண்பானும்.[17] தமக்குக் கிடைத்த உணவைப் பகிர்ந்துண்ணும் வழக்கம் நம்நாட்டுப் பண்டைத் துறவியரிடையேயும் இருந்தது போலும்.

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றுல்
அற்குப ஆங்கே செயல் (333)

எனவும் **துறவறவியலுள்** கூறப்படுவதால் அரசர் அல்லது செல்வர் துறவியர்க்குப் பொருளளிப்ப அவர்கள் அதைக்கொண்டு அறங்கள் செய்வதுமுண்டு எனக் கருதுதல் கூடும்.

பொருளின்றியும் பிறர்க்கு உதவுதல் கூடுவதே. **கோவலன் கண்ணகியுடன்** மதுரை சென்ற **காவுந்தியடிகள்** அவர்கட்குச் சிறந்த வழித்துணையானார். கோவலன் நீரோ உணவோ தேடிச்செல்லும் போது கண்ணகிக்குத் துணையாகவும் காவலாகவும் இருந்தார். மதுரையை யடைந்தபின் **மாதரியென்னும்** இடைக்குல மாதிடம் கண்ணகியை அடைக்கலமாக ஒப்புவித்து ஆயமும் காவலும் தாயும் ஆகித் தாங்குமாறு வேண்டினர்.

துறவியர் தனியாகவும் பிறர் கொடுத்த பொருளினாலோ உடல் உதவியினாலோ தம்செல்வாக்கைப் பயன்படுத்தியோ பிறருக்கு உதவு தல் கூடும். மடங்கள் சங்கங்கள் தோன்றியபின் துறவியர் பலர் சேர்ந்து அறம் செய்வதற்கும் வாய்ப்புக்கள் ஏற்பட்டன. தெருவில் ஒரு பசுவால் தாக்கப்பட்டுக் காயமுற்ற தன் தந்தையை ஒரு புத்த துறவி தூக்கிச் சென்று புத்தமடத்திற் சேர்த்துக் காப்பாற்றினன் எனச் **சுதமதி மணிமேகலையுள்** கூறுகின்றாள் (5. 58–69). **மணிமேகலை வறியோர்**

17. Oman, John Campbell, The Mystics, Ascetics and Saints of India, P. 200

பலர்க்கு உணவளித்ததாகவும் அக்காவியம் கூறுகிறது. அக்காலத்துப் பௌத்த சங்கத்தைச் சேர்ந்தோர் துன்புற்றோர்க்குப் பல வழிகளிலும் உதவியதையே இக்காவியம் காட்டுகிறது போலும்.

சமணமடங்களில் வாழ்ந்த துறவியர் கல்விப்பணியும் செய்தனர் என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். சமணமடங்களே பள்ளிகள் என அழைக்கப்பட்டனவென்றும் அப்பள்ளியைச் சார்ந்த கூடங்களில் துறவியர் ஊர்ச் சிறுவரைக் கூட்டிக் கல்வி கற்பித்தனரென்றும் இவ் வழக்கத்திலிருந்தே சிறுவர் கல்வி பயிலுமிடத்தைப் பள்ளிக்கூடம் என அழைக்கும் சொல்வழக்கு ஏற்பட்டதென்றும் கூறுவர்.[18]

சிலப்பதிகார காவியத்தை எழுதிய இளங்கோவடிகள் சமணத் துறவி யென்பது உண்மையேயாயின் அக்காவியம் தோன்றிய காலத்துச் சமண மடங்கள் உயர்ந்தகல்வியின் நிலைக்களமாக விளங்கின எனலாம். இளங்கோவடிகள் தம்காவியத்தின் மூலம் அக் காலச் சமுதாயத்தில் இருந்த குறைகளை எடுத்துக்காட்டிச் சில சீர் திருத்தங்களைக் கொண்டுவர முயன்றதும் ஒரு சிறந்த சேவையேயாம். நூல் முழுவதிலும் அவர்தம் அருள் உள்ளமே தெளிவாகப் புலப்படு-கிறது. கதையின் முக்கிய பாத்திரங்களாகிய கோவலன் கண்ணகி மாதவி ஆகிய மூவரின் செயல்கள், சிந்தனைகள், உணர்ச்சிகள் யாவற்றையும் அருளுடன் தீட்டித் தவறான ஒரு சமுதாய அமைப்பினால், சூழ்நிலையின் குறைகளினால் அவர்கள் இடருறுவதைக் காட்டி அவற்றை நீக்க வழியையும் சுட்ட முயன்றார். அக்காலச் சமூக நிலையைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்துப் பொதுமகளிர் எனச் சிலர் இருப்பதே தவறு என உணர்ந்த அவர் அவர்கள் செய்யத்தக்கது யாது என்பதைக் குறித்தும் எண்ணினார். அக்காலச் சூழ்நிலையில் அக்குலத்தில் பிறந்த ஒருத்தியை யாரும் முறைப்படி மணம் செய்ய முன் வரமாட்டார்கள். அவர்கட்கு ஆதரவு யாது? பௌத்த சமண சங்கங்களே குலவேறு பாடின்றி யாவரையும் ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருந்தன. ஆகவே அம்மாதரில் நல்நோக்கமுள்ளோர் துறவுநிலையை யேற்றுப் பிறதுறவியர் ஆதரவையும் துணையையும் பெற்று அறச்செயல்களில் ஈடுபடக் கூடும் என அவர்கட்கு வழி காட்டினார்.

இவ்வாறு வள்ளுவர் காலத்திலும் அதையடுத்த சிலப்பதிகார காலத்திலும் துறவியர் பலர் மன்னுயிரோம்பி அருளாளும் அரும் பண்புடையோராய்த் திகழ்ந்தனர் எனலாம். துறவியர் சில அறச்

18. Pillai, K. K., Social History of Tamils, Part I, P. 520-521

செயல்களைச் செய்வதும் சமயக் கருத்துக்களையும் அறக்கருத்துக்களையும் கற்பிப்பதும் மட்டுமன்றிச் சமூகவியல் அறிஞர்களாகவும் சமூகச் சீர்திருத்த இயக்கத்தைத் தோற்றுவிக்க வல்லவர்களாகவும் கூட விளங்கினர் போலும். அவர் பெருமையால் அக்கால உலகு விளக்கமுற்றது.

## 7. 5. துறவு — அக்காலமும் இக்காலமும்

வள்ளுவர் காலத்தில் துறவு சிறப்பிக்கப்பட்டது. மக்கள் துறவியர்க்குப் பெருமதிப்பளித்தனர். தற்காலத்தில் துறவைக் குறித்துப் பல திறப்பட்ட கருத்துக்கள் உள. துறவறமென ஒன்று வேண்டியதேயில்லை என்பாரும் உளர். "துறவின் மூலம் வீட்டையடைய வேண்டும் என்பது எனக்கில்லை. மகிழ்ச்சியைத் தரும் பல பாசப்பிணிப்புக்களிடையே நான் விடுதலையை உணர்கிறேன்" என வங்க மாகவி இரவீந்திரநாத தாகூர் கூறினர்.[19] காந்தியடிகள் மணம் செய்து இல்லறம் நடத்தி அரசியலிலும் சமூகச்சேவையிலும் ஈடுபட்டுப் பல ஆக்க வேலைகளைச் செய்து இறைவனையடையும்வழி சேவைவழியே (கர்மயோகம்) எனக் காட்டினர். தற்காலத்தில் துறவு நெறியில் நின்று நாட்டிற்குப் பணி செய்த பெருந்தலைவர் சுவாமி விவேகானந்தரே. அரவிந்தர் துறவியரா அல்லரா என்பது தெளிவின்று.

சிலப்பதிகாரம் மணிமேகலை யாகிய காவியங்கள் தோன்றிய காலத்தில் உயர்பண்பும் பேரறிவும் உயிர்களிடத்து அருளுமுள்ள துறவியர் சிலர் இருந்தனர் என்பதை அவை காட்டுகின்றன எனினும் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் பிற்காலத்தில் துறவு தாழ்நிலையையே யடைந்ததாகத் தெரிகிறது. பல்லவர் காலத்திருந்த பக்திக் கவிஞர்கள் துறவை விரும்பவில்லை. அக்காலத் துறவியரில் பலர் உள்ளத்தில் தாழ்மையும் உண்மைத்துறவுமின்றித் தற்பெருமை நிறைந்தவராயும் பிறர் மதிப்பை நாடுபவராயும் உணவில் விருப்புடையவராயுமிருப்பதைத் தேவார ஆசிரியர் எடுத்துக் காட்டினர்.

பாரதம் முழுவதையும் நோக்கும்போது இடைக்காலத்தில் சங்கரர், இராமானுசர், மாத்துவர் ஆகிய தத்துவப் பேராசிரியர்களைப் பின்பற்றியும் பின் இராமானந்தர், சைதன்யர் முதலிய வடநாட்டுப் பக்தர்களைப் பின்பற்றியும் காலந்தோறும் பல துறவறவியக்கங்கள்

---

19. Kripalani, Krishna., **Rabindranath Tagore**, P. 182.
" Deliverence is not for me in renunciation. I feel the embrace of freedom in a thousand bonds of delight."

தோன்றின. இஸ்லாமிய சமயம் நம்நாட்டில் பரவியபின் இஸ்லாமியத் துறவியரும் சீக்கியத் துறவியரும் தோன்றித் துறவியர் திரளில் சேர்ந்தனர். ஒவ்வொரு துறவற இயக்கம் அல்லது துறவியர் நிறுவனமும் தோன்றும்போது ஊக்கமும் செயலார்வமும் நற்பண்புள்ள துறவியர் சிலரின் தலைமையும் உடையதாயிருப்பினும் நாளடைவில் ஆற்றல் குன்றித் தாழ்வடைவதே இயல்பாயிற்று.

சென்ற நூற்றுண்டின் இறுதியில் இந்தியத்துறவியரைக் குறித்து எழுதிய ஜான் காம்பல் ஓமன் அக்காலத் துறவியரில் பெரும்பாலோர் கல்வி யறிவற்றவராயும் வீணேபொழுதைக் கழிப்பவராயுமே இருக்கக் கண்டார். ஒரு சிலரே சமய நூல்களைக் கற்றவராயிருந்தனர். சிலர் தம்உடலைத் தாமே வருத்திக் கொள்ளும் சில செயல்களை மேற்கொள்பவராய் இருந்தனர். ஒரு சில துறவியர் பொதுமக்கட்குச் சமய போதனை செய்ததைத் தவிரப் பொதுவாக அவர்கள் சமூகநலப்பணி-களில் ஈடுபடவில்லை. சமூகத்துக்குப் பயன் தரத்தக்க பணிகளைச் செய்யாமல் பலர் இவ்வாறு துறவில் ஈடுபடுவது சமூகத்திற்கு ஓர் இழப்பே யாகும் என இந்நூலாசிரியரும் அக்கால இந்தியாவின் நிலையை ஆராய்ந்த பிற ஆங்கிலேயரும் கருதியதாகத் தெரிகிறது.

இந்நிலையிலிருந்து துறவியரை (துறவியருட் சிலரை யாவது) சிறந்த சமூகப்பணியாளராகவும் அறிவும் ஆற்றலும் உழைப்பும் உடையவராகவும் சமூகத்திற்கு மிக்க பயனளிப்பவராகவும் மாற்றிய பெருமை சுவாமி விவேகானந்தரையே சாரும். முதலில் உலக பந்தங்கள் அனைத்தையும் விட்டு எத்தொழிலிலும் ஈடுபடாதவராய்ப் பற்றற்ற துறவியாக நிலையான இருப்பிடமுமின்றி ஊரூராகத்திரிந்து இறைவனைத் தியானிப்பதிலேயே பெரும்பொழுதைச் செலவிட விரும்பிய அவர் இந்தியாவின் வடகோடியிலிருந்து தென்குமரியெல்லை வரை பெரும்பாலும் கால்நடையாகவே செலவு மேற்கொண்டு வந்தபோது நாட்டின் பொதுமக்களின் நிலையை நேரில் கண்டு மக்களின் வறுமை, அறியாமை, மூடநம்பிக்கை, தன்னம்பிக்கையும் செயலாற்றலும் இன்மை, சமூகத்தில் காணப்பட்ட சாதிக் கட்டுப்பாடு, விதவையரின் துன்ப வாழ்க்கை முதலிய அனைத்தையும் எண்ணி மிக்க துயருற்றார். பின்தனித் துறவை விட்டுத் தம்ஆசிரியரான இராமகிருஷ்ணபரமஹம்சரைப் பின்பற்றுபவர்களும் தம் உடன்மாணவர்களுமாகிய துறவியரை ஒன்று சேர்த்துப் பொதுமக்களிடையே பொதுக்கல்வியையும் சமயக் கல்வியையும் பரப்புவதற்கும் பிற பல சேவைகளில் ஈடுபடுவதற்கும் ஒரு சங்கத்தை நிறுவ உறுதி பூண்டார்.

சென்ற நூற்றுண்டின் இறுதியிலிருந்து இந்நாள் வரையும் இராமகிருஷ்ண மடத்தோர் செய்து வரும் பணிகள் அனைவரும் அறிந்தவையே. 1897-ஆம் ஆண்டு வங்கத்திலும் பிற பகுதிகளிலும் பரவிய பஞ்சத்தின் போதும் 1898-ஆம் ஆண்டு பரவிய பிளேகு (Plague) நோயின் போதும் சுவாமி விவேகானந்தரும் உடன் பணியாளரும் தம் உடல்நலத்தையும் உயிரையும் பொருட்படுத்தாது துன்புற்றோர்க்கு இரங்கித் துயர் நீக்கிய தொண்டின் திறத்தை அறியாதவர் யார்? பின்பும் இராமகிருஷ்ண மடத்தோர் பல கல்வி நிலையங்களையும் வைத்தியசாலைகளையும் நாட்டின் பலபகுதிகளில் நிறுவியும் தாய்தந்தையற்ற குழந்தைகளை ஆதரித்து வளர்க்கப் பல இடங்களில் அநாதைக் குழந்தைகளில்லங்கள் (orphanages) அமைத்தும் பண்டிகைநாட்கள் முதலிய சில நல்நாட்களில் வறியோர்க்கு உணவளித்தும் மற்றும் பல வகைகளிலும் செய்துவரும் பணிகள் யாவரும் அறிந்தவையே. துவ்வாதார்க்கு இல்வாழ்வார் துணை என வள்ளுவர் கூறியிருப்பப் பல இடங்களில் துவ்வாதார்க்கு இராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்த துறவியரே துணை நிற்கும் நிலை இக்காலத்து ஏற்பட்டது.[20]

கிருஸ்தவ சமயம் நம்நாட்டில் பரவத் தொடங்கிய காலத்திலிருந்து கத்தோலிக்கத் துறவியரும் கல்விப்பணியிலும் பிற பணிகளிலும் ஈடுபட்டு வந்துள்ளனர்.

வள்ளுவர்காலத் துறவையும் தற்காலத் துறவையும் ஒப்பிடும் போது காணப்படும் முக்கிய வேறுபாடு அக்காலத்தில் பற்றின்மைக்கு அழுத்தம் தரப்பட்டது, இக்காலத்திலோ சேவைக்கே அழுத்தம் தரப்படுகிறது என்பதே.

புறப்பொருள் வெண்பாமாலையில் கூறப்பட்ட 'நீர் பலகால் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச் சோர்சடை தாழச் சுடரோம்பி ஊர் அடையாது கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்புதலே' தொல்காப்பியரும் தம் உள்ளத்துக் கொண்ட துறவாயின் தமிழ் நாட்டில் பண்டைத் துறவின் இலக்கணம் புறப்பற்றையும் அகப்பற்றையும் முற்ற நீக்குதலேயன்றிச் சேவையன்று. ஊர் அடையாதிருக்கும் துறவியர் சமூகத்திற்கு எவ்விதச் சேவையும் செய்யுமாறில்லை, தம்மிடம் வரும் விருந்தினர்க்குக் காட்டில் கிடைக்கும் பழங்களையளித்தலைத் தவிரப் பிற மக்கள் திறத்து எவ்விதப் பணியும் புரிய அவர்க்கு வாய்ப்பில்லை.

20. Rolland, Romain, The Life of Swami Vivekananda and the Universal Gospel, Chap. VIII, The Founding of the Ramakrishna Mission. Appendices. Note I, The Ramakrishna Matt and Mission.

ஆயினும் மேலே காட்டப்பட்டபடி வள்ளுவர் காலத்திலேயே இந்நிலைமை ஓரளவு மாறிவிட்டதெனத் தெரிகிறது. வள்ளுவர் அருளையே துறவின் உயிர்நாடியாகக் கொண்டார். மன்னுயிரோம்பி அருளாள்தல் வேண்டுமெனவும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் (இல்லறத்தோர்க்கு மட்டுமன்றித்) துறவியர்க்கும் சிறந்த அறமாகும் எனவும் கற்பித்தார். ஆயினும் துறவு, அவாவறுத்தல், மெய்யுணர்தல் என்பவற்றையும் வற்புறுத்தினர்.

தற்காலத்தில் சிறப்பிக்கப்படுவது அருளே. அவாவின்மை அவ்வளவாகக் கருதப்படுவதன்று. தற்காலத்திலும் பற்றற்றவராய்த் தனித்து வாழும் அல்லது நிலையான இருப்பிடமும் பற்றுக்கோடும் இன்றி ஊரூராகத்திரியும் துறவியரும் உளரெனினும் அருள் கொண்டு பொதுநலப்பணிகளில் ஈடுபடும் துறவியரையே மக்கள் அதிகமாகப் போற்றுகின்றனர்.

தற்காலத்தில் துறவறத்தில் உயர்நிலையில் நின்ற சுவாமி விவேகானந்தர் அருளையே போற்றினர். வறியோரின் துயரைக் கண்டு கண்ணீர் சிந்தினர். 'நான் இந்தியா முழுவதும் சுற்றிப்பார்த்தேன்... ஆயினும் சகோதரரே! அது எனக்கும் பெருந்துன்பத்தையே தந்தது; திரளான பொதுமக்களின் வறுமையையும் துன்பத்தையும் என் கண்களால் கண்டேன்; அப்போது என் கண்ணீரை என்னல் கட்டுப் படுத்த முடியவில்லை; அவர்களின் வறுமையையும் துன்பத்தையும் நீக்க முயலாது வெறும் சமய போதனையை மட்டும் செய்வது வீணே யாகும் என உறுதியாக நம்புகிறேன்' என்று அவர் ஒரு முறை தம் நண்பர்களிடம் கூறினர்.[21]

மற்றொரு முறை கிரிஷ் சந்திர கோஷ் என்ற நண்பருடன் உரையாடிக்கொண்டிருந்த பொழுது, கிரிஷ் சில தினங்களின் முன் அவர்கள் தங்கியிருந்த ஊரிலும் அயலிலும் சில குடும்பங்களில் நடந்த சில துன்ப நிகழ்ச்சிகளை எடுத்துக்கூறி வேதாந்தக் கல்வி அத்துன்பங் களை நீக்குமா என வினவினர். தலை குனிந்த வண்ணம் அவர் கூறிய ஒவ்வொரு நிகழ்ச்சியைக் குறித்தும் கேட்டுக்கொண்டிருந்த சுவாமி விவேகானந்தர், தன் கண்களில் பொங்கிய கண்ணீரை அடக்க முடியாதவராய்க் கைகளால் முகத்தை மறைத்த வண்ணம் அங்கிருந்து எழுந்து சென்றார். இராமகிருஷ்ண மடம் என்னும் நிறுவனம் ஏற்படு வதற்கு முற்பட்ட காலம் அது. சிறிது நேரத்தின்பின் திரும்பி வந்த

21. Ibid P. 33.

விவேகானந்தர், வறுமையினாலும் பிற இன்னல்களாலும் மக்கள் அடையும் துயரம் தம்முள்ளத்தை எவ்வளவு தூரம் புண்ணுறுத்துகிற தென்பதைத் தம்முடனிருந்த சதானந்தர் என்னும் மற்றொரு துறவி யிடம் எடுத்துச் சொல்லித் துன்புறும் சிலருக்காவது உதவும் பொருட்டு ஒரு சிறு நிலையமாவது தொடங்க வேண்டும் என்றார். அதன் பின்பே இராமகிருஷ்ண மடமும் அதன் பல கிளைகளும் தோன்றின.[22]

இத்தகைய அருளுள்ளம் கொண்ட துறவி முற்றிலும் பற்றற்ற வராக இருக்க முடியுமா? விவேகானந்தரிடம் தன்னலம் இல்லை; பொருட்பற்று இல்லை; ஆயினும் தன் நாட்டிலும் நாட்டு மக்களிலும் மிக்க பற்று அல்லது அன்பு அவரிடம் காணப்பட்டது என்றே கூறுதல் வேண்டும். 'முக்தி எனக்கு வேண்டா; என் நாட்டு மக்களை எழுப்பித் தன்னம்பிக்கையுடையவர்களாக்கித் தம் காலில் நின்று பணிபுரிய வல்லவர்களாக்கக் கூடுமானால் நான் அதற்காக மகிழ்ச்சியுடன் ஆயிரம் நரகங்களுக்கும் செல்வேன்' என அவர் பன்முறை கூறியுள்ளார்.[23]

'எனது' என்னும் பற்றினை முற்றிலும் நீக்கினும் நீக்காவிடினும்,

மன்னுயி ரோம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை (244)

என வள்ளுவர் காட்டிய அருளின் உயர்இலக்கிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கியவர் விவேகானந்தரே. பிளேகு நோய் பரவிய இடத்தில் சென்று வாழ்ந்து பணி செய்த போதும் அவர் இம்மையில் உயிரிறுதிக்கு அஞ்சவில்லை. மறுமையில் தம்முயிர்க்கு என்ன நேரும் என்பதைக் குறித்தும் அவர் அஞ்சவில்லை. அருளையே பேணினர்.

தற்காலத்துப் பற்றின்மையைவிட அதிகமாகப் போற்றப் படுவது அருளே. பண்டைத்துறவியர் ஊரடையார்; தற்காலத்தில் இராமகிருஷ்ண மடத்தையும் கத்தோலிக்க மடத்தையும் சேர்ந்த துறவியரோ ஊரை விட்டு நீங்கார். ஊரில் இருந்து சமூகத்தொடு இணைந்து பணிபுரிவதே அவர்கள் நோக்கமாகும். துறவியரை மன்னுயிர் ஓம்பி அருளாளுமாறு பணித்த வள்ளுவர் பிற்காலத்து ஏற்பட்ட இக்கருத்து மாற்றத்திற்கு ஓரளவு அடிகோலினர் எனலாம்.

வள்ளுவர்காலத்திற்கும் தற்காலத்துக்கும் இடையே காணப் படும் மற்றொரு வேறுபாடு பின்வருவது. வள்ளுவர் காலத்தில்

22. Ibid P. 143-145.
23. Ibid P. 138.

இல்லறத்தார் துறவியர் என இருகூட்டத்தார் இருந்தனர். துறவியரே துறவைக் கடைப்பிடித்தற்குரியவர். இல்லறத்தோர் மணம் புரிந்து இல்வாழ்க்கையில் ஈடுபடுதற்கு மட்டுமன்றிப் பொருளீட்டவும் வாழ்க்கையின் பல நலங்களை நுகர்தற்கும் உரியவர். இல்லறத்தோரும் ஓரளவு துறவு மனப்பான்மையைக் கைக்கொள்ள வேண்டும் என்பதோ அவர்கள் அணிகலன்கள் நுகரப்படும் பொருள்கள் முதலியவற்றை நீப்பது சிறப்பென்பதோ வள்ளுவர் கருத்தன்று என்பது முன்பே விளக்கப்பட்டது (இல்லம் பார்க்க).

இந்நூற்றாண்டில் நாட்டின் சிறந்த தலைவராக விளங்கிய **காந்தியடிகள்** மணம் புரிந்து குடும்பத்துடன் வாழ்ந்தவர்; அம்முறையில் அவர் இல்லறத்தோரே. ஆயினும் அவர் துறவி போல வாழ்ந்தார். உணவிலும் உடையிலும் பிற வாழ்க்கை வசதிகளிலும் தேவைக்கு மேல் எதையும் சேர்க்காமலும் பயன்படுத்தாமலும் வாழும் வழக்கத்தை மேற்கொண்டார். இல்லறத்தையும் துறவறத்தையும் இணைத்துக் காட்டியவர் என நாமக்கல் கவிஞர் அவரைப் போற்றினர். குடும்ப வாழ்க்கையில் மட்டுமன்றிப் பொதுவாழ்க்கையின் பல துறைகளிலும் சிறப்பாக அரசியலிலும் சமூகப்பணியிலும் அவர் பங்கு பற்றினர். இவை யாவற்றிலும் வாய்மை, வெகுளாமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை என்னும் அறங்களைச் சிறந்த முறையில் கடைப்பிடித்துக் காட்டியவரும் அவரே. சொந்த வாழ்க்கையில் சிலவகை உணவுப் பொருள்களை உண்ணாமை, சில நாட்களில் சில நோக்கங்களின் பொருட்டு உண்ணாநோன்பு ஆகிய தவமுறைகளையும் பின்பற்றினர். ‘அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை’ (343) என வள்ளுவர் **துறவு** என்னும் பத்தில் கூறியதற்கொப்பத் தம்வாழ்க்கையில் ஐம்புல அடக்கத்தையும் மேற்கொள்ள முயன்றார். ஆயினும் வள்ளுவர் கூறியபடி எல்லாத் தொடர்புகளையும் விட்டொழிக்கவில்லையே. குடும்பத்தோடும் அரசியலோடும் தொடர்பு கொண்டிருந்த அவர்க்கு அதற்கேற்றவாறு வேண்டிய சில பொருள்களும் ஆசிரமத்தில் அமைந்திருந்த எளிமை துலங்கும் இல்லமாயினும் நிலையான இருப்பிடமும் இருந்தனவே. அவர் வள்ளுவர்காலத் துறவிகளைப் போல் வாழவில்லை. ஆயினும் துறவுநெறியை ஓரளவு மேற்கொண்டார்.[24]

இந்நூற்றாண்டில் வாழ்ந்த இந்திய நாட்டின் சிறந்த தத்துவ அறிஞராகிய யோகி திரு. **அரவிந்தரை** நோக்கின் அவர் துறவியா அல்லரா எனக் கூறுதல் அரிது. அரவிந்தரைப் பின்பற்றுவோரில் சிலர் திருமணம் புரியாது பிரமச்சரிய வாழ்க்கை மேற்கொள்ளினும்

24. Sarma. D. S., Renascent Hinduism, Chap. XX, The Ideals of Mahatma Gandhi.

அவர்கள் நிலையான இருப்பிடம் உடையவர்களே. அரவிந்தர் புதுவையில் நிறுவிய ஆசிரமத்தில் நல்ல கட்டிடங்களும், பொதுவாக நம் நாட்டு மத்தியதர வகுப்பினர் பயன்படுத்தத்தக்க வாழ்க்கை வசதிகளும் உள. அங்கு வாழ்வோர் உணவில் சில கட்டுப்பாடுகளை மேற்கொள்ளினும் நல்ல ஊட்டமுள்ள உணவைப் பெறுகின்றனர். பண்டைத் துறவியரைப் போல் முற்றத்துறப்பது அவர்கள் கோட்பாடு அன்று. போதியஉணவு ஏற்றஉறையுள் முதலிய வாய்ப்புக்கள் உள்ள நிலையிலேயே ஆன்மீக முன்னேற்றத்திற்காக முயல வேண்டும் என்பதே அவர்கள் கொள்கை.

இதைக் குறித்த தம் கருத்தை அரவிந்தரின் சீடர்களில் ஒருவராகிய திலிப் குமார் ராய் தம் நூல்களில் ஒன்றில் எடுத்துக் கூறினர். "நாம் உயிர் வாழ்வதற்குக் கடவுள் எவ்வாறாயினும் துணைசெய்வார் என நம்பிக்கொண்டு உள்ளவற்றையெல்லாம் வறியவர்களுக்குக் கொடுத்துவிட்டு ஐயமேற்று உண்டு பண்டைத் துறவியரைப் போல் வாழ்வது தற்கால உலகுக்குப் பொருந்தாது என்பதைச் சிறிது சிறிதாக உணர்ந்தேன். அவ்வாறு செய்தல் பொய்த்தோற்றத்தைப் பின்பற்றுவதாகும் என்று என் உள்ளம் சொல்லிற்று. வாழ்க்கையின் தேவைகளை ஓரளவாவது பெறத்தக்கதும் ஒத்து வாழக் கூடிய சூழ்நிலையுடையதுமாகிய மடம் அல்லது நிறுவனம் ஒருவற்கு வேண்டும்."[25] திலிப்குமார் ராய் ஓர் எழுத்தாளர். ஆங்கிலத்தில் கவிதைகளும் நவீனங்களும் எழுதியுள்ளார். இவ்வாறே பலதுறைகளில் ஈடுபட்டு முயல்வது புதுவை ஆசிரமத்தோரின் வழக்கமாகும். பிறர்க்குப் பயன்படத்தக்க தொழில்நிலையங்களையும் உணவுச்சாலைகள் போன்றவற்றையும் ஆசிரமத்தோர் நடத்தியும் வருகின்றனர். இவ்வாறு ஓரளவு பொருள் வசதியும் ஓரளவு வாய்ப்புக்களையும் உடையராய் ஓரளவு துறவுநெறியையும் மேற்கொள்ளுகின்றனர். மெய்யுணர்வு பெறும் ஆவலுடையோராய்ச் சமயநூல்களை ஆழ்ந்து கற்பதிலும் தியானத்திலும் ஈடுபடுகின்றனர்.[26]

---

25. Roy, Dilip Kumar., Sri Aurobindo Came to me, P. 17.

"I had come to realise, by and by, that in the present world at least, one could not possibly live like the mendicant of old living on calms and trusting to the unseen Providence to help keep our body and soul together, simply 'giving all one had to the poor' and following a phantom as my realist reason called it derisively. One must have an institution or asylum of some sort where one might reasonably hope to live in comparative security in harmony with one's environment."

26. புதுவை அரவிந்தர் ஆசிரமத்தைக் குறித்த செய்திகள் இவ்வாய்வை எழுதும் ஆசிரியர் நேரில் பார்த்து அறிந்தவையே.

பண்டைக் காலத்தில் சிலர் முற்றாகத் துறந்தனர். (அல்லது துறப்பதாக நடிக்கவாவது செய்தனர். சிலர் நடித்ததனாலேயே கூடா வொழுக்கம் என்னும் பத்து தோன்றிற்று.) பிறர் துறவு மேற் கொள்ளவில்லை. துறவியர் குடும்பவாழ்க்கை, பொருள், தொழில் புரியும் வாய்ப்பு முதலிய யாவற்றையுமே துறந்தனர். (துறவியர் சமய நூல்களை மட்டுமன்றிப் பிறநூல்களையும் எழுதுவதும் கற்பதும் பண்டைக் காலத்திலும் இருந்ததே. சிலப்பதிகார ஆசிரியர் ஒரு துறவி என்பது உண்மையாயின் அக்காலத் துறவியர் இலக்கிய அறிவு மிகுந்தோரே. ஆயினும் ஊதியம் தரும் பிற தொழில்களில் அவர்கள் ஈடுபடவில்லை.) 'தலைப்பட்டார் தீரத் துறந்தார்' (348) என்ற குறள் அடி அதையே காட்டும். ஆனால் தற்காலத்திலோ அவ்வாறன்றித் துறவை ஓரளவு கடைப்பிடிப்பது, சில பொருள்களை அல்லது வாய்ப் புக்களை மட்டும் துறப்பது, ஒரு வரம்புக்கு உட்பட்ட துறவு (a limited renunciation) சில சில கூட்டத்தாரால் மேற்கொள்ளப்படுகிறது.

வள்ளுவர் **துறவறவியலில்** கூறிய **அருளுடைமை, கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை** என்னும் அறங்கள் எக்காலத்திற்கும் பொருந்துவனவே. இவை துறவறத்தாரால் மட்டு மன்றி ஏற்ற அளவாவது இல்லறத்தாராலும் கடைப்பிடிக்கப்படத் தக்கனவே என்பது முன்பே விளக்கப்பட்டது (அறங்கள் பார்க்க). துறவியரே இல்லா ஒருநிலை சமூகத்தில் ஏற்படினும் இவ்வறங்கள் நிலைத்திருக்கத்தக்கனவே. ஆயினும் **துறவு, தவம், அவாவறுத்தல்** என்பன இக்காலத்துக்கு எவ்வளவு தூரம் பொருந்தும்?

இக்காலத்திலும் துறவியர் பலர் உள்ளனர். ஆகவே இன்றும் துறவு சிலர் உள்ளத்தைக் கவர்கின்றது எனவே தோன்றும். என்றும் துறவை நாடத்தக்கவர் சிலரே. 'தவமும் தவமுடையார்க் காகும்' (262) என வள்ளுவரும் கூறினர். ஆயினும் வெறுந் துறவை யன்றி இல்வாழ்க்கை முதலிய சிலபிணிப்புக்களைத் துறப்பினும் பிறவகை களில் சமூகத்திற்குப் பணிபுரியும் நிலையையே தற்காலத்தில் துறவை ஆதரிப்போர் விரும்புகின்றனர். இராமகிருஷ்ண மடத்தைச்சேர்ந்த **சுவாமி விபுலானந்தர், கத்தோலிக்கத்** துறவியாகிய அருள் திரு **தனிநாயகம்** முதலியோர் பல்கலைக் கழகங்களில் பேராசிரியர்களாகவும் பணியாற்றி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. இராமகிருஷ்ண மடத்தோரும் பல நூல்களை எழுதியும் வெளியிட்டும் **உபநிடதங்கள்** முதலிய வடமொழிச் சமயநூல்களை மொழிபெயர்த்தும் அவற்றிற்கு உரையெழுதியும் சமய

தத்துவக் கருத்துக்களை விளக்கும் கட்டுரைகளும் பிற பொது அறிவை வளர்க்கும் கட்டுரைகளும் தாங்கி வெளிவரும் வார அல்லது திங்கள் இதழ்களை(journals) வெளியிட்டும் பொதுமக்களின் அறிவைப் பெருக்கி வருகின்றனர். பிற பணிகள் முன்பே குறிப்பிடப்பட்டன.

இனி துறவு எதற்காக, துறவிற்காகவேதானு என்பதும் சிந்திப்பதற்குரியது. பண்டையோர் கருத்துப்படி துறவின் நோக்கம் வீடு பேறடைதலே. துறவியரின் எட்டுச் செயல்கள் அல்லது வழக்கங்களைக் கூறிய புறப்பொருள் வெண்பாமாலை அவற்றை வானகத்துள் உய்க்கும் வழி (புற. வெ. மாலை 168) என்றே கூறிற்று. வள்ளுவர் மன்னுயிர் ஓம்புமாறு அறிவுரை கூறினாராயினும் வீடடைதலே துறவின் இறுதி நோக்கம் எனவே அவரும் கருதினர்.

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி (356)

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை (362)

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும் (370)

அருளுடைமையையும் மறுமைப்பயனுச்கு வழியாகக் கருதியே 'அருளில்லார்க் கவ்வுலக மில்லை' என்ருர். இக்காலத்து விவேகானந்தரோ வீடு பேற்றை முக்கியமாகக் கருதாது அதையும் துறக்கச் சித்தமானுர். பிறர் துயர் நீக்குதலையே பெரும் பேருகக் கருதினர். மக்கள் மேல் வைத்த மிக்க அன்பிஞல் மக்கள் பணியன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினர் விவேகானந்தர்.

இவ்வாறு நடைமுறைகளிலும் நோக்கங்களிலும் சிற்சில வேறுபாடுகளிருப்பினும் இன்றும் துறவு சிலரால் போற்றப்படுவதே.

# 8

## வள்ளுவர் விரும்பும் சமுதாயத்திற்கும் பிற அறிஞர் விரும்பும் சமுதாயத்திற்கும் ஒப்பு

வள்ளுவர் தனிப்பட்டோரின் அறத்தை விளக்கவே தம் நூலை எழுதினர், ஓர்இலக்கியல் சமுதாயத்தைச் சித்திரித்துக் காட்ட முயல வில்லை யென்பது முதல் அத்தியாயத்தில் விளக்கப்பட்டது. ஆயினும் அவர் கூறும் அறங்களை யாவரும் கைப்பிடித்தால் ஓர்இலக்கியல் சமுதாயம் அமையும் என்பதும் அங்குக் கூறப்பட்டதே. வள்ளுவர் விரும்பும் வகையில் ஒரு சமுதாயம் அமையின் அல்லது அத்தகைய ஒரு சமுதாயத்தை நாம் சித்திரித்துப் பார்ப்பின் அதற்கும் வேறு சில அறிஞர் காட்டும் இலக்கியல் சமுதாயத்திற்கும் எத்தகைய ஒற்றுமை வேறுபாடுகள் இருத்தல் கூடும் என்பதை ஆய்வதே இப்பகுதியின் நோக்கமாகும்.

முதலாம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட நூல்களில் பின் வரும் மூன்றே இங்கு ஒப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. 1) பிளேட்டோ எழுதிய அரசு (The Republic) 2) தாமஸ்மூர் எழுதிய உட்டோப்பியா 3) பிரான்சிஸ் பேக்கன் எழுதிய புது அத்லாந்திய நாடு (New Atlantis). ஏனைய நூல்களில் சில தற்போது ஆங்கில மொழியில் கிடைத்தில. சில திருக்குறளுடன் ஒப்பிடுவதற்கு ஏற்றன வாக அமையவில்லை.

எடுத்துக்காட்டாக அல்டஸ் ஹக்ஸ்லி எழுதிய புது வீர உலகம் என்னும் நூல், அறிவியல் முன்னேற்றமும் உலகில் ஏற்பட்டுக் கொண் டிருக்கும் பிற மாறுதல்களும் இப்பொழுது போகின்ற போக்கிலேயே போய்க் கொண்டிருந்தால் இன்னும் பல ஆண்டுகளின் பின் உலகு எந்நிலையில் இருக்கும் என்பதைக் காட்ட முயல்கிறது. ஒரு

நவீனத்தைப் போல் எழுதப்பட்டிருக்கும் இந்நூல் காட்டும் சமுதாயத்தில் இல்லறமும் இல்லை; துறவறமும் இல்லை தனிப்பட்டோர் அறத்திற்கும் இடமே இல்லை. யாவும் அரசாலேயே நிகழ்த்தப்படுகின்றன. தனிப்பட்டோர் உரிமையற்றவர்களாய் ஆள்வோர் விரும்பியபடியே தொழில் செய்தும் அவர் விரும்பும் பொழுதுபோக்குகளிலேயே ஈடுபட்டும் அவர் விதித்த முறைப்படியே வாழ்கின்றனர். ஆயினும் தாம் உரிமையுடன் வாழ்வதாக எண்ணிக்கொள்கின்றனர். ஏனெனில் அவர்கள் கருவாகி வளர்ச்சியுறுங் காலத்திலிருந்தே (அவ்வுலகில் குழந்தைகளும் ஆராய்ச்சி நிலையங்களிலேயே உருவாக்கப்படுகின்றன; கரு வளர்ச்சியும் செயற்கைமுறையில் நிகழ்த்தப்படுகிறது;) உளவியல் வல்லுநர்களாலும் பிற அறிவியல் வல்லுநர்களாலும் அத்தகைய வாழ்க்கையை விரும்புமாறு பயிற்றப்படுகின்றனர். அவ்வுலக மக்கள் சிந்தித்து எண்ணி நிச்சயித்துச் செய்வது எதுவுமில்லை. ஆள்வோர் விதித்த வழியிலேயே செல்கின்றனர். அங்கு அறம் எது அறமற்றது எது என ஆய வழியே இல்லை. ஆசிரியர் ஹக்ஸ்லி இதை விரும்பத்தக்க இலக்காகக் கருதாது உலகு இத்தகைய நிலையை யடையாமல் காக்க வேண்டும் என எச்சரிக்கவே விரும்புகிறார்.

ஹக்ஸ்லி தம் நூலின் பிற்பகுதியாகிய **புதுவீர உலகைத் திரும்பவும் பார்த்தல்** (The Brave New World Revisited) என்னும் பாகத்தில், தொழில் வளர்ச்சியினாலும் நாகரீக வளர்ச்சியினாலும் மக்கள் வாழ்க்கை செயற்கைமுறையில் இயங்குதல், மக்கள் தொகைப் பெருக்கத்தினால் ஏற்படும் பற்றாக்குறையும் அதனால் சமுதாயத்தில் வேண்டப்படும் கட்டுப்பாடும், பிரசாரத்தினால் மக்கள் தாமாகச் சிந்திக்காது பிரசாரம் செய்யப்படுபவற்றைப் பின்பற்றுதல் முதலிய தற்காலப் பிரச்சனைகளை ஆராய்கிறார். இவை வள்ளுவர் காலத்து இல்லை. பிரசாரத்தையும் கல்வியையும் குறித்து இவ்வாசிரியர் கூறும் கருத்துக்களை, தவறான பிரசாரத்தினாலும் போதனையினாலும் ஏற்படும் தீய பலன்களை அவர் விளக்குவதைப் படிக்குங்கால் வள்ளுவரின் இருகுறள்கள் வாசகரின் நினைவிற்குவரும்.

ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு (642)

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (423)

மக்கள் வாய்ச்சொல்லை மட்டுமே கேட்கக்கூடிய அக்காலத்தில், ஏடுகளில் எழுதியதை மட்டுமே படிக்கக் கூடிய அக்காலத்தில் வள்ளுவர்

கூறிய இச்சொற்கள் அச்சுப்பொறியின் மூலம் பல ஆயிரக்கணக்கான படிகளாக நூல்களை அச்சிட்டுக் குவிக்கக் கூடிய இக்காலத்தில், ஒலி பெருக்கியின் மூலம் பேச்சொலியைப் பரவச் செய்யவும் ஒருவர் ஓரிடத்திலிருந்து பேசுவதை வானொலியின் மூலம் பலர் பலவிடங்களி லிருந்து கேட்கவும் ஒருவர் பேசுவதை ஒலித்தட்டில் பதிவு செய்து பின் வேண்டியபோது அப்பேச்சொலியை எழுப்பவும் வாய்ப்புள்ள இக்காலத்தில் இன்னும் எவ்வளவு அதிகப் பொருளுள்ளனவாயின. சொல்லினால் தற்போது பண்டைக்காலத்தைவிட அதிக ஆக்கத்-தையும் அழிவையும் ஏற்படுத்த முடியும். செய்தித்தாள்களிலும் வார மாத இதழ்களிலும் நூல்களிலும் படிப்பன, வானொலியில் கேட்பன, அரசியல் கூட்டங்களுக்கும் பிற கூட்டங்களுக்கும் செல்லினும் செல்லா விடினும் ஒலிபெருக்கியின் உதவியினால் தாமாகவே நம் காதில் வந்து விழும் பல சொற்பொழிவுகள், பிரசாரங்கள் ஆகியவற்றிலெல்லாம் மெய்ப்பொருளைத் தேர்ந்தறிய வேண்டியது தற்காலத்தில் எவ்வளவு அவசியமாகிறது!

இவ்வாறு ஏனைய நூல்களில் சிலசில கருத்துக்களை எடுத்து ஒப்பிட முடியுமேயன்றி அவைகாட்டும் சமூக அமைப்புடன் வள்ளுவர் காட்டும் சமூக அமைப்பை ஒப்பிட்டு ஆயத்தக்க நூல்கள் சிலவே.

## 8. 1. பிளேட்டோ தந்த 'அரசு'

**பிளேட்டோ** என்ற கிரேக்க அறிஞர் கி.மு. 427 - ஆம் ஆண்டளவில் பிறந்து கி.மு. 347 - ஆம் ஆண்டுவரை வாழ்ந்தார் என்பர். சாக்ரதீஸ் என்ற கிரேக்க தத்துவ அறிஞரின் மாணவராகிய பிளேட்டோ, தம் ஆசிரியர் இறந்தபின் அவர் செய்த தத்துவ ஆய்வைத் தொடர்ந்து செய்தும் தம் தத்துவக்கருத்துக்களைத் தம் மாணவர்கட்குக் கற்பித்தும் வந்தார்.[1] அவர் எழுதிய நூலே **அரசு** (The Republic) என்பது.

**ரிபப்ளிக்** (Republic) என்னும் ஆங்கிலச் சொல் தற்போது **குடியரசு** என்னும் பொருளில் வழங்கப்படினும் அச்சொல்லின் பண்டைய பொருள் அதுவன்று. அதன் பழைய பொருள் **போதுச் செய்தி** அல்லது **போதுப் பொருள்** என்பதே. அரசியல், நாட்டின் பொருள் நிலை, கல்வி முதலியவை இதில் அடங்கும். பழந்தமிழில் பொருள்' எனவும் வடமொழியில் 'அர்த்த' எனவும் வழங்கப்படும் அரசு குறித்த செய்திகளைப் பொதுவாகக் குறிப்பதேயன்றி ஒருவகை அரசியலைக் குறிப்பதன்று. பிளேட்டோவின் நூலிலும் இச்சொல் இப்பண்டைய பொருளில் கொள்ளப்படுவதே ஆகும்.

---

1. Plato, The Republic, trans. John Llewelyn Davies James Vaughan, Macmillan and Company, 1907, Introductory note.

பிளேட்டோவின் 'அரசு' பத்துப்பகுதிகளைக் கொண்டது. முழுவதும் உரையாடல் வடிவில் எழுதப்பட்டுள்ளது. சாக்ரதீசுக்கும் அவர் நண்பர்கட்கும் இடையே நிகழ்ந்த ஓர் உரையாடலைப் போல நூல் எழுதப்பட்டிருப்பினும் இந்நூல் பிளேட்டோவின் அரசியல் கருத்துக்களைக் கூறுவதே.

பிளேட்டோ வள்ளுவரைப் போல் அறத்தையும் பொருளையும் தனித்தனியே கூறவில்லை. அவர் கூறுவது அறத்தொடு பொருந்திய பொருள் நூலேயாகும். ஒரு நாட்டில் அனைவரும் தத்தம் கடமைகளை அல்லது வேலைகளை ஒழுங்குறச் செய்வதும் பிறர் கடமைகளில் தலையிடா திருப்பதுமே அறமாகும் என அவர் கருதினர்.[2] இக்கருத்து அவர் நூலின் நான்காம் பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. பிளேட்டோ கருதிய நாட்டில் துறவறம் இல்லை. இல்லறத்தையும் அவர் முக்கியமாகக் கருதவில்லை. நாட்டின் பொதுநலத்தையே யாவற்றிலும் நாடினர்.

பிளேட்டோவின் கருத்துக்களையும் வள்ளுவரின் கருத்துக் களையும் எளிதாக ஒப்பிட்டு ஆய்வதற்கு இங்கு அரசியல், கல்வி, பிற செய்திகள் என மூன்று தலைப்பின்கீழ் இவற்றை வகுத்தல் கூடும்.

### 8. 1. 1. அரசியல்

வள்ளுவர் கண்ட ஆட்சி வகை முடியாட்சி ஒன்றே. அவர் காலத்தில் தமிழ் நாட்டை அரசர்களும் சிற்றரசர்களும் ஆண்டு வந்தனர். ஆட்சியுரிமை பரம்பரையாக அவர்கள்வசமே இருந்தது. வள்ளுவரும் முடியாட்சியையே ஆதரித்தார். வேறுவகையாட்சி அக் காலத் தமிழ்நாட்டில் இல்லையாகையினல் அவர் வேறுவகை ஆட்சி களைக் குறித்து ஆதரித்தோ மறுத்தோ எழுதவும் இல்லை. பிளேட்டோவின் காலத்துக் கிரேக்க நாட்டில் பலவகை ஆட்சி முறைகள் இருந்தன. அக்காலக் கிரேக்கதேயம் பல சிறுநாடுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. ஒரு நகரும் அதைச்சார்ந்த சிறு நிலப்பகுதியும் ஒரு நாடாகத் தனியரசு பெற்று நிகழும் முறையே கிரேக்க தேயத்தில் நிலவியது. ஆகவே அங்குப் பல நகர்சார் சிறுநாடுகள் அல்லது நகர அரசுகள் (city states) நிலவின. இவற்றில் பலவகை ஆட்சி முறைகளும் இருந்தன, சில நகர்கள் அரசர் அல்லது வேறொரு தலைவரால் ஆளப் பட்டன. சில நகர்கள் ஒரு குழுவினரால் ஆளப்பட்டன. சிலநகர்

2. Ibid, P. 134. "And again, we have often heard people say, that to mind one's own business and not to be meddlesome is justice, and we have often said the same thing ourselves."

களில் (அடிமைகளும் மாதர் சிறுவர்களுமொழியப்பிற) பொதுமக்கள் அனைவருங்கூடி அரசியல் நிகழ்ச்சிகளை ஆய்ந்து திட்டமிடும் முறை இருந்தது. பிளேட்டோ தம் நூலின் எட்டாம் பகுதியில் பலவகை யரசாட்சி முறைகளை யாய்கிறார். சிறந்தோர் ஆட்சி (aristocracy) வீரர் ஆட்சி (timocracy) செல்வர் ஆட்சி (oligarchy) மக்கள் ஆட்சி (democracy) தனிமகன் ஆட்சி (despotism) எனப் பலவகை ஆட்சிகள் ஒரு நாட்டில் நிகழக்கூடும் என்பதை விளக்கி இவற்றுள் சிறந்தோராட்சியே நாட்டின் நலத்திற்கு ஏற்றது என நிறுவுகிறார். மக்களாட்சியில் பிளேட்டோவிற்கு அதிக நம்பிக்கையில்லை. மக்களாட்சியில் போதிய கட்டுப்பாடின்றிப் பலவகைக் குழப்பங்கள் எழும் நிலையே இருக்குமெனவும் அது நிலைத்திராது விரைவில் தனிமகனாட்சி எழுவதற்கே இடங்கொடுக்குமெனவும் அவர் எண்ணினார்.

(வள்ளுவர் விரும்பும் நாட்டை ஓர் அரசனே ஆள்வான். அவன் அமைச்சரின் ஆலோசனையை ஏற்றும் குடிமக்களின் நலத்தைக் கருதியும் அவர்கள் கருத்தைப் பொருட்படுத்தியும் ஆள்வானெனினும் ஆள்பவன் அரசனே.)

பிளேட்டோ விரும்பும் நாட்டில் வீரம், நாட்டுப்பற்று, கல்வி, பிறநற்பண்புகள் மிகுந்தோர் சிலர் ஒரு குழுவாகக் கூடி நாட்டையாள்வர். பின் அக்குழுவில் சேர்தற்குரியவர்களையும் அவர்களே தேர்ந்தெடுப்பர். இம்முறையில் குழு நீடித்து நிலைக்கும். ஆளும் குழுவினர் பிறர் செயல்களைச் சிறுவயதிலிருந்து கவனித்து யார் எத்தகைய நிலையிலும் எவ்வகை இன்பதுன்பங்களினூடும் நாட்டின் நலத்தைப் பேணுகின்றனரோ யார் எவ்விதத் துன்பத்திற்கும் அஞ்சாத வீரப்பண்புடையரோ அத்தகையோரையே தெரிந்து ஏற்ற கல்வியும் அளித்துப் பின் ஆளும்குழுவிற் சேர்ப்பர்.[3] 'தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும், நீங்கா நிலனாள் பவற்கு' (383) என்பது வள்ளுவராலும் கூறப்பட்டதே. பிளேட்டோவின் அரசில் சிறந்தோர் பலர் ஒரு குழுவாகச் சேர்ந்து நாட்டையாள்வர் ஆகையினால் அங்கு அமைச்சர் வேண்டியதில்லை. ஒற்றரைக் குறித்தும் பிளேட்டோ யாதும் கூறவில்லை. ஆள்வோர்க்குத் துணையாக இருப்போர் வீரரே.

பிளேட்டோவின் கருத்துப்படி நாட்டில் மூன்று குலங்கள் அல்லது பிரிவுகள் இருக்கும். இவற்றுள் ஆள்வோர் குலமே

3. Ibid. P. 110-113, deals with the selection of guardia s or rulers.

உயர்ந்தது. அடுத்தது வீரர் குலம். இவ்விரு பிரிவினரே அரசியல் அலுவலராகவும் பணியாற்றுவர். பிறதொழில் செய்வோர் அனைவரும் மூன்றாவது குலம் அல்லது பிரிவைச் சேர்ந்தவரே. இவர்களே நாட்டில் பெரும்பான்மையினராக இருப்பர். பயிர்த்தொழில் செய்வோர், நூற்றல் நெசவு ஆகிய அணியும் ஆடைகள் நல்கும் தொழில் செய்வோர், கட்டடத் தொழில் வல்லோர், தோற்பொருள்கள், மரப் பொருள்கள் செய்வோர், இரும்பு, செம்பு, பித்தளை முதலிய உலோகங் களினால் கருவிகளும் பிறபொருள்களும் செய்வோர் யாவரும் இப் பிரிவில் அடங்குவர். இத்தொழிலாளர்கள் மட்டுமன்றி ஆசிரியர், மருத்துவர், கவிஞர், இசைவல்லோர் யாவரும் இம்மூன்றாம் பிரிவி லேயே அடங்குவர். இம்மூன்று பிரிவும் பெரும்பாலும் பரம்பரையாக வருபவையே. ஆகவே இவற்றை மூன்று குலங்கள் எனக் கூறுவதும் பொருந்தும். பெற்றோரின் பண்புகளே பிள்ளைகட்கும் இருத்தல் இயல்பு எனப் பிளேட்டோ கருதினார். வீரர்களின் மக்கள் வீர உணர்ச்சி உடையோராயிருத்தல் இயல்பு. அறிவிற் சிறந்தோராகிய ஆள்வோரின் பிள்ளைகள் அறிவுடையாராயிருத்தல் இயல்பு. தொழி லாளர்களின் குழந்தைகள் தொழில் செய்வதற்கேற்ற தன்மையையே உடையோராயிருத்தலும் இயல்பே. ஆயினும் ஒருகால் வீரர்குலத்தில் தொழிலாளியின் குணமேயுள்ள குழந்தை தோன்றினால் அல்லது தொழிலாளர்குலத்தில் ஆள்வோர்க்கேற்ற அறிவும் திறனும் நற் பண்புகளும் உள்ள குழந்தை தோன்றினால் அவ்வக் குழந்தையைத் தோன்றிய குலத்தினின்றும் பிரித்து அதன் தகுதிக்கேற்ற குலத்தில் சேர்ப்பது ஆள்வோர் கடனாகும்.[4]

பிளேட்டோ கூறும் இம்முப்பிரிவு அரசு, அங்கம், குடிகள் என்னும் பிரிவை ஓரளவு ஒக்கும். குறளில் அரசன் ஒருவன்; பிளேட்டோவின் நூலில் ஆள்வோர் பலர். குறளில் அங்கமாகக் கருதப்படும் அமைச்சரும் ஒற்றரும் ஒரு குலத்தவரல்லர். பல குலங் களினின்றும் தெரிந்தெடுக்கப்படுபவரே. படை வீரரிலேயே ஓரளவு பரம்பரையாகப் படைத் தொழில் பயிலும் தன்மை இருந்ததாகத் தோன்றுகிறது (தொழில்கள், படைத்தொழில் பார்க்க). பிளேட்டோ வின் நூலில் வீரர் குலத்தோரே அரசியலலுவல்களையும் ஏற்கின்றனர்.

பழந்தமிழ்நாட்டில் அந்தணர் மிகச் சிறப்புற்றிருந்தனர். வள்ளுவரும் அவரைக் குறிப்பிட்டார். பிளேட்டோ வழிபாடு புரியும் ஒரு வகுப்பினரை (priests) இடையிடையே குறிப்பிடினும் அவர்கள்

4. Ibid. P. 114.

கடமைகளையோ அவர்கட்கு இருக்க வேண்டிய இயல்பையோ அவர்கட்கு வேண்டிய கல்வியையோ விளக்கவில்லை. அவர்களை அவர் ஒரு தனிப்பிரிவாகவும் கருதவில்லை. அவர்களும் குடிமக்களாகிய மூன்றும் பிரிவிலேயே அடங்குவர் போலும்.

குடிமக்கள் ஒருவரோடொருவர் பழகுங்கால் வாய்மையையே கடைப்பிடிக்க வேண்டும் என்பது பிளேட்டோவின் கருத்து. சிறப்பாக அவர்கள் ஆள்வோரிடமோ அரசியல் அலுவலரிடமோ பொய் கூறுதலாகாது; அவ்வாறு கூறின் ஒறுக்கப்படுவர்.[5] ஆனால் ஆள்வோர் சில அமையங்களில் குடிமக்களின் நலத்துக்காக அவர்களிடம் (குடிமக்களிடம்) பொய் கூறலாம். எடுத்துக்காட்டாக நாட்டில் ஆள்வோர், வீரர், குடிமக்கள் என்னும் முப்பிரிவினரும் தத்தம் கடமைகளை ஒழுங்குற இயற்றும் பொருட்டும் ஒரு பிரிவினர் பிறர்மேல் அழுக்காறு கொள்ளாதிருக்கும் பொருட்டும் அவர்களிடையே ஒற்றுமை நிலவும் பொருட்டும் ஒரு பொய்க்கதை கூறி யாவரையும் அதை நம்ப வைத்தல் நலமென ஆசிரியர் கருதுகின்றார். மக்களனைவரும் ஒரு காலத்தில் மண்ணிலத்தினுள்ளிருந்தே உருவாக்கப்பட்டு வெளிப்போந்தனர் எனவும் ஆகையினால் அனைவரும் சோதரரே, மண்ணிலமே அவர்களின் தாய் எனவும் கூறலாம். ஆயினும் அவர்களைப் படைத்த தெய்வம் ஆள்வோராக இருக்க வேண்டியவர்களை உருவாக்கும்போது பொன்னையும் வீரர்குலத்தோரை உருவாக்குங்கால் வெள்ளியையும் பிற குடிமக்களை உருவாக்குமிடத்துப் பித்தளை, இரும்பு ஆகியவற்றையும் சேர்த்து உருவாக்கிற்று என மக்களை நம்ப வைத்தல் நலம். அவ்வாறு மக்கள் கருதினராயின் அவரவர் தத்தம் தொழிலுக்கு ஏற்றவரே எனக் கருதி அவ்வத்தொழிலையே செய்வர். வீரர் ஆள்வோருக்கும் குடிமக்கள் ஏனைய இருதிறத்தோர்க்கும் உரிய மதிப்பளிப்பர்.[6] இவ்வாறு மக்களின் நலத்துக்காக ஆள்வோர் அவர்களிடம் பொய் கூறுதல் கூடும்.[7] பகைவரிடமும் பொய் கூறலாம்.

பிறர் நன்மைக்காக நல்லோர் பொய் கூறத்தக்க நிலைமைகளுமுண்டு எனக் கருதியே வள்ளுவரும்,

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின் (292)

---

5. Ibid. P. 80.
6. Ibid. P. 113-114.
7. Ibid. P. 80.

என்றார். இது அரசியலின்றித் துறவறவியலில் கூறப்பட்டதே. பிறிதோருயிரைக் காக்கப் பொய் கூறலும் தகும் எனப் பரிமேலழகர் பொருள் கொண்டார். ஆனால் அரசியல் அங்கவியலிலுள்ள சில குறள்கள் பகைவருடன் பழகுங்கால் அரசர், ஒற்றர் முதலியோர் ஓரளவு வாய்மையின்மையை, பொய்ம்மையைக் கடைப்பிடித்தலும் கூடும் எனக் காட்டுகின்றன என்பது முன்பே விளக்கப்பட்டது (அறங்கள் பார்க்க). எனினும் ஆள்வோர் குடிகளிடம் பொய் கூறலாம் என்றோ ஏமாற்றலாம் என்றோ உண்மையல்லாததை அவர்கள் நம்பும்படி செய்யலாம் என்றோ வள்ளுவர் என்றும் கூறவில்லை. பொதுவாகக் குடிமக்கள் அவ்வளவு கூர்ந்த அறிவுடையவராக இருப்பரெனப் பிளேட்டோ எதிர்பார்க்கவில்லை என்றே தோன்றுகிறது. ஆனால்,

> ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
> நீள்வினையான் நீளும் குடி (1022)

எனக் கூறிய வள்ளுவர் குடிமக்களிடமும் ஆன்ற அறிவை எதிர்பார்த்தார். அரசர் பொய்க் கதைகளைக் குடிமக்களிடம் பரவச்செய்தும் நம்பச் செய்தும் அதன் மூலம் (அவர்கள் நன்மைக்காகவேதான் எனினும்) அவர்களைக் கட்டுப்படுத்தும் முறையை வள்ளுவர் ஏற்றுக்கொள்ள மாட்டார் எனவே எண்ணலாம்.

பிளேட்டோ மக்களின் நலத்திற்காக ஆள்வோர் பொய் கூறலாம் எனக் கூறினாராயினும் ஆள்வோர் எவ்வகையிலும் தம் நிலையைத் தம் நலத்துக்காகப் பயன்படுத்திக் கொள்வதை ஆதரிக்கவில்லை. ஆள்வோர் சிறிதும் தன்னலம் பேணாதவர்களாய் நாட்டின் நலத்தையும் குடிகளின் நலத்தையும் பேண வேண்டும் என்பதே இவ்வாசிரியரின் கருத்து. மருத்துவன் தன்தொழிலில் நோயாளியின் நலத்தையே பேணுவது போலவும் கப்பல்தலைவன் கப்பலில் உள்ளோரும் கப்பலும் சேதமுறாது ஏற்ற இடத்தில் சேரச்செய்வதே தன் குறிக்கோள் எனக் கருதுவது போலவும் ஆயன் ஆட்டின் நலத்தையே நாடுவது போலவும் ஆள்வோரும் ஆளப்படுவோரின் நலத்தையே நோக்குதல் வேண்டும் என அவர் விளக்கினார்.[8]

இக்கருத்து நல்லரசன் 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன்' (388) ஆக இருத்தல் வேண்டுமெனவும் 'கொடையளி செங்கோல் குடியோம்பல்' (390) நான்கும் உடையராய் இருப்பதே அரசர்க்குச் சிறப்பாவது எனவும் 'குடிதழீஇக் கோலோச்சும் மாநில

8. Ibid. P. 21-22, 25.

மன்னன்' (544) உலகோரால் விரும்பிச் சூழப்படுவன் எனவும் 'இறை காக்கும் வையக மெல்லாம்' (547) எனவும் கூறிய வள்ளுவர் கருத்தோடு பொருந்துவதே.

மேலும் தாம் நாட்டை ஆளவேண்டுமென மிகு ஆவலாக இருப்பவர், ஆட்சியுரிமைக்காகப் போட்டியிடுபவர் நல்லாட்சி செலுத்துவோராக இரார் என்பதும் உண்மையில் ஆள்வதற்குத் தகுந்தோர் ஆளும் பொறுப்பையேற்க மிக ஆவலாக இரார், அது தம் நாட்டிற்குச் செய்ய வேண்டிய கடமை எனவே அதை ஏற்றுக் கொள்வர் என்பதும் பிளேட்டோவின் கொள்கையாகும்.[9] பொறுப்பையுணர்வோர்க்கு நாட்டை ஆட்சிபுரியும் செயல் இன்பமாகவன்றி ஓரளவு துன்பமாகவே இருக்கும் என்னும் இக்கிரேக்க அறிஞரின் கருத்து,

மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதக வில் (சிலம்பு. 25. 103-104)

எனச் சேரன் செங்குட்டுவன் வாயிலாகக் கூறிய இளங்கோவின் கருத்தை ஓரளவு ஒத்ததே யாகும்.

போர்முறைகளைக் குறித்தும் பிளேட்டோ சில கருத்துக்களைக் கூறியுள்ளார். பொதுவாகத் தம்மால் விரும்பப்படும் இலக்கியல் நகரிலுள்ளோர் பிறநாட்டினரின் அல்லது நகரினரின் செல்வத்தைக் கவர்வதற்காகப் போர் செய்வதை அவர் விரும்பவில்லை. ஆள்வோரும் வீரரும் பொன்னையும் செல்வத்தையும் விரும்பலாகாதென்பதே அவர் கொள்கை. இலக்கியல் நகரும் மிக்க செல்வமும் மிக்க வறுமையும் இன்றி இடைப்பட்ட நிலையில் இருப்பதே சிறப்பாகும் எனவும் அவர் எண்ணினர். ஆகவே பகைவரின் பொருளைக் கொள்ளைகொள்ளும் வழக்கத்தையோ தோற்ற பகைவரிடம் திறை பெறுவதையோ பிளேட்டோ விரும்பவில்லையெனத் தோன்றுகிறது. ஏனெனில் ஒருகால் தம் இலக்கியல் நகருடன் வேறு இரு நகரரசுகள் ஒரே அமையத்தில் போர்தொடுக்க முனைந்தால் முன்னவர் யாது செய்தல் வேண்டுமென விளக்குமிடத்து, அவர்கள் பகைவர்களின் ஒரு சாராரிடம் தூதர்களை அனுப்பி 'பொன்னும் வெள்ளியும் எங்கட்கு வேண்டியதில்லை' அவற்றைச் சேர்க்க நாங்கள் அனுமதிக்கப்படுவதுமில்லை, ஆனால் நீங்கள் அனுமதிக்கப்படுகிறீர்கள். ஆகவே உங்கள் படைகளை எங்களுடன் சேருங்கள்; மற்றவரின் செல்வம் உங்களுடையதாகட்டும்' எனக்

9. Ibid. P. 241-242.

கூறி இருபகைவரில் ஒருவரைத் தம்முடன் சேர்த்துக் கொண்டு மற்ற வரை வெல்லலாம் எனப் பிளேட்டோ கூறினர்.[10] இதிலிருந்து தற்பாதுகாப்புக்காகப் போர்செய்ய நேரிடினும் இலக்கியல் நகரிலுள்ளோர் பகைவர் செல்வத்தைத் தாம் கவரார், தோல்வியுற்ற பகைவரின் செல்வத்தைத் தமக்குத் துணையாக வரும் நட்புநாட்டினர் கவர அனுமதிப்பர் எனத் தெரிகிறது.

பொதுவாகக் கூறப்பட்ட கருத்து இது. கிரேக்கர் பிற தேயத்தினருடனன்றிக் கிரேக்கருடன் போர் செய்யுங்கால் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் சிலவும் இந்நூலில் சிறப்பாகக் கூறப்படுகின்றன. கிரேக்கர் கிரேக்கருடன் போரிடும்போது தோற்றவரைச் சிறைப்பிடித்து அடிமைகளாக்குதல் ஆகாது. பிறர் கிரேக்கரை யடிமையாக்குவதைத் தடுக்க முயலவும் வேண்டும். போரில் இறந்த பகைவரின் ஆடைகளையோ அணிகலன்களையோ கவருதல் ஆகாது. படைக்கலங்களைமட்டும் வேண்டுமானல் எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறு எடுக்கப்பட்ட படைக்கலங்களையும்கூட ஊர்வலமாகக் கொண்டு சென்று வெற்றி கொண்டாடுதல் ஆகாது. கிரேக்கர் கிரேக்கரொடு போரிடுங்கால் தோற்ற பகைவர்களின் வீடுகளையோ விளைநிலங்களையோ பாழ்படுத்துதல் ஆகாது. அப்போது விளைந்திருக்கும் தானியம் முதலிய விளைபொருள்களை மட்டும் வேண்டுமானல் எடுத்துக் கொள்ளலாம். பகைநாட்டைச் சேர்ந்த ஆனல் போரில் ஈடுபடாத பொதுமக்களைப் பகைவராகக் கருதுதலோ அழித்தலோ ஆகாது.[11] கிரேக்கர் கிரேக்கரொடு போர் செய்யுங்கால் இப்போர்முறை யறங்களைக் கைக்கொள்ள வேண்டும் எனக் கூறிய பிளேட்டோ பிறரிடம் அவற்றைக் கைக்கொள்ள வேண்டா எனக் கூறவில்லை. ஒருகால் பிறரிடம் அவற்றைக் கடைப்பிடிக்காது விட்டாலும் தம்மினத்தவராகிய கிரேக்கரிடமாவது அவ்வறங்களைக் கைக்கொள்ள வேண்டுமென வற்புறுத்தவே விரும்பினர். யாவரிடமும் அவ்வறங்களைப் பின்பற்றிப் போர்செய்தலே சிறப்பு என அவர் கருதியிருத்தல் கூடும். பிளேட்டோவின் காலத்தில் கிரேக்க நகரரசுகளிடையே போர்கள் நிகழ்ந்தன. அப்போர்களில் வென்ருேர் தகுதியற்ற முறையில் நடந்து கொள்வதைக் கண்டே பிளேட்டோ இக்கருத்துக்களைக் கூறியிருத்தல் வேண்டும்.

---

10. Ibid. P. 120.
11. Ibid. P. 181-184: Principles to be followed when Greeks fight with Greeks.

இலக்கியல் நகரிலுள்ளோர் பிறர் செல்வத்தைக் கவரார். ஆகவே ஏன் பிறருடன் போர் செய்கின்றனர் என்ற கேள்வி எழுதல் கூடும். மற்றொரு நகரினர் அவர்கள்மேல் படையெடுத்துவரின் தற்பாதுகாப்புக்காகப் போர் செய்வர். பிறிதொரு நகரில் அல்லது நாட்டில் ஒரு அநீதி நிகழின் அதை மாற்றி நீதி செய்தற் பொருட்டும் இலக்கியல் நகரிலுள்ளோர் போர் செய்தல் கூடும் என்பதும் பிளேட்டோவின் கருத்தாகும்.[12] ஆள்வோர் கொடூரமாக ஆட்சி செய்து மக்களைத் துன்புறுத்தின் அயல்நாடுகள் தலையிட்டு நீதி செய்தல் தகும் என்பது கருத்துப் போலும்.

இக்கருத்துக்களைப் போரைக் குறித்த வள்ளுவர் கருத்துக்களுடன் ஒப்பிடுங்கால் வள்ளுவரும் நல்லரசர் தம் நலத்திற்காகவோ புகழுக்காகவோ போதிய காரணமின்றிப் பிறருடன் போர்தொடுப்பதை விரும்பவில்லையென்பதைக் குறளில் இகல் என்னும் அதிகாரம் காட்டும். கூடியவரை பகையையும் போரையும் நிகழாமல் தடுப்பதே சிறப்பெனவும் இகலின்றிப் பிறருடன் நட்புக் கொள்வதே எல்லா நன்மைகளையும் தரும் எனவும் இவ்வதிகாரத்தில் விளக்கிய வள்ளுவர் பகைத்திறம் தெரிதலில்,

பகையென்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று (871)

என மீண்டும் கூறினர். ஆயினும் போர் நிகழ்தல் இயல்பு எனக் கருதி அரசர் தக்க அரண்களமைத்தும் படைகள் சேர்த்தும் வேண்டிய போது நாட்டைப் பாதுகாக்க வல்லவராகவே இருத்தல் வேண்டும் என விதித்தார். போர் நிகழ்தல் இயல்பு எனக் கருதியே பிளேட்டோவும் இலக்கியல் நகரில் வீரர் என்ற ஒரு பிரிவினர் இருத்தல் வேண்டுமெனவும் அவர்கள் தக்க கல்வியும் போர்ப்பயிற்சியும் உடையராய் எப்பொழுது வேண்டுமாயினும் போரில் ஈடுபட ஏற்றவராய் இருத்தல் வேண்டுமென்வும் விதித்தார். இருநாடுகள் அல்லது அரசுகள் தம்மேல் ஒருங்கே பகை கொள்ள நேரிட்டால் அவற்றுள் ஒன்றைப் பகை மாற்றித் துணையாகக் கொள்ளல் பொருந்தும் என்னும் கருத்தும் இருவர்க்கும் ஒத்ததே.

தன்துணை இன்றால் பகையிரண்டால் தானொருவன்
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று (875)

---

12. Ibid. P. 183, "and they will push the quarrel only thus far, till the innocent have done justice upon the guilty who plague them."

இவ்வாறு கூறப்படுவதிலிருந்து அநீதியை நீக்கி நீதி செய்வதற்காகவும் போர் செய்வரெனத் தெரிகிறது.

எனவே வள்ளுவரும் ஆலோசனை கூறினர். ஆனால் இலக்கியல் நகரைச் சார்ந்த வீரர் பகைவரின் பொன்னையோ வெள்ளியையோ நாடுதல் ஆகாது என்ற பிளேட்டோவின் கருத்துக்கு மாருக வள்ளுவர், 'ஒன்னார்த் தெறுபொருளும் வேந்தன் பொருள்' (756) என விதித்தார். 'ஒன்னார்த் தெறுபொருள்' என்னும் தொடர்க்கு 'தன்பகைவரை வென்று திறையாகக் கொள்ளும் பொருள்' எனப் பரிமேலழகரும் 'தன் பகைவரை அடர்த்துக் கொண்ட பொருள்' என மணக்குடவரும் உரை கூறினர். பகையரசரிடம் திறைப் பொருள் பெறுதல் பழந்தமிழ் நாட்டில் இருந்த வழக்கமே. அதை வள்ளுவர் மறுக்கவில்லை. அரசன் பொருள் பெறும் வழிகளில் அதுவும் ஒன்று என ஏற்றுக் கொண்டார்.

கிரேக்கர் கிரேக்கரொடு போர் செய்யுங்கால் கடைப்பிடிக்க வேண்டியனவாகப் பிளேட்டோ காட்டிய அறங்களை நோக்குமிடத்துப் போரில் தோற்ற பகைவரை அடிமைகளாக்கும் வழக்கமோ போரில் இறந்த பகைவீரரின் ஆடை அணிகலன்களைக் கவரும் வழக்கமோ தமிழ்நாட்டில் என்றும் இருந்ததாகத் தெரியவில்லை. அத்தகைய செய்திகளை இலக்கியங்கள் குறிப்பிடவில்லை, தோல்வியுற்ற பகையரசரிடம் திறைபெறுதலையே இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தொல்காப்பியத்தில் வஞ்சித்திணைக்குரிய துறையாக வரும் 'வென்ருேர் விளக்கமும் தோற்ருேர் தேய்வும்' (தொல். பொருள். 63) என்னும் வரியில் 'தோற்ருேர் தேய்வு' என்ற தொடர்க்கு 'திறைகொடுத் தோரது குறைபாடு கூறுதலும்' எனவே நச்சினர்க்கினியர் பொருள் கொண்டார்.

பேராண்மை யென்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு (773)

எனக் கூறிய வள்ளுவர் தோற்ருேரை அடிமை கொள்வதையோ இறந்த பகைவீரரின் அணிகலன்களைக் கவர்வதையோ விரும்பார் என்பது உறுதி. போர் நிகழுங்கால் பகைவர் நாட்டு விளைநிலங்களையும் ஊர்களையும் எரித்து அழிக்கும் வழக்கம் பண்டைத் தமிழ் நாட்டிலும் இருந்ததே. அருளுள்ளம் கொண்ட வள்ளுவர் இவ் வழக்கத்தை ஆதரிப்பாரா என்பது ஐயமே. ஆயினும் அவ்வாறு செய்தலாகாது என அவர் தெளிவாகக் கூறவுமில்லை. பகைத் திறந் தெரிதல் என்னும் அதிகாரத்தை ஆயுங்கால் வள்ளுவர் பெரும்பாலும் தற்காப்புப்போரை உளத்திற்கொண்டே எழுதுவதாகத் தோன்று கிறது.

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு (878)

என்பது போன்ற குறள்கள் இதைக் காட்டும். ஆகையினுல் அவர் பிறர்மேற் செல்லும் போரிலேயே நிகழத்தக்கதாகிய எரியூட்டுதல் குறித்து யாதும் கூருது விட்டிருக்கலாம். பண்டைத் தமிழர் தமிழருடனேயே பெரும்பாலும் போர் செய்தனராயினும் அக்காலத்துப் பகைவர் தேயத்தை எரித்து அழித்தல் பெருவழக்கமாக இருந்ததெனவே தோன்றுகிறது. தொல்காப்பியரும் 'எரிபரந்தெடுத்தல்' என்பதை வஞ்சித்திணைக்குரிய துறைகளில் ஒன்ருகக் கூறினர். பல புறநானூற்றுச் செய்யுட்களும் பகைவர் நாட்டை எரியூட்டியழிக்கும் வழக்கத்தைக் குறிப்பிடுகின்றன.[13]

நல்லோர் எந்நிலையில் போரில் ஈடுபடுதல் கூடும் என்பதைக் குறித்துப் பிளேட்டோ கூறிய கருத்துக்களை நோக்கும்போது தற்பாதுகாப்புக்காக, தன் நாட்டையும் குடிகளையும் பாதுகாப்பதற்காக ஆள்வோர் போர்செய்தல் அறம் என்பது அவர்க்கும் வள்ளுவர்க்கும் பொதுவாய கருத்தே. பிறநாட்டில் நிகழும் அநீதியைத் தடுப்பதற்கும் போர் செய்தல் தகும், அதாவது நாட்டில் அரசன் அல்லது ஆள்வோர் கொடுங்கோல் மேற்கொண்டு குடிகளைத் துன்புறுத்தின் பிற நல்லரசனெருவன் அதைத் தடுத்து நீதி செய்தற் பொருட்டு அக்கொடுங்கோலாட்சியாளர்மேல் போர்தொடுத்தல் கூடும் என்னும் கருத்து வள்ளுவர்க்கு உடன்பாடாகுமா? பகைமாட்சி என்னும் அதிகாரத்தில் சில குறள்கள் வள்ளுவரும் இக்கருத்தினரே என எண்ணச் செய்யும். போர் செய்வதாக இருப்பின் தன்னுட்டையே நன்முறையில் ஆளாத அரசன்மேல் போர் செய்வதே ஏற்றது என்ற கருத்தையே இவ்வதிகாரம் தருகிறது.

நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது (864)

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்ருர்க் கினிது (865)

காணுச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணுமை பேணப் படும் (866)

---

.................................. நெடுநகர்
13. வினைபுனை நல்லில் வெவ்வெரி நைப்பக்,
கனைஎரி உரறிய மருங்கு (புறம். 22. 9-11.)

மிக்க சினத்தையுடையவனும் நிறையில்லாதவனும் அறத்தின்வழி நிற்காதவனும் பழிக்கஞ்சாதவனும் காமத்தில் ஆழ்ந்திருப்பவனும் ஆகிய தன்னுட்டை யாள்வதற்குத் தகுதியற்ற அரசனே பகைத்தற்கு ஏற்றவன் என இக்குறள்கள் கூறுகின்றன. 'ஓம்பா மெலியார்மேல் மேக பகை' (861) என்னும் தொடருக்கும் இவ்வாறே பொருள் கொள்ளுதல் கூடும். படை வலிமையற்ற நல்லரசனுடன் போர் செய்க எனக் கூறுவது அறமாகாது. மேலியார் என்பது இங்கே அறிவில், செங்கோலாட்சியில் மெலியாரைக் குறிப்பதாகவே யிருக்கலாம். பரிமேலழகரும் படை பொருள் முதலிய வேற்றுமைத் துணையில்லாமை யொடு நல்லறிவுடைமை, நீதிநூல்வழி நிற்றல் ஆகிய ஒற்றுமைத் துணையும் இல்லார் எனவே பொருள் கொண்டார். பகைமாட்சியில் சொல்லப்படுங் குற்றங்கள் தன்கண் நிகழாமற் காப்பது நல்லரசனின் கடன் என எச்சரிப்பதோடு அக்குற்றங்களையுடைய அரசனுடன் போர் செய்வதும் ஏற்றது, அதனுல் அவ்வரசன் தன்னுட்டில் செய்யும் தவறுகள் நீங்குதல் கூடும் என்பது வள்ளுவர் கருத்தாக இருக்கலாம்.

போர் பற்றிய கருத்துக்கள் இங்கு ஒப்பிடப்பட்டன. வீரரைக் குறித்துப் பிளேட்டோ கூறும் மற்ருெரு கருத்தும் இங்குக் குறிப்பிடத் தக்கது. அவர் கருத்துப்படி இலக்கியல் நகரிலுள்ள வீரர்கள் பொன்னே வெள்ளியோ நிலமோ வீடோ வேறு பொருள்களோ வைத்திருத்தல் ஆகாது. ஆகவே அவர்கள் தனித்தனி இல்லங்கள் அமைத்து வாழ்வதில்லை. அவர்கட்குப் பொன், வெள்ளி முதலியன ஊதியமாகவோ பரிசாகவோ கொடுக்கப்படுவதுமில்லை. வீரர்களனை வர்க்கும் பொதுவாகிய பாடிவீடுகளிலேயே (camps) அவர்கள் தங்குவர்; அனைவரும் பொதுவான அட்டில்களில் சமைக்கப்பட்ட ஒரே உணவையே உண்பர். அவர்கட்கு இருப்பிடம், உணவு, உடை, வேறு இன்றியமையாத பொருள்கள் அனைத்தும் பொதுமக்களின் செலவில் ஊதியமாக வழங்கப்படும். பிற ஊதியம் வழங்கப்படுவதில்லை. பொன்னணிகலன்களையோ பொன் வெள்ளி உண்கலங்களையோ அவர்கள் விரும்புதலாகாது. வீரர்கள் பொருளில் நாட்டமுடைய வராயின் தம் நகர்க்கு நலமன்றித் தீங்கே பயப்பர் எனப் பிளேட்டோ கருதினர். ஆகவே தேவைக்கு மேற்பட்ட எதுவும் அவர்கட்கு வழங்கப்படலாகாது, தேவைக்கு மேற்பட்ட எதையும் அவர்கள் தேடிக் கொள்வதோ வைத்திருப்பதோ ஆகாது என அவர் விதித்தார்.[14]

---

14. Plato, The Republic, P. 115-116, deals with dwelling place and provision for warriors.

இக்கருத்து பொதுவாகத் தமிழ்நூல்களில் காணப்படும் கருத்துக்கு மாருகவே இருக்கிறது. வள்ளுவர் வீரர்கட்கு எத்தகைய ஊதியம் வழங்கப்படவேண்டும் என்பதைக் குறிப்பிட்டுக் கூறவில்லையெனினும்,

சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை (769)

என அவர் கூறுவதிலிருந்து படைவீரர்கட்குத் தாராளமாகப் பொருள் வழங்கப்பட வேண்டுமென அவர் கருதியதாகவே தோன்றுகிறது. 'வெல்படை வேந்தன் வெறுக்கையுள் எல்லாந் தலை' (761) என அவர் கூறுவதனுலும் அரசன் படைமக்கட்குப் பொருள் வழங்கத் தயங்குதல் ஆகாது என்பதே அவர் கருத்து என ஊகிக்கலாம் பரிமேலழகர் தம் உரையில் (762 உரை) 'வெல்பொறியும் நாடும் விழுப்பொருளும் தண்ணடையும் கொல்களிறும் மாவும் கொடுத்தளிக்க' (புற. வெண். மா. 128) என்ற செய்யுளை எடுத்துக்காட்டி அத்தகைய கொடை முதலியவற்ருல் ஆதரிப்பதே தக்கது என்ருர். வெட்சிப் போரின் இறுதியிலேயே கவர்ந்து வரப்பட்ட ஆநிரைகள் வீரர்கட்குப் பகிர்ந்தளிக்கப் படுவதைப் பாதீடு என்னும் துறையாகத் தொல்காப்பியம் கூறுகிறது (தொல். பொருள். 58). சிலப்பதிகாரத்தில் வடநாடு நோக்கிப் படையெடுத்துச் சென்ற சேரன் செங்குட்டுவன் கனக விசயரைப் போரில் வென்றபின் சிறந்த முறையில் போர் செய்த தன் வீரர்கட்கும் போரில் இறந்த தன்வீரரின் மைந்தர்க்கும் பொன்னுலாகிய வாகை மலர்களைப் பரிசாக அளித்தான் எனக் கூறப்படுகிறது (சிலம்பு. 27. 43—44). இவ்வாறு பரிசும் பொருளும் அளித்து வீரர்களை ஊக்குவித்தல் வேண்டும் என்பதே தமிழ்நாட்டில் பொதுவாக நிலவிவந்த கருத்தாக இருப்பப் பிளேட்டோ வீரர்கட்குப் பொன்னே பொருளோ அளித்தலாகாது எனவும் சிறந்தமுறையில் போர்செய்து வெற்றி பெறும் வீரர்க்குப் போர்க்களத்தில் மலர்மாலை யணிவித்தல், விருந்துண்ணுங்கால் முதலிடம் அளித்து நல்லுணவளித்தல்[15] முதலிய சில சிறப்புச் செய்தலே சாலும் எனவும் கூறுவது வியப்பை யளிக்கிறது. பிளேட்டோ கற்பனையாக அவ்வாறு எழுதினரேயன்றி உண்மையில் அவர் கூறும் விதிப்படி ஒரு படையமைப்பதாக இருப்பின் அதில் சேர்வதற்குப் போதிய வீரர்கள் முன்வருவரா என்பது ஐயமே.

ஆள்வோர் ஆளப்படுவோரின் நலத்துக்காகவே ஆள்தல் வேண்டும் என்பன போன்ற சில பொதுக்கருத்துக்களிருப்பினும்

15. Ibid. P. 179—180

இக்கிரேக்க அறிஞரின் அரசியல் கருத்துக்கட்கும் தமிழ்நாட்டில் வள்ளுவர் கூறிய கருத்துக்கட்கும் பல வேறுபாடுகளும் உள.

## 8. 1. 2. கல்வி

ஆள்வோர், வீரர் ஆகியோர்க்கு எத்தகைய கல்வி அளிக்கப்பட வேண்டுமென்பதையே பிளேட்டோ விளக்கமாகக் கூறினர். குடிமக்கள் கல்வியைக் குறித்துக் கூறவில்லை. அவர்கள் தத்தம் தொழிலை அல்லது கலையைக் கற்றிருப்பர் என்பதைத் தவிர வேறு கல்வி அவர்கட்கு அவசியமில்லை என்பதே கருத்துப் போலும். பிளேட்டோ தம் நூலின் மூன்ரும் பிரிவில் வீரர்கட்கு அளிக்க வேண்டிய பயிற்சியைக் குறித்துக் கூறுமிடத்து இசையையும் உடற்பயிற்சியையும் முக்கியமாகக் குறிப்பிடுகின்ருர். உடற்பயிற்சி வீரத்தையும் இசை கட்டுப்பாட்டுடன் நடக்கும் தன்மையோடு தம் நாட்டவரிடம் அருளுடன் பழகும் இயல்பையும் தரும். வீரர்குலத்தோர் சிறுவயதிலிருந்தே உணவிலும் சில கட்டுப்பாடுகளை மேற்கொள்ளும்படி பழக்கப்படுதல் வேண்டும். எளிதில் ஆக்கப்படத்தக்கதும் உடல் வலிமை நல்குவதுமாகிய சுடப்பட்ட ஊன் முதலியவற்றை அவர்கள் உண்ண வேண்டும். அதிகச் சுவையுள்ள உணவை அவர்கள் விரும்புதலாகாது. இலக்கியல் நகரிலுள்ள மக்கள், முக்கியமாக வீரர்கள் நற்பண்புள்ளவர்களாக வளர்வதற்காக அந்நகரில் இயலிசை நாடக மனைத்துமே கட்டுப்படுத்தப்படவேண்டும் எனப் பிளேட்டோ நம்பினர். செய்யுளிலும் நாடகத்திலும் தெய்வங்களைப் பொய் கூறுபவர்களாகவோ தீமை செய்பவர்களாகவோ தகுதியற்ற முறையில் நடந்து கொள்பவர்களாகவோ கோழைகள் போல் (துன்பம் நேர்ந்தபோது) அழுது புலம்புபவர்களாகவோ தம்மைவிடப் பெரியோர்களிடம் மதிப்பின்றி நடந்து கொள்பவர்களாகவோ காட்டுதலாகாது. ஆகவே கதையும் பாட்டும் இன்ன இன்ன முறையில்தான் எழுதப்படவேண்டும், இன்ன இன்ன முறையில் எழுதப்படலாகாது என்னும் விதிகள் இலக்கியல் நகரில் இருத்தல் வேண்டும். சிறுவயதிலிருந்து நல்ல கருத்துள்ள கதைகளையும் பாட்டுக்களையுமே கேட்டும் நல்ல கருத்துள்ள நாடகங்களையே கண்டும் வருவதால் இலக்கியல் நகரிலுள்ளோர், சிறப்பாக அந்நகரிலுள்ள வீரர்குலத்தோர் நற்பண்புள்ளவராக வளர்வர் என்பது ஆசிரியர் கருத்து.

இசையிலும் கட்டுப்பாடு வேண்டும். வீரர் குலத்தோர் வீரத்தை வளர்க்கும் பண்களையே பயிலுதல் வேண்டும். சோம்பலையுண்டாக்கும்

பண்புகளைப் பயிலுதல் ஆகாது. இசைக் கருவிகளிலும் குறைந்த அளவு நரப்புகளுள்ள சில கருவிகளே (lyre, guitar) பயன்படுத்தப்பட வேண்டுமென்றும் இலக்கியல் நகரில் அதிக நரம்புகளுள்ள இசைக் கருவிகளும் (harp, dulcimer) குழலும் (flute) பயன்படுத்தப்படலாகாது என்றும் அந்நகரைச் சார்ந்த நாட்டுப் புறங்களில் மட்டும் ஆயர்கள் ஏதேனுமொருவகைத் துளைக்கருவியை (pipe) பயன்படுத்த அனுமதிக்கப்படலாம் என்றும் பிளேட்டோ கருதினர்.

பின் தம் நூலின் 6,7-ஆம் பிரிவுகளில் பிளேட்டோ ஆள்வோர்க்கு வேண்டிய கல்வி, பயிற்சி ஆகியவற்றை விளக்கினர். ஆள்வோர் தத்துவ அறிவுடையோராய் (philosophers) இருக்க வேண்டும் என்பது பிளேட்டோவின் கருத்து. தத்துவ அறிவுடையோர் அழகெது, நீதி எது, உண்மை எது எனப் பிரித்துணர வல்லவராயிருப்பர். அறிவும் உண்மையும் தொடர்புடையவை எனவும் அறிவை விருப்புவோர் உண்மையையும் விரும்புவர் எனவும் பிளேட்டோ கருதினர். மேலும் அறிவை விருப்புவோர் கட்டுப்பாடுடைய வாழ்க்கை நடத்துவர் (They would be temperate). பணத்தில் ஆசைவையார். சிறுமை (meanness) அவர்களிடமிராது. அறிவுடையோர் எல்லையற்ற காலத்தைக் குறித்துச் சிந்திக்க வல்லவராக இருப்பதால் இவ்வுலக வாழ்க்கையைப் பெரிதாக மதியார், மரணத்துக் கஞ்சார். கோழைத்தன்மை அவரிடமிராது. ஆசையற்றவர், சிறுமையற்றவர், பாசாங்கும் கோழைத்தன்மையும் அற்றவர், நீதியுள்ளவராக இருப்பர். அத்தகையோரே ஆள்வோராகத் தெரிந்தெடுக்கப்படுதல் வேண்டும். அவர் கல்வியில் வல்லவராகவும் மறதியற்றவராகவும் இருத்தல் வேண்டுப்.

இவ்வாறு கருதிய பிளேட்டோ, பின் ஆள்வோராகத் தெரிந்தெடுக்கப்படும் தகுதியுடையோர்க்கு அளிக்கப்பட வேண்டிய கல்வி-யையும் பயிற்சியையும் குறித்து ஒரு திட்டம் வகுத்தார்.

இளம் வயதிலேயே அவ்வயதிற்கேற்ற தத்துவக் கல்வியை அவர்கள் பெறுதல் வேண்டும். வயது முதிர முதிர அவர்கள் அக்கல்வியில் இன்னும் அதிகப் பயிற்சி பெற வேண்டும். போர்த் தொழிலினின்றும் ஓய்வுபெறும் வயது வந்தபின் இத்தத்துவ ஆய்விலேயே அவர்கள் மேலும் அதிகக் காலத்தைச் செலவிட வேண்டும். இவ்வாறு செய்வோர் இம்மையில் மகிழ்ச்சியுடன் வாழ்வது மட்டுமன்றி மறுமையிலும் நன்னிலையை யடைவர் எனப் பிளேட்டோ நம்பினர். ஆனல் நாட்டில் இத்தத்துவ அறிவைப் பெறத்தக்கவர் மிகச் சில-ராகவே இருப்பர் என்பது ஆசிரியர் கருத்து. அறிவினலும் பண்பி

ஞலும் ஏற்றவர் எனக் கருதப்பட்டு பயிற்சி அளிக்கப்படுங்காலும் அக்கல்வியில் நாட்டம் குறைந்தோராய்க் கவனமில்லாதோராய் இருப்போர் நீக்கப்படுதல் வேண்டும்.

இவ்வுலகில் காணப்படும் பொருள்களனைத்தும் நிழல் போன்றன என்றும் காணப்படாத கருத்துக்களே உண்மையுள்ளன என்றும் பிளேட்டோ நம்பினர். ஒரு இருள் நிறைந்த குகையில் ஒரே பக்கம் நோக்கி அசையாதிருந்து, தம் பின்னுலுள்ள விளக்கின் ஒளி முன்னுலுள்ள சுவரில் விழத் தம் பின்னே கொண்டு செல்லப்படும் பொருள்களின் நிழல் அச்சுவரில் தோன்ற அவற்றை மட்டுமே காண்போர் எத்தகைய தெளிவற்ற அறிவைப் பெறுகின்றனரோ அத்தகைய தெளிவற்ற அறிவையே இவ்வுலகிலுள்ள தூலப் பொருள் களைக் காண்போர் பெறுகின்றனர். என்றும் அக்குகையிலேயே வாழ்ந்தோர் பின் வெளிவந்து கதிரவனொளியில் பல பொருள்களையும் காணில் எத்தகைய தெளிந்த அறிவைப் பெறுவரோ அவ்வாறே (காணப்படும் தூலப் பொருள்களை விட்டு) கருத்துலகில் புகுந்து யாவற்றையும் கருத்துவடிவில் காண்போரும் தெளிந்த அறிவைப் பெறுவர். அக்கருத்துலகில் நன்மையின் உருவை (The Form of Good) அறிவதே சிறந்த அறிவாகும். பின் அழகு, உண்மை, நீதி ஆகியவற்றையும் கருத்துவடிவில் அறிதல் கூடும். அவ்வாறு அறிந்தோர் இவ்வுலகப் பொருள்களில் அல்லது நிகழ்ச்சிகளில் காணப் படும் அழகு, உண்மை, நீதி ஆகியவற்றைத் தரம் அறிய வல்லவ ராவர். ஆகவே நாட்டை ஆள்வதற்கு ஏற்றோர் கருத்துலகில் புகுமாறு பயிற்சியளிக்கப்படவேண்டும். ஆயினும் அவர்கள் அங்கேயே தங்கிவிடாது, அதாவது அக்கருத்துகளைத் தியானிப்பதிலேயே ஆழ்ந்துவிடாது பிறர் நலத்தின் பொருட்டு இவ்வுலக நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு நாட்டை ஆளவும் மக்களைக் காக்கவும் தூண்டப்படுதல் வேண்டும்.

பெரும்பாலும் வீரர்குலத்தினின்றே ஆள்வோர் தெரிந்தெடுக் கப்படுவர். ஆகையினல் வீரர்கட்கு ஏற்ற கல்வியளித்துப் பின் அவர் களுட் சிறந்தோரையே ஆள்வோராகத் தெரிதல் தகும். (ஒருகால் குடிமக்களுள் யாவராவது மிகச் சிறந்த அறிவும் பண்பும் உடையோ ராய் இளவயதிலேயே காணப்பட்டால் அவரும் தக்க பயிற்சியளிக்கப் பட்டு வீரர்களுடனே ஆள்வோருடனே சேர்க்கப்படலாமென்பது முன்பே கூறப்பட்டது). முன்பே கூறப்பட்ட இசை, உடற்பயிற்சி யுடன் வேறு சில கல்விகளும் இப்போது வேண்டப்படுகின்றன.

எண்ணைக் குறித்த கல்வி அதாவது **கணிதநூற் கல்வி** முக்கிய மாகும், அது போரிலும் பயன்படும். படைத் தலைவன் தன்னிடமுள்ள படைவீரர் போர்க்குரிய பொருள் ஆகியவற்றைக் கணக்கிடுதல் வேண்டும். எண் ஒவ்வொன்றும் ஒரு பருப்பொருளையன்றிப் பல பருப் பொருள்கட்கு வழங்கக் கூடிய கருத்தையே காட்டுவன. ஆகையினால் கணிதக் கல்வி சிந்திக்கும் ஆற்றலை வளர்த்து இறுதியில் தத்துவ ஆய்வுக்கும் துணை செய்யும். அவ்வாறே **வடிவியல் கணிதக்** (geometry) **கல்வி**யும் போரிலும் பயன்படும்; சிந்திக்கும் ஆற்றலையும் வளர்க்கும். **வானநூலைக்** கற்பது நலம் தரும். தட்பவெப்பநிலையில் ஏற்படத் தகும் மாறுதல்களை அறிய உதவும். ஆகையினால் போர்க்குச் செல்வோர்க்கு உதவியாகும். விண்மீன்களையும் கோள்களையும் அவை வானில் தோன்றுமாறு நோக்கிக் கணித்தலன்றி அவற்றின் இயக்கத்தை மானசீகமாக ஆராயின் அக்கல்வியும் சிந்திக்கும் ஆற்றலை வளர்க்கும். இறுதியில் **தர்க்கம்** அல்லது **அளவையாய்வு** (dialectics) பயிலப்படுதல் வேண்டும். அதுவே மெய்ம்மையை உணர உதவும். அப்போது இருட் குகையில் வாழ்ந்தோர் வெளிவந்து ஒளியையும் ஒளியில் பல பொருள்களையும் காணுதல் போல உண்மையையும் நன்மையையும் தூய அறிவினால் (pure reason) அறிதல் ஆகும்.

வீரமும் உறுதியும் மறதியின்மையும் கூர்ந்த அறிவும் உழைப்பும் உள்ளோரே இக்கல்விகளைப் பயில்தற்கேற்றோராவர். ஏனெனில் இப் பயிற்சிக்காகத் தெரியப்பட்டோர் உடற்பயிற்சியும் போர்ப்பயிற்சியும் செய்தவாறே இக்கல்விகளனைத்தையும் பயிலுதலும் வேண்டும். போர்க்கலையிலும் மேற்சொல்லப்பட்ட கல்விகளிலும் திறமை மிகுந் தோர் முப்பது ஆண்டு நிறையும் பருவம் பெற்ற அளவில் படைத் தலைவர்களாகவோ அரசியல் அலுவலர்களாகவோ அமர்த்தப்படுதல் வேண்டும். அப்பணிகளையும் சிறந்த முறையில் செய்து புகழ் பெற்றோரே ஐம்பது ஆண்டு நிரம்பியபின் ஆள்வோர் குழுவில் சேர்க்கப் படுதல் தகும்.

வீரர்கள், ஆள்வோர் ஆகியோர்க்கு அளிக்கப்படவேண்டிய கல்வியைக் குறித்து இத்தகைய பெருந்திட்டங்கள் வகுத்த பிளேட்டோ குடிமக்கட்கு அளிக்கப்படவேண்டிய கல்வியைக் குறித்து யாதும் தெளி வாகக் கூறவில்லை. அவர் தம்நூலின் இரண்டாம் பிரிவில் நகரில் உழவர், ஆடைநெய்வோர், கட்டடவேலைசெய்வோர், செருப்பு முதலிய தோற்பொருள்கள் செய்வோர், கொல்லர், தச்சர் என்னும் பல்வகைத் தொழிலாளர் இலக்கியல் நகரில் இருப்பர் எனவும் ஒவ்வொருவரும்

(பலதொழிலில் முயலாது) ஒவ்வொரு தொழிலைச் செய்தலே சிறப்பு எனவும் கூறுவதால் தொழிலாளர் அனைவரும் தத்தம் தொழிலை நன்கு கற்றிருப்பர் என ஊகித்தல் கூடும். அவர்களின் கல்வியைக் குறித்த பிற குறிப்புக்கள் நூலில் இல்லை. மருத்துவர்களைக் குறித்து மட்டும் சில கருத்துக்களைப் பிளேட்டோ தம் நூலின் மூன்ளும் பிரிவில் கூறினர். நல்நகரில் யாவரும் ஏற்ற உடற்பயிற்சி செய்தும் தக்க உணவையே உண்டும் உடல்நலத்தைக் காத்துக் கொள்வர் ஆகையினல் மருத்துவர் சிலர் இருத்தலே போதும். போரில் புண்ணுற்ருேர் தட்ப வெப்ப நிலையில் ஏற்படும் மாறுதலினுலும் முதுமையாலும் ஒரொருகால் நோய் உறுவோர் அத்தகையோர்க்கே மருத்துவம் வேண்டும். மருத்துவம் (treatment) சில நாட்களுள் செய்து முடிக்கப்படுதல் வேண்டுமேயன்றி நெடுநாள் நீடித்தல் ஆகாது. அதற்கேற்ற பயிற்சியை மருத்துவர் பெறுதல் வேண்டும். மருத்துவர் சிறுவயதிலிருந்து மருத்துவத் தொழிலைக் கற்றவராயும் பல நோயாளிகளை, கடும்நோயினல் பாதிக்கப்பட்டவர் உள்பட, பார்த்தறிந்தவராயும் இருத்தல் வேண்டு மெனவும் இப்பிரிவில் (பிரிவு மூன்று) கூறப்படுகிறது.

இனி கலைஞர்கட்கு ஆசிரியர் பல கட்டுப்பாடுகளை விதித்தார் என்பது முன்பே கூறப்பட்டது.

வள்ளுவர் கல்வியை அரசியலுட் கூறினும் பொதுவாக யாவர்க்கும் உரியதாகவே கூறினர். அது முன்பே விளக்கப்பட்டது (சமுதாயத்தின் பிற இயல்புகள், கல்வி பார்க்க). ஒரு குலத்தையோ பிரிவையோ சேர்ந்தவர்க்கோ அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட சிலருக்கோ சிறப்பாகக் கல்வியும் பயிற்சியும் அளிக்கப்படவேண்டும் என அவர் கூறவில்லை. "என்ஒருவன் சாந்துணையும் கல்லாத வாறு" (397) என்னும் வரிகளும் வள்ளுவர், மக்கள் தத்தம் முயற்சியினல் கற்றல் அல்லது தாமாக ஆசிரியரைத் தேடிக் கற்றலையே கருதினர், முழுவதும் அரசினரின் முயற்சியால் சிலர் கல்விபெறும் ஒரு நிலையைக் கருதவில்லை, என்பதைக் காட்டும். கல்வி யாவர்க்கும் உரியது. அரசு கற்ருேரைப் போற்றியும் கல்விக்கு ஊக்கமளித்தும் வருதல் கூடுமே யாயினும் மக்கள் தத்தம் முயற்சியால் கற்பதே தக்கது என்பதே குறளில் காணப்படும் கருத்து எனத் தோன்றுகிறது.

கல்வி நற்பண்புகளை வளர்த்தல் வேண்டும் என்பதும் கல்வி ஒழுக்கத்தினின்றும் பிரிக்கப்படாமல் ஒழுக்கத்தோடு பொருந்தியதாக வே யிருத்தல் வேண்டும் என்பதும் இருவருக்கும் பொதுவாய கருத்தே.

கல்வியுடையோர் கட்டுப்பாட்டுக் கடங்கி நடப்பர். தம்மை விடப் பெரியோரிடம் மதிப்புள்ளவராயும் அடக்கமுள்ளவராயுமிருப்பர் என வள்ளுவர் கருதியது போலவே பிளேட்டோவும் கருதினர். கல்வியைக் குறிப்பிட்ட பருவத்துடன் நிறுத்திக் கொள்ளாது வயது முதிர்ந்த பின்னும் தொடர்ந்து கற்றல் வேண்டும் என்பதும் மற்றொரு பொதுக் கருத்தாகும்.

கல்வி வகைகளை நோக்கும்போது வள்ளுவரும் பிளேட்டோவைப் போல் எண்ணைக் குறித்த கல்வியைப் போற்றினர். பிளேட்டோ கணிதநூற்கல்வியை ஆள்வோர்க்கும் வீரர்க்குமே கூறியிருப்ப வள்ளுவர்,

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு (392)

எனக் கூறிக் கணிதநூற்கல்வியையும் யாவர்க்கும் பொதுவாக்கினர்.

வான நூற்கல்வி வள்ளுவர் காலத்திலேயே தமிழ்நாட்டில் இருந்திருத்தல் வேண்டும் என்பதைக் கணியன் பூங்குன்றனர் என்ற புறநானூற்றுக் கவிஞரின் பெயராலும் ஞாயிறு முதலியவற்றின் நிலையையும் இயக்கத்தையும் குறித்துச் சில பாடல்களில் (புறம். 30) வரும் குறிப்பாலும் அறியலாம். சேரன் செங்குட்டுவன் அவையில் வான நூலில் வல்ல கணியொருவன் இருந்ததாகவும் அவன் செங்குட்டுவனுடன் வடநாடு சென்று போர் முற்றியபின் பாசறையில் இருந்த அரசற்கு அவர்கள் வஞ்சியினின்றும் நீங்கி முப்பத்திரண்டு திங்களாயின என அறிவுறுத்தியதாகவும் சிலப்பதிகாரம் கூறுகின்றது (சிலம்பு. 27 : 148-150). பிளேட்டோ கூறியது போலவே போர் மேற்செல்வோர்க்கு வான நூலறிவு இங்கும் பயன்பட்டது. வான நூலறிவு மெய்யுணர்வு பெற விரும்புவோர்க்கும் துணை செய்யும் என அவர் கருதியதற்கொப்பக் கணியன் பூங்குன்றனர்,

தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே (புறம். 192 : 2-4)

என்று கூறத்தக்க தத்துவ மனப்பான்மையுடையவராக இருந்தார். ஆயினும் வள்ளுவர் வான நூற்கல்வியைக் குறிப்பிட்டு யாதும் கூறவில்லை.

வள்ளுவர் துறவியர்க்குக் கூறிய மெய்யுணர்தலைப் பிளேட்டோ ஆள்வோர்க்கு வேண்டியதாகக் கூறியமை கருதத்தக்கது. பிளேட்டோ

வின் இலக்கியல் நகரில் துறவியர் இல்லை ஆனால் ஆள்வோர் இவ்வுலக வாழ்க்கையைப் பெரிதாக மதிக்காதவராய்ச் சாதலுக்கு அஞ்சாதவராய்த் தன்னலமற்றவராய்ச் செல்வத்தில் ஆசையில்லாதவராய் அணிகலன்கள் முதலியவற்றை அணியாதவராய் ஓரளவு துறவுமனப் பான்மையுள்ளவராய்த் திகழ்தல் வேண்டுமெனப் பிளேட்டோ கருதியதாகத் தெரிகிறது. உலகில் உள்ள தூலப் பொருள்களை அவை தோன்றுமாறே கண்டறிவது உண்மையறிவன்று எனக் கருதியே வள்ளுவர்,

> எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு (355)

எனக் கூறினர். "உண்மையாக அறிவை நாடுகிறவன் மெய்ப்பொருளை உணரக் கூடியவரையில் முயல்வான்; பொதுவாக உண்மையெனக் கருதப்படும் பற்பல தோற்றங்களை அறிவதோடு அமைதியடையாது, அவன் சலிப்படையாதவனாகி, மேலும் முயன்று ஒவ்வொரு பொருளையும் தன் ஆன்மாவின் எக்கரணத்தினாலறிய முடியுமோ அதனால் உண்மையாக அறியும் வரை தவிரான், இவ்வாறு நாம் கூறுவது நல்ல வாதமாக இருக்குமல்லவா?" எனப் பிளேட்டோவின் உரையாடலில் உண்மை அறிவைக் குறித்துக் கூறப்படுகிறது.[16] ஆனால் இத்தகைய மெய்யுணர்வு பற்றறுத்து விட்டையடைவதற்குப் பயன்படுவதற்குப் பதிலாகப் பிளேட்டோவின் நல்நகரில் சமுதாயத்தை நன்முறையில் ஒழுங்கு செய்வதற்கும் நாட்டை நன்முறையில் ஆள்வதற்கும் பயன்படுகிறது. அதுவே வேறுபாடு.

இனி, பிளேட்டோவைப் போலக் கவிஞர்களையோ கலைஞர்களையோ கட்டுப்படுத்த வேண்டுமென வள்ளுவர் கருதவில்லை. கவிஞர் அல்லது பேச்சாளர் தம் சொற்றிறமையினால் மக்கள் மனதை மாற்றக் கூடியவராவர் என எண்ணியே வள்ளுவர் 'கொள்ளற்க சொல்லே

---

16. Ibid. P. 205.

"Then shall we not be making a reasonably good defence, if we say that the natural tendency of the real lover of knowledge is to strain every nerve to reach real existence; and that far from resting at those multitudinous particular phenomena whose existence falls within the region of opinion, he presses on, undiscouraged, and desists not from his passion, till he has apprehended the nature of each thing as it really is, with that part of his soul whose property it is to lay hold of such objects in virtue of its affinity to them".

ருழவர் பகை' (872) என்றார். அரசன் அவர்களை மதித்து நடக்க வேண்டுமென்று கூறினாரேயன்றி அவர்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி மக்கள் கருத்துக்களையோ உணர்ச்சிகளையோ ஆள்வதற்காக இன்ன இன்ன வகையில்தான் எழுத வேண்டும் எனக் கட்டுப்படுத்தும் எண்ணம் வள்ளுவர்க்கு இல்லை. இசை முதலிய கலைகளையும் அரசர் தடுக்கவோ கட்டுப்படுத்தவோ வேண்டுமென அவர் கருதவில்லை. கலைகள் தாமாக வளர்வதையே விரும்பினார். வள்ளுவர் விரும்பும் சமுதாயத்தில் குழலையும் யாழையும் பலரும் பயிலுதல் கூடும். கேட்கும் வாய்ப்பை யாவருமே பெறுவர். அத்தகைய வாய்ப்பு இருக்கும் இடத்தில்தான் 'குழலினிது யாழினிது' என மக்கள் கூறுவர். பிளேட்டோவின் நகரிலோ குழலினிது என யாரும் கூறார்.

இவ்வாறு இவ்விரு அறிஞர்களின் நூல்களினிடையே கல்வியையும் கலையையும் குறித்த கருத்துக்கள் பல வேறாகக் காணப்படுகின்றன.

## 8. 1. 3. பிற செய்திகள்

வீரர் குலத்து மாதரின் நிலையைப் பிளேட்டோ தம் நூலின் ஐந்தாம் பிரிவில் விளக்கினார். வீரர் குலத்தில் பிறந்த பெண்களும் ஆடவர்களைப் போலவே சிறுவயதிலிருந்து உடற்பயிற்சியும் தக்க வயதில் போர்ப் பயிற்சியும் அளிக்கப்படுவர். வீர உணர்ச்சியும் உடல் வலிமையும் உள்ள மாதரும் போரில் பங்குபற்றலாம் என்பது ஆசிரியர் கருத்து. (வீரர் குலத்தில் பிறந்த ஆடவரோ மகளிரோ உடல் வலிமையோ அன்றி வீரமோ அற்றவர்களாக இருப்பின் அவர்கள் தொழிலாளரினத்தில் சேர்க்கப்படுவர்; போர்ப்பயிற்சி பெறார்.) போர்ப்பயிற்சி பெற்ற மாதர் பின் போரிலும் நாடுகாவலிலும் பங்கு பெறுவர். அவர்களும் பாடிவீடுகளிலேயே தங்குவர். பொதுவான அட்டில்களில் ஆக்கப்படும் உணவையுண்பர். அவர்கட்கும் தனித் தனி இல்லங்கள் இரா. இல்லங்கள் இல்லாதிருப்பவே குடும்ப வாழ்க்கை எவ்வாறு கூடும்? அவர்களின் அகவாழ்வும் பிறரினின்றும் வேறானதே. அரசியல் அலுவலர் இவ்வீரர்கட்குத் திருமணவிழாக்கள் நடத்துவர். அவ்விழாவின்போது சீட்டின் படியோ (by casting lots) அலுவலர் சொற்படியோ அவ்விழாவில் பங்குபெறும் வீரர்குலத்து ஆடவன் ஒவ்வொருவனும் ஒரு வீரமாதை மணம் புரிவன். இவ்விழாக் களில் வழிபாடு நிகழ்த்தப்படும்; கவிஞர்களால் பாடல்கள் பாடப்படும்.

ஆயினும் இத்தகைய சிறப்புக்களுடன் நிகழும் திருமணப் பிணைப்பு குறிப்பிட்ட குறுகியகால அளவு மட்டுமே நீடிக்கும் எனத் தோன்றுகிறது. அதன்பின் மணம் செய்தோர் பிரிவர்.[17] மறுபடி திருமண விழா நிகழ்த்தப்பெறும் வரையில் வீரர்குல மங்கையரும் ஆடவரும் பிரமச்சரியம் பூண்டொழுக வேண்டியவரே. வீரர்குல மாதர்கட்குப் பிறக்கும் குழந்தைகளனைத்தும் உரிய அலுவலர்களால் எடுத்துச் செல்லப்பட்டு அரசால் நடத்தப்படும் குழந்தைகளில்லங்களில் வளர்க்கப்படும். அங்குத் தாதியரும் பணி மக்களும் குழந்தைகளைக் கவனித்துக் கொள்வர். பெற்றோர் யார் என்பது குழந்தைகட்குத் தெரியலாகாதென்றும் பெற்றோர்க்கும் தங்கள் சொந்தக் குழந்தைகள் யாரென்று தெரியலாகாதெனவும் பிளேட்டோ கருதினர். வீரர்களிடையே தனித் தனிக் குடும்பபாசமின்றி அவர்களனைவரும் ஓரே குடும்பமாக வாழ்வதே நாட்டின் நலனுக்கேற்றதாகும் என்பது ஆசிரியர் கருத்து.

ஆசிரியர் இக்கருத்துக்களைக் கூறியது வீரர் குலத்தைக் குறித்தே. பிறகுடிமக்கள் நிலையான குடும்ப வாழ்க்கை உடையராய் இல்லங்கள் அமைத்து வாழலாம் போலும். அதுவும் நூலில் தெளிவாகக் கூறப்படவில்லை. நகரில் மிகச் சிறந்தவராகக் கருதப்படும் வீரர்கட்கு இல்லமே இல்லாத முறையில் பிளேட்டோ தம் சமுதாயத்தை வகுத்ததிலிருந்து அவர் இல்லறத்தை முக்கியமாகக் கருதவில்லை எனத் தெரிகிறது.

வள்ளுவரோ இல்லறவியலையே தம் நூலின் முதலியலாக அமைத்தார். நிலையான குடும்ப வாழ்க்கையே ஏனைய பண்புகளைத் தரும் எனக் கருதினர். மனைவியை வாழ்க்கைத்துணை எனக் குறிப்பிட்ட வள்ளுவர் வேண்டியது நிலையான திருமணப்பிணைப்பே. பெற்றோர் தத்தம் குழந்தைகளைப் பேணி வளர்ப்பதையே விரும்பினர் என்பது தெளிவு. தம்மக்கள் சிறுகை அளாவிய கூழை அமிழ்தென உண்டு

---

17. பிளேட்டோ கூறும் வீரர்குலத் திருமணங்கள் தற்காலிகமானவையே. அவை எவ்வளவு நாட்கள் நீடிக்கும் என்பது நூலில் தெளிவாகக் கூறப்படவில்லை. நீடிக்கும் காலம் ஒரு திங்களாக இருக்கலாம் என இந்நூலைப் படித்து விளக்கும் சில அறிஞர் கருதுகின்றனர். William Ebenstein, Great Political Thinkers, Chap. I, Plato, P. 49 (foot note): "The couples will cohabit during the festival which might last (say) for amonth. The marriages will then be dissolved and the partners remain celibate until the next festival at earliest. This follows from the statement that the resulting batch of children will be born between seven and ten months after the festival".

அமைதலும் குழந்தை மெய்தீண்ட உவத்தலும் மழலைகேட்டு மகிழ்தலும் பெற்றோர் சிறப்பு என்பதை உணர்ந்த வள்ளுவர் குழந்தைகளைப் பிரித்து வளர்க்கும் முறையை ஒரு போதும் விரும்பார். மேலும்,

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல் (67)

எனக் கூறிக் கல்வி கற்பித்தலையும் நற்பண்புகள் பயிற்றுவித்தலையும் தந்தையின் கடமையேயாக்கினர். அரசின் பொறுப்பாகக் கருதவில்லை. இல்லற வாழ்க்கையிலிருந்தே விருந்தோம்பல் இனியவை கூறல் முதலிய நல்லறங்களும் அடக்கம், பொறை, ஒழுக்கம் முதலிய பண்புகளும் தோன்றும் என வள்ளுவர் கருதினர். பிளேட்டோ வீரர்கள் தனித்தனிக் குடும்பங்களின்றி அனைவரும் ஒரு குடும்பம் போலச் சேர்ந்து வாழ்வதால் அவர்களிடையே நாட்டுப்பற்று, பரந்த அன்பு, இளைஞர் முதியோர்க்கு மதிப்பளித்தல் முதலிய நல்லியல்புகள் வளரும் என நம்பினர்.

இல்லத்தைக் குறித்த கருத்துக்கள் இவ்வாறு வேறுபட்டன. பிற பொருள்களில் சில பொதுக்கருத்துக்களும் உள.

நல்நகரில் மக்கள் கூடியவரை நோய் ஏற்படாது தங்களைப் பாதுகாத்துக் கொள்ளல் வேண்டுமென்றார் பிளேட்டோ. சோம்பலினலோ அதிக உணவினலோ நோயைத் தேடிக்கொண்டு பின் மருத்துவரை நாடுதல் இழிவாகும் என்ருர்.[18] இது, உணவு, உறக்கம், உழைப்பு அனைத்தையும் மிகாமலும் குறையாமலும் காத்து நோயைத் தடுத்தல் வேண்டுமெனக் கூறிய வள்ளுவர் கருத்தோடு ஒத்ததே. நன்முறையில் உடற்பயிற்சி செய்தும் ஏற்ற உணவையே உண்டும் பாதுகாக்கப்பட்ட உடலுக்குப் போரில் காயம் ஏற்பட்டபோது மட்டுமே மருத்துவ உதவி வேண்டியிருக்கும் பிறவகையில் மருந்து வேண்டியதில்லை என்ருர் பிளேட்டோ. வள்ளுவரும்,

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் (942)

எனக் கூறி உணவில் கட்டுப்பாடு இருப்பின் மருந்து வேண்டா என்ருர்.

வீரர்கள் கலங்கா உள்ளமுடையவராய் இருத்தல் வேண்டுமெனப் பிளேட்டோ விரும்பினர். மரணத்தைக் கண்டு அவர்கள்

---

18. Plato, The Republic, P. 102.

அஞ்சுதலாகாது. துன்பம் நேர்ந்தபோது கலக்கமடைதல் ஆகாது. நண்பனொருவன் இறந்துவிட்டால் அழுது புலம்புதலுமாகாது. ஆகையினாலேயே அவர் கதைகளிலும் பாடல்களிலும் கூறப்படும் சிறந்த வீரர்களையும் அத்தகைய நிலையில் அழுது புலம்புபவர்களாகக் காட்டுதலாகாது என்றார்.[19] தமிழில் பிற்காலக்காவியங்களில் (வில்லி பாரதம் கம்பராமாயணம் போன்றவற்றில்) நண்பனோ உறவினனோ போரில் இறந்தபோது வீரர்களும் அழுது புலம்புவதாகக் கூறப்படுகின்றதெனினும், வள்ளுவர் இடுக்கண் அழியாமை என்னும் பத்தில் கூறுங் கருத்துக்கள் இக்கிரேக்க அறிஞரின் கருத்தோடு ஒத்தவையே. 'அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற இடுக்கண் இடுக்கட் படும்' (625) 'துன்பத்துள் துன்பம் உறுதல் இலன்' (629) என்ற வரிகள் இதைக் காட்டும். புறநானூற்றிலும் போரில் மகனோ, கணவனோ, சகோதரரோ இறந்தபொழுதும் கலங்காது நிற்கும் காரிகையருள் புலவரால் போற்றப்படுகின்றனரென்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.[20]

பிளேட்டோவின் நூலில் இடையிடையே சில சமயக்கருத்துக்கள் காணப்படுகின்றன. கடவுள் நல்லவர். நன்மைக்கே காரணமாக இருப்பார், தீமைக்குக் காரணமாக இரார் என்பதும் ஒன்றாகும். "அவ்வாறாயின் கடவுள், தாம் நல்லவராக இருப்பதனால், பொதுவாகக் கருதப்படுவது போலவே யாவற்றிற்கும் காரணமாக இரார். மாறாக மக்கள் வாழ்க்கையில் சிறுபகுதிக்கே அவர் காரணமாவர்; பெரும் பகுதிக்கு அவர் காரணர் அல்லர்; ஏனெனில் நம்மிடத்து நன்மையை விடத் தீமையே அதிகமாக இருக்கிறது; நன்மைக்கு மூலம் கடவுளே எனக் கூறலாம். தீமைக்கு அவரையன்றி வேறு காரணத்தைத் தேடுதல் வேண்டும்" எனப் பிளேட்டோ கூறுகின்றார்.[21] இக்கருத்தும் வள்ளுவர், இறைவனை 'அறவாழியந்தணன்' (8) எனக் குறிப்பிட்ட

19. Ibid, P. 77-78

20. புறநானூறு 277, 278, 279, 295.

21. Plato, The Republic, P. 68.

"If that be so, then God, in as much as he is good, cannot be the cause of all things, according to the common doctrine. On the contrary, he is the author of only a small part of human affairs; of the larger part he is not the author; for our evil things far outnumber our good things; and the good things we must ascribe to no other than God, while we must seek elsewhere and not in him, the causes of the evil things."

தற்கு ஒத்ததே யாகும். இறைவனை அறவாழியந்தணன் எனக் குறிப்பிடுவதால் அவர் அறத்துக்கு முதல்வர் என்பதும் அறமல்லாதவற்றிற்கு முதல்வரல்லர் என்பதும் தெளிவாகும்.

இப்பகுதியில் பிளேட்டோவின் கருத்துக்கள் பல வள்ளுவரின் கருத்துக்களுடன் ஒப்பிடப்பட்டன. வள்ளுவர் காட்டும் சமுதாயத்தையும் பிளேட்டோ காட்டும் சமுதாயத்தையும் ஒப்பிடுங்கால் பொதுவாக இரண்டும் பல நல்லியல்புகளைக் கொண்டிருப்பினும் முன்னது இயற்கையொடு பொருந்தியதாகவும் பின்னது ஓரளவு செயற்கையாக அமைக்கப்பட்டதாகவும் தோன்றும். வள்ளுவர் இல்லத்தையடிப்படையாகக் கொண்டார். குடும்ப அன்பு, நட்பு முதலிய இயல்பாக எழும் அன்புத்தொடர்களைப் போற்றினர். பிளேட்டோ அவ்வாறன்றி அன்பையும் பாசத்தையும் பயிற்றுவிக்க முடியுமெனக் கருதியதாகத் தோன்றுகிறது. ஆள்வோரும் வீரரும் இயல்பான குடும்ப வாழ்க்கையின்றி வீரர் குலத்தையே ஒரு குடும்பமாகவும் குறிப்பிட்ட வயதுக்குட்பட்ட வீரர்குலச் சிறுவரனைவரையும் தம்மக்களாகவும் வயதில் சற்றுப் பெரியோரைச் சகோதரராகவும் வயது முதிர்ந்தோரைப் பெற்றோர் போலவும் கருதுமாறு பழக்கப்பட வேண்டும் என்றார். மற்றொரு பெரும்வேறுபாடு பிளேட்டோவின் சமுதாயம் கட்டுப்பாடு நிறைந்ததாயும் வள்ளுவரின் சமுதாயம் தனிப்பட்டோர்க்கு அதிக உரிமை வழங்குவதாயும் இருப்பதே. பிளேட்டோவின் சமுதாயத்தில் ஆள்வோர், வீரர், குடிமக்கள் என்னும் பிரிவு ஆள்வோராலேயே நியமிக்கப்படுகிறது. வீரர் குலத்தில் பிறந்தோர் அல்லது மிகச் சிறந்த பண்புகளுடன் விளங்குவதால் குடிமக்களினத்தினின்றும் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சிலரே வீரராகலாம். அவர்களே அதற்கேற்ற கல்வியும் பயிற்சியும் பெறுதல் கூடும். பிறர் தத்தம் தொழில்களையே (அவையும் பெரும்பாலும் பரம்பரையாய் வருவன போலும்) செய்தல் வேண்டும். கலைகளும் இலக்கியங்களும் பெரிதும் கட்டுப்படுத்தப்படுகின்றன. வள்ளுவரின் சமுதாயத்திலோ கல்வியிலும் கலையிலும் கட்டுப்பாடு இல்லை; பெரும்பாலும் வீரன்மகன் வீரனாக வளரும் இயல்பு நாட்டில் காணப்பட்டதேயன்றிப் பிறர் போர்ப் பயிற்சி பெறலாகாது என்ற கட்டுப்பாடும் இல்லை. தொழில்களும் கலைகளும் இயல்பாக வளர மக்கள் தத்தம் திறமைக்கும் முயற்சிக்கும் ஏற்றபடி முன்னேறத்தக்க ஒரு நாட்டையே வள்ளுவர் கண்டார். மக்களின் உள்ளத்தில் இயல்பாக எழத்தக்க அன்பு, ஆர்வம், ஊக்கம் ஆகியவற்றின் வழியே அறங் கூறினர். வாழ்க்கை முழுவதையுமே செயற்கையாக அமைக்க அவர் முயலவில்லை.

## 8. 2. மூர் கண்ட உட்டோப்பியா

தாமஸ் மூர் என்ற ஆங்கில நாட்டறிஞர் 15-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர் (1478-1535). அவர் காலத்தில் கிருஸ்தவச் சீர்திருத்த இயக்கம் (Reformation) ஐரோப்பிய நாடுகளில் பரவிக்கொண்டிருந்தது. அக்காலத்தில் ஐரோப்பிய நாட்டவர் பலர் கடற்செலவு மேற்கொண்டு பிற நாடுகளுக்குச் செல்லும் கடல்வழிகளை ஆயவும் முற்பட்டனர். கலம்பஸ் (Colombus) அமெரிக்காவைச் சென்றடைந்ததும் டகாமா (De Gama) ஆப்பிரிக்காவின் தென்முனைக்கு வழி கண்டதும் மூர் இளைஞராயிருந்த காலத்திலேயே. சீர்திருத்த இயக்கமும் புதுநாடுகளைப்பற்றிய அறிவும் அக்கால ஐரோப்பிய மக்களைச் சமுதாய அமைப்பைக் குறித்தும் நல்லரசாட்சியைக் குறித்தும்நல்ல நாட்டில் இருக்கத் தகுந்த நடைமுறைகளைக் குறித்தும் பலவாறுசிந்திக்கும்படி தூண்டியிருத்தல் வேண்டும். அதன் பயனாகவே தாமஸ் மூரும் தம் நூலை எழுதினர் போலும்.

மூர் கல்வியிற் சிறந்தவர்; ஆங்கில நாட்டில் அக்காலத்தில் நிலவிய சட்டங்களைக் கற்றறிந்த சட்ட வல்லுநர்; தம் நாட்டு அரசியலில் பங்கு பற்றியவர்; அரசரோடுறவாடியவர். இறுதியில் கொள்கைக்காக (ஆங்கில நாட்டரசரே ஆங்கில நாட்டுக் கிருஸ்தவத் திருக்கூட்ட முழுமைக்கும் தலைவர் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள மறுத்ததால்) உயிர் நீத்த தீரர்.

மூர் இலத்தீன் கிரேக்கமாகிய பண்டை ஐரோப்பிய மொழிகளையும் கற்றறிந்தவரே. பிளேட்டோவின் அரசும் அதில் கூறப்பட்ட கருத்துக்களும் இவ்வறிஞர்க்குத் தெரிந்தவையே. மூர் இந்நூலிலிருந்து பல கருத்துக்களை ஏற்றுக்கொண்டாராயினும் அதை முற்றவும் தழுவவில்லை; தம் கருத்துப்படி தம் நூலை எழுதினர்.

பிளேட்டோவின் அரசு ஓர் உரையாடல் வடிவில் எழுதப்பட்டிருப்ப மூரின் உட்டோப்பியா ஒரு செலவு இலக்கியத்தைப் போல எழுதப்பட்டுள்ளது. ஆயினும் அது உண்மைச் செலவன்று. கற்பனையே. கடற்செலவின் மூலமாகவும் தரைச் செலவின் மூலமாகவும் பலநாடுகட்குச் சென்று பற்பல நாடுகளில் உள்ள பழக்க வழக்கங்களையும் அரசாட்சி முறைகளையும் அவ்வந்நாடுகளில் நிகழும் தொழில்கள் போர்முறைகள் முதலியவற்றையும் கண்டறிந்த ஒருவன் தான் கண்டவற்றுள் சிறந்த நாடு ஒன்றைக் குறித்துச் கூறுவது போலவே நூலின் பெரும்பகுதி

எழுதப்பட்டுள்ளது. அச்சிறந்த நாட்டின் பெயர் உட்டோப்பியா எனக் கூறப்படுகிறது. அக்கற்பனை நாட்டின் பெயரே நூலின் பெயருமாயிற்று.

ஆசிரியர் தம் நூலின் முற்பகுதியில் ஆங்கில நாட்டிலும் (England) பிரெஞ்சுதேயத்திலும் (France) அக்காலத்து அரசியலிலும் சட்டங்களிலும் இருந்த சில குறைகளை எடுத்துச்சொல்லி அவற்றை நீக்கத்தக்க வழிகளையும் காட்ட முயல்கிறார். பின்பே உட்டோப்பியாவைப் புனைந்துரைக்கிறார். இவ்விரு பகுதிகளிலுள்ள கருத்துக்களையும் இங்கு வெவ்வேறாக ஆய்தல் பொருந்தும்.

## 8. 2. 1. அக்கால ஆங்கில பிரெஞ்சு நாடுகளில் காணப்பட்ட சில இயல்புகள்

ஆங்கில பிரெஞ்சு நாடுகளின் அரசியலிலும் சமுதாயத்திலும் காணப்பட்ட சில இயல்புகளைக் குறித்த தம் கருத்தை யாசிரியர் பிற நாட்டவனொருவன் அவற்றைக் கண்டு கூறுவது போலத் தம் நூலில் தெரிவிக்கின்றார். ஆங்கில நாட்டைக் குறித்து அவர் சொல்லும் குறைகள் திருட்டு முதலிய சிறு குற்றங்களுக்குப் பெருந்தண்டனையளிக்கப்படுவதும் நாட்டில் பலர் ஏற்ற ஒரு தொழில் பயிற்றுவிக்கப்படாது வளர்வதுமே யாகும்.

அக்கால ஆங்கில நாட்டில் திருட்டுக் குற்றத்திற்காகக் கொலைத் தண்டனையளிக்கப்பட்டதென இந்நூலில் கூறப்படுகிறது. ஆயினும் நாட்டில் திருட்டுக் குற்றம் ஒழியவில்லையாம். திருட்டு பெருகுவது எதனால், எத்தகையோர் திருடராக மாறுகின்றனர் என்பதை ஆசிரியர் ஆய்கிறார். அக்கால ஆங்கில நாட்டில் பெருஞ் செல்வர்கள் பலர் இருந்தனர். அவர்கள் நிலக்கிழார்கள்; தாம் வேலை செய்யாது நிலத்தைப் பிறர் பயிர் செய்யவிட்டு நிலத்தினின்றும் கிடைக்கும் வரும்படியைச் செலவு செய்து செல்வச் செழிப்புடன் வாழ்ந்தனர். தாம் தொழில் செய்யாதிருந்தது மட்டுமன்றி மிகப்பல பணியாட்களையும் தம்மாளிகைகளில் அமர்த்தினர். இவர்கட்கும் கடின வேலையில்லை. நல்லுணவும் ஆடைகளும் கிடைத்தன. இத்தகையோர் உடல்நலமின்மையினாலோ வேறு காரணங்களினாலோ செல்வர் வீட்டுப் பணியையிழந்தபோது ஏனைய கடின வேலைகளில் ஈடுபட முடியாதவர்களாய்த் துன்புற்றனர். சில வேளைகளில் திருட்டில் ஈடுபட்டனர்.

வயல்களினல் கிடைக்கும் வரும்படியைவிடச் செம்மறியாடுகளை வளர்த்துக் கம்பளி செய்வதால் அதிக வரும்படி கிடைத்ததனுல் அக்காலச் செல்வர் பல வயல்களை வாங்கி ஆடு வளர்க்குமிடங்களாக மாற்றினராம். குறிப்பிட்ட அளவுள்ள நிலத்தில் வயலில் வேலை செய்வதற்கு வேண்டிய ஆட்களைவிட ஆட்டுமந்தைகளைக் கவனிப் பதற்குக் குறைந்த எண்ணிக்கையுள்ள ஆட்களே தேவைபட்டனராம். இம்முறையில் முன்பு வயலில் வேலை செய்தோர் பலர் (அந்நிலங்கள் ஆட்டுப் பண்ணைகள் ஆகிவிட்டதனுல்) வேலையை இழந்தனர். பிழைப்புக்கு வழியில்லாது போகவே அவர்களிற் சிலரும் திருடராயினர்.

வயல்கள் ஆட்டுப் பண்ணைகளாக மாற்றப்படுவதால் உணவுப் பொருள்களும் அரிதாயின. அதிகவிலை பெற்றன. அதனுல் பலர் வீடுகளில் வேலையாட்களைக் குறைக்கின்றனர். வேலை செய்ய இயலாத நிலையிலிருக்கும் உறவினரை ஆதரிக்க முடியாதவராகின்றனர். இவ்வாறு விடப்பட்டோரும் பிச்சை யெடுக்கவோ திருடவோ முற்படாமல் ஏது செய்வர்?

திருட்டுக்கே கொலைத் தண்டனை விதிக்கப்பட்டால் திருடர் கொலை செய்யவுந்துணிவர். ஏனெனில் அகப்பட்டால் இரண்டிற்கும் ஒரு தண்டனை தானே.

திருட்டுக்குக் கடுந்தண்டனை விதிப்பதைவிட அதற்குரிய காரணங்களையறிந்து ஒழிப்பதே சிறந்த பயனைத் தரும் என ஆசிரியர் கருதுகிருர். நாட்டில் யாரும் வீணே பொழுதைக் கழித்தலின்றித் தொழில்களில் ஈடுபட வேண்டும். பயிர்த்தொழிலும் ஆடை நெய்தலும் அதிகமாகப் பயிற்றுவிக்கப் படவேண்டும்.

நாட்டில் திருட்டுக் குற்றத்திற்கு ஒரு தண்டனையும் இல்லாம லிருத்தலும் ஆகாது. அவ்வாருயின் சிலர் தொழில் செய்வதை விட்டுவிட்டுத் திருடுதல் கூடும். ஆகவே திருடர்கட்கு வேறுவகைத் தண்டனையை விதிக்கிருர் ஆசிரியர். அவர்கள் குறிப்பிட்ட காலம் வரையில் வேலையாட்களாக இருக்கும்படி தண்டனை விதிக்கப்படுதல் கூடும். நாட்டிற்குரிய பொது வேலைகளில் அவர்கள் தொழில் செய்யும் படி ஒழுங்கு செய்யப்படலாம். அவ்வாருயின் அவர்கள் பொதுமக்க ளிடமிருந்து சேகரிக்கப்படும் பணத்தில் உணவளிக்கப்படுவர். அல்லது அவர்கள் தனிப்பட்டோர்க்கு வேலையாட்களாக அன்றன்று அமர்த்தப்பட்டு உணவும் ஊதியமும் பெறுதல் கூடும். பகலில் உரிய

இடங்களுக்குச் சென்று தொழில் செய்யும் அவர்கள் இரவில் மட்டுமே சிறைச்சாலைகளில் அடைக்கப்படுவர். அவர்கள் கைதிகட்குரிய ஆடைகளையே அணிய வேண்டும், பணமோ ஆயுதங்களோ வைத்திருத்தலாகாது, தத்தம் ஊரினின்றும் (shire) வெளியே செல்லுதலாகாது என்ற விதிகளிருப்பதனால் அவர்கள் தப்பி ஓடுதல் இயலாது. மேலும் தப்பியோட முயலின் அவர்கள் கொலைத்தண்டனைக்காளாவர். கீழ்ப்படிதலுடனும் உண்மையுடனும் நடந்து கொள்ளின் சில காலத்தின் பின் விடுதலை பெறுவர். இம்முறையே திருடர் திருந்துவதற்கும் அவர் உழைப்பினால் நாடு பயனடைதற்கும் ஏற்றதாகும் என ஆசிரியர் கருதுகிறார்.

சிறு குற்றங்கட்குக் கடுந்தண்டனை விதித்தலாகாதென்பதும் தண்டனை குற்றத்திற்கேற்றதாக இருத்தல் வேண்டுமென்பதும் வள்ளுவர் கருத்துமாகும்.

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங் கொறுப்பது வேந்து (561)

என்ற குறளினால் இது புலப்படும். ஆனால் வள்ளுவர் உட்டோப்பியா-வின் ஆசிரியரைப் போல நாட்டில் திருட்டு நிகழ்வதற்குக் காரணங்கள் எவை, அவற்றை எவ்வாறு நீக்கலாம், இக்குற்றத்திற்கு எத்தகைய தண்டனை ஏற்றது என ஆராயவில்லை. வள்ளுவர் கள்ளாமை என்னும் அதிகாரத்தைத் துறவறவியலில் வைத்ததனால் அக்காலத்தில் போலித் துறவியர் சிலர் துறவு வேடத்தில் மறைந்து களவில் ஈடுபட்டனரா என எண்ண இடம் உண்டு. ஆயினும் நாட்டில் களவு நிகழ்வதற்குக் காரணங்கள் என்ன என வள்ளுவர் ஆராயவில்லை.

அக்காலப் பிரெஞ்சு அரசரைக் குறித்து உட்டோப்பியா ஆசிரியர் கூறும் குறை அவ்வரசர் அடிக்கடி நாடு கவரும் போரில் ஈடுபடுகிறார் என்பதே. அதற்காக அவர் பெருஞ்செலவில் படைகளைத் திரட்டியும் படையில் பிறநாட்டவரையும் கூலிக்கு அமர்த்தியும் படையைப் பெருக்கினார். போர் வீரர்கள் அடிக்கடி போரில் ஈடுபட்ட பழக்கத்தினால் போர் இல்லாத காலங்களில்கூட குடிமக்களுடன் கலகம் செய்தும் அவர் பொருளைக் கவர்ந்தும் துன்பம் செய்தனராம். அரசர்கள் இவ்வாறு அடிக்கடி போரில் ஈடுபடலாகாதெனவும் அமைதியையே நாடவேண்டுமெனவும் பிறர் நாட்டைக் கவரப்போரில் ஈடுபடுவதைவிடத் தம் நாட்டை நன்முறையில் ஆளுவதிலேயே கவனத்தைச் செலுத்த வேண்டுமெனவும் ஆசிரியர் தம் கருத்தைக் கூறுகிறார்.

ஆசிரியர் கூறும் இக்கருத்து வள்ளுவர் கருத்துடன் ஒத்ததே. அரசர்கள் தேவையின்றிப் போரில் ஈடுபடுவதை அல்லது பிற நாட்டைக் கவரும் நோக்கத்துடன் போரில் ஈடுபடுவதை வள்ளுவரும் விரும்பவில்லை யென்பதை இகல் என்னும் அதிகாரம் காட்டும். கூடியவரை போர் இன்றி நாட்டையாள்வதே அரசர்க்குச் சிறப்பு என அவ்வதிகாரத்தில் அவர் விளக்குகிறார். அத்துடன்,

இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து (856)

எனக் கூறி எப்பொழுதும் போரையே நாடும் அரசர் இறுதியில் அழிவர் எனவும் எச்சரித்தார். ஆயினும் ஏற்றபோது பிற நாட்டவரை அல்லது பிற இனத்தவரைக் கூலிக்குப் படையில் அமர்த்தும் வழக்கம் தமிழ் நாட்டில் இருந்ததே. பரிமேலழகர் அறுவகைப்படையில் ஒன்றாகக் கூலிப்படையைக் குறிப்பிட்டார் (குறள் 762 உரை). அரசன் படையில் 'மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்' (சட்டையணிந்தவராய் அஞ்சத்தக்க தோற்றத்தையும் வலிமை பொருந்திய உடலையும் வீரத்தையும் உடைய யவனர். முல்லை. 60-61) இருந்தனர் எனவும் படையில் உள்ள யானைகளைப் பேணும் பணியாட்களுள் வடமொழி பேசுவோர் இருந்தனர் (முல்லை 35-36) எனவும் முல்லைப் பாட்டு கூறும். பிற நாட்டவர் அல்லது பிற மொழியினரைப் படையில் அமர்த்துவதைக் குறித்து வள்ளுவர் யாதும் கூறவில்லை.

உட்டோப்பியாவின் ஆசிரியர் தம் கால அரசர்களைக் குறித்துக் கூறும் மற்றொரு குறை அவர் பொருள் சேர்க்கும் முறைகளைப் பற்றியதாகும். போர் இல்லாதபோது போர் செய்வதாகக் காட்டிக் குடிகளை ஏமாற்றிப் பொருள் திரட்டுவது, சிறு குற்றங்கட்கு அதிகத் தண்டம் விதிப்பதன் மூலம் பொருள் பெறுவது, நாட்டுக்கு நன்மையல்லாதனவாகிய சிலபொருள்களைப் பொதுவாக விற்பனை செய்தலோ வழங்குதலோ ஆகாதெனத் தடைவிதித்துப் பின் அவற்றை விற்பனை செய்யவோ வழங்கவோ சிலர்க்கு உரிமையளித்து அவ்வுரிமைக்காகப் பொருள் பெறுதல் அதாவது அவ்வுரிமையை விற்றல் முதலிய முறைகளை ஆசிரியர் விரும்பவில்லை. இம்முறைகளினால் அரசர் அதிகப் பொருளைத் தேடுவதைவிடச் சிறிதளவு பொருளுடன் உளநிறைவடைதலே சிறப்பாகும் என ஆசிரியர் எண்ணுகிறார். தான் செல்வம் பெறும் பொருட்டுக் குடிகளை வறியராக்குவது அரசற்குப் பெருமையன்று. நாட்டின் வளத்தைப் பெருக்கிச் செல்வமுள்ள குடிகளையாள்வதே பெருமையாகும் என்றார்.

அரசர்கள் பொருளை நன்முறையில் தேடவேண்டும் என்பதே வள்ளுவர் கருத்துமாகும். திறனறிந்து தீதின்றி வந்த பொருளே அறத்தையும் இன்பத்தையும் தரும் என்றார் அவர் (754). மற்றும் குடிமக்களிடத்துத் தனக்குள்ள அருளோடும் அவர்கட்குத் தன்னிடத்துள்ள அன்போடும் பொருந்தி வராத பொருளை அரசர் ஏற்றுக் கொள்ளாது விலக்கல் வேண்டும் எனவும் கூறினர் (755). குற்றங்கட்குத் தண்டம் விதிப்பதன் மூலம் அரசர் பொருள் பெறும் முறை பண்டைத் தமிழகத்திலும் ஓரளவு இருந்ததே போலும். அரசர்கள் வழங்கத்தக்க தண்டனைகளைக் குறித்துக் கூறுமிடத்துப் பரிமேலழகர் 'துன்பம் செய்தல், பொருட்கோடல், கோறல் என ஒறுப்பு மூன்று' என்றார் (குறள் 549 உரை). இங்குப் பொருட்கோடல் கூறப்படினும் அப்பொருள் அரசற்குரித்தாயிற்ரு (அன்றிக் குற்றவாளி செய்த குற்றத்தினல் பாதிக்கப்பட்டோர்க்கு அளிக்கப் பட்டதா) என்பது தெரியவில்லை.

நச்சினர்க்கினியர், தொல்காப்பியம் புறத்திணையியலுள் 'ஐவகை மரபின் அரசர் பக்கமும்' (தொல். பொருள். 75 உரை) என்ற தொடர்க்கு உரை கூறுங்கால் 'அறத்திற் றிரிந்தாரைத் தண்டத்திற்குத் தகுமாறு பொருள் கோடலும்' அரசன் வருவாய்க்குரிய வழிகளில் ஒன்ருகும் என்றார். ஆனல் சங்ககாலத்தில் இவ்வழக்கு எவ்வளவு தூரம் பரவியிருந்தது என்பது ஆயத்தக்கது. நன்னன் என்னும் ஓர் அரசன், நீராடச் சென்ற ஒரு பெண் நீரினல் கொணரப்பட்ட பசுங் காயை எடுத்துத் தின்ற குற்றத்திற்காக அப்பெண்ணின் தந்தையும் உறவினரும் பல களிறுகளும் பொன்னும் கொடுக்கவும் கொள்ளாது அவளைக் கொல்லும்படி விதித்த ஒரு நிகழ்ச்சியைக் குறுந்தொகைச் செய்யுளொன்று (குறுந். 293) கூறுகிறது. ஆயினும் இது தனிப்பட்ட நிகழ்ச்சியா இவ்வாறு குற்றத்திற்குத் தண்டமாகப் பெரும் பொருளை அரசர் பெறுதல் (அல்லது குற்றம் செய்தோர் அளிக்க முன்வரல்) அக்கால வழக்கமா என்பது தெளிவின்று. தண்டப் பொருள் அரசற்குரிய வருமானங்களுள் ஒன்ருக வள்ளுவரால் கூறப்படவில்லை. இனி நாட்டுக்கு நன்மையல்லாத கள், சூது முதலியன வள்ளுவர் காலத் தமிழ்நாட்டில் இருந்தன எனினும் அரசர் இவற்றினின்றும் வரும்படி பெற்றதாகவும் தெரியவில்லை. வள்ளுவர் அரசர்க்குரிய பொருள்களாகக் கூறுவன சிலவே. குடிகள் இயல்பாகக் கொடுக்கும் கடமையுடன் (விளைபொருளில் அல்லது வரும்படியில் ஒரு பகுதி போலும்) வாணிபர்கள் தரும் சுங்கப் பொருளும் பகைவரை வென்று திறை

கொள்ளும் பொருளும் அரசர்க்குரிய என்றுர். சில உரையாசிரியர்கள் கூறும் பொருளின்படி தாயத்தார் இல்லாத பொருளும் நிலத்திற் கண்டெடுக்கப்படும் புதையற் பொருளும் அரசர்க்குரியனவாகும் (குறள் 756 உரை). இவையே நீதிவழி அரசர்க்குரிய பொருளாகக் கருதப்பட்டன.

## 8. 2. 2. உட்டோப்பிய நாட்டின் இயல்பு

அரசியலையும் சமுதாயத்தையும் குறித்து மேற்சொன்னவாறு சில கருத்துக்களைக் கூறிய பின்பே ஆசிரியர் நூலின் இரண்டாம் பிரிவில் ஒரு கற்பனை நாடாகிய உட்டோப்பியாவைக் குறித்துக் கூறுகிறுர். இயற்கையரணும் வளமும் நிறைந்த ஒரு தீவாக அது புனைந்துரைக்கப்படுகிறது. அதில் நகர்களனைத்தும் ஏறக்குறையச் சம அளவு தூரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. தலைநகர் தீவின் நடுவில் உள்ளது. நகர்களும் அரணும் அகழியும் பொருந்தியன. நகர்களில் வீடுகளும் தெருக்களும் திட்டமிட்டு நல்ல ஒழுங்கின்படி அமைக்கப் பட்டுள்ளன. வீடுகளனைத்தும் தோட்டங்களையுடையன. தலைநகர் வழியாக ஓடும் ஆறு அந்நாட்டுக்கு அழகு செய்கிறது.

உட்டோப்பியாவைக் குறித்து ஆசிரியர் கூறும் கருத்துக்களை இங்கு அரசியலும் போர் முறைகளும், தொழிலும் பொருளும், இல்லம், பிற செய்திகள் என்னும் தலைப்புக்களின் கீழ் ஆய்தல் பொருந்தும்.

### 8. 2. 2. 1. அரசியலும் போர்முறைகளும்

உட்டோப்பியா நாட்டில் அரசன் உளன். ஆனுல் அவன் பரம்பரை அரசுரிமை பெற்று ஆள்பவன் அல்லன். தெரிந்தெடுக்கப் படுபவனே. முப்பது குடும்பங்கட்குத் தலைவராக ஓர் அலுவலர் இருப்பர். பத்து அலுவலர்கட்கு (அவர்கட்குக்கீழ் உள்ள குடும்பங் களுக்கும் சேர்த்துத்) தலைமையாக ஒரு பேர் அலுவலர் இருப்பர். அலுவலரும் பேர் அலுவலரும் ஒன்று கூடி இரகசிய வாக்கெடுப்பின் மூலம் (secret election) அரசனைத் தெரிந்தெடுப்பர். தெரிந்தெடுக்கப் பட்ட அரசன், நன்முறையில் ஆளாததனுல் அரியணையினின்றும் அகற்றப்பட்டாலொழிய, வாழ்நாள் முழுதும் அரசனுகவே யிருப்பான். அலுவலர் ஆண்டிற்கொரு முறை தெரிந்தெடுக்கப்படுவர். ஒருவரே திரும்பவும் தேர்ந்தெடுக்கப்படுதல் கூடும். மூன்று நாட்களுக்கொரு முறை பேரலுவலர் தலைநகரிலுள்ள மன்றத்தில் அரசியல் செய்திகளை அரசனெடும் ஆய்வர். அவற்றைக் குறித்து ஒரு முடிவுக்கு வருமுன்

அலுவலர் தத்தம் பொறுப்பில் உள்ள குடும்பங்களுடன் கலந்தாலோ சித்துப்பின் அலுவலர் மன்றத்தில் கூடி முடிவு செய்தலும் கூடும். எப் பொருளையும் விரைவில் முடிவு செய்யாது நன்கு எண்ணியே பின் துணிவர். இவ்வாறு நாட்டின் செய்திகள் ஆய்ந்து முடிவு செய்யப் படும்.[22]

உட்டோப்பிய நாட்டுமக்கள் போரை விரும்பார். ஆயினும் ஆடவரும் பெண்களும் போர்ப்பயிற்சி பெற்றிருப்பர். அவர் போரில் ஈடுபடுவது தற்காப்புக்காகவோ அன்றி நட்புநாடு ஒன்றைக் காப்பதற் காகவோ அல்லது அருள் காரணமாகக் கொடுங்கோலாட்சியினுல் துன்புறும் வேறுநாட்டு மக்களை அதனினின்றும் விடுவிப்பதற்காகவோ வேயாம். நட்புநாட்டு வணிகரோ பிறகுடிமக்களோ பிறநாட்டவரால் துன்பமுற நேரின் பழி வாங்கவும் உட்டோப்பியர் படையுதவி செய்வர். போரினுல் வெற்றி பெறுவதைவிடச் சூழ்ச்சியினுல் வெற்றி பெறு வதையே சிறப்பாகக் கருதுவர். பகைவர் நாட்டில் சிலரை அறைப் படுத்த முயல்வர். அவ்வாறு பகைவர் நாட்டைச் சேர்ந்த சிலர் தம்மரசனையோ தலைவர்களையோ கொல்ல உதவி செய்யின் அவர்க்குப் பெரும் பொருளளித்துச் சிறப்புச் செய்வர். பின்னும் போர் நிகழுங்கால் அதிக அறிவும் நாகரீக முன்னேற்றமும் இல்லாத மற்ருெரு நாட்டு மக்களைக் கூலிப்படையாகக் கொண்டு அவர்களைப் பெரிதும் பயன் படுத்துவர். இவ்வாருகப் போரில் உட்டோப்பிய நாட்டு மக்கள் அழியாதபடி தடுத்துக் காத்துக்கொள்வர். உட்டோப்பிய நாட்ட வரில் போரில் ஈடுபடவிரும்புவோர் மட்டுமே போர்முனைக்கு அனுப் பப்படுவர். தற்பாதுகாப்புக்காகப் போர் நிகழின் அவசியமான போது யாவரும் போரில் ஈடுபட வேண்டியிருக்கும். பெண்களும் போரில் பங்கு பெறுவர். போர்முனையில் கணவனும் மனைவியும் தந்தையும் மகனும் அண்ணனும் தம்பியும் என உறவினரே அருகருகாக நிற்பர்; இயல்பான அன்பினுல் ஒருவரையொருவர் காத்துக் கொள்வர். உட்டோப்பியர் போர்முனையிலும் சூழ்ச்சிகளில் ஈடுபடுவர். பின்வாங்குவது போல் காட்டிப் பகைவர் பின் தொடர முயலுங்கால் திடீரெனப் போர் செய்வர். இவ்வாருகிய சூழ்ச்சி களினுலும் வெற்றி பெறுவர். படைக்கலமற்றவரை, அவர் ஒற்றராளு லொழிய, ஊறு செய்யார். வென்றபின் பகைவர் நாட்டை வீணுக அழியார். ஆனுல் போரினுல் ஏற்பட்ட பொருட் செலவைத் தோற்ருே

22. Thomas More, Sir., Utopia, (trans. Ralph Robinson), Macmillan and Co. Ltd., 1958, Book II, Chap. III, Magistrates.

ரிடமிருந்து பெறுவர். இவையே உட்டோப்பியரின் போர்முறைகளாகும்.[23]

உட்டோப்பிய அரசு திருக்குறள் காட்டும் அரசினின்றும் வேறுபட்டதே. அங்கு அரசனிருப்பினும் அவன் மக்களால் தெரிந்தெடுக்கப்படுவதால் அது ஒருவகை மக்களாட்சியே. அங்கு அமைச்சர்க்குப்பதில் பேரலுவலர்கள் உளர். அவர்களும் தெரிந்தெடுக்கப்படுவோரே. வள்ளுவர் காட்டும் அரசோ முடியாட்சியே யாகும். அரசன் குடிகளின் நலத்தைக் கருதியேயாளினும் அது நல்லியல்புடைய முடியாட்சியே. வள்ளுவர் காட்டும் சமுதாயத்தில் அமைச்சர்களும் மக்களால் தெரிந்தெடுக்கப்படுபவர் அல்லர்; அரசனல் நியமிக்கப்படுவோரே. அரசன் அமைச்சர் ஆலோசனையைக் கேட்டு ஆள்வன் என எதிர்பார்க்கப் படினும் அவன் அவர் சொல்லுக்குக் கட்டுப்பட்டவன் அல்லன். முடிபு அரசனுடையதே. உட்டோப்பியாவிலோ அலுவலர்மன்றத்தின் முடிபே முடிவாகும். ஆகவே அது எவ்வகையிலும் மக்களாட்சியே யாகும்.

உட்டோப்பியர் போரை விரும்பாதிருத்தலும் தற்பாதுகாப்புக்காகப் போர் புரிவதும் வள்ளுவர் கருத்துக்கு ஒத்ததே. ஒரு நாட்டினர் நட்பு நாட்டைக் காப்பதற்காகப் போரில் ஈடுபடுவதும் வள்ளுவர்க்கு உடன்பாடே எனத் தோன்றும்.

செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு (781)

உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு (788)

என்னும் குறள்கள் நட்பு நாட்டைப்பிறர் தாக்கியவிடத்து விரைந்து சென்று அவர்க்குதவும் கடப்பாட்டையுணர்த்தும். பிறநாட்டில் கொடுங்கோலாட்சியின்கீழ்த் துன்புறும் மக்களை மீட்கப் போர் செய்தலும் வள்ளுவர்க்கு உடன்பாடாதலே கூடும் என்பதும் முன்பே விளக்கப்பட்டது (பிளேட்டோ தந்த அரசு, அரசியல் பார்க்க). உட்டோப்பிய மக்கள் பகைவரிடம் காட்டும் சூழ்ச்சித் திறங்கள் சில வள்ளுவர்க்கு உகந்தனவாக இருக்குமா என்பது ஐயமே. வினைத்தூய்மையை விரும்பும் வள்ளுவர் பகைவரைச் சூழ்ச்சியால் வெல்லுதல், பகைவர் நாட்டில் சிலரை அறைப்படுத்தல் (பொருளாசை காட்டி அவர் தம் நாட்டிற்கு அல்லது அரசுக்குமாறுகத் திருப்புதல்) பகைவர்

23. Ibid, Book II, Chap, VIII, Warfare.

நாட்டில் கலகமூட்டுதல் ஆகியவற்றை விரும்பார் எனலாம். போரில் பின்வாங்குதல் போல் காட்டிப் பின் திடீரெனப் போர் செய்து வெல்லுதலையும் வள்ளுவர் மட்டுமன்றிப் பிறபண்டைத் தமிழ்க் கவிஞருங் கூட வீரமாகவோ நேர்மையாகவோ கருதார்.

பிளேட்டோவின் இலக்கியல் நகரிலும் உட்டோப்பிய நாட்டிலும் மாதரும் போரில் பங்கு பெறுகின்றனர். பண்டைத் தமிழ்நாட்டில் பெண்கள் போரில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. வள்ளுவரும் அது பற்றி யாதும் கூறவில்லை. பாசறையில் பணிசெய்யும் பெண்கள் இருந்தனரெனவும் இரவில் விளக்காக எரியும் பந்தங்கட்கு எண்ணெய் ஊற்றி அவை அணையுங்கால் ஏற்றி வந்தனர் எனவும் முல்லைப்பாட்டு கூறுகின்றது (முல்லை 45-49). அம்மங்கையர் 'இரவு பகல் செய்யும் திண்பிடி யொள் வாள்' கச்சிற்பூண்டவராகக் காணப்பட்டனர் எனவும் அங்குச் சொல்லப்படுகிறது. ஆகவே அம்மங்கையர் வாளேந்திப் போர்புரியப் பயிற்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். மகளிர் படைக்கலப்பயிற்சி பெறும் வழக்கம் பழந்தமிழ்நாட்டிலும் இருந்திருக்கிறது. ஆயினும் அது தற்பாதுகாப்புக்காகவே போலும். மகளிர் நேரடியாகப் போரில் பங்கு பற்றியதாகத் தெரியவில்லை.

## 8. 2. 2. 2. தொழிலும் பொருளும்

உட்டோப்பிய நாட்டுமக்களனைவரும் பயிர்த்தொழில் கற்றிருப்பர். அத்துடன் ஒவ்வொருவரும் வேறு ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட தொழில்களைக் கற்றிருப்பர். முக்கியமாகத் துணி நெய்தல், கட்டடத் தொழில், கொல்லர் தச்சர் தொழில் ஆகியவற்றைக் கற்பர். பெரும்பாலும் தந்தையின் தொழிலை மக்கள் கற்பர். ஆயினும் சிலர் வேறுதொழில்களைக் கற்க விரும்பினும் தடையில்லை. கல்விக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட சிலர், ஏறக்குறைய 500 பேர்களைத் தவிர ஏனையோர் யாவரும் ஏதேனும் தொழிலில் ஈடுபடுவர். ஒவ்வொரு நாளும் ஆறுமணி நேரமே தத்தம் தொழில்களில் ஈடுபடுவர். ஏனைய நேரத்தில் பிறதொழில்களை அல்லது கலைகளைப் பொழுதுபோக்காகக் கற்பர். அல்லது கல்விகற்பதில் நேரத்தைச் செலவு செய்வர். காலையில் சொற்பொழிவுகள் நடைபெறும். தத்தம்தொழிலுக்குச் செல்லுமுன் விரும்புவோரனைவரும் அவற்றைக் கேட்டுப் பயனடைதல் கூடும். மாலையில் மக்கள் இசை பயில்வர் அல்லது விளையாட்டுக்களில் ஈடுபடுவர். சூதாட்டம் முதலியவற்றை அறியார். அறிவு தரத்தக்க நல்ல விளையாட்டுக்களையே விரும்புவர். யாவரும் தொழில் செய்வதால் ஆறுமணி நேரம் அல்லது அதற்குக் குறைந்த அளவு நேர வேலை

நாட்டில் வேண்டிய பொருள்களனைத்தையும் விளைவிக்கவும் செய்யவும் போதுமானதாயிருக்கும். வீடுகளும் கட்டடங்களும் நன்கு பாதுகாக்கப்படுவதனால் கட்டட வேலை குறைவே.

உட்டோப்பியாவில் நிலமும் வீடுகளும் மற்றும் பொருள்கள-னைத்தும் யாவர்க்கும் பொதுவாகவே கருதப்படும். சில மக்கள் எப்பொழுதும் நாட்டுப்புறத்திலும் சிலர் எப்பொழுதும் நகரங்களிலும் வதியாதபடி ஒவ்வோராண்டும் நாட்டுப் புறங்களிலிருந்து சிலர் நகரங்கட்குச் செல்வர். அதற்கேற்ப அத்தனை நகரமக்கள் நாட்டுப்புறத்திற்கு அனுப்பப்படுவர். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் நாட்டுப்புறத்தில் தங்கிப் பயிர்த்தொழில் கால்நடைகளைப் பராமரித்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டபின் நகர் திரும்புவர். அவரிடத்திற்குப் பிறர் வருவர். யாவரும் பயிர்த்தொழில் கற்றிருப்பர் ஆகையினால் பயிர்த்தொழில் எப்பொழுதும் நன்முறையிலேயே நடைபெறும். அறுவடைக்காலத்தில் வயலில் வேலைசெய்ய அதிக ஆட்கள் தேவையாக இருப்பின் நகரங்களினின்றும் ஆட்களை அலுவலர் அனுப்புவர்.

நகர்களில் உள்ள வீடுகளும் பொதுவாகக் கருதப்படும். பத்து ஆண்டுகட்கொருமுறை சீட்டின்படி (by lot) வீடுகளை மாற்றிக் கொள்வர். ஆயினும் வீடுகளையும் தோட்டங்களையும் அவ்வப்போது குடியிருப்போர் நன்கு பராமரிப்பர். பொருள்களும் அனைத்தும் பொதுவே. நகரங்கள் நான்கு பிரிவாகப் பகுக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பகுதியிலும் உணவுப்பொருள்கட்கென ஒரு அங்காடியும் பிற பொருள்கட்கென ஒரு அங்காடியும் இருக்கும். எல்லாரும் தம்மால் இயற்றப்பட்ட துணிமணி முதலிய பல பொருள்களையும் அங்காடியில் கொண்டு சேர்ப்பர். நாட்டுப் புறங்களிலிருந்து கொணரப்பட்ட உணவுப் பொருள்களும் பணியாட்களால் வெட்டிச் சுத்தம் செய்யப்பட்ட ஊனும் பிற உண்பொருள்களும் உணவுப் பொருள் அங்காடியில் வைக்கப்பட்டிருக்கும். நகரில் முப்பது குடும்பங்கட்கு ஒரு அட்டிலும் உணவுண்ணும் இடமும் அமைக்கப்பட்டிருக்கும். அலுவலர் அங்காடியிலுள்ள உணவுப் பொருள்களைப் பகிர்ந்து வைத்தியசாலைகட்கும் பொதுஅட்டில்கட்கும் அனுப்புவர். பின் மீதியுள்ள உணவுப் பொருளை எவரேனும் விரும்பினால் தம் வீட்டுக்கு எடுத்துச் செல்வதற்கோ வீட்டில் உண்பதற்கோ தடையேதும் இல்லை. ஆயினும் யாவரும் பொதுஅட்டில்களில் ஆக்கப்பட்ட உணவையே உண்பர். இவ்வட்டில்களில் பணியாட்கள் (பணியாட்கள் யார் என்பது பின்பு

விளக்கப்படும்) வேலை செய்வர். நகரில் அவ்வப்பகுதியைச் சார்ந்த மாதரும் உணவாக்க உதவுவர். உணவன்றிப் பிற பொருள்கள் கொண்ட அங்காடியிலும் குடும்பத்தலைவர்கள் தத்தம் குடும்பத்திற்கு வேண்டிய பொருள்களை விலையின்றிப் பெற்றுச் செல்லலாம். யாவரும் தொழில் செய்து பொருள்களை உண்டாக்குகின்றனர். விற்கும் விலையும் வாங்கும் விலையுமின்றிப் பொருள்களனைத்தும் அங்காடிகட்கு வருகின்றன. தேவைக்கு ஏற்றபடி வழங்கப்படுகின்றன. யாவும் அங்குத் தாராளமாகவே இருக்கின்றன.[24]

ஆகவே உட்டோப்பியா பொதுவுடைமை நாடாகக் காணப்படுகிறது. வள்ளுவர் கண்ட நாடு தனியுடைமை நாடே. ஆகவேதான் அங்கு வறுமையும் இரத்தலும் இருந்தன. வள்ளுவர் வறியோர் இரக்குமுன் குறிப்பறிந்து செல்வர் அவர்க்கு உதவுதல் சிறப்பு எனக் கூறித் தனிப்பட்டோரின் கொடையை யூக்கினரேயன்றி நாட்டின் பொருளனைத்தையும் பொதுவுடைமையாக்கும் கருத்து அவருக்கில்லை. இன்னும் வள்ளுவர் உழவுத்தொழிலைப் போற்றினரெனினும் நாட்டில் யாவரும் அத்தொழிலைக் கற்று சில ஆண்டுகளாவது அதில் ஈடுபட வேண்டும் எனக் கூறவும் இல்லை. உட்டோப்பியா ஆசிரியரின் கருத்து மக்களனைவரும் சிறிதளவு நேரமாவது பயிர்த்தொழிலிலும் ஆடை செய்யும் தொழிலிலும் ஈடுபட வேண்டும் என்று தற்காலத்தில் கூறிய **காந்தியடிகளின்** கருத்தை ஒரு சிறிது ஒத்திருக்கிறதேயன்றி அத்தகையதொரு கருத்து வள்ளுவர் காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. வள்ளுவர் கண்ட சமுதாயத்தில் உழவர் எனச் சிலர் உழவுத் தொழிலையும் பிறர் பிற தொழில்களையுமே செய்தனர். இம்முறைகளில் உட்டோப்பிய சமுதாயம் திருக்குறள் கூறும் சமுதாயத்தினின்றும் வேறுபட்டதே.

### 8. 2. 2. 3. இல்லம்

தந்தையைத் தலைமையாகக் கொண்ட கூட்டுக் குடும்ப வாழ்க்கையையே உட்டோப்பியாவின் ஆசிரியர் ஆதரிப்பதாகத் தோன்றுகிறது. உட்டோப்பியாவில் ஆண்மக்கள் பெரியவர்களானபின்பும் தம் குடும்பத்துடன் தந்தையின் இல்லத்திலேயே தங்குவர். மணமான பெண்கள் கணவன் இல்லத்திற்குச் செல்வர். தந்தை அல்லது ஆடவர்களுள் மூத்தவன் குடும்பத்தலைவனாக இருப்பன். அவன் முதுமையினால் குடும்பத்தைப் பரிபாலிக்க முடியாதவன் ஆனால்

24. Ibid. Book II, Chap. II, IV, V deal with occupation, sharing of goods etc.

அடுத்தவன் தலைமை ஏற்பன். மனைவி கணவனுக்கும் பிள்ளைகள் பெற்றோருக்கும் சகோதரர்களுள் இளையோர் மூத்தோர்க்கும் கீழ்ப் படிந்து நடப்பர். பணிவிடை செய்வர். குடும்பத்தலைவர் யாவருடைய நலத்தையும் கவனிப்பர். குழந்தைகளை அவ்வக்குழந்தைகளின் தாய்மாரே பாலூட்டிச் சீராட்டி வளர்ப்பர். ஒரு குழந்தையின் தாய் இறந்துவிட்டால் அலுவலர் அக்குழந்தையை வேறொரு பெண்ணிடம் ஒப்புவிப்பர். அவ்வாறு தாயற்ற குழந்தையை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் மாதர் பாராட்டப்படுவர்.[25]

உட்டோப்பிய மக்கள் குடும்ப ஒற்றுமையை மிக முக்கியமாகக் கருதுவர். அங்கு நிகழும் திருமணங்கள் மணம் புரிந்தோரை அவர்தம் வாழ்நாள் முழுதும் பிணைப்பதாகவே இருக்கும். மணமுறிவு (divorce) எளிதில் மேற்கொள்ளப்படுவதில்லை. யாராவது அவ்வாறு மணமுறிவு பெற விரும்பினால் அவர்கள் அலுவலர் மன்றத்தின் அனுமதி பெறுதல் வேண்டும். அம்மன்றத்தோர் உரிய காரணங்களை நன்கு விசாரித்து நன்கு சிந்தித்துச் சில சூழ்நிலைகளிலேயே அனுமதி அளிப்பர். எளிதில் உடன்பாடு தரார். ஆகவே திருமணங்கள் பெரும்பாலும் நிலையான தாகவே இருக்கும்.[26]

ஒவ்வொரு திங்களின் இறுதிநாளிலும் மனைவி தன்கணவன் முன்னும் பிள்ளைகள் பெற்றோர் முன்னும் விழுந்து வணங்கி அத்திங்களில் தாம் ஏதாவது பிழை செய்திருப்பின் அதைப் பொறுக்குமாறு வேண்டுவர். இவ்வாறு குடும்பத்தில் ஒற்றுமையைக் காத்துக் கொள்வர்.[27]

பிளேட்டோவின் இலக்கியல்நகர் போலன்றி உட்டோப்பியாவில் குடும்பம் முக்கியமாகக் கருதப்படுகிறது. அந்த அளவில் அது வள்ளுவர் கருத்துக்கு ஒத்ததே. இங்கும் குழந்தைகளைப் பெற்றோரே வளர்ப்பர். ஆகையினால் வள்ளுவர் கண்ட இல்லத்தில் நிகழ்வதை யொப்ப அவர்களும் மக்களின் மழலை கேட்டும் மெய்தீண்டியும் மகிழ்தல் கூடும். ஆயினும் வள்ளுவரின் இல்வாழ்க்கை வாழ்க்கைத்துணை நலம் என்னும் அதிகாரங்களை நோக்க அவர் ஒரு தலைவனும் அவன் துணைவியும் குழந்தைகளும் சேர்ந்து வாழும் தனிக்குடும்ப வாழ்க்

25. Ibid. Book II. Chap. V deals also with family and care of Children.
26. Ibid. Book, II Chap. VII, about marriages.
27. Ibid. Book II, Chap. IX, P. 139.

கையை யெண்ணி எழுதுவதாகத் தோன்றும் (இல்லம் பார்க்க). உட்டோப்பிய ஆசிரியர் காட்டுவதோ கூட்டுக் குடும்பவாழ்க்கை யாகும். இங்கு ஒருவனைக் கல்வி கற்பித்துச் சான்றோனாக்குவதும் அவையத்து முந்தியிருப்பச் செய்தலும் தந்தையின் கடனாகாது. கூட்டுக் குடும்பத் தலைவனின் கடனேயாகும். மற்றும் இங்குப்பொது அட்டில்களிலேயே மக்கள் உணவுண்பதால் விருந்தோம்பலுக்கு இடம் இல்லை. ஊருக்கு வரும் விருந்தினரும் அலுவலரின் அனுமதி பெற்றுப் பொதுஅட்டில்களிலேயே உணவுண்பர். இங்குத் தம்மக்கள் சிறு கை அளாவிய கூழைப் பெற்றோர் உண்பதற்கும் வாய்ப்பு இல்லை. பொதுஅட்டில்களில் பெரியோர் பலரும் உடனிருந்து உண்பர். குழந்தைகட்கு உணவு தனியாக அளிக்கப்படும். அவர்கள் குடும்ப மாக அமர்ந்து உண்பதில்லை. ஆகவே இங்குக்குடும்பத்திற்கு ஓரளவு முக்கியத்துவம் கொடுக்கப்படினும் வள்ளுவர் காட்டும் சமுதாயத்தில் இல்லறம் சிறப்பிக்கப்பட்ட அளவிற்கு இங்குச் சிறப்பிக்கப்படவில்லை எனலாம்.

## 8. 2. 2. 4. பிற செய்திகள்

உட்டோப்பியாவில் யாவரும் சிறு வயதிலிருந்து கல்வி கற்பிக் கப்படுவர். சிலரே பிற தொழில்களைச் செய்தலின்றிக் கல்வியிலேயே ஈடுபடுவதற்காகத் தெரிந்தெடுக்கப்படுவர். ஆயினும் பிறரும் தத்தம் தொழிலுக்குரிய நேரமொழியப் பிற நேரங்களில் கல்வியைத் தொடர்ந்து கற்பர். சொற்பொழிவுகளை (lectures) கேட்பதனாலும் பயனடைவர். அந்நாட்டோர் இலக்கியங்களையும் தத்துவநூல்களையும் கற்பதிலும் வான நூற்கல்வியிலும் வல்லவராய் இருந்தனர்.

செல்வத்தை அவர்கள் ஒரு பொருட்டாக எண்ணுவதே இல்லை. பொன்னையும் வெள்ளியையும் மணிவகைகளையும் மதிப்பதில்லை. ஆயினும் பிற நாட்டாருடன் தொடர்பு கொள்ளுங்கால் பொன்னும் மணிகளும் வேண்டப்படும் என்பதற்காக அவற்றைத் தம் நாட்டிலும் ஓரளவு சேமித்து வைப்பர். அது பொதுப்பொருளாகவே யிருக்கும். பணத்தை அவர்கள் உள் நாட்டில் வழங்குவதில்லை. செல்வர் வறியர் என்ற வேறுபாடும் அவர்களிடையே இல்லை.

உண்ணோன்பினாலோ பிறவகைகளினாலோ தம்மைத் தாம் வருத்திக் கொள்ளும் கடுந்துறவு முறைகளை அவர்கள் விரும்புவதில்லை.

குற்றமற்ற பிறர்க்குத் துன்பந்தராத நல்லின்பங்களை ஏற்றுக் கொள்வதே வாழ்க்கையின் சிறப்பாகும் என அவர் கருதுவர்.[28]

உட்டோப்பியர் சூதாட்டத்தில் ஈடுபடுவதில்லை. குடிவகைகள் விற்கும் கடைகள் அங்கு இல்லை. விலங்குகளை வேட்டையாடுவதில் அவர்கள் இன்பம் காண்பதில்லை. ஆனால் உணவுக்காக விலங்குகளைக் கொல்வர்.

இவ்விலக்கியல் நாட்டில் வறுமை இல்லை. யாவரும் தொழில் செய்வர். யாவரும் உரிமையுடன் வாழ்வர். ஆகவே பணியாட்கள் யார் என்னும் கேள்வி எழலாம். குற்றம் புரிந்து தண்டனைக்கு ஆளானோரே பணியாட்களாகக் கருதப்படுவர். கடின வேலைகள், பிறர் விரும்பாத வேலைகளை அவர் செய்வர். அந்நாட்டவரில் குற்றம் புரிந்தோரும் பணியாட்களாவர். பிற நாடுகளில் குற்றம் புரிந்து கொலைத் தண்டனை விதிக்கப்பட்டோரையும் சில அமையங்களில் உட்டோப்பிய நாட்டு மக்கள் விலைக்குக் கொண்டு அவருயிரைக் காத்துப் பணியாட்களாகப் பயன்படுத்துவர். பிறநாட்டிலிருந்து மிக வறியோர் உட்டோப்பியாவிற்கு வந்து அங்குப் பணிசெய்து வாழவிரும்பினும் அவரையும் பணியாட்களாக ஏற்றுக்கொள்வர். அத்தகையோரை நன்முறையிலேயே நடத்துவர். அவ்வாறு தாமாக வந்தணைந்தோர் பின் தம் நாடு செல்ல விரும்பினும் அனுமதிக்கப்படுவர். குற்றம் புரிந்து பணியாட்கள் ஆனோர் பணி செய்தே தீர்தல் வேண்டும்.[29]

உட்டோப்பியர் அயல்நாடுகளுடன் நல்லுறவு கொள்வர். தம் நாட்டில் குடிமக்கள் யாவருக்கும் போதிய பொருள் கிடைத்தபின் மீதியிருக்கும் பொருள்களை அயல்நாட்டவருடன் வாணிபம் செய்வர். அயல்நாட்டினர் விரும்பிக் கேட்பின் தம் நாட்டவரை அங்கு அலுவலராகப் பணியாற்ற அனுப்புவர். இவ்வாறு பிற நாட்டினர்க்கு உதவுவர்.

உட்டோப்பியாவில் தாம் விரும்பும் சமயத்தைப் பின்பற்றும் உரிமை யாவர்க்கும் உண்டு. சிலர் ஞாயிற்றையும் சிலர் திங்களையும் சிலர் வேறு தெய்வங்களையும் வணங்கினர். ஆயினும் பெரும்பாலோர் ஆற்றலுள்ள தெய்வம் ஒன்று இவையனைத்துக்கும் மேலே உள தென்றும் அது மக்களால் அறியப்படாததும் என்றும் உள்ளதும் எங்கும் நிறைந்ததும் புரிந்துகொள்ள முடியாததும் ஆகும் என்றும்

28. Ibid. Book II, Chap. VI, Utopian view concerning gold, silver etc. and pleasures.

29. Ibid. Book II, Chap. VII, about bondsmen.

அத்தெய்வமே உயர்ந்ததும் ஆற்றல் மிக்கதும் ஆகும் என்றும் நம்புவர். அத்தெய்வத்தை மித்திரன் (Mithra) என அழைப்பர்.[30] உயிர் அழிவில்லாதது எனவும் மறுமை யுண்டெனவும் இம்மையில் செய்த நன்மை தீமைகட்கு ஏற்ற பலன் மறுமையில் கிடைக்குமெனவும் அந்நாட்டோர் பொதுவாக நம்பினர். இவ்வாறன்றித் தெய்வமும் மறுமையும் இல்லையென்போர் ஒறுக்கப்படார். ஆயினும் அந்நாட்டில் அவர் பிறரால் மதிக்கப்படார், அலுவலராகத் தேர்ந்தெடுக்கப்படார், இகழப்படுவர்.

அந்நாட்டில் குருமாரும் இரகசியவாக்கெடுப்பால் தெரிந்தெடுக்கப்படுவர். அவர் மிகவும் தூயவாழ்க்கை வாழ்வர். சிறுவர்க்கும் இளைஞர்க்கும் நல்லொழுக்கம் கற்பிப்பர். போர் நிகழுங்கால் போர்க்களத்திற்கு அருகில் சென்று அமைதி ஏற்படுமாறு இறைவனை வேண்டுவர். போரில் தம் நாட்டவர் வென்றால் தோற்ற பகைவரை வீரர் கொல்லாதவாறு தடுத்து அவருயிரைப் பாதுகாப்பர். குருமார் தம் உயர்பண்பினால் யாவராலும் நன்கு மதிக்கப்படுவர்.

உட்டோப்பியர் விலங்குகளைப் பலியிடுவதில்லை. ஆனால் தூபமிட்டு விளக்கேற்றுவர். இவ்வாறு வழிபாடு செய்து இம்மை மறுமை நலங்களுக்காக இறைவனை இறைஞ்சுவர்.[31]

இவ்வாறு அந்நாட்டவர் நன்முறையில் வாழ்வர். பொருளனைத்தும் யாவர்க்கும் பொதுவாகக் கருதப்படுவதால் உடல்நலம் அற்றோர், முதுமையினால் தொழில் செய்ய இயலாதோர் அனைவரும் உணவும் வேண்டிய பிறவும் விலையின்றி வழங்கப்படுவர். நோயுற்றோர் அந்நாட்டு மருத்துவமனைகளில் நன்கு பேணப்படுவர். ஆகவே மக்கள் எவ்வித கவலையுமின்றி மகிழ்ச்சியுடன் வாழ்வர்.

இனி இவ்வியல்புகளைத் திருக்குறள் காட்டும் சமுதாயத்துடன் ஒப்பிடுங்கால், கூடியவரை யாவரும் கல்வி கற்றலும் கேள்வியினால் பயனடைதலும் இளமையுடன் கல்வியை நிறுத்திக் கொள்ளாது சாந்துணையும் கற்றலும் வள்ளுவர்க்கும் ஏற்றனவே.

திருக்குறள் காட்டும் சமுதாயம் பொதுவுடைமை பெற்றதன்று, தனியுடைமை வாய்ந்ததே யாகையினால் அங்குச் செல்வத்திற்கும்

---

30. தாமஸ் மூர் 'மித்திர' என்னும் சொல்லை எங்கிருந்து பெற்றுக்கொண்டார் என்பது ஆய்தற்குரியது. 'மித்திர' என்பது இருக்கு வேதப்பாடல்களுட் கூறப்படும் தேவர்களுள் ஒருவரின் பெயராகும்.

31. Thomas More, Sir., Utopia, Book II, Chap. IX, about religion.

மதிப்பு உண்டு. அங்குச் செல்வம் பொருளல்லவரையும் பொருளாகச் செய்யும். பொருளை நல்வழியில் ஈட்டி நல்வழியில் செலவுசெய்யுமாறு வள்ளுவர் கூறினரேயன்றிச் செல்வம் பயனற்றது எனக் கருதவில்லை. தனியுடைமைச் சமுதாயத்தில் மக்கள் பொருளீட்ட வேண்டியவரே. செல்வர்க்கும் வறியோர்க்கும் வேறுபாடும் அங்கு உண்டு.

கடுந்துறவு முறைகளை வள்ளுவர் கூறவில்லை. சில உரையாசிரியர்களே கூறினர். உண்ணாநோன்பை மட்டும் ஓரளவு ஏற்றுக் கொண்டார் எனலாம் (துறவு பார்க்க).

சூதாட்டத்தையும் கள்ளையும் தவிர்தலும் விலங்குகளை வேட்டையாடாதிருத்தலும் வள்ளுவர்க்கும் ஏற்றனவே. ஆனால் வள்ளுவர் உணவுக்காக விலங்குகள் கொல்லப்படுவதையும் விரும்பவில்லை. உட்டோப்பியர் அதை ஏற்றுக் கொண்டனர்.

தண்டனை குற்றத்துக்குத் தக்கதாக அளவோடு இருத்தல் வேண்டுமென வள்ளுவர் கூறினரேயன்றி எத்தகைய தண்டனைகள் அளிக்கப்படல் வேண்டுமெனக் கூறவில்லை. துன்பம் செய்தல், கோறல், பொருள்கோடல் என்ற மூன்றையும் பரிமேழலகர் கூறினர் (குறள் 549 உரை); உட்டோப்பியா ஆசிரியர் கூறும் முறையாகிய பணி செய்வித்தல் சிறந்ததே.

அயல்நாடுகளுடன் நல்லுறவு வள்ளுவர்க்கும் ஏற்றதே. அவர் கூறும் நட்பு முக்கியமாக அரசர்களுறவைக் குறித்ததே. அரசர்களின் நட்பே நாடுகளின் நல்லுறவுமாகும். வள்ளுவர் நாட்டில் செல்வர் வறியோர்க்கு ஈதலைப் போற்றினர். உட்டோப்பிய நாட்டில் வறியோரே இல்லை. அந்நாட்டோர் எவ்வாறு ஈகையை மேற்கொள்ளுதல் கூடும்? அவர்கள் பிற நாட்டவர்க்கே ஈவர். அவர்கள் வாணிபத்தின் பொருட்டுப் பொருள்களைக் கொண்டு பிறநாடு செல்லுங்கால் அதில் ஏழில் ஒரு பங்கை அந்நாட்டு வறியோர்க்கு விலையின்றி அறத்தின் பொருட்டு வழங்கி ஏனைய ஆறு கூற்றையே விற்பர் என அந்நூலில் கூறப்படுகிறது.[32]

நாம் விரும்பும் சமயத்தைப் பின்பற்றும் உரிமை வள்ளுவர் காலத் தமிழ்நாட்டில் யாவர்க்கும் இருந்ததே. அக்காலத்துப் பல தெய்வ வணக்கம் மக்களிடையே இருந்ததெனினும் வள்ளுவரும் எத்தெய்வ வழிபாட்டையும் கண்டிக்காது பொதுவாக ஒரு தெய்வ

32. Ibid. Book II, Chap. VI, P. 88.

வழிபாட்டையே கூறினர். தெய்வம் உண்டு எனவும் மறுமை உண்டு எனவும் பிறர் ஏற்றுக் கொள்ளும் கருத்துக்களை ஒரு சிலர் ஏற்றுக் கொள்ளாதிருப்பின் அவரை யாவரும் இகழ்வர் என உட்டோப்பியா ஆசிரியர் கூறியது போலவே,

> உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்து
> அலகையா வைக்கப் படும் (850)

என வள்ளுவரும் கூறினர். விலங்குகளைப் பலியிடாமை வள்ளுவர்க்கும் உகந்த கருத்தே. பண்டைத் தமிழ்நாட்டில் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட குருமார் இல்லை. பரம்பரையாக வந்த அந்தணரும் தாமாக விரும்பித் துறவு பூண்ட துறவியருமே இருந்தனர். இவ்வாறு இங்கும் சில ஒற்றுமை வேற்றுமைகளைக் காணலாம்.

தாமஸ்மூர் கண்ட உட்டோப்பியாவிற்கும் வள்ளுவர் கண்ட சமுதாயத்திற்கும் இடையே உள்ள பெருவேறுபாடு இரண்டே, ஒன்று முன்னது பொதுவுடைமை நாடாகவும் பின்னது தனியுரிமை நாடாகவும் விளங்குவதே. மற்றது, முன்னதில் அரசனும் அலுவலரும் குருமாரும் கூட மக்களால் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். அரசியலிலும் சமயத்துறையிலும் மக்களாட்சியே நிலவுகிறது. பின்னதிலோ பரம்பரையரசர்களும் அந்தணர்களும் உளர். அலுவலர் அரசனாலேயே நியமிக்கப்படுகின்றனர். குடிகள் நலமும் அவர்கள் விருப்பமும் கூடக் கவனிக்கப்பட்டதெனினும் ஆட்சி குடிமக்கள் வசம் இல்லை.

## 8. 3. புது அத்லாந்திய நாடு

**புது அத்லாந்திய நாடு** (The New Atlantis) என்னும் நூலை எழுதிய அறிஞரும் ஆங்கில நாட்டவரே. **பிரான்சிஸ் பேக்கன்** (Francis Bacon) என்ற இவ்வறிஞர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். ஆங்கில வரலாற்றில் ஒரு சிறந்த காலமாகிய **எலிசபெத்** அரசியின் காலத்தைச் சேர்ந்தவர். **பேக்கன்** சட்டக் கல்வி பயின்றவர். பல ஆண்டுகள் ஆங்கில நாட்டுப் பாராளுமன்றத்தின் அங்கத்தினராக இருந்தவர். அரசியலில் பல உயர் அலுவல்களில் பணியாற்றியவர். அறிவியல் வளர்ச்சியில் ஆர்வமுடையவர். அத்தகைய அறிஞர் நல்லரசாட்சி நிலவும் ஓர் இலக்கியல் நாட்டைக்குறித்து ஒரு நூல் எழுதியது இயல்பே.

**உட்டோப்பியாவைப்போலப் புது அத்லாந்திய நாடும்** ஒரு செலவு இலக்கியத்தைப் போலவே எழுதப்பட்டுள்ளது. கடல் தாண்டி

வாணிபம் செய்யக் கப்பலில் சென்ற சிலர் அத்லாந்திய மாகடலின் இடையே ஒரு புதிய தீவைக் கண்டடைந்ததாகவும் அத்தீவு சிறந்த ஆட்சியும் நற்பண்புள்ள குடிகளும் நிலவப்பெற்று ஓர் உயர் நாடாக விளங்கக் கண்டனர் எனவும் இந்நூலில் கூறப்படுகிறது. இவ்வாறு இங்குப் புனைந்துரைக்கப்படும் புது அத்லாந்திய நாடும் ஒரு கற்பனை நாடே.

### 8.3.1. புது அத்லாந்திய நாட்டின் இயல்புகள்

பிரான்சிஸ் பேக்கனின் நூல் அது கூறும் நாட்டின் அரசியலைக் குறித்து அதிகம் கூருது நாட்டின்கண் நிலவிய அறிவுப் பெருக்கத்தையும் சமூகத்தின் சில இயல்புகளையும் குறித்தே கூறுகிறது. புது அத்லாந்திய நாடு அரசரால் ஆளப்படும் நாடே. அவ்வரசர் பரம்பரையரசரா அல்லரா என்பது தெளிவாகக் கூறப்படவில்லை. வேறொன்றும் கூறப்படாததனுல் பரம்பரையரசரே போலும். நாட்டின் பல பகுதிகளையும் ஆள்வதற்கு அரசனின்கீழ் அதிபதிகள் (governors) இருப்பர் எனத் தெரிகிறது.

புது அத்லாந்திய நாடு பொதுவுடைமை நாடன்று, தனியுடைமை நாடு எனவே தோன்றுகிறது. ஆயினும் நாட்டின் பொருளியல் குறித்தும் இந்நூலில் அதிகம் கூறப்படவில்லை.

புது அத்லாந்திய நாட்டுமக்கள் போரை விரும்பார். ஆகவே பிற நாடுகளுடன் அதிகத் தொடர்பின்றித் தனித்து வாழ்வர். ஆயினும் அறிவு வளர்ச்சியின் பொருட்டுச் சில தொடர்புகளை யேற்றுக் கொள்வர். பிறர் புயலினுலோ கடலில் ஏற்படுப் பிற துன்பங்களினுலோ அல்லலுற்றுத் தம் தீவை யணுகநேரின் வேண்டிய உதவி செய்வர். அத்தகையோர் தீவில் சில நாட்கள் தங்க நேரின் நாட்டின் பொதுச் செலவிலேயே உணவும் உறையுளும் நோய்க்கு மருந்து முதலிய பிறவும் அளித்து நன்கு விருந்தோம்புவர். அது மட்டுமன்றிப் பொதுமக்கள் அவ்வாறு வந்து தங்கும் பிற நாட்டவர்க்குப் பலவகையிலும் உதவி செய்து அன்பு பாராட்டுவர் என நூலில் கூறப்படும் நிகழ்ச்சிகள் காட்டுகின்றன.

புது அத்லாந்திய நாட்டில் சாலோமோனின் இல்லம் (The House of Solomon) என அழைக்கப்படும் ஒரு சிறந்த கல்விநிலையம் இருந்தது. அந்நிலையத்தைச் சார்ந்தோரில் மூவர் சில ஆண்டுகட்கொருமுறை வெளிநாடு செல்வர். அவர்கள் பல நாடுகட்குச் செல்வர். சிலசில காலம் ஆங்காங்குத் தங்குவர். தம் நாட்டின் பெயரைக் கூருது தாம்

வேறுநாட்டவர் போல நடித்து எந்நாட்டில் தங்குகின்றனரோ அங்கு உள்ள கலைகள், அறிவியல், இலக்கியங்கள் முதலிய அனைத்தைக் குறித்தும் அறிந்து அவற்றைப் பயில்தற்கு வேண்டிய நூல்கள், கருவிகள் முதலியவற்றைப் பொருள் கொடுத்து வாங்கிக் கொண்டு தம் நாடு திரும்புவர். இதற்கு வேண்டிய பொருளனைத்தும் அவர்கட்குப் புது அத்லாந்திய நாட்டின் அரசே தரும்.[33]

சாலோமோனின் இல்லத்தைச் சேர்ந்த அறிஞர் நிலத்திலும் நிலத்தின் கீழும் ஆகாயத்திலும் உள்ள யாவற்றையும் ஆய்வர். இதன் பொருட்டு நிலத்தில் அகழப்பட்ட நீள் குகைகளையும் வானளாவ ஓங்கிய உயர்கட்டிடங்களையும் ஏற்படுத்தியிருந்தனர். இவற்றின் மூலம் மண்ணின் இயல்பு நீரின் தன்மை உலோகப்பொருள் ஆகியவற்றெடு மழை, காற்று, முகிலின் இயக்கத்தையும் ஆய்வர். தங்கள் மேற்பார்வையின் கீழ் வயல்களும் தோட்டங்களும் அமைத்துப் பயிர்களைச் சிறந்த முறையில் வளர்த்தல் உரமிடுதல் ஒட்டுதல் (grafting) ஆகியவற்றைப் பயின்று மக்கட்குக் கற்பிப்பர். விலங்கு, பறவை, பிற உயிர்ப்பொருள்கள் ஆகியவற்றை வளர்த்து அவற்றின் இயல்புகளையும் ஆய்வர். மருந்தையும் பிற மருத்துவமுறைகளையும் விலங்குகளின்மேல் செய்துபார்த்துப் பின் மக்கட்குப் பயன்படுத்துவர். மருந்துத்தன்மையுள்ள காற்றினாலும் மருந்துத் தன்மையுள்ள நீரில் குளித்தலாலும் உடல் நலம் பெறும் முறைகளையும் அவர்கள் அறிந்திருந்தனர். வேண்டிய மருந்துகளைச் செய்வர். சில உணவாக்கும் அட்டில்களையும் தம் மேற்பார்வையின்கீழ் அமைத்து நன்முறையில் உணவமைக்கக் கற்றுப் பிறர்க்குக் கற்பிப்பர். காகிதம், துணி மணிகள் முதலியன செய்யும் முறையைக் கற்பர். சாயந் தோய்த்தற்குரிய வண்ணங்களை (dyes) உண்டாக்குவர். நறுமணக் கலவைகளை (perfumes) இயற்றுவர். கண்பார்வை குறைந்தோர்க்குக் கண்ணுடி செய்வர். நுண்பொருள் நோக்கிகளை இயற்றிப் பயன்படுத்துவர். கப்பல் படகு முதலியன இயற்றும் கலையையும் இவ்வில்லத்தோர் கற்றிருந்தனர். இவ்வாறு பல துறைகளிலும் அறிவு வளம்பெற்றுச் சிறந்தோங்கியது சாலோமோனின் இல்லம். இவ்வறிவியல் வளர்ச்சி யாவதும் அந்நாட்டில் மக்களின் நன்மைக்காகவே பயன்படுத்தப்பட்டது.[34]

---

33. Bacon, New Atlantis, University Tutorial Press Ltd., P. 21-22 about Utopians travelling abroad for gaining knowledge.

34. Ibid. P. 33-44, about the House of Solomon and their studies.

குடும்ப ஒற்றுமையை அத்லாந்திய நாட்டோர் மிகவும் போற்றினர். அங்கு மகளிரும் ஆடவரும் கற்பைக் காத்தொழுகுவர். ஆகவே பொதுமகளிர்க்குரிய இல்லங்கள் அங்கு இல்லை. அந்நாட்டினர் பிள்ளைகளை அருமையாகப் பேணி வளர்ப்பர். பிள்ளைகளும் பெற்றோர்க்குப் பெருமதிப்பளிப்பர். மக்கட்பேற்றை அந்நாட்டோர் சிறப்பிப்பர். ஒரு குடும்பத்தலைவனின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளுமாக அவன் வழிவந்தோரின் தொகை 30 என்னும் எண்ணிக்கையையடையின் அதன் பொருட்டு ஒரு நாள் அக்குடும்பத்தோரனைவரும் அவர்தம் நண்பர்களும் சேர்ந்து விருந்துண்பர். அவ்விருந்திற்கு வேண்டிய பொருளை அரசாங்கமே வழங்கும். அதிபதி அதற்கு வேண்டிய உதவி செய்வர். அரசனும் செய்தி அனுப்பி அவ்விருந்தைச் சிறப்பிப்பன். விருந்தின்போது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் குடும்பத்தலைவனைப் பணிந்து ஆசி பெறுவர். குடும்பத்தலைவியும் விருந்தில் பங்கு பெறுவர். குடும்பத்தைச் சேர்ந்தோர் யாவரும் விருந்துண்டு மகிழ்ந்தபின் அன்றைப் பொழுதை ஆடல் பாடல்களிற் கழிப்பர். இது அதிகமக்கட் பேற்றையுடைய குடும்பங்கட்கு அங்குச் செய்யப்படும் சிறப்பாகும்.[35]

இக்கற்பனை நாடு ஒரு கிருஸ்தவ நாடாகவும் அங்கு வாழ்வோர் பக்தி மிகுந்தோராகவும் காட்டப்படுகின்றனர்.

புது அத்லாந்திய நாடு முடிஅரசால் ஆளப்படுவதனாலும் தனியுடைமை நாடாக இருப்பதனாலும் அம்முறையில் அது திருக்குறள் காட்டும் நாட்டுடன் ஒத்ததே. அந்நாடு கடலின் நடுவில் அமைந்த தீவாக இருப்பதனால் அமைதியை விரும்பிய அந்நாட்டுமக்கள் பிற நாட்டினருடன் அதிகத் தொடர்பின்றி வாழ்ந்தனர். தமிழ்நாட்டு அரசர்கள் அவ்வாறு வாழ்தல் பொருந்தாது ஆகையினால் போரை விரும்பாத வள்ளுவர் கூடியவரை பிற அரசர்களுடன் நட்பை நாடுமாறு பணித்தார். பிறருடன் தொடர்பின்றி வாழ்தலைச் சிறப்பாக அவர் கருதவில்லை.

> எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு (355)

என வள்ளுவர் துறவியர்க்கு அறிவுரை கூறினார். புது அத்லாந்திய நாட்டிலோ இவ்வறிவுரை சாலோமோனின் இல்லத்தைச் சார்ந்த அறிஞர்க்கே பொருந்தும். வள்ளுவர் வாழ்ந்த காலம் தமிழ்நாடு

35. Ibid. P. 23-27, Feast of the family.

உட்படப் பாரதம் முழுவதிலும் மக்கள் தத்துவ ஆய்வில் ஈடுபட விரும்பிய காலம். வைதிக சமயக் கருத்துக்களும் பௌத்த சமணக் கருத்துக்களும் எங்கும் பரவத்துறவியர் மட்டுமன்றி அரசரும் பிறரும் சமய நூல்களைக் கற்று ஆய்ந்த காலம். ஆகவே வள்ளுவர் தத்துவ முறையில் மெய்யுணர்தலை முக்கியமாகக் கூறினர். பிரான்சிஸ் பேக்கன் வாழ்ந்த காலம் மேல்நாடுகளில் மக்கள் அறிவியல் ஆய்வை நாடிய காலம். அறிவியலின் பல துறைகளிலும் அறிஞர்கள் பல ஆய்வுகளைச் செய்யப் புகுந்த காலம். ஆகவே பேக்கன் அறிவியல் உண்மைகளை அறிவதையே தம்நூலில் சிறப்பாகக் கூறினர்.

குடும்ப ஒற்றுமையும் இருபாலாரும் கற்பிற் சிறந்தொழுகலும் வள்ளுவர்க்கும் பெரிதும் உகந்தவையே. அத்லாந்திய நாட்டில் நிலவியது கூட்டுக் குடும்பவாழ்க்கையா தனிக் குடும்பவாழ்க்கையா என்பது நூலில் தெளிவாகக் காட்டப்படவில்லை. வள்ளுவர் மக்கட் பேற்றைப் பொதுவாகச் சிறப்பித்தார். பிரான்சிஸ் பேக்கன் அதைச் சிறப்பித்தற்பொருட்டுத் தம்நூலில் ஒரு விழாவை இயற்றிக் காண் பித்தார்.

வள்ளுவர் விரும்பும் சமுதாயத்தையும் பிற அறிஞர் விரும்பும் சமுதாயத்தையும் ஒப்பிடுங்கால் காலத்திற்கும் அவ்வந்நாட்டில் நிலவும் கருத்துக்கட்கும் ஏற்பச் சில வேறுபாடுகளைக் காணலாம். சில அடிப்படை ஒற்றுமைகளையும் காணலாம். அரசு எவ்வகையதாயினும் அது மக்களின் நலனை நோக்கி ஆள்தலையே அறிஞர் யாவரும் விரும்புவர். கல்வியையும் உழைப்பையும் நேர்மையையும் உண்மையையும் யாவருமே போற்றுவர். ஆயினும் அரசியலமைப்பிலும் சமுதாய அமைப்பிலும் வேறுபாடுகள் இருத்தலும் இயல்பே. தனிப்பட்டோர்க்கு அதிக உரிமையளிப்பதும் மக்களின் இயல்பாய உணர்ச்சிகளையும் ஊக்கங்களையும் பொருட்படுத்தி அவற்றுக்கு ஏற்பக் குடும்பவாழ்க்கையையும் பொதுவாழ்க்கையையும் வரையறை செய்வதும் கலைகளிலும் கல்வியிலும் தொழிலிலும் வாணிபத்திலும் பிறவற்றிலும் தனிப்பட்டோரின் முயற்சிக்கு அதிக வாய்ப்பளிப்பதும் வள்ளுவர் வகுத்த சமுதாயத்தின் சிறப்புக்களாகும்.

# நூல் விளக்கம்

## பழந்தமிழ் நூல்கள் :


1. அகநானூறு, களிற்றியானை நிரை, பொ.வே. சோமசுந்தரனர் உரை, கழக வெளியீடு, 1970.
2. அகநானூறு, மணிமிடை பவளம், நித்திலக் கோவை, பொ.வே. சோமசுந்தரனர் உரை, கழக வெளியீடு, 1970.
3. கம்பராமாயணம், ஆரண்ய காண்டம், வெளியிடுவோர் எஸ். ராஜம். சென்னை - 1, 1958.
4. கம்பராமாயணம், பாலகாண்டம், வெளியிடுவோர் எஸ். ராஜம், சென்னை - 1, 1958.
5. கலித்தொகை, நச்சினர்க்கினியர் உரை, பொ.வே. சோமசுந்தரனர் எழுதிய விளக்கம், கழக வெளியீடு, முதலாம் பதிப்பு, இரண்டாம் மறு அச்சு, 1970.
6. குறுந்தொகை, பொ.வே. சோமசுந்தரனர் உரை, கழக வெளியீடு, முதலாம் பதிப்பு, மறு அச்சு, 1972.
7. சிலப்பதிகார மூலமும் உரையும், வேங்கடசாமி நாட்டார் உரை கழக வெளியீடு, ஐந்தாம் பதிப்பு, 1956.
8. சீவகசிந்தாமணி, புலவர் அரசு உரை, பகுதி 1, கழக வெளியீடு, முதலாம் பதிப்பு, மறு அச்சு, 1967.
9. சீவகசிந்தாமணி, புலவர் அரசு உரை, பகுதி 2, கழக வெளியீடு, முதலாம் பதிப்பு, மறு அச்சு, 1968.
10. சூடாமணி நிகண்டு மூலமும் உரையும், ஆறுமுக நாவலர் பதிப்பு 14ஆம் பதிப்பு, குரோதன ஆண்டு.
11. திருக்குறள், பரிமேலழகர் உரை, பாரதி பதிப்பகம், சென்னை, ஆறும் பதிப்பு.
12. திருக்குறள்- உரைக்கொத்து, அறத்துப்பால் (பரிமேலழகர், மணக் குடவர், பரிதியார், காலிங்கர் உரை), திருப்பனந்தாள்மடத்து வெளியீடு, 1969.
13. திருக்குறள் - உரைக்கொத்து, பொருட்பால் (பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காலிங்கர் உரை), திருப்பனந்தாள் மடத்து வெளியீடு, 1960.

14. திருநாவுக்கரசர் தேவாரம் (தலமுறை), திருப்பனந்தாள் மடத்து வெளியீடு, 1961.

15. திருவாசகம், மாணிக்கவாசகர், ப. ராமநாதபிள்ளையுரை, கழக வெளியீடு, முதலாம் பதிப்பு, மறு அச்சு, 1968.

16. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியருரை, நா. பொன்னையா பதிப்பு, யாழ்ப்பாணம், 1937.

17. தொல்காப்பியம், பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல்) நச்சினார்க்கினியம், கழக வெளியீடு, இரண்டாம்பதிப்பு, 1966.

18. தொல்காப்பியம், பொருளதிகாரம் (மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல்) பேராசிரியர் உரை, பவானந்தம்பிள்ளை பதிப்பு, சென்னை, 1917.

19. நளவெண்பா மூலமும் உரையும், எல். ஸ்ரீனிவாசஐயர் பதிப்பு, டாக்டர். உ. வே. சாமிநாதய்யர் நூல்நிலையம், அடையாறு, சென்னை, 1960.

20. நற்றிணை நானூறு, நாராயணசாமி ஐயர் உரை, கழகவெளியீடு, நான்காம் பதிப்பு, 1967.

21. நன்னூல், காண்டிகையுரை, ஆறுமுகநாவலர் பதிப்பு, 15-ஆம் பதிப்பு, ஸ்ரீமுகஆண்டு, சென்னை.

22. நாலடியார், இளவழகனார்உரை, கழகவெளியீடு, முதற்பதிப்பு, ஆறும் மறுஅச்சு, 1968.

23. நானூற்பது, நாவலர் வேங்கடசாமி நாட்டாருரை, கழகவெளியீடு, 1971.

24. பத்துப்பாட்டு, (நச்சினார்க்கினியர்உரை), ஸ்ரீ தியாகராசவிலாச வெளியீடு, ஆறும் பதிப்பு, 1961.

25. பதிற்றுப்பத்து, (ஔவை சு. துரைசாமிப்பிள்ளை விளக்கவுரை), கழக வெளியீடு, முதலாம் பதிப்பு, மறுஅச்சு, 1968.

26. புறநானூறு, (ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை), கழகவெளியீடு, முதலாம் பதிப்பு, 1970.

27. புறப்பொருள் வெண்பாமாலை, பொ. வே. சோமசுந்தரனார் உரை, கழக வெளியீடு, முதலாம் பதிப்பு, நான்காம் மறுஅச்சு, 1969.

28. பெரியபுராணம் (திருத்தொண்டர்மாக்கதை), ப. ராமநாதபிள்ளை குறிப்புரை, கழக வெளியீடு, முதலாம்பதிப்பு, 1970.

29. மணிமேகலை மூலமும் உரையும், டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு, ஆறூர்பதிப்பு, 1965.

## தற்காலத் தமிழ் நூல்கள் :

1. அப்பாத்துரை. கா., **திருக்குறள் மணிவிளக்கவுரை**, இரண்டாம் பகுதி, அலமேலு நிலையம், சென்னை - 18, முதற் பதிப்பு, 1968.

2. அப்பாத்துரை, கா., **திருக்குறள் மணிவிளக்கவுரை**, மூன்றும் பகுதி, அலமேலு நிலையம், சென்னை - 18, முதற் பதிப்பு, 1970.

3. அருணாசலம், ப., **குறளின் செய்தி**, பாரி நிலையம், சென்னை - 1. முதற் பதிப்பு, 1968.

4. இராமலிங்கம் பிள்ளை, நாமக்கல் வெ., **திருக்குறள் புதுஉரை**, இன்ப நிலையம், சென்னை.

5. கலியாண சுந்தரனார், திரு. வி., **திருக்குறள் விரிவுரை** (அறத்துப் பால், இல்வாழ்க்கை இயல்), சாது அச்சுக் கூடம், சென்னை - 14, மூன்றும் பதிப்பு, 1959.

6. பாரதிதாசன், **பாரதிதாசன் கவிதைகள்**, இரண்டாம் தொகுதி, பாரி நிலையம், ஏழாம் பதிப்பு, 1967.

7. பாரதியார், **பாரதியார் கவிதைகள்**, வானதிபதிப்பகம், சென்னை-17, 1968.

8. முருகரத்தனம், டாக்டர் தி. (தொகுத்தோர்), **வள்ளுவர் வகுத்த பொருளியல்**, மதுரைப் பல்கலைக் கழகம், 1975.

## பிறநூல்கள் :

1. பரிசுத்த வேதாகமம், இந்திய வேதாகமச் சங்கம், பெங்களூர், 1971.

## கட்டுரை :

1. அருணாசலம், டாக்டர் பி., **எனது அனுபவத்திலே**, கல்கிதீபாவளி மலர், 1955.

## ஆங்கில நூல்கள் :

1. Arokiasamy, M., **The Classical Age of the Tamils**, University of Madras, First Edition, 1967.

2. Bacon Francis, **New Atlantis**, University Tutorial Press Ltd., London.

3. Basham, A. L., **Aspects of Ancient Indian Culture**, Asia Publishing House, Second Edition, 1970.

4. Basham, A. L., **The Wonder that was India**, Fontana Books, 1971.

5. Chatterji, Suniti Kumar, Atreya, Bhikhan Lal., Denielou Alain **Indian Culture**, A Universal Publication, Delhi-6, 1966,

6. Chattopadhyaya, Dr. Sudhakar, **Social Life in Ancient India**, Academic Publishers, First Edition, 1965.

7. Cronin, A. J., **Adventures in the two Worlds**, Victor Gollancz Ltd., Fifth Edition, 1955.

8. Douglas, Lloyd. C., **Disputed Passage**, Pocket Books Inc., Rockfeller Center, New York.

9. Douglas, Lloyd. C., **Dr. Hudson's Secret Journal**, Houghton Miffins Company, 2. Park Street, Boston-1, U.S.A.

10. Douglas, Lloyd. C., **The Magnificient Obsession**, Houghton Miffins Company, 2. Park Street, Boston-1, U.S.A.

11. Ebenstein, William, **Great Political Thinkers** - Plato to the Present, Oxford and IBH Publishing Company, Calcutta, Indian Edition, 1969.

12. Freund, Julien, The **Sociology of Max Weber**, (tran. Mary Llford) Allen Lane and Penguin Press, First Published in Great Britain, 1968, Reprint, 1970.

13. Ginsberg, Morris, **Essays in Sociology and Social Philosophy**, Penguin Books, 1968.

14. Huxley, Aldous, **The Brave New World and The Brave New World Revisited**, Harper and Row Publishers, New York, 1964.

15. Kripalani, Krishna, **Rabindranath Tagore** (A Biography), Oxford University Press, London, 1962.

16. More, Sir. Thomas, **The Utopia** (tran. Ralph Robinson), Macmillan and Co. Ltd., 1958.

17. Nilakanta Sastri, K. A., **A History of South India**, Oxford University Press, Third Edition, 1966.

18. Nilakanta Sastri, K. A., **The Sangam Age**, Swathi Publications, Madras-18, 1972.

19. Oman, John Campbell., **The Mystics Ascetics and Saints of India**, Oriental Publishers, Delhi-6, 1973.

20. Pillai, K. K., **A Social History of the Tamils, Part I**, University of Madras, 1969.

21. Prabhu Pandharinath. H., **Hindu Social Organization**, Popular Prakashan, Bombay, Fourth Edition, 1963.

22. Rolland, Romain, **The Life of Vivekananda and the Universal Gospel**, Advaita Ashram, Almora, Second Edition, 1944.

23. Roy, Dilip Kumar, **Sri Aurobindo came to Me**, Jaico Publishing House, Bombay, Third Edition, 1971.

24. Sarma, D. S., **Renascent Hinduism**, Baratiya Vidya Bavan, Bombay-7, 1966.

25. Sat prem, **Sri Aurobindo or The Adventure of Consciousness**, (tran. by TEHMI), India Library Society, New York, 1964.

26. Spellman, John, W., **Political Theory of Ancient India**, Clarendon Press, Oxford, 1964.

27. Subrahmanian, N., **History of Tamil Nad** (to A. D. 1336) Koodal Publishers, Madurai-1, 1972.

28. Subrahmanian, N., **Sangam Polity**, Asia Publishing House, 1966,

## தொகுப்பு நூல்கள் :

1. **Encyclopaedia Brittanica**

2. **Holy Bible, The**, Revised Standard Version, Thomas Nelson and Sons, New York, 1952.

## கட்டுரை :

1. Silverman, Milton, Are Patients Human Beings?, **The Saturday Evening Post**, 1955.

(எண்களை அடுத்துள்ள புள்ளிகள் பன்முறை யாட்சியைக் குறிக்கும்.)


அகத்திணையியல் 90 235
அகநானூறு 52 . . 136 138 196 205 226 227 276
அகப்பொருள் நூல்கள் 2 35 38 45 . . 49 50 51 58 94
அங்கவியல் 3 87 98 . . 99 178 190 252 311
அசிரிய நாடு 269
அசுரம் 50
அடக்கம் உடைமை 3 75 153 175 176 178
அடிமை 142 . . 143 . .
அடியோர் 142 . .
அத்துவைதம் 260 287
அத்லாந்திய மாகடல் 39 349
அதிபதிகள் 349 351
அதியமான் 86 253
அந்தணர்நூல் 232 . . 238 248 249 . . 278
அநாதைக் குழந்தைகள் 68 69 . . 297
அப்பாத்துரை, கா. 61 65 73 . . 75 76 81 171 261 262 . . 263 273
அமரர் 63
அமர வாழ்வு 263
அமுத சுரபி 60
அமெரிக்கா 40 . 41 110 . . 111 331
—ஐக்கிய நாடுகள் 111
அமைச்சியல் 99
அமைச்சு 12
அயன் 61
அயோத்தி 2
அர்த்த நூல் 229 231 235
அரங்கசுவாமி, ஆர். 20
அரசியல் அமைப்பு 42 352
அரசியல் அலுவலர் 27 85 103 149 153 221 231 249 250 309 310 322 326
அரசியல் புரட்சி 42
அரசு (The Republic) 1 159 184 304 306 307 331
அரண் 26 . . 27 . . 102 190 231 . . 264 314 337
அரவிந்தர் 260 . . 263 . . 295 300 . . 301 . .
அரிக்கமேடு 135
அருகர் 115
அருணாசலம், ப. 36 37 230
அருணாசலம், டாக்டர் பி. 108
அருள் 4 7 . . 17 25 33 74 83 107 110 141 152 . . 157 . . 158 159 170 . . 177 186 199 200 222 251 . . 255 279 283 284 286 291 292 294 . . 295 298 . . 299 . . 303 315 319 338
அருளுடைமை 152 . . 153 272 285 286 302 303
அலர் 48 50
அலரறிவுறுத்தல் 38 49
அவாவறுத்தல் 160 281 285 287 298 302
அவை 13 . . 38 80 . . 81 . . 82 91 116 . . 117 153 171 191 213 . . 224 . . 231 . . 324 328
அவையஞ்சாமை 13
அவையறிதல் 13
அழுக்காறாமை 3 . . 154 155
அழும்பில்வேள் 99
அளவை நூல் (அளவுநூல்) 231 . . 233 234 . . 323
அறத்துப்பால் 29 35 44 151 161 164
அறத்தொடு நிற்றல் 50
அற நூல்கள் 115 . . 116 149 161 162 177 189 . . 190 . . 200 217 229 230 290
அறம் பொருள் இன்பம் 53 191
அறவண அடிகள் 234 276 291
அறவியல் 150
அறிவியல் 11 33 111 259 260 304 305 348 349 350 352
அறிவியல் மஞ்சரி 110
அறிவுடை நம்பி, பாண்டியன் 79
அறிவுடைமை 8 82 . . 84 109 114 223 261
அன்புடைமை 3 109 152 153 243 . . 244 245
அனுமானம் 234 . .
ஆங்கில நாடு 38 39 40 . . 108 . . 110 331 332 348 . .

ஆசிரமங்கள் 57
ஆசிரியத்தொழில் 97 .. 1 13
ஆதிரை 47 206
ஆநிரை காத்தல் 238
ஆப்பிரிக்கா 331
ஆபிரகாம் 162
ஆயர் 125 126 .. 235 311 320
ஆயுள்வேதம் 98 105 107 112 231
ஆரியர் 50 189 237 239 275 279
ஆலைத்தொழில் 97
ஆவிநன்குடி 287
ஆள்வினையுடைமை 9 172
ஆறங்கங்கள் 232
ஆறுமுகநாவலர் 121 ..
இக்காரிச் செலவு 40
இகல் 10 14 264 314 .. 335 ..
இசை 61 96 .. 143 .. 144 194 235 309 319 .. 320 .. 321 326 340
இடுக்கணழியாமை 53 172 329
இத்தாலி 2 39
இந்தியா 44 . 57 .. 79 87 .. 174 234 247 293 296 .. 298 300
இந்திரவிழா 115 .. 214 237 291
இந்து சமயம் 269
இம்மை 20 64 76 77 .. 149 168 280 289 299 320 346
இயல்புடைய மூவர் 56 .. 58 59 76
இயல்பூக்கங்கள் 94 .. 95 ..
இயன்மருத்துவம் புரிவோர் 112
இரவச்சம் 29 193
இரவீந்திரநாததாகூர் வங்கமாகவி 295
இரவு 17 18 165 193 207
இராம இலக்குமணர் 151
இராமகிருஷ்ண பரமஹம்சர் 132 .. 296
இராமகிருஷ்ணமடம் 157 297 .. 298 299 .. 302 ..
இராமலிங்கம்பிள்ளை, நாமக்கல் வெ. 147 160 300
இராமாயணம் 2
இராமானந்தர் 295
இராமானுசர் 295
இருஉலகங்களில் பெற்ற அனுபவங்கள் 110
இருக்குவேதம் 235 346
இரும்புக் கொல்லர் 132
இல்லத் தலைவி 66 71 72 73 74 75 76 .. 78 85 90 91
இல்லறம் 6 25 45 56 57 58 .. 64 .. 71 76 .. 78 90 151 .. 155 160 269 .. 271 273 278 279 280 .. 281 300 305 327 328
இல்லறவியல் 3 66 85 151 .. 152 154 .. 155 .. 156 157 271 272 285 327
இலக்கண நூல்கள் 199 228
இலக்குமணர் 151
இலங்கை 87 199
இலத்தீன் 331
இளங்கோ 119 136 294 .. 312
இளம்பெருவழுதி 169
இளவெயினி, குறமகள் 86 226
இறைமாட்சி 9 33 164 226 229
இறையனார் அகப்பொருள் 2
இன்பதுன்ப நடுநிலைக் கொள்கை 174
இன்னா செய்யாமை 2 31 154 .. 156 .. 158 .. 159 160 277 285 286 300 302
இனியவை கூறல் 3 153 179 .. 328
இனியவை நாற்பது 79
இஸ்ரவேல் நாடு 87
இஸ்லாமியம் 296 ..
ஈகை 3 6 16 .. 29 32 .. 35 60 157 .. 161 164 165 .. 168 .. 193 242 .. 258 268 347
உட்டோப்பியா 2 38 .. 39 40 .. 304 331 332 .. 334 335 336 .. 337 .. 339 .. 340 .. 341 342 .. 343 .. 344 .. 345 347 .. 348 ..

உட்பகை 14 . . 15 . . 34 131 133 134
உடற்துறையுள்ளோர் 60 68 . .
உடன்போக்கு 49 . . 51 94
உப்பெடுக்கும் தொழில் 129
உபநயனம் 247
உபநிடதம் 235 302
உயிர் மலர்ச்சிக் கொள்கை 41 83 259 260 261
*உருவாகிக் கொண்டிருக்கும் மக்கள் குலம்* 260
உரோமப் பேரரசு 142 269 271
உலகப் போர் 41 260
உலோகத் தொழில் 132
உலோச்சனர் 278
உழவர் 101 118 119 . . 120 149 196 . . 235 246 322 342
உழவு 97 . . 104 118 . . 119 . . 120 . . 121 . . 122 123 124 . . 131 196 231 232 . . 239 264 266 342 . .
உழுதுண்பார் 118
உழுவித்துண்போர் 118
உள்நாட்டுப் போர் 40
உளவியல் 188 218 . . 305
*ஊக்கமுடைமை* 9 172
ஊடல் 219
ஊர்மன்றத்தினர் 116 197
ஊரவை 81 . . 213
*ஊழ்* 23 24 . . 173 280 . . 281 282
எட்டின், கபெட் 40
*எட்டுத்தொகை* 161 228
எட்டு வகை மணங்கள் 50 229
எண்பேராயம் 100
*எதிர்பார்த்தல்* 41 260
எயிற்றியார், (கழார்க்கீரன்) 226
எயினர் 235
எலிசபெத் அரசி 348
ஏசாயா 1 . .
ஏறு தழுவுதல் 50 51
ஐம்பெருங்குழு 100
ஐயை 208
ஐரோப்பா 331 . .
ஐவகைச் சிலம் 291
ஒக்கல் 60 164 . .
*ஒப்புரவறிதல்* 3
ஒப்புரவு 29 32 60 74 143 157 161 165 . . 166 167 168 193 264
*ஒழிபியல்* 164 172 178 190
ஒழுக்கம் உடைமை 3 153 154 177 224 240 . . 241 246
ஒற்றர் (ஒற்றன்) 11 . . 12 100 160 . , 284 . . 308 311 338
*ஒற்றாடல்* 11 12 100
*ஓசியானு* 11 40
ஓமன், ஜான் காம்பல் 293 296
ஓரி 147
ஔவையார் 86 101 253
கட்டடக்கலை 129 . . 130 . . 231
கட்டடத்தொழில் 309 322 340 341
கட்டியங்காரன் 22
கடவுள் 46 61 63 . . 71 78 253 269 270 . . 271 274 275 288 297 301 329 . .
*கடவுள்வாழ்த்து* 63
கடற்றொழில் 128
கண்ணகி 45 . . 46 47 51 . . 60 72 85 136 161 . . 200 208 214 216 243 249 292 293 . . 294
கண்ணோட்டம் 31 32 143 169
கணி 324
கணிகை 47 . .
கணிதம் 228 . . 322 . . 324 . .
கத்தோலிக்க மடம் 157 299
கத்தோலிக்கர் 270 297 302
*கதிர்நகர்* 2 37 . .
கதைமாந்தர் 2 36
கப்பல் தலைவன் 311
கபிலர் 254 255 256
கம்பர் 2 6 . . 17 30 34 . . 35 . . 148 . .
*கம்பராமாயணம்* 148 . . 329
கரணம் 52 . .
கரிகாலன் 120 124

கல்லாமை 8 222 224 228
கல்வி 2 4 . . 6 . . 8 . . 13 18
22 23 30 . . 35 57 . .
59 . . 68 . . 69 81 . .
82 83 . . 84 86 90 96 . .
97 . . 107 . . 108 113 . .
114 . . 116 171 177 . .
178 . . 203 221 222 . .
229 . . 230 231 232 . .
233 235 . . 236 245 246
247 249 251 . . 252 . .
256 266 . . 267 . . 268
274 . . 275 . . 279 . .
280 288 289 . . 294 . .
296 . . 297 . . 305 306
307 308 . . 310 314 . .
319 . . 324 . . 326 328
330 . . 331 340 . . 344
346 . . 348 349 . .
352 . .
கலித்தொகை 47 50 72 94 125
140 216 . . 275 292
கலியாணசுந்தரனர், திரு வி. 61
65 73 76 81 . . 151
163 . . 272
கவறு 15 139 . .
கவுந்தியடிகள் (காவுந்தி) 72
216 276
கள் 15 . . 42 61 84 138 . .
139 . . 336 347
கள்ளாமை 35 155 . . 158 . .
284 289 302 334
கள்ளுண்ணுமை 15 138
களப்பிரர் 42
களவியல் 36 . . 38 49
களவு 36 49 . . 50 52 57
58 . . 237
கற்பனைநாடு 3 12 18 38 39 40
42 332 336 349 351
கற்பியல் 36 49 52 90 . .
91 . .
கற்பு 35 . . 36 . . 38 45 46
50 51 52 . . 58 70
72 . . 73 . . 74 76 77
78 . . 216 237 351 352
கனகசபை 203
கனகவிசயர் 318
கனவுநிலையுரைத்தல் 218
காக்கைபாடினியார் 86
காட்சி (அளவை) 234 . .
காடுறை வாழ்க்கை 57 . . 271
காதல்மணம் 48
காதற் சிறப்புரைக்கல் 36 . .
காந்தியடிகள் 160 295 300
342
காப்புச்சிறை 37 48
காம்பனெல்லா, தாமஸ் 2 39 . .
காமக்கூட்டம் 50
காமத்துப்பால் 35 . . 36 . .
37 44 . . 47 48 . .
49 . . 52 53 . . 54 55
56 57 90 91 100 126
133 161 191 193 209
216 218 . . 225 237 . .
கால்வின், ஜான் 257
காலிங்கர் 20 59 75 77 107
109 124 126 130 132
136 164 229 . . 243 . .
255 280 281 289
காவலன் 217 232 238
காவற்பெண்டு 86
காவிரி 119 120 174
காளிதாசர் 80
கிணறு வெட்டும் தொழில் 135
கிரனின், டாக்டர் ஏ. ஜே. 108
110
கிராம்வெல் 40
கிரிஷ் சந்திர கோஷ் 298 . .
கிருஸ்தவச் சீர்திருத்தம் 39 . .
257 331
கிருஸ்தவச் சீர்திருத்த இயக்கத்
தலைவர்கள் 165
கிருஸ்தவத் திருக்கூட்டம் 39
331
கிருஸ்தவத் துறவறவியக்கம்
271
கிருஸ்தவம் 39 269 297 351
கிருஸ்தவர் 270
கிரேக்க அறிஞர் 1 10 159 174
306 . . 312 319 329
கிரேக்கநாடு 38 142 269 307 . .
கிரேக்கம் (மொழி) 331
கிரேக்கர் 174 . . 313 . .
315 . .
கிள்ளிவளவன் 120 217
குடபுலவியனர் 120 253

குடவோலைத் தேர்தல் 116
குடி 9 10 16 17 . . 26 . . 32 33 88 . . 90 98 . . 103 104 120 . . 121 . . 130 133 140 142 164 168 172 182 203 206 . . 208 217 242 . 243 . . 244 . 245 . . 249 . . 254 264 266 . . 309 310 . . 311 . . 316 . . 321 322 327 333 . . 334 335 . . 336 345 348 . . 349
குடிசெயல்வகை 17 32 88 168 171 266
குடிமை 16 60 143 178 241 242 . . 245 . . 246
குடியரசு 306
குடும்பத் தலைவன் (ர்) 61 . . 64 90 . . 113 158 167 215 342 . . 343 344 351 . .
குடும்பத் தலைவி 76 352
குடும்பம் 66 72 . . 75 76 77 . . 78 83 84 85 . . 86 . 88 . . 89 . . 90 . . 91 92 . . 93 . . 94 . . 95 . . 130 152 . . 154 165 167 . . 168 178 193 214 . . 270 298 300 . . 302 326 327 . . 328 . . 330 336 . . 341 342 343 . . 344 . . 351 . . 352 . .
குமரிஎல்லை 296
குயவர் 121 134 . .
குருமார் 2 39 42 346 . . 348
குற்றங்கடிதல் 213
குறவர் 235
குறளின்செய்தி 36 37
குறிஞ்சிக்கலி 72
குறிஞ்சிப் பாட்டு 209
குறிப்பறிதல் 13
குறுந்தொகை 86 93 . . 336
கூட்டுக் குடும்பம் 44 45 58 92 342 344 . . 352
கூடாநட்பு 14
கூடாவொழுக்கம் 7 25 154 302 273 . . 284
கூத்து 61 96 143 144 . .
கூர்தல் அறம் 83 259
கூவலர் 135
கேள்வி (அறிவு) 8 . . 30 . . 35 . . 80 81 113 114 115 222 223 . . 224 227 . . 267 346
கொடுங்கோல் 9 316 . . 338 339
கொடுங்கோன்மை 9
கொல்லர் 132 . . 133 . . 134 322 340
கொல்லாமை 158 159 184 . . 239 285 300 302
கோசலை நாடு 2 6 . . 17 30 . . 34 . . 35 . .
கோவலர் 125
கோவலன் 45 . . 46 47 . . 51 60 97 136 161 200 . . 214 248 249 291 292 293 294
சங்ககாலம் 47 50 62 82 86 98 103 116 . . 132 138 142 185 . . 198 199 201 210 226 232 235 237 . . 239 249 253 283 287 336
சங்கரர் 271 295
சச்சிதானந்தம் 260 271
சட்டவல்லுநர் 97 331
சத்திரியர் 235 . . 236 244 247 271 278
சதானந்தர் 299
சதுரங்கம் 101
சமணம் 42 199 272 274 276 . . 277 278 286 . . 287 294 . . 352
சமயநிறுவனங்கள் 39
சமயநூல் 8 57 115 . . 152 155 171 172 190 194 199 232 233 247 248 249 289 290 . . 296 301 302 . . 352
சமுதாய அறங்கள் 161 169
சமூகப்பணி 68 112

சமூகவியல் 43 94 180 190 . . 264 295
சமூகவியலறிஞர் 92 257 . . 259 266
சனிக்கிழமை மாலை அஞ்சல் 111
சாக்ரதீஸ் 306 307
சாணக்கியர் 255 256
சாத்தனர், பெருந்தலை 46
சாதி 59 221 235 . . 236 237 240 241 246 296
சாதுசக்கரன் 60
சாதுவன் 47 206
சாமபேததான தண்டம் 253
சார்லஸ் (முதலாம்) மன்னர் 40
சாலோமோனின் இல்லம் 349 350 351
சான்றாண்மை 60 150 169 178 183
சித்தமருத்துவம் 105 231
சிலப்பதிகாரம் 45 . . 46 51 . . 52 60 62 . . 72 85 97 98 . . 99 100 103 112 115 125 . . 126 127 135 136 137 138 142 144 147 161 . , 200 208 214 . . 216 218 229 237 248 267 276 283 287 291 294 . . 295 302 318 324
சிவஞான சித்தியார் 234
சிற்றினஞ் சேராமை 9
சிறந்தோர் ஆட்சி 308
சீக்கியம் 293
சீவகசிந்தாமணி 90
சீனு 174
சுதமதி 157 . . 293
சுந்தரர் 132 163 . .
சுற்றம் 12 61 71 75 88 119 142 161 . . 163 203 258
சுற்றந்தழால் 164
சூடாமணி நிகண்டு 121
சூத்திரர் 235 236 . . 250
சூது 15 . . 42 61 127 139 . . 203 . , 336 340 345 347
செங்குட்டுவன் 85 99 147 312 318 324
செங்கோல் 9 120 164 311 317
செங்கோன்மை 33 120
செய்ந்நன்றியறிதல் 3
செய்யாள் 162
செல்வம் 1 . . 3 . . 5 . . 6 . . 8 . . 10 . . 16 . . 18 . . 19 20 22 23 . . 24 . . 26 34 . . 53 55 . . 56 63 71 . . 75 78 79 . . 80 . . 97 101 103 117 119 121 122 126 139 144 . . 147 154 158 160 . . 162 163 . . 165 171 . . 172 . . 173 . . 174 175 . . 177 181 . . 183 . . 193 . . 196 . . 197 202 205 218 241 . . 249 251 . . 254 256 263 . . 264 . . 265 . . 266 271 280 . . 281 287 . . 293 312 . . 313 . . 314 . . 325 332 335 344 346 347
செல்வர் ஆட்சி 308
சைதன்யர் 295
சைவசித்தாந்தம் 289
சைனம் 269
சேந்தங்கொற்றனர், இடையன் 220
சொல்லேருழவர் 255 . . 325 326
சோதிடம் 98
சோமசுந்தரனர், பொ. வே. 283
சோழநாடு 119
சோழர் 116
ஞானம் 20 . . 21 234 281 289
டக்லஸ், லாயிட் 110
டாகாமா 331
டார்கீம் 257 259
டார்வின் 259
தச்சுத்தொழில் 129 130 . . 131 . . 133 322 340
தசரதன் 6 30
தத்துவ அறிஞர் 260
தத்துவ நூல் 190 233 . . 234 289 344
தத்துவம் 233 234 288 303 306 . . 320 . . 322 325 352

தமிழ்க்கூத்தனர் 227
தமிழ்நாடு 15 17 . 30 34 42 . . 44 46 50 . . 60 85 . . 98 . . 103 118 . . 124 126 128 133 142 174 194 . . 197 199 221 230 . . 232 235 . . 236 . . 237 239 . . 246 247 . . 250 266 267 274 . . 275 276 . . 277 — 279 283 287 297 307 309 315 . . 318 319 324 336 340 . . 348 351
தமிழகம் 34 124 135 136 142 145 148 203 216 235 . . 250 264 336
தர்க்கம் 98 231 233 . . 234 . . 322
தர்மகர்த்தாக் கொள்கை 165
தர்ம நூல் 229 230 235 246 . . 250 271 278
தவம் 20 . . 21 24 25 . . 56 65 . . 84 152 153 155 158 171 272 273 283 285 . . 286 287 . . 290 300 302 . .
தன்னுட்சியுரிமை 1 38
தனிமகன் ஆட்சி 308 . .
தனியுடைமை 342 346 347 349 351
தாபதவாகை 278 282 286
தாமரையினள் 9 10
தாமோதரனர் 118 227
தாய உரிமை 85 . 93
திரிபுரசுந்தரி, டாக்டர் (லஷ்மி) 109 110 112
திரு 266 280
திருக்குறள் விரிவுரை 151 163 272
திருசகோவையார் 2
திருநாவுக்கரசர் 211 255 256
திருமுருகாற்றுப்படை 185 . . 287
திருவள்ளுவமாலை 198
திருவாசகம் 248
திறை 312 315 . . 336
தீவினையச்சம் 156
துரையரங்கனர், டாக்டர் 132
துவ்வாதார் 56 . . 59 . . 69 . . 92 297
துறக்கம் 262
துறவறவியல் 59 151 152 . . 154 . . 155 156 157 158 . . 160 233 272 . . 274 277 279 281 284 293 302 311 334
துறவி 6 7 . . 21 25 26 59 . . 60 . 68 . . 151 . . 153 . . 155 . . 156 157 . . 158 . 159 160 . . 172 176 183 187 188 . . 192 . . 193 200 . . 232 . . 233 . . 234 255 256 269 . . 270 271 272 . . 273 . . – 279 . 281 – 283 . . 284 285 . . 286 287 . . 288 . . 289 290 291 . . – 303 . . 324 334 348 350 351
துறவு 7 25 . . 26 53 ..56 . . 57 . 65 . . 68 . 150 151 . . 152 . . 155 160 . . 188 192 269 . . 270 . . 271 . . 272 275 278 . . 279 . . 280 . . 281 . . 282 284 285 286 288 . . 289 290 294 295 . . 296 . . 297 . . 298 . . 300 . . 302 . . 303 . . 305 334 344 347 348
தூது 13 33 . . 90 91 . . 99 . . 182 230 231 244
தூதுவர் (தூதர்) 13 . . 33 99 . . 182 190 191 231 . . 244
தூய்மைக் கோட்பாடுடையோர் 270
தெய்வம் 35 53 60 61 62 . . 63 66 . . 72 . . 73 88 164 173 319 345 . . 346 . 347 . . 348
தெரிந்துதெளிதல் 27 100
தெரிந்து வினையாடல் 27 100
தெறுபொருள் 315

தென்புலத்தார் 60 61 .. 62 .. 70 164
தேவர் 63 67 270 346
தேவாரம் 295
தொண்டைமான் 86 253
தொல்காப்பியம் 37 50 52 198 199 222 228 232 235 236 .. 237 .. 347 248 .. 275 315 318 336
தொல்காப்பியர் 50 .. 52 58 90 95 113 .. 142 206 222 .. 229 .. 230 235 .. 236 .. 240 .. 246 247 248 274 .. 275 .. 279 282 .. 297 316
தோட்டத் தொழில் 124 .. 125
நக்கண்ணையார் 86
நக்கீரர் 116 185
நகர அரசுகள் (நகரரசுகள்) 307 312 313
நகரவை 68 ..
நச்சினார்க்கினியம் 248
நச்சினார்க்கினியர் 50 201 283 315 336
நட்பு 13 .. 14 .. 31 114 117 .. 154 166 170 212 223 245 .. 314 338 .. 339 .. 347 ..
நடுவர்கள் 116
நடுவுநிலைமை 375 104 117 .. 153 242 258
நல்குரவு 12 17 168 .. 193
நல்லந்துவனார் 116
நள்ளி 147
நளவெண்பா 80
நளன் 79
நற்றிணை 145
நன்றியில் செல்வம் 16 264
நன்னன் 336
நன்னூல் 199
நாகனார் வெள்ளைக்குடி 119 120 121 127
நாடகம் 69 96 319 ..
நாடு 3 26 34
நாணுத்துறவுரைத்தல் 37
நால்வகை வாய்மை 291
நாலடியார் 20 89
நிலக்கிழார்கள் 118 123 332
நீத்தார் பெருமை 254 .. 273 278
நீதிநூல் 6 83 189 229 .. 231
நீதிமன்றம் 97 116
நெடுங்கீரனார், இடையன் 226
நெடுஞ்செழியன் 47 113 120 236 252 ..
நெடுநல்வாடை 212
நேர்ஸ்மார் 111 112
நொதுமலர் வரைவு 50
பகவத்கீதை 176
பகை 1 4 10 .. 31 34 91 99 101 117 159 .. 181 191 208 255 .. 256 .. 267 313 314 .. 315 .. 317 ..
பகைத்திறந்தெரிதல் 14 314 415
பகைமாட்சி 14 316 317
பசுக்காவல் 332
பஞ்சமர் 235
பட்டினப்பாலை 104 120
பட்லர் சாமுவேல் 41
படை 13 .. 14 27 .. 28 .. 29 .. 32 .. 33 .. 97 98 .. 99 .. 100 .. 101 .. 102 103 119 .. 125 166 .. 234 264 271 309 .. 312 313 314 317 .. 318 .. 322 .. 334 .. 335 .. 337
படைச்செருக்கு 28 30 100 159 166
படைத்தலைவன் (ர்) 27 .. 322
படைமாட்சி 27 30 34 100 160
பண்புடைமை 16 31 242 243 .. 244
பத்தினிப் பெண்டிர் 72
பத்துப்பாட்டு 98 127 138 .. 140 146 161 .. 165 185 205 229 276 287
பதிற்றுப்பத்து 232 248
பதினெண்கீழ்க்கணக்கு 79

*பயனில சொல்லாமை* 156 179
பயிர்த்தொழில் 98 123 124 253 309 333 340 341 .. 342
பரத்தையர் 47
பரத்தையிற் பிரிவு 47 .. 90 ..
பரதவர்கள் (பரதவர்) 128 235
பரவையார் 163
பரிதியார் 20 28 81 128 132 171 194 196 198 206 218 255 263 280 289 ..
பரிப்பெருமாள் 243
பரிமேலழகர் 20 22 58 .. 65 74 75 81 89 90 103 107 130 135 149 153 .. 170 182 . 184 187 190 194 196 197 205 .. 210 .. 213 218 225 .. 226 227 228 229 .. 231 232 233 234 240 .. 241 243 .. 248 251 253 .. 255 267 279 285 286 287 .. 289 290 311 315 317 318 335 336 347
பல்லவர் 194 295
பலதாரம் 44 46 .. 47 92 ..
பவுல், தூயர் 65
பறையடிப்போர் 141
பாகர் 136 .. 137 141
பாண்டிமாதேவி 85
பாணர் 161 164
பாதீடு 318
*பாயிரம்* 151 178
பார்ப்பன வாகை 99 249
பார்ப்பார் (பார்ப்பன குலம்) 52 99 .. 230 232 238 239 .. 246 248 .. 278 279
பாரதம் 295 352
பாரதிதாசன் 72 240
*பாரதிதாசன் கவிதைகள்* 73
பாரதியார் 190
பாராளுமன்றம் 81 348
பாரி 254
பாரிமகளிர் 86
பிதிரர் 61 ..
பிரபுக்கள் 165
பிரமச்சரியம் 56 57 .. 58 300 327
பிரமம் 260 .. 271
பிராமணர் 235 .. 236 244 247 271
பிராமி கல்வெட்டுகள் 276
*பிரித்தானியகலைக்களஞ்சியம்* 39 92
பிரெஞ்சு அரசர் 334
பிரெஞ்சு நாடு 40 332 ..
பிள்ளை, சே. கே. 203
பிளேகு 297 299
பிளேட்டோ 1 10 14 38 159 184 304 309 .. 311 312 .. 313 .. 314 .. 315 .. 317 .. 318 .. 319 .. 320 .. 321 .. 322 323 324 .. 325 .. 326 . 327 .. 328 .. 329 . 330 .. 331 .. 339 340 343
*பிறனில் விழையாமை* 3 ..
பின்னோக்கிப் பார்த்தல் 41
புகழ் 3 9 .. 66 . 76 .. 77 120 155 157 .. 167 .. 169 203 249 258 ..
புகழேந்தி 79
புகார் 200 237
*புணர்ச்சி மகிழ்தல்* 36
புத்தர் 115 271 ..
புத்தேள் 63 76 77 ..
*புதியஏற்பாடு* 65
புது அத்லாந்தியநாடு 11 .. 12 39 .. 304 348 .. 349 .. 350 .. 351 ..
*புது உடடோப்பியா* 41 260
*புதுவீரஉலகு* (புதுவீரஉலகம்) 2 41 200 304
*புதுவீரஉலகைத் திரும்பவும் பார்த்தல்* 305
புதுவை 135 301 ..
புதைபொருள் ஆராய்ச்சியாளர் 135
புரட்சி 40 42 .. 43 63 263 .. 264 265 ..
புரோகிதர் 252 .. 253
*புல்லறிவாண்மை* 14

புலவி 197 . . 201
புலவி நுணுக்கம் 56 219
புலான் மறுத்தல் 199
புறங்கூறுமை 3 66 156 179 243
புறத்திணையியல் 236 274 336
புறநானூறு 46 60 62 . . 70 . . 77 78 79 82 86 . . 99 . . 101 112 116 120 . . 126 127 131 133 134 138 . . 142 147 164 169 185 198 226 227 230 236 237 249 252 255 267 278 . . 282 283 286 316 324 329
புறப்பொருள் வெண்பாமாலை 151 274 277 278 282 . . 286 . . 297 303
பூங்குன்றனார், கணியன் 324 . .
பூதப்பாண்டியன் 116
பெண்வழிச்சேறல் 85 87 93
பெரியபுராணம் 71 163 248
பெரியாரைத் துணைக்கோடல் 9 . . 252 254
பெரியாரைப் பிழையாமை 254 290
பெருங்கடல் சூழ்நாடு (ஓசியானு) 11 40 . .
பெருங்குன்றூர்க்கிழார் 46
பெருஞ்சித்திரனார் 46
பெருந்திணை 37 . .
பெரும்பாணாற்றுப்படை 162 201
பெருமை 16 170
பெலாமி, எட்வார்ட் 41 . .
பேக்கன், பிரான்சிஸ் 11 39 304 348 . . 349 353 . .
பேதைமை 14
பொச்சாவாமை 9 . .
பொதுமகளிர் 294 351
பொதுவுடைமை 39 41 42 . . 263 . . 265 . . 346 348 349
பொருட்பால் 8 11 26 27 29 35 60 87 161 190 . .
பொருள் செயல்வகை 16
பொருள் நூல்கள் 229 230 . . 231 307
பொருள்வயிற்பிரிவு 91
பொருளதிகாரம் 37 50
பொழுது போக்குகள் 96 137 . . 139 . . 144 145 146 . . 147 . . 148 193 305 340
பொற்கொல்லர் 132 133 . .
பொற்கொல்லனார், தங்கால் 227
பொறியியல் வல்லுநர் 97 253
பொறையுடைமை 31 . . 154 . . 158 285
பொன்முடியார் 82
போட்டியிடப்பட்ட பாதை 111
போதியார் 275 . .
போர் 1 10 . . 11 . . 14 . . 22 32 . . 37 . . 40 . . 86 89 . . 90 . . 91 100 101 . . 102 . . 125 133 136 141 150 159 . . 166 170 . . 171 183 184 194 . . 204 214 . . 215 221 . 253 . . 263 . . 264 . . 312 . . 313 . . 314 . . 315 . . 316 . . 318 . . 322 326 . . 328 330 331 334 . . 335 . . 336 337 338 339 . 340 349 351
பௌத்தம் (பௌத்தர்கள்) 42 87 199 234 . . 269 270 272 274 276 . . 277 . . 278 283 . . 293 . . 294 . . 352
மக்கட்பேறு 33 44 52 78 . . 80 . . 85 151 191 351 . . 352
மக்கள் ஆட்சி 308 . . 339 . . 348
மடல் 37 . . 48 50
மடியின்மை 9 172
மணக்குடவர் 20 64 65 . 67 77 89 120 121 128 131 147 . . 153 194 205 206 218 223 231 255 280 287 291 315
மணம் 50 52 . . 229 248 326 327 343

மணிசெய்யும் தொழில் 133 . .
மணிமேகலை 46 60 . . 115 129
138 157 . . 168 175
206 234 . . 244 276
277 283 287 291 293
295
மணிவாசகர் 194
மலர்விளக்கவுரை 73 75 261
273
மத்திய தரைக் கடல் 138
மதுரை 103 116 . 136 200
227 283 . . 292 293
மதுரைக் காஞ்சி 276 278
282 283 . .
மரப்பாவையை இயக்கும் கலை
144
மரபியல் 236
மருத்துவம் 68 . . 69 70 97 . .
105 . . 106 . . 108 109
110 112 . 118 . . 281
323 . 328 350
மருத்துவமனை 68 . . 69 . .
109 . . 110 . . 111 . .
112 . . 346
மருத்துவர் 70 105 . . 106 . .
107 . . 108 . . 109 . .
110 . . 112 231 309 311
323 . . 329 . .
மருதத்திணை 47
மருந்து 16 105 202 231
மலைபடுகடாம் 136
மறுபிறப்பு 18 197 233
மறுமை 62 . . 69 . 76 77 . .
95 149 . . 168 192
262 . . 289 . . 299 303
320 346 . . 347
மறைமொழி 232
மறையோர் 50 . . 229
மன்னரைச் சேர்ந்தொழுகல்
13 98
மனு 230 246
மனுநீதி 230
மாசாத்துவான் 46
மாணவநிலை 56 57 . . 271
மாத்துவர் 295
மாதரி 51 . . 72 161 216 293
மாதவி 47 291 294
மாநாய்கன் 47
மாநில ஆட்சி 81
மார்க்ஸ், கார்ல் 263 264
மித்திரன் 346
மீன்பிடித்தல் 127 128 . .
129 . 146 199 206 238
முக்தி (முத்தி) 280 299
முகடி 9 10
முடியாட்சி 42 . . 81 98 307 . .
339
முத்து படுத்தல் 129 146
முல்லைத்திணை 50
முல்லை நிலம் 50
முல்லைப்பாட்டு 335 340
முருகன் 185
மூதெயினனர் 226
மூர், தாமஸ் 2 . 38 39
304 331 . . 346 348
மூவேந்தர் 98
மெய்நூல் 190 . 233 . .
மோரிய அரசர் 255
யவனர் 138 . . 174 335 . .
யாழ்ப்பாணம் 121 199
யூதர்கள் 1 26 9
ராய் திலிப்குமார் 301 . .
ரால்ப், லின்டன் 92
ரிபப்ளிக் 306
ரியூ ஹான் 41
ருசியப்புரட்சி 265
லெனின் 263 264 265
வஞ்சி 324
வஞ்சித்திணை 315 316
வட்டாடுதல் 144 145 . .
வடநாடு 236 . . 246 247 255
295 . . 324
வடமொழி 57 58 80 101 162
176 229 230 . 235
236 . . 239 240 241 242
244 246 . . 250 271 278
302 . .
வணிககுலம் 47 . .
வணிகர் 103 104 . . 149 171
187 200 236 . . 238
239 . . 241 246 . .
247 . 248 338
வதுவை முறை 52 . :
வர்ணம் 43 221 233 235 . .
236 . . 237 . . 240 . .
241 . . 246 . . 266

வரைவின் மகளிர் 15 42 47 137 . .
வழக்குரைஞர் 97 . .
வழிப்பறி 140 . .
வள்ளுவர் வகுத்த பொருளியல் 20
வனப்பித்தநிலை 56
வனப்பிரத்தம் 57 58
வாசகமஞ்சரி 110
வாணிபம் 16 97 . . 98 103 . . 129 146 153 174 187 206 . . 221 . . 228 231 232 . . 246 257 264 267 . . 345 347 349 352
வாத்திய இசை 143
வாய்ப்பாட்டு 143 . . 144
வாய்மை 7 10 16 76 156 . . 158 . . 159 160 . . 171 . . 180 182 184 . . 189 190 242 272 284 . . 285 . . 289 290 291 . . 300 302 310 . . 311
வாழ்க்கைத் துணை நலம் 19 25 33 44 45 47 66 85 151 191 343
வானநூல் 322 324 . . 344
விண்ணந்தாயன், கௌணியன் 249
விபுலானந்தர் சுவாமி 302
விருந்தோம்பல் 3 5 6 121 151 . . 152 161 . . 162 . . 163 . . 168 179 274 275 292 297 328 344
வில்லிபாரதம் 329
வில்லேருழவர் 101 . . 145 255
விவிலியநூல் 177
விவேகானந்தர் சுவாமி 152 . . 255 295 296 297 298 . . 299 . . 303 . .
வினைசெய்வார் 12 . .
வினைத்தூய்மை 12 177 339
வினைத்தொடர்பு 18 233
வீட்டின்பம் 271 . .
வீடு (முத்தி) 20 . . 21 64 234 281 282 283 303 . . 325
வீடுபேறு 281
வீபர் 257 259 269 270 . .
வீரர் ஆட்சி 308
வெஃகாமை 3 4 155 158 . .
வெகுளாமை 31 152 154 . . 158 . . 159 284 . . 285 289 290 300 302
வெட்சிப்போர் 318
வெருவந்த செய்யாமை 9
வெல்ஸ் எச். ஜி. 41 . . 260
வேட்கோ 121 134
வேட்டுவன் 126 . . 127 128 . .
வேட்டை 127 . . 147 . . 199 238 345 347
வேண்மாள் 147
வேதம் (மறை) 42 60 232 . . 235 . . 238 239 247 . . 248 249 . . 255 . . 274 . . 275 . . 278 . . 279 . . 282
வேதாந்தக் கல்வி 298
வேளாண்மை 121 . . 122 240
வேளாளர் 99 121 . . 236 . . 238 239 . . 241 246 247
வேளிர் 99
வைசியர் 235 . . 236 . . 247 271 278
வைத்தியசாலை 107 . . 110 111 294 341
வைத்தியம் 109 110 . .
வைத்தியர் 107 . . 108 . . 110 . . 111 253
வைதிகம் 42 248 272 274 . . 275 . . 277 278 . . 279 . . 283 . . 287 352
ஹக்ஸ்லி அல்டஸ் 2 41 280 304 305 . .
ஹாரிங்டன், ஜேம்ஸ் 11 39 40

Absentee landlords 118
*Adventures in the Two Worlds* 110
*Anticipations* 41 260
Aristocracy 308
Arokiasamy, M. 210
Asceticism 270 . .
Ascetics 269
*Aspects of Ancient Indian Culture* 44
Bacon, Francis 11 39 348 350
Basham, A. L. 44 . . 57 80 142
Bellamy, Edward 41
Brahmi 276
Brahmins 239
*Brave New World Revisited, The* 305
*Brave New World, The* 2 41 260
*Brittanica, Encyceopaedia* 11 39 . . 41 92 . . 260 269
Buddhists 276
Butler, Samuel 41
Cabet, Etienne 40
Campanella, Tommase 2 39
Caste 43
Chatterji, Shuniti Kumar 174
Chattopadhyaya, Dr. Sudhakar 162 230 236 246 271 278
Church 39
*Civitatis Solis* 2 39
*Classical Age of the Tamils, The* 210
Colombus 331
Cronin, A. J. 108
Darwin 259
De Gama 331
Democracy 308
Despotism 308
Dharma Sastras 229 250
Dialectics 322
*Disputed passage, The* 110 111
Dorairangasamy, M. A. 132
Douglas, Lloyd. C. 110 . .
*Dr. Hudson's Secret Journal* 110
Durkheim 257 259 . .
Ebenstein, William 165 263 327
England 332
*Erewhon* 41
*Essays in Sociology and Social Philosophy* 188
Essenes 269
Evolution 41 259 260
Family 92 . . 93 . .
France 332
Gandhi, Mahatma 20 300
Ginsberg, Morris 188
God 270 . . 329 . .
Governors 349
*Great Political Thinkers* 165 263 327
Greeks 174 313 . .
Harrington, James 11 . . 39 40
Harvey, Paul 41
*Hindu Social Organization* 174 230 235 247 250 271
*History of South India* 229
*History of Tamil Nad, The* 233 235 274
*Holy Bible, The* 1 65
Huxley, Aldous 2 41 260
India 57
*Indian culture* 174
Indians 174
Individual ethics 3
Isaiah 1
Italy 2
Jains 276
Julien, Freund 257 270
Kalidasa 80
Kripalani, Krishna 295
Lenin 263
*Life Divine, The* 263
*Life of Swami Vivekananda and Universal Gospel, The* 297
Linton, Ralph 92
*Looking Backward* 41
*Magnificient Obsession, The* 110
*Mankind in ihe Making* 260
Marriages, Eight forms of 229
Marx, Karl 263
Mithra 346
*Modern Utopia, A* 41 260

Monasticism 269
Monks 269
More, Thomas 2 38 338 346
*Mystics, Ascetics and Saints of India, The* 271 293 . .
*New Atlantis* 11 39 304 343 350
Nilakanda Sastri, K. A. 203 208 229 276
*Oceana* 11 40
Oman, John Campbell 271 293 . .
Oligarchy '308
*Oxford Companion to English Literature, The* 41
Paul, Saint 65
Pillai, K K. 118 121 124 135 145 148 203 213 217 275 276 294
Plato 1 14 160 184 263 306 317 327 328 329
*Political Theory of Ancient India* 87
Poor homes 68
Prabhu, Pandharinath H. 174 230 235 247 250 271
Priests 39 269 309
Protestants 270
Puritans 270
Ramakrishna Matt and Mission 297 . .
*Reader's Digest* 110
Reformation 39 257 331
*Religion and Philosophy of Tevaram, The* 132
*Renascent Hinduism* 300
*Republic, The* 1 14 160 184 . . 304 306 . . 317 328 329
Rolland, Romain 297
Roy, Dilip Kumar 301
Saivaism 132
*Sangam Age, The* 203 208 276
*Sangam Polity* 142 148 . . 154 239
Sarma, D. S. 300
Sat Prem 260
*Saturday Evening Post* 111 . .
*Science Digest* 110
Silverman, Milton 111
*Social History of the Tamils, A* 118 121 124 135 145 148 203 213 217 275 276 294
*Social Life in Ancient India* 162 230 236 246 271 278
*Sociology of Max Weber, The* 257 270
Solomon, House of 349 350
Spellman, John W. 87
*Sri Aurobindo came to me* 301
*Sri Aurobindo or The Adventure of consciousness* 260
Stoicism 174
Subrahmanian, N. 142 148 . . 154 203 235 239 274
Sudras 250 . .
Tagore, Rabindranath 295
Tamil contry 276 . .
Timocracy 308
*Tolkappiam* 229
Trusteeship 165
*Utopia* 2 38 338 346
Weber, Max 257 259 . . 270 . .
Wells, H.G. 41 . . 260 . .
*Wonder That was India, The* 44 57 80 142
Zeno 174

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 11 | 12 | ஓசியா ஹ | ஓசியா ஹ |
| 28 | 21 | பகை | படை |
| 45 | 13 | ஆரயாதற்கு | ஆராய்தற்கு |
| 55 | 10 | பசிய கொடிகளை | பசியதொடிகளை |
| 83 | 20 | உடையவதனுல் | உடையவனுதல் |
| 97 | 12 | வலுல்நர் | வல்லுநர் |
| 110 | அ·கு | Leoyd | Lloyd |
| | | Centre | Center |
| 154 | 21 | தொழில | தொழில் |
| 160 | 1 | ஓற்றகள் | ஓற்றர்கள் |
| | 6 | ஏற்றதாயிற்றுர் | ஏற்றதாயிற்று |
| | 13 | இல்லறங்களை | இவ்வறங்களை |
| | 23 | இல்லறத்தோறும் | இல்லறத்தோரும் |
| 165 | 33 | குடுப்பத்திற்காக | குடும்பத்திற்காக |
| 171 | 34 | இருப்பி அனும் வர் | இருப்பினும் அவர் |
| 189 | 6 | விட்டொளித்தல் | விட்டொழித்தல் |
| 190 | 12 | நாட்டில் | நாட்டின் |
| 236 | 1 | வேறுப்பாட்டையும் | வேறுபாட்டையும் |
| 129 | 12 | Essener | Essenes |
| 317 | 16 | ஓப்பிடப்பட்டன | ஒப்பிடப்பட்டன |
| 320 | 1 | பண்புகளை | பண்களை |
| 332 | 24 | செல்வக் | செல்வச் |
| 350 | அ·கு | Utopians | New Atlantisians |